
மயன் சிற்ப ரத்னாகரம்

மூலமும் உரையும்

வாஸ்து மனையடி சாஸ்திரம்



மயன் பதிப்பகம் - சென்னை 600 026.

6/6

சிற்ப ரத்னாகரம்

மூலமும் உரையும்

வாஸ்து மனையடி சாஸ்திரம்

பதிப்பாசிரியர்

எஸ். பி. ராமச்சந்திரன்

தொலைபேசி எண் : 480 02 49

மயன் பதிப்பகம்
7, என்.ஜி.ஓ.காலனி,
வடபழனி, சென்னை -600 026.

மயன் வெளியீடு எண் : 229
முதல் பதிப்பு : டிசம்பர் 1998
உரிமை பெற்றது :

நூலைப் பற்றி

நூலின் பெயர்	:	சிற்ப ரத்னாகரம்
பதிப்பாசிரியர்	:	எஸ். பி. ராமச்சந்திரன்
வெளியிடுவோர்	:	மயன் பதிப்பகம் 7,N.G.O.காலனி, வடபழனி, சென்னை-600026.
பதிப்பு ஆண்டு	:	டிசம்பர். 1998
உரிமை	:	பதிப்பகத்திற்கு
நூல்வடிவம்	:	14 செ.மீ X 22 செ.மீ
தாளின் தன்மை	:	14.4. கே. ஜி. வெள்ளைத்தாள்
பைண்டு	:	ஸ்ட்ரா போர்டு
அச்சு எழுத்துக்கள்	:	11 புள்ளி
பதிப்பு	:	டைப் செட்டிங் கார்த்தி கிராபிக்ஸ் சென்னை-26
மொத்தப் பக்கங்கள்	:	376+16
பிரதிகள்	:	1000
நூலின் விலை	:	ரூ. 125.00
அச்சிட்டோர்	:	கிரியேட்டிவ் ஆப்செட் சென்னை- 34

6/6

பதிப்புரை

மனையடி சாஸ்திரம் என்ற பெயரில் ஏராளமான நூல்கள்! படம் போட்டவை! படம் போடாதவை! பத்துரூபாய் முதல் நூறு நூற்றைம்பது ரூபாய் வரை!

இவை அவ்வளவும் முக்கியமானவை தான்! கொஞ்சம் தெரிந்து கொண்டவுடன் இன்னும் நன்றாகத் தெரிந்து கொள்வோமே? இதில் என்னதான் இருக்கிறது? என்ற ஆர்வம் உண்டாகுமல்லவா?

வீடுகட்டுவது என்பது ஒரு சாதாரணமான விஷயம் அல்ல. ஏதோ சிலருக்கு வாழ்க்கையில் ஒரே ஒரு தடவை ஏற்படக்கூடிய வாய்ப்பு! சிலர் மூதாதையரின் வீடுகளிலேயே இருந்து விடுவார்கள். சிலருக்கு வாழ் நாள் பூராவும் வாடகை வீடு என்பதே தலையெழுத்தாகப் போய்விடும்.

வாய்ப்பு ஏற்படுகிறவர்கள் அந்த ஒரு தடவை கட்டும் வீட்டை முறைப்படியாகவும் நன்கும் அமைத்துவிட்டால் அது தங்கள் வாழ்நாள் முழுவதிலும் மட்டுமல்ல. தங்கள் சந்ததிகளும் வாழ்ந்து வளம் பெற வகையாக இருக்குமல்லவா?

அதனால் வீடு கட்டுவது என்பது நன்கு யோசித்துச் செய்ய வேண்டிய ஒரு விஷயம். வீடுகட்டுவதற்கான மனையைத் தெரிவு செய்வது முதல் கட்டிட அமைப்பு, கதவு ஜன்னல்களின் அமைப்பு வரை எல்லாவற்றையும் நன்கு கவனிக்க வேண்டிய விஷயம்.

ஆதி சிற்பியான மயன் இந்த நூலில் ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் மிகத் தெளிவாக எழுதியிருக்கிறார். வீட்டில் முதியவர்கள் தங்குவதற்கான அறைகள், பூஜை அறை, பாதுகாப்பு அறை, படுக்கை அறை, கழிப்பு அறை, ஒவ்வொன்றும் எந்த இடத்தில் எப்படி அமைய வேண்டும் என்பது வரை எழுதியிருக்கிறார்.

இந்த நூலில் முக்கிய அம்சம் சோதிடப் பகுதி நல்ல நாளும் நேரமும் அமையாவிட்டால் எந்தக் காரியம் செய்தாலும் பயன்படாது. அதே போல் ஒரு நிலப் பரப்பில் எந்த இடத்தில் எந்த விதமான

ஓம்

ஓம் சிவானந்த குருவே நம:

சிற்ப ரத்நாகரம்

மூலமும் உரையும்

உலகெலா முணர்ந்து ஓதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்

உலகில் உள்ள உயிர்கள்யாவும் தன்னுள்ளே உணர்ந்து வழிபடுவதற்கு அருமையானவன் குளிர்ந்த கலைகளைக் கொண்ட நவக்கிரகங்களில் ஒருவனான சந்திரனைத் தன் குழற்மீதில் ஆபரணமாய் தரித்தவன் கங்கை எனும் புனித தீர்த்தத்தைச் சிரத்தில் தாங்கியவன், ஜோதிமயமானவன், அளவிட இயலாத கீர்த்தியுடையவன் அன்பர்கள் இதயகமலமெனும் திருச்சபையில் ஆனந்த நடனம் புரிபவன், ஆதிச்சித்தன், அவன்தன் சிலம்புகள் பொருந்திய திருவடிக்கமலங்களை இடையறாது வாழ்த்தி வணங்குவோமாக!

ஓம் சிவானந்த குருவே நம

வெண்மையாங் கொம்பன் ஈசன்வெண் பொடிபூசுஞ் செவ்வேள்
வண்மையாய் அடியார் வாழ்த்தும்வா லைதம்பதங் கள்போற்றி
நன்மையாய் மயனார் நூலை நாதர்கள் முன்னர்க்கூற
உண்மையாய் வாணி என்நா உறுதியாயுரை செய்வாளே.

வெண்மையான தந்தங்களையுடைய வினாயகர், வெண்ணீறணிந்த சிவன் முருகப்பெருமான் சித்தபுருடர்கள் தம்முள் உணர்ந்து வழிபடும் வாலை திரிபுரசுந்தரி ஆகியோரின் திருவடிகளை வணங்குகிறேன். கலைமகள் என் நாவில் நின்று விசுவகர்மாவின் ஐந்து திருக்குமாரர்களில் இரண்டாவது குமாரரான மயன் என்பவர் அருளிய இந்த நூலினைப் படைக்க அருள் செய்வாளாக.

நலந்தந்து இலங்குமிந் நாட்டிலுள்ளோர் மெச்ச நல்லநல்ல
பலந்தந்து சொல்லப் பயன்பத்தி ஞானமென்பால் அளித்து
தலந்தந்து வாய்மொழி பேசிப் பிசகாத் தமிழருளி
வலந்தந்து வாழ்கவென் உள்ளத்து வாணிமலர்க் கழலே.

தர்மத்திற் சிறந்த இந்தத் திருநாட்டில் உள்ள அன்பர்கள் பாராட்டும் படியாக அடியேனுக்கு பலமும், ஞானமும் பக்தியும் அளித்து குற்றமில்லாத் தமிழில் நூல்செய்ய தனது வலக்கரத்தினால் என்னை வாழ்த்தியருள வேண்டி கலைவாணியின் திருத்தாழ்களை எனதுள்ளத்தே வைத்து வணங்குகிறேன்.

விஸ்வகர்மத் தியானம்

திருவார்வத னமைந்துடனே தேசாரக் கம்பதின்ஐந்தும்
திகழுஞ் சடையாலியன் றமுடிதிக்குநாள் கீசானத்து
மருவார்வெண் மைகார்சிவப் புமஞ்சள்பச் சைநிறத்தனவாற்
வதனஞ்சத் தியோஜாதம் வாமதேவமா தியவாய்
உருவார்மே னிபொன்னிற மாயுயருங் கரங்கள்பத் தடைவில்
உயருமட்சமா லைமறையுர சுஞ்சூலம் வில்லுடுக்கை
தருவார்வீ ணையம்புசங் குசக்கரத்தை யணிந்துசெவி
சர்ப்பத்தோட் டினிலகவுடை சாம்பூந்த மாஞ்சுவனமதே.

திசைகள் நான்கும் பொருந்திய பதினைந்து திருச்சடைகளும் வெண்மை கருநீலம், சிவப்பு, மஞ்சள், பச்சையெனும் ஐந்து வர்ணங்களையுடைய அகோராம் வாமதேவம், சத்தியோசாதம், ஈசானம், தற்புருடம் எனும் ஐந்து திருமுகங்களையும் பொன்னிறமான திருமேனியையும், பத்துத் திருக்கரங்களிலே, உருத்திராட்சமாலை வேதங்கள், சுத்தியல், சூலம், வில்அம்பு, உடுக்கை, வீணை, சங்கு, சக்கரம் முதலிய பத்துவிதமான ஆயுதங்களைப் பூண்டவர். திருச்செவிகளில் சர்ப்பங்களை ஆபரணமாயணிந்தவர்.

உலகஞ்சுமக் குமோரரவம் உபவீதந் தானாவணிந்து
திலகவக்கமா லைதனைத்திக ழச்சாத்திப் புலியின்தோல்
இலகவரைத்துப் பலவிரவிவில் லிட்டொளிரத் தயாபரனாம்
அலகில்தேவ விசுவகர்மவண் ணல்குருவைப் பூஜிக்கின்றேன்.

உலகைத் தாங்கும் சர்ப்பத்தைப் பூணூலாயும், உருத்திராட்ச மாலையும் பொருந்திய திருமார்பையும், புலித்தோலை இடையில் அணிந்தும் ஒளிவீசும் ஆபரணங்களையும் அணிந்தவருமான விசுவகர்மாவின் தாள்களை வணங்குகிறேன்.

மாட்டு மயனுரை நூற்பதி னாயிரமா தவர்க்கு
சூட்டுந் தமிழினடங் காதொகை வகைதொல் உலகோர்
நாட்டும்படி மனைநான் காகுஞ் சாதிநயம் அறிந்து
காட்டுங் கருணைமய நூலிதனைக் கலக்கம் அற்றே.

மயன் என்பவர் ரிஷிகளுக்கு முன்னம் அருளிய பத்தாயிரம் பாடல்களைத் தமிழில் சுருக்கித் தொகுத்து நான்கு சாதிகளைச் சேர்ந்தவர்களுக்கும் மனை நிர்மாணிக்கும் (பிராமண, வைசிய, சத்திரிய, சூத்திரர்) விஷயாதி கூறும் இந்நூலை இயம்புகிறேன்.

ஆக்கியோன்

உற்றதோர்வள் ளிநாடனுயர் தருமாந்தை வேந்தன்
கொற்றதோர்நூ லைக்கண்டு சுருதியும் பிறவுமாய்ந்து
பெற்றதோபெரு மான்மைந்தன் பித்தனான் சொற்றமூலம்
கற்றறிபெரி யோராசி கழறியேமகிழ் வர்மாதோ.

வள்ளிநாடென வழங்கும் தென்தமிழகத்தில் முன்னம் பிறர் கண்களுக்குத் தெரியாத மாந்தையம் என்னும் மாயக்கோட்டையின் கண்வீற்றிருந்து அரசுபுரிந்தவரான விசுவகர்மாவின் குமாரனான மயனெனும் நான் சுருதிகளையும் மற்ற இலக்கண நூல்களையும் ஆய்ந்து பெரியோர் ஆசியுடன் இந்நூலை உரைக்கிறேன்.

நூற் பாயிரம்

நற்பிரம னருள்விசு வகர்மனு ரைத்தபடி
நல்விசையபி ரமசாஸ்திரம்
நால்வேத எண்ணென் கலைக்கியான நிலையினால்
நாடுநகர்தே வநிலையும்
சிற்பிசாஸ்திரம் எனும்மனு அத்தியாயமும்
சீரசுவவத் தியாயமும்
திரமானயா னைபத்தியா யமும்யாளி அத்தங்களும்
தெய்வீகசாஸ் திரங்களும்
கற்பெனப்படி யின்மயன் சாஸ்திரம் சூத்திரம்
கருதரியவ டிசாஸ்திரம்
கண்குறிப் பானநாற் சதுரமும் மாறலும்
கதிர்மதிகள் வருநேர்மையும்
விற்பனம் அதாகவே தெற்குடன் வடக்கறிந்து
உயர்துருவநி லையின்விதமும்
உயர்பூமி ஆகாச வரைகண்டு கவிசகஸ்ரம்
ஓதினான்வே தமகனே. (1)

விசுவகர்மன் உரைத்தது இந்த பிரமசாஸ்திரம். நாலுவேதம், அறுபத்து நாலுகலையும், நாடு, நகரம், தேவர்நிலையும் சிற்ப சாத்திரம் எனும் மனுவத்தியாமும், அசுவ அத்தியாமும், யானை அத்தியாயமும், மயன்சாஸ்திரமும் சூத்திரமும், அடிசாஸ்திரமும், நோக்கு, சோதிடம், கோள்கள் பற்றிய சாத்திரமும் திசைகள் மற்றும் துருவன் நிலையும், ஆகாசம், பூமி ஆகியவற்றையும் கவிகள் ஆயிரம் மூலம் உரைத்தான் மயன் என்பவனே.

இன்னநிலை இன்னதிசை இன்னவிடம் என்றுமே
இன்பமுடன் நல்லநாள்கள்
எடுத்து அகமேற் றமனை கோலவே
சிற்பியன் இனம் அறிந்துசெய்யவும்
சொன்னமுடனே பாக்கு வெற்றிலைகள் தேங்காய்
சுயம்பாகமும் கதலிகள் தூப
தீபாரா தனைகொடுத் துமேவி நாயகன்
தோத்திரம்செய் யும்விதமும்
கன்னியர் கள்வந்து மேஜலம் விட
கண்டகுறியைப் பார்க்கவும்
கற்பெனப்படி நன்மை தின்மைகள் பலாபலன்
கண்டகுறியைச் சொல்லவும்
மண்ணுலகிலே நாடுமூர் கோபுரம் வீதி
மதில்மண்டபம் சத்திரம்
மாடமாளிகை வீடுதன் னையுமே நாளும்
வகையுடன் சொல்லுவோமே. (2)

நான்குவர்ணத் தோர்க்கும் ஏற்றபடி நிலை, திசை, இடம், நாள், கோள் அறிந்து மனைகோலவும், வெற்றிலை, பாக்கு, தேங்காய், பழம், தக்ஷணை வைத்து தூப, தீப ஆராதனை செய்து கணபதி பூஜை செய்யும் விதமும், கன்னிப் பெண்கள் குழிகெல்லி அமைத்த பள்ளத்தில் நீர்விட அதில் தோன்றும் குறிகளைச் சொல்லும் விதமும், நன்மை, தீமையறிந்துரைத்தலும், நாடு, ஊர், கோபுரம், வீதி, மதில், மண்டபம், சத்திரம், மாட மாளிகை, வீடுகள் அமைக்கும் முறைகளும் உரைக்கிறேன்.

மனையெடுக்கு நிதானமும் மத்தியில் இருந்து
வளரகுசாத் துகள்வைப்பதும்
பார்த்தின்ன மண்ணித் துகளென் பதும்
மனைபிறந்திடும் வேளையில்
தனதுதிசை சக்கரம் கோசார பலனுடன்
சந்திரலக் கினமமிசையும்

தனதாட்சி உச்சம் பகைநீச பார்வை
தகைமைவலு வுடன்நோக்குகள்
தினமதனில் வருகுளிகன் யந்திரா யந்திரங்கள்
திதிவாரநட்சத் திரமுமிராசி
ஒரையும் ஏகாதிபத்தியம் திரிகோண சோதனையும்
இனமறிந்து செய்யவும்
சர்வாஷ் டகவர்க்கப் பிந்து இயல்
நவக்கிரக நிலையால்
இன்னாடி என்று மனை சாதகக்
குறிப்பியலுடன் சொல்லுவோமே. (3).

மனை எடுக்கும் நிதானமும், மனையின் நடுவே குழிதோண்டி மண்ணெடுத்து இன்னவகை மண் இன்னபலன் செய்யும் என்றுரைத்தலும் மனை கோலும் போதில் மனை கட்டிக்கொள்பவரின் திசாபுத்தி, கோசாரபலன், சந்திராலக்கினமாகிய ஜென்ம இராசியின் நிலையும் கோள்கள் பெற்ற ஆட்சி, உச்சம், நீசம், நட்பு, பார்வை பலம் முதலியனவும் மாந்தியின் நிலையும், இராசி அம்சச் சக்கரங்களையும், ஆராய்ந்தும் திதி, வாரம், நட்சத்திரம், இராசி, ஒரை அஷ்டவர்க்கம், திரிகோண, ஏகாதிபத்தியச் சோதனைகளுக்குப்பின் அஷ்டக வர்க்கத்தின் நிலை முதலாய அனைத்துச் சோதிட விஷயாதிகளையும் அறிந்து உரைக்கும் விதம் கூறுகிறேன்.

மனையோனி நிலையோனி நட்சத்திர யோனியும்
மனைக்குடையவன் யோனியும்
வாரம்திதி இராசி அங்கிஷம் சாதியும்
வயதுசெலவு ஆதாயமும்
தனதான கருடனுடன் பூனையுஞ் சிங்கமும்
தகுநாய்கள் பாம்புஎலியும்
சத்தமத யானையும் முயலொடு எண்யோனி
தானிருக்கின்ற நிலையும் விதமும்
அனமாது கணவனுக்கே சந்திர மலமும்
அருள்வளரும் ஜென்மபலனும்
அந்தந்த மாதமதில் வாஸ்துவின் பலனுமே
அதிகசென்மா திபலனும்
இனமாகவே இன்னபடி என்று அறிந்து
மனைசாஸ்திரக் கணக்கினால்
ஈசான ஆக்ஞா ஒட்டங்கள் பார்ப்பதும்
இயலுடன் சொல்லுவோமே. (4)

மனையோனியும், நிலையோனியும், நட்சத்திரயோனியும், மனைக்குரியவன் யோனியும், கிரகங்கள் நின்ற நட்சத்திரபாதாசாரமும், திதியும்,

இராசியும், அம்சமும், வருணமும், (சாதியும்) மனைஆயுள், ஆதாயம், விரையம், பஞ்சபட்சி, எண்வகை யோனிகளான, கருடன், பூனை, சிங்கம், நாய், பாம்பு, எலி, முயல், யானை முதலியனவும் ஆய்ந்தறிந்து, மனைக்குறியவன், அவன் மனைவி ஆகிய இருவர் ஜாதக நிலையும் அறிந்து முற்பிறவி வினைப்பலனும், அறிந்தும் ஈசானம் இருக்கும் இடமும், மனையில் தேவதைகள் ஒட்டம் முதலியவற்றையும் கண்டறிந்து உரைப்போம்.

செஞ்சிதல்கள் பூச்சியொடு சுவர்பிளந்திடு மனையில்
திரம்கறையான் புத்துகள்
சேயிழை சௌசிகளங் கிளிருப்பிடம் தீர்க்காயிசு
வளரூப நிலைமை
பொங்கனக கூட்டுடன் சாலநீர் ஒட்டமும்
பொருள்சேர்க்கை தேவநிலைமை
புதல்வரைப் பெறுதல் தாய் தந்தையர்க்
கிருப்பிடம்பூமி பயிர்விரைகட்டுதல்
மிஞ்சிவளர் பெருகு கன்றுகாலி தொழுவமும்
விருந்துவர்களு ணினிடமும்
வீடுசுத்திகள் செய்து குப்பைகள் கொட்டிடம்
விளங்கு நீர்க்குடங் கள்வைப்பதும்
பஞ்சலட்சணப் புரவி மதகரி இருப்பிடம்
பார்த்தின்னப டியென்றுமே
பன்னிரண்டு ராசியின் சாஸ்திரப் பிரமாணம்
பரிவுடன் சொல்லுவோமே. (5)

செங்கறையான், பூச்சிகள், சுவரில்காணும் வெடிப்புகள், கறையான் புற்றுகள், தேவதைகள் பிசாசுகள் தங்கினதறிதல், ஆயுள், பூமிவளம், தங்கம் போன்ற உயர்ந்த திரவியங்கள் பற்றியும், சுத்த நீர் இருப்பிடம், கழிவு நீரோட்டம், செல்வச் சேர்க்கை, குலதெய்வம் நிற்றல், குழந்தைப் பேறு, தாய்தந்தையர் இருப்பிடம், தோட்டம், பயரிடும் இடங்களமைத்தல், கால்நடைத்தொழுவம், பஞ்சலட்சணப் புரவி, யானைக் கொட்டாரம் அமைக்கும் இடம், விருந்தினர் தங்குமிடம், உண்ணுமிடம், குப்பை கொட்டுமிடம், தண்ணீர் குடங்கள் வைக்குமிடம், பன்னிரு இராசிகளையும் ஆராய்ந்து சாஸ்திரப்பிரமாணம் தவறாமல் வீடு கட்டும் விதம் கூறுகிறேன்.

நிலத்தினில் பாதாள சாகர வரைக்குமே
நீரோடும்வழி கள்கோவில்
நின்றிடும் சிவாலயம் காளிகோட்டங்களும்
நீடியமயா னம்ஓடை

பலத்திடும் முச்சந்தி சூலைக்கல் நாட்டிடம்பொருள்
புதையல்முது மக்கள்சாடியும்
வளர்கிணறு சாவி சாம்பல் இருங்கல்லு
கரிகட்டைபஞ் சலோகங்களும்
வனஎலிகள் இடி விழுதலும் தலத்தினில்
கிடக்கின்ற பதினா றுவகையாள
சல்லியம் பார்க்கும் வகையும் தனைக்கண்டு
நால்வகைச்சக் கரம்பிரமாணம் தன்னையும்
பலபல விதத்திலும் பண்பாக நூன்முறைகள்
பாலித்தவ கையோர்ந்து
பாவலர்கள் மெச்சவே பார்மீது சிற்பநூற்
பரிவினிற்சொல் லுவோமே. (6)

பூமியில் பாதாளத்தில் கடல்மட்டம் வரைக்கும் உள்ள தண்ணீர் ஓட்டம், அதன் இருப்பிடம், கோவில், சிவாலயம், காளியின் கோட்டங்கள், மயானம், ஓடை, முச்சந்தி, கல்தூண், ஸ்தம்பம் இருந்த இடம், புதையல் இருப்பிடம், முதியோர் எலும்புகள், கிணறு, சாம்பல், கரிக்கட்டை, பஞ்சலோகங்கள், வனஎலிகள் அவற்றின் பொந்துகள், இடிவிழுதல் முதலானவற்றால் ஏற்படக்கூடிய சல்லியம் பதினாறும் பார்க்கும் வகையும் நான்குவகைச் சக்கரங்கள் அமைத்து அறியும் விதமும், நூல்களில் உரைத்த வண்ணம் ஆராய்ந்து இந்த சிற்ப நூல் உரைப்பேன்.

பிரமக்ஷத்திரி யவைசிய சூத்திராதி நால்வர்க்கும்
விளங்குகோல் பிரமாணமும்
மோரடிப் பிரமாணம் குழிகள் பிரமாணமும்
விளங்குகெஜப் பிரமாணமும்
தருமபரி பாலனம் செய்தவர்கள் வாழ்வதும்
தக்கசிற்பியன் வருவதும்
சாண்கோல் முழக்கோல் கெஜக்கோல் அடிக்கோல்
தகைமையின் பொருள் காண்பதும்
நிலைமையுள வடிவாலை புவனை திரிபுரை
தன்னைநெஞ் சினில்வைத்து
நாளும் நிலமை சகுனங்கள் பார்த்துமே
சொல்லவும் நிலைமை தனைநெஞ்சிலுன்னி
வதுமமதை நினையாமல் ஒருமன துடன்
சாஸ்திரவகைதனைக் கண்டுசொல்ல
மண்ணுலகில் வாழ் மனிதர் எந்நாளும்
இப்படி வளர்ந்திட மயன்சொன்னதே. (7)

பிராமண வைசிய, க்ஷத்திரிய, சூத்திரர் எனும் நான்கு வருணத்தோருக்கும் மனை நிர்மாணிக்க அளக்க உதவும் முழக்கோல், அடிக்கோல் மற்றும் குழிகள் அளவும், கெஜக்கோல் முதலாய அளவுகோல்கள் பற்றியும் தர்மம் சான்றவர்கள் தக்கசிற்பியிடம் அணுகியவரை அழைத்து வந்தபோது அவர் வாலை திரிபுரசுந்தரியை மனதில் நிறுத்தி, நாள், கோள், சகுனங்கள் பார்த்தும் மனதை ஒருமுகமாக்கி சாஸ்திரங்களை ஆராய்ந்து மண்ணுலகில் உள்ள மக்கள் நல்லவண்ணம் வாழ வகைசெய்யும் படி மயனெனும் விசுவகர்மன் மகன் உரைக்கிறேன்.

குடியிருக்கை அவசியமெனல்

வீடே பிரதானம் வேண்டுஞ்சுக போகம்
வீடே தருமாதி மேலளிக்கும் - வீடே
வளியாதி தோடமற வாழ்விக்கும் வீடே
களியாதியைத் தருமே காண். (8)

குடியிருக்கும் வீடு சாஸ்திரப்படியாக அமைக்கப்பட்டால் அந்த வீட்டின் மூலம் சுகபோகம், தருமசிந்தனை, குறைவில்லாத தோஷங்களற்ற வாழ்வும் மகிழ்ச்சியும் கிடைக்கும் என்றவாறு.

சிற்பி இலட்சணம்

பொன்னொடு பூணூலும் பவித்திரம் பாணி பூண்டு
சென்னியிற் சிகையுந் தேவபூசனை செனித்த அன்பு
மன்னிய குலமுமிக்க மனச்சுத்தம் தானும் உள்ளான்
அன்னிய சாதிகூடா தறிந்தவன் சிற்பன் ஆமே. (9)

பொன்னாபரணமும், பூணூலும், பவித்திரமும், பட்டாடையும் உடுத்து ஏற்றிக்கட்டிய ஜடாகுடுமியும், தெய்வ வழிபாடும், உடையவனும் குல ஆசாரப்படி வழுவாதவனும் தூய மனத்தானும், பிற வர்ணத்தாருடன் கலக்காதவனும் ஆகிய குணமுள்ளோன் சிற்பியாவான்.

சுத்தமா மறைகளோதித் தூயநல் ஆடை சாத்திச்
சித்தமே தெளியும் வண்ணஞ் சிறபுடை யானுமாகி
நித்திய கர்மம் எல்லாம் நெறிதவறாமற் தெய்வ
பத்தியாய் நூல்கள் ஆய்ந்த பண்பினன் சிற்பனாமே. (10)

வேதம் வழுவாது ஓதியவனும், தூய ஆடைகளணிந்தவனும், தெளிந்த மனமுடையவனும், நித்தியானுஷ்டானங்கள் தவறாதவனும்,

தெய்வபக்தியில் உயர்ந்தவனும், நெறிதவறாத மாண்பினனும், நூல்கள் பலவற்றை ஆராய்ந்த பண்பாளனும் ஆனவனே சிற்பியாவான்.

முழக்கோல் இலக்கணம்

தந்தியின் மருப்புவேணு தருகருங் காலி தேக்குச்
சந்தனத் தாலந்தென் னைதாமரை ஆதி தம்மால்
விந்தைசேர் முடிக்கோல்செய் வர்மேவிய சிரசில் விஸ்வன்
அந்த மத்தியிலே ராஜலட்சுமி அடியிற் கூவே. (கூ=பூப்பிராட்டி)(11)

பூமியை அளந்து மனை அமைக்க விசுவகர்ம குலத்துதித்தவனானவன் யானைத்தந்தம், மூங்கில், தேக்கு, கருங்காலி, சந்தனம், தென்னை முதலான மரங்களின் குச்சிகளையும் தாமரைத் தண்டையும் பயன்படுத்தி முழக்கோல் செய்யக்கடவன்.

பொருந்தியமட் டக்கோல்தான் புளிவேங்கை தேக்கோடு ஆச்சா
வருந்திய புளியே பார்ப்பான் மன்னவனாச் சாவாகும்
விரும்பிய வகைகள் தேக்கு வேளாளன் வேங்கையாகும்
இரும்புகாண் தேவர் மிக்க எவர்க்குமே ஆகுமன்றே. (12)

முழக்கோல் எனப்படும் மட்டக்கோல் (அளவுகோல்) புளி, வேங்கை, தேக்கு, ஆச்சா, முதலிய மரங்களின் மூலமும் செய்யப்படும், பார்ப்பனர்களுக்கு புளியங்கோல், க்ஷத்திரியருக்கு ஆச்சாமரம், வாணியனுக்கு தேக்கு, வேளாளனுக்கு வேங்கைமரம், தேவர் வகுப்பினருக்கு இரும்பினால் ஆனகோலும் தவிர இரும்பினால் செய்த கோல் எல்லா வருணத்தோருக்கும் பயன்படும்.

வேறு

சந்தன மரத்தினோடு தக்க கருங்காலி
சிந்துசிறு செண்பகம்பிலாத் திமிசை சீர்கொள்
ஐந்து விரல்கனந் தெய்வத் தலமானால்
முந்தியரை விரல்கனம் மூங்கிலது கோலே. (13)

சந்தனம், கருங்காலி, செண்பகம், பிலாத்தி முதலிய மரக்குச்சிகள் ஐந்து விரல் கனமும், ஆலயங்கள் அமைக்க வென்றால் அரைவிரல்கனம் மூங்கில் கோலாகும்.

தேக்குடை மூங்கிலோடு தக்கதோர்ச் சாவாகும்
தேக்குடைவேங் கைநாலுஞ் செய்வதுமுழக் கோல்தன்னை
ஆக்கமுள்மறை யோன்மூங்கில் அரசனுக்காச் சாவாகும்
தேக்குடன் வணிகனுக்குச் செய்கமுவோர்க் கும்வேங்கை. (14)

தேக்கு, மூங்கில், ஆச்சா, வேங்கை இவை வேதியருக்கு. மூங்கில், அரசமரபின் வழியினருக்கு (க்ஷத்திரியர்).. ஆச்சா மரம், வைசியருக்கு தேக்கு மரம் மேற்படி மூன்று வருணத்தோருக்கும் வேங்கைமரம் பொதுவானதுமாகும்.

வேறு

மறையினில் மறையோணச் சாமன்னர்க் குவணிகன் தேக்குப்
பொறையுடைச் சூத்திரர்க்கும் புகல்இருங் காலி வேங்கை
குறியிடை இரும்புதானும் கொள்வதிங் கெவர்க்கும் ஆகும்
நெறியுடன் மட்டக்கோல் தானிகழ்த்திய வாறு இதாமே. (15)

பிராமணர்க்கு ஆச்சா, க்ஷத்திரியர், வைசியருக்கு தேக்கு, சூத்திரருக்குக் கருங்காலி, வேங்கை, இரும்பு எல்லோருக்குமே பொதுவானதாகும் இவ்வாறாக நால்வகை வருணத்தோருக்கும் அளவுகோல் தெரிந்து செய்க என்று ரிஷிகள் உரைத்தனர்.

இப்படிமுனி வர்சொன்னார் இன்னமோர் நடத்தை கேளாய்
செப்பிய குருவச் சாதிசேரு நான்மூன் றதாகில்
தப்பிலா விரலே எட்டுச் சாதியினடி என்பார்கள்
இப்படியிது பத்தாகில் இதுஒரு களைஎன் பாரே. (16)

பன்னிரண்டு அங்குலம் கொண்டது ஒரு ஜாதியடி (நடப்பு 1 அடி) 8 விரல் நீளம் அதாவது 27 அங்குலம் கொண்டது ஒரு சாதியடி என்பாரும் உளர். இப்படியான அடிகள் பத்துக்கொண்டது ஒருகளை என்பர் (27 அங்குலம் கொண்ட அடிஅளவை தற்போது நடப்பில் இல்லை 12 அங்குலம் கொண்ட அடிக்கணக்கே நடப்பில் உள்ளது)

முழக்கோற் பெருமை

மூன்றடியொரு கோலென்பர் முறைபல உலகமெல்லாம்
சான்றதே கணமதாகுஞ் சாரங்க பாணிமுன்னாள்
மூன்றடிபுவி யைக்கேட்டு மூவுலகளந் தானென்றால்
ஊன்றுகோலா வைச்சொல்ல ஒருவர்க்குமு டியாதென்க. (17)

மூன்றடிகள் கொண்டது ஒரு தச்சு முழக்கோல். இதில் பல கருத்துகளும் உள. ஏனென்றால் அன்று திருமால் வாமன அவதாரத்தில் மூன்றடி நிலம் கேட்டு தனது ஊன்றுகோல் முழக்கோலாக வைத்து மூன்றடிகளில் உலகையே அளந்து விட்டார் என்னும்போது முழக்கோல் அளவுபற்றித் திட்டமாக யாரால் கூறமுடியும்.

வேறு

பரமவணுவிது நான்கிரதரே ணுவிதவெட்டே பஞ்சின்றூளாம்
இரியிதுவெட் குறிற்பாலன் கேசநுனியாம் இதுவோரெட் டிலீகை
அரிதரும் திருநான்குபேன் இதுவெட்டியவை என்பவது வெட்டெய்திற்
தரிசொன்மானாங் குலமாமிது ஆறுகொண்டது வேதாலமாதோ. (18)

பரமாணு நான்கு கொண்டது 1 ரேணு, 8 ரேணு ஒரு பஞ்சின்தூள், எட்டுப்பஞ்சின் தூள் ஒரு சிறுவன் தலைமயிரின் நுனி, இப்படியான 8 மயிர் நுனி கொண்டது 1 ஈறு, ஈறு எட்டு 1 பேன், 8 பேன் 1 அவை, 8 அவை 1 தறி, ஆறு தறி கொண்டது 1 தாலம்.

தாலமிரண் டுறில்விதஸ்தி இதுவெட்டே யஸ்தமிதுநான் குதண்டம்
ஏலுமிது ஈரிரண்டு பாகுவாமிது நான்கேயெழிற் குரோசஞ்
சாலவிதுநான் குசத்துவாரி இவைநிற்க முனஞ்சாற்றும் அஸ்தஞ்
சீலமிகுமெண் வகையாமிவை மானாங்குலத் தளவாற் செப்புவாமே.(19)

2 தாலம் ஒரு விதஸ்தம், 8 விதஸ்தம் 1 அஸ்தம், 4 அஸ்தம் 1 தண்டம், 4 தண்டம், 1 பாகு, 4 பாகு, 1 குரோசம், 1 சத்துவா இவைநிற்க முன்னம் கூறிய அஸ்தம் என்ற அளவையின் பேரில் தொடர்ந்து வரும் எட்டு வகை அளவுகளைக் கூறுவோம்.

செப்பறுநான் குறிற்கிஷ்குவை ஐந்துசேர் பிரஜாபத்யம் ஆகும்
தப்பிலிருபத் தாறுதநூர் முஷ்டியிருபத் தேழ்தநுக் ரகந்தான்
வைப்புறுநா லேழுபிராப் யமிருபத்தொன் பான்வைதே கமாகில்
முப்பதுவைப் புல்யமுப்பத் தொன்றுபிரகீர் ணமெனமொழிவர்மன்னோ.(20)

4 அஸ்தம், 1 கிஷ்குவை, 5 அஸ்தம், 1 பிரஜாபத்யம், 26 அஸ்தம் தனுர்முஷ்டி, 27 அஸ்தம் 1 தனுர்க்கரகம், 28 அஸ்தம் ப்ராப்யம், 29 அஸ்தம் 1 வைதேகம், முப்பது அஸ்தம் 1 வைபுல்யம், 31 அஸ்தம், 1 பிரகீர்ணம் என்றும் கூறுவதுண்டு.

மன்னுபிரகீர் ணமுடன்றநுக் கிரகந்தே வரொடுமறை யவர்க்காந்
துன்னுவைப்புல்லியமுடனே தநூர்முஷ்டி வேந்தருக்காஞ்சொலும்வை
தேகம்
பின்னவில்பிர ஜாபத்தியமும் வணிகருக்கா குப்பிராப் யங்கிஷ்கு
என்னுமிவை பின்னவர்க்காம் யாவருக்கும் கிஷ்குவஸ்தம்இயலுந்தானே.(21)

பிரகீரணம், தனுர்க்கிரகம் என்று சொல்லப்பட்டவை தேவர்களுக்கும் வேதியருக்கும் ஆகும், தனுர்முஷ்டியும், வைபுல்யமும்

க்ஷத்திரியருக்காகும், வைதேகம், பிரஜாபத்யம் வைசியருக்காகும், ப்ராப்யம், கிஷ்குவை சூத்திரவர்ணத் தாருக்காகும், கிஷ்குவை அஸ்தம் எல்லோருக்கும் ஆகும் என்பதாகும்.

இயல்கமுகுபனை வேங்கைமூங்கில் புளிகருங்காலி இரும்புதென்னை
பயிலுமதகரி மருப்புச்சந்தனம் தேக்காச்சா சண்பகம்பலாசு
நயமிகுதாமரைக் கொடிமற்றிவை கண்முழக்கோலுக் காநலிரும்பு
வயமுறுதெய்வங் கண்முதலிய பலர்க்குமூங்கில் புளிமறையோருக்கும். (22)

பாக்கு, பனை, வேங்கை, மூங்கில், புளி, கருங்காலி, இரும்பு, தென்னை, யானைத்தந்தம், சந்தனம், தேக்கு, ஆச்சா, சண்பகம், பலாசு, தாமரைக்கொடி முதலான இவைகளால் முழக்கோல் செய்யலாம் இதில் இரும்பு தெய்வ ஆலயம் முதல் மனிதரின் அனைத்து வருணத்தாருக்கும் பொதுவாகப் பொருந்தும் என்பதாகும். மூங்கில், புளி, பிராமணர்க்காகும்.

ஒருநனிவலி யாச்சாவர சருக்கும்வான் அளவுஓங்கும் தேக்குச்
சீரியநல் வணிகருக்கும் புகழ்வேங்கை சூத்திரர்க்குஞ் சிறந்ததாகும்
பாரினிடை இவைகளுமேற் கூறியவும் பொதுவாகப் பலர்க்குமாகுஞ்
சாரிவைகள் அலதுபிரிதா முடிக்கோலா காவாந்தர ணிமீதே. (23)

ஆச்சா க்ஷத்திரியருக்கு, தேக்கு வணிகருக்கும் (வைசியர்) வேங்கை சூத்திரருக்கும் சிறப்பான அளவுகோல் செய்ய உதவும், உலகில் இவையும் மேலே கூறிய மரவகையும் பொதுவில் பலருக்கும் ஆகக்கூடியது. மேலே கூறியவை தவிர ஏனைய விருட்சங்களால் முழக்கோல் செய்யலாகாது என்று தெளிக.

தருமியவை முதலாவங் குலந்தாலம் விதஸ்தியஸ்தம் தண்டம்பாகு
ஒருவருகுரோ சமுடன்பொலி சத்துவாரி வரையொன் பதாக
வருமளவைத் தக்கபடித் தனித்தனியே அறவுகொளும் வகையுறைப்பாம்
பொருவருதே யங்கள்சத் துவாரியினா லளந்துநனிபொ ருத்தங்கொள்ளே.(24)

அவை, அங்குலம், தாலம், விதஸ்தம், அஸ்தம், தண்டம், பாகு, குரோசம், சத்துவா முதலான ஒன்பது அளவைகளும் தனித்தனியே எவர்க்காகும் என்று உரைக்கிறேன், சத்துவாவினால் அளந்து அமைப்பாயாக.

பொருந்துமுயர் வாகங்கர் வடங்கேடம டப்பம்பொலி கிராமம்
பொருந்திருவாழ் நகரமொடு சிற்றூராதி யவெல்லாம் பிறங்குதண்டால்

வருந்தலிலாச் சுவருள்வாய் ஆதியகலத் தானும்வளர் சுற்றாலும்
திருந்தவளந் திசைந்தபடி குழிபெருக்கி ஆயாதி தேர்ந்திடாயே. (25)

கிராமங்கள் செல்வம் கொழித்துச் சிறக்கும் நகரங்கள், சிற்றூர் முதலியன நிர்மாணிக்கும் முழக்கோலால் சுற்றுச்சுவர், வாயில் (நுழை வாயில்) நீள, அகலம், குழி, முதலியன பற்றி அறிந்து தெளிவாயாக, குழிகளைக்கண்டு, பெருக்கி ஆயத்தொகை காண்பாயாக.

ஆயதேவா லயங்கெர்ப்பக் கிரகமண்டபங் களவை களோடும்
ஏயபரிவா ரதலஞ்சா லைபிரகா ரங்கோபுரம் இவற்றைத்
தூயகாற்புற நடுவுள்வாய்ப் பித்தியக மையஞ்சொலும் இவற்றின்
மேயகலநீ ளமொடுசுற்று முழத்தாற் கொள்ளல்விதி யாமென்றே. (26)

தெய்வ ஆலயங்களில் கர்ப்பக்கிரகம், மண்டபங்கள், பரிவார தேவதைகளின் இருப்பிடம், சுற்றுப்பிரகாரம், கோபுரம், மையமண்டபம் ஒதுக்குப்புறம் ஆகியவற்றின் நீள, அகலம் முதலியனவற்றின் அளவை முழக்கோல் விதியுரைப்போம் (இரும்பினால் செய்த முழக்கோல்)

விதித்திடுநாற் குலத்தோர்க்கும் உரைத்தமுழத் தான்மறையோர் வீட்டினுக்குக்
கதித்தசுவர்ப் புறமையமுள் வாயுந் திகழரசர் கடிமனைக்கு
மதித்தஅவர் நடுவகவாய் உட்காலுள் வாய்ப்புறமும் வைசியர்க்குத்
துதித்திடுகான் நடுப்பித்தி நடுவுமாம் இவ்வகைசூத் திரர்க்குமாமே. (27)

நான்கு வர்ணத்தோர்க்கும் கூறிய முழக்கோல் அளவையால் ஆலயக்கர்ப்பக்கிரகத்திற்கும், சுற்றுச்சுவர், மையச்சுவர், நுழைவாயில் முதலானவை க்ஷத்திரியருக்குக் கூறிய முழக்கோலினாலும், வெளிச்சுவர், வெளிவாயில், நடுவாயில் முதலியவை வைசியருக்குக் கூறிய முழக்கோலாலும், நடுச்சுவர் மற்றும் நடுமண்டபம் முதலியன சூத்திரருக்குக் கூறிய முழக்கோலாலும் அளந்து செய்ய வேண்டும் என்பதாகும்.

ஆகுமறை யவராதியா வருக்குஞ்சுவர்ப் புறவாயா தியாகப்
பாகமுடனே அளந்தாயா திகொளலாம் எனவும் பகருமுன்னூல்
யோகமடஞ் சத்திரமாத் தொழுவநதிப் படித்துறையோ டியர்நீர்ப்பந்தல்
கோகனக தடந்துரவுகி ணறுமுனமுரைத் தவணங்கொள் ளலாமே.(28)

பிராமணர் முதல் யாவருக்கும் வெளிச்சுவற்றின் வாசல் முதலாக அளந்து கணக்கிட வேண்டும் என்றும் ஒரு நூல் கூறுகிறது மடம்,

சத்திரம், கால்நடைத்தொழுவம், ஆற்றுப்படித்துறை, தண்ணீர்ப்பந்தல், குளம், கிணறு முதலியனவும் முன்பு கூறியபடியே அளந்து கணக்கிடலாம்.

கொள்ளுமுயர் தண்டிகைசிம் மாசனம்பீ டஞ்சகடு குலவுமஞ்சம்
உள்ளிவையா தியைமானாங் குலத்தளவாற் காற்புறவாய் உள்வாமையந்
தெள்ளுயரஞ் சுத்தாதிகொள் கபற்பல ஆயுதமுஞ் செயமுண்டாக
விள்ளருஞ்சீர்த் தேகலப்தாங் குலத்தளவா நளிபொருந்தும் விதங்கொள்வாயே.
(29)

தூக்கிச்செல்லும் பல்லக்கு, சிம்மாசனம், பீடம், ரதம், கட்டில் முதலியவகளைச் செய்ய க்ஷத்திரியருக்குக் கூறிய அளவுகோலால் அளந்து செய்க வெளிவாயில் உள்வாயில், நடுவாயில், சுற்றுச்சுவர், முதலியவற்றிற்கும் மேற்கூறிய அளவுகோலே. ஆயுதங்கள் வைக்கும் அறை எல்லாவர்ணத்திற்கும் பொதுவான அளவுகோலால் அளக்கவும்.

விதரணஞ்சேர் தேகலப்தாங் குலமாத்திராங் குலமேல்விளங் குசீர்த்தி
இதமுறுமா ணாங்குலமற் றிவைகளாற் சிவலிங்கம் எழுவாயாக
வதிபுகழ்விக் கிரகமெல்லாம் பாதாதி கேசவுயரத் தாற்கொள்க
துதிபலிபீ டத்தைத்தாங் குலத்தளவாற் கொள்கமுன்னூல் சொற்றவாறே. (30)

எந்த வர்ணத்தாருக்காக ஆலயம் நிர்மாணித்தாயோ அந்த வர்ணத்தாருக்குரிய அளவுகோலினால் சிவலிங்கம் அளந்து செய்வாயாக. கீர்த்தியுடைய விக்கிரகங்களைச் செய்யவென்றால் உச்சி முதல் பாதம்வரை உயரத்தை அந்த விக்கிரகத்திற்குரிய தேவதையின் வர்ண அளவுகோலால் அளந்தும் பலி பீடம், பீடம் முதலியவற்றினை வழிபடுபவரின் வர்ணத்திற்குரியவரின் அளவுகோலால் அளந்தும் முன்னூலில் கூறியபடி செய்வாயாக.

சொற்றிடுமாத் மார்த்தகிரகார்ச் சனைவிம்பங் களமைத்து களுறாமற்
கற்றவர்சொல் மாத்திராங்குலத் தளவாற்கா ணுவாகனங்கள் தம்மை
உற்றபின்கால் அடியாதிதலை மட்டம்வரை யிலுமேலுரை சர்ப்பத்தை
எற்றுறுவா னுனியாதி தலைவரையும் அளந்துநலமி சையைக்கொள்க.(31)

பூசைக்குரிய விக்கிரகங்களை பின்னப்பட்டு விடாமல் (உடைந்து விடாமல்) முன்னோர் கூறிய குலவழக்க அளவைகளைத் தவறுண்டாகாமல் கடைப்பிடித்து செய்வாய், வாகனங்களைச் செய்யும்போது கால்முதல் தலைவரையாக அளந்தும் சர்ப்பங்களைச்

செய்யும்போது வால்நுனிமுதல் தலைவரையாக அளந்தும் செய்யக் கடவை. (மரத்தினால் சிற்பங்களமைக்கும் விதம் பற்றிக் கூறியுள்ளது)

இசைவுறுபல் பட்சிகளைக் காலாதி தலைவரையும் இனிதுகொள்க
பசைமிகுகற் பகவிருக்ஷஞ் தோரணநற் கதலிகெர்பபா தத்தோடு
வசையில்மனு வாரபாதங் கிரகபாதமு டன்வயங்கு ஈதெல்லாம்
திசைகொளுயரத் தின்மானாங் குலத்தாலளந் துகொளச் சிறக்குமாதோ.(32)

பல பறவைகளை செய்யும்போது கால்முதல் தலை வரை அளந்து செய்க கற்பகவிருட்சம், தோரணவாயிலில் அமைக்கும் வாழைமரம் முதலியன தூர்முதல் அளந்து மனிதர், விக்கிரக உருவங்களைப் போல அளந்து குலஆசாரப்படி செய்க.

சிறந்தகர்த்தா நடுவிரலின் சுற்றளவே மாத்திராங்குல மாஞ்சீர்கால்
அறுந்தருவிக் கிரகமுதலி யவுயரந்தே கலப்தாங் குலமதாகும்
மறந்தவீரிய வையாதிபா தஞ்செய்தியைந் துகொளவரும் இவற்றுட்
குறைந்திலகும் அளவைத்தாங் குலமாகும் பரவுநலங் குலவுமாதோ. (33)

சிறந்த சிற்பியானவன் தனது கையின் நடுவிரலின் சுற்றளவை ஒரு அங்குலமாகக் கொண்டு புகழ்பெற விக்கிரகங்களை அமைக்க அளவுகோல் செய்வானாக இதில் சிரசின் அளவு எத்தனை அங்குலமோ அதைப்போல ஐந்து பங்கு தலை முதல் பாதம் வரை அளந்து செய்ய வேண்டும் இதுவே குலாசார மரபு அளவு முறை.

ஆலயங் கிரகமாங் கரண்மனை யலங்கமாலில்
சாலையும் அன்னசத்ரம் சாவடிசமர்க் களங்கள்
சோலைசூழ் தடாகம்வா விதுஜமாம் யாகசாலை
வேலைசெய் வித்யாசாலை விளங்கவேபொருத் தஞ்செய்வார். (34)

ஆலயம், வீடு, அரண்மனை, கொத்தளம், கோட்டை, ஆயுதசாலை, அன்னசத்திரம், சாவடி, போர்பயிற்சி நிலையங்கள், சோலைகள் சூழ்ந்த தடாகங்கள், குளங்கள், பொய்கைகள், கொடிமரம், யாகசாலை, தொழிற்கூடம், கல்விக்கூடம் முதலியன அமைக்கும் விதம் கூறுவோம்.

கைத்தடிவில் லும்வாளி கருதிய வளையம் வாளும்
கத்திகட்டா ரியீட்டிகன் னக்கோல் செங்கோ லாணி
சத்தியாம் சூலம்வே லுஞ்சதுர் முகனா சாரங்கள்
பத்தியாய்ப் பொருத்தஞ் செய்வாய் பகைவரை வெல்வதற்கே. (35)

எதிரிகளை வெல்லும்படியாக ஆயுதங்களைக் கணக்காய் செய்யக்கடவை கைத்தடி, வில், அம்பு, அம்பராத்தூளி, வாள், கத்தி, கட்டாரி, ஈட்டி, கண்ணக்கோல், செங்கோல், ஆணி, சக்தியின் ஆயுதமான சூலம், வேல், எழுத்தாணி முதலியன கணக்காய்ச் செய்யக் கடவை.

சிந்திக்கும் இரதவிதிசிற் பத்திலாகு நெடுஞ்சிலைக் குநீளம்
வந்தித்தநான் குதலைதொண் ணூறென்று அறைவர்வடி வாளின்நீளம்
பந்தித்தவி ரலைம்பானா குமெனப்பகர்வர் இவ்வாள் பற்றுவோர்க்கு
முந்தூற்ற பொருத்தவகை முவோர்களு ரைத்தபடிமொ ழிவாய்மின்னே.(36)

இரதத்தில் நிறுத்தும் சிலைக்கு நீளம் தொண்ணூறு அங்குலம் என்று மறைநூல் கூறும் வாளின் நீளம் 50 அங்குலமாகும். இந்த வாளேந்திப்போர் புரிவோர்களுக்கு வெற்றி நிச்சயம் என்று முனிவர்கள் உரைத்துள்ளனர் என்றறிவாய்.

அடுசுடர்வா ளிநீளம் அளந்திறை வலது செங்கை
நடுவிரல் இறையதாக்கி நற்றிய குணத்தாற் நாக்கிக்
கொடைநிதி உடனே கூட்டிக் கோளினா லீந்தசேடந்
தொடிபடு மங்கைநல்லாய் துவசமே முதலாய்ச் சொல்லே. (37)

அம்பின் நீளத்தை வலக்கை நடுவிரல்வரை அளந்து, வில்லின் நாண் நீளத்தாற்பெருக்கி, அம்பின் முன்முனை நீளத்துடன் கூட்டி மேற்படி அம்பின் நீளத்தின் அளவால் வகுத்து வந்த மீதியை அம்பின் விரல்படும் அடிபாகமாய்க் கொள்க.

கேதனம் பொருளாந் தூமங்கே டதாம்சீயம் வென்றி
போதுநாய் பீடைபூ மேவுறு புவிபுரக் குங்கோகு
தீதுறுவித ஊந்தந்தி செல்வங்கார் மகளே ஆகிற்
போதணிகுழ லாய்நன்மை பொருந்திடா தென்று போற்றே. (38)

அரசர்க்கான சிம்மாசனம் செய்யும்போது சரியான அளவைக் கடைபிடிக்காமற் போனாலும் சகுனங்கள் சரியில்லாது தோன்றினாலும் நலம் உண்டாகாது என்று அறிவாயாக.

சுற்றெயில்கோ புரமிரதந் துவசதண்டம் தெண்டாகுஞ் துலங்குவிம்பம்
பற்றியவா கனஞ்சுடர்வாள் பயில்காளங் கலம்விளக்கு பரிசைசாபந்
தொற்றியந்தர்ப் பணம்வாசல் காலிவைகள் விரலாகுஞ் சொன்னங்காசு
நற்றுகொழுவா பரணமிவை அவையாம் அளவுநாட் டுங்காலே. (39)

கோபுரம், ரதம், கொடிமரம், கொடியின் சின்னம், தேரில் அமரும் ஆசனம், வாள், ஈட்டி, விளக்கு, கேடயம், மிதித்து ஏறும் படிக்கட்டு, வாசற்கால், இவைகள் விரற்கடை அங்குலாதி அளவால் அளக்கவும், அணியும் பொன்னாபரணம் வீரக்கழல் ஆகியவற்றையும் சாஸ்திரப் பிரகாரம் செய்து அணிதல் வேண்டும்.

வேறு

அளக்கநாற்சா ணுமாகியங் குலம்நாற் பத்தெட்டு
துளக்கறப்பிடித் துஉன்னி துண்டிதமரைக் காலாக்கி
குளக்கரையரைக் கால்வீசம் குறிப்புடன்முக் கால்பூட்டி
பளைக்காமல் அளந்துபார்த்து நன்மனை எடுக்கநன்று. (40)

முழக்கோலானது 4 சாண் அல்லது 48 அங்குலம் நீளமாய் எடுத்து அங்குல கனத்துடன் முழக்கோல் செய்து அளந்து மனை அளக்கவும்.

ஆதியாம் பிரமாவிற் கன்பான வேம்பின் கோலே
நீதியாம் மன்னவர்க்கு நேர்மையாம் இலுப்பைக் கோலே
சோதியாம் வைசியர்கள் தோடகம் காலி ஆகும்
பேதியாம் சூத்திரர்க்கு பிரபலம் இந்நான்கு ஆமே. (41)

பிராமணர்க்கு வேம்பினால் செய்த கோல், க்ஷத்திரியருக்கு இலுப்பை மரக்கோல் வைசியருக்குக் கருங்காலி மரக்கோல் சூத்திரருக்கு மேற்படி மூன்றும் ஆகும்.

ஆமென கோல்கள் தன்னில் அலங்காரமின் னங்கேளு
வேயென பூவரசு தெங்குவே ழமுமாகும் என்று
தாமென மயனார் சொன்ன கோல்தனை இருந்தெடுத்து
ஆமெனக் கண்டித்துக் கோலையளக் கவுஞ்சொல் கேள்மாதே. (42)

கோல்கள்பற்றி இன்னம் கூறுகிறேன் கேள், பூவரசு, தென்னை, கரும்பும் முழக்கோல் செய்யப் பயன்படும் மயன்கூறிய கோல் எடுத்து அளவுடன் தயாரித்துப் பூமியை அளந்து மனை செய்க.

இசைந்தமூங்கில் தேக்குமரம் இனிய ஆச்சாவேங் கைமரம்
உசத்திமருதா ருளவாக்க உன்ன பன்னிரண் டங்குலந்தான்
கிசத்திலெட்டு பாகமதை கிரகித்து எடுக்க முழக்கோலாம்
நிசத்திலிதனை எடுத்தாள் வாய்நிம லனானை பொய்யாதே. (43)

மூங்கில், தேக்கு, ஆச்சா, வேங்கை கோல் செய்ய 12 அங்குலம் கொண்டதில் 8 பாகம் கொண்டது அதாவது 8 அடி கொண்டது ஒரு முழக்கோலாம். இவ்வாறு அமைத்தால் நிச்சயம் தவறு நேராது இது நிமலனான அந்தச் சிவபெருமான் மீது ஆணை, இது பொய்க்காது.

வாஸ்துதியானம்

ஒருமுகம் இரண்டுகைகள் உயர்சடை மகு டங்கொண்டோர்
உயர்செவிரத் னத்தோடோ டுயர்களங்கலன் கள்மின்னத்
திருமுகஞ் சயனங்கொண் டோர்திகழ்பத மூன்றுகொண்டோர்
திவாகரற்கியைந் தயபந்து துவாதச ராசிபீடம்
தொருமுகமா கவெவ்வேற் கேழாகுமி டத்துவைகி
உயர்வலம் வாளிடத்தே ஓங்கிய பரிசுதாங்கித்
திரிதருங் கரத்தராகித் தேவராய்ப் புவிக்குமேனி
சிவந்தவர் வாஸ்துநாமச் சீலியர்சுபத் தைச்செய்க. (44)

ஒரு முகமும், இரண்டு கரங்களும், உயர்ந்த ஜடாமகுடமும், காதுகளில் இரத்தினத் தோடுகளும், ஆபரணங்களும் மின்னலிட உறங்கிக் கொண்டிருக்கும் திருமுகமும் மூன்று பாதங்களும் உடையவர் சூரியனுக்கு உறவினர் 12 ராசிக்கட்டங்களில் ஒரு இராசியில் தலை வைத்தும், ஏழாம் இராசியில் கால்களை நீட்டி அந்தந்த மாதத்தில் சூரியன் சஞ்சரிக்கும் இராசியில் காலையும் அதற்கு 7 ஆம் ராசியில் தலையும் வைத்து இடக்கை கீழும் வலக்கை மேலுமாகச் சயனித்தபடியுமாக இருக்கும் சிவந்த நிறத்தினரான வாஸ்துபுருஷன் சுபத்தைச் செய்வாராக.

வாஸ்து சயன லட்சனம்

உக்கிரமுக முங்கண்ணு மொருகையிற் சொர்க்கம் ஆறும்
நிக்கிர விண்ணோர் கூட்டம் நீடவே சாடுதாளும்
மிக்கதோர் முதுகிற் கூனும் விரிசடை ஒப்பினோடு
வக்கிர மேனியோடு வாஸ்துதான் கிடக்கும் ஆறே. (45)

கோபம் பொருந்திய முகமும், கண்ணும், ஒரு கையில் சொர்க்கமும் விண்ணவர்கள் கூட்டம் மீது இடித்துவிடும் படியாக நீட்டிய கால்களும், கூனல், முதுகும், விரிந்துகிடக்கும் சடையோடும், வக்கிரமாக வளைந்த உடலுடன் வாஸ்து சயனித்து இருப்பார்.

மீளமும் ஆடும் ஏறு மேற்றிசை தலையதாகில்
ஊனமற்று இடக்கை கிழாய் உத்தரதிசை யைநோக்கி

சேனைவா கவன்றன் மேலே திசைபெறக் காலைநீட்டி
மானெனும் விழியாய் கேண்மோ வாஸ்துதான்கிடக் குமாறே. (46)

மேட, ரிஷப, மீனங்களின் திசைகளில் தலை வைத்து இடக்கை கீழாகவும் வலக்கை மேலாகவும் வடக்குத்திசை நோக்கிப் படுத்தபட சூரியன் சஞ்சரிக்கும் இராசியில் காலை நீட்டி வாஸ்துவானவர் படுத்துக்கிடப்பார்.

தண்டொடு நண்டுசிங்கந் தலையது வடக்கே வைத்து
வண்டிசை இடக்கை கீழாய் வலக்கைதான் மேலதாகி
திண்டிறல் இயமன் மேலேதிசை பெறக்கா லைநீட்டி
வண்டணி குழலினாளே வாஸ்துவும் கிடக்கும் பாரே. (47)

மிதுனம், கடகம், சிம்மத்தில் வடக்கில் தலைவைத்தும், இடக்கை கீழும் வலக்கை மேலும் தெற்குதிக்கில் கால்நீட்டி வண்டுகள் சூழும் மலர்களைச் சூடிய மாதே வாஸ்து படுத்திருப்பார் என்றவாறு.

கன்னியுந் துலாமுந் தேளுங்கதிர் முடிதிசை யிற்சேர்த்து
மன்னிய வருணன் மேலே மகிழ்பெறக்கா லைநீட்டி
இன்னிசை இடக்கை கீழாய்இயமன் தன்றிசை யைநோக்கி
வன்னமாமா தேகேளாய் வாஸ்துதான் கிடக்கும் என்றும். (48)

சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம் முதலாய திசைகளில் தலைவைத்தும் வருணன் திசையில் கால்நீட்டியும், இடக்கை கீழும், வலக்கை மேலும் யமன் திசையாகிய தெற்கு நோக்கியும் படுத்திருப்பார் என்றவாறு.

தனுசொடு மகரகும்பம் தலையது தெற்கே வைத்து
மனுவொடு இடக்கைக் கீழாய் வலக்கைதான் மேலதாகி
மனமொடு முகமுமேற்கு வடக்கினிற் காலை நீட்டி
வனமுகை மாதே கேளாய் வாஸ்துவுங் கிடக்குமாறே. (49)

தனுசு, மகரம், கும்பம் மாதங்களில் தலையைத் தெற்கே வைத்து இடக்கை கீழாயும், வலக்கை மேலாயும் மேற்கு நோக்கியபடி வடக்கில் காலை நீட்டி வாஸ்து படுத்திருப்பார்.

திங்களே ராசிதன்னிற் சிறப்புடன் சிரசை வைத்துப்
பொங்கிய ராசிக்கே ழாம்புகமுயர் ராசி தன்னில்
தங்கிய காலை நீட்டி சகப்பிரதிட் டையாக
மங்கையே சொல்லக் கேளாய் வாஸ்துதான் கிடக்குமாறே. (50)

அந்தந்த மாதத்திற்கான இராசியில் தலைவைத்து அதற்கு ஏழாம் இராசியில் காலை நீட்டி வாஸ்து கிடப்பார் என்பதாகும்.

எங்கேமா தந்தானென் றேயிராசி நிலைகள் தானெண்ணி
அங்கேபா தந்தன்னை நீட்டியதனுக் கெதிரே தலை சாய்த்துப்
பங்கேயிடக் கைகீழாகப் பகரும் வலக்கை மேலாக
மங்காப் பூவாம்மா நிலத்தேவாஸ் துபதிதான் கிடப்பதுவே. (51)

மாதாந்திர இராசியில் கால்நீட்டி அதற்கு ஏழாம் இராசியில் தலைவைத்து இடக்கை கீழும், வலக்கை மேலும் வைத்துப் படுத்துக் கிடப்பார் வாஸ்துவாமே.

கிடப்பதுமிடக் கைகீழாய்க் கிடந்தவன் எழுந்திருந்து
நடப்பதுவல மேயாகில் நல்லதோரிரா சிதோறும்
படுக்கையில் வயிற்றைப்பார்த் துப்பரிவுடன் வாசல்தன்னை
விடுப்பதும் இல்லையாகில் வேதனை சூழுமன்றோ. (52)

வாஸ்துவானவன் எழுந்திருக்கும்போது வலப்புறமாக நடப்பான் அப்போது அவன் வயிறு இருந்த இராசியை அடையாளம் கண்டு அந்த இராசிக்குரிய பாகத்தில் வாசற்கால் வைக்க வேண்டும். அவ்வாறு அமைக்காவிடில் அந்தமனை நலம் தராது என்றவாறு.

சித்திரை விசாகமாடி சிறந்த ஆவணியி னோடு
வைத்தவைப் பசியுமிக்க மன்னு கார்த்திகை யுந்தானும்
மற்றதாந் தைமாதத் தோடுமாசி தானெட்டு மாதம்
புத்தியான் மனைகள் கோலப் புகழுடன்நன் மையாமே. (53)

சித்திரை, வைகாசி, ஆடி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை, தை, மாசி இந்த எட்டு மாதங்களிலும் மனைக்கு அடிகோலப் புகழுடன் நன்மையுண்டாகும்.

வாஸ்து எழுந்த தேதி நாழிகை

கிடந்தமே டமொருபத்து கிளரும் விடையோன் மூவேழு
அடங்கோல் கடகம் பதினொன்றும் அரிதானா றுதேளெட்டு
குடந்தான் இருபதா குங்கூறு மகரம் பனிரெண்டு
இடந்தான் எடுத்தனன் றென்றால் எல்லாத்திசை யுநன்றாமே. (54)

சித்திரைமாதம் 12ஆம் தேதி, வைகாசி 21ஆம் தேதி, ஆடி மாதம் 11ஆம் தேதி, ஆவணி மாதம் 6ஆம் நாள், ஐப்பசி மாதம் 11ஆம் தேதி,

கார்த்திகை மாதம் 8ஆம் தேதி, தைமாதம் 12 ஆம் தேதி, மாசி மாதம் 20ஆம் நாள் முதலான தினங்களில் வாஸ்து நித்திரை விடுவார்.

குன்றமான் குடமே எட்டு கொடியதேள் பத்ததாகும்
நன்றுகோல் இரண்ட தாகுநன் மேடம் ஐந்தாகும்
தென்றல் சேர்சிங்கந் தானே சிறந்தமூ வேழதாகும்
மன்றல்சேர் குழலினாளே வாஸ்து தான்வழிக்கும் வாறே. (55)

சித்திரைமாதம் 12ஆம் நாள் 5ஆம் நாழிகை, வைகாசி 21இல் 8ஆம் நாழிகை, ஆடி 11இல் 2ஆம் நாழிகை, ஆவனி 6இல் 21ஆம் நாழிகை, ஐப்பசி 11இல் 2 ஆம் நாழிகை, கார்த்திகை 8இல் 10ஆம் நாழிகை, தைமாதம் 12ஆம் நாள் 8ஆம் நாழிகை, மாசி மாதம் 20ஆம் நாள் 8ஆம் நாழிகை முதலான நாழிகை முடிவில் வாஸ்து புருடன் நித்திரைவிட்டு எழுந்திருப்பார்.

செய்யவாஸ்து வுமுதற்கால் திடமுடன் விழித்து நோக்கித்
துய்யதோர் கடிகை மூன்றுதுரிதம் முக்கா லுக்குள்ளே
உய்யவே முதலாம்வே ளையுகந்த தோர்கடிகை முக்கால்
செய்யுமாந் தந்தசுத்தி செகபதி நலிவு உண்டாமே. (56)

வாஸ்து புருடன் மேற்கூறிய தினங்களில் குறிப்பிட்ட நாழிகைகளின் முடிவில் எழுந்திருந்து மூன்றேமுக்கால் நாழிகை விழித்திருப்பார் (1½ மணிநேரம்) முதல் முக்கால் நாழிகை பல்துலக்குவார். அப்போது கிரக ஆரம்பம் செய்யக்கூடாது.

ஏற்றிய விரண்டாம் வேளையெழி லுயர்கடிகை முக்கால்
போற்றியே முழுகல் செய்வன் பொருந்தியபீ டையுண்டாம்
சாற்றிய மூன்றாம்வே ளைதக்கதோர் கடிகை முக்கால்
மாற்றிய பூசை செய்வன் வறுமையால் மெலிவரன்றே. (57)

இரண்டாவது முக்கால் நாழிகையின் போது ஸ்நானம் செய்வார். இப்போதும் மனை செய்தால் பீடையுண்டாகும், மூன்றாம் முக்கால் நாழிகைப் பொழுது பூசை செய்வார். இந்தச் சமயம் மனைகோலினால் வறுமையுண்டாகும்.

பெருகிய நாலாம்வே ளைபேருயர் கடிகை முக்கால்
அருமையாய் ஆசனஞ் செய்வழை கியமகவு முண்டாந்
திருவுறும் ஐந்தாம்வே ளைசேர்ந்ததோர் கடிகை முக்கால்
மருவியே தாம்பூலஞ் கொள்வன் மகிழ்ந்துமேயிருப் பர்நன்றே. (58)

நான்காவது முக்கால் நாழிகையின் போது ஆகாரம் உட்கொள்வார். இது சமயம் மனைகோலினால் புத்திரசம்பத்துடன் நலமுண்டாகும். ஐந்தாம் முக்கால் நாழிகைப் பொழுதில் தாம்பூலம் தரிப்பார். அதுகாலம் மனைகோலினால் சுபமான மகிழ்வான வாழ்வுண்டாகும் என்றவாறு.

திருநெல்வேலிப் பிரதி

தந்தா தாவனமும் முக்கால்நா னமுமாகல் முக்கால்
சிந்தையில் பூசைமுக் கால்சிறந்த போஜனமு முக்கால்
சந்தனம் புஷ்பந்தா னும்தாம்பூ லந்தரித்தல் முக்கால்
விந்தையாய் வாஸ்துவுக்கு விளம்பினர் சமயம் என்றே. (59)

பல்துலக்கல் முக்கால் நாழிகை, ஸ்நானம் முக்கால் நாழிகை, பூசை முக்கால் நாழிகை, உணவு உண்ணல் முக்கால் நாழிகை, சந்தனம், புஷ்பம், தாம்பூலம் அணிதல் முக்கால் நாழிகை யென வாஸ்து விழித்திருக்கும் சமயம் செய்யும் காரியங்கள் எனக்கூறுவர்.

பார்த்திடும் ராச தெண்டம் பாங்கான பல்விளக்கல்
நெரித்திடும் சரீர பீடை நீராடல்சை கைதானும்
தரித்திரம் பூசைதா னும்சந்தோ ஷமகிழ்ச்சி உண்ணல்
குரித்ததோர் பொருள்கொடுக் கும்கூர்த்த தாம்பூலம் என்னே. (60)

பல்விளக்கும்போது மனை அடிகோலினால் ராஜதண்டனை, குளிக்கும் போதில் மனை செய்தால் சரீரத்துன்பம், பூசைவேளையின் மனைசெய்தால் தரித்திரம் உண்டாகும். உண்ணும் வேளை மனை செய்ய மகிழ்ச்சியும், செல்வச்செழிப்பு தாம்பூலம் அணியும்போது இப்படியாக பலன்கள் விவரமாகும்.

திருவனந்தபுரப் பிரதி

நளிமிகுமைந் துவேளைநான் முகன்படைத் தவாஸ்து
குளிசெபம்ஊன் ஏகாந்தம் கூர்விழி மயக்கமுக்கால்
தெளிவுறுமைந் துவேளைதேர்ந் ததுஉணர்ந் தோர்நெற்றி
விளியினில்உதித் தோன்வந்து மேவியே விளம்பலுற்றேன். (61)

ஐந்து வேளைகளில் பிரமன் படைத்த வாஸ்துவானவர் ஐந்துவிதமான தொழில்களில் ஈடுபட்டிருந்தால், அவை குளித்தல், பூசை, உண்டி, ஏகாந்தம், விழிமயக்கம் என ஒவ்வொன்றும் முக்கால்

நாழிகையாகும். இந்த ஐந்து வேளைகளின் பலனறிந்து செய்பவர் நன்மை பெறுவர் சிவன் நெற்றியினின்றும் உதித்த முருகப் பெருமான் உரைத்தது இது.

ஊணிடைப் பட்ட தம்பம் உயர்மனை பாழதாகும்
நீணியே குளியதானால் நிறைவேற நெடுநாள் செல்லும்
ஆணியே துஞ்சுமாகில் அத்தம்பம் தனியே நிற்கும்
பேணியே ஜெபமே காந்தம் பெறும்பலன் அதிகமாமே. (62)

ஊண் பொழுதில் நிறுத்தப்பட்ட வாசற்கால் மனை பாழாகும் குளிக்கும் சமயம் வைத்தால் அம்மனை கட்டி முடிய நெடுநாள் செல்லும், விழிமயக்கத்தின் போதாகில் அம்மனை நிறைவுறாது. ஜெயம், ஏகாந்தம் பொழுதுகளில் சிறப்பான நல்லபலன்கள் உண்டாகும் என்றவாறு.

நோக்குந்திக்கு

அணிமுடியில் எழுநாளும் வாஸ்துதான் கிழக்குநோக்கும்
இனிசதயமெ முநாளும் இலகுடன்வடக் குநோக்கும்
தணிப்புயர் வணிகளாறும் தனித்துடன் மேற்குநோக்கும்
மணிமகமெழு நாளும் வாஸ்துதான் தெற்குநோக்கும். (63)

அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம் முதலான ஏழு நட்சத்திரங்களில் வாஸ்து எழுந்திருந்தால் கிழக்குப் பார்த்து எழுந்திருப்பார், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி, அசுவினி, பரணி, கிருத்திகை முதலான ஏழு நட்சத்திர நாட்களில் வாஸ்து எழுந்தால் வடக்கு நோக்கி எழுவார். ரோகிணி மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயில்யம் முதலான ஆறு நட்சத்திர தினங்களில் எழுந்திருந்தால் மேற்கு நோக்கி எழுவார். மகம், பூரம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம் முதலிய ஏழு நட்சத்திரங்களின் நாளில் வாஸ்து எழுந்தால் தெற்குப்பார்த்து எழுந்திருப்பார்.

நித்திய வாஸ்து

காலை கிழக்காகுங் கட்டுச்சித் தெற்காகும்
சாலவயன் மேற்காகச் சாயுமே - மாலை
வடக்காக வேதலையும் வைத்துத் தானித்தங்
கிடக்கும்வா றிதெனவே சேன். (64)

காலையில் கிழக்கிலும், உச்சிப்பொழுதில் தெற்கிலும், பிற்பகல் மேற்கிலும், மாலையில் வடக்கிலும் தலைவைத்துத் தினமும் வாஸ்துவானவர் படுத்திருப்பார்.

க்ஷணிக வாஸ்து

அநுதினம் உதயம் தொட்டேயாம் பகல்சா மம்நாலு
வடதிசை முதலா நான்கும் வலமதாய் அறியலாகும்
அடவுடன் பகல்போ லிராவுமாம் கிடைவாஸ் துவின்மேல்
வினிமது க்ஷணிக வாஸ்து எய்திடுங் கதியதாமே. (65)

தினமும் சூரிய உதயம் முதல் நான்கு ஜாமங்களில் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என வாஸ்து கிடப்பார். இதுபோல இரவிலும் கிடப்பார். இந்த நிலையை க்ஷணிக வாஸ்து என்பர்.

மேற்படி பலன்

வாஸ்துவின் திக்குநேராய் வாசற்கால் கம்பம் நாட்ட
ஆத்துமசுத னும்பெண்டிர் அடிமையும் நாசம் பண்ணும்
வேற்றொரு மனையான் கையில் விற்கவே பெறுவதல்லால்
கோத்திரம் அழியுமென்று குறுமுனி உரைத்தார் தானே. (66)

வாஸ்துவின் திசைக்கு நேராக வாசற்கால் வைத்தால் அன்பான நண்பர் முதலியவர்களும், பெண்கள், வேலையாட்களின் இழப்பு ஏற்படும். வேறொருவருக்கு விற்றுவிடும் நிலை உண்டாகும் தவிர தலைமுறையே நாசமடையும் என அகத்தியர் உரைக்கிறார்.

மேய வாஸ்து விரும்பிய நிலையின்றித்
தூய மாமனை தொடங்கி எடுத்திடில்
நேயமாய் மனைவியும் நிறைந்த கணவனும்
மாயுமே முகூர்த்தம் வைத்தவனுஞ் சாகுமே. (67)

வாஸ்துவின் நிலை அறியாமல் மனைதொடங்கினால் அன்பான கணவன் மனைவி முகூர்த்தம் குறித்துத்தந்த ஜோதிடர் ஆகியோர் நாசமடைவார்கள். மரணம் உண்டாகும்.

சாவது நிச்சயந் தான்மனை கோல்பவன்
பூமலர் நாஸ்துபு ருஷன்முன் சென்றிடிற்
தாமுறு பகைவராற் சடுதியில் மாய்ந்திடுஞ்
சேமவெண் குட்டமும் சேரும் உடம்பிலே. (68)

மரணம் நிச்சயம் அத்துடன் மனைக்குரியவன் பகைவரால் கொல்லப்படுவான் தவறினால் வெண்குஷ்டம் என்ற நோய் உண்டாகும்.

வாஸ்துவின் கிடக்கை உன்னி மனைதனைக்கோடிலானாகில்
சீத்தலிற் பொருளுங் கேடாய்ச் செய்தவமனைத் தும்பாழாம்
ஏற்றிய மனையினுள் ளேயிருந்திடும் பெரிய நோய்தான்
மூத்தநாயகி யுஞ்சேர்வள் முனியையும் தொடரும் நோயே. (69)

வாஸ்துவின் நிலை தெரிந்து மனை செய்யாவிடில் சேர்த்து வைத்த பொருள் இழப்பு உண்டாவதுடன் அந்த மனையும் நாசமடையும், தவிர அவனது தவபுண்ணியமும் கெடும். அந்த வீட்டினில் நோய் குடியிருக்கும் மூதேவியானவள் வாசம் செய்வாள், பின்னும் முனிமுதலான கொடிய பேய்களும் வந்திருந்து நோயில் தள்ளும்.

காலதே வாசலாகிற் கருங்குழல் சாவு சொல்லுஞ்
சாலவே தலையதாகிற் தானவன் சாவு சொல்லு
மாலமா முதுகே யாகில்அர சராற்பயம் உண்டாகும்
வாலிதான் வயிற்றில் கோலில்வன் பொருள்சே ருமென்றே. (70)

வாஸ்துவின் கால் உள்ள பகுதியில் வாசற்கால் வைத்தால் மனைவி நாசமடைவாள். தலைப்பகுதியில் வாசற்கால் வைத்தால் மனைக்குரியவனுக்கு நாசம். முதுகுப் பகுதியில் வாசல் விட்டால் திருடர் பயமுண்டாகும். வயிற்றுப் பகுதியில் வாசல் வைத்தால் சிறந்த செல்வச் சிறப்பு உண்டாகும்.

துய்யதோர் வயிற்றில் வாசல் சுகமொடு செல்வமுண்டாம்
கையது வாசலாகிற் கைச்சிசுக் களுமே பாழாம்
மெய்யதா மார்பே ஆகின் மேன்மனை எரிந்துபோகும்
பையதே தலையதாகில் பதிக்குளோன் இறப்பது என்னே. (71)

வயிற்றில் வாசல்விட்டால் சுகமுடன் செல்வம் உண்டாகும். கையுள்ள இடத்தில் வாசல்விட்டால் குழந்தைகள் இழப்புண்டாகும். மார்புப் பகுதியில் வாசற்கால்விட்டால் அந்தமனை அக்கினிக்கு இரையாகும். தலைப்பகுதி ஆனால் மனைக்குடையவன் மரணமடைவான்.

தாயொடு தந்தை கேடாம் தலையுறிற் குலத்தினோடு
சேயுமின் மாதும் கேடாம் செப்பிய பாதமாகில்
ஆயுணீள் வாழ்வதாகும் மறைதரும் உதரந் தன்னில்
நோயொடு துயராம் பாம்பிநுண் ணியபுரத் திலன்றே. (72)

தலைப்பகுதியானால் தாய் தந்தைக்குக் கேடு, பாதமானால் மனைவிக்குக் கேடு வரும், வயிறானால் நீண்ட ஆயுள் உண்டாகும், முதுகில் என்றால் நோயும், துயரமும் உண்டாகும்.

வாஸ்துவின் கிடக்கை மாதத்தில் மனை கோலலாகாதெனல்

வாஸ்துவின்கிடக் கைமாதம் வாழ்மனைகோ லிற்பாழாம்
மாற்றுநீர்ப்படுக் கைதன்னில் மதியிலார் மனையெடுக்கில்
நேத்தியாந்தலை வன்செத்து நிலையறக் குலைந்துபோவான்
தூற்றியாங்கெழுந் தபோதே துதித்துநீமனை கோல்மன்ன. (73)

வாஸ்துவானவர் படுத்திருக்கும் மாதத்தில் மனை செய்தால் நாசம், மேலும் மனைக்கு உடையவன் மரணம், குடும்பம் நிலைகுலைந்து போகும். எனவே வாஸ்து எழுந்து உள்ளபோது நீ மனை அடிகோலுவாயாக.

பார்தனில் வாஸ்துவுந்தான் படுத்தவன் கிடக்கும் போது
சீருடன் மனையைச் செய்துசிறப் புடன்குடியே போனால்
பேர்கெடும் வினைகள் சூழும் பொங்கியசெல் வங்குன்றும்
வார்பெருந் தனத்தாய் கேளாய் மனையவர்நசிப் பாரென்றே. (74)

வாஸ்து படுத்திருக்கும் போது மனை உண்டாக்கிக் குடிபோனால் வினைகள் சூழும், செல்வம் குன்றும், அன்பானவனே கேள் மனைக்குரியவன் நசித்துப் போய்விடுவான் என்றவாறு.

செய்திடும் மனைகள் எல்லாம் சிறப்புடன் வாஸ்துவுந்தான்
பைதவன் படுக்கும்போ துபரிவுடன் குடியே போனால்
எய்திடுங்கரு மமெல்லாம் இகழ்ந்திடும் வினைகள் சூழும்
பெய்திடும் தமிழ்நூல் வல்லோர் பேசினர்வே தத்தோரே. (75)

சிறப்பான மனைகள் செய்யும்போது வாஸ்துவானவன் படுக்கும்போது குடிபுகுந்தால் செய்தொழில் நஷ்டம், வினைகள் சூழல், முதலிய துர்ப்பலன்கள் உண்டாகும் என்று தமிழ் நூலறிஞர்கள் வேதங்களை ஆராய்ந்து எழுதி வைத்துள்ளனர்.

மன்றிசை படுத்த வாஸ்துவவன் எழுந்திருக் கும்போதே
என்றிசை மனிதர் தாமுமியம் பியநாள்கள் பார்த்து
நன்றிசை குவலயத்தோர் நலம்பெறு மனைகள் செய்தால்
வண்டிசை குழலாய் கேளாய் இந்திரபதி யாமென்னே. (76)

வாஸ்து எழுந்திருக்கும்போது முனிபுங்கவர் கூறிய வண்ணம் நாள் கோளறிந்து உலகமக்கள் மனை அமைத்தால் நன்மை அடைவர். இந்திரன் போல வாழ்வர்.

அவனியில் படுத்தவாஸ் துவவன் எழுந்திருக் கும்போது
இவனிதமாகத் தானும் கடுகியே மனையைச் செய்தால்
நவநிதத்துட னேயாரும் நன்மையைப் பெறுவர் என்று
சயமுநி அருளால் வந்தமயன் அவனுரைத்த வாறே. (77)

வாஸ்து எழுந்திருக்கும்போது மனைகள் செய்தால் போக போக்கியங்களுடன் நன்மை மிகப் பெறுவர் என்று மயன் என்பவர் அருளிச் செய்தனர்.

சூரிய சந்திரவாஸ்து

கிழக்கொடுமேற் குநீண்டால் இலங்கிய இரவிவாஸ்தாம்
வடக்கொடுதெற் குநீண்டால் மருவியமதி யின்வாஸ்தாம்
அகத்தினைச்செய் யும்பேர்க்கு ஆவதுஆ காதென்று
செகத்தினில் மானிடர்க்கு செய்வது கூறுலுற்றேன். (78)

கிழக்கு, மேற்கில் வாஸ்து கிடந்தால் சூரிய வாஸ்து என்பர். வடக்கு தெற்கில் வாஸ்து கிடந்தால் சந்திர வாஸ்துவாகும். எனவே அப்போது செய்வது மானிடர் நலத்திற்கு ஆகாது. இவற்றில் எது எவருக்கு ஆகாது என உரைக்கிறேன் கேள்.

கூறலுடன் வேதியர்க்கு குணமுள்ள சந்திரனாம்
தேறுடன ரசருக்கு செய்திடுஞ்சந் திரனாகும்
பேறுடன் வைசியர்க்குப் பேருடனி ரண்டுமாகும்
வீறுடன் சூத்திரர்க்கு விளம்புவோம் பருதிவாஸ்தே. (79)

பிராமணர்க்கும், க்ஷத்திரியருக்கும் சந்திரவாஸ்துவும் வைசியருக்கும், சூரிய, சந்திர வாஸ்துகளும், சூத்திரருக்கு சூரிய வாஸ்துவும் நலம் பயக்கும்.

சந்திர வாஸ்துதானம் சாற்றிய சூத்திரர்க்கு
வந்திடுமா கிலேதான் மத்திபமது வேயாகும்
முந்திடு மன்னவர்க்கு முயன்றிடு மறையவர்க்கும்
வந்திடும் பருதிவஸ்து வறுமைகளா குமென்னே. (80)

சூத்திரருக்கு சந்திரவாஸ்து சமபலன்தரும் பிராமண க்ஷத்திரியருக்கு சூரிய வாஸ்து தீமை உண்டாக்கும்.

சர்ப்பவாஸ்து

மாசிலாநீ றணிந்தவடுக நாதன்வடகிழக் குத்தெற்குட னேவாயுமூலை
நேசமுடன் கிழக்குதென் மேற்குநிகர் வடக்குதென்கிழக் குநேர்மேற்காக
ஓசைபெற டமருகம்சூ லமேந்திஒரு திசைக்குமூன்றே முக்கால் கடிகையாக
தேசிகனார் நின்றநிலை முன்பின்னா சுசிர்பெறுமே காரியங்கள் செப்பினோமே.
(81)

குற்றமில்லா நீறணந்த சிவபெருமானானவர் வடகிழக்கு, தெற்கு, வாயு மூலை கிழக்கு, தென்மேற்கு, வடக்கு, தென்கிழக்கு, நேர்மேற்கு முதலிய திசைகளில் உடுக்கையும், சூலமும் ஏந்தி ஒரு திசைக்கு முறையே மூன்றே முக்கால் நாழிகை வீதம் நிற்பார் அப்போது அவருக்கு முன்பின்னாக மனை உண்டாக்க சுபம் உண்டாகும்.

யஜமான் உத்தம சிற்பனைத் தெரிந்து கொளல்

சிகையெக்நோ பவீதமுடை யுத்தரீகந் திருந்தியவே கவேட்டியுமாம்
சுகமுயர்கர் ணகுண்டலங்கரத் திற்றுலங்கிய மண்டலம் அதுவாம்
அகமகிழ்கெந் தவட்சதைபூ சையருள் சிவமாலை யுங்கூர்ம
உகமைசேர் பீடம்வே தபாடமுமாய் உதிப்பவன்சிற் பனென்றுணரே. (82)

ஏற்றிக்கட்டிய கட்டுக்குடுமியும், பூணூலும், மடிசார் ஆடையும் மேலே உத்தரீயமும், காதுகளில் குண்டலங்களும், கரத்தில் கங்கணமும், நித்திய பூசைக்கென பீடம் அமைத்துப் பூசை முடிப்பவனும், உருத்திராட்ச மாலையுடன் வேதபாடங்களைத் தவறாது வாசிப்பவனும், தபஸ்வியுமான விஸ்வகர்மகுலத் தோன்றலே சிறந்த சிற்பி என்றறிக.

யஜமான் சிற்பனை அழைத்தல்

ஐயனே தாங்களிந்த அடியார்மேல் அன்பு கூர்ந்து
பையவென் மனையில் வந்துபகரும் ஓர்மனை கணித்துச்
செய்யுமம் முறைகள் முற்றும்சிற் பநூல்முறை யிற்காட்டி
வையகவாழ்க் கையோங்க வைத்தல் நும்கடமை தானே. (83)

ஐயனே தாங்கள் அடியவன்மீது அன்புகொண்டு எனது மனைக்கு வந்து மனை அமைக்கும் முறைகணித்தும், சிற்பநூல் சாஸ்திரப்படி அடியவன் உலகில் நல்ல வண்ணம் வாழும் படிக்கு

அருள்புரியவேணும் இது தங்கள் கடமையென்று இதமான வார்த்தை பேசி அழைத்துச் செல்ல வேணும்.

மனை கோலற்குறியரல்லாச் சாதியர்

கன்னிக்குப் பிறந்தோன் கள்வன் கள்ளினை விற்குமாந்தன்
சென்னியில் வடுவன் சென்மவிரதம் செய்யொற்றைக் கண்ணன்
வன்னியில் வீழ்ந்தோன்வன் மன்வழக் குளோன்தீட் சைபெற்றோன்
அன்னியன் அழகில்லா தான்அளவிட் டால்மனை எடாதே. (84)

முறைப்படியா மணந்து கொள்ளாதவளுக்குப் பிறந்தவன் (தாசிமகன்) திருடன், கள் விற்பவன், தலையில் காயம்பட்ட வடுவுள்ளவன், உயிர்க்கொலை புரிபவன், ஒற்றைக் கண்ணுள்ளவன், பிரம்மச்சரியம் தவறியவன், வம்புக்காரன், வழக்குள்ளவன், தீயவர் தொடர்புடையவன், சன்னியாசி, கலப்பான வர்ணத்தவன் குரூபி (அழகற்றவன்) முதலியவர்களுக்கு மனை செய்து தரலாகாது என்றவாறு.

மனையது எடுக்கும்போ துவள்ளுவன் அன்னிய சாதி
ஆனவர்கள் அஸ்தந் தன்னாலப செயகூ னியந்தான்
முனையது ஸ்திரீயும் ஆடுமுறை மரணம் ஆகும்
மனையது தீதாமென் றுமனை அளந்தவரைத் தள்ளே. (85)

மனை எடுக்கும் போதில் வள்ளுவன், மனைக்குரியவனுக்கு அன்னிய சாதியை சேர்ந்தவன், முதலியவர், சூனியக்காரர், தூரஸ்திரீ முதலியவர்கள் எதிர்ப்பட்டால் அந்த மனை நற்பலன் தராது என்றறி.

மாறுகண்ணன் கண்சிமிட்டி மங்கைநூல் இழந்தவன்
தூறுசொல்லி குடிகெடுப்பான் சூத்திரமில் லாதவன்
வாருமென்று வலியபேசி வாழ்மனை அமைப்பவன்
ஆகுமிந்த சாத்திரத்தை அறியவொண்ணா பேர்களே. (86)

மாறுகண்ணன், அடிக்கடி கண்களை சிமிட்டுபவன், விதவை, குடிகெடுப்பவன் முறையற்ற வாழ்க்கை வாழ்பவன், முதலியவர்கள் எதிர்கொண்டழைத்தபோது மனை அமைப்பவன் சாத்திரம் அறியா மூடனாவான்.

முகத்திரட்டுடை யோன்மூர்க்கன் முனையிலான் தூங்கிவீழ்வான்
மிகப்புரட்டுடை யான்வேத விதியிலான்வியா திக்காரன்
அகம்பிரமித மில்லாதான் அறிந்திருந்தா லும்சிற்பம்
அகம்செய்துவீ டிட்டாலும் வாழ்வதுகுன் றுங்கண்டீர். (87)

முகலட்சணமில்லாதவன், முகத்தில் தழும்புகள் உள்ளவன், மூர்க்கன், மூக்கில் அறுபட்டவன், தூங்கி விழுபவன், புரட்டுக்காரன், நல்லசிந்தனை இல்லாதவன், நோயாளி, சம்பிரதாயம் அறியாதவன், தான் சிற்பநூல் தெரிந்தவனாய் இருந்தாலும் எத்துணைத் தெளிவாக மனை கணித்தாலும் நல்ல பலன் கிட்டா வாழ்வு குன்றும்.

எடுக்குமந்தகன் கைகால்குறைந் தவனினியமூக் குச்செவி அடைபட்டவன்
கொடுக்குமொற்றை விழிகளில்லா தவன்சொல்லும் வேத சாஸ்திரங் கற்காதவன்
கெடுக்குமாரண வித்தையைக் கற்றவன்கீர்த் தியில்லாத பெண்களைப்
பெற்றவன்
தொடுக்குஜன் மமலசிரிவர் எலாங்குழிகள் ஈயத்தீ தென்றுகூறினார். (88)

மந்தபுத்தியுள்ளவன், அங்கஹீனன், செவிடன், ஒற்றைக் கண்ணன், வேதம் படிக்காதவன், மாந்திரீகவாதி, தவறான நடத்தையுள்ள பெண்களின் தகப்பன், பிள்ளையில்லா மலடன் இவர்களைல்லாம் தச்சுச் செய்யத் தகுதியற்றவர்களாவர்.

மனை கோலற் கருகர்

ஆலயநக ரம்பட்டணங் கிரகமருளி யதடாக கூபமுமாஞ்
சிலமாஞ்சிற் பின்செய்கின் றகிரியைலுய லதுதப்பியே வேறோர்
தாலத்திலன் யசாதியோன் செய்தாற்றா ரணிமன்னவர் தனக்குஞ்
சாலவேகர்த் தன்றனக்குமே தோஷஞ்சஞ் சலமதுவுண் டாமே. (89)

ஆலயம், நகரம், பட்டணம், வீடு, குளம், சாக்கடைப் பாதை முதலியன அமைக்கும் சிற்பி தனது தொழிலல்லாதன செய்யாதவன், மாற்றுத் தொழில் புரியாதவன், விசுவகர்ம குலத்தின் வழிதோன்றல், தரணி மன்னவருக்கும், தனக்கும் சிறப்பானவன், முதலிய இனம் கொண்டவரல்லாதார் மனை கோலத் தகுதியில்லாதவர்.

பிரதிஷ்டை தாபிப்போர் பேசும் தபதி
சரதம் சமஸ்த கிரந்தம் - தெரிந்தோர்
ஆகுசை அலசல் அறுத்தே கணிதம்
விசித்திரமும் சத்தியமும் வேய்ந்து. (90)

பிரதிஷ்டை செய்பவர், ஸ்பதி, சமஸ்கிருதம், கிரந்தம் முதலிய வேத நூல்களைக் கற்றவர். ஆகூயையற்றவர், கணித நூல் திறம்பட ஆய்ந்தவர், திறமையானவர் சத்தியவான்.

சாஸ்திரத்தை முற்றுணர்ந்த விஸ்வகர்ம சந்ததியே
பாத்திரராம் சிற்பம் பகர்வதற்கு - நீத்தொருவர்
சிற்பம் நிகழ்த்துவரேல் திட்டமுடன் வீட்டெஜமான்
கர்த்தாவுக் சஞ்சலிப்பான் காண். (91)

சாஸ்திரத்தை முற்றும் அறிந்தவர், இப்பேர்க்கொத்த விசுவகர்மகுல மரபினைச் சேர்ந்த புண்ணியரே தச்சு செய்யும் தகுதியுடையவர். மேற்படி தகுதியில்லாதவன் மனை செய்தால் வீட்டுக்குரியவர் மற்றும் தச்சு செய்தவன் இருவருமே வருந்துவார்கள்.

ஜிதேந்திரி யனாகித்தன் சீலராகி டம்பம்
சுதம்விசனம் நீக்கித் தொலைத்தே - பதபேரூர்
புத்திதிடம் ஆகி வாஸ்து புலமாய்ந்த
வித்த விசுவகர்மன் மேல். (92)

இந்திரியங்க்ளை வென்றவன், குணசீலன், டம்பம் இல்லாதவன், கவலை அற்றவன், புத்திதிடமான சித்தமுடையவன் வாஸ்து சாஸ்திரத்தின் நுணுக்கங்கள் அறிந்தவனுமான விசுவகர்மனே மேலானவன்.

தூதனால் வாரம் ஒன்று சொல்லக் கேட்டு அவன் இருக்கை ராசியைக் கொண்டு சிற்பன் பலாபலன் சொல்லுதல்

ஆதிவாரம்

கொச்சையில் வந்து நின்று கூறிய பாநுவார
மச்சமும் அதனில் சொல்வோம் மனிதனால் வம்புண்டு
பிச்சையும் எடுக்கச் செய்யும் பேசினர்கருப் பன்காளி
இச்சையோ டிருக்குமென்று இசைந்தனர் வேதத் தோரே. (93)

மூச்சிரைத்து நடந்து வந்து அழைப்பவன் ஞாயிற்றுக்கிழமை, மீனராசியின் வேளை, அந்த மனிதனால் வம்பு சேரும். பிச்சையெடுக்கச் செய்யும், வந்தவன் மனையில் கருப்பன், காளி முதலிய தேவதைகள் இருக்கும் என்று ரிஷிகள் உரைத்தனர்.

ஆதியில்கா ளைதோன்ற அடுத்ததிற் கிழக்கு மேற்கு
மீதியாம் கிணறு பள்ளம் நின்றதில் விருக்ஷமுண்டு
ஓதினார் உள்ளதென்று உண்மையே அகமும் செய்ய
வாதனையா துமில்லை மனையிடம் வாழ்வு தானே. (94)

ஞாயிற்றுக்கிழமை ரிஷபலக்கினத்தில் வந்து நின்றவன் நின்றதிசை கிழக்கு மேற்காகில் மனையில் கிணறு, பள்ளம், மரம் முதலியன இருக்கும். இது உண்மையாம் அந்த மனையில் குற்றம் ஏதும் இல்லை. அந்த மனை சிறந்து வாழும் என்றவாறு.

சூரியவா ரந்தன்னில் துலக்கமாய் மிதுனம் தோன்ற
ஆரியைகா ளிதுர்க்கை அமர்ந்தது கன்னி சாடி
பாரியும் புதல்வர் சேர்க்கை பாக்கியமகத் திற்கூடும்
சீரியர் உரைத்தவாறு க்ஷேமமே இடமும் நன்றாம். (95)

ஞாயிற்றுக்கிழமை மிதுனராசியின் காலத்தில் கோருபவர் எதிர்நின்றால் கோரி வந்த மனையில் காளி துர்க்கை அல்லது கன்னித் தெய்வம் நிற்கும். இதன் பலன் புத்திர சேர்க்கையும், சுகமும் பாக்கியமும் உண்டாகும்.

வந்திடும்பா நுநண்டில்வரும் பாரிநால்வர் தாமும்
சிந்தையிலை யம்வேண்டாம் தேவதை பிசகுமில்லை
அந்தணன் திசையிற்கூ பமானதுமறைந் துநிற்கும்
இந்திரன்திக் கில்தானும் இருந்திடும்புளி யும்வேம்பும். (96)

ஞாயிற்றுக்கிழமை கடகராசியில் நின்றால் தேவதைப் பிசகு இல்லை சந்தேகம் வேண்டாம், குருபகவானுக்குரிய திசையில் (வடகிழக்கு) வந்தவன் கேட்ட மனையில் பழங்கிணறு ஒன்று புதைந்து கிடக்கும். இந்திரனுக்குரிய திக்கில் புளி, வேம்பு, மரங்கள் நிற்கும்.

சாலவே பாநுநாளில் தானரி செய்யத் தோன்ற
நீலனார் திசையில் காளிநின்றது முனியும் ஒட்டம்
காலன்போல் கரியுமஸ்தி கருங்கல்லுங் கரியுங் காணும்
பாலனுந் தாயுஞ்சே தம்பார்க்கவவ் விடம் ஆகாதே. (97)

ஞாயிற்றுக்கிழமை சிம்மத்தின் காலத்தில் மனைகேட்டவன் நின்றால், சனியின் திசையில் (மேற்கு) காளி நின்றது, தவிர முனியின் ஒட்டம் உண்டு, எமன் போல சல்லியம் இருக்கும், கரி, அஸ்தி (எலும்பு) கருங்கல் முதலியன காணும் அந்த இடத்தில் மனை செய்தால் தாய் சேய் சேதமடைவர் எனவே அந்த இடம் ஆகாது.

கதிரவன் நாளில்தா னுங்கன்னி யுமுதிக்கும் ஆகில்
பதியது அதிகமேலாம் பாலனும் பாக்கியமே சேரும்
சதியதுவொன் றும்இல்லை தருமீசன் கன்னி பூர்வம்
நதியணியீ சன்பொய்கை நலமென்றார் நன்மை தானே. (98)

ஞாயிற்றுக்கிழமை கன்னி உதித்தபோது மனைகோல அழைத்தவன் வந்து நின்றால் அம்மனை சிறப்புடன் விளங்கும், குழந்தை பாக்கியமுண்டாகும், தீங்கும் ஏதும் கிடையாது. நலம் உண்டாகும் மனை கோலலாம் அம்மனைக்கு வடகிழக்கு, தென்மேற்கு, கிழக்குத் திசைகளில் குளம் இருக்கும்.

வாரமும் பாநுவாரம் வந்திடுந் துலை உதிக்கில்
தீரமே இடமும் மேதை தேவதைநொண் டிகாளி
பாரதில் தெற்கு ஓட்டம் பார்வையுமதற் கேயில்லை
தாரமுந் தனமுஞ் சேயும் தங்கிடுமிட மென்றோதே. (99)

ஞாயிற்றுக்கிழமை துலாம் எழுந்தால் இடப்புறம் தேவதை நொண்டிக் கருப்பன சுவாமி, காளி முதலானவை ஓட்டம் தெற்கு நோக்கி ஓடும். ஆனால் அதனால் ஏதொரு கேடும் இல்லை. மனைவி. மக்கள் சுகமுண்டாகும் என்றவாறு.

ஆதவன் நாளில்தே ளிலமைந்திடும் முனியும் காளி
பேதகம் அங்கமுண்டு பிசின்மர மாண்டு முண்டு
வேதமில் அஸ்தியோடு விளங்கிடு கிழக்குத் திக்கில்
காதகன் வசித்தபூமி கட்டிடா தகமென்று ஒதே. (100)

ஞாயிற்றுக்கிழமை விருச்சிகம் எழுந்தால் முனியும், காளியும் அங்குண்டு, தவிர பிசின் உள்ள மாமரமும் அங்குண்டு, கிழக்கில் எலும்பு கிடக்கும், அந்த இடத்தில் முன்னம் ஒரு பாவி வாசம் செய்தனன் அந்த இடம் மனைக்காகாது.

பங்கவன்வா ரந்தன்னில் பார்க்கவில்லுதிக் கத்தானும்
வங்கணன் மிகுதியாகி வாழ்ந்திடு மிடமிதாமே
மங்கள கரமுமுண்டாம் மதலையு மவனிசேரும்
தங்கிடுந் தனமுமிக்கச் சத்துருவில் லைகண்டாய். (101)

ஞாயிற்றுக்கிழமை தனுசுராசியில் அன்பு வாழும் இடமாகும், மங்களகரமான இடம் குழந்தைப் பாக்கியம் உண்டாகும் செல்வம் தங்கும், எதிரிகள் இருக்க மாட்டார்கள்.

சேறியின் வாரந்தன் னில்துலங்கிட மகரம் தோன்ற
ஆதியவ் விடத்தில் வீடு அமைந்தது அழிந்ததென்று
நீதிவாதனை யுமெத்த நிச்சயம் தனஞ்சேய் நாசம்
சாதியில் ஈனதெய்வம் தங்கின இடமாம் தீதே. (102)

ஞாயிற்றுக்கிழமை மகரம் உதயமானபோது அங்குமுன்னம் ஒருவீடு இருந்து அது அழிந்துவிட்டது, அரசாங்க விரோதம், செல்வம், குழந்தைகள் வருத்தமுண்டாகும் மாந்திரீகத்திற்குப் பயன்படும் ஈனமான தெய்வம் அங்குகுடியிருக்கிறது என்றாம்.

சூத்திய அதிவாரம் தன்னிலே கும்பந் தோன்ற
நித்தியும் இல்லாதா கும்நின்றது புளியும் நாவல்
கோத்திரம் குலைதல் உண்டுகூ டாதுமனை யுந்தீதே
பார்த்திடுங் கிழக்குத் தெற்குபார்வை யுஞ்சமா தியாமே. (103)

ஞாயிற்றுக் கிழமை கும்பம் உதித்தால் நீதியற்ற இடம், புளி, நாவல் மரங்கள் நிற்கும் கோத்திரம் அழிந்து போகும், எனவே அங்கு மனை அமைக்கக்கூடாது. மனைபாழாம் அந்த இடத்திற்குக் கிழக்கு, தெற்கில் சமாதியிருக்கும்.

சித்திர பாநு வாரம் சேர்ந்திட மீனராசி
புத்திர விருத்தியாகும் புகழ்ச்சியும் தனமும் உண்டு
மித்திரனா லேசெல்வம் மெத்தவே இன்பஞ் செய்யும்
எத்திசை புகழுங் கீர்த்தி இடமதுமிக வும்நன்றே. (104)

ஞாயிற்றுக்கிழமை மீனம் உதித்தால் புத்திர விருத்தியும், தனச் சேர்க்கையும் நண்பனால் செல்வச்சிறப்பும், இன்பமும் செய்யும், திசைகள் தோறும் கீர்த்தியும் புகழும் பெற வாழ்வன் எனவே மனை அமைக்கலாம்.

சோமவாரம்

திங்களில் மேடமாகில் செப்பினார் பூமிபாகம்
தங்கிடுங் கிழக்குமேற்கு தானதிற் கிணறுபள்ளம்
அங்கதில் எலும்புசாம்பர் ஆலயங் கருப்புமுண்டு
பொங்கிடும் நீக்கிச்செய் யின்புகடுமே மிகவுண்டாமே. (105)

திங்கட்கிழமை மேடலக்கினம் உதயமானால் அந்த மனையில் கிழக்கு மேற்குப் பகுதிகளில் முறையே கிணறு, பள்ளம் இருக்கும், பள்ளத்தில் எலும்பு, சாம்பல் மற்றும் கோவில்களின் பூசைப் பொருட்கள் கிடக்கும் அந்த இடத்தை நீக்கிவிட்டு மனை செய்யவும் குற்றம் ஏதும் வராது என்றவாறு.

இந்துவின் வாரம் தன்னில் இடபமும் உதித்ததானால்
சந்ததி லாபம் மெத்த தனம்பெறு மிடமதென்றும்
கந்துகங் கூட்டம் ஆகும் காலியும் பூமிசேரும்
சுந்தரி ஈசன் கன்னி துலங்கிடுமனை ஈதாமே. (106)

திங்கட்கிழமை ரிஷபலக்கினத்தில் சந்ததிகள் சுகமுண்டாகும். செல்வச்சிறப்புண்டாகும், கால் நடை விருத்தியுண்டாகும் உறவினர் மெச்ச வாழ்வான். சக்தி அவன் மனையில் வாழும்

மதிநாளில் மிதுனமாக வந்திடு மனையும் நன்மை
நிதிதரும் பாலன் விருத்தி நிலைமையாய்ப் பூமிசேரும்
அதிபதி கிருபையுண் டாமையனும் பெண்ணுந் தெய்வம்
விதியறம் வடக்கில் ஈசன் விண்டுவு மேற்கதாமே. (107)

திங்கட்கிழமை மிதுனலக்கினம் உதயமானால் மனை சிறக்கும், புத்திர விருத்தியும் நிலச்சேர்க்கையும் சிவனருள்கிட்டும் ஐயனார், பெண் தெய்வம் அம்மனையில் நிற்கும் மனைக்கு வடக்கில் அல்லது மேற்கில் சிவன் கோவில் இருக்கும்.

சோமநாள் தன்னில் நண்டு தோன்றிடும் பூமிதன்னில்
நேமமா நிதியும் கிட்டும் நேரிழைபா லர்லாபம்
ஆமிதில் ஈசன் கன்னி ஆலயம்பிணந் தீதென்றும்
வாமமாம் பாகம் தள்ளிமனை செயஇடமும் நன்றே. (108)

திங்கட்கிழமை கடகம் உதித்தால், செல்வம் உண்டாகும், குழந்தைகள் மனைவி சுகமுண்டு, அங்கு முன்பு சக்தி ஆலயம் இருந்திருக்கும், அல்லது பிணம் புதைத்த இடமாயிருக்கும் அந்தப்பாகம் நீக்கி மற்ற இடத்தில் மனை அமைக்கவும்.

சிங்கமுந் திக்குசோமன் செப்பினார் வடக்கில் ஓட்டம்
அங்கதில் காளியொன்றும் அமைந்தது கறுப்பின் என்றுஞ்
சங்கடம் மிகவுமாகி தலைவனும் நோயும் மெத்த
மங்கையும் மரணமென்று மச்சங் கிழெலும்பு தானே. (109)

திங்கட்கிழமை சிம்மம் உதித்தால் மனையில் வடக்கே ஓட்டம் உள்ளது. அதில் காளியும், கருப்பணனும் உண்டு, அந்த இடத்தில் மனை அமைத்தால் துயரமே மிஞ்சும் மனைக்குரியவன் நோயுறுவான் அங்கு மீன் எலும்புகள் கிடக்கும்.

பிறைவாரந் தன்னில் பேசிட்டார் பூமி தானுங்
குறைவில்லை அகமுஞ் செய்ய குழவியுந்தன மேலாபம்
பரையவள் பாகர் கோவில் பார்த்திடுமீ சன்கன்னி
மறையரி மயனார் தானும் மனையிடம் நலமென்றாரே. (110)

திங்கட்கிழமை கன்னி எழுந்தால் மனை நன்றாகும், குழந்தை பாக்கியம், செல்வச் செழிப்பு உண்டாகும் அருகில் சிவாலயம் இருக்கும் என்று மயன் உரைக்கிறார் மனைக்கு வடகிழக்கு, தென்மேற்கில் அவை இருக்கும்.

இந்துநாள் சொல்லத் தானும் இருந்திட துலையதாக
வந்திடும் இடமும் நன்று மைந்தனும் பூமிலாபம்
தந்திடுந் தனமும் மிக்க தலமதிற் கீசனங்கி
கந்துகவெ லும்புமுண்டாங் கைப்புறு புளியும் உண்டே. (111)

திங்கட்கிழமை துலாம் எழ பூமி குழந்தைகள் லாபமுண்டு, தனலாபமுண்டு குதிரை எலும்புகள், புளிப்புப் புளியமரம் தென்கிழக்கு, வடகிழக்கில் நிற்கும்.

கலைவாரஞ் சொல்லி நேரே காணவே தேளதானால்
கொலைவிழும் இடந்தான் ஆகும் குடிகெடு மடியோடென்று
நிலைகுலை மேற்குத் தெற்கு நின்றவன்கா ளிக்குற்ற
மலைமகள் தனக்கு ஈசன் வழுத்தினரென் பமேலோர். (112)

திங்கள் விருச்சிகம் உதயமானால் அந்த இடத்தில் கொலை நடந்து இருக்கும் குடிகெட்டுப்போகும், மேற்கு, தெற்கில் காளியின் சாபம் உள்ளது என்று உமையம்மைக்குச் சிவபெருமான் உரைத்தவாறு.

வில்லதே திங்கள் ஆகில் விளங்கிடு மிடமதாகுஞ்
செல்லியும் வடக்கில் உண்டு தேவதை பிசகுமில்லை
மெல்லியுஞ் சுதனும் விர்த்தி வெகுதனம் சேர்த்தியுண்டு
வல்லியின் கிருபை யாலே மனையகஞ்செய் யநன்றே. (113)

திங்கட்கிழமை தனுசு எழுந்தால் வடக்கில் கறையான் புற்று இருக்கும். தேவதைக் குற்றம் ஏதுமில்லை. மனைவி, மக்கள் சுகமுண்டாகும். தனவரவுண்டாகும். அம்பிகை அருளால் மனை எடுக்க நன்மையுண்டாகும்.

கலையினன் வாரந் தோன்றுங்கா ணுவாய்மகரந் தோன்ற
நிலையதிற் கறுப்பன் காளிநின்ற துகன்னி மேற்கு
கொலைவிழும் இடமதாகும் கூடாது பகையும் நோயும்
விலையுறும் புளியும் வேம்பு விருக்கமும்வடக் குத்தானே. (114)

திங்கட்கிழமை மகரம் உதித்தால் தென்மேற்கு, மேற்குத்திக்கில் காளியும், கருப்பனும் நின்ற இடமாகும். கொலை விழக்கூடிய இடம்

இந்த இடம் ஆகாது. பகையும், நோயும் உண்டாகும் மனையின் வடக்கில் புளி, வேப்ப மரங்கள் உண்டாகும்.

அல்லநாள் உதிக்கக் கும்பம் ஆகிடிலிட மும்நன்று
புலவனார் உரைத்த வாக்கு பூமியுந்தன முஞ்சேரும்
தலமதிலீ சன்கன்னி தங்கிடுங் கௌரி ஈசன்
குலமது விருத்தியாகும் கூறினார் மயனார் தானே. (115)

திங்கட்கிழமை கும்பம் உதித்தால் மனை நன்று அகத்தியர் உரைத்தபடி, நிலம், செல்வம் சேரும். அங்கு மகாலட்சுமி வாசம் செய்வாள். உமையுடன் ஈசன் தங்குவார். குலம் தழைக்கும் என்று மயன் உரைத்தபடி.

தங்கிய மீனந்தன் னில்திங்களும் உதிக்கும் ஆகில்
மங்கள மாகத்தா னுமகவுடன் தனமுங் கீர்த்தி
பொங்கிடும் இடமதற்கு பூமியில் ஒன்றும் இல்லை
மங்கள கரமும் உண்டாம் மதலையும் பூமிசேரும். (116)

திங்கட்கிழமை மீனம் எழுந்தால் மக்கட்பேறு, தனப்பிராப்தி, புகழ் உண்டாம். பூமியில் யாதொரு குற்றமும் இல்லை. சுபமே உண்டாகும்.

மங்களவாரம்

செவ்வாயில் மேடந் தோன்ற தீங்குள விடமாகும்
பொல்லாத எலும்பினோடு பொதியிடம் தெற்க தாகும்
இவ்விதமா கமேற்கில் இருக்குமே நொண்டி காளி
நவ்விய கண்ணாய் கேளாய் நாசமாமிட முந்நிதே. (117)

செவ்வாய்க்கிழமை மேஷலக்கினத்தின் உதயத்தில் மனைசெய்ய அழைப்பவர் வந்து நின்றால் அம்மனை தீயது தெற்கில் மனித எலும்புகள் கிடக்கும். மேற்கில் நொண்டிக்கருப்பு காளி இருக்கும். அந்த இடம் தீயது.

காலையில் நின்றதே யக்கருதியே சேய்நாள் என்றால்
மாளிகை கட்டவேதான் வருமது இடமும் நன்று
நாளிலே தனமுங்கூ டும்நாரி சேய்தனமாம் என்க
யாளியின் திக்கிற்தா னுமங்கும் ஒர்கிணறும் உண்டே. (118)

செவ்வாய்க்கிழமை ரிஷபலக்கினம் எழுந்தால் அம்மனையில் மாளிகைகட்ட நன்றாய் செல்வம், குழந்தை, மனைவி விருத்தியுண்டாம் தெற்கில் ஒரு கிணறும் இருக்கும் என்றவாறு.

மங்களவா ரஞ்சொல்ல வந்தது மிதுனம் ஆகில்
சங்கரன் ஈசன்திக் குந்தருகன் னிவடக்கில் பொண்ணுந்
திங்கள்போல் விருத்தியாகுந் திடமிகு இடமீ தென்றும்
பொங்கிடும் தனமும்பூ மிபுத்திரன் விருத்தி ஆமே. (119)

செவ்வாய்க்கிழமை மிதுனலக்கினமானால் ஈசானமூலையிலும், கன்னிமூலையிலும் பெண்தெய்வம் நிற்கும். நல்ல விருத்தியுள்ள இடமாகும். செல்வம் பெருகும். பூமிலாபம், புத்திரலாபம் உண்டாகும்.

வந்தது கடகமாக வாக்கினில் பூமன் சொல்லச்
செந்திரு அளினாலே தீர்க்கமே இடமும் நன்று
முந்தியகிழக் குத்தெற்கு முள்மரங் கிணறும் ஆகும்
தந்தியா லயமுமேற்கில் தங்கினார் இடமும் நன்றே. (120)

செவ்வாய்க்கிழமை கடகம் எழுந்தால் முருகன் அருளால் மனை நன்றேயாம். கிழக்கிலும், தெற்கிலும் முட்புதறும் கிணறுமுண்டு, வினாயகர் ஆலயம் மேற்கில் இருக்கும். அந்த இடம் நன்றே.

சிங்கமே வந்துநின்று செப்பிடக் குருதி வாரம்
சங்கடம் வடக்குதெற்கு தானேட்டம் முனியும் காளி
மங்கிடும் இடமதாகும் மதலையும் தனமும் நாசம்
அங்கியிற் கிணறும் உண்டு அஸ்தியும் மறைவாம் என்னே. (121)

செவ்வாய்க்கிழமை சிம்மம் எழ வடக்கு, தெற்கில் தொல்லை தரும் ஓட்டமுள்ளது. முனி காளி ஓட்டமுள்ளது. நஷ்டம் செய்யும் பூமியாகும். குழந்தைகள், செல்வம், நாசமுண்டாகும். அங்கு தென்கிழக்கில் கிணறு இருக்கும் பூமியில் மறைவாக எலும்புகளும் கிடக்கும்.

கன்னியில் வந்து நின்று கருத்துடன் பூமனென்றால்
அன்னிய மனையதாகும் அவ்விடம் தனிலே கேளுஞ்
சின்னியும் புளியும் வேம்புஞ் செப்பிடுகன் னிதிக்கில்
சென்னியிற் பிறையைச் சூடும் சிவனுரை நல்லதாமே. (122)

செவ்வாய்க்கிழமை கன்னிலக்கினம் உதயமானால் அது அன்னியன் இடமாகும். அங்கு சின்னி, புளி, வேம்பு முதலான விருட்சங்கள் கன்னி மூலையில் நிற்கும் சந்திரனை சிகையில் சூடிய சிவன் இருந்த இடம் நன்றே என்று கூறுகிறார்.

துலைதனில் வந்துநின்று சொல்வது குருதிவாரம்
நிலையதில்மனை யுங்கோல நிச்சயங்கேட் பானாகில்
மலைமகள்வடக் கிலீசன்வரும் பதிநலமே என்றும்
கலைமதிபோ லும்வாழ்வு கன்னிசேய் விருத்திகாணே. (123)

செவ்வாய்க்கிழமை துலாம் எழுந்தால் அப்போது மனை அமைக்க அழைத்தால், வடக்கில் சிவசக்தி ஆட்சிசெய்வர், நலம் தரும் மனையே ஆகும். வளர்பிறைச் சந்திரன் வாழ்வு வளம்பெறும் மனையாகும்.

தேள்ராசி தன்னில் நின்று செவ்வாயே சொல்வானாகில்
கோள்மிகும் இடம்தான் ஆகுங் குற்றமுஞ் சூன்யமாகும்
கேளதுகீழ்ப் பாகத்தில் கிணறது மறைந்து காணும்
தாழ்வதிற் சமாதிபெண் ணுந்தகாது மறைந்து காணும். (124)

செவ்வாய்க்கிழமை விருச்சிகம் எழ, அந்த இடம் தீயது, ஏவல், பில்லி முதலான மாந்திரீகச் சூனியங்கள் உள்ள இடம், கிழக்கில் கிணறு ஒன்று புதையுண்டு கிடக்கும், கிழக்கில் சமாதியும் உள்ளது (புதைகுழி) எனவே அந்தமனை தீதாகும்.

வில்தனில் வந்துநின்று வேண்டிய சேய்நாள் என்றால்
விளங்கிய மனையதாகும் வேல்விழி சேயும் கூடும்
வலுவுடன் காலிசேரும் வண்மையாய் ஜனங்கள் நட்பு
வல்லவர் மயனார் சொன்னவலு மனைசெய்ய நன்றே. (125)

செவ்வாய்க்கிழமை தனுசு எழுந்தால் மனை செழிக்கும், மனைவி மக்கள் நலம் பெறுவர் கால்நடை விருத்தி, நண்பர் சேர்க்கை உண்டாகும் என்று மயனார் சொன்னபடி மனை எழுப்ப நன்றாகும்.

கலைராசி தன்னில் நின்று கருதியேசேய் நாளென்றால்
கொலைவிழு மனையில் தானுங் கூறிடுமிட முமாகா
நிலையதிற் காளியோடு நின்றிடும் தெய்வம் உண்டு
தொலையாத துன்பமாகும் துலங்கா துமனையும் தானே. (126)

செவ்வாய்க்கிழமை மகரம் எழுந்தால் அங்கு வீடு கட்டினால் கொலைவிழும், இடமாகும், தீய இடமாகும், காளியும் இதர தேவதைகளும் கூடி நிற்கும். நீங்காத துன்பம் தரும் அங்கு வீடு கட்டினால் துன்பமே உண்டாகும்.

சாடியில் நின்றுதான் வாரம் செவ்வாய்நா ளேயென்றால்
நாடிடாயிடத் தில்குற்றல் நாரிசேய் பொருளும் போகும்
பாடியூர் மேற்பாகத் தில்பத்திர காளி நொண்டி
ஓடியே வருமென் றென்றையர் உரைத்தனரிட முந்திதே. (127)

செவ்வாய்க்கிழமை கும்பம் எழுந்தால் அந்த இடம் கூடாது. மனைவி மக்கள் சேதமுண்டாகும். பொருள் நஷ்டம் ஏற்படும், மேற்கில் காளி, நொண்டிக் கருப்பு ஓட்டமுள்ளது. எனவே வீடுகட்ட இயலாது.

மீனத்தில் நின்று செவ்வாய் மிக்கவுமி டமுநன்று
ஈனமும் ஒன்றும் இல்லை இம்மனை மெத்தநன்மை
தானதில் தனமுஞ்சே ரும்தகும் பூர்வங் கன்னியீசன்
ஆனதிற் கெடுதியில்லை அமைத்திட மிகவும் நன்றே. (128)

செவ்வாய்க்கிழமை மீனலக்கினம் உதயமானால் நல்ல இடமாகும். குற்றம் ஏதும் இல்லை, வீடுகட்டினால் நன்மையுண்டாகும். தனம் சேர்விடமாகும். முன்னம் அங்கே கன்னி மூலையில் சிவன் ஆலயம் இருந்தது மனைக்குற்றம் ஏதும் இல்லை சுபமேயாகும்.

புதவாரம்

புந்திநாள் சொல்லமேடம் புக்கிட இடமும் நன்றாம்
செந்திருவரு ளுமுண்டாஞ் சேய்தனம் பெருகும் லாபம்
தந்தியா லயமுமேற்கு தானருங் கன்னி திக்கில்
நந்தியுமீ சன்பாகம் நலமென்றார் மயனார் தானே. (129)

புதன்கிழமை மேஷலக்கினம் தோன்றியபோது முருகனருள் உண்டு. புத்திரலாபம் தனலாபம் உண்டு, கன்னித்திசையெனும் தென் மேற்கில் வினாயகர் ஆலயம் உண்டு. நன்மையான மனையே ஆகும்.

மாலவன் வாரஞ்சொல் லவந்தது விடைய தானால்
மேலதா மிடமுநன்று மெல்லிசேய் தனமுஞ் சேரும்
மேலவன் வீடுமேற்கு விண்டுவும் வடக்கு ஈசன்
னேலமர் குழலினாளே இடரில்லை மயனார் சொல்லே. (130)

புதன்கிழமை ரிஷபலக்கினம் உதயமானால் நல்ல மனை, செல்வம், குழந்தைகள் மனைவி நலம் உண்டாகும் மேற்கு, வடக்கு முதல் எங்கும் குற்றமில்லை நன்று. வீடு கட்டலாம்.

பச்சைநாள் சொல்லத்தா னும்பார்த்திடும் வீணைத் திக்காம்
அச்சுதன் கிருபையா லேயகமிடம் மிகுநன் றாகும்
இச்சையா மனைவிமக் களிடம்பொ ருளேவல் உண்டாம்
நச்சிலை கிணறுக்கீ ழாம்நயம் என்றார்மய னார்தானே. (131)

புதன்கிழமை மிதுனம் உதயமானால் திருமால் கருணையால் அந்த மனை நல்லதேயாகும், புத்திரலாபம், தனலாபம் உண்டாகும். கிழக்கில் கிணறுமுண்டு மனைக்கு நன்றேயாம்.

நண்டுட னிருந்துசொல்ல நாள்புதன் வாரம் என்றால்
கண்டுசொல் விடமும் நன்றுகளவு சேய்தனமும் லாபம்
பண்டுளநிதி யுங்கிட்டும் பார்கன்னி பூர்வம் பொய்கை
உண்டுதெற்கரி யின்கோட்ட முரைத்தனர் அகமும் நன்றே. (132)

புதன்கிழமை கடகம் தோன்றினால் புத்திர தனலாபம், புதையல் கிட்டும், யானை கட்டிய கோட்டம் இருந்த இடம் வீடுகட்ட உத்தமம். கிழக்கு, தென்மேற்கில் குளம் இருக்கும் (திருமால் ஆலயமும் இருக்கும்)

சிங்கத்தில் வந்து நின்று செப்பிடபுந் திவாரம்
மங்கதில் கீழ்பாகத் திலாலயம் இருக்கும் என்றே
மங்கள பள்ளமொன்று பாகத்தில் மறைந்து காணுஞ்
சங்கடமிட மதாகுந் தலைவன் போம்மயன் சொன்னாரே. (133)

புதன்கிழமை சிம்மம் உதயமானால் கிழக்கில் ஆலயம் ஒன்று இருக்கும் மனையில் மறைவில் ஒரு பள்ளம் இருக்கும் துன்பம் தரும் இடம். மனைக்குரியவன் மரணம் உண்டாகும் என்று மயன் அருளினார்.

நயங்கன்னி திக்கில் நின்றுநற் புதன்வாரந் தோன்ற
வியம்பெறும் விடமே மேலதான பூமி என்று
மயனுரை நயமுஞ்சே யுமரிவையுஞ் சுகமாம் என்று
மயனுமே உரைத்தவாறு மகிழிடம் இதுவாம் என்னே. (134)

புதன்கிழமை கன்னி தோன்றினால் மிகவும் உயர்வான மனையாகும். மனைவி, மக்கள் நலம் பெருகும் அம்மனையில் வீடுகட்ட நலமுண்டாகும்.

பண்டிதன் வாரஞ் சொல்ல பார்துலைநின் றானாகில்
மண்டலத் தகமே செய்ய வருமிடமதி கநன்மை
வண்டதில் அஸ்திகல்லும் உரைத்தனர் கிழக்கில் ஈசன்
கண்டத்தை நீக்கித் தானுங்கட் டிடவக முநன்றே. (135)

புதன்கிழமை துலாம் எழுந்தால் வீடுகட்ட ஏற்ற இடம், மனையில் சல்லியம் பார்க்கில் எலும்பும், கல்லும் வரும் கிழக்கில் ஈசானமூலையில் சல்லியம் இருக்கும். ஆயினும் வீடுகட்ட நன்மேம்பாடு உண்டாகும்.

மதிமகன் வாரஞ் சொல்ல வந்திட தேளுமாகா
பதியதில் இல்லஞ் செய்ய பாலரும் மரணமாகும்
நதியது நிலைக்கா திண்ணம்நிலை யதிற்பேய் சூன்யமுண்டு
விதியது மேற்கில்தா னும்விருத்தி போமயன் சொன்னானே. (136)

புதன்கிழமை விருச்சிகம் தோன்றினால் ஆகாத மனை, அங்கு வீடு கட்டினால் உயிர்ப்பலி உண்டாகும். வீடுகட்டினாலும் நிலைக்காது. மாந்திரீகச் சூனியம், பேய்கள் தொல்லையுண்டு, இவையெல்லாம் மனையின் மேற்குத் திசையிலுள்ளது. அங்கு மனை எழுப்பலாகாது.

கணக்கன் நாள்சொல்லி வில்லுங் கண்டு உதித்ததானால்
விணக்கமா இடமுங்காண் இடரில்லை அகமுஞ் செய்ய
வணக்கமு நன்மைஎய் துமகவுடன் தனமும் லாபம்
பிணக்கத்தில் ஒன்றும் இல்லை பேசினார்மய னார்தானே. (137)

புதன்கிழமை தனுசு உதித்தால் குற்றமில்லாத இடம் மனை கட்டலாம். தன புத்திர லாபம் உண்டாகும் என மயனுரைத்த வாறே.

தூதுவன் வாரஞ் சொல்லிதுலங் கிடாமானுந் தோன்றில்
வாதுகள் மிகவுண்டா கும்மரண மேயவ்விடத் திற்காளி
தீதுகள் செய்த தாணை செப்பிடுவக மும்ஆக்க
மாதுடன் மகவு நாசமம் மனைசல்யமும் ஆமே. (138)

புதன்கிழமை மகரம் உதயமானால் வம்பு வழக்குகள் உண்டாகும். மரணபயம் உண்டாகும். காளியைக் கொண்டு சூனியம் செய்து வைத்துள்ளது. எனவே அந்த இடத்தில் வீடு கட்டக் கூடாது.

கும்பத்தில் நின்றுதானுங் கூறிட மாலோன் வாரம்
நிம்பமா மரத்தில் காளி நின்றனள் மாரியங்கும்
வம்பதில் மிகவும் ஆகும்த லையர்நிலைக் காதில்லம்
பம்பரம் போலே ஆட்டும் பாரிடமா காதென்றே. (139)

புதன்கிழமை கும்பம் தோன்றினால் அம்மனையில் வேப்ப மரத்தில் காளியும் மாரியம்மனும் நின்றுள்ளனர் புத்திரநாசம் உண்டாகும். பம்பரம் போல ஆட்டிவதை செய்யும் இடம் எனவே அந்த மனை ஆகாது என்றவாறு.

புதன்கயல் தன்னில் நின்று புகவிடம்கேட் பானாகில்
நிதமதிற் தனமுஞ் சேரும்நே ரிழைகுடும் பவிர்த்தி
இதமது பூமிலாபம் இடரில்லை கணேசன் மேற்கில்
சதமதுவீ சன்திக்குத் தானவன் வசிப்பு நன்றே. (140)

புதன்கிழமை மீனம் உதயமானால் தனலாபம் மனைவி மக்கள் விருத்தியுண்டு பூமிலாபம் உண்டு, துன்பம் ஏதுமில்லை மேற்கில்

வினாயகர் ஆலயம் உள்ளது. ஈசானத்திக்கில் வீடுகட்டிக் கொள்ள நன்மையுண்டாகும்.

குருவாரம்

குருவாரம் நாளிலாக கூடாது மேடம் ஆனால்
வருமது விடமுந் தீதுமனித னாரெலும்பு சாம்பல்
கருத்திடு கிழக்கில் உண்டாங் காரியுங் கருப்புமங்கே
மருவிடு விடமதாரு மனைசெய்ய நாஸ்தி தானே. (141)

வியாழக்கிழமை மேஷ லக்கினத்தில் மனை செய்ய அழைத்தவன் வந்து நின்றால் அந்த மனை தீயது மனித எலும்பு சாம்பல் முதலியன கிழக்கில் உள்ளது, காளி, கருப்புத் தெய்வங்கள் விளையாடுமிடம் வீடுகட்டலாகாது.

மன்னநாள் வாக்கிலாக வருமவன் விடையின் நின்று
சொன்னதவ் விடமுமேதை தோகையாஞ் சேயும் இலாபம்
மன்னதி குற்றமில்லை அரன்தந்தி கன்னி ஈசன்
சன்னதி மேற்குப் பூர்வம் தானகஞ் செய்ய நன்றே. (142)

வியாழக்கிழமை ரிஷபலக்கினத்தின் போது அழைத்தால் அந்த மனை உத்தமம். மனைவி, மக்கள் லாபம். குற்றமற்ற பூமி மனைக்கு வடகிழக்கு, தென்மேற்கு, மேற்கில் வினாயகர், சிவன் அம்மன் முதலானவர்களின் ஆலயம் இருக்கும். மேற்குத்திக்கில் மனைகட்ட நன்று.

ஆரியன்வா ரமாகவந்து மேவீணை தோன்ற
நாரியுஞ்சுக மாமில்லம் நடத்திட மிகவுநன்றே
காரியமியா வும்வெற்றிக் கருதினார் குற்றமில்லை
பாரினில்பாக் கியலாபம் பயன்மிகுமய னார்சொன்னார். (143)

வியாழக்கிழமை மிதுனலக்கினத்தில் பெண்கள் நலமடைவர் வீடுகட்ட நன்மையே எடுத்த காரியம் வெற்றி பெறும் ஏதொரு குற்றமில்லை. பாக்கியம் பெருகும். நல்ல மனையென்று மயனருளியவாறே.

அலவனில் நின்றுதானும் அரசநாள்சொல் வானாகில்
நிலமதிவிடஞ் சலில்லைநேர் கன்னிபூர் வதிக்கில்
நலந்தருமீ சன்பொய்கை நாடிடும் இரண்டதாக
குலமதுவிருத் தியென்றுங்குறை வில்லைதன முஞ்சேரும். (144)

வியாழக்கிழமை கடகலக்கினம் எழுந்தால் நிலத்தில் குற்றமில்லை கன்னித் திசையில் சிவனாலயம், குளமுண்டு. குலம்விளங்கும் வீடுகட்டலாம் செல்வமுண்டு.

சிங்கத்தில் நின்றும் அங்கே செப்பிடுகுரு வின்வாரம்
அங்கதில் இடமும் நன்றுவக மேதான்செய விருத்தி
சங்கரனிருக் கைமேற்கு தந்தியா மீசன் ஐயன்
மங்களமா கலாம மதலையுந் தனமுண் டாமே. (145)

வியாழக்கிழமை சிம்மம் தோன்றினால் நல்லமனை, வீடுகட்ட விருத்தியாகும். மேற்கில் சிவாலயம் உள்ளது வினாயகர் ஆலயமும் உள்ளது. மங்களமாக தனம், புத்திரலாபம் உண்டாகும்.

தேசிகன்வா ரஞ்சொல்ல திண்ணமே கன்னி ஆகில்
தாசியே கட்டலாகும் சொல்லிடு மிடமும் நன்றே
காசினி கீர்த்தியோங் குங்கன்னியர் கன்னி ஐயன்
ஆசினி பலாவும் வேம்புமாங் குண்டாங்கிழக் கிற்றானே. (146)

வியாழக்கிழமை கன்னி தோன்றினால் வீடுகட்டலாம் நன்று உலகில் புகழுடன் வாழ்வு பெறலாம். மகாலட்சுமியும், ஐயனாரும் அருள்வர். மனையில் கிழக்கில் பலா, வேம்பு முதலிய மரங்களுண்டு.

நிறைராசி தன்னில் நின்றுநிச் சயவியா ழமென்றால்
குறைவில்லா விடமேயா குங்கோதை யர்தனமுஞ் சேரும்
விரையமும் அதற்கே இல்லைவிடா ததிற்றிரு வும்வாழும்
மறைமறி மயனார் சொன்னார் மாதுநீ மகிழ்கநன்கே. (147)

வியாழக்கிழமை துலாம் உதித்தால் குறைவில்லாத இடம், பெண்கள் நலம் பெறுவர் செல்வம் சேரும். நஷ்டம் ஏதுமில்லை. மகாலெட்சுமி அந்த மனையில் நீங்காமல் நின்று வாழ்வாள் என்று மயன் உரைத்தவாறே.

ராகநாள் சொல்லியப் போநற் றேளுமுதித் துவில்லம்
வாசமாம் இடத்தில் தானும் வந்ததுகரி யுங்கல்லு
நேசமாய் நீக்கிச் செய்ய நிலைத்திடுமக மீதாமே
மோசமே நீக்கிலா முனிகாளி யோட்டந் தானே. (148)

வியாழக்கிழமை விருச்சிகம் தோன்றினால் சல்லியம் பார்த்தால் கரியும் கல்லும் கிடக்கும். அவைகளை நீக்கிவிட்டு வீடுகட்ட நன்றாகும். முனி, காளி ஓட்டம் ஏதும் இல்லை.

வில்லினில் வந்துநின்று வியாழமுஞ் சொல்வான் ஆகில்
மெல்லியாந் தனமுஞ் சேயாம்விருத் தியவ்விட மும்மேலாஞ்
சல்லியம் ஒன்றும் இல்லை தானதிலில் லஞ்செய்ய
தல்லியாங் கௌரி ஈசன் தங்கிடும கமுநன்றே. (149)

வியாழக்கிழமை தனுசு உதயமானால் புத்திரலாபம், தனலாபமுண்டாகும் சல்லியம் ஏதும் இல்லை, வீடுகட்டினால் அவ்வீட்டில் சிவன் தங்குவார்.

சாமிநாள் சொல்லி நிற்கதானுமே மகரம் ஆனால்
பூமியுமி லாபமாகும் புகலிட வகமுஞ் செய்ய
காமியம் எல்லாம் கிட்டும் கருப்பமுமிக வுமுண்டாம்
வாமியும் பூசைசெய் துமனை யிடங்கோல நன்றே. (150)

வியாழக்கிழமை மகரம் தோன்றினால் வீடுகட்ட நன்மைதரும். விரும்பிய எல்லாம் கிட்டும் புத்திர சம்பத்துண்டாகும். மகாலெட்சுமி பூசை செய்து விட்டு வீடு கட்டி குடிபுக நன்று.

சாடியில் வந்துநின்று தானவர் வியாழ மென்றால்
வாடிடும் இடமதாகு வண்குலை யானது என்றும்
நாடிடாமற் குற்றம் நலமிலா விடமுந் தீதாம்
ஆடிடுசங் காதோஷ மரிவைக்கும் உண்டு தானே. (151)

வியாழக்கிழமை கும்பம் தோன்றினால் ஆகாத இடம் கொடுங்கொலை நிகழ்ந்த இடம் ஆகும். குற்றம் பொருந்திய இடம் தீயதாகும். பேய்த்தொல்லையுண்டு மனைவிக்குப் பேய் பிடிக்கும். எனவே இந்த மனை ஆகாது.

கயலதில் வந்துநின்று கருதிடு குருநாள் சொல்ல
நயம்பெறும் இடமதாகும் நாரிசேய் தனமும் இலாபம்
வியனதிர் மேலதாகு விண்டுவு மாணுங் கன்னி
மயனுரை பூர்வமீசன் வாழ்வென் றாரகமும் நன்றே. (152)

வியாழக்கிழமை மீனம் உதயமானால் நல்ல மனையாகும். மனைவி, மக்கள் சுகமுண்டு முன்னாள் ஈசன், சக்தியம்மை வாழ்ந்த இடம். எனவே மனை அமைக்க நன்மையே உண்டாகும்.

சுக்கிரவாரம்

வெள்ளியே சொல்லிப்போம் மேடமே நின்றார் ஆகில்
நள்ளிய விடமே காணில்நல மென்றார்தனஞ் சேய்கூடும்
வள்ளியின் மணாளன் நோக்கில் வசித்தலே பூர்வமாகும்
முள்ளியோர் செடியும்வேம் புமுளைத்திடும் மனைஎன்று ஓதே. (153)

வெள்ளிக்கிழமை மேஷலக்கினம் உதயமானபோது மனை அமைக்க அழைத்து வந்த தூதன் நின்றால், அம்மனை நல்லதே, புத்திர, தனலாபம் உண்டாகும். முருகப் பெருமான் திருப்பார்வையில் வசிக்கும்படியாக முன்பு அந்த இடம் இருந்தது. அம்மனையில் முட்ச்செடிகளும் வேப்பமரமும் நிற்கும்.

சுக்கிரன் வாரஞ் சொல்ல துலக்கமேவிடை யினின்றால்
வக்கிரம் ஒன்றும் இல்லை மனையிடைமித மேலீசன்
திக்கிலே அரணும் ஆகும் தெரிவையா டுலையிலாயின்
முக்கிய மிகவுண்டா கும்மொழிந்தனர் அகமும் நன்றே. (154)

வெள்ளிக்கிழமை ரிஷபம் உதயமானால் குற்றம் ஏதுமில்லை அம்மனையில் ஈசானமூலையில் பெண் தெய்வம் ஒன்று அரண் போலுள்ளது. வளமான வாழ்வு தரக்கூடிய இடமதுவாகும். எனவே மனை எழுப்ப உத்தமம்.

சுங்கனாள் வாக்கிலாகச் சுகமவன் மிதுனம் நின்றால்
மங்களம் உள்ளதாகும் அதனிடம் அதிக நன்மை
திங்களைத் தரித்தோன் சேயும்சேர்ந் திடுமீசன் மேற்கு
பங்கமும் ஒன்றுமில்லை பாலனுந் தனவான் என்றார். (155)

வெள்ளிக்கிழமை மிதுனம் நின்றால் மங்களகரமான இடம், அவ்விடத்தில் வீடு கட்ட அதிக நன்மையுண்டாகும் ஈசான்யம், மேற்குத்திசையில் சிவன்மகனான சுப்ரமணியர் ஆலயம் உள்ளது குறை ஏதுமில்லை மனைக்கதிபதி பெருஞ்செல்வந்தனாவான்.

பிருகுநாள் சொல்லத் தானும் பிசகில்லை கடகமாகில்
வருமது இடமும் நன்றாமா ளாதசெல்வம் சேயும்
பெருகிடும் என்று நூலோர் பேசினார் மறையின் வாறு
மருமலர் வாசன்றா னேமனையிடம் பொருந்த நன்றே. (156)

வெள்ளிக்கிழமை கடகம் எழுந்த தினத்தில் நல்ல மனை குறைவில்லாத செல்வம் சேரும். புத்திர சம்பத்துண்டாகும். நன்மலர்கள் வாசம் அம்மனையில் வீசும். வீடுகட்ட நன்று.

சிங்கத்தில் வந்துநின்று செப்பிட வெள்ளி வாரம்
அங்கதிற் கட்டவில்லம் அதிகமாய் நன்மை செய்யும்
மங்களம் விருத்தியாகும் மங்கையும் மகவும் லாபம்.
சங்கரன் கோவில் மேற்குதான் கன்னியீசன் திக்கே. (157)

வெள்ளிக்கிழமை சிம்மம் உதயமானால் அங்க வீடுகட்ட நன்மையுண்டாகும். சுபம் உண்டாகும். மனைவி, மக்கள் லாபம் மேற்கு அல்லது ஈசானதிசையில் சிவன் ஆலயம் ஒன்றும் இருக்கும்.

பர்க்கவன் வாரஞ் சொல்லிப்பார்த் திடுகன்னி ஆகில்
திர்க்கமாய் இடம்பொன் லாபஞ் செய்திடில் அகமுநன்மை
ஆர்க்கமும் பெருகுங்கீர்த் தியரிவை சேய்காலி சேரும்
மார்க்கமும் அவ்விடத்தில் காளிவரவ தைநீக்கிச் செய்யே. (158)

வெள்ளிக்கிழமை கன்னி உதித்தால், அங்கு வீடமைக்க பொன் சேர்க்கை உண்டாகும். நன்மை அதிகரிக்கும் புகழ் சேரும் மனைவி மக்கள் நலம்பெறுவர். கால்நடை விருத்தியுண்டாகும். அந்த இடத்தில் காளி சாபம் நீக்கி வீடுகட்ட உத்தமம்.

மந்திரி சுங்கநாளில் வந்தவன் துலையது ஆகில்
செந்திரு அருளினாலே செப்புவர் இடமும் நன்றாம்
முந்திய இடத்தில்தா னுமுனிகாளி கோட்டம் என்பர்
தந்தியின் கோவில் மேலாந்தரி சனமதனால் நன்றே. (159)

வெள்ளிக்கிழமை துலாம் எழுந்தால் முருகனருளால் நன்மையான மனையே ஆகும். முன்பு அந்த இடத்தில் முனி, காளி ஓட்டம் இருந்ததென்று கூறுவர். மேற்கில் வினாயகர் ஆலயம் உள்ளது. அதனால் வீடுகட்ட உத்தமம்.

புயல்வார மொழிவான் ஆகில் பொல்லாத தேனினின்று
நயமில்லை இடமுந் தீதாம் நாரிசேய் மரணமாகும்
பயமதில் எலும்புசாம்பர் பகர்ந்திடும் அங்கி திக்கில்
மயந்தில கறுப்பன் காளிவரும் நொண்டிகோட்டம் என்றார். (160)

வெள்ளிக்கிழமை விருச்சிகம் உதயமானால் அம்மனை தீது, மனைவி மக்களுக்கு சேதம் உண்டாகும். தெற்குத்திசையில் எலும்பு சாம்பல் போன்ற சல்லியம் உள்ளது. கருப்பன், காளி, நொண்டிக்கருப்பன் முதலான ஓட்டம் உள்ளது.

சிலையதில் வந்துமூன்று செப்பிய நற்கோள் வாரம்
நிலையதில் கன்னிதிக்கில் நின்றது ஒதியும் வன்னி
தலைமுறை போன்றதாகத் தங்கிடும் வீரம் அங்கும்
மலைமகள் பூசைசெய் துமனையிடங் கோல நன்றே. (161)

வெள்ளிக்கிழமை தனுசு ராசி எழுந்தால் கன்னி மூலையில் (மேற்கு) ஒதியமரம் வன்னிமரம் உள்ளன. மூன்று தலைமுறையாக அவ்விடத்தில் வீரபத்திரன் தங்கியுள்ளது. சக்தி பூசை செய்தபின் வீடுகட்டலாம்.

மானுவின் ராசிதன்னில் வந்துமே புகர்நாள் என்றால்
பானுபோல் விருத்தியாகும் பார்த்திட இடமுஞ் செல்வம்
தானுவின் கிருபையா லேதனஞ் சேயும் அதிகமாமே
ஆணுசேய் வரனுமேற் கேயமைந்தது பூமி நன்றே. (162)

வெள்ளிக்கிழமை மகரம் தோன்றினால் கதிரவன்போல் விருத்தியுடைய மனையது செல்வம் சேரும், சிவனருளால் தன, புத்திரச் சேர்க்கை மிகவுண்டாகும். மனையின் மேற்கே ஒதுக்கி வீடுக்கட்ட நன்று.

கும்பத்தில் வந்துநின்று கூறிடப் பிருகு வாரம்
நிம்பமாம் மரத்திற் காளி நின்றது கறுப்பனோடும்
தம்பதிகெடு திசெய்யும் தலைவனை நிலைக்க ஒண்ணாது
வம்பது மிகவும் ஆகும் மனையது முடிவுறாதே. (163)

வெள்ளிக்கிழமை கும்பம் எழுந்தால் அங்குள்ள வேப்பமரத்தில் காளியும், கருப்புத் தெய்வமும் நின்றன. தம்பதிகளைப் பிரிக்கும். தலைவனுக்கு மரணம் உண்டாகும். தொல்லையான இடம் வீடுகட்டலாகாது என்றவாறு.

வருபவன் மீனம்நின்று வாக்கினால் புகர்நாள் என்றால்
வதுவது இடமுநன்றாம் மனைசெய செல்வம் தானும்
வருமதில் தெய்வகுற்றம் மறைவில்லை சல்லிய ஆதி
வருமதில் ஒன்றுமில்லை மயனிடம் நயமே என்றார். (164)

வெள்ளிக்கிழமை மீனம் எழுந்தபோது அந்தமனை நன்றே. வீடுகட்டலாம் செல்வம் சேரும் தெய்வக்குற்றம் ஏதுமில்லை சல்லியம் இல்லை. நல்ல மனை என்று மயன் உரைத்தார்.

சனிவாரம்

சரியவன் வாரஞ் சொல்லி காணுவாய் மேடமானால்
எரியுமே தழலால் தோஷம் இடமதிற் சல்லியமாகி
பரிகட்டுவோன் ஆனாலும் அரண்தரு மதனும் சேயும்
சரியல்ல அகமெடுக்கிற் தலைவனும் சாவான் தானே. (165)

சனிக்கிழமை மேஷலக்கினம் உதயமானால், அம்மனைக்கு அக்கினி தோஷம் உள்ளது சல்லியம் உள்ளது மன்னராணாலும் அவ்விடத்தில் வீடுகட்டினால் தரித்திரனாவான். புத்திர நாசம் ஏற்படுவதுடன் தலைவனும் மரணமடைவான். எனவே அம்மனை தீது.

சனிவாரம் நாளாலோ ததானவன் காளை திக்கில்
இனிமையாய் இடமுநன்று இடரில்லை கீழ்மேல் வீதி
நனிமிகு சேயுமுண்டாம் நாரியும் பூமி சேரும்
முனியவரைத் தவாறு மொழிந்திடு நலமது ஆமே. (166)

சனிக்கிழமை ரிஷபலக்கினம் எழும்பினால் நல்ல இடம். குற்றமில்லை கிழக்கு மேற்கான வீதியுள்ள மனை, புத்திரச் சேர்க்கையுண்டு மனைவி மக்கள் நலம் உண்டாகும். பூமி சேர்க்கையுண்டாகும். மயனுரைத்தவாறு நலமேயுண்டாகும்.

சயமகள் இராசிநின்று சனிவாரம் சொல்வானாகில்
நவமதில்வீ டுமேலாம் நாரியரெலும் பும்அங்கு
பயமதுமிக உண்டாகும் ஆர்த்திடுங் கன்னிதிக்கில்
மயனிதைத்தா னுநீக்கிமாளிகை செய்வாய் என்றார். (167)

சனிக்கிழமை மிதுனம் தோன்றினால் அங்கு வீடுகட்ட லாபம். ஆனால் அங்கு சல்லியம் பெண் எலும்பு உள்ளது. மேற்குத்திக்கில் அந்த இடத்தில் வீடு கட்டினால் பிசாசு பயமுண்டாகும். எனவே மேற்குத்திசையினை ஒதுக்கிவிட்டு மனை கட்டலாம் என மயன் அருளினார்.

மந்தநாள் சொல்லத் தானும் வருமது கடகமானால்
தொந்தரை மிகவுண்டா குந்துலக்க மேவுறாது பின்னும்
அந்தகம் கொடியதீ துவலவனில் முகணன் வீடு
சந்ததி அற்றுப்போ குந்தலைவனுஞ் சாவான் சொல்லே. (168)

சனிக்கிழமை கடகம் உதயமானால் தொந்தரவு அதிகமுள்ள மனை, எவ்வித வளர்ச்சியும் இராது. கிழக்குத்திக்கில் நொண்டிக்கருப்பு உள்ளது. அங்கு மனை கட்ட வாரிசு அற்றுப் போகும், மனைக்குரியவனும் மரணமடைவான்.

சொல்லிடு சிங்கனின்று துலக்கமாம் சனியே என்றால்
மெல்லியும் பூமிலாபம் வேணது மெத்த உண்டு
புல்லிய சோமன்திக் கில்புதயலும் இருக்கும் பாராய்
சல்லியம் ஒன்றுமில்லை தனமிகுந் தரணி எங்கும். (169)

சனிக்கிழமை சிம்மம் உதித்தால் அம்மனையால் பூமிலாபம், தனலாபம் உண்டாகும். வடமேற்குத் திசையில் (சந்திரன் திசை புதையல் உள்ளது) சல்லியம் ஏதுமில்லை பொருட் சேர்க்கையுடன் புகழும் உண்டாகும்.

கன்னியில் நின்றுதானுங் கரியவன் வாரஞ் சொல்லக்
கன்னிய இடமதாகுங் கனமனை கோல நன்றே
பன்னிதாம் விருத்தி நாலில் பாலனும் தனமுஞ்சேரும்
சென்னியிற் பிறையைச் சூடுசிவனு மோசன் திக்கே. (170)

சனிக்கிழமை கன்னி எழுந்தால் வீடு அமைக்க நன்று பெண்தெய்வமுள்ள மனையது. தன புத்திரலாபமுண்டாகும். ஈசானதிசையில் சிவாலயம் உள்ளது.

காரியும் வாரஞ்சொல் விகண்டது துலையது ஆனால்
கூறிடு வடக்கில்தா ணங்குளமது தெற்கே ஆகும்
பாரியா மகவும் நாசம் பாக்கியம் விரயமாகும்
மாரியுந் துர்க்கை மேற்கு மரணமாம்விட முந்தீதே. (171)

சனிக்கிழமை துலாம் உதயமாக அம்மனைக்கு வடக்கில் ஓர் ஆலயமும், தெற்கில் ஒரு குலமும் உள்ளது. குழந்தை மரணமும், பாக்கியங்களற்றுப் போதலும் உண்டு. அங்கு வீடுகட்டக்கூடாது. ஏனெனில் அம்மனையில் மேற்குத்திசையில் மாரி, துர்க்கை தெய்வமுள்ளது. எனவே அம்மனை தீது.

நீலநாள் சொல்லத் தானும் நின்றது தேளதானால்
பாலனும் நாரிவிருத்தி பார்ப்பது இடமும் நன்றாம்
மேலதின் பாகமீசன் விளங்கிடு வடக்கிற் பொன்னு
மேலவார் குழலாய் கேளாய் இடமது மிகவுநன்றே. (172)

சனிக்கிழமை விருச்சிகம் தோன்ற மனைவி, மக்கள் சுகமுண்டு மனையும் நன்றாம். மேற்கில் சிவாலயம், வடக்கில் பெண் தெய்வ ஆலயம் உள்ளது. அந்த மனை நன்றே வீடு கட்டலாம்.

வில்லதில் நின்றமைந்தன் விளங்கிடும் வில்லிற் சொன்னால்
செலவதி சுகமுமெத்த ததும்பியுங் கன்னி மேற்காம்
இல்லது செய்யமேலும் இடமது குற்றம் இல்லை
அல்லலும் ஒன்றுமில்லை அதிகமே தனமென் றாரே. (173)

சனிக்கிழமை தனுசு எழுந்ததானால் சுகமுண்டு. கன்னி மூலையாம் மேற்குத் திசையில் வினாயகர் ஆலயமுள்ளது வீடுகட்ட உத்தமம். குற்றம் ஏதுமில்லை செல்வம் உண்டாகும்.

மந்தநாள் சொல்லப் போமக ரமாய்நின் றதானால்
வந்திடும் இடமுநன்று மக்களும் பூமி லாபம்
செந்திரு அருளுமுண்டாம் தீர்க்கமாய் வடக்கே ஈசன்
கந்தனார் மேற்குக்கன் னிகாணலாங் கமுகந் தோப்பு. (174)

சனிக்கிழமை மகரம் தோன்றினால் அந்த மனை நன்று பூமிலாபம், புத்திரலாபமுண்டு முருகனருளுண்டு, வடக்கே சிவன் கோவில் நிச்சயமாயுள்ளது. மேற்குத்திக்கில் பாக்குத் தோப்பு உள்ளது.

கும்பமாம் இராசிநின்று கூறிட மந்தன் வாரம்
மம்புவிதனி லேதானும் அகமது செய்யக் கீழ்பால்
நம்பியே சொல்வாய்மே லாம்நாரி சேய்தனமும் விர்த்தி
தும்பியின்கோ யில்மேற்கில் சொன்மயன் மேலாம் என்றார். (175)

சனிக்கிழமை கும்பம் உதயமானால் அந்த மனையின் கிழக்கில் வீடுகட்டவேண்டும். நம்பிக்கையுடன் கூறு. அந்த இடத்தில் வீடுகட்ட புத்திர லாபம் தனலாபமுண்டாகும். மேலும் மேற்கில் விநாயகர் ஆலயம் உள்ளது என்று மயனருளினார்.

மீனமே உதயமாகி மிகுதியாம் சனி நாள் என்றால்
ஈனமும் ஒன்றுமில்லை இடமது மிகவும் நன்றாம்
யானைமா முகத்தோன் மேற்கில் அரனுமே வடக்கிலாகித்
தானதில் உள்ளதாகும் தனமுமே விருத்தி ஆமே. (176)

சனிக்கிழமை மீனம் தோன்ற ஏதும் குற்றமில்லை. வீடுகட்ட நன்று மேற்கில் வினாயகர் ஆலயமும், வடக்கில் சிவாலயமும் உள்ளன. அம்மனை நன்று தனலாபமுண்டு.

மேஷம்
சல்லியங் கேட்க வந்தோர் நின்ற இராசிப் பலன்

அசுவதிபர ணியுடன்கார்த் திகைக்கான் மேஷமாகில்
விசுவிசென வந்தவர்க்கு வீடகத்திற் சல்லியங்கேள்
பசுவெலும்பும் பானைகரி பாருசலசாக் கடைக்கீழ்
குசகுசெனப்பே சவொண்ணார் கூசாமலே நெடுநாள். (177)

அசுவினி, பரணி, கார்த்திகை நட்சத்திரங்கள் நடக்கும் மேஷத்தில் மனை அமைக்க சல்லியம் பார்க்க அழைக்க வந்த மனிதன் மேஷ லக்கினத்திற்கு உடையதான கிழக்குத்திசையில் நின்றால் அவன் கேளிய மனையில் உள்ள சல்லியம் கூறுகிறேன் கேள்! பசுவின் எலும்பு, உடைந்த பானை, கரித்துண்டு முதலியனவும், சாக்கடையும் கிழக்கில் உள்ளன. அம்மனையில் வீடு கட்டினால் அமைதியாகப் பேச முடியாதபடி கூச்சல் உண்டாகும்.

அக்கினியில் விழுந்தஆயிழைக் குத்தான் புடவை
வைக்கும் வகையுண்டு பின்மகமாய் - மெய்க்கவும்நீ
காணிக்கை வைத்தபொருள் கலகம் செய்ததினால்
கோணுதலாம் மனையின் கூறு. (178)

அம்மனைக்குரியவன் குடும்பத்தில் நெருப்பில் மாண்ட கன்னி தெய்வமாய் வாழ்கிறாள். அவளுக்குப் புடவை வைத்து வணங்கச்சொல் பின்னும் மாரியம்மனுக்கு வைத்திருந்த காணிக்கைப் பொருளை செலவழித்துவிட்டார். எனவே அதற்கும் பரிகாரம் செய்தபின் வீடுகட்ட வேண்டும் என்று அருளினார் மயன்.

எடுக்குமவ் விடத்தில் நடுஇசைக்கக் கருங்கல் நுழையும்
படுக்குமவ் விடத்தின் கீழ்பரி இரும்புபாளை தொட்டி
உடுக்கும் புடவை துணுக்காயுசி தமாய்க்கிழிந் திடும்பார்
அடுக்கு சுபமங்கிலி யாள்அருள் இல்லாச் சூனியமே. (179)

வீடுகட்டப் போகும் மனையின் நடுவில் கருங்கல் சல்லியம் உள்ளது. மேலும் குதிரை எலும்பு, இரும்புத்துண்டு, உடைந்தபானை, மண்தொட்டி முதலியனவுள்ளன. கிழிந்த பழம் புடவையுள்ளது. மூன்று சுமங்கலிப் பெண்களுக்கு அன்னமும், மஞ்சள் குங்குமம், திருமாங்கல்யம் கயிறு, புடவை தந்து அவர்கள் ஆசிபெற்றுப் பின்னர் வீடுகட்ட வேண்டும்.

இடபம்

கார்த்திகைமுக் கால்ரோகணி மிருகசீரிட முன்ன ரையும்
பார்த்திப மாரிடபத் தில்பாலித் தார்கேள் அனமே
தூர்த்தை ஒருபெண் துருக்கனுடன் சேர்ந்து பிள்ளை
வார்த்தையி னால்சகியா மல்வதைசெய் தாள்வாழ் மயிலே. (180)

கார்த்திகை 2, 3, 4 பாதங்கள் ரோகிணி 4 பாதங்கள், மிருகசீரிடம் 1, 2 பாதங்கள் கொண்ட ரிஷபலக்கினத்திற்குரிய தெற்குத் திசையில்

வந்தவன் நின்றால் அந்த மனை இடத்தில் ஒரு கேடு கெட்ட பெண் துலுக்கன் ஒருவனுடன் கூடி ஒரு மகவைப் பெற்றுவிட்டு ஊரார் பேசிய அவமானச் சொற்களை கேட்கச் சகிக்காமல் தற்கொலை செய்து கொண்டு இறந்து போனாள்.

செய்தபிள்ளை தன்னையவள் செயமாகக் கள்ளி
கிணறதனில் பிள்ளைதனைப் போட்டுவாரிமண் திண்டமுதாள்
கொய்துதலை மயிரறிந்து கோதையர்கள் முன்பேபோட்டுப்
பெய்துயில்போ லத்தான்கிடந் துபொய்வாக்குச் சொன்னாள்காண்.(181)

இறந்தவள் குழந்தையையும் கிணற்றில் போட்டுவிட்டுப் புலம்பியழுதாள். ஊரார் அவள் தலையை மொட்டையடித்து அவமானம் செய்ததால் துணிபோலத்தானும் துவண்டு போனாள். பொய்வார்த்தைகளையும் சேர்த்து ஊரார் பேசினார்கள்.

கிணற்றில் விழுந்த பிணத்தைக் கெடியாகத் தானெடுத்துக்
குணமாகச் சுட்டபின்பு கூடிமனை புகுந்தாள் பார்
மணமாமோ வாழ்வுகள் தாம்மார்க்க முடன்செல்வ மும்போம்
பணமியாவும் பாழாகும் பரதவித்துப் புகல்வீரே. (182)

கிணற்றில் விழுந்து மாண்டுபோன பெண்ணின் உடலை எடுத்து எரித்து விட்டனர். ஆனால் அப்பெண் பேயாகமாறி அம்மனையில் தங்கிவிட்டாள். எனவே அந்த இடத்தில் வீடுகட்டிக் குடிபுகுந்தால் மானமாக வாழ அந்தப் பேய் விடாது. தவிர பெரும் சேதமும் ஏற்படும். பணம் பாழ்படும். எனவே அந்த மனை வேண்டாம் என்று மயன் கூறுகிறார்.

மிதுனம்

மிருகசீரிடத் தின்பின் அரையும் ஆதிரையும்
மற்றுப்பார் புனர்பூசமுக் காலாம்மிது னமாமயிலே
எத்துமனை யாமிதற்குமி சையாக்குடி இருக்கும்
பத்தவேதள் ளிவிட்டால் பாக்கியங்கள் ஏறிடும்பார். (183)

மிருக சீரிடம் 3,4 திருவாதிரையின் 4 பாதங்களும், புனர் பூசம் 1, 2, 3 பாதங்களும் பொருந்திய மிதுனலக்கினத்திற்கு உண்டான மேற்குத்திசையில் சல்லியம் கேட்பவன் வந்து நின்றால் அம்மனையில் கொடிய தேவதைகள் குடியிருக்கும் அவைகளை அகற்றி விட்டால் நலம் தரும் இடமாகும்.

பாருமனை தனக்கெதிரே பாங்கில்லாப் பறைத்தேவர்
நேருமேகீழ்த் திசைக்கு நிலையாமற் பாழாக்கும்
காருதென்திசைக் காவாய் காரணமாங் குடதிசையில்
சீருமொரு குளக்கரையில் சிறந்துகேள் நீரெடுப்பார். (184)

அம்மனைக்கெதிரே கீழ்மையான கொடுந்தெய்வம் தங்கியுள்ளது. எனவே கீழ்த்திசையில் வீடுகட்டக் கூடாது கட்டினால் இடிந்து விழும். தெற்கில் தண்ணீர்க் கால்வாய் உள்ளது. மேற்கில் ஒரு தண்ணீர் எடுக்கும் குளமுமுண்டு என்று மயனருள் செய்தவாறே.

கடகம்

புனர்பூசங் காலும்பூ சமாயில் யமும்பொற் கடகம்
தனமாம் புதயல்தனைத் தானெடுக்க வேண்டி வந்தான்
மனமாயவன் வீடு மாங்குயிலே கூப்பிடும் பார்
கனமாகத் தாதுகள் தாம்கா ரிகையே சொற்கேளே. (185)

புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம் 4ஆம் பாதம், ஆயில்யம் 4ஆம் பாதம் கூடிய கடகத்திற்குரிய வடக்குத்திசையில் சல்லியம் கேட்பவன் நின்றால், அம்மனையின் கண் புதையல் உள்ளது. அதையெடுக்கவே அவன் வந்திருக்கிறான். அவன் வீட்டில் நின்று அடிக்கடிக் குயில் கூவும். தங்கம் மற்றும் உலோகங்கள் அங்கு புதைந்துள்ளன.

மயிலாங்குயில் வாதம் மாமயிலே நற்றாது
ஒயிலாமட மாதே உன்னிப்பார் அம்மனைக்குள்
நயிலாகுந் தற்காலம் நவக்கிரகம் பார்த்துணர்ந்து
குயிலாகும் ஆட்சியுச்சம் குறிப்பாகப் பார்த்தெடுநேர். (186)

அந்தக்குயில் புதையல் பற்றியே கூவிவந்தது, அழகிய பெண்ணே நன்கு கவனி சரியான நாள் கோளறிந்து ஏற்ற காலத்தில் கிரக ஆட்சி உச்சம், முதலியனவும், கிரக சஞ்சாரமும் தெளிவாய்ப் பார்த்து புதையலை எடுப்பாயாக என்று கூறுக.

நேராம் நடுவீடு நிலைக்குநேர் மையத்தில்
சீராமறு சாண்கீழ் சிறவுறை தோன்றிடும்பார்
வோராமதின் கீழே வெவ்வேர் பதினெட்டு
சோராமுறை இருக்கச் செலவிடு நீமாதே. (187)

வீட்டில் நிலைக்கு நேரே நடுப்பகுதியில் மையமான இடத்தில் ஆறுசாண் ஆழம் தோண்டி, அதன்கீழே பதினெட்டுப் பாத்திரங்களில் புதையல் இருக்கின்றது எடுத்துக் கொள்.

சுத்தமாய்க் காசு தங்கம் சுந்தரமா கக்கேளாய்
மெத்தவே வராகன்உண்டு மேதமிலை நகைகள்மிக
அத்தனரு ளாலே ஆனது எல்லாம் நீளடுத்து
வத்தாக செல்வமுடன் வாழ்ந்திடுவாய் பைங்கிளியே. (188)

சுத்தமான பொற்காசுகளும், தங்கமும் பலவராகன்கள் உள்ளன. நகைகளுமுள்ளன. சிவனருளால் அவற்றை எடுத்து நீ வற்றாத செல்வத்துடன் வாழ்வாயென மயனருள் செய்தவாறே.

சிங்கம்

மகம்பூரம் உத்திரங்கால் சிங்கம்என் றமாதரசே
அகம்புறமுநேர்ந் துவந்தான் அழைக்கக்கேள் சொற்குறியைச்
செகமறியச் செல்வங்கள் சிதைவில்லா வாழ்ந்தவனாம்
தகந்திடவே வருமனைதான் கட்டிப் போமாதே. (189)

மகம் 4 பாதம், பூரம் 4 பாதம், உத்திரம் 1ஆம் பாதம் கூடிய சிம்மராசிக்குரியதான தென் கிழக்குத் திசையில் சல்லியம் வேண்டியவன் வந்து நின்றால் அவன் ஊரறியச் செல்வம் பொருந்தி வாழ்பவனாகும். அங்கு வீடு கட்டலாம் அதற்கு முன்னால் சல்லியம் கேள்.

அட்டமத்துச் சனியனைப்போல் ஆர்ப்பரித்துக் கட்டிடவே
மட்டில்லாச் செல்வமெல்லாம் மாண்டுபோம் புத்திரர்கள்
கட்டுவாய்மூ லையிலே காளானும் புற்றுமுண்டாம்
தொட்டிக்கரி உமிபாண்டத் தோடுகருங் கல்லுமுண்டு. (190)

வீடுகட்டினால் அட்டமத்துச்சனி பிடித்தாற்போல செல்வம் அழியும் புத்திர நாசம் ஏற்படும். அங்கோர் மூலையில் காளானும், கறையான் புற்றுமுள்ளது. பூமியின் கீழ் சல்லியம் மண்தொட்டி கரித்துண்டு உடைந்த மண்பாண்டத்தின் ஓடு, கருங்கல் முதலியன உள்ளன.

உண்டாகும் அதிலின்னம் உண்டாம் மறுமனுவின்
வண்டாருங் குழல்மாதர் மாதவிடாய்க் கும்ஆகும்
பண்டாம் பறையன்றலை பாருபக்கக் கேசமுமாம்
திண்டாட்டு எலும்புமுண்டு திரம்பார் மயிலனமே. (191)

மனித சல்லியம் உள்ளது பெண்களின் மாதவிடாய் திரவம் சிந்தியுள்ளது. பறையன் தலை சிரைத்த மயிர் உள்ளது. ஆட்டு எலும்புகள் உள்ளன.

தூரமாந்துணிச் சுருளும் துன்னிமித்தம் மாதர்நடை
ஓரமாய்நினை யாதேயுயர்ந் தசெல்வந்தான் குறையும்
பாரமாயிம் மலைதான் பார்த்துதர நீபிடித்து
காரமாந்தேன் எடுக்க கடுகவருஞ் செல்வமுமே. (192)

பெண்களின் மாதவிடாயத் துணிச்சுருளும் உள்ளது. பெண்கள் ஒதுங்கிட இடமாகும். அங்கு வீடுகட்டினால் செல்வம் அழியும், நீ மனைக்குக் குறித்துக் கொடுக்காதே. அதனால் பாவம் சேரும்.

எச்செல்வமும் ஓங்குமென் திசைக்கீர்த்தி இசைந்துவா
அச்செல்வமா திக்கமத்தனை யாவும் அணுகிடும்பார்
முச்சென்மபா வமுடிந்திது வாழை அதனையிட
குச்சரவீ சர்கிருபை என்னாளுங் குறைவில்லையே. (193)

திசைகள் மெச்சும்படித் தேடிய செல்வம் யாவும் அழிந்து போகும். இது அவன் முன் சென்ம பாவத்தினால் நேர்ந்தது. எனவே அம்மனையில் வாழைக்கன்றுகளை நடச்சொல். சிலகாலம் கழித்து வீடுகட்டலாம். ஈசனருளால் குறையேதும் வராது.

கன்னி

உத்திரமும் காலுமத்தஞ் சித்திரை முன்னரையுங் கன்னி
பத்திரம் ஆகப் பரமகுரு என்று பார்த்திடுநீ
சித்திரமா கச்சிறுவன் அழைக்க முன்இதை வுமுண்டோ
சூத்திரம் இலைக்குறி யாக்கெட்ட குணமு ரையே. (194)

உத்திரம் 2,3,4 பாதங்கள், அஸ்தம் 4 பாதம், சித்திரை 1,2 பாதங்கள் பொருந்திய கன்னிலக்கினத்தின் திசையான தென்மேற்குத்திசையில் சல்லியம் அறிய வந்தவன் வந்து நின்றால் அந்த இடம் குறித்து கெட்ட தகவலையே உரைக்க வேண்டியுள்ளது.

ஆக்கமுந்தா னியநெற்சேர் களங்கிய ஆதிக் கமுந்
தேக்கமும் பெண்பிள்ளை தேன்பாயுஞ் சோலை சிறுவர்களும்
நீக்கப்படாச் சுற்றம் நேயர்கள் கூட்டம் நிறையவரும்
பாக்கப்படாத் துக்கம் பாலர்கள் என்செல்வார் பார்மயிலே. (195)

அந்த மனையில் தானியங்களும், நெற்பொறிகளும், களஞ்சியம் நிறையும், பெண்களும் தேன் மலர்கள் நிறைந்த சோலைகளும், சிறுவர்கள் கூட்டமும், நீங்காத சுற்றத்தினர் கூட்டமும், நிறைந்த

இடமாகும். அங்கே ஒரு தங்கம் மறைந்துள்ளதை அந்தப் பாலகன் அறிய மாட்டான் அறிய உரைப்போமாக.

பாவிபிரா மணர்சூனியத் தாலவன் பதைத்து உருண்டான்
ஆவிபதைத் தமதிசயம் யாவும் அடங்காது எழுத
ஓவியடி போலும் பாலர்கள் கூட்ட உறமுறையும்
கூவிப்புலம் பக்குறி மயனார் குறி கூறுவரே. (196)

பாவிகளான பிராமண மந்திரவாதிகள் பொருளாசையினால் செய்த சூனிய பில்லிச் செயல்களால் பாவிமகன் பட்டபாட்டை எழுத இடம் காணாது. சித்திரம் போன்ற அழகிய சின்னஞ் சிறுவர்களும் கூவியழுது புலம்ப நேரிடுமென மயனார் குறிசொல்கிறார்.

கூசாத பாவிகுரு மொழிகேட் டுக்குறிப் புடனே
ஆசா பசாசை அறுத்தேயுத றியருமை இல்லான்
பேசாத சாமுண்டி பேசுஞ்சக் காவும் பிணத்திடவே
நேசாறு நெய்யதை நேராகக் கொண்ட நிறையதுவே. (197)

மனம் இரக்கமற்ற அந்தப் பாவி தனதாசான் கற்றுத்தந்த மாந்திரீகத்தை, ஆசை பாசம் மறந்த அம்மூடன் பேசாத சாமுண்டி, பேசும் பிசாசு யாவற்றையும் பிணத்தின் மேல் அமர்ந்து நெய்யினால் ஹோமம் செய்து அழைத்தனன்.

நிறையவான் பாவைக்குள்ளாய் நிகழ்த்தியே நிலைமையாகக்
குறைவாரா மல்சுட்டுக் குலையா மலேகரி கூர்ந்தெடுத்து
மறைமயானத் துக்குள் இருந்து மானதமாய்ப்
பறையவொரு லட்சம் பாங்குடனே செய்துபார் தன்னே. (198)

பாழாய்ப்போன அந்த தேவதைகளை ஒரு ஆண்பதுமை (பொம்மை) செய்து அதனுள் ஆவாஹணம் செய்து பிணம் வெந்தகரியை எடுத்து அதற்கு ஆகாரமாய் வழங்கி மானசபூசையாக 1 லட்சம் உருமந்திரம் செபித்தான் இன்னம் கேள்.

பார்வையினால் வைத்த பலதேவுஞ் சென்றுபலி கொண்டிட
கோர்வைப் புருடன் குறுக்கிகுலைந் துகடந்து செத்ததால்
நேர்வையத் தேவநிறைய அகத்துள் இருக்கு துபார்
தோர்வைகள் யாவுந் தொலையவும் போக்கிடத் துல்லியமே. (199)

அப்பதுமையை மனைக்குள் புதைத்து போகச் செய்தனன் அதுதன் பார்வையால் பல உயிர்களைப்பலி கொண்டுவிட்டது முன்னம் அம்மனையைக் கொண்டிருந்தவனை அப்பதுமை கொன்று பழிதீர்த்தது

இன்னும் அது அம்மனையின் கண் உள்ள வீட்டினுள் இருக்கின்றது. எனவே அங்கு மனை ஏற்படுத்த வேண்டுமானால் அம்மனைக்குள்ளிருக்கம் தீயசக்தியைத் தொலைத்து தீர்ந்தபின் வீடு செய்யலாம்.

துலாம்

சித்திரை பின்னரை சுவாதி விசாகமுக்கா வந்துலாம்
வத்திய பூஷணம் கொத்துடனே மூவரும்வந் தழைப்பின்
மித்திரம் இல்லை அதுநல மாமனை ஏகியதில்
சத்திரம் அன்ன தானமும் செய்குவார் வார்குழலே. (200)

சித்திரை 3,4 பாதங்கள், சுவாதி 4 பாதங்கள், விசாகம் 1, 2, 3 பாதங்கள் அடங்கிய துலாராசிக்குரிய திசையாகிய வடமேற்குத்திசையில் சல்லியம் கேட்க வந்தவன் நிற்க மூன்ற பேராக வந்து அழைத்தால், நன்மையில்லை அம்மனையில் முன்னம் சத்திரம் ஒன்று இருந்தது அன்னதானம் நடைபெற்றது கருமையான கூந்தல் படைத்த பெண்ணே.

செய்வார் மிகுந்த தர்மங்கள் சேர்சிறந்து அழிப்பர்
ஐவர் சகோதர மானபெண் பிறந்தும் அநுபவிப்பார்
மெய்யாகக் காணுமெளிய வர்க்கும் யோகம் விளங்கிடும்பார்
ஐவருரை ஒருசுகால் போலுறை யும்அருங் கொடியே. (201)

அங்கிருந்தவர்கள் முன்னோர் செய்த தர்மம் அத்தனையும் அழித்தனர். ஐந்துபேர் தங்கள் உடன்பிறந்தாளைக் கற்பழித்தனர் இது உண்மை இது நல்லவர்க்கு எளிதில் விளங்கும் ஐவரும் அங்க ஒன்றாய் வாழ்ந்தனர்.

அணங்கே அவரோடு தீமுலை சென்று மாமனையாம்
இணங்கே அகங்கட் டிப்பித்தாகு மூர்ச்சித முடியவுநீ
மிணங்கார் இருவரிசை யாமனைக் கிசைத்த பின்பு
சினங்கானவர் செத்துப் போனபின் ஆர்க்கும்செழிப் பில்லையே.(202)

அவர்கள் அக்கினி மூலையில் பெரியதாய் வீடுகள் இரண்டு வரிசையாகக் கட்டி இருந்தார்கள் பின் உன்மத்தம் கண்டு இறந்து போயினர். பின்னர் வந்த சந்ததிகளும் நலம்வாழ இயலவில்லை.

இல்லைக் கிராமங்கள் ஏற்கைகள் யாவுமிருந் ததும்போய்ச்
சொல்லுந் தவறிடும் சோதனை யாகப்பெண் பிள்ளையும்போம்
அல்லும் பகலும் துயரங்கண் டேமனைமாற் றலார்பால்
வல்லபாமயன மாற்றிடச் சொன்ன வகை மனையே. (203)

எனவே அங்கு வீடுகட்டினால் சேர்த்த பொருள் நிலபுலன்கள் அத்தனையும் போய்ச் சொன்ன சொல் தவறிப் போகும் நிலையுண்டாகும். பெண்கள் நாசமடைவர். இரவு பகலாய்த் துன்பங்கள் நிறைந்து கொல்லும். எனவே அம்மனையை முழுதுமாய் இடித்துவிட்டு மயன் உரைப்படி வேறு மனை கட்டச்சொல்வாய்.

மனைதொடக்கி நன்மனை நன்னி நலமாக உன்னி
அனையே தொழுதுஅம் மனைக்குள் ளேஅடியை விட்டுத்
தனையே வளர்த்தி நாற்காரி கட்டவ தனையுன்னி
நினையே அதுகட்டநீ கொண்ட காட்சிநிறை வதுவே. (204)

மனைகட்டும் போது விக்கினங்கள் நீக்கி நல்ல மனைகட்டி அன்னை பராசக்தியை வணங்கி அந்தவீட்டில் குடிபுகுந்து நான்கு பிரிவாக வீடுகட்டி அவனது எண்ணம் நிறைவேற வாழ்வானாக.

விருச்சிகம்

விசாகத்தும் காலுமநுஷ முங்கேட்டை விருச்சிகமென்
சொவியொருவன் வந்தேயழைத் திடவுண்மை சொல்வேன்
பிசாசுகள் நாட்டமிகவும் அருக்குமேபிள் ளையில்லை —
வசாவுவன் மனைபுக்கியும் தாதுவையுத் தறியேன். (205)

விசாகம் 4ஆம் பாதம், அனுஷம் 4 பாதங்கள், கேட்டை 4 பாதங்களைக் கொண்ட விருச்சிகத்தின் திசையான வடகிழக்குத் திசையில் சல்லியம் கேட்கவந்தவன் நின்றால் அதன்பலன் உரைப்போம் அம்மனையில் பிசாசுகள் நடமாட்டம் மிகவுள்ளது. குழந்தைப் பாக்கியம் உண்டாக்காது. கேட்டு வந்த அவன் மனையுள் உள்ள மறைபொருள் உரைக்கிறேன் கேள்.

காலனைவென் றவர்சாபம் இருக்குது காரிகையே
பாலனைச்சேர் பதிகொண்ட தாது பகரவுங்கேள்
சிலன்மனை யில்சிறுகைம் பெண்தீட்சைச் சேர்த்திடவும்
கோலங்குலைந் துகுமுறிய தாதுவுங் கூப்பிடுமே. (206)

எமனைவென்ற சித்த புருடர் ஒருவரின் சாபம் உன் மனைக்குள்ளது. அவன் மனையில் உள்ள விக்கினம் கூறுகிறேன். அம்மனையில் சிறுவயது விதவையின் தீட்டைக் கொட்டவும் அப்போது விக்கினம் குலைந்து போகும்.

விடவிடவென் றோலீரெனக் கீச்சுவிழுந் திடும்பார்
நடுநடுக்கங் கள்நயமில் லைதாது நழுவுதொட்டி
படுகுழிக்கொல் லையில்வாச லில்பாரதிற் பகரபுங்கேள்
சுடுமண்டை ஆட்டுடலங் கேஓடுஎலும் பதில்தோன்றிடுமே. (207)

விட்டால்போதும் என்று "கீச்" சென்ற கதறி ஓடும் நடுங்கியந்த சாபமும் பறந்து ஓடிவிடும். பின்பு அங்கு சல்லியம் தோன்றும் கொல்லையில் உள்ள பெருங்குழியில் வாசலுக்கு நேரே சுடுகாட்டினின்று வந்த மண்டை ஓடு ஆட்டு எலும்புகள் காணும்.

இடிமயிர் சாம்பர் கரியுமி பாண்டமெ லும்புகளும்
பிடிசீசாப் பீங்கான் இருவர்மனை பிலாலுகளும் தவிடு
பலடைசங் குவிரும்பு காரீயம் விழுந்த செங்கல்
துடிகஞ் சீலையுந் தூம்பிக் குழவியுந் தோன்றிடுமே. (208)

தலைசிரைத்த மயிர், சாம்பல், கரித்துண்டு, உமி, உடைந்த மண்பானை, எலும்புகள் பீடி, கண்ணாடிப் பாட்டில், உடைந்த பீங்கான் துண்டு, இருவீட்டுக்குப்பை, தவிடு, உடைந்த பலகை, சங்கு, காரீயம், சுவர் இடிந்த செங்கல், கருப்புச் சீலைத்துணி, உடைந்த அம்மிக்குழவியும் உள்ளன.

இந்தவகை களிருந்திடில் ஏந்திழைக் கெனவருஞ்சேய்
சொந்தவினை ஒருபெண்பால் இருந்தவள் சோரத்தினால்
வந்தவன்கூட் டிவழியோட்டமாய்க் கொண்டு போனதினால்
பந்தவினை அதுவந்துதொ கையென பாலித்ததே. (209)

இப்படியாக சல்லியங்கள் உள்ளபோது எவ்வாறு அவன் மனைவிக்குக் குழந்தைப் பாக்கியம் உண்டாகும். தவிர சொந்த வினையும் ஒன்றுள்ளது. அவ்வீட்டைச் சேர்ந்த பெண் ஒருத்தி வேற்று ஆடவனுடன் ஓடிப்போய் விட்டாள் அந்தத்துயரும் பாவமாய்ச் சேர்ந்துள்ளது.

இவ்வகைக் கொண்டே அகங்குடி ஆகஇருந் தவர்க்கும்
அவ்வகைத் துன்பம் அகலாது நாளுமரு மைகெடுஞ்
செவ்வகை ஆகநவக் கிரகசாந் தியும்செய் தபின்னர்க்
கொவ்வை இதழ்மடவார் கட்கோரட் சையுங்கூர்ந் துசெய்யே. (210)

இதுபோன்ற துன்பத்தினால் அங்கு குடியிருந்தவர்களுக்கும் துன்பமேயுண்டாகும். (நீங்காத துன்பம்) நவக்கிரகங்களுக்கு

அம்மனையில் சாந்தி ஹோமம் செய்ய வேண்டும். பின்பு சுமங்கலிகளுக்குப் பிரியமானவைகளைத் தானம் செய்ய வேண்டும்.

பந்தன வீட்டிற்கும் எட்டிடம் பூட்டி வினவியபின்
கந்தனை நாளும்தொழப் பெறப்பெண் பிள்ளை காண்மயிலே
வந்தனை ஆனவகை குருபாதம் வணங்கி நின்றால்
இந்தவகை ஆகச்சல் லியமியாவர்க் குந்தீருமொண் டொடியே. (211)

இவை செய்த பின்பு முருகப் பெருமானை வணங்கித் தினமும் பூசைகள் செய்து வர அம்மனை அதிபதியின் மனைவிக்குக் கருவுண்டாகும். ஞானகுருவான தட்சிணாமூர்த்தியை வணங்கி வர அச்சல்லியங்களால் வந்த வினைகள் தீரும்.

தனுசு

மூலம்பூ ராடமுத்திரா டங்காலுந் தனுசு எனவே
சீலம் புரிந்தவன் வந்தே அழைக்கச் சிறப்புடனே
காலமும் பார்த்துக் கடுக நடந்து கருந்துடனே
நூலினுஞ் சிற்றிடையாள் அணுகாள் அந்த நுணுக்கம்தே. (212)

மூலம் 4 பாதம், பூராடம் 4 பாதம், உத்திராடம் 1 ஆம் பாதம் கொண்ட தனுசு ராசிக்குரியதான தென்கிழக்குத் திசையில் சல்லியம் கேட்பவன் வந்து நின்றால் விரைந்து அம்மனைக்கு நடந்து சென்று காலமறிந்து சல்லியம் உரைக்கிறேன் கேள்.

போற்றவு நன்மனை போதமும் போக்கியமே புகழும்
தோற்றும் எல்லோர்க்கும் தோன்றவும் பெண்பிள்ளை தோற்றுதலாந்
தேற்றுதல் அஷ்ட லட்சுமியா ளுந்தினங் குடியாய்
மாற்றுதல் இந்தமனைக் கீடொரு மனைமாற்று அரிதே. (213)

அம்மனையானது மிக்க நன்று, அங்கு உண்மை நல்ல எண்ணம் உடையவர்களும் உள்ளனர். அம்மனையில் அஷ்டலட்சுமியும் குடியிருப்பாள், இந்த மனைக்கு ஈடான மனை வேறு ஒன்றும் கிடையாது.

மகரம் கலித்துறை

உத்திராட முக்காலுந் திருவோண மவிட்டமுன் னரையுமகரம்
வத்திராட பூஷணங் கொத்துடன் மூவரும்வந் தழைத்தால்
மித்திராட மென்றுரை மேவிக்கு றிமனை மெய்யுரைக்க
நித்திராடல் வரத்துகள் நேராயி ருக்குநெ றிமயிலே. (214)

உத்திராடத்தின் 2, 3, 4 பாதங்கள், திருவோணம் 4 பாதங்கள், அவிட்டம் 1, 2 பாதங்கள் சேர்ந்து மகரத்திற்குண்டாகிய தென்மேற்குத் திசையில் சல்லியம் கேட்பவன் வந்து நிற்க மனைக்குறி கூறுவோம்.

கட்டொன்று தீமூலை காரிகைபுத் திரண்டு
செட்டாக்கு டியிருக்கும் சீர்கேளாய் - நட்டமுடன்
நாடிப்பார் ஓர்கதவில் ஞாயிலு றுமிவரும்
கூடிப்பார் நற்கதவின் கூறு. (215)

அக்கினி மூலையில் இரண்டு எண்ணம் கொண்ட பெண் பேயுள்ளது. அது தீங்கு செய்யக் கூடியது அவன் மனைக் கதவில் ஏவல் செய்த மை தடவியுள்ளது.

கூறுவரா கம்போல் கூசாமல் தான்நடக்கும்
பேறும்பு கழ்வாழ்வும் பேதமுறு - மூறுபணம்
வட்டிக்க ளித்துவளர் பாவம்போற் சேரும்
கிட்டிப்போம் யாவர்க்குங் கிழ். (216)

அந்த ஏவல்மையின் காரணமாய் பன்றி போல் தரையைத் தோண்டி விடும், துயரமும் வட்டிக்கு விட்ட பணத்திற்கு வட்டி வளருவது போல வளர்ந்து கொண்டே போய் வாழ்வில் மிகவும் தரித்திர நிலைக்குத் தள்ளிவிடும் என்று மயனுரைத்தனர்.

அம்மனையில் தாதும் அமுந்தி நடந்திடவே
செம்மையில்லை அம்மனையாள் சேதிகேள் - திண்மை
தினந்தினமுஞ் சில்புருடர் சேர்ந்து பின்வாழ்வா
ளினமறிந்து நீயுரைப்பாய் இன்று. (217)

அம்மனையிலே சூனியமானது பற்றி நிற்கிறது எனவே அம்மனைக்குரியவன் மனைவி நடத்தை தவறியவளாய் தாசியுமாய் இருக்கிறாள் எனவே அவர்களுக்குப் பலன் மிகவும் நிதானமாக அவர்பற்றி அறிந்து பின்கூறுவாயாக.

நலமனைக்குள் செம்பிரும்பு நாடிப்பார் அம்மி
குலங்கொள் சிவன்தானம் கூடும் - தலமேல்
தடைவாசற் குள்ளாகத் தப்பாது சாடி
உடையாற்கு உதிரவலி உண்டு. (218)

அம்மனையினுள் சல்லியம் கிடக்கிறது செம்பு, இரும்புப் பொருட்கள் அம்மிக்கல் முதலியன கிடக்கின்றன, மனைக்கு மேற்குத்

திசையில் சிவாலயம் உள்ளது. மேலும் அவனது வீட்டு வாசற்படிதாண்டும்போது மனைக்குடையவனுக்கு அடிக்கடி இரத்தக் காயம் ஏற்படும் என்றவாறு.

இக்குறிப்பு யாவுகிடந் தீர்த்தான் வீடதுவும்
அக்குறிப்பு தீர்க்கவருள் உடையார் - நற்குறிப்பு
நாடியேசல் லியத்தைநன் றாகத்தான் எடுத்துக்
கூடிக்கி ரகரட்சை கூறு. (219)

தெய்வ அருளால் மேற்கூறிய சல்லியங்கள் அனைத்தும் தீர்த்தான பிறகே நலம் விளையும் அதற்கு நவக்கிரக சாந்திஹோமம் செய்யச் சொல்.

நவக்கிரக சாந்திதனை நாடியே செய்து
தவக்கமில்லாப் பயிர் தன்னால் - துவக்கமிலா
ஈசானந் தீமூட்டியில் விற்சுகம் பெறுவாய்
ஆசான் அருளால் அறி. (220)

அம்மனையில் ஈசானமூலைப்பக்கம் யாககுண்டம் வைத்து நவக்கிரக சாந்திஹோமம் செய்து சல்லியம் தீர்ப்பதனை குருவின் அருளால் அறிந்து கூறுவாயாக.

கும்பம்

அவிட்டத் துப்பின் அரையும் சதயம்
பூரட்டா திமுக்காலும் கும்பமென ஓதியதே
சட்டமா யம்மனையில் தாதுவில்லை ஈட்டிப்
பார்கதவை செம்மையில் லையக்குடி யேசேதம். (221)

அவிட்டம் 3, 4 பாதங்கள், சதயம் 4 பாதங்களும், பூரட்டாதி 1, 2, 3 பாதங்களும் கொண்ட கும்பலக்கினத்திற்குரிய வடமேற்குத் திசையில் சல்லியம் கேட்க வந்தவன் நின்றானாகில் அம்மனை சுத்தமில்லை மனையில் குடியிருந்தால் சேதமேயுண்டாகும்.

நாலெட்டுப் பத்துநய மாமிரண் டொன்று
கோலமுடன் கட்டாயம் குறுகிப்போஞ் - சீலமிலா
நான்குகட்டா கிநமுவி முக்கட்டும் போய்த்
தாங்குமொரு கட்டாயத் தனி. (222)

(32 X 13) முப்பத்து இரண்டடிக்குப் பதின்மூன்று என்ற அளவில் அவன் மனை தற்போது அமைந்துள்ளது. இவ்வாறு இருந்தால் குடும்பம்

நழுவிப் போகும் குடும்பத்தில் உள்ள அனைவரும் மனவருத்தமுற்று பிரிந்து போய்விடும் நிலையுண்டாகும்.

தனிக்கட் டுக்குள்ளே தப்பாமலே சூனியம்
மினிக்கட்டாய் வீற்றிருக்கும் இன்பம் - தனிக்கவே
ஆராய்ந்து பார்த்தெடுத் தாலான குடியாகும்
பாராதி ருக்கின் பாழாம். (223)

அம்மனையில் சூனியம் இருக்கிறது அதனை முனைந்து எடுத்துவிட வேண்டும் இல்லாவிட்டால் யாவும் பாழாகிப் போகும்.

எட்டாறுங் கட்டுத்தன் னிலிசைந்த சூனியம் உரைப்போம்
தொட்டாடுஞ் சக்கரங்கள் துனுக்காகும் பட்டுப் பாழாம்
கட்டாறு பாக்கிரண்டு கட்டுக்குள் முனியி ருக்கும்
மட்டாறுங் குழன்மாதே கேள்மயனு மேயுரைத்தான் அன்றே. (224)

மனையில் உள்ள சூனியம் யாதென்று உரைக்கிறேன். யந்திரங்கள் செய்து அதில் முனியை நிறுத்தியுள்ளனர் அதுவும் மனையின் கீழ் புதைந்துள்ளது என்று மயனருளினார்.

எருக்குபடு வீடதனிலே வாழ்கைம் பெண்டாள்
பருக்கொள் பறையிட்டுப் பார்ப்பாள் - உருகி
இருந்தாலை யங்களெல்லாம் இன்று மண்டுவிப்
பெருந்துருவாய் நிற்பள் பிசகு. (225)

தவிரவும் எருக்குச் செடிகள் முளைத்த வீட்டில் வசித்த விதவைப் பெண்ணொருத்தி முன்பு அவர் குடும்பத்தின் மீது மண்வாரி எறிந்து சாபம் இட்டுள்ளால் அச்சாபமும் அந்த மனையைச் சூழ்ந்து நிற்கின்றது.

ஒருகட்டுச் சூனியத்தின் உண்மை உரைத்தோம்
பருகொட்டாப் பாழாகும் பாராய் - குருவருளால்
உற்றுப்பார் உற்றதுவும் ஊறுசெய் சூனியமும்
மற்றுப்போம் பெண்பிள்ளை மற்று. (226)

வீட்டின் சூனியம் உரைத்தோம் அதுதீர குரு அருளால் அங்குள்ள சூனியத்தின் திறனறிந்து முறையாக அதைக் களைந்தும் பெண்விட்ட சாபத்தினை மாற்றும் வழி செய்வாயாக.

பார்தனில் ஏழுவகைப்பார் தூரத்துத் துணியும்
கார்வீர யந்திரமும் காரசோறும் - வேறுடனே
சீராகும் ஏழுவகை செய்தானோர் பாவியவன்
நேராக நின்று நெறி. (227)

ஏழு தூரத்துணி (பெண்களின் மாதவிடாய்ச் சூதகத்துணி) எடுத்து அதில் வீரபத்திர யந்திரத்துடன் இரத்தம் பிசைந்த சாதம் படைத்து ஒரு பாவி சூனியம் செய்துள்ளான்.

நிலையினைப் பார்தாது மெத்த மனையிற்
சிலையுருவம் பின்னஞ் செறிவாள் - வலையமாக்
காலுங்கோலும் மண்டைக் கண்டம்உ மிகரியும்
காலுமிருக் குமங்கு காண். (228)

அம்மனையின் கண் உள்ள தோஷங்களைப்பார் மேலும் அங்கு ஓர் குறளிப் பொம்மையும் உள்ளது. தவிர மண்டை ஓட்டு எலும்பு, கால் எலும்பு உமிக்கரியும் சல்லியமாய் உள்ளன.

செம்பீயம் பித்தளை சேருமிரு எலும்பும்
மம்பீட்டி குந்தாணி ஆகும்பார் - நம்பி
எடுத்தெறிந்தால் செல்வம் மிகவேறும் பார்பார்
கருத்தரிந்து உற்றகுறி காண். (229)

மேலும் செம்பு, ஈயம், பித்தளை, எலும்புகள், மண்வெட்டி, உரல் முதலியனவும் புதைந்துள்ளன நம்பிக்கையுடன் அவற்றையெல்லாம் எடுத்துவிட்டால் செல்வ வளமை உண்டாகும். நன்கு கவனித்து அதற்கான வழிசெய்.

மதமதக் கச்சாடி மனையிற் கிடக்கும்
பதைபதைத் தமண்டூகம் பாராய் - மிதமில்
தலைமயிர்கள் குப்பல் தனிகங்கள் சங்கு
வலையமாந் தொட்டிக் கிணறாம். (230)

மேலும் சல்லியம் கேள் தலைமயிர், குப்பை, உலோகங்கள், சங்கு புதையுண்ட பழங்கிணறு முதலியனவும் உள்ளன. அவற்றை நீக்கிவிட நலமுண்டாகும்.

மீனம்

பூரட்டாதிக் கால்புரிந் தமற்றெட் டுக்கால்
சீரிட்ட மீனஞ்சி றந்துபார் - காரிட்ட
கால்வயதாச் சுதேகா ரிகையே மேலான
சீலமனை மாத்திருக்கச் சீர். (231)

பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி 4 பாதங்கள், ரேவதி 4 பாதங்கள் கொண்ட மீன ராசிக்குரிய வடகிழக்குத் திசையில் சல்லியம்

அறிய வந்தவன் நின்றால் முப்பது ஆண்டுகள் (மனிதனின் பூரண ஆயுள் சோதிட சாத்திரப்படி 120 ÷ 4=30 ஆண்டுகள்) சல்லியம், மற்றும் சூனியம், பேய்த்தொல்லைகளில் சிக்கியுள்ளது என்று மயனுரை செய்தனர்.

சிறந்தஇம் மனைகள் யாவும் சிறப்புடன் சல்லியத்தை
மறந்திடாது எடுக்கும் மாதே மகாபதம்போற் றிக்கொண்டு
திறந்திட்டாள் சூனியத்தைத் தெளிவுடன் எடுத்துப் போட்டுப்
பயந்தபேய் கட்டம் ஓடப்பார் களிப்பு எய்தினார்க்கே. (232)

அம்மனையின் கண் உள்ள சல்லியத்தை இறைவன் திருவடிகள் துணை கொண்டு யந்திரங்களையும், பேய்களையும் விரட்டி இன்பவாழ்வு எய்துக.

கிருகஸ்தன் சிற்பியை அழைக்க வருஞான்று நின்ற இராசிப்பலன்
மேடம்

மேடத்தில் வந்துநின்று மேவியே வருக வென்னின்
தோடமே மெத்தவுண்டு தொலையாதம் மனையிற் பேய்கள்
அந்தமனை யிற்கருப்பு அணுகியே இருக்கும் பாரே
வந்தபெண்டிர் மாண்டு போமென் றார்ம யனுமே. (233)

மேஷலக்கினம் நடக்கும்போது மனை கோல அழைக்கப்பட்டால் அம்மனையில் தோஷம் நிறைய உள்ளது பேய்களும், கருப்புத் தெய்வமும் தங்கியுள்ளன. எனவே அங்கு குடியேறினால் வீட்டிற்கு வந்த மருமகள் மாண்டு போவாள்.

மேடமது வுந்தாது வேண்டுந் திரள்கதவு
வாடுவன(ச) ஊர்வன கருவல் - நாடுமதில்
கிழ்த்திசையில் நோக்கு கதிர்கேள் ஏழுதானாகும்
வாழ்பத்தில் வலிதும் ஆம். (234)

மேடம் உதயமானபோது சூரியன் 7, 10 ஆம் இடங்களில் நின்று வலிமையுடன் இருந்தால் அம்மனையில் கிழக்குத் திசையில் கருநாகம் குடியுள்ளது.

மேடந்தானாடு கிழ்த்திசை நாற்கால் மேவிடுங்காடு தாதுவுமாம்
வேடமேயிடை யறிஞ் சிவப்பாகும் வெற்றியாண்டொன் றதுசாரம்
சூடுசெய்வீடு சூரியர்க்கு உச்சம்சுன் னற்குநீசமா ரரசன்
பாடிராவிழிக் கும்பகர் களவாகும் பகரவேகா தமுமிருகால். (235)

மேஷலக்கினத்தின் உருவம் ஆடு, திசை கிழக்கு, நாற்கால் ராசி, இடம் காடாகும், தாது ராசி, இடையர், சிவப்புநிறம், இதன் சாரமான வெற்றிதரும் காலம் 1 வருடம், செவ்வாய்க்கு ஆட்சி வீடு, சூரியனுக்கு உச்சவீடு, சனிக்கு நீசவீடு, அரசரைக் குறிக்கும் இராசி, இரவு ராசி, களவு குறிக்கும் இராசி, இதன் தூரம் 8 காதம் ஆகும், (1 காதம் என்பது முப்பது மைல்கள் ஆகும் எனவே 8 காதம் என்பது 8 X 30=240 மைல்கள் தூரமாகும்), ஆண் ராசியுமாகும். சரராசியுமாகும்.

இடபம்

இடபத்தில் வந்துநின் றேயிங்கு வாவென்றால்
குடதிசையில் கோவில் குளமும் - வடதிசையில்
வாஸ்து கிணறுக்குள் வாடியதோர் பெண்கொலையா
னாச்சுதுகாண் அவ்விடமே ஆம். (236)

இடபராசி உதயமான போது அழைத்தால் அவன் மனைக்கு வடக்கே கோவிலும், குளமும் உள்ளன, மேலும் வடதிசையில் ஒரு கிணற்றுக்குள் ஒரு பெண் கொலையுண்டு போனால் என்றறிக.

ஆகும்பிணி நடுக்கம் அம்மனையிலே இடைஞ்சல்
சாவுகளும் உண்டாகும் தானுமதில் - ஏகிவருழ்
வீரன்க ருப்பன்வினை இடைஞ்சல் அம்மனையில்
சோரம்மிக உண்டென்றே சொல். (237)

இதன்பலன் நோயும், தொல்லைகளும் உண்டாகும், மரணங்களும் நிகழும், அம்மனையில் மதுரைவீரன், கருப்பண்ணசாமி முதலிய தேவதைகள் ஓடுகின்றன. எனவே அதிக நட்டங்கள் உண்டு பண்ணுவார்கள் என்ற கூறுவாய்.

இடபமே இடபரூபம் வெளுப்புராசி பெண்மூலமே திரமாந்
தடமதிக் குச்சம்மூலம் வேளாளன் சாருமிராக் காலமே விழிக்கும்
திடம்புகர்வீடு தினகரன்பகை யாந்திகழ் பத்தில்வலிது நன்னிலமாம்
நாடுநீதென் நோக்குநவில் பயிர்நிலமாம் நாற்காலே திரனிதுவே. (238)

இடபராசியின் உருவம் காளை, நிறம் வெண்மை, பெண்ராசி, மூலராசி, ஸ்திரராசி சந்திரனுக்கு உச்சவீடு, சுக்கிரனுக்கு ஆட்சிவீடு, இரவுராசி, புதனுக்கு நட்பு சூரியனுக்குப் பகைவீடு, 10 ஆம் வீடாக வந்தால் வலிமையான இராசியாகும், நிலராசி, வயல்வெளியைக் குறிக்கும் இராசி நாற்கால் இராசியுமாகும்.

மிதுனம்

சொல்லும் மிதுனத்தில் தோன்றியே வாவென்றால்
அல்லலார் சாவுண்டாம் அம்மனையில் - மெல்லவுநீ
மாதாவைக் கொன்றமனை யதுவாமென் றுசொல்நீ
ஓதுவாய் நீகண்டு உகந்து. (239)

மிதுன ராசியானது நடக்கும் போது சல்லியம் பார்க்க அழைத்தாராகில் அம்மனைதனிலே கொடூர மரணம் நிகழ்ந்துள்ளது அதுவும் பெற்ற தாயைக் கொன்றமனையதுவாகும் எனவே நீ பொருளறிந்து கூறு.

மிதுனமது தான்சாத்தான் மின்னடையான் குற்றம்
விதனமுடன் தெய்வத்தை வேண்ட - அதுமுதலாம்
போனதொரு சிவன்பொறி கலங்கி மாய்ந்ததுண்
டானவகை கண்டறிநீ அங்கு. (240)

மிதுனம் எழுந்ததால் அது சாத்தானின் குற்றமாகும், தயவுடன் தெய்வத்தை வணங்கி அந்த உயிர் போனதெப்படி என்று அறிந்து பரிகாரம் சொல்வாயாக.

மிதுனமேயா ணும்பெண்ணு மேயாகி வீணையுந் தடியுமேந்தி
இதுநிறங்க றுப்புயிராசி யான்சிவன் இரண்டு கால்வலுவுமே
உதயம்அது பகல்விழிக்கும் சார்புதன்வீடு சந்துவாய்வணி கனூருபயம்
அதுவுமேல் நோக்குஅற்பு மேகளவுஅறி யுநீகெர்ப்ப மென்றறியே.(241)

மிதுனமானது ஆணும் பெண்ணுமாய்த் தடியும், வீணையும் ஏந்திய உருவ முடையது. நிறங்கருப்பு, ஆண்ராசி, சீவராசி, இருகால்ராசி, பகல்ராசி, லக்கினத்தானத்தில் வலிமையுடையது, புதனுக்கு ஆட்சிவீடு, சந்துப்பகுதியைக் குறிக்கும், வாய், வணிகன், உபயராசி, மேல் நோக்கு இராசி, களவு அறியும்போது கெர்ப்பிணியைக் குறிக்கும்.

கடகம்

கடகமதில் வந்துநின்று காரியம்வா வென்றால்
அடவாய் அவர்க்கு வருவிக்க - மடமாதே
திடமாகும் மேதையு சந்தேறா தோர்நாளும்
மடமாதே கேள்நீ மகிழ்ந்து. (242)

கடகம் உதித்த போதில் சல்லியம் பார்க்க அழைத்தால், அந்த இடம் நன்றே ஆகும் ஏதும் குற்றமில்லை இன்னும் கேள்.

கோவில் இடிந்திருக்கும் ஏரிகுளம் அங்கிருக்கும்
வாழுமரத் தடியில்வாழ் கருப்பு - மேவுமதில்
நஞ்சுமருந் திட்டதினால் நங்கையருந் தான்மாண்டாள்
அஞூழுசுகமே நீயே அறி. (243)

அம்மனைக்கருகில் இடிந்த கோயில், ஏரி, குளம் முதலியன இருக்கும், அங்குள்ள ஒரு மரத்தில் கருப்புத் தெய்வம் வாழ்கிறது விஷமருந்தி இறந்து போன ஒரு பெண்பேயாக அங்கு இருக்கிறாள் அதனால் ஏதும் துயருள்ளதா என்றறிந்து அதைப் போக்கச் சொல்.

முன்தாது வெள்ளைபகல் முற்களவு தாள்வடகிழ்
அன்பாய்க் கெடுதியுள்ளூர் ஆம்கதிரும் - நான்கெட்டு
நாலில்வலி துபலகால் நற்குளம் தரையும்
பாலின் மொழிமாதே பகர். (244)

கடகமானது தாது இராசியாகும், வெண்மைநிறமானது, வடகிழக்குத்திசை (களவுகுறிகாண) முறம் போன்றது, கெடுதல் செய்தவன் உள்ளூர்க்காரன் என்றறிவிப்பது, சூரியனுக்குப் பகைவீடு, 4, 8 ஆம் இடங்களாக வந்தால் வலிமையானது, பலகால் ராசி, குளம், குளக்கரையைக் குறிப்பது என பால்போன்ற மொழியுடைய பெண்ணே நீ கூறுக.

இகல்கடகந் தான்ஞெண்டு ருவாகியிரா விழித்திருக்கு மேதாது
புகல்மதிவீடு குருவுக்குச் சம்பூமன்றா னீசமாகும் துவாரம்
நிகர்சரராசி நிறம்வெளுப் பாகும்நின்ற தோரீசன் மேல்நோக்கும்
அகலவே களவுயாளம் மறையவனூர் காதமிரு நால். (245)

உருவம் நண்டு, இரவு விழிக்கும் ராசி, சந்திரனுக்கு ஆட்சிவீடு, குருவிற்கு உச்சவீடு, செவ்வாய்க்கு நீசவீடு, துவாரராசி, சரராசி, மேல்நோக்கும்ராசி, களவு குறியில் பிராமணரைக் குறிக்கும். இதன் தூரம் 8 காதமாகும்.

சிங்கம்

சிங்கத்தில் வந்துநின்று சிறப்பாய் வாவென்றால்
இங்கிதமாய்ச் சொல்ல இனிகேளாய் - சங்கையுடன்
அங்கணஞ்சேர் கூடத்தில் ஆட்டெலும்பு நாயெலும்பு
லிங்கஉருவாய்க் கிடக்கும் நேர். (246)

சிம்மராசி உதயத்தின் போது சல்லியம் காண அழைத்தால் வரும்பலன் உரைக்கிறேன் கேள் பேய்களுமுள்ளன, முற்றத்துடன்

கூடிய கூடத்தின் நடுவே பூமியில் ஆட்டெலும்பு, நாயெலும்பு முதலியன உள்ளன.

சிங்கமது வானமலை சேந்தசந்திக் கறுப்பு
மங்கைகன் னிலுற்றவளும் வாள்துகிலும் - மங்கங்
கருப்பிழை யுமேசிவப்பு கன்னியற் குஆடை
விருப்பமுடன் காரியமா வென்று. (247)

மலையில் உள்ள சந்திக்கறுப்பணசாமி, மாண்டு போனகன்னி, பெண்களின் சூதகத்துணி, சூதகம், பிள்ளை பெற்றவள் துகில் முதலியன உள்ளன.

சிங்கமது தான்மூலஞ் செந்நிறம் உள்ளூரும்
அங்குகெடு தியற்ப வானொத்தை - சங்கையில்லா
நோக்குமங் கிகங்குல் எழுமறை ஓரூரா
சுதர்க்கு மலையெனவே சொல். (248)

சிம்மம் மூலராசி, சிவப்பு நிறம், உள்ளூரைக் குறிக்கும், கெடுதி, அற்பர், ஒற்றைராசி, ஆண்ராசி, சமநோக்குராசி, சூரியனுக்கு ஆட்சி வீடாகும்,

அன்னியசசிங் கருபமே மலையாம் ஆதித்தன் வீடுமூலமாம்
நன்னியதென் கிழக்குநோக்கும் நற்சிகப்பு நாலுகால்பத் தினில்வலுவாம்
உன்னியதிரம் ஆம்பாகிய ராசிஉசந் திடும்மே டாகிருக்கும்
கன்னியவி ராவிழிக்கும் காதமுமே கருதியகெ டுதியுமற்பம். (249)

உருவம் சிம்மம், தென்கிழக்குத்திசைக் குரியது, நிறம் சிவப்பு, நாலுகால் ராசி, 10ஆம் இடமாக வந்தால் பலமாகும், ஸ்திரராசி, உயர்ந்த மேடான இடங்களைக் குறிக்கும், இரவு விழிக்கும் ராசி, தூரம் 1 காதமாகும், மத்திபமான ராசி.

கன்னி

கன்னிதனில் வந்துநின்று காரியமாய் வாவென்றால்
உன்னிப்பார் அம்மனையில் உற்றபொருள் - நன்னி
குடதிசையி லேகாணும் குன்ம வியாதி
விடவாவி போர்வனத்தின் விட்டு. (250)

கன்னி ராசி நடக்கும் போது சல்லியம் பார்க்க அழைத்தால் அம்மனையின் கண் வடக்குத்திசையில் வயிற்று வலியினால் உயிர்விட்டவனொருவன் ஆன்மா தங்கியுள்ளது.

விட்டதின் மேலம்மனை யின்மேவும் அடுப்பதனில்
பட்டவன் என்புமே பாருமதில் - முட்ட
வாசர் பகைபூ மியாலாம் வழக்கில்
நெரிசிகப்பன் செய்தவினை நேர். (251)

அம்மனையில் உள்ள அடுக்களையில் இறந்தவன் எலும்பு உள்ளது, இக்கொடுமை, நிலம் குறித்த சண்டைகாரணமாக அவன் எதிரிசெய்த சூனிய வினை ஆகும்.

தானுதயங் கன்னிவலுதன் கருவல் சந்துவாய்
ஊனக்க ளவுமேயுள் பிறப்பு - மானொருத்தி
கொண்டாளே தென்மேற்கில் பாடலாடல் சிற்றூராம்
கண்டபசு தோப்புநிலை காண். (252)

அதுவும் அந்தமனைக் குரியவனின் உடன்பிறந்த பெண் ஒருத்தியால் நேர்ந்தது, அவள் இருக்கம் ஊர் தென்மேற்குத் திசையில் நடனம் இசை குடி புகுந்த ஒரு சிறு கிராமம் ஆகும். வீட்டில் பசுமாடுகளும், தென்னந்தோப்புகளும் உள்ளன இதுவே அடையாளம்.

கோதிலாக் கன்னிப்பெண் உருவாகிக்கொ டுவிளக்கேந் தியேகரத்தில்
சாதிவெள்ளா ளன்ஊரிடம் ஆகுஞ்சாரும் தென்மேற் கினிலிருகால்
தீதிலாப் பகலில் விழித்திடுங் கறுப்புத்திற மையாய்உத யமேவலிது
போதியசீ வன்புந்திக்கு உச்சம்உறும் புகர்நீசம் ஆம் உரையே. (253)

உருவம், கையில் விளக்கேந்திய கன்னிப்பெண், சாதி, வெள்ளாளன், இடம் போரின் மையம், திசை - தென்மேற்கு, இருகால்ராசி, பகல் விழிக்கும் ராசி, கறுப்பு நிறம், இலக்கினமாக வரும் போது பலமானது, உபயராசி, சீவராசி, புதனுக்கு உச்சவீடு, சுக்கிரனுக்கு நீசவீடு.

துலாம்

துலாமதனில் வந்துநின்று துல்லியம் வாவென்றால்
கலாபயிடர் அம்மனையில் காணும் - நலமில்லாப்
பெண்ணொருத்தி யோர்பாற்பெ ருங்கோவில் மண்ணிட்டாள்
நண்ணும் புதையல் நடு. (254)

துலாம் ராசி உதயமாகிய போது சல்லியம் கேட்க வந்தால் அம்மனையில் ஒரு பெண்ணின் சா'ம் உள்ளது, அப்பெண் ஒரு பெரிய ஆலயத்தில் மண்வாரித் தூற்றியுள்ளாள் மேலும் மனையில் நடுப்பகுதியில் ஒரு புதையலும் இருக்கின்றது.

வருதுலான்றானே வாணிபன்றராசு வன்கையில் பிடித்திடும் இருகால்
தரும்புனல் கறையான்றாது ஆண்சரமே சனிக்குச்சம் புகரின்வீடு
பருங்கதிர்நீசம் பத்தினில்வலிது பகர்வடமேற் குதிசை நோக்கும்
உருவெளுப்பா குமண்தரைகள் ஆயரியூர் அதுவாம் எண்காதம். (255)

கையில் தராசு ஏந்திய வியாபாரியின் உருவமுடைய ராசி, இருகால்ராசி, பூஞ்சோலை, கறையான்புற்று, தாதுராசி, ஆண்ராசி, சரராசி, சனிக்கு உச்சவீடு, சுக்கிரனுக்கு ஆட்சிவீடு, சூரியனுக் ; நீசவீடு, பத்தாமிடமாக வரும் போது வலிமையானது, வடமேற்கு திசைக்குரியவன், நோக்கில் வலியது, பெண்மை நிறத்திற் குரியராசி, மண்தரைகள் உள்ள இடம், இடையர்வாழும் இடங்கள், தூரம் எட்டுக் காதமாகும்.

விருச்சிகம்

தேளதில்வந் துநின்று தேறியே வாவென்றால்
வாழாதபெண் ஒருத்தி வாடியே - கேளாத்தால்
பேய்ச்சி முனியும் பெரும்வீர பத்திரனால்
தாழ்சியது பூசைசெய்க தாழ்ந்து. (256)

விருச்சிக உதயத்தின் போது சல்லியம் கேட்பவர் வந்து அழைத்தால், வாழாவெட்டியாயிருந்த பெண் ஒருவள் ஆவியாய் அங்கு தங்கியிருக்கின்றனள், பேச்சியம்மன், முனி, வீரபத்திரன் முதலியவர்களுக்குப் பூசை செய்யச் சொல்வாயாக.

கெர்ச்சிக் கக்கிலேசம் அதாம்கேள் மயிலே
விருச்சிகந் தான்கூடாது நாளுங் குறிப்பறியாள்
அம்மனையில் வாடுவளே பெண்ணொருத்தி தான்வந்து
தம்மனையிற் கஷ்டங்கள் தாம்வந்து கூடிடுமே. (257)

விருச்சிகம் உதயமானதால், கவலைகள் மிகவுண்டாகும், அம்மனையில் தங்கியுள்ள பெண்ணின் ஆவியே அந்தக் கஷ்டங்களுக்குக் காரணம் என்றறிக.

புதிரடிசொற் பன்னின்ஆ னதோர்வாத் துநஷ்டம்
எதிரடிவீ ரபத்திரன்எய் திடுங்கறுப் பன்பேச்சிக்
கதிரதாய் முனியுமுண்டு கருப்பனும் பேச்சியையன்
விதியினால் மரணமான வீரனைப் பூசை செய்யே. (258)

பேய்களின் சேஷ்டைகளினால் பறவைகள் நஷ்டமாகும் இவை தீரவென்றால், வீரபத்திரன், கறுப்பன், பேச்சியம்மை, முனி, மற்றும்

விதியால் வெட்டுண்டு மாண்டுபோன மதுரை வீரன் முதலான தேவதைகளைப் பூசித்தால் விடுதலை யுண்டாகும்.

விருச்சிகம் தேளின்ரூப மேகிணறு வேடன்சேய்வீ டுராகுக்குச்சம்
முறிப்பிலா மறையோர்மூ லம்பெண்சி வப்புமுற்பல கால்மதிநீசம்
பரிபகல் விழிக்கும்நா லினில்வலிது பாகியமூல முந்திரமாஞ்
சிறுகுழிக்கண் டுகாலியூனந் தரையாஞ் செத்திடும்ப சுநிலையதுவே. (259)

விருச்சிகத்தின் உருவம் தேளாகும், இடம் கிணறு, வேடன், செவ்வாய்க்கு ஆட்சி வீடாகும், ராகுவுக்கு உச்சவீடு, பிராமணர், மூலராசி, பெண்ராசி, சிவப்பு நிறம், பலகால்ராசி, சந்திரனுக்கு நீசவீடு, பகல்ராசி, 4 ஆம் இடமாக வரும்போது பலமானது ஸ்திரராசி, சிறுகுழி, பள்ளம் முதலாய இடங்களைக் குறிக்கும், கன்று, காலிகள் (கால்நடை) ஊன மடைந்தவர்களைக் குறிக்கும், தரையைக் குறிக்கும், செத்தபசு, முதலானவை குறிக்கும்.

தனுசு

தனுசதனில் வந்துநின்று தந்தை வாவென்றால்
மநுசேதம் மெத்தவுண்டு வாழ்மயிலே - அந்தமனை
சூனியமே வைத்தவிடம் சோதிதெரு நிலைக்கீழ்
பேணியதைக் கண்டெடுநீ பின். (260)

தனுசு ராசி உதயனைபோது வந்து அழைத்தால், அம்மனையில் அதிக உயிர்ச் சேதங்கள் ஆகியுள்ளன, அம்மனையின் கண் சூனியம் வைத்துள்ளது, அது அம்மனையின் தெருவாசற் நிலைக்குக் கீழே இருக்கிறது அதனை எடுக்க வேண்டும் இன்னும் கேள்.

நிலையதனில் வீறலுண்டு நீண்டநாள் சூனியம்
கொலையும் விழுந்தமனை கோத்திரம் - இல்மனையில்
தொட்டி யுமிகரி துல்லியமாய்க் கிடக்கும்
மட்டிசுக மக்குளம்பும் ஆம். (261)

நிலையில் வெடிப்புள்ளது இது நீண்ட நாளான சூனியமாகும், மேலும் அம்மனையில் ஒரு கொலையும் விழுந்துள்ளது. கோத்திரம் அழிந்துவிட்டது, சல்லியம் மேலும், உமிக்கரி உடைந்த தொட்டி முதலியன கிடக்கும், போர் ஆயுதம், விலங்கின் கொம்பு முதலானவை கிடக்கின்றன.

ஆட்டெலும்பு பன்றிதலை ஆயிழையாள் தன்மயிரும்
கோட்டிகொண்ட வாவறையில் குப்பலாம் - இட்டிகையும்
அஞ்சனம்போல் காட்டும் அறிந்திடுமேல் உன்றனக்குக்
கொஞ்சம் நலமே குடி. (262)

ஆட்டின் எலும்பு, பன்றியின் தலைஒடு, பெண்ணின் தலைமயிர், மனையின் வாசற்படியின் கீழ் வெளவால் எலும்புகள், மற்றும் குப்பைகளும் முதலான சல்லியம் இருக்கின்றது. இவற்றை மைபோட்டுப் பார்த்தது போல் உனக்கு அறிவித்து விட்டேன் அவை போக்கி நலம் செய்க.

தநுசிவன் நாற்காலாந் தான்பத் திலேவல்
இனியிரவிலே களவுநேர் நோக்கும் - இன்கேளாய்
அக்கினியாந் தொட்டமா கிருக்கும் மூலகதிர்
அக்கினியான் ஒன்ற மேல். (263)

தனுசு சிவராசி, நாற்கால்ராசி, 10 ஆம் இடத்தில் வலிமையானது, இரவு ராசியாகும், களவு குறி சாஸ்திரத்தில் மேல்நோக்கு ராசி, இன்னும் கேளாய், நெருப்புராசி, நெருப்புள்ள இடங்கள், தீவிபத்துகள் குறிக்கும் இராசியாகும்.

வடிவுள தனுவே யரைக்கீழ் குதிரை
வடிவமே மானிடர் ஆகும்நெடிய விற்கையின்
வடமேல் நிலையுற் றிடமது தோட்டம்
முடிமன்னர் சாதி நிறமஞ்சள் இருகால்.
மொழியுமாண் சீவனுமாம் அது. (264)

தனுசின் வடிவம் பாதி வில்லேந்திய மனிதனும், கீழ்ப்பாதி குதிரையின் தோற்றமும் கொண்ட விசித்திரமானது, வடமேற்குத்திசை, இடம் தோட்டம், சாதி மன்னர் (க்ஷத்திரியன்) நிறம் மஞ்சள், ஆண்ராசி, சீவராசியும் ஆகும்.

மகரம்

மகரத்தில் வந்துநின்று வாய்மொழியைக் கேட்டால்
திகரத்தால் சாவுவந்த தென்றால் - நிகரில்லாச்
சண்டைகளும் நேர்ந்ததினால் சத்தியமே செய்ததுண்டு
பென்டுகளால் வந்ததெனப் பேசு. (265)

மகரராசி உதயவேளையில் அழைக்கப்பட்டால், க்ஷயரோகத்தால் மரணமடைந்தவர் மனையாகும், பெண்களால் வந்த சண்டைகளின் காரணமாக சத்தியங்களும், முறையீடுகளும் நேர்ந்துள்ளன.

பேசவேசொல் லப்பெரும் பேதைநீ கேளாய்
ஆசையாய் அப்பாலுண் டரிவையே - நேசமாய்
வாழ்ந்தமனை முன்னாள் வாணிபமே செய்ததுண்டு
தாழ்ந்துவிட் டதுண்டேபின் சாற்று. (266)

பெண்ணை கேள் வந்திருப்பவர் ஆசையாய் கட்டிய முந்தைய வீட்டை விற்றுவிட்டார் அதனால் நஷ்டமும் ஏற்பட்டது என்றும் கூறுவாய்.

முன்கட்டில் சாடியுண்டு மூன்று முழத்திற்கு
ளென்கட்டி வாழ்ந்திருந்தான் இசைந்து - அங்கண்
அடுக்களையாந் தொட்டிமுற் றமாங்கரி சாம்பலுமி
மெடுக்கமா ளாதிருக்கும் மேல். (267)

வீட்டில் முன் கட்டில் மூன்று முழ உயரத்திற்கு ஒரு தாழி (குதிர்) உண்டு அதன் கீழேயும், அடுப்பங்கரை, முற்றம் முதலான இடங்களில் சுடுகாட்டுச் சாம்பல், பிணம் சுட்ட விறகுக்கரி, உமி முதலியவை சல்லியமாய் உள்ளன.

மேல்மகரந் தாதுநால் மேல்வலிது தான்பறவை
சாலக்களவு திரள்தா னிறுதி - மேல்நோக்கும்
வண்ணான் துறைமுகமும் வாய்ந்த பெருவழியும்
நண்ணுகதிர் என்பைதென் நாட்டு. (268)

மகரமானது தாதுராசி, நாற்கால்ராசி, மேல் நோக்கில் வலியது, பறவையைக் குறிக்கும், களவு குறியில் கடைசியைக் குறிக்கும் (கூட்டத்தையும் குறிக்கும்) வண்ணான் துணி வெளுக்கும் இடத்தைக் காட்டும், பெருவழிப் பாதையைக் குறிக்கும் (Highway)

மகரந்தான் சுறாவும் கலையும் ஒன்றிரண்டு வடிவதாய்வட திசையுதிக்கும்
பகரிடம்நதி யாம்சாதியும் வண்ணான்பறவை பெண்தாது வென்னரைப்ப
ருகலநிறங் கறுப்புநிசி விழித்திருக்கும் பூமகன்றனக்கு உச்சவீடாம்
நிகர்சனிக் காட்சிகுருவுக் குநீசம்நிதி சாந்தாதுவுந் துவாரம். (269)

மகரராசியின் தோற்றம் சுறாமீனும் கலைமானும் சேர்ந்த உருவமாகும், வடக்குத்திசையுடையது, இடம் நதியும், நதிக்கரையும், சாதி வண்ணான், பறவைராசி, பெண்ராசி, தாதுராசி, நிறம் கறுப்பு, இரவு விழிக்கும் ராசி, செவ்வாய்க்கு உச்ச வீடு, சனிக்கு ஆட்சி வீடாகும், வியாழனுக்கு நீசவீடாகும், துவார ராசியுமாகும்.

கும்பம்

கும்பத்தில் வந்துநின்று கூறியழைத் திட்டதனால்
அன்பத்தே குன்றியது போச்சு - வெம்பி
மனந்தளர்ந் தேசிங்கத் தில்மாதே இருக்கும்
இனமதனைக் காணவுமே ஏர். (270)

கும்பராசியானது உதயமானபோது அழைத்தால் அம்மனைக் குரியவன் உடல் உபாதைகளினால் வருந்துகின்றான், மனம்நொந்து போயிக்கின்றான். தென்கிழக்கு மூலையில் சல்லியம் இருக்கின்றது அதனை இனங்கண்டு போக்கச் சொல்வாய்.

சால்மூலஞ் சப்பாணி தானிருகால் தான்கேடு
மாலைப் பொழுதில் வருநோக்கு - மேல்வட
திக்காம் உதயவலி தென்னீர்க் கருந்தரையும்
மிக்ககதிர் எட்டெனவே விள். (271)

கும்பமானது மூலராசியாகும், சப்பாணி, இருகால்ராசி, மாலைப்பொழுதுக்குடையராசி, நோக்கியபோது வலியது, வடக்குத்திசைக்குரியது, வாழைத்தோட்டம், கரிகல்மண் உள்ள இடம், லக்கினமாக வரும் போதில் வலிமையளவு இராசியாகும், சூரியனுக்கு எட்டாவது இராசியாம்.

கும்பந்தான் புருடனாகியே கையிற்குடந் தனையேந் தியேநிற்கும்
வம்பிருகாலாம் வடதிசையு திக்கும்வாயு வில்நோக்கி டும்ஆணாம்
நம்பகல் விழிக்குமிரா வுசப்பாணி கற்சனிவீ டுதயவலுவாம்
தெம்புநீர்ச் சர்க்கரையாம் பாகியமூலம் திரம்கருநீ லமெனச்செப்பே. (272)

கும்பமானது கையிற் கும்பக்குடம் ஏந்தி நிற்கும் ஆடவன் தோற்றம் கொண்டது, ஆண் ராசி வாயுமூலைக்குரியது, பகல் விழிக்கும்ராசி, சனிக்கு ஆட்சி வீடாகும், தென்னந்தோப்பு, கரும்புக்கொல்லை முதலியனவற்றைக் குறிக்கும், ஸ்திரராசி, நிறம் கருநீலமாகும்.

மீனம்

நல்லமனை மீனமதில் நாடியே வாவென்றால்
சொல்லக் குறிகேளு தோகையரே - மெல்லக்
கொலையும் விழுந்தமணை கூப்பிடுமே கூகை
அலையிறந்த ஆழிபோல் ஆம். (273)

மீனம் உதயத்தில் சல்லியம் காண வந்து அழைத்தால் அதன் பலன் கூறுகிறேன் கேள். அம்மனையில் கொலை விழுந்திருக்கின்றது. அம்மனையின் மீது நின்று கூகையெனும் பறவையானது அலறும், அலை நின்று போன கடல்போல அம்மனை உள்ளது.

அம்மனையில் ஏவலுண்டு அறநொண்டி தான்கருப்பன்
தின்மைசெய்வான் மேலுமதில் செப்பக்கேள் - செம்மையில்லா
தொட்டியுமி கரியும் தொலையாம லேகிடக்கும்
மட்டிசுகம் அக்குளம்பும் ஆம். (274)

அம்மனையில் ஏவல்சூனியம் உள்ளது, நொண்டிக்கருப்பன் அங்கிருக்கிறான், அவன் தீமையே செய்வான் மேலும் கேள், சல்லியமாய்த் தொட்டிஉமி, கரித்துண்டு முதலிய மாந்திரீகப் பொருட்கள் கிடக்கின்றன எலும்புகளும் கிடக்கின்றன.

மாணிக்க நாச்சியாரும் வருமதில் மீனந்தானும்
வாணிய கறுப்புத்தானும் உரஞ்சேகாற் பணந்தான்
காணிக்கை வைத்தால்சொர்ப் பணங்காணது கழிப்புப்பூசை
வீணில்லை தடாகமார்க்கம் வேண்டிநீ பூசைசெய்யே. (275)

கனவுகளும் தீயதாய்க் காணும், கறுப்புத் தெய்வத்திற்குக் கால்பணம் காணிக்கையாக முடிந்து வைத்தால் கெட்டகனா தோன்றாது. மேற்படித் தொல்லைகள் நீக்கக் கழிப்புப் பூசை செய்ய வேண்டும். ஏதேனும் ஒரு தாமரைக் குளத்தருகிலே அமர்ந்த கழிப்புப்பூசை செய்தால் தோஷங்கள் நீங்கிச் சுகமுண்டாகும் என்று கூறுவாயாக.

மீனமேயிரு மீன்வாலொடு தலையுமிக வைத்து வட்டமதாகி
தானெழுவதும் விழுவதுமாகும் சாதியில் மறையவன் வடகீழ்
ஆனதிக்கிடம் நீர்பெண்ணிறஞ் சிவப்பரும் பகல் விழிக்கும் பச்சையுமாம்
ஊனரும்பற வையுபயம் பொன்வீடுபுகர்க் குச்சம்புத னுக்குநீசம். (276)

மீனமானது இரண்டு மீன்கள் வாலுடன் தலை வைத்தது போல வட்டவடிவமான தோற்றம் உடையது, எழுவதும் விழுவதுமான நிலையைக் குறிக்கும், சாதி பிராமணன், திசை -வடகிழக்கு, இடம் - தண்ணீர், நிறம் - சிவப்பு, இனம் - பெண்ராசியாகும், பகலில் விழிக்கும் ராசியாகும், பச்சைநிறத்தையும் குறிக்கும், கருடப்பட்சி, உபயராசி, வியாழ பகவானுக்கு ஆட்சிவீடு, சுக்கிரனுக்கு உச்சவீடு, புதனுக்கு நீசவீடும் ஆகும்.

நீசனஞ்சாதி வள்ளுவன் களவுநேர் பகலிரவினில் அதுபோம்
நேசஞ்சாவடி நீர்க்கயமது தோட்டம் நெடயபூக்கரும் புடனிருக்கும்
பாசமாய் நோக்கு வடகிழக்கா கும்புகலும் சப்பாணி நால்வலிது
கூசவேமூ லைசந்துவாய்க் கோட்டை குரியமூ ஒன்பதுகாதம். (277)

சாதியில் வள்ளுவனைக் குறிக்கும், களவு குறிசாஸ்திரத்தில் பகல் இரவு இரண்டையும் குறிக்கும், சத்திரம், சாவடி, தண்ணீர் உள்ள இடங்கள், பூந்தோட்டம், கரும்புக் கொல்லை முதலியவற்றையும் குறிக்கும், நோக்கில் வலிது, சப்பாணிராசி, நான்காம் இடமாகவரும் போது வலிமையானது, மூலைகள், சந்து, திரும்பு மிடங்கள், கோட்டை கொத்தளங்கள், தூரம் ஒன்பது காததூரமாகும். மற்றும் கீழ்மையான சாதியினரையும் குறிக்கும்.

சல்லியம் இருக்கும் ஆழம் அறிதல்

பருதிபார்என் சாணுக்குள் பார்க்கச்சாம் பலுமெலும்பும்
செருதிசேய் சாணெட்டுக்குள் செங்கல்லுமண் டையோடும்
மருவியபுதன் தானெட்டும் அதமதஞ் சாடியென்க
சருவியகுரு வுக்கொன்பான் சாணுக்குள் எலும்புமாமே. (278)

உதயலக்கினத்தில் சூரியன் நிற்க எட்டுச்சாணுக்குள் சல்லியம் சாம்பலும் எலும்பும் கிடக்கும் சந்திரன், செவ்வாய் நிற்க எட்டுச்சாணுக்குள், செங்கல், மண்டை ஒடு முதலானவை கிடக்கும் புதன் நிற்க எண்சாணுக்குள் இழிவான சூதகச் சீலை கிடக்கும் வியாழன் நிற்க எண்சாணுக்குள் எலும்பு கிடக்கும்.

ஆகுமேபுகர்க் கிரண்டு சாணுக்குள் வெண்கலங்கள்
போகுங்காரிக்கு முச்சாணதில் கரிகருங்கல் லுமுண்டே
ஏதுமிராகுவுக் குத்தானும் இடிபாடு கிணறுமுண்டால்
ஆகுங்கேது வுக்கிரண்டு வருகிணறு காணுமாதே. (279)

சுக்கிரனுக்கு இரண்டு சாணுக்குள் வெண் கலப்பொருட்கள் கிடக்கும். சனிக்கு மூன்று சாண் ஆழத்திற்குள் கரி, கருங்கல் முதலியன கிடக்கும், இராகுவுக்கு மூன்றுசாண் ஆழத்திற்குள் இடிந்த பழங்கிணறு இருக்கும், கேதுவுக்கு இரண்டு சாணுக்குள் கிணறு காணப்படும்.

யஜமானும், சிற்பனும் மனைகோலப் போகும் போது உண்டாகும் சுபசகுணங்கள்

கனிவுணவழி செல்போது காணுமே காமசூரி
வனிதையர் நிற்கப்பொன்னாம் வாலிபமுக முஞ்செய்தால்

நினைவுடன் சிந்தையாலே நேயமாய் நடக்கும்போது
அனமென நடக்கும்பா வாயதுவுமுத் தமமென்றோதே. (280)

மனைகோலச் செல்லும்போது, தாசிகளைக் கண்டாலும், இளம் பெண்களைக் கண்டாலும் உத்தமமான சுப சகுணங்களாகும்.

மன்னியநிறை குடங்கள் மாராயஞ் சொல்லும் வண்ணான்
மின்னியதயிர் பால்சோறு விடக்குடன் மதுக்கு டங்கள்
கன்னியசா ரைவீசி கரும்புகட் டெதிரே காணில்
என்னியல் இரட்டைப் பார்ப்பார் எதிர்வரக் கருமநன்றே. (281)

நிறைதண்ணீர் குடங்கள், வண்ணான், தயிர், பால் விற்பவர், அன்னம் (உணவு) விற்பவர், மாமிசம் விற்பவர், தேன் விற்பவர், இனிய சாறுள்ள கரும்புக்கட்டு, இரட்டை பிராமணர்கள், எதிரில் வந்தால் சுபச்குனமே யாகும்.

கொடிநரி கிள்ளை வேங்கை கூர்முயல் கோழிகொக்கு
வடிவுள மஞ்ஞை யோந்தி மறையொடுப சுக்கள்மீதே
கடிகமழ் நாரைநாவி கடுத்துவாய் செம்போத்து என்னில்
வடிவுடன் வலத்திற் சென்றால் பலன்பெருங் கருமநன்றே. (282)

கொடிய நரி, கிளி, வேங்கைப்புலி, முயல், கோழி, கொக்கு, அழகிய மயில், ஓந்தி, பசுக்கள், நாரை, நாவிதன், கடுத்து வாய் எறும்பு, செம்போத்து முதலியவை இடமிருந்து வலமாகச் சென்றால் சுபகுணமாகும்.

மதுக்குடம் மாங்கிஷங்கள் மதுரமாம் பால்நெய் நீரும்
கதித்திடு வாசங்கட் டுக்கமுத் தியும்நிறை வதாகும்
மதித்திடும் ஆனை கோவுமாம் பரிபுர விதானும்
எதிரிடத் தோன்றநன் றாம்எய் தியகரு மம்தானே. (283)

தேன்குடம்,மாமிசம்,பால்,நெய்,தண்ணீர்க்குடங்களும்,இனிய நறுமண மலர்களுடைய வாசனையும், சுமங்கலியும், யானை, பசு, குதிரை முதலியன எதிரே வந்தால் சுபசகுனமேஆகும்.

வெள்ளிய புறாவினோடு விளங்கிய பசுவுமாதும்
ஒள்ளிய மானினேறும் உருவுடன் காணுமாகில்
தெள்ளிய கருமநன்றாம் சீர்மனை புதுக்கச்சீராம்
வள்ளிய ராகிவாழ்வார் மண்ணிடை மனையுள்ளோரே. (284)

வெள்ளைப்புறா,பசு, ஆண்மான் முதலியன எதிர்ப்பட்டாலும் நல்ல சகுனமேயாகும், மனைகோலநன்று, மனைக்குரியவர் நல்ல வாழ்க்கை பெறுவார்கள்.

நண்டுடன் பூழைபுல் லுநல்கிய சிலந்திவட்டம்
செண்பகம் மூஞ்சூறு பல்லிவலமதில் மொழிந்துகூற
கொண்டிடும் மகிழ்சிதானும் கோவுடன் தனமும்உண்டு
கொண்டிடும் மனையைச்செய்ய கருமங்கள் வெகுவாயுண்டு. (285)

நண்டு,மலைக்குகை, புல்லுக்கட்டு,சிலந்திக்கூடு,செண்பகமரம்,மூஞ்சூறு முதலியவை எதிர்வந்தாலும் பல்லியானது வலது பக்கமிருந்து கத்தினாலும், மகிழ்ச்சியுண்டாகும், பசு செல்வச் சேர்க்கையுண்டாகும், மனை செய்தால் நிறைய லாபங்கள் உண்டாகும்.

ஓங்குநிறை குடங்கள் ஒக்கவ ருவதுபார்
பாங்காய் எதிராகப் பார்மாதே - நீங்கா
மறையவர் கூட்டம் வருகிறார் நேரே
நிறைநன்மை என்றே நினை. (286)

நிறைகுடங்கள், சேர்ந்துவரல், வேதம் ஓதும் பிராமணர் கூட்டமாய் எதிரே வந்தால் மிகவும் நன்மையே உண்டாகும் சகுனமாகும்

உத்தமகன் னிதாசியுயர் சுமங்கலி நற்பிள்ளை
பெற்றவள் நீசமாது பிராமணகன் னிசித்தர்
பத்தினி மாதர்கூறும் பரிவுளவச னங்கேட்டல்
மெத்தநன்மை யென்றுவிரும் பியேமனையைக் கோல்வீர். (287)

உத்தமமான கன்னிப்பெண், தாசி, சுமங்கலிப்பெண், நன்மகனைப் பெற்ற தாய், பிராமணப் பெண், சித்தர்கள், கற்புக்கரசியாய் விளங்கும் பெண்கள் கூறும் அறிவுரைச் சொற்களைக் கேட்டல், நல்ல சகுனங்கள் எனஉணர்ந்து மனை கோலுவீராக.

நலமாய் மனையதனை நாடியெடுப் போர்க்கு
வலமா நரையான் வலியன் - கனவிடம்
காரிகையே நற்கருடன் கானாது செம்பருந்தும்
வாரமாம் போத்தும் வலம். (288)

மனைகோலப் போகும் போது இடமிருந்து வலமாக எருது, கரிக்குருவி, கருடன், செம்பருந்து, செம்போத்து முதலியன செல்ல நற்சகுனமாகும்.

அசுபசகுனம்

செய்யபுன் செய்யவாடை செம்பட்டை சுருட்டை நொண்டி
மெய்யினில் மயிரில்லாதான் விரிதலை யொற்றைக் கண்ணன்
தையல் நூலிழந்த மாதுதடிக் கொம்புகாண் பானாகில்
கையிலே கயிறுகாணக் காலன் வாய்ப்படுவன் தானே. (289)

சிவந்த ஆடை கட்டிய பரதேசி, செம்பட்டை, சுருட்டை மயிருள்ள தலையுடையவன், நொண்டி, உடலில் ரோமம் இல்லாதவன், தலைவிரித்த பெண்கள், ஒற்றைக்கண்ணன், விதவை, உலக்கை, கையிலே கயறு கொண்டு வருபவர் இவற்றைக் காண மனைக்கு உரியவருக்குக் கண்டம் உண்டாகும்.

தண்டொடு பாண்டஞ்தட் டார்தவசியர் முடவர்செக்கார்
கொண்டமூக் கரையர்தட் டைக்குருடரை எதிரேகாணில்
கண்டிடநா டிப்போன கருமங்கள் வேண்டப்பொல்லா
வண்டமிழ் குழலினாளே வாழ்மனை யெடுக்கவேண்டாம். (290)

உலக்கை, குயவன், தட்டான், தவசியர், முடவர், எண்ணெய்ச் செக்கு வாணியன், மூக்கரையன், (மூக்கில்லாதவன்) குருடர், எதிரில் வந்தால் ஆகாத சகுனமாகும் அப்போது மனை கோலலாகாதெனில்.

தலைவிரிமொட்டை மட்டைதவசி சன்னியாசி பார்ப்பான்
முலையிலாக் கன்னிகும்ப மூக்கிறை விறகுக்கட்டு
நலமிலாமுது நோயாளன் நாவிதன்குரு டன்செக்கான்
பலரும்வந்த தெதிரேகாணில் பலனிலாக் கருமமாமே. (291)

தலைவிரித்தபெண், மொட்டைத் தலையன், பிச்சைக்காரன், சன்னியாசி, பார்ப்பான், முலையில்லாத பெண், மூக்கறையன், குட்டையன், விறகுக்கட்டு, நலம் கிடைக்காத நீண்டநாள் நோயாளி, நாவிதன், குருடன், எண்ணெய்வாணியன், முதலியவர்கள் எதிரில் வந்தால் அபசகுணமாகும் காரியம் கைகூடாது.

வாழும் மனைக்காகா மாய சகுனங்கள்
தாழ விடுக்கில்சரி குழலே - ஏகச்
சகல புகழ்ச்சீர்த்தி சாட்சியாம் செம்மல்
புகழ் குலவுமென்றே புகல். (292)

மனைக்காகாத சகுனங்கள் தோன்றும் போதில் மனை கோலச் சென்றால் புகழ் கெடும், தீமைகளே யுண்டாகும்.

வாறதுகேள் ஆயினம்மனை தனில்ஏ கும்போது
காதுதல்கேட் கலாகாகைம் பெண்ணைக் காணலாகா
வேறுதான்துக் கம்நாத்தம் மேவிடிலா காதின்னம்
சிறுதலாகா தென்றுசெப் பினார்மய னுமன்றே. (293)

உரக்கக்கத்திப் பேசும் பேச்சைக் கேட்டல், விதவை எதிர்வரல், துக்கச் செய்தி கேட்டல், நாற்றமான வாசனை (துர்நாற்றம்) வந்தால், கோபாவேசக்குரல், ஆகாத சகுனங்கள்.

வேதியனிப்பன் தட்டான்வின வியகுசவன் செக்கான்
ஓதியஎட்டி தோட்டியூது வன்செம்மான் கைம்பெண்
தீதிலாமாற் றம்சொன்னால் திறமில்லை கொஞ்சநன்மை
மூதுரைபொல் லாவார்த்தை முழுவதுங் கேட்டாமே. (294)

பார்ப்பான், வைசியன், தட்டான், குயவன், எண்ணெய் வணிகன், பண்டாரம், தோட்டி, மேளகாரன், சக்கிலியன், விதவை, அசுபசொற்கள் கேட்டல் இவை அசுப சகுனமாம்.

இந்தச்சா திகளின்மேலே இருக்கின்ற சாதியெல்லாம்
எந்தச்சா திகளானாலும் இயம்பிய வாக்கியந்தான்
விந்தைசேர் பாக்கியங்கள் மேவிடில் நன்மையுண்டு
புந்திசேர் பொல்லாவார்த் தைபுறம்பாகா வென்றுசொல்லே. (295)

இந்த வருணத்தவர்க்கும், இதற்கு மேல் சாதியினருக்கும் என்றில்லாமல் எல்லாச் சாதியினருக்கும் இவை பொருந்தும், பொல்லாத அபவார்த்தைகளும் கேட்கக்கூடாது.

சுபாசபசகுனம்

கருங்குயில் செய்யமயில் போற்றுநல நரையான்
வரியமரை பரியசிவல் வலியகொ டுகாகம்
உரியவலம் போகலிவை யூனமிலை நரியன்
அரியபுலி ஒந்திஎலி கேழலொடு காகம். (296)

கருங்குயில், மயில், எருமை, தரித்திர பிராமணன், வேகமாய் ஓடும் சேவல், கரிக்குருவி காகம், இடமிருந்து வலம் போகலாகாது, நரி, புலி, ஒந்தி, எலி, பன்றி, நாகம் இவைகள் இடமிருந்து வலம் போகில் நல் சகுனமாகும்.

ஓடுமுயல் கருடனொடு காடிநல புல்வாய்
ஆடுபருந் தட்டையுடன் சுட்டிமுதல் சூரன்
ஆடிதொடு சாரையொடு மந்தி உடனாம்
ஓடியிடம் போகிலிவை யூனமிலா தாமே. (297)

முயல், கருடன், நல்லபறவைகள், ஆடு, பருந்து, அட்டை, நாகம், நாய், குரங்கு, முதலியவை வலமிருந்து இடம் போகில் சுபசகுனமாகும்.

யஜமானனும் சிற்பனும் மனையில் நின்றபின் காணும் சகுனங்கள்

வலமிகச்சொல் லிப்பல்லிவா லிபமிடத்திற் சொல்லின்
பலமிகவுடை யானாகும் பணிந்திடுங் கருமநன்றாம்
குலவியமனை யுமோங்கும் கொடும்பகை விலகிப்போகும்
பலமிகவுடை யாராவர் பல்லியின் இயல்புதானே. (298)

சிற்பியும் மனைக்குரியவனும் மனையில் நிற்கும் போது பல்லியானது முதலில் வலது பக்கமும், பின்பு இடது பக்கமும் சொன்னால் நல்ல சகுனமாகும், அம்மனை சிறப்புற்று விளங்கும், பகைநீங்கும், பலவானாயும் ஆவார்.

எறும்புதான் ஒழுங்குவிட்டு ஏகிடிலியற் றவேண்டாம்
கறங்கொடுக றையானோந் திகண்டிடிற் கருதவேண்டாம்
பறந்துதான்க ரும்புயர்ந்து பரவிலும் வேண்டவேண்டாம்
திறம்படுமொ ழியினாளே தீமையுண்டு இதனாற்தானே. (299)

மனையில் நிற்கும்போது எறும்புக் கூட்டமானது சிதறி ஓடிக்கொண்டிருந்தாலும் (வரிசைதவறி) கறையானும், ஒந்தியும் சுற்றிக் கொண்டிருந்தாலும் மனை கோல வேண்டாம், பூசைக்காக வைத்திருக்கும் கரும்பு தோகை மேலே எழும்பும் அளவுக்கு காற்று சுழன்று அடித்தாலும் மனை கோல வேண்டாம்.

வானரம் பன்றிபூனை வருந்திய ஞமலிதும்மல்
போனவத் துக்கவார்த்தை பொருந்திட ஆமையட்டை
கானமாம் உடும்புநாகம் கடுக்குதேளாந் தைகோட்டான்
ஊனமிம் மனையில்கண் டாலொழித்திடு ஆகாதென்றே. (300)

மனையில் நிற்கும்போது குரங்கு, பன்றி, பூனை, நாய், தும்மல் ஒலி, துக்கச் செய்தி, ஆமை, அட்டைப்பூச்சி, உடும்பு, நாகம், கொடுந்தேள், ஆந்தை, கோட்டான், அங்கக் குறைவுள்ளவன் இவற்றை மனையிற் கண்டால் மனை கோலலாகாது.

சிற்பி மனைப் பொருத்தங் கூறல்

மனைதனில் வந்துநின்று வாகடன் பார்த்துநோக்கி
அளவதுநீ ளங்கண்டு அளந்ததன் மனையைநோக்கி
நன்மனை எடுக்கலுற்ற நாயகன் ராசிதன்னை
முன்வலமா கவைத்துமு ழமதால்செங் கோல்சாத்தே. (301)

மனையில் நின்று கண்களால் கவனித்து அதன் நீள அகலங்களை அளந்து மனைக்கு உரியவனின் ஜாதகத்தைப் பார்த்து எவ்வாறு மனை அமைப்பது என்று முழக் கோலினால் அளந்து சொல்வாயாக.

நாயகன் மனைக்கு வலமான கோலநன்று
நாயகன் மனைக்கு எதிரேநல்லக மெடுக்க நன்று
நாயகன் மனைக்கிடம் பின்நன்மனை நஷ்டமென்று
நாயகமயன் உரைத்தார் நன்மையறிந் துசொல்லே. (302)

அந்த மனையில் வலது புறமாக ஒதுக்கி மனை அமைக்க நன்றே. கீழ்புறம் கழித்து முன் புறம் மனை அமைக்க நன்று, இடதுபுறம் மனை அமைக்கக் கூடாது. நஷ்டமாகும், மயனுரைத்தார் நன்மையான இடம் அறிந்து கூறுவாயாக.

நன்மனையெடுப் போர்க்கெல்லாம் நாளிட ராசிதன்னை
முன்வலம் கொள்வீராகில் முயன்றிடும் கருமநன்றாம்
பன்னெடுங் காலம்வாழ்வர் பயின்றிடும் மக்கட்பேறும்
பின்னிடங் கொள்வீராகில் பிணியொடு கேடதாமே. (303)

மனையெடுப்போர்க் கெல்லாம் அவரவர் இராசி, மற்றும் நட்சத்திரம் அறிந்து அதன் அடிப்படையிலேயே ஜாதகம் பார்த்து மனை செய்ய நன்று, நீடுழி வாழ்வர், மக்கட் பேறுண்டாகும், அங்கனமில்லாவிடில் நோயும், கேடுகளும் உண்டாகும்.

நாயகன் ராசிதன்னை நலமுறவெண் ணிப்பார்த்து
வாசலேவல முமுன்னும் வளவறக் கொள்ளநன்மை
ஆயவணி ராசிதன்னை இடத்தினும் பின்னுங்கொள்ள
நாயகன்தன் னைவைத்து மனையவள் தனக்குநாசம். (304)

ஜாதகத்தை ஆய்ந்து வாசற்கால் வைக்கவேண்டும் அப்படியின்றி முன்பின்னாக மாற்றி அமைத்தால் மனையாளின் கேடு உண்டாகும்.

மண்ணாள்பவர் மனைவாழ்பவர் மண்ணில்மனை எடுக்கில்
முன்னாவது வலமாவது முளரித் திருவுரையும்
பின்னாவது இடமாவது பெருமாமனை யெடுக்கில்
பொன்னாவது பொருளாவது உயிராவது போமே. (305)

மன்னர்கள் அல்லது குடிமக்களுக்கு வீடு அமைக்கும் போது தனக்கெதிரில் வலதுபுறம், அல்லது முன்புறம் மனை எடுத்தால் லெட்சமி கடாட்சம் ஏற்படும், இடதுபுறம் அல்லது பின்புறம் ஒதுக்கி மனை எடுத்தால் பொருள் சேதம் அல்லது உயிர்ச்சேதம் உண்டாகும்.

சிற்பி மனையின் லட்சணங் கூறல்

அருக்கனின் றதுகிழக்கு அருஞ்சோமன் வடக்கதாகும்
திருந்திய மேற்குத்தெற்கு திகழ்ந்திடும் பூமிமேலே
வருத்தமில் லாமல்வாழ் வர்மனையினை எடுத்துக்கொள்ளும்
கருத்தினைம யனுரைத்தகா ரணமிவைகள் தாமே. (306)

சூரியனின் திசை கிழக்கு, சந்திரன் திசை வடக்கு, சனிக்குத்தெற்கு, செவ்வாய்க்கு வடக்கும் திசைகளாகும் இவைபற்றி யறிந்து உத்தமமான திசையில் மனை அமைக்க வேண்டும் என மயனுரைத்தார்.

பல்லிகள்ஒந் திபோலும்பாம் புடன்பற வைபோலும்
மல்லிகைமுடித் தகூந்தல்மங் கையேமேற் குந்தெற்கும்
சொல்லிய தாழ்ந்தபூமிச துர்முகன்வரி னுஞ்சோரான்
துல்லியம்பட வேயெல்லாந் துணிந்துநீ யறிந்துகொள்ளே. (307)

பல்லிகள், ஒந்தி, பாம்பு, பறவை போல மேற்குத் திசையும், தெற்குத்திசையும் நிலையில்லாத குணம் கொண்டவை எனவே இத்திசைகள் கூடாது மேலும் இவை தாழ்ந்த திசைகள் இத்திசைகளில் பரமன் வந்தாலும் நிற்கமாட்டான் எனவே திசைகளைப் பார்த்து மனை செய்க.

குடதிசைவடக் குத்தாழ்தல் குற்றமேயில் லைமேற்கு
இடமுடனுய ரமெத்தவினி மைவந்தெய் துஞ்சாலத்
திடமுளசுற் றத்தாருந் தெளிந்தநீர் சூழல்போலப்
படமுடன்வய துகாணிபல வுடன்வாழ்வார் தாமே. (308)

வடக்கு, மேற்குத் திசைகளில் வீடமைத்தால் ஏதும் குற்றம் இல்லை சிறந்த பலனுண்டாகும். சுற்றத்தார் தெளிந்தநீர்போல சூழுவார்கள், நீண்ட ஆயுள் மற்றும் செல்வம் வாய்க்கும்.

பலபலவழி யேயாதல்ப துங்கிச்சிற் றடியேயாதல்
சிலசிலவழி யேயாதல் சேர்ந்திடும் பூமியாகில்
புலவருமவர் கட்காசி புகழ்பெறப் புகன்றிட்டாலும்
பலவுகண்டி சைந்துபூமி பாழ்படுஞ் சுடுகாடாமே. (309)

மேற்கூறிய திசையில்லாத மற்ற மேற்கு, தெற்குத் திசைகளில் வீடமைத்தால் பெரும் சித்தர்களின் ஆசி பெற்றாலும் கூ' _ அந்த பூமி பாழேயாகும், மேலும் சுடுகாடாகும்.

நாடியபூமி தன்னைநல முடன்துடிபோல் வேல்போல்
நீடியகரைகள் தோட்டம் நிலச்சுழி மகரஞ்சூனும்
ஓடியகயமும் நீக்கியுயர் தவப்படி யேயாக்கில்
கூடுவேற் கண்ணினாளே குலமனை தேறாதென்னே. (310)

அம்மனையின், உடுக்குப்போல் குறுகியோ, வேல்போல் நடுப்பக்கம் அகன்றும் தலைப்பகுதியில் குறுகியோ இல்லாமலும், தோட்டம், வேலி, பூமியின் பள்ளம், மேடு என்றில்லாமல் சமதளமாக்கி முறைப்படுத்தி வீடானது அமைக்காவிட்டால் அம்மனை நற்பலன் தராது என்று மயனுரைத்தனர்.

புன்னையின் பூவைப்போலும் பொருந்துதாம ரையைப்போலும்
மன்னுபாதிரி யைப்போலும் பசுவினீர்கெந் தம்போலும்
பின்னையுஞ் சிலமணங்கள் பிறந்திடினிறைந் தவாழ்வோடு
அன்னைதன் சுற்றத்தோடு அநேககாலங் கள்வாழ்வான். (311)

முறையான மனை அமைந்தால் புன்னைப்பூ, தாமரைப்பூ, பாதிரிப்பூ போலும், நன்மலர் வாசனை போலும் மற்றும் பல மலர்களின் மணமானது சுகம் தருவது போல அம்மனையும் சுகவாழ்வளிக்கும், அன்னை மற்றும் உறவினருடன் அநேக நாள் வாழ்வான்.

வட்டமுங் கோணமாகில் வளர்சாரை மயிலைப்போலும்
கொட்டினக் குடம்விளாவின் குரங்குமீன் பன்றிபோலும்
வெட்டினும் மழுவுஞ்சங் குமேவிய சுளகுசூல
மிட்டதோர் வடிவம்போ லுமிசைந்திடும் பூமியாகா. (312)

வட்டம், நாற்கோணம், பாம்புபோல் வளைந்தும், மயில்போல் நீண்டும், நகுங்கிப்போன குடம்போலக் குறுகியும், குரங்கு, மீன், பன்றி, மழு, சங்கு, முறம், சூலம் போன்று பல குழப்பமான வடிவங்களில் உள்ள பூமி ஆகாது என்று அறிக.

முச்சதி ரானபூமி முடுகிய புலாலும்நாறி
இச்சையாய் மேற்குத்தெற் காயிடமுடன் கிழக்குத்தாழ்ந்தால்
வச்சதோர் நிதியும்வே றாய்மக்களும் மரணமென்றும்
அச்சமுந்தோன் றும்பாழாம் அம்மனை இயல்புதானே. (313)

முக்கோண வடிவபூமி, புலால்நாற்றமுள்ள பூமி, மேற்கு, தெற்கில் உயர்ந்தும் கிழக்கில் தாழ்ந்தும் உள்ள பூமியும் செல்வமும், மக்களும் நாசமுண்டாகும், மேலும் அச்சம், உண்டாகும், அம்மனை பாழேயாகும் என்றவாறு

தன்றிமத்துட னேபார்க்கத் தக்கதோர்சூ லம்போலும்
நின்றுகாண்ப துவேயாகா நீனிலமொத் துக்காணில்
சென்றுபோம் படிநீபாராய் செல்வமுண் டதிலேநாளும்
நன்றிதென்றறிந் துமுன்னோர் நலம்பெற உரைத்தவாறே. (314)

சூலம் போன்று மூன்று பிரிவாய்க்காணும் பூமி ஆகாது, நிலம் சேர்ந்து சமதளமாயும், சுத்தமான அளவுடையதாயும் இருந்தால் செல்வம் சேரும். இவ்வாறான பூமியே நலம் தரும் மனைக்கு ஆகக் கூடியது என்று மயன் உரைத்தார்.

சொல்லுங் கத்தரி தோன்றுகோல் போலவும்
வெல்லும் முக்கோணம் விளம்பிய போலவும்
புல்லு நேத்திரம் புகன்றன போலவும்
கல்லு மேகலை கருதிய போலவே. (315)

கத்தரிக்கோல் போலவும், முக்கோணம் போலவும், கண் போலவும், ஆபரணம் (அட்டிகை) போலவுமான நிலம் ஆகாது.

போல மத்தளம் புகலவடைக் காய்போல்
ஆள உள்ளும் அரியபுறம் புமாய்க்
கோல மாய குவலயந் தன்னிலே
ஏல மாளி இசைய ஒண்ணாதே. (316)

மத்தளம்போலும், தாம்பூலம் போலும், உட்புறம் பள்ளமாயும் சுற்றிலும் மேடுமாயும் உள்ள மனையில் மாளிகைகட்ட இயலாது.

சேரும் உப்பு சிறங்குங் கிராமத்தில்
நேரும் மத்திபம் நெருங்கு மூலையிலும்
பாரும் பள்ளம் பகர்நில மாகிலும்
ஊரும் தண்ணீ ராயோ டுநிலமதே. (317)

இனிய கிராமத்தில் மனையானது நடுவிலும் மூலைகளிலும் பள்ளமாய் இருந்தால் தண்ணீரானது ஓடுவதுபோல அந்த நிலமும் நிலையாய் நிற்காது எனல்.

வரவு சொல்லும் வகுக்கும் பலபேர்கள்
திரமு டன்கூடா தென்ற நிலத்திலும்
உரை யுங்கோ புரமுற்ற நிலத்திலும்
திரை யுமரவஞ் சேர்ந்தபுத் துமிதோ. (318)

மனைக்குறி சாஸ்திரம் தெரிந்தவர்கள் கூடாது என்று கூறிய நிலத்திலும், ஆலய கோபுரத்தின் அருகிலும், பாம்புப் புற்று இருக்கும் இடத்திலும் மனை அமைக்க கூடாது.

புத்துடன் பேரும் பத்துவாய்ச் சீறிய
சத்து மேவும் சதுர்நிலம் ஆகிலும்
கொத்து மேவு சுடலைப் பதியிலும்
கத்து மாடுகள் கழறும் மந்தையதே. (319)

கோவில் நிலம், பாம்புப் புற்றுள்ள நிலம், சுடலைப் பகுதியிலும் வீடு அமைக்க நேர்ந்தால் கால் நடைகள் திடீர் திடீரென விழுந்து இறப்பதுடன் நாசமும் உண்டாகும்.

சதம் மேற்கும் சிறந்த கிழக்குடன்
நீதியாம் மனைநிறை தப்பி இருந்தாலும்
போதமே சலம்பு கழ்நெருக் காகிலும்
வேதம் ஓத விளங்கிடும் நெய்யதே. (320)

மேற்கு மற்றும் கிழக்கில் முறை தவறிய வண்ணம் மனை எடுத்தால் சேதமே உண்டாகும். தண்ணீர் ஆழ்ந்த இடமானால் யாகத்தீயில் ஊற்றிய நெய் போல செல்வம் அழிந்து விடும்.

நெய்யுடன் தயிர்நே ரும்புத் தேனுடன்
கொய்யும் எண்ணெய் குறிக்கு முதிரமும்
பைய மச்சம் பகருஞ் சவமுடன்
வெய்ய பட்டி ருக்கை பொல்லாதிதே. (321)

நெய்தயிர் முதலியவை விற்பவர் வீடு, தேன் எடுப்பவர் வீடு, எண்ணெய் செக்கு அருகாமை, கறிக்கடைக்காரர், மீன் வியாபாரியின் வீடருகாமை, பிணஞ்சுடும் வெட்டியான் இருக்கும் இடம் முதலான இவ்விடங்கள் மனை செய்யலாகாது தாசியின் மனையும் ஆகாது.

பொல்லா திந்தப் புகலும் வழிமுறை
வல்லாண் மைகண்டு அறிந்திவை எல்லாந்
தெல்லாம் உணர்ந்த சிற்பநூல் பண்டிதர்
கல்லால் சிறந்த நூல்காட்சி மெய்தானிதே. (322)

மேற்கண்ட **விஷயங்களை** ஆய்ந்துணர்ந்து மனை செய்வதே உத்தமமாகும்.

மண்ணுடையார் **வண்ணார்** வசித்தவனை யகமும்
மண்ணுடைய **பார்ப்பார் ம**னையகமும் - கண்ணானர்
வாழ்ந்தமனை யகமும் வாங்கிக் குடியிருந்தால்
தாழ்வே தவறா தரும். (323)

துணிவெளுக்கும் வண்ணான், பார்ப்பனன், விசுவகர்மன் இவர்கள் வாழ்ந்த வீட்டை வாங்கி அங்கு குடி புகுந்தால் நிச்சயம் தாழ்வே வரும் என்று மயன் உரைத்தார்.

சிற்பனுக்கு வெகுமானம் அளித்தல் அவசியமெனல்

நல்லதோர் சிற்பனுக்கு நன்மனை கோலும்போது
சொல்லுநற் றுகிலும்பொன் னுஞ்சுகந்தமும் மிகவளித்து
வல்லவர்வகுத் துக்கேட்டு வருந்தியே பொருத்தம்பார்த்து
சொல்லவம் மயனுஞ்சொன்ன சுருதியும் பலிக்குந்தானே (324)

மனை கோலும் போது சிற்பிக்கு பொன், ஆடை, தாம்பூலம் இவை அளித்து அவரிடம் முறைப்படி மனை அமைப்பு கணித்துப் பெறல் வேண்டும் அப்படிச் செய்தால்தான் மயன் கூறிய வாக்கும் பலித்து நலம் உண்டாகும் என மயனுரைத்தார்.

தாம்பூல சோதனை

திருந்திய ஒருவனீந்த செயத்தவெள் ளிலையடைக்காய்
வருதொகை ஐந்துங்கூட் டிவகையுடன் ஏழுக்கியே
பொருந்திய லாபசேதம் புத்தியால றிந்துகொள்ள
உருதிரண்ட துநாலைந் தாறொப்பில்லை யொருமூன்றேழு. (325)

சிற்பனுக்கு ஒருவன் தந்த தாம்பூலத்தில் இருக்கும் வெற்றிலைகள் எண்ணி அந்த எண்ணிக்கையை 5 ஆல் பெருக்கி 7ஆல் வகுத்த ஈவைத்தள்ளி மீதியில் 1, 2, 4, 5, 6வரில் உத்தமபலனும், 3, 7 வந்தால் அதமபலனும் தரும் என்றறிக.

இன்னின்ன சுவைமண் இன்னின்ன வருணத்தார்க்கு ஏற்றதெனல்

இனிதாகிய இன்சுவை மண்ம றையோன்
மனதா கியவற் பதுமன் னவனாம்
புனிதா கியதே புளிமண் வைசியன்
சொனதா கியகைம் மண்சூத் திரற்கே. (326)

இனிப்புச் சுவையுடைய மண் பிராமணர்க்கும் துவர்ப்புச் சுவையானமண், மன்னர்க்கும் (க்ஷத்தியர்) புளிப்புச்சுவையான மண் வைசியருக்கும் கைப்புச்சுவை மண் சூத்திரருக்கும் ஆகும்.

வேறு

இனிதாகிய பால்நாறிய இனிப்புற்றமண் மறையோர்
துனிவாகிய பால்நாறிய துவர்ப்புற்ற மண்ணரசர்
புனிதாகிய வோர்நாறிய புளிப்புற்ற மண்வைசியர்
கனிதாகிய நீர்நாறிய கைத்தல் சூத்திரற்கே. (327)

இனிமையான பால்மணம் பொருந்திய இனிப்புச் சுவைமண், பிராமணர்க்காகும், பால்மணமுடன் துவர்ப்பு மண் சத்திரியருக்கும் புளிப்பு மனத்துடன் புளிப்புச் சுவையுடைய மண் வைசியருக்கும், தண்ணீர்மணமுடன் கைப்புருசியான மண் சூத்திரருக்கும் ஆகும்.

வேறு

பற்குண மதுபால் நாறும் அந்தணன்
சற்குணம் சேரும் மாங்கனி மன்னவன்
பொற்குணம் மகிழ் மல்லிகை வைசியன்
ஊர்க்குணம் பறிவேம் புநாறும் சூத்திரன். (328)

பால், தேன் மணமுள்ள மண் அந்தணர்க்கும், மாம்பழ மணமுள்ள மண் சத்திரியருக்கும் மகிழமலர், மல்லிகை மணமுள்ளமண் வைசியருக்காம், மீன், வேம்பு மணமுள்ள மண் சூத்திரருக்கும் மனை அமைக்க ஏதுவாகும் மண்ணாகும்.

நான்கு வருணத்தாருக்கும் திசையறிய

அந்தணர் தென்திசை அரசர் மேற்றிசை
வந்தனல் வடதிசை வணிகர்க் கேற்றதாம்
தொந்தமாய்ச் சூத்திரர் தமக்குக் கீழ்சுகம்
செந்திரு வாழும் அத்திரு மனைக்குள்ளே. (329)

பிராமணர்க்குத் தெற்குத் திசை, அரசருக்கு மேற்கு, வைசியருக்கு வடக்கு, சூத்திரருக்குக் கிழக்குத் திசைகளில் மனை உண்டாக்க வேண்டும்.

திடமாகிய தென்சார் மனைசேர்மறை யோர்க்காகும்
குடசாரெனு மேல்சார் மனைகோவர சர்க்காகும்
நெடுகிய வடசார் மனைநேராம் வணிகர்க்குப்
படிமீதினில் கிழ்சார் மனைபரிவாம் சூத்திரர்க்கே. (330)

தெற்குச் சார்ந்தமனை பிராமணருக்கும், மேற்குச் சார்ந்தமனை சத்திரிய வகுப்பினருக்கும், வடக்குச் சார்ந்தமனை வைசியருக்கும், கிழக்குச் சார்ந்த மனை சூத்திரர்க்கும் உரியது.

நான்கு வர்ணத்தார்க்கும் மண்களின் குணம்

தயிரொடு நெய்தேனெண் ணெய்தாக்கிய உதிரத்தோடு
மயிர்பல சிறுமீன்பட் சிமற்றுமோர்பொல் லாநாற்றம்
பயிரொடு பலமுங்காணார் பாழ்படுமனை எடுக்கில்
வயிரவேல் விழியினாளே மண்களின் குணங்கள்தாமே. (331)

தயிர், நெய், தேன், எண்ணெய், உதிரம், மீன், பறவை, மற்றும் பல கவுச்சியான நாற்றம் உள்ள மண்ணுள்ள மனையில் வீடமைத்தால் மனைபாழாம், எனவே கூடாது என்று வயிரம் போல் மின்னும் வேல்விழிமாதே நீயறிவாயாக (நன்மணமில்லா மனை பாழ் எனப்பொருள்)

மனை யஜமானனுக்கு மேஷாதி ராசிகளில் ஆகுமிடங்களும் ஆகாத இடங்களும்

மேஷ ராசி

ஆடுமேல் மனையெடுக்க அழிந்திடும்மனை யும்பாழாம்
தேடுமே பொருளும்போ குந்தரித்திரன் ஆகுமென்றே
சாடுமே பேயுந்தானும் சதிருடன்மக் கட்சேதம்
கூடுமே மனையும்பா ழாங்குண்மயன் வழுத்தவற்றான். (332)

மேஷத்திற்குரிய முகூர்த்தத்தில் மனைஎடுத்தால், மனை அழியும், பாழ்படும், பொருட்சேதம், தரித்திரம் உண்டாகும், மனையில் பேய்கள் சேரும், புத்திர நாசம், முதலியன உண்டாகும்.

ரிஷபராசி

ஏறுமேல் மனையெடுக்கி லின்பமாய்ச் சுகமதாகும்
கூறிய தனங்கள்சே ருங்குணமுடன் வாழ்வதாகும்
வீறிய மக்கட்பேறு விதமுடன்வீ றும்பிள்ளைத்
தேறிய வயதுநூறு திறமயன் விளம்பலுற்றேன். (333)

இடப ராசி நடக்கும் போது மனையெடுக்கில் தனச்சேர்க்கையுண்டாகும். நற்குணவானாவாவன், புத்திர சம்பத்து, தனலாபத்துடன் நூறாண்டு வாழ்வான் என மயனுரைக்கிறேன் - அம்மனைக்கு வயது நூறாகும்.

கற்கடக ராசி

அலவன்மேல் மனையெடுக்கில் அலைச்சலுங்கு குலைச்சலுண்டு
தலைவனும் ரோகவானாம் தனங்களுஞ் சேதமாகும்
பெலனில்லை மனையும் பாழாம் பிரதியாய் வயசுமுப்பான்
நலமதுபலன் களில்லைநல மயனுரை செய்தானே. (334)

கடகலக்கினத்தில் முகூர்த்தம் செய்து மனை எடுத்தால் அலைச்சலுடன், காரியம் கெடும், மனைக்குரியவனுக்கு நோயுண்டாகும், செல்வம் அழியும், மனைபாழ், மனையின் வயது முப்பதாகும் என்று மயன் உரைத்தார்.

சிங்கவிராசி

சிங்கமேல் மனையெடுக்கில் செல்வமே வருத்துமாகும்
அங்கமில் மக்கட்பேறு மன்னமும் பலனுண்டாகும்
பொங்கிய மனையும்வா மும்புகமுடன் வயதுநூறு
தங்கிய பொருளுஞ்சே ருந்தமிழ்மயன் விளம்பலுற்றேன். (335)

சிம்மலக்கினத்தில் மனை எடுத்தால் தனலாபம், புத்திர லாபத்துடன் மனையும் நூறு ஆண்டுகள் நிலைத்திருக்கும், பொருளும் சேரும் என தமிழ்மயனான நான் உரைக்கிறேன்.

துலாராசி

கோலுடன் மனையெடுக்கில் குணமுடன்தன வானாவான்
பாலுடன் வாழ்வுமுண்டு பசியில்லை மக்கட்பேறும்
மேலுடன் அரசர்மெய்க் கவிதுமனை வயதுஐம்பான்
சேலுடன் மயனுமிங்கு செம்மையாய் உரைசெய்தானே. (336)

துலா லக்கினத்தில் மனை எழுந்தால், நற்குணவான், தனவானாவான், நல்வாழ்வுண்டு பசியில்லா உண்டி கிட்டும், ஐம்பது ஆண்டுகள் மனை நிற்கும். அரசன் போல் வாழ்வான்.

விருச்சிக மகர ராசிகள்

தேளுமேல் மனையெடுக்கில் தரித்திர வானுமாவான்
மாளுமே யாடுமாடு மண்மனை பாழதாகும்
கேளுமே மகரமாகில் கெடுதியும்மனை யும்நாசம்
நாலுமே வயதுபோனால் அஞ்சிலே பாழதாமே. (337)

விருச்சிகத்தில் மனைசெய்தால் தரித்திரமுண்டாகும், மாடு, மனை, செல்வம் பாழாகும் மகரத்தில் மனைசெய்ய கேடேயாகும், மனையும்பாழ், நான்காண்டுகள் கழிந்தபின் ஐந்தாம் ஆண்டில் மனை பாழாகும்.

கும்பராசி

கூறியமனை யுங்கும்பம் குடந்தன பதியுமாவான்
தேறிய ஆடுமாடு திறமுடன் வாழ்வதாகும்
கூறியமக் கள்மெத்த குணமுடன் வயதுநூறாம்
ஆறியமயன் தானிதை அருமையா யுரைசெய்தானே. (338)

கும்பத்தில் மனையெடுத்தால், தனலாபம், கால்நடைகள் பெருக்குண்டாகும், மனைவி மக்கள் நலம் பெறுவர் மனையின் ஆயுள் நூறாகும் என மயன் அருளினார்.

மிதுன - கன்னி - தனுசு - மீன ராசிகள்

வில்லுமே ராமனுக்குமி துனமேயர சன்மேற்பால்
மெல்லிய கன்னிசத்தி மீனமுஞ் சிவனதாகும்
புல்லிய மொழியுமென்மேல் புகழுடன்முகூர்ந் தஞ்செய்யச்
சொல்லுமே தனவானென் றுசுகமயன் விளம்பலுற்றேன். (339)

தனுசு ராமன், மிதுனம் அரசன், கன்னி சக்தி, மீனம் சிவன் ஆகும் மேற்படி லக்கினங்களில் முகூர்த்தஞ் செய்தால் தனவானும் என்றென்றும் நலமுடன் வாழ்வார்.

வேறு

ஏமனுன் திசையா தொருமே டுதான்
சோமவன் திசை தூங்குங் குடிகளே
மாமனிந் திரன் வருணன் குபேரனுங்
கோமளன் திசை குற்றங் களில்லையே. (340)

எமனின் திசையான தெற்குத் திசையில், மற்றும் சந்திரன் திசையான வடமேற்கில் மனை எழுப்பினால் சுகமில்லை, இந்திரன் திசையான கிழக்கு, வருணன் திசையான மேற்கு குபேரன் திசையான வடக்கு முதலான திசைகளில் மனை செய்தால் குற்றமில்லை.

வேறு

அங்கிமேல் மனையெடுக்கில் மங்கைதான் மலடியாவாள்
செங்கைவாள் அரவந்தீண் டுந்தீப்படும் மனையிற்தானே
பொங்கமாங் குழலினாளே பொருளது களவுபோகும்
மங்கையே மயனார்சொன்ன வண்மைநூல் விளம்பலுற்றேன். (341)

அக்கினிக்குரிய தென்கிழக்குத் திசையில் மனை அமைத்தால் அவன் மனைவி மலடாவாள், பாம்பு கடிக்க நேரும், அக்கினி பயமுண்டாகும் (தீவிபத்து) பொருட்கள் திருடு போகும், என்று மயன் உரைத்தனரே.

கன்னிமேல் மனையெடுக்கில் கைப்பொருள் மிகவுண்டாகும்
அன்னமுந் தனமுஞ்சே ருமாயிழை தானுநிற்பள்
பொன்னொடு தானியங்கள் பொருந்தவேசம் பத்துண்டாம்
முன்னமே மயனார்சொன்ன வண்மைநூல் விளம்பலுற்றேன். (342)

மேற்குத் (தென்மேற்கு) திசையில் மனையெடுத்தால் பொருள் சேர்க்கையுண்டாகும், உணவுப் பொருட்களும், தனமும் சேரும், மகாலெட்சுமி அம்மனையில் வாசம் செய்வாள், பொன், தானியங்களுடன் சகல சம்பத்தும் உண்டாகும் என மயன் அருளியவாறு.

வாயுமேல் மனையெடுக்கில் வயிற்றினில் பிணியுண்டாகும்
காயநோய் கொண்டுசாவான் களவினால்பொ ருளும்போகும்
பேயுமே கூடிக்கொல்லும் பிணஞ்சுடு காடதாகும்
மாயமாமய னார்சொன்ன வண்மைநூல் விளம்பலுற்றேன். (343)

வாயுவின்திசையான வடமேற்கில் மனைசெய்தால் வயிற்றுவலி யுண்டாகும், காச நோய் ஏற்பட்டு மரணம் சம்பவிக்கும், திருடர் பொருள்களைக் களவாடிச் செல்வர், அவன் மனையில் பேய்கள் கூடி தொல்லைதரும், சுடுகாடுபோல் மனை இருக்கும் என்றவாறு.

ஈசான்ய மூலைதன்னில் இருந்திட மனையதற்கு
வாசமாயத னில்வாழ்ந்தால் வரிசையும் வாழ்வுமுண்டு
போகனார் புவியோர்க்கெல் லாம்பொருந்திய மனிதனாவான்
வாசமின் குழலினாளே மனையதன்குறி கள்கண்டாய். (344)

வாசனையுள்ள மலர்களை அணிந்த கூந்தலுடைய பெண்ணே ஈசான்ய மூலை என்னும் வடகிழக்கில் மனை செய்தால், நல்வாழ்வுடன், தனம் சேரும், புவியோர் மெச்ச வாழ்வான்.

அஷ்டயோனிகளின் பலன்

கிழக்குமுதலாந் திசையெட்டுங் கருடன்பூ னைகேசரியும்
உழைக்குஞ்சுணங் கனுரகமெலி வழுவைமுய லோடிவையுளது
செழிக்குமுயலின் ஞாளிபகை சிறந்தகரிக்குச் சிங்கமதாந்
தழைக்குமெலிக் குப்பூனை பணிதனக்குப்பருந் துதான்பகையே. (345)

கிழக்குமுதலாய் திசைகள் எட்டுக்கும், கருடன், பூனை, சிங்கம், நாய், பாம்பு, எலி, யானை, முயல் முதலியன யோனிகளாகும், இவற்றுள் முயலுக்கு நாய் பகையாகும் யானைக்குச் சிங்கம், எலிக்குப்பூனை, பாம்புக்குக் கருடனும் முறையே பகையாகும்.

கருடயோனி

சயமுள்ள கருடயோனி சரியுள்ளமனை யில்சேர்ந்தால்
நயமுள்ள திருவேசேர் வாள்நலமுள்ள மக்கட்பேறாம்
இயலுள்ள இந்திரன்போ லவிரவியுள்ள ளவும்வாழ்வார்
குயமுள்ள மடநன்மா தேகூறினர் வேதத்தோரே. (346)

கருட யோனியாகிய கிழக்குத் திசையில் மனை செய்தால் லட்சுமி கடாட்சம் உண்டாகும், புத்திர விருத்தியுண்டாகும், இந்திரன் போல சூரியன் உள்ளளவும் வாழ்வார் என்றவாறு.

தூமயோனி

துலங்கிய மனைகள்தம்மில் தூமமேசனிக் குமாகில்
கலங்கிய பிள்ளைபெண்டிர் காதலர் நாசமாகும்
இலங்கிய தேசந்தன்னில் இரக்கவே ஒட்டப்பண்ணும்
மலங்கிய கொங்கைமாதே மையமும் நடுக்கம்பாரே. (347)

தூம யோனியின் திசையெனும் தென்கிழக்கில் மனை அமைந்தால், மனைவி, மக்கள் நாசமுண்டாகும், தம்பதிகள் ஒற்றுமை கெடும்,

பரதேசம் போய் பிச்சை எடுக்கும் படியான நிலைமை உண்டாகும் என பருத்த தனங்களையுடைய பெண்ணே அறிவாயாக.

சிம்மயோனி

சிங்கமேமனை யில்வந்து சிறப்பொடு தோன்றுமா கில்
தங்கமேபொழி யுமிங்கு சதிருடன்மக் கட்பேறாம்
பொங்கமாங் குழலினாளே பூமியில் வெகுநாள் வாழ்வர்
மங்கையே மயனார்சொன்ன வண்மையை விளம்பலுற்றேன். (348)

சிங்கயோனியின் திசையான தெற்கில் மனை அமைத்தால் பொன் வரவுடன், புத்திரசம்பத்துண்டாகும், நீண்ட ஆயுளும் உண்டு என மயனார் அருளியவாறே.

சர்ப்ப யோனி

நன்றிசைமனை கள்தம்மில் நாகமேஜனிக் குமாகில்
என்றிசைமனை யோருக்கும் இந்திர பதமேயாகும்
என்றிசைபுவ னமெல்லாம் இயல்பெறும் புகழாமென்றே
மன்றிசைமய னார்தாமும் வண்மையாய் உரைத்திட்டாரே. (349)

நாகயோனியின் திசையெனும் தென்மேற்குத் திசையில் மனைசெய்தால் இந்திரன் போல் வாழ்வுண்டாகும், கீர்த்தியும் புகழும் பெற்று வாழ்வர் என மயன் அருளினார்.

எலி யோனி

கருதிய மனைகள்தம் மில்எலியது ஜனிக்குமாகில்
உறுதியாய்ப் பிள்ளைபெண் டிர்உடம்பினில் பிணியுண்டாகும்
அறுதியாய்த் தானதர்மம் அகமது அழிந்துபோகும்
தருவிய நூலின்வல் லோர்சாற்றிய வண்மைபாரே. (350)

எலியோனியெனும் மேற்குத்திக்கில் மனை அமைத்தால் மனைவி, மக்கள் நோயுண்டாகும். தானதர்மம் அற்றுப்போகும், மனையும் பாழாகும் என மயன் உரைத்தவாறே.

சுவானயோனி

ஈன்றதோர் மனைகள்தம் மிலிசைந்திடுஞ் சுவானம்வந்தால்
மாண்டவர் தம்மைப்போ லபதியைவிட்டு ஏகப்பண்ணும்
காண்டமாம் இடியும்நோ யும்கண்ணீரும் மிகவும்வீழும்
தாண்டவப் பெருமானூ லிற்சாற்றிய வண்மைபாரே. (351)

சுவானயோனி யெனும் வடமேற்குத் திக்கில் மனை அமைந்தால் இறந்தவர் போல அம்மனையை விட்டு வெளியேறும் படியாகும், துன்பங்களும், நோயும், கண்ணீருமான துயர வாழ்வே வாழ்வர் என தாண்டவமாடும் நடராஜனான சிவன் உரைத்தவாறே மயனும் இந்நூலில் அருளினரே.

கஜயோனி

நேயமாயா னையோனிநி லையுள்ளமனை யிற்சேர்ந்தால்
மாயவன்மா துசேர்வன் வறுமைகள் அணுகிடாது
தூயவேபிள் ளைபெண்டிர் சுகமுடனினி தாய்வாழ்வர்
ஞாயமாய்மய னார்சொன்ன நன்மையை விளம்பலுற்றேன். (352)

யானை யோனியெனும் வடக்குத்திக்கில் மனை எடுத்தால் திருமாலின் மனைவியான இலக்குமி அம்மனையில் தங்குவாள், வறுமையென்பதே வராது, மனைவி மக்கள் சுகமுடன் இனிய வாழ்க்கை வாழ்வார்கள் என மயன் உரைத்தவாறே.

முசல் யோனி

வாயசயோ னிதானுமனை தனில்சனிக் குமாகில்
தீயதாய் வியாதிசேரும் செல்வமும் பெருமைபோகும்
நேயமாய்ப் பிள்ளைபெண் டிர்நிச்சயம் மரணமாகும்
மாயமாய்மய னார்சொன்னவண் மைநூல்விளம் பலுற்றேன். (353)

முசல்யோனியெனும் வடகிழக்குத் திசையில் மனை எழுந்தால் நோயுடன், செல்வமும், புகழும் கெடும், மனைவி மக்கள் நிச்சயமாய் மரணமடைவார்கள் என்று மயன் அருளிச் செய்தவாறே.

யோனி பலம் வேறு

கருடனானது வயோனிமுதலாக் கதிக்கும் எட்டவற்றால்
கருதுஞ்செல் வங்கலகுஜயம் கன்மரோகம் தனங்கேடு
சருதுஞ்சுகம் நிஷ்பலந்தரு மேகருடன் ஏகம்கஜமேழு
வருதுஞ்சிங் கம்திரியோனி கரியபாம்பிங் கையோனி. (354)

கருடனென்னும் துவயோனி முதலாக வரும் எட்டு யோனிகளும் தரக்கூடிய செல்வம், கன்மரோகம், தனம், கேடு, சுகம், பலமின்மை, முதலியன வழங்கும் கருடன், யானை, சிங்கம், பாம்பு முதலான நான்கு யோனிகளும், சுபபலனும், மற்றவைகளில் முயல், பூனை, எலி முதலியவை அதமபலனும் செய்யும் என்றவாறு.

யோனி பரிவர்த்தனை

கிழைத்திசை யிற்றுவசமெனக் கிளர்புள்தா னமரியானை
வாழப்பந்து மான்பளிக்கும் வளருமதிதான் சத்துருவாம்
சாலத்தெற்கே சிம்மத்துஞ் சாரும்வடக்கண் யானையினும்
மேலைக்கருடன் பந்துவாம் மெல்லியறிந் துகொள்வாயே. (355)

துவசம் எனும் கிழக்குத் திசைக்கு சிம்மம், யானை எனும் தெற்கு, வடக்குத் திசைகள் நட்பாகும், ரிஷபமெனும் தென் கிழக்குத் திசை பகையாகும், இதில் தெற்கு வடக்குத் திசைகள் கிழக்குத் திசைக்கு நட்பு என்பதே தீர்வாகும்.

சிம்மத்தானத் ததிபகையாம் தேசார்கஜத்தும் அரிபகையாம்
சிம்மத்தானங் கஜம்பகையாந் திகழுங்கஜத் தேயரிபகையாம்
சிம்மங்கஜம் புள்மேலகியிற் சேரப்பகையாம் வடகஜத்துச்
சிம்மசர்ப்பஞ் சத்துருவாந்தி கழ்புள்நட் பாச்செப்புவரே. (356)

சிம்மத்தின் திசையாகிய தெற்கிற்கு பாம்பின் திசையாகிய தென்மேற்கு பகையாகும், யானை திசையான வடக்கிற்கு சிம்மத்திசையான தெற்கு பகையாம், யானை சிங்கத்திற்குப் பகையாகும் சிம்மம், யானை, பாம்பில் சேர்ந்தால் பகையாகும். யானைக்குச் சிம்மம், பாம்பு பகையாகும் கிழக்குத் திசை நட்பாகும்.

அவ்வவ்விடத் தேயவ்வதிபர் ஆரநலமே யடைந்திடுவர்
எவ்வமில்லாக் கீழ்த்திசைப்புள் ளியைச்சிங் கங்கஜந்தாமும்
செல்விச்சுக மேமருவியிடுந் தெற்கேசிம் மந்துவஜமுறின்
நல்விழியாய் தனமாயுள் நற்றானியங் கள்பல்கிடுமே. (357)

பொதுவாக அவரவர் இராசிக்குறிய திசையிலேயே வீடு கட்டிக் கொள்ள வேண்டும். கிழக்குத் திசையைச் சிம்ம தெற்குத் திசைக்குரியவர், யானை வடக்குத் திசைக்குரியவரும் மனை செய்து கொள்ளலாம், அதனால் தன, தானிய பெருக்கமுண்டாகும். நட்புத் திசையில் மனை செய்யலாம், பகைத் திசையில் மனை செய்யக் கூடாது என்பதே பொருளாகும்.

மேலைத் திசையாஞ் சர்ப்பத்தில் மெலியபாம்புவ ரின்நன்மை
சாலும்வடக்குக் கஜந்துவஜஞ் சாரும்நித்திய மங்களங்கள்
பாலர்பயக்கும் பயன்பலவாம் பண்பும்நலமும் திகழ்ந்திடுமால்
ஞாலத்தவர்க்கு நான்மறைதேர் நம்பன்மயனன் றுரைத்தனவே. (358)

சர்பத்திற்குரிய மேற்குத்திசைக்கு அத்திசைக் குரியவரே மனை செய்தால் நன்மையாம், வடக்குத்திசைக்கு, கிழக்கிற்குறியவர் மனை செய்ய நன்றாகும், இவ்வாறு மயனருளினரே.

கிழக்குத்துவஜம் சர்ப்பமுறின் கேடாமரணந் துன்பமுமாம்
வழக்காகுந் தெற்கேசிம்மத் தில்மதமாபாம் புதிருநீங்கும்
முழக்குமாத்தோல் தனநாசம் முன்னுமேலைச் சர்ப்பத்தில்
இழக்கும்சிங்கம் அகிவரினே இனித்தோல்வடக் குமரணமுமாம். (359)

கிழக்கிற்குரியவர் தென்மேற்குத் திசையில் மனை அமைத்தால் கேடுடன், மரணதுன்பம் வரும், தெற்கில் தென்மேற்குத் திசைக்குரிய இராசிக்குரியவர் மனை அமைத்தால் அம்மனையை விட்டுத் திருமகள் நீங்கி விடுவாள். தெற்கில் தென் மேற்குத் திசைக்குரியவர் மனை அமைத்தால் வடக்குத் திசைக்குரியுவர் மனை அமைத்தாலும் மரணமே சம்பவிக்கும்.

யோனி பரிவர்த்தனையின் பலன்

கருடனில்சிங் கம்யானை கணமுறும் நன்மையாகும்
பருகியசிங் கவீட்டில் பருந்ததேல் ஆயுள்நீடும்
திருகிலாச்சர்ப் பவீட்டில் திடகஜமரி புள்ளாகா
மருவிய பருந் துவீட்டில் மன்னதேமய னின்மாற்றம். (360)

கிழக்குத்திசையில், தெற்கு, வடக்கு ராசிக்காரர்கள் மனை அமைத்தால் நன்மையுண்டு. தெற்கில், கிழக்கு ராசிக்காரர் வீடமைத்தால் நீண்ட ஆயுள் உண்டாகும், தென்மேற்கில் தெற்கு, வடக்கு, கிழக்கு ராசிக்காரர்களுக்கு ஆகாது என மயன் அருளினவாறே.

நின்றுறும் ஆனைவீட் டில்பணியரி நிற்கத்தீது
மன்னியசர்ப் பத்தானமரி வரமரணம் உண்டாம்
கன்னியசிங் கவீட்டிற் கரியுடன் சர்ப்பந்தீது
நின்றிடுந்சொந் தவீடுநிறை செல்வமயனார் சொல்லே. (361)

வடக்குத் திசையில், தென்மேற்கு. தெற்குத்திசை ராசிக்காரர் மனை செய்யலாகாது. தென்மேற்கில், தெற்கு ராசிக்காரன் வீடமைத்தால் மரணமுண்டாகும், தென்மேற்கில், தெற்கு தீயது தனது இராசிக்குரிய திசையாலேயே மனை அமைத்தால் நலமாகும்.

வேறு

மேற்கதுவா சல்சர்ப்பம் மேவினும் வடக்குயானை
தீர்க்கமாங் கிழக்குவாசல் செங்கருட னுமேயாகில்
மூர்க்கமாந் தெற்குவாசல் முயன்றதும்சிங் கம்வந்தால்
தார்க்கவே மனைக்குயோனி தான்வரில் கேடுண்டாமே. (362)

மேற்குத் திசைக்கு, வடக்கு தென்மேற்கும், கிழக்கும், தெற்கும் வந்தால் கேடு உண்டாகும்.

ஆதியாம் மேற்குவாசல் அரியுமே சுகமதாகும்
நீதியாம் வடக்குவாசல் நிகழும்புள் சிங்கம்வெற்றி
ஓதியகி ழக்குச்சிங்கம் உயர்கரிபருந் துமென்மேல்
வீதியில் தெற்குப்பாகம் விதிமுறை கருடயோனி. (363)

மேற்குத்திசை, தென்மேற்கிற்கு ஆகும், வடக்குத்திசை கிழக்கு, தெற்கிற்கு ஆகும் வெற்றிதரும். கிழக்குத்திசை தெற்கு, வடக்கு, ஆகாதெனல்.

பரிவர்த்தனை யோனிகளின் பலன்

கருடன்கிழ் சாரியாகி காளிதென் சாரியானால்
அரவம்மேல் சாரியாகி அத்தியுத்தர பாலானால்
மருவறுசெல் வம்பெற்று மக்களும் மனைவியோடு
பெருகியே வாழ்வரென்று பேசினார் மயனார்தாமே. (364)

கிழக்கு ராசிக்காரர் கிழக்கிலும், தெற்கு ராசிக்காரர் தெற்கிலும், தென்மேற்கு ராசிக்காரர் மேற்கிலும், வடக்கு ராசிக்காரர் வடக்கிலும, மனை அமைத்தால் மனைவி, மக்கள் நலமுண்டாகி, செல்வந்தராக வாழ்வார்கள் என்று விஸ்வகர்மாவாகிய மயன் என்பவர் அருளியவாறே.

திசையோ னிதேர்ச்சி மனையோ னியீரும்
நிசமாக வொன்றால் நியாயம் - வசைபடுமேல்
விட்டெஜ மான்துஞ் சிவிரோதம் பலதுன்பம்
ஈட்டுமெ னநெஞ்சே இசை. (365)

திசையோனியும், மனைக்குரியவன் இராசிக்குரிய திசையோனியும் ஒன்றாக இருக்க வேண்டும். அதாவது அவரவர் இராசிக்குரிய திசையிலேயே மனை அமைக்க வேண்டும். மாறுபாடானால் மனைக் கதிபதிக்குத் துன்பங்களும், பகையும் வந்து சேரும்.

கருடயோனி கீழ்புறத்தில் கஜமுஞ்சிங் கம்வருமானால்
வருமேசுபங் கள்நலவுண்டு மராளம்வருமேல் மனையஜமான்
அருகுவானே தென்புறத்தில் ஆளியோனிக லுழன்வருமேல்
பெருகும்வய துதனம்தானியம் பிணக்கேயா னையங்கதயே. (366)

கிழக்கில், வடக்குத் தெற்கு சேர்ந்தால் நலமும், சுபமும் உண்டாகும். தென் மேற்கு வந்தால் கேடதாகும், தெற்கில் கிழக்கு வந்தால் தனதானிய சம்பத்துடன் நீண்ட ஆயுள் ஏற்படும். ஆனால் வடக்கும், தென்மேற்கும் தீதாகும்.

பிணக்கமாகில் சுதன்பேரன் பிணமாயெஜமான் மரிப்பானே
பணமுங்குறைந்து போய்விடுமேற் கேபாந்தள் யோனியிலே
பணமேவரலாம் பொருத்தங்காண் பாம்புஓங்கல் புள்ளரசு
பிணக்கமதனால் சுதன்பேரன் பிணமாபெஜமான் மரிப்பானே. (367)

மேற்படி வடக்கில் தென் மேற்குதிசைக்குரியவன் மனை செய்தால் மனைக்குரியவன் மரணமடைவான் மேற்கில் தென்மேற்கிற்குரியவன் மனை அமைத்தால் பணநஷ்டம் உண்டாகும். தென்மேற்கில், கிழக்கும், வடக்கும் மனை செய்தால் தனலாபமும் உண்டாகில் இவை மாறி அமைந்தாலும் மனைக்குரியவன் மரணமடைவான்.

வடக்கேயா னையோனியிலே வரலாம்கரு டன்மங்களமே
இடராம் சிங்கம் சர்ப்பமிவை இறப்பர்புத்திர பௌத்திரரே
தடமேபொருவும் இளமுலையாய் சான்றோர்புகழும் மயன்சொல்போல்
திடமாய் மனதில் உறுதியுடன் செய்க க்ஷேமம் அடைவாயே. (368)

வடக்கு யானை யோனியில், கிழக்குக் கருடன் யோனிக்குரியவன் வீடுகட்ட நலமுண்டாகும்,ஆனால் தெற்கு, தென்மேற்குக்குரியவர் மனை செய்தால், புத்திரர் பேரன் மரணம் அதாவது சந்ததியற்றுப் போகும் நிலையைக் குறிக்கும். இவ்வாறு மயனருளிய விஷயங்களை சந்தேகப்படாமல் உறுதியுடன் நம்பிக் கடைபிடித்தால் நற்பலன்கள் உண்டாகும் என மாதே நீயறிக.

குத்தல்

மனந்திகழ் மாதேகேளாய் மனிதர்தாம் மனையைக்கட்ட
மனைதனை மனைகள்குத்தல் மாண்டிடும் மனையின்மக்கள்
மனைதனைத் தேவர்குத்தல் வாழ்வற்று மனையும்பாழாம்
இனமுடன் உவலவேண்டில் இவற்றைநீ யுற்றுப்பாரே. (369)

பெண்ணே கேள்! வீடுகட்டும் போது ஒரு மனைக்கு மற்றொரு மனையின் குத்தல் ஏற்படல் ஆகாது. புத்திர நாசத்துடன் தலைவனும் மறிப்பான், தேவர்குத்தல் ஏற்பட்டால் அம்மனையே பாழ்பட்டுப் போகும். எனவே இவற்றையும் கவனித்து அறிதல் வேண்டும்.

கன்னி னீர்மனை மேடுகள் ஆலயம்
உன்னி வீசன்மனை தூங்கும் நாளிலே
முன்னி லங்கியில் இவ்வகை ஏறிட
குன்றும் வாயுதண் ணீருங் குடிகளே. (370)

மனைக்கு மேற்குத் திசையில் (கன்னிமூலை) ஆலயம் அல்லது மேட்டுப் பாங்கான இடம் இருந்தாலும், சிவ ஆலயங்கள் இருந்தாலும், இதே விதமாக அக்கினி மூலையில் இருந்தாலும், வாயு மூலையில் தண்ணீர் இருந்தாலும் குத்தல் ஏற்படும் (கிணறு, குளம், முதலியன)

மேனிவீ டுவிளங் காதெந் நாளுமே
காளிசூ லம்அவ் வீதி கலங்கிடும்
சாலிபொன் னுஞ்செல வுகளா கியே
சேளிகுன் னிசெடி யிலுள் ஆவரோ. (371)

குத்தல் உள்ள வீடு நலம்பெற மாட்டாது இது காளியின் சூலம்போல பயங்கரமானதாகும். கொண்ட பெருஞ்செல்வங்கள் யாவும் நசித்துப் போகும் கள்ளிச் செடியினுள் குடிபுகுந்தது போல கஷ்டத்தை யுண்டாக்கும்.

மூலையில் மூலைக்குத்தல் முழுமையும் பழுதேயாகும்
ஆலயம்மூ லைக்குத்தல் அன்பில்லா மனைபாழாகும்
சோலையின டுவேநிற்கிற் சோமனுள்ளள வும்வாழ்வர்
ஆலயம்குத் தலாகிலம் மனைவாழா தென்னே. (372)

மனையின் மூலையில் மூலைக்குத்தல் இருந்தால் அம்மனை முழுவதும் அழிந்து போகும், மூலைக்குத்தில் ஆலயம் இருந்தால் அன்புகெடும், மனையும் பாழாகும், சோலையான இடத்தின் நடுவில் நிற்க சந்திரன் உள்ளவரையும் வாழ்வர் (நீண்ட ஆயுள் எனப்பொருள்).

அந்தணர்வீட் டுக்குத்தல் ஆவுகள்வர வுங்குத்தல்
பந்தமாஞ்சோ மன்குத்தல் பாங்குடன்ரவி குத்தல்
நந்தவனங் கள்குத்தல் நலமானநதிகள் குத்தல்
பந்தமாமிந் தக்குத்தல் பாங்குடனரி தாமென்னே. (373)

மூலைக்குத்தலான இடத்தில் அந்தணர்வீடு, இடையர்வீடு, சூரிய, சந்திரர் குத்தலும், நதிகள், நந்தவனங்கள் இருப்பினும் குத்தலாகும்.

ஆலயம் வலதுதோள் அகமுங் குன்றிடும்
ஆலயம் இடதுதோள் அகமும் எய்திடும்
ஆலயம் எதிரிடில் அசைந்து விங்கிடும்
ஆலயம் பின்மனை அகலுஞ் செல்வமே. (374)

ஆலயமானது மனையின் வலப்புறம் இருந்தால் மனைக்குக் கேடு, இடதுபுறம் இருந்தால் மனை வாழும், எதிரில் இருந்தால் மனை தூங்கிப் போகும், பின்புறம் இருந்தால் தனநாசம் உண்டாகும்.

கரிபறிகுத் தல்நேர்ந்தால் கர்மந்தான் வாழ்வுகுன்றும்
நரியொடு நாய்கள்பூனை நலமிலாக்குரங் குக்குத்தல்
தடியொடுவரும் பைராசிசன் னியாசிவீதிக் குத்தல்
கொடியதாம் ருத்திரதேவர் கோவில்கள் குத்தலாகா. (375)

வினாயகர், ஐயனார் கோவில்கள் குத்தல் ஏற்பட்டால் ஆயுள் குன்றும், பைரவர், சாஸ்தா ஆலயங்கள், ஆஞ்சனேயர் ஆலயங்கள், பைராசிகள் ஆலயங்கள், குரூரதேவதை ஆலயங்கள், சிவாலயம் இப்படி எந்த ஆலயமானாலும் குத்தல் ஏற்படத்தான் செய்யும்.

ஆலயம்விளக் குப்பார்வை அணிமதில்கோ வில்குத்தல்
சாலவும்எதி ராம்பார்வை சந்நிதிவீ திகுத்தல்
கோலமாய்மனைக் குட்பட்டால் குறைந்திடும் செல்வமெல்லாம்
வாலயமிறந் துபோவான் மயனுரை தப்பாதென்றே. (376)

ஆலய கோபுரதீபம் குத்தல் தந்தாலும், சுற்றுச் சுவர்கோவில் குத்தல், சன்னிதானத்தின் பார்வைக் குத்தல் இவை மனைக்கு ஏற்பட்டால் செல்வமழிவதுடன் மனைக்கதிபனும் மாண்டு போவான், மயனுரை தப்பாது.

முடுக்கு வீதி முகடுகள் மண்டபம்
தொடுக்கு நந்தவனத் தொடுகோ வில்கள்
விடுக்கு வேதமொழி யும்மடங் களும்
இடுக்க மாகும னைதனை நோக்கினால்
நடுக்க முன்றுயர் நான்மறை ஆய்ந்ததே. (377)

மூலையில் வீதி, அண்டைவீட்டின் முகடுகள், மண்டபங்கள், நந்தவனம், கோவில், வேதபாட சாலைகள், மனைக்குத்துள்ள

இடங்களில் அமைந்தால் அதனால் மிகவும் கெடுதலான பலன்களே யுண்டாகும் என வேதங்களும் உரைக்கின்றன.

கோவிலின் வீதிகோடி குத்தலாம் எதிர்த்தவாசல்
சாவடிக் கடுத்தவாஸ்து சத்திரத் தெதிர்த்தவீடு
காவிடுங் குலம்நசிக்கும் கழுத்திடு நாராசத்திற்
பூமகள் வீடானாலும் பூதங்கள் அடையுந்தானே. (378)

ஆலயவீதிக்கு எதிரில் வாசல் இருந்தால் குத்தல் ஏற்படும் சத்திரத்திற்கு அடுத்த அல்லது எதிர்த்த வீட்டிற்கு குத்தல் உண்டாகும், இதனால் சந்ததியற்றுப் போகும், மேலும் நரகத்தில் தள்ளிவிடும், பூமாதேவியின் வீடாயிருந்தாலும் கூட அவ்வீட்டிற்குக் குத்தல் உண்டாகும். அவ்வீட்டில் பேய்களும், பூதங்களும் சென்று குடியேறும்.

வாசற்படிக் கெதிரே வாழ்மரங்கள் கம்பங்கள்
நேசவி மானங்கள் நீறாமே - பாசமுடன்
சந்நிதியி மோடைதான் தாக்குறுமேற் கேடாகும்
மன்னனுடன் பெண்டீர் மடிந்து. (379)

வாசற்படிக்கு எதிர்புறம் உயிருள்ள மரங்கள், தூண்கள், ஆலயவிமானங்கள் இருந்தால் அம்மனை பாழ்படும், ஆலயகன்னிதானம், தண்ணீர் ஓடை முதலியவை இருந்தாலும் கேடுண்டாகும் மேலும் மனைக்குரியவனும், மனையாளும் மரிப்பார்கள்.

மடிந்திடு வர்மக்கள் மாடுகன் றுகேடாம்
மிடமனை யில்செல்வம் இகலும் - திடங்கொள்
தமிழ்வல் லோர்சாற்றிய வாறிது வென்றார்
அமிழ்தன் நன்மயனார் ஆய்ந்து. (380)

மனைவி மக்கள் மரணமும், மாடு கன்றுகள் சேதமும் உண்டாகும், தனம் அழியும், இது தமிழ் முனிவர்கள் கூறியவை என்று மயன் ஆராய்ந்து கூறுகிறார்.

ஆலயஞ்சன் னமையம் மண்டிடும்ப சாசுகோவில்
நீலியாந்துர்க் கைதேவி நெறியயன்வலக் கண்ணோட்டம்
சாலையிலி வர்கள்வண்மை சமர்த்தனாந்த விர்த்துக்கொள்ள
வாலையம் பதிவருக்க வல்லவன்மய னுஞ்சொன்னார். (381)

ஆலயங்களின் குத்தல் ஏற்பட்டால் மனையில் பிசாசுகள் குடியேறும், நீலி, துர்க்கை, ஐயனார் முதலான தெய்வ ஆலயங்களின்

வீதி வாசல் குத்தல் ஏற்படாமல் பார்த்துக் கொள்க என்று மயனார் ஆய்ந்தறிந்து உரைத்தனரே.

ஆலயந்தம் பமையம் அடுத்ததோர் தலங்கள்சாலை
மேவேதட் டுமாகில் சாவதுதின் ணமென்ன
நீலவேல் விழியினாளே நேரிடும் பசாசுகோவில்
மேலவேதட் டுமாகில் வீட்டிறை சாவுமாமே. (382)

ஆலயம், தூண்கள், அடுத்த மனைகள், ஆலய வீதிகள் குத்தல் ஏற்பட்டால் மரணம் நிச்சயம், அம்மனையில் பிசாசுகள் கொலுவிருக்கும், வீடும் அழியும்.

தண்ணீர்த்துறை முன்னரண்மனை முன்தாழ்ந்ததெ ருமுச்சந்தியின்
முன்உண்ணீரர சர்கோட்டைகள் முன்ஊரின்நடு வேசுடலைமுன்னர்
மனைமுடித்து வாழ்ந்துகொண் டிருக்கவேணுமென் றுசென்று
இன்னிலங்கள் மனையெடுக்க எடுத்தமனை யும்பாழாம். (383)

வாசலுக்கெதிரில் தண்ணீர்த்துறை, அரண்மனைமதில், தெருமுச்சந்தி, அரசர்களின் கோட்டைகள் முதலியன குத்தலாம், ஊரின் நடுப்பகுதி, சுடலைக்கு எதிர்புறம் முதலான இடங்களில் மனை அமைத்தால் மனையது பாழாகும்.

வாழலாமனை யில்பூமி வழிக்குள நின்றயேரி
தாழலாமாலம் வாய்க்கால் தாழ்ந்தநற் றலங்களோடு
நீளமாந்தெருக் கள்கோவில் நிலைமரந் துரவுகேணி
பாழதாமனை யிற்பட்டால் பாலகன் மடியுந்தானே. (384)

மனைக்கெதிரில் குளம், ஏரி, கடல், வாய்க்கால், தாழ்வான இடங்கள், கோவில், மரங்கள், கிணறு முதலியன இருந்தால் அம்மனைக்குரியவனுக்கு புத்திர நாசம் உண்டாகும்.

கன்றுமே தட்டுமாகில் கணவனே கேடதாகும்
என்றுமே ஐயமாகில் எழில்பெறுமக் கள்தாழ்வர்
துன்றுமே சட்டமாகில் துணுவிலாச் செல்வங்குன்றும்
என்றுமே துக்கமாகில் மிக்கவே மக்கள்சாவே. (385)

மனைக்கெதிரில் இளமரங்கள் இருந்தால் மனைக்குரிய தலைவனுக்குக் கேடு ஆகும், அத்துடன் புத்திர நாசமும் உண்டாகும், மரத்தூண் இருந்தால் தனம் அழியும், என்றென்றும் துன்பமே இருக்கும், அத்துடன் புத்திர ஹரனியும் உண்டாகும்.

சந்தொடு முகடுகோடி சதுர்மறைய கரங்கோவில்
வந்திடுங் கிணறுகேணி மடங்களால் அரசு தோட்டம்
முந்திய யாகம்தெய்வ முழுமசானங் கள்சேரி
இந்திட மனையேசெய் தாலிடுக்கமாய் நசிக்கும்வாறே. (386)

சந்து திரும்பும் இடம், வேதபாட சாலை, பிராமணர் குடியிருக்கும் அக்ரகாரம், கோவில் கிணற்றின் எதிர்புறம், மடாலயங்கள், தோட்டம், நந்தவனம், யாகசாலை, சுடுகாடு, சேரிப்பகுதி இவ்விடங்களில் வீடு இருந்தால் இடுக்கியில் அகப்பட்டது போல அம்மனை நசித்துப் போகும்.

சந்நிதிவிளக் குக்குத்தல் சார்ந்தகோபுரத் தின்குத்தல்
உன்னியமதி லின்குத்தல் ஒருபுறம்சந் துகுத்தல்
மன்னியபிடா ரியையன் விநாயகர்துர்த் தெய்வங்கள்
நன்னியமனை களெல்லாம் நயமில்லை யழிந்துபோகும். (387)

ஆலய சந்நிதி, கோபுரவிளக்குத்தல், கோபுரக் குத்தல், ஆலய மதிற் சுவற்றின் குத்தல், பிடாரி, ஐயனார், விநாயகர் மற்றும் துர்த் தெய்வங்களின் ஆலயங்கள் இவற்றின் குத்தல் உள்ளமனைகள் யாவும் அழிந்து போகும்.

நலந்தருங் கோவில்நல் லதேவாலயம்
  நயந்ததேவி துர்க்கைக் காளியம்மனும்
பிலந்தரு கண்ணோட்ட மாய்மனை
  பிழையதாய் எசமானுக்குக் கேடதாய்
விலந்தவா லயங்கோடி எதிர்த்திடில்
  மிகுவில்லா மனைகோடி யேவாலயந்
தலந்தனில் அப்படி வாய்வீடுமே
  தக்கபாழா யெசமானனும் மாய்வனே. (388)

கோவில் தேவாலயங்கள், மனைக்குத்தல் ஏற்படுவதும், எஜமானனுக்குக் கேடாகும், பல ஆலயங்கள் வாசலுக்கெதிரில் இருந்தாலும், மனையின் மூலைச் சாய்வில் ஆலயம் இருந்தாலும் மனை அழிவதுடன் மனைக்குரியவனும் மரணமடைவான்.

நிலமதுபள் ளமாகில் நீள்யுகமூ ரேவாழா
மலைகளில்மனை கள்நிற்க மாண்டுபோம் மனிதரெல்லாம்
பாற்கடல்சய னன்றேவி பரிவுடனுரைத் தாளென்று
சீர்பெறுமய னார்சொன்ன சேதியை விளம்பலுற்றேன். (389)

மனை இருக்கும் நிலம் தாழ்வாக இருந்தால் அப்பகுதியே நலமாய் இருக்காது, மலைகளில் மனைகள் இருந்தால் அங்குள்ள மனிதர்களுக்குச் சேதமுண்டாகும். இதை திருமாலின் மனைவியான இலக்குமி தனக்குரைத்தார் என மயன் உரைக்கிறார்.

அழிந்திடுங் கோவில்தானு மரவுசேரிட மில்லங்கள்
விழிந்திடும் பறையர்செம் மான்மேவிய முனிகளெல்லை
அழிந்திடு சுடுமக்காடு மமர்க்களத் தவனியாகா
ஒழிந்திடும் அந்த இல்லம் ஓங்கிய வனமதாமே. (390)

கோவில், பாம்புப் புற்றுள்ள இடங்களினருகில் உள்ள மனைகள், அழிந்துவிடும், பறையர், சக்கிலியர், முனி ஒடுமிடங்கள் (முனியாலயம்), சுடுகாடு, போர் நிகழ்ந்த இடங்கள், இவ்விடங்களில் மனை எழுப்பினால் அம்மனை பெருங்காடு போல ஆகிவிடும். (அழிந்துவிடும் என்பதே பொருள்).

முக்கோணம் அறுகோணம் முடிலம்வட்டம்
முயல்போலும் கயல்முதுகு சூலாகாரம்
சக்கரவின் பின்பக்கம் போலும்பூமி
நடுபள்ளம் கோமுகமாய் நமன்தீமூலை
அக்கோணம் நிருதியு மேற்குத்தாழ
அமரே சன்றன் றிசைக்குப்
பருவங்கள் இல்லாமல் மேடதாகில்
பாரினில்மனை எடுக்கினும் பாழாம்பாரே. (391)

முக்கோணம், அறுகோணம், கோணல், வட்டம், முயல், மீனின்முதுகு, சூலம்போல் பிளந்து காணும் பூமிகள், நடுவில் பள்ளமான பூமி, எமன்மூலை, அக்கினி மூலைகளில் பசுவின் முகம் போல நீண்ட வடிவமுடைய பூமி, நிருதிமூலை, தென்மேற்கு முதலான இடங்களில் தாழ்ந்துள்ள பூமி, இந்திரன் திசையாகிய கிழக்குத் திசை மேடாயும் உள்ள மனையில் வீடுகட்டினால் பாழாம்.

நாலுதிக் கிலுநன் மனை தன்னிலே
மூலைப் பாய்ச்ச லாய்முற்றத் தில்குற்றிட
ஆலை யிலமர்ந் தகரும்பைப் போல்
வாலை யாகிய மங்கை மரணமே. (392)

நாலுதிக்கிலும் மூலைப் பாய்ச்சலெனும் குத்தல் உள்ள மனையினால் ஆலையில் பட்ட கரும்பெனவே மனைக்குரியவன் மனைவி மரணமடைவாள்.

சிதரன்கோ வில்பின்னும் சிவன்முன்னோன் கோவில்முன்னும்
சாதனமமைந் ததாமம் அல்லலேயடை யுந்தானே
காதலன்மனைக் குட்செல்லும் காலத்தில் எதிரில்தூலம்
தீதுறுமூன் றில்குற்றம் சேருமேல்தோ ஷம்சாவாம். (393)

பெருமாள் கோவில் பின்புறமும், சிவன்கோவில் அல்லது வீரபத்திரன் கோவில் முன்புறமும், வீடமைந்தால் அல்லலே உண்டாகும், இம்மனையில் குடிபுகுந்தால் தோஷமுண்டாகும்.

அந்தணர்மடங் கள்குத்தல் அறநெறிகோ வில்குத்தல்
நந்தனவனங் கள்குத்தல் நதிகுளம்கி ணறுகுத்தல்
இந்தநல்வா சல்நேரே இருகூரை சந்துகுத்தல்
பந்தமாம்கரு வும்போகும் பரிமனையாட் குத்தோஷம்
விந்தையாய் மயனார்சொன் னார்வெகுமனை பாழாமென்றே. (394)

அந்தணர், வேதபாட சாலை, மடங்கள்குத்தல், நந்தவனம், நதி, குளம், கிணறு இவற்றின் குத்தல், வாசலுக்கு எதிரில் இருவீட்டுக் கூரைமுகடுகளின் குத்தல், சந்து குத்தல், ஏற்பட்டால், வயிற்றில் வளர்கருச்சேதம், தாய்க்கும் சேதம் உண்டாகும் என்று மயன் கூறினார், இந்த முறை தப்பியமனைகள் நலமடைய மாட்டா, பாழேயாகும்.

கீற்றுநுதல்சேர் திருவன்னாய் கிளப்பதொன்றைக் கருத்தாய்க்கேள்
ஆற்றுப்பார்வை குளத்துப்பார்வை ஆழ்கிணற்றுத் தெருப்பார்வை
வாழ்த்துங்கோவில் மதிற்பார்வை மன்னன் கோட்டை எதிர்ப்பார்வை
பாழ்த்துப்போகு மனையென்று பகர்ந்தார்பெரி தும்மயனாரே. (395)

பிறை போன்ற நெற்றியை உடையவனே கூறுவது ஒன்றைக் கவனமாய்க் கேட்பாயாக ஆறு, குளம், கிணறு, தெரு, கோவில் மதிற்சுவர், அரண்மனை கோட்டை எதிர்ப்படல், முதலானவையின் பார்வை (குத்தல்) உள்ளமனை பாழாகும் என மயனருளினார்.

நிவர்த்தி

நாடியவீ திதானும் நாற்பது அடியதானால்
கோடியுங் குத்துந்தள் ளுகோவுடன் தேர்நடக்கின்
நீடியஒழுங் குதான்நீள் நிலத்திற்சிற் றடியேயானால்
தேடியகுற் றமெல்லாந் தீப்படும் பஞ்சுதானே. (396)

வீதிப்பக்கம் மனையின் நீளம் நாற்பது அடி இருந்தால் கோடிக்குத்தலும் தீரும் ஒழுங்காக நீண்ட நிலம் இருந்தால் குற்றங்கள் யாவும் தீயிலிட்ட பஞ்சுபோல் ஒடும்.

கூறியகோ வில்கோடி குளமுடன்கிணற் றுப்பாய்ச்சல்
வீறியதெரு வின்கோடி வீடுடன்வய லிற்பாய்ச்சல்
தேடியவடி நூறாகில் எத்தோஷமே மனைக்குமில்லை
ஆறியமயன் தானித்தை அருமையாய் உரைசெய்தானே. (397)

கோவில், குளம், கிணறு, தெருக்கோடி, அண்டைவீடு, வயல்வெளி முதலியவற்றின் குத்தற்பாய்ச்சலானது நூறடி அளவுள்ள நிலத்திற்கு எவ்விதத் தோஷமும் கிடையாது.

தேவரும்பிர மர்தாமுந் சிவனரியிவ ருஞ்சேரத்
திகழும் ஆலயங்கள் நூறுதெருக் கேணிமுப்பதாகக்
காவலரர சுமாடங் கருதுபத் தைந்துமாகக்
கனத்தமண் டபங்கள்சா லைகருதுசத் திரங்கள்பத்து
மேவரவடி கள்கண்டுவி ரும்பியேயமைத் தல்வேண்டும்
மேலுறுங்கட் டைகுத்தல் மேவிடாவன் ணஞ்செய்க
காவலர்நீ லத்தொட்டி கலக்குஞ்சந் தடிபத்தென்று
கனமுயர் மயனார்தா முங்கருணை யாற்கூறினாரே. (398)

சிவன், திருமால், மற்றும் தெய்வ ஆலயங்கள் நூறடியும், தெருக்கேணி முப்பதடியும் அரண்மனை மாடங்கள் ஐம்பதடிகளும், மண்டபங்கள், சாலைகள், சத்திரங்கள், பத்தடிகளும் விலக்கி மனை அமைத்தல் வேண்டும் மேலும் மற்ற குத்தல்களும் ஏற்படாத வண்ணம் வீடு அமைக்கவேண்டும். காவலர் ஆரவாரித்துக்கூடும் ஓய்வுக்கூடம் இருக்குமிடத்திலிருந்து பத்தடிகள் விலகி மனை அமைக்கக் குத்தல் ஏற்படாது.

அரனார்மதி லும்அரன்மதி லும்அறுநூறு அடிக்கப்புறமாம்
அரிமாமுகவன் அரிவாரபுத்திரன் அகோரபிடாரிக்கு அடிஎழுநூறாம்
பரனார்பாலன் ஆனைமுகன் பரவாழ்மாரி தெருவினடியில்
திரமாயெ முபதடிதள்ளி செய்யுங்கிர கம்செப்பிடுமே. (399)

கோவில் மதில், அரண்மனை மதில் இவற்றிற்கு அறுநூறு அடிகளுக்கு அப்பாலும் விஷ்ணு, ஐயப்பன், பிடாரிகாளி ஆலயங்களுக்கு எழுநூறு அடிகளுக்கு அப்பாலும், முருகன், வினாயகர், சிவன், மாரியம்மன் ஆலயங்களுக்கு தெருவின் கடைசியில் எழுபது அடிகள் தள்ளியும் வீடு கட்டிக்கொண்டால் மனைக்குக் குத்தல் தோன்றாது.

இல்லறமெடுக் குஞான்று எதிர்மனை இருந்ததாயின்
எல்லையுங் குறுக்கேயா னாலிதற்கது எதிரியில்லை
வல்லதோர் தெருவினேரே மறுமனை வேண்டொணாது
சொல்லியமனைக் குக்குற்றஞ் சூத்திரம் அறிந்துபாரே. (400)

வீடு கட்டும் போது எதிரில் வீடு இருந்தால் எல்லைகள் மாறுபாடாயிருந்தால் மனைக்குத்து ஏற்படாது தெருவின் எதிரில் நேர்மனை மறுமனை கூடாது எனவே சூத்திரங்களை நன்கு ஆராய்ந்து பார்ப்பாயாக.

ஆளும்வீட் டினருகினிலே கோவிலிருந்தால் சதாகவலை
நீளும்நான் குசந்தியுறில் நிலவுங்கீர்த்தி குறைபடுமே
நாளும்இரண்டு விடம்மறுத்து நகர்தல்முக் கியகருமமென
மீனியறிவின் மயனாரும் விளங்கவுரைத்தார் பயன்பெறவே. (401)

குடியிருக்கும் வீட்டருகில் கோவில் இருந்தால் எப்போதும் கவலையே இருக்கும், நாற்சந்திக்கு அருகாமையில் வீடிருந்தால் புகழ்மங்கும், மேற்கூறிய இவ்விரு இடங்களையும் நீக்கிமற்ற இடங்களில் மனை அமைப்பதே உத்தமமான வழியாகும், என மயன் உரைத்தனர்.

கருதியபூமி தண்ணில்கனத் தநீர்கிழக் குத்தெற்காம்
பெருகியசெல் வமுண்டாம் பிரமிக்கும் வடக்குமேற்கே
உருகியயுரை நீர்தாழ்தல் உத்தமம்மேல் நீர்காண
மருமலர்க்குழ ளாய்கேளாய் மனைவிதியறைந் ததென்னே. (402)

மனையின் கிழக்கு, தெற்கில் தண்ணீர் இருந்தால் செல்வமுண்டாகும், வடக்கு, மேற்கே தண்ணீர் இருக்கக் கூடாது என மயன் கூறகிறார்.

மணல் பரீட்சை சிற்பன் மண்ணைப் பரீட்சைசெய்தல்

மண்ணின் குற்றம் மயனறி வதல்லால்
இந்நிலத் தோரிதை யறிவார் களோ
நன்னிலத் தில்நா ளுந்தின வோரை
கொண்ணி டுமண்ணின் குற்றம் உரைப்பதே. (403)

மண்ணின்பால் உள்ள குற்றங்கள் மயனுக்கல்லால் வேறு எவருக்கும் புரியாது. நிலத்தின் கண் உள்ள குற்றங்கள் பற்றிக் கூறுவேன்.

சொல்லு வேன்மண் ணின்குட்சம் அறிந்திடு
நல்ல நாட்கள் நிலத்தினில் மெல்லுக
வில்லறங் கட்டகீழ் வெள்ளை தோன்றினால்
கொல்லை யாஞ்சுடு காடது ஆகுமே. (404)

மனையில் ஓர் நல்லநாளில் குழிகெல்லி மண் எடுத்துப் பார்க்கும் போது மண்ணானது வெண்மையாக இருந்தால் அம்மனை ஆகாது எனல். சுடுகாடாகிப் போகும்.

வெள்ளை மேலதாய் வெள்ளைப் பார்கீழதாய்க்
கிள்ளை யாங்குடி கெட்டிடுங் கட்டினால்
அள்ளை யாடை யதிசிவப் போடினால்
தள்ளு தள்ளு தயங்கா தேநீயுமே. (405)

மேலாக வெள்ளை மண்ணும், அதன்கீழ் வெள்ளைப் பாறைகள் தோன்றினால் குடிகெடும், சிவப்பான மண் தோன்றினால் தயங்காமல் அம்மனைகளை ஒதுக்கிவிடு வீடாகாது.

ஒருமண் ணாகவு தித்திட அம்மனை
யிருமண் ணாகவி ருக்கில் நன்மையாம்
இருமண் ணாகவி ருக்கில் நலங்கடீர்
உருவும் வாழ்வும் உதித்து விளங்குமே. (406)

மனையில் இரண்டுவித மண்இருந்தால் நலம் பயக்கும் அம்மனையினால் வாழ்வு நலம் பெருகும், நலம் பல உண்டாகும்.

எலும்பு போல்மண் ணிருந்திட அந்நிலங்
கரும்பு போல்மனை கட்டிட வேண்டினால்
அரும்பு பூத்தும் அவியும் அதுபோல்
சுரும்பு போல்சுகந் தூங்கிடும் நாளிலே. (407)

எலும்புபோல மண் இருந்தால் அந்த நிலத்தினில் எவ்வாறு திறம்பட மனை கட்டினாலும் அம்மனை பூப்பூத்து மாலையில் கருகிவிடும் மலர் போல மனையானது நசித்துவிடும்.

கூறும் பூமி குறிக்கும் வெளுப்புடன்
வீரும் தித்திப்பு விரும்பும் ருசியுடன்
பேருந் தாமரை பெருத்த பூவாசனை
ஏரும் பூமி இருக்க மிக நன்றே. (408)

மண்ணானது வெளுப்பாக இருந்தாலும் சுவை இனிப்பாக நல்ல ருசியுடன் இருந்தாலும் தாமரைப் பூவின் வாசனை இருந்தாலும் அம்மண் வீடுகட்ட ஆகும். நன்று

நன்றாம் ஆரியர் நவிலமா ளிகட்டில்
குன்றாது எந்நாளும் கூறக் குடும்பமும்
நன்றாய் ஓங்கு நலம்பெறு நற்சுகம்
பொன்தா மரையாள் புகுவள் நிசமிதே. (409)

சிற்பியானவர் நன்மனை என அடையாளம் காட்டிய இடத்தில் மாளிகை கட்டினால், அம்மனை செழித்து வளரும், மகாலெட்சுமி அம்மனையில் குடிபுகுவள் இது உண்மையே.

ஓதும் பூமி உயர்ந்த சிவப்புமாய்க்
காளாந் துவர் கருதிய பூமியும்
ஏதலாம் பரிஎழில் மணம் போலவும்
பூதலத் தில்புகழ் மாளி கட்டவே. (410)

மனையானது நல்ல சிவப்பு நிறமும், துவர்ப்புச் சுவையும் கொண்ட மண்ணாயும், பருத்தியின் மணமும் கொண்டிருந்தால் மனை கட்டலாம்.

கட்டினால் மாளி காசினி ராசர்கள்.
பட்டினம் வாழ் பகருங் குபேரன்போல்
கட்டம் நீக்கிக் காட்சி மிகப்பெற்றே
அட்டியில் லாது அருமையாய் வாழ்வரே. (411)

மேற்படி நன்மனையில் மாளிகை கட்டினால் குபேரன் போல நலமுடன் வாழ்வார்கள்.

சங்கு ஸ்தாபனம்

உத்தராயண முமாகஉயர்ந்தநல் வாரம் பார்த்துச்
சித்திரை மாதநன்னாட் சிறப்புடன் பார்த்துவானிற்
சத்தமாய்க் களங்கமில்லாச் சூரியன் விளங்கும்போது
நத்தியேயவ் விடத்தில் நவிலுவேன் இதுகேளே. (412)

உத்தராயணத்தில், சித்திரை மாதம் நல்ல கிழமையில் (சுபவாரம்) வானத்தில் மேகம் மறைக்காத சுத்தமாய்க் கதிரவன் துலங்கும் போது சங்கு ஸ்தாபிக்க வேண்டும்.

ஒருதெண்டுக் கொருதெண்டே தானுண்மையாய்ச் சதுரமாக்கி
விரவியேமட் டங்கொண்டு விளங்கநீர் மட்டஞ்செய்து
பரவியநடு வின்வட்டம் பரவுமண்டலம் போல்வீசித்
திருந்தியசங் கையூன்றச் செயும்பர்மா ணஞ்செய்யே.. (413)

முழக்கோலில் ஒன்றுக்கொன்று சதுரத்திற்கு மட்டமாய் மண் வெட்டிப் பெயர்த்து அதன் நடுவில் வட்டம் ஒன்று செய்து அதனுள் சங்குதனைச் ஸ்தாபிதம் செய்ய வேண்டும்.

சங்கின் உயரமும் கனமும்

உத்தமசங் குக்கேதான் உயரமோர் முழமதாகும்
நத்தியவடி யிலாறு அங்குலம் நவிலக்கேளு
சுத்தமாயத் தலைக்கனந்தான் சொல்லுமங் குலமொன்றாகு
பத்தியாய்த் திரளநன்றாய்ப் பரிவுடன்கடைச் சல்செய்வாம். (414)

உத்தமமான சங்கிற்கு உயரம் 1 முழமாகும், அடிக்கணக்கில் 6 அடியாகும், தலைப்பாகக்கனம் 1 அங்குலம் இவ்வாறாகக் கடைசல் செய்து தயாரிக்க வேண்டும்.

சங்கு செய்யும் மரங்கள்

தந்தியின் கொம்புவாகச் சந்தனம் வன்னிதேக்கு
முந்திய புளியினோடும் உயர்கருங் காலிசெய்வாம்
விந்தையாய் இவையல்லாமற் வேண்டுபால் மரந்தானாகும்
அந்தமாம் வயிரத்தோடு மனமதோர் பரிவுசொல்வாம். (415)

யானைத்தந்தம், வாகை, சந்தனம், வன்னி, தேக்கு, புளி, கருங்காலி, இவைதவிர பால் உள்ள மரங்களும் ஆகும், நல்ல வயிரத்தில் தேர்ந்தெடுத்துச் செய்ய வேண்டும்.

தேவர் முதல் நான்கு சாதிக்கும் சங்கு செய் மரங்கள்

சந்தனந் தந்திக்கொம்பு தகைமைசேர் தேவர்க்காகும்
விந்தைசேர் மறையோர்க்கே தான்மிகுகருங் காலிவன்னி
சிந்தைசேர் மன்னர்க்கா குந்தேக்கது வைசியர்க்காம்
புந்திசேர் புளியினோடு புகலமை சூத்திரர்க்கே. (416)

தெய்வ ஆலயங்களுக்கு, சந்தனம், யானைத்தந்தம் முதலானவற்றிலும், பிராமணர்க்கு கருங்காலியிலும், வன்னி க்ஷத்திரியருக்கும், தேக்கு வைசியருக்கும், புளியமரம் சூத்திரருக்கும் சங்கு செய்யப் பயன்படும் மரங்களாகும்.

பாதச்சாயை

மேவுமுத் தரபாகத்து மிகுந்ததெட் சிணபாகத்தும்
ஆவவற் சாயலுண்டும் அந்தமண்டலத் தில்வந்த
ஓவியபுள் ளிரண்டிலோ டவேகிழக்கு மேற்கு
தாவியவந் நாள்தன்னில் தகைமையை அறிவாமென்றே. (417)

வடக்கு, தெற்கில் சாயலுண்டு, கிழக்கிலிருந்து மேற்காகச் சாயை ஓடும் அப்படிச் அவச்சாயை ஓடும் நாள் பற்றி அறிவோம்.

இரண்டுபுள் ளியின்பால்மீ தேயேகவேவெளி யில்நன்றாய்த்
திரண்டசேர்க் கயல்மீனாகச் சிறப்புடன் வ்சிப்பின்னும்
உரண்டதோர் மீனின்வாலின் முகத்தினுங் கூடுநூலை
இரண்டதை ஓடவாங்கியா கநூலிரண்டுஞ் சொல்வாம். (418)

வடக்கு, தெற்காயும், கிழக்கு மேற்காயும் ஓடும் சாயலானது மீனராசிக்குறிய வடக்கிழக்குச் சார்ந்து தென்மேற்கு வரை ஓடும் இந்த வகையாகச் சாயல்ஓடும்.

திறமைதெட் சணபாகத்தின் சிறந்ததோர் தேக்கின்மீதே
உறமையுத் தரபாகத்தே உத்தர பாகமீதே
முறமையாம் இரண்டிடத் தினுயர்ந்திடு நூலைப்பெற்றே
உறமுடன்கொள் ளுவாய்பின் உண்மையை விளம்புவேனே. (419)

தெற்குப் பாகத்தில் தேக்கினால் செய்த முளைக்குச்சியை இறுக்சி அதேபோல வடக்கிலும் இறுக்கி இரண்டிற்கும் நூல் கட்டி இப்படியாக மேடு பள்ளமில்லாமல் இரண்டு பகுதிகளையும் மட்டம் பார்த்து நிலத்தைச் சமப்படுத்திச் சமதளமாகச் செய்யவும்.

சாயல் மாதங்களின் விலக்கம்

மேவுவைகா சியோடு மிகுபுரட்டா சிரெண்டு
தாவவச் சாயலில்லை சாற்றுவேன் இதுகேளு
ஆவணி ஆணியோகும் ஐப்பசி மேடமாதம்
ஓவியசா யல்ரெண்டும் உண்மையங் குலமென்றோதே. (420)

வைகாசி, புரட்டாசி, இரண்டு மாதங்களுக்கும் அவச்சாயலில்லை, ஆனி, ஆவணி, ஐப்பசி, சித்திரை இம்மாதங்களுக்கு சாயல் இரண்டு அங்குலங்கள் என அறிவாயாக.

ஆடிகார்த்திகை யாங்கூனி யங்குலம் நான்குசாயல்
நீடுமார்கழி யுமாசி நிரைவர லாறுசாயல்
தேடுதைமாத மெட்டுந்திற மையங்குலஞ் சாயற்றான்
பாடலாம்புக ழைக்கூறப் பண்பிது பகருவேன். (421)

ஆடி, கார்த்திகை, பங்குனி மாதங்களில் நான்கு அங்குலங்களும், மார்கழி, மாசி மாதங்களில் சாயல் ஆறங்குலம், தை மாதம் எட்டங்குலம் சாயல் ஓடும்.

சங்குஸ்தாபனம் அறிந்து மனைகள் கட்டுவதின் பலன்

சீருடன்மனை கள்தம்மைச் சிறப்புடன் சமனதாக்கி
நேருடன்கிழக் கறிந்துநின் றதோர்நூல் அறிந்து
பேருடன்மனை யைத்தாக்கிப் பெருகவேமனை கள்செய்தால்
பூரணமதி யம்போலப் பொருந்தியே வாழ் வார்தானே. (422)

மனைகளைச் சமப்படுத்தி கிழக்கும் நூலும் அறிந்து சங்குஸ்தாபனம் செய்தால் பூரணச் சந்திரன் போல நல்வாழ்வு வாழ்வர். மனையைச் சமன் செய்து மேடுபள்ளம் இல்லாமல் அதன் மையம் அறிந்து அவ்விடம் சங்குஸ்தாபன் செய்தல் முறையாகும்.

துருவலட்சணம்

கூறுகண்டது வீதியொழுங்கவே கூடுமேயறுபத் துநால்பங்குமே
ஆறுகண்டதும் அஞ்சுமூன்றாகியே அதற்குமத்தியில் அஞ்சுதூண்நாட்டியே
ஏறுகண்டகட கம்பமட்டமே எங்குமூன்றுகொள் ளியுங்கட்டியே
பாருகண்டது மூன்றுடன்சா மமும்பார்க்கவே வயதுமுத்தரமாக்கவே.(423)

மொத்த மனையிடத்தினில் அறுபத்து நான்கு பங்காகப் பிரித்து ஆறுபங்குகள் இரண்டு கடைசிகளும் கழித்து அதற்கடுத்துப் பதினைந்து இருபக்கமும் கழித்து மையபாகம் ஐந்தைக் கொள்ள வேண்டும். அத்துடன் மூன்று சேர்க்க எட்டுப்பாகம் மொத்தமாகக் கிடைக்கும்.

வேறு

அரக்கனுநம் ஸ்மைநோக்கித் தபசுதான்
அன்பாய்ச்செய் தான்றுருவ மவனுக்குத்
திருக்கயீந் துமகாமே ருவுச்சியிற்
சேரவைத் துநவக்கிரக ராசியும்
பருக்கநட் சத்திரஞ்சேர் வகைகளும்
பண்பாய்ச்சாட் டைகொண்டே கட்டிசுற்றிட
பெருக்கயீந் தோம்வடக் கிலிருமென்று
பெற்றநேர் மனைபேறதாய்ப் பார்ப்பதே. (424)

துருவனெனும் அசுரன் ஒருவன் தவம் இருந்து மகாமேருவின் உச்சியில் வாழ்ந்து நவக்கிரக ராசி மண்டலத்தில் சேர்ந்து நட்சத்திர நிலைகளும் பெற்று வடக்குத் திசையில் தங்கியுள்ளனன்.

தங்கமேறு வினுச்சியி னின்றுதான்
தவஞ்செய்யுந் துருவத்தை வடக்கதாய்
இங்கினின் றிடத்தானது தெற்கதாய்
ஏகநூலி லிலக்கண மதாகவே
சங்கொழுங் கினில்நிதா னஞ்செய்த
தறிமுளைக் காகவேநன் றாகச்சேர்த்துந்
திங்கள் செங்கதிராய் மனைவீதியும்
தேசமெங் குங்கட்டடம் செய்வீரேல். (425)

பொன்மயமான மேருமலையின் உச்சியில் தவமியற்றும் துருவத்தை இங்கு தெற்கில் வைத்த சங்கினை நிதானமறிந்து நூல்களின் சூத்திரப்படி அமைத்து கட்டிடங்கட்ட.

பார்த்துதென் வடலாகிய வாசல்மனை
பண்பதாய்த் துருவத்தா லேபோட்டிட
வேத்தகீழ் மேல்மனைவா சலுக்குத்தான்
இன்பமாய்ச் சங்குவைத்தே நீபார்ப்பது
மேத்துஞ்சங் கதுபன்னிரண் டங்குலம்
இன்பமே கனமப் படியாகவே
காத்துநான் குசெய்யூசி போர்பங்குமே
கனத்தவவ் வடிமூன்று பங்காக்கவே. (426)

தென்வடல் மனைக்கும், கீழ்மேல் மனைக்கும் பன்னிரண்டு அங்குலம் நீளமும் ஐந்து அங்குலம் கனமும் கீழ்பாகம் மூன்றங்குலமும் இருக்கும் படிச் சங்கு செய்ய வேண்டும்.

செய்துமே கடைந்தேதா னேபார்த்திடத்
தேவருக் குமனிதர்க் கரகவால்
உய்துமத் தியுமிச்சி மரமுமாம்
உயர்ந்தவா வணியைப் பசிதேளுமே
எய்தும்நன் மைக்கிசைந்த மாதங்களில்
இன்பவர நாள்பக்கமும் பார்த்துமேல்
செய்துபூமி யைமட்டத் தளமதாய்த்
திரமாய் இருகோல் அளவாகவே. (427)

இவ்வாறாகச் சங்கினைக் கடைந்து மனிதர், மற்றும், தேவருக்கும் அத்தி, இச்சி மரங்களும் ஆகும் ஆவணி, ஐப்பசி, கார்த்திகை

மாதங்களில் நல்லதொரு மாதத்தில் சுப வாரத்தில் (கிழமையில்) பூமியை மேடு பள்ளம் இல்லாமல் சமன் செய்து அளவு கோலினால் இரண்டு அளந்து வைப்பாய்.

ஆகவேமு கூர்த்தங்களுங் கொண்டுதான்
 அடியில் தங்கநவ ரத்தினமுமே
பாகமேசெய் துசங்குதை வைத்துநீ
 பண்பதாய் நிழல்கண் டபடிமைய
மேககால முமந்தியும் பார்த்துநீ
 ஈரிரண்டு கோலளவு நுனியடி
தாகமாய் இருகால்முனை மையத்தில்
 கண்டநூ லிடங்கீ ழுமேலுமாம். (428)

இப்படியாக நல் முகூர்த்தத்தில் கீழே தங்கம், நவரத்தினம் முதலியனவைத்துப் பரப்பி அதன்மேல் சங்கை வைத்து அதன் நிழல் விழும் இடம் கண்டு மேகம் இல்லாத மாலை நேரமும் கண்டு நான்கு அளவுகோல் அளவு மரங்களை ஊன்றி இரண்டிரண்டு கால்களுக்குக் குறுக்கே நூல் கட்டி அவை சேரும் மையம் கண்டு அந்த மையத்தில் சங்கைவைத்துப் பார்க்கும் போது

மேலதிந்துரு வம்முகவாச லுமிக்கநன்மை
 யெப்போ துஞ்செல் வந்தருஞ்
சேலதாய் ரவிவாசலும் அப்படிச்
 சேர்க்கையில் லாமல்தப் பிடில்கேடதாய்
கோலதாய முல்பார்த்தி டுமேலதில்
 கொண்ட நோயும திகமதிலுறும்
ஞாலமில் லாமகவுமழிந் திடுமாதி
 ஞாதிசத் துருவால்துன் பமெய்துமே. (429)

துருவத்தின் நிழலானது வாசல் பக்கம் சாய்ந்தால் மிக்க நன்மையுண்டாகும், அவ்வாறு இல்லாமல் மாறி இருந்தால் கேடுண்டாகும், நோயும், துன்பமும் உண்டாகும். இவை மனையானது சமதளமாயிருந்தால் குறைவராமல் இருக்கும் எனப் பொருள்.

ஆயாதிப் பொருத்தங்கள்

நாலுசாணில் கோலாக்கி நலமாயிரு பாரிசமளந்து
கோலிச்சதுரங் குழிமாறிக் குறையாததாய குழிமூன்றின்
மேலுமாறியிரு நான்கில்விரைந் துகழித்து மீதிகண்டு
சாலமனைக்கு வரும்யோனி தன்னையறிந் துதரிப்பதுவே. (430)

மனைக்குரியவன் கையால் நான்கு சாண் கொண்ட ஒரு அளவுகோல் செய்து நான்கு மால்களையும் அளந்து 1 சதுரம் என்பது 1 குழியாகக் கொண்டு மனையின் மொத்த குழியை மூன்றால் பெருக்கி 8 ஆல் வகுத்து வந்த மீதத்தினுக்கு மனைக்குறிய யோனியும் அறிந்து மனை அமைப்போமாக.

தரிக்குங்குழி ஒன்பதிலேற்றிச் சதுர்த்தற்கிந் தால்வரும்சாதி
பரிக்குமூவொன் பதிலேற்றிப் பரிவாய்நூறிற் கழிக்கவது
விரிக்கும்வய துமுப்பதின்மேல் விளங்கும்குறை யில்மிகவாகா
தெரிக்குமூன்று சாதியிலைந்தே னார்நாலாஞ் சாதிசெப்பே. (431)

குழியை ஒன்பதால் பெருக்கி நான்கால் வகுத்த மீதம் சாதியாகும். இருபத்து ஏழால் பெருக்கி 100 ஆல் வகுக்க வரும்மீதி வயதாகும், முப்பதுக்கு மேலானால் நற்பலனுண்டாகும், இதில் மீதி மூன்று அல்லது 5 வந்தால் அது சூத்திரமரபினருக்காகும் என்றறிக.

ஆயந்தனைநா லிற்பெருக்கிய தனையொன்பான் றனிற்கழிந்தே
ஈயுஞ்சேஷந் தஸ்கரமும் இசைந்தசத்தி தானியமும்
மாயும்புவி ராச்சியம்துக் கம்வறுமைவிளை வுசுகமிவையிற்
பாயுந்துக் கந்தரித்திர மும்பார்தஸ்கர மும்பலியாதே. (432)

ஆயத்தை 4ஆல் பெருக்கி ஒன்பதால் வகுத்த மீதி தஸ்கரமும், ஈவு தானியமும் ஆகும் இதன் பலன் மண்ணுலகில் துக்கம், வறுமை, விளைச்சல், சுகம், தரித்திரம் முதலியனவற்றை அறியலாம் எனவே மீதியானது குறைவாய் வர வேணும்.

வந்தகுழியை யிருநான்கில் மாறில்பன் னிரண்டாதாயம்
வந்ததொகை யைமூவொன் பான்தள்ளவ ருநாளாகுமது
முந்தமும்மூன் றிற்பெருக்கி முடிப்பதுளவோன் செலவாகும்
பிந்துமுனிவோர்க் கிந்தபடி பெருகுங்கிழமை பெறுமிதுவே. (433)

ஆயத்தை 8ஆல் பெருக்கி 12ஆல் வகுத்த மீதி ஆதாயம், 3ஆல் பெருக்கி ஒன்பதால் வகுத்த மீதி நாளாகும், 3ஆல் பெருக்கி 10ஆல் வகுத்த மீதி விரையம் ஆகும், 9ஆல் பெருக்கி 7ஆல் வகுத்த மீதி வாரம் (கிழமை) ஆகும்.

இதுவேவாயக் குழியொன்பதி லேற்றிமுப்பதி னுக்கிந்தால்
பொதுவேபக்கம் நான்குபன்னிரண் டில்பொருந்துசே டம்ராசியதாம்
சதுர்வேதியர்க் குச்சிங்கமனை தருமன்னவர்க் குக்கஜமனையாம்
மதுவைசியர்க் குக்கருடம னைமற்றோர்நாக மனைவளமே. (434)

ஆயக்குழியை 9ஆல் பெருக்கி முப்பதால் வகுத்த மீதி பக்கமாகும், 4ஆல் பெருக்கி 12ஆல் வகுத்த மீதி ராசியாகும், பிராமணருக்குச் சிங்கயோனி மனையும், சத்திரியருக்கு யானை யோனிமனையும், வைசியருக்கு கருடயோனி மனையும், சூத்திரருக்கு சர்ப்பயோனி மனையும் என்றறிக.

சந்திர நேத்திரம்

வளமேபரு திமுதலாகவ டித்துக்கூட் டிமுற்றித்து
உளமேவரு நாளுடன்கூட் டிவுறவாய்த் துரகமுதலெண்ணே
தனமாயொன் பானோர்கண் ணாந்தவறாறீ ராறிருகண்ணாம்
மளவாயாறுங் கண்ணில்லை மனையைத்தள் ளுவகையிதுவே. (435)

ஞாயிறு முதலாக எண்ணி மனைகோளும் நாளானது எத்தனையாவது வந்ததோ அந்தத் தொகையை மூன்றாக்கி சூரியன் நின்ற வீடுமுதல் சந்திரன் நின்ற வீடு வரை எண்ணிக் கண்ட தொகையால் வகுத்த மீதி 9 ஆனால் ஒருகண்ணும், 12 வந்தால் இரண்டு கண்ணும், மற்றவை குருட்டு நாளும் என்றறிக.

வேறு

அருக்கனார் கிழமையாதி நின்றவக்கிழ மையாய்ந்து
பெருக்கிமூன்றத னின்பெற்றமா முதற்கழித்துப் பின்னை
இருக்குநாளொன் பானோர்கண் பன்னிரண்டிரு கண்காணும்
தருக்கில்லாப் பின்னாளா றுங்குருடுசந் திரற்கேயாகும். (436)

ஞாயிறு முதலாக எண்ணி மனைகோளும் நாளானது எத்தனையாவது வந்ததோ அந்தத் தொகையை மூன்றாக்கி சூரியன் நின்ற வீடுமுதல் சந்திரன் நின்ற வீடு வரை எண்ணிக் கண்ட தொகையால் வகுத்த மீதி 9 ஆனால் ஒருகண்ணும், 12 வந்தால் இரண்டு கண்ணும், மற்றவை குருட்டு நாளும் என்றறிக.

ஆதாயபலன்

வெல்லிடும்யோ கம்போகங் கீர்த்திவீரி யமேயாக்கம்
புல்லிடும் தருமஞானம் சத்தியம் பொருளிலாபஞ்
சொல்லிடும் லாபம்நன்றாம் தொகையைந் தாறுபத்தும்
இல்லாமல் லாபம்வந்தால் இடர்மிகும் பகையுஞ்சேரும். (437)

யோகம், போகம், கீர்த்தி, வீரியம், ஆக்கம், தருமம், ஞானம், சத்தியம், தனலாபம் முதலியன முன்னம் கூறிய ஆயக்கணக்கில்

ஆதாயத்தில் வந்த மீதித் தொகையானது ஐந்து, ஆறு, பத்து வந்தால் லாபம் மற்றவை இடறும், பகையும் உண்டாகும் என்பதாம்.

விரயபலன்

ஏழொன்பான் ஐந்துமூன்று மீந்தபூர ணமேநன்றாம்
சூழ்ந்திடு மகவுலாபம் சுகிர்தமாம் நன்மையுண்டு
புகழொன்று இரண்டுநான் காறெட்டுப்பத் துங்கொண்டால்
வீழ்கனல் மரணஞ்சார் நோய்விரோதங் களர்த்த நாசம். (438)

5, 3, 7, 9 இந்த எண்கள் மீதியாக வந்தால் நன்றாகும், புத்திர லாபமுண்டாகும், 1, 2, 4, 6, 8, 10 வந்தால், மரணமும், நோயும், பகையும், நாசங்களும் உண்டாகும்.

வாரபலன்

வாரநாள்கொள் ளும்போதும திபுதன்வியா ழன்வெள்ளி
சீரிதாய்ச்சிறப் புமுண்டாகுஞ் சேய்சனிஇர விவந்தால்
பாரினில் அர்த்தநாசம் பலபிணிகல கஞ்சாரும்
சூரியஜென் மவாரமாகி டில்குணம் உண்டாமே. (439)

வாரத்தில் திங்கள், புதன், வியாழன், வெள்ளி வந்தால் சிறப்புண்டாகும், சனி, செவ்வாய், ஞாயிறு வந்தால் நாசமும், பிணி, கலகமும் உண்டாகும்.

பக்கபலன்

ஒன்றுநான் கிரண்டுமெட்டு மொன்பதும்பதி நான்காகா
நின்றிடில் பக்கம்தீதாம் நிலைவலி கொண்டபோது
கன்றிடில் மிகவுந்தீதாம் கலைவளர் பக்கத்தேனும்
சென்றபிற் பக்கத்தேனுஞ் செய்கபின்னி ரட்டைதீதே. (440)

பக்கமிதி 1,4,2,8,9,14 வந்தால் தீதாகும் இவை வளர் பிறையின்போது தீது வளர்பிறை அல்லது தேய்பிறை எதுவாயினும் 2 மீதிவந்தால் மிகவும் தீமையாகும்.

இராசிபலன்

சாற்றியவு தயராசிதன் னைநீர்பகுந் துகாணில்
போற்றிய மகரந்தீதாம் புகழ்தரும் மற்றதெல்லாம்
மாற்றிடும் மகரந்தன்னில் மனையினா ளுற்றதாகில்
மாற்றிடு மனைதானென்ன வறைந்தனர் ஆசில்நூலோர். (441)

இராசியில் வந்த மீதியை மேடம் முதலாக எண்ணிய போது மகரம் தவிர மற்ற இராசிகள் வந்தால் உத்தமமாகும், அப்படி மகரம் வந்தால் அம்மனையை மாற்றுக

அமிச-வமிசபலன்

தோகைசேர் குழலாயங் கிஷம்சொல்லிடி லொன்றுமாறம்
வாதைசேர் ஏழுமெட்டும் வரும்பிணிமிகப் பொல்லாது
போதருமற் றதெல்லாம் புகழ்தரு மிகவுநன்றே
வோதுமே ஒற்றையாகில் உத்தமமென் றோதினாரே. (442)

அங்கிஷத்தின் (வமிசம்) மீதி 1,6,7,8 வந்தால் பொல்லாதவையாகும் பிணியுண்டாகும், மற்றவை நலம் தரும், அதிலும் ஒற்றைப் படையான எண்ணாகில் மிகவும் நன்றாகும்.

வயது - யோனிபலன்

சாதியாயித னினுண்மை தருயோனியொற் றைநன்றாம்
பேதியாதிரட் டைதீது பெற்றிடுமா யுள்சாற்று
கோதிலாரைந் திற்குள்ளாய் குறைந்திடில் மிகப்பொல்லாது
தாதுசேர்குழ லாய்பத்துப் பொருத்தமுந் தாமுநன்மை. (443)

யோனியில் ஒற்றைப்படை எண் வந்தால் நன்றாகும், இரட்டை வந்தால் தீதாகும் ஆயுள் குறைவுண்டாகும், 6, 5 வந்தால் அதற்கும் கீழ் உள்ள எண் வந்தாலும் பொல்லாது. தேன் மலர்களைக் கூந்தலில் அணிந்த பெண்ணே 10 வந்தால் மிகவும் நன்றாகும்.

நட்சத்திரபலன்

அசுபதிவிஜ யஞ்செய்யும டுப்பனல் வியாதிரோணி
திசைமுழுது ஆளுவன்மீன் ஜெயம்பெறுசெங் கைச்செல்வம்
வசையிருபூ சம்யோக மரணமா யிலியமாகும்
மசகெலி மக்கட்பே றுபூரமும்சண் டைதானே. (444)

அசுவினி, பரணி, கிருத்திகை, ரோகிணி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், முதலிய நட்சத்திரங்களில் மரண பலனாம், ஆயில்யம், மகம், புத்திரசம்பத்தும், பூரம் நட்சத்திரம் சண்டையும் தரும்.

உத்திரநிலை மையஸ்தம் யோகமாம் பயறுரோகம்
புத்திரப்பேறு சோதிபணி தருஞ்சுளகு புத்தேள்
விற்றியாங் கேட்டைசெல் வம்வியாதியாம் மூலம்பொய்கை
சத்துருமிகவே ஆடித் தழைத்திடும் செல்வந்தானே. (445)

உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை முதலியனவற்றின் பலன், தனலாபமும், வியாதியுமாகும், மூலம், பூராடம், சத்துருபயமும், செல்வச் சேர்க்கையும் தரும்.

திருநிறை ஓணம்விட்டம், சோதனஞ் செக்குச்செல்லும்
தருவனா னாழிசண்டை தருவெந்தாய் வெற்றித்தோணி
பெருகிய வியாதியென்று பேசினார் மனைக்கு முன்னோர்
வரிவழி உடையமாதே மயனுமே உரைத்தார் அன்றே. (446)

திருஓணம், அவிட்டம், சதயம், முதலியன செல்வம்தரும், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி நட்சத்திரங்கள் வந்தால் வியாதி என்றும் மயன் உரைத்தனர்.

ஆயாதியினால் வந்த நட்சத்திரத்தினால் அம்சம் கண்டு பலன் கூறுவது நரபதியம்ச பலன்

அசுபதிமக மேமூலம் ஆனதோர்மனை யில்வந்தாற்
பசுபதிகிரு பையாலே பாக்கியம் லாபம்பாலர்
திசைபுகழ்க் கீர்த்தியுண்டாம் தெரிவையுஞ் சுகமதாகும்
வசையிதற் கொன்றுமில்லை வாழ்வென மயனுரைத்தார். (447)

அசுவினி, மகம், மூலம் இம்மூன்றும் கேது பகவானின் நட்சத்திரங்கள் இந்நட்சத்திரங்கள் வந்தால் பாக்கியமும், லாபமும், கீர்த்தியும், பெண்கள் நலமும், உண்டு, நல்வாழ்வும் தரும், குற்றம் ஏதுமில்லை என மயன் உரைத்தார்.

தஸ்கராம்ஸ பலன்

பரணிபூரம் பூராடம் பார்த்திடமனை யில்வந்தால்
திரணமாம் வியாதிசண்டை சேர்ந்தவர் பகையுமாகும்
விரணமும் பயனும்நாசம் மெல்லியும் புதல்வர்தானும்
மரணமேசெல வேஎய்தும் மனையாயம் தீதுதானே. (448)

பரணி, பூரம், பூராடம் இம்மூன்றும் சுக்கிரன் நட்சத்திரங்கள் இவை ஆயத்தில் வந்தால், வியாதி, சண்டை, நண்பர் பகை, விரயம், மனைவி, புத்திரபீடை, மற்றும் மரணத்திற்கு ஒப்பான கண்டங்களும் உண்டாகும்.

கிலீபாம்ச பலன்

உத்திரமுத் திராடமாரல், உண்மையாய் மனையில்வந்தால்
புத்திரன் சேதங்காலி போய்விடும் தனமும்பூமி
மித்திரனா லேதுன்பம் விளைவதுகுன் றிப்போகும்
மெத்தவே பகையதாகும் மெல்லிநோய் மயன்சொன்னாரே. (449)

கிருத்திகை, உத்திரம், உத்திராடம் மூன்றும் சூரியசாரமாகும் இவை ஆயத்தில் வந்தால் புத்திரநாசம், கால்நடைசேதம், தனநாசம், பூமிநாசம், நண்பரால் துன்பம், பயிர் விளைச்சல் குறைதல், மகளிர்பீடை, பகை முதலாய துர்ப்பலன்களே உண்டாகும்.

புத்தியம்ச பலன்

அஸ்தரோகணி யுமோணம் ஆகுமேமனை யில்வந்தால்
கர்த்தனார் அருளினாலே காலிசேய் பெண்டிரின்பம்
மெத்தவே தனமுங்கூடும் வெகுஜனம் நட்புமேதை
வித்தையும் புத்திமேலாம் விருத்தியாம் மயன்சொன்னாரே. (450)

உரோகணி, அஸ்தம், திருவோணம் மூன்றும் சந்திரசாரமாகும், இவை வந்தால் இறையவன் அருளினால், கால்நடை விருத்தி, மனைவி மக்கள் இன்பம், தனலாபம், அதிக மக்களின் நட்புண்டாகும், தொழில் லாபம் புத்திலாபம் முதலிய சுபபலன்களுண்டாகும்.

நிர்பீதியம்ச பலன்

சித்தரையும் மீனோடு செய்திடமனை அவிட்டம்
கொத்தவர் பகையுமாகும் கொடுந்துன்பம் மனையுமாகும்
நித்தமும் பிணிதப்பாது நேரிழைசங் காதோஷம்
அத்தியும் மிகவுண்டாகும் ஆகாதுமயன் சொன்னாரே. (451)

மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் மூன்றும் செவ்வாய்சாரம் இவை ஆயத்தில் நின்றால் மன்னர்பகையும், துன்பமும், தினமும் வியாதி பீடையும், பெண்களுக்குப் பேய் பிடித்தல் முதலிய துர்ப்பலன்களும், உயிர்ப்பயமும் உண்டாகும் என்று மயன் கூறினர்.

நிதனாம்ச பலன்

பிண்டியும் பூரட்டாதி பிணிவரும் விசாகந்தானும்
தெண்டனை மிகவுண்டாகும் திருடனால் பயமுண்டாகும்
பெண்டுடன் பிள்ளைசாவாம் பிசாசினால் அச்சமுண்டாம்
மண்டலவா சனாலே வருந்துன்பமயன் சொன்னாரே. (452)

புனர்பூசம், விசாகம், பூரட்டாதி மூன்றும் வியாழபகவான் சாரம் இவை ஆயத்தின்போது சேடமாய் வந்தால் அரசதண்டனை உண்டாகும், திருடர்பயம், மனைவி மக்கள் மரணமடைதலும், பிசாசுத்தொல்லையும், சர்ப்பங்களினால் துன்பமும் உண்டாகும்.

தானியாம்சபலன்

பூசமுமனு ஷந்தானும் புகழுத்திரட் டாதியோடு
நேசமாமனை யில்வந்தால் நீதியுநிதி யுஞ்சேரும்
சேவன்பூ சையுண்டு கீர்த்திபூ ஷணமுமுண்டு
வாசவன் போலவாழ்வு வருமென மயனுரைத்தார். (453)

பூசம், அனுஷம், உத்திரட்டாதி சனியின் சாரம், இவை ஆயத்தில் வந்தால், அரசலாபம், தனலாபம், திருமால் அருளால் லக்ஷ்மி கடாக்ஷமுண்டாகும், புகழுண்டு, ஆபரணச் சேர்க்கை உண்டாகும், இந்திரன் போலே வாழ்வான் என மயனுரைத்தார்.

சக்தியாம்ச பலன்

ஆதிரைசத யஞ்சோதி ஆகுமேமனை யில்வந்தால்
நீதியும் நிதியுஞ்சேரும் நேரிழை பூமிலாபம்
வாதனையொன் றுமில்லை மகவுடன் அரசர்நேசம்
ஓதினார் யோகம்மெத்த உண்மையாய் மயன்சொன்னாரே. (454)

திருவாதிரை, சுவாதி, சதயம் மூன்றும் இராகு சாரம் இந்த நட்சத்திரங்கள் வந்தால் அரசால் லாபம், தனச்சேர்க்கை, அரசாங்கநட்பு, பெண்கள் நலம், புத்திரலாபம், பூமிலாபம், மற்றும் யோகம் உண்டாகும் ஏதும் குற்றமில்லை.

பிரேஷியனம்ச பலன்

கேட்டையும் அரவந்தோணி கேடதுமனை யில்வந்தால்
சேட்டையும் அதிகமாகும் செலவது செலவுகாலன்
வேட்டலும் அதிகமாகும் வியாதியாம் மனைவிசாவாம்
காட்டும்இத் துன்பமெல்லாம் கர்த்தனாமயன் சொன்னாரே. (455)

ஆயில்யம், கேட்டை, ரேவதி, மூன்றும் புதன்சாரம் இதில் ஆயம் வந்தால் துன்பமதிகரிக்கும், வீண்செலவு, மரணபயம், வியாதி, மனைவிமரணம், முதலான துர்ப்பலன்களே உண்டாகும் என மயன் கூறினார்.

நேத்திரபலன்

ஒருகண்உண் டானநாளும் உத்தமம் ஆகுமிப்போது
இருகண்உண் டானதாகில் இன்பம் மனையும்வாழும்
இருகண்ணும் இல்லாவிட் டாலியற்றிய கருமந்தீதாம்
விசவியசுற் றத்தோடும் கெடுமரோ மனையும்வீணே. (456)

ஞாயிறு, திங்கள் 1 கண் உள்ள நாட்கள் இந்நாட்களில் மனை எழுப்பினால் நற்பலனேயாகும், புதன், வியாழன், வெள்ளி இருகண் உள்ள நாட்கள் ஆகும். இந்நாள் மிக நன்றாகும், சனி, செவ்வாய் குருட்டுநாள் இதில் மனை செய்யலாகாது.

இராசிப்பொருத்தம்

அகுருறுஞ்சென் மமூன்றைந் தாம்சறும் ஏழுமின்னம்
பகருமொன் பானும்பத்தும் பதினொன்றும் நன்மையாகும்
இகழ்தரும் இரண்டுநான்கு எட்டுமீரா றும்ஆறும்
புகலதுராசி தன்னிற் பொருத்தங்கள் உரைக்குங்காலே. (457)

அவரவர் ஜெனித்த இராசியிலிருந்து (ஜென்மலக்கினம்) எண்ணும் போது வந்த ஆயராசி 1, 3, 5, 7, 9, 10, 11 இராசிகள் வந்தால் உத்தமான பலனும், 2, 4, 6, 8, 12 முதலிய இராசிகள் அதம பலனும் செய்யும் என்பதாகும்.

தாரா பலம்

பிறந்தநாள் இரண்டு நான்கும் ஒன்பதும் எட்டுமாறுஞ்
சிறந்தசீர் வாதைமற்றுஞ் சீருடன் சம்பத்தாகும்
அறிந்தநூல் கற்றவல்லோர் அஞ்சுமூன்று ஏழுநீக்கிச்
சிறந்ததுமொழிந் ததெல்லாம் தினமெனப் பொருத்தந்தானே. (458)

ஜென்ம நட்சத்திரம் முதல் மனைகோலும் நாளின் நட்சத்திரம் வரை எண்ணும் போது 2,4,6,8,9 நட்சத்திரங்கள் சுபத்தாரா நட்சத்திரங்களாகும். செல்வவளம் பெருகும், 3,5,7 முதலிய நட்சத்திரங்கள் நீங்கலாய் மற்றவை உத்தமம் என்று கூறும் நூல்களும் எனவே அறிவால் தெளிந்து அறிக.

ஆயாதிப் பொருத்தங்கள்

எட்டுபன்னி ரண்டுமாக்க எழிலொன்பான் பத்தழிவுமாகும்
திட்டமூன்றெட் டுயோனி திருவெட்டுமூ வொன்பானாள்
வட்டமொன் பதிலேழ்வாரம் வளர்நாலொன் பதுவேயங்கிசம்
சட்டமொன் பதினால்சாதி திதியொன்பான் முப்பதாமே. (459)

முன்னமே கூறியபடி ஆயத்தில் வந்த மீதியானது 8, 9, 10, 12 வந்தால் தீயபலனும் இதில் யோனி 3, 8 வந்தால் உத்தமம், அங்கிசப் பொருத்தத்தில் 3, 8, 9 வந்தால் உத்தமம், 7, 9, 10 வாரம் வந்தால் நன்று, 4, 9 வந்தால் தீது, சாதிப் பொருத்தத்தில் 9 வந்தால் உத்தமம், திதியில் 9, வந்தால் வயது முப்பது ஆகும்.

ஆய்ந்தநான் குபன்னிரண் டிலழகிய ராசியாகும்
ஆய்ந்தபின் பெருக்கப்பின் னும்வருவதற்கு ஈய்ந்த சேடம்
மீந்ததுபலன் அதாகும்விரும் புவாரறிந் தோர்மெய்யில்
தோய்ந்தவேல் விழியினாளே வயதுதான் சொல்லலுற்றேன். (460)

இராசியில் 4, 12 சுபமாகும், இராசியில் வகுத்தபின் வந்த மீதம் சுபபலன் தரும். அதாவது இராசிப் பொருத்தத்தில் ஆயத்தில் வந்த இராசி மீதம் 4, 12 ஆனால் உத்தமம்.

மனைவரும் ஆயமெட்டும் மாமுதற் கியநாளாம்
இனிதுநாள் பெருக்கி நூறிலிட வயதேயாகும்
கனியொடு பாகுதேனோ கண்டெனு மொழியினாளே
நனிவருமய னார்சொற்ற நறுந்தமிழ் போற்றுவாயே. (461)

மனையின் ஆயத்தொகையை 8ஆல் பெருக்கி, 20ஆல் வகுத்த மீதம் நாள் ஆகும். இந்த நாளை ஆயத்தொகையால் பெருக்கி 100ஆல் வகுத்த மீதி வயதாகும். கனி, பாகு, தேன், கற்கண்டு கலந்த இன்மொழியாளே இவ்வாறே வயது காண்க என மயன் உரைத்தவாறே.

பார்க்குங்கிழக் குகொடியாகும் பக்கம்தென்கிழ்ப் புகையதுவாம்
தேர்க்குந்தெற்கு சிங்கமதாம் தென்மேல்மூ லைநாயாகும்
மேற்குசர்ப்பம் வடமேற்கு மிக்ககழுதை வடக்கானை
ஏர்க்குவடகிழ் காகம்இந்த எட்டும்யோனி வரும்வாறே. (462)

கிழக்குத்திசை கொடியோனி (கருடன்), தென்கிழக்கு தூமயோனி, தெற்கு சிம்மயோனி, தென்மேற்கு நாய்யோனி, மேற்கு சர்ப்பயோனி, வடமேற்கு கழுதையோனி, வடக்கு யானையோனி, வடகிழக்கு காகயோனி, இவ்விதமாகும்.

கொடியேயாகில் திருவாகும் கொலையேகாட் டும்புகையாகில்
நெடியசிங்கம் வெற்றியதாம் நிகமுஞ்சுவானம் குற்றமதாம்
படியசர்ப்பம் மிகநன்று பாரிற்கழுதை நோயாகும்
கடகமியானை மிகநன்றாம் காகம்பொல்லா தெனஉரையே. (463)

மனை செய்யும் திசை கொடியோனியாகில் செல்வம் தரும், தூமயோனி கொலை விழும், சிங்கயோனி வெற்றிதரும், சுவான யோனி (நாய்) குற்றமானது, ஆகாது, சர்ப்பயோனி, மிகநன்று, கழுதையோனி நோயுண்டாகும், யானையோனி நன்று, காகயோனி தீதாகும்.

அன்னைபருந் துவரிநாகம் ஆனைநன்று மனைசெறியின்
என்னைபூனை சுணங்கனிவை இயலுங்கருப்பை முயலாகா
தன்னைமுரணச் சாவுறுமே சாருமாட்சி மிகநன்றாம்
மன்னேவாழ்நாள் ஐம்பதினுள் வாழ்நாள்குறைதல் மனைக்காகா. (464)

கருடன், சிங்கம், சர்ப்பம், யானை யோனிகள் நன்று அவ்வியோனிகளின் திசைகளில் மனைசெய்யலாம், நாய், பூனை, முயல், யோனிகள் ஆகாவாம் தீயபலன் தரும். அவரவர் ஜன்ம இராசிக்குரிய திசைகளில் மனை கட்டுதல் யாவற்றிலும் உத்தமம், அவ்வாறு தெரிந்து செய்தால் மனை ஆயுள் கூடும், மற்றவை ஆயுள் குறைவு எனவே கூடாது என்றவாறு.

முன்பதில் அருக்கன் வாரமுதலாக மூன்றுக்கிட்டே
அன்புடன் முதல்நாள் கூட்டியடவிலே எண்ணிநீக்கி
ஒன்பதுக்கு ஒருகண்ணாகும் உற்றபன்னிரண்டு கண்ணாம்
பின்பொடு ஆறுநாட்டம் பெட்பில்லை சோமனார்க்கே. (465)

ஞாயிறு முதல் அன்றைவாரம் (மனைகோலும் நாள்) வரை எண்ணிக்கண்ட தொகையால் ஆயத்தொகையைப் பெருக்கி மூன்றால் வகுத்த ஈவை எடுத்துக் கொண்டு மீதியைத் தள்ளிவிட்டு 9 வந்தால் 1 கண்ணும், 12 வந்தால் இரண்டு கண்ணும் 6 வந்தால் குருட்டு நாளாகும் இவ்வாறு கணக்கிட்டு கண் உள்ள நாளில் மனை செய்ய வேண்டும் என மயன் உரைக்கிறார்.

ஆயங்குறைந்து வியமிகுந்திட் டம்சம்ஆறென் றதுவரினே
தீயவாகும்என நீக்கித்தினமும் பொருந்தாத் தீநாட்கள்
சாயஅகற்றி வாரமதில் சனிசெய்ரவி தனைநீக்கி
ஏயமனைகள் செய்திட்டால் இன்பம்பொருள் சேய்இனிதுறுமே. (466)

ஆதாயம் குறைவாயும், விரையம் குறைவாயும் உள்ள நாட்களைத் தள்ளி ஆதாயம் மிகுந்த நாட்களைத் தெரிந்தெடுத்து அத்துடன், ஞாயிறு, சனி, செவ்வாய்க் கிழமைகள் நீக்கி மற்ற கிழமைகளில் மனைகள் செய்தால் இன்பம், செல்வம், புத்திர விருத்தி இனிது வளரும்.

ஆயாதிப்பொருத்தங்கள்

ஒட்டுநீள மகலம் முழத்தையும்
ஒன்றோடொன் றுடன்தாக்கக் குழியதாம்
இட்டவெட்டுடன் பன்னிரண்டு ஆக்கமாம்
இசைந்தஒன் பதும்பத்தும் செலவதாம்
முட்டுமூன்று டனெட்டுமே யோனியாம்
மூறுமெட்டு மூவொன்ப துநாளதாம்
வட்டமாநவ முப்பதும் பக்கமாம்
வகுத்தஒன் பதோடேழுங் கிழமையாம். (467)

மனையின் நீளத்தையும் அகலத்தையும் பெருக்க வருவது குழியாகும். இதுவே ஆயம் எனப்படும் ஆயத்தொகையை 8ஆல் பெருக்கி 12ஆல் வகுத்த மீதி ஆதாயம், 9ஆல் பெருக்கி 10ஆல் வகுத்த மீதி விரையம், 3ஆல் பெருக்கி 8ஆல் வகுத்த மீதியோனி, 8ஆல் பெருக்கி 27ஆல் வகுத்த மீதி நட்சத்திரம், 9ஆல் பெருக்கி 30ஆல் வகுத்த மீதி திதி, 9ஆல் பெருக்கி 7ஆல் வகுத்த மீதி கிழமையாகும்.

மத்தநான் குமீராறும் ராசியாம்
மறுத்தஒன்பதும் நால்வகைச் சாதியாம்
உத்தநான் குடனொன்பதும் அங்கிஷம்
ஓதும்மூவொன் பதும்நூ றுமாயுசு
பெத்தரும் மனைகோலிய வாறெலாம்
பெருக்கிப் பின்புகழித் ததைக்கண்டுதான்
உத்தமானதை முற்றிலுந் தள்ளியே
முன்புகோணத் தைமூர்த்தமாய்க் கொள்ளவே. (468)

4ஆல் பெருக்கி 12ஆல் வகுத்த மீதி ராசியாகும், 9ஆல் பெருக்கி 4ஆல் வகுத்து வந்த மீதி சாதியாகும், 27ஆல் பெருக்கி 100ஆல் வகுத்த மீதி ஆயுள், இப்படியாகக் கணித்து சுபபலன் தரும் விஷயங்களைத் தேர்ந்தெடுத்து நல்லவை அல்லாத தீயவை கலக்காத வகையில் கண்டறிந்து மனை செய்க.

கெற்பப்பொருத்தம்

சாண்நான்கு கோல்கொண்டு தப்பாமல் நான்கெல்லை
கோணாமல் இங்கே குழிமாறி - நாணாமல்
இப்பாரில் மானே இருநான்கிற் கீவீரேல்
கெற்பக் கிருகக் குணம். (469)

மனைக்குரியவரின் கைச் சாணுக்கு நான்குசாண் கொண்ட முழக்கோல் தயாரித்து நான்குபுறமும் அளந்து நீள அகலத்தைப் பெருக்கி வந்த தொகையை (ஆயம், குழி) 8ஆல் வகுத்தால் வரும் மீதி கெற்பம் எனப்படும்.

அஞ்சில் அரசாள்வர் ஆறாகில் அருந்துயரம்
மிஞ்சியமூன் றொன்றேழு வேள்வியாம் - துஞ்சாமல்
நாலெட்டு இரண்டு நாசமாம் அம்மனைக்கு
மேலெட்டே சொன்னார் விதி. (470)

கெற்பத்தொகை 5 வந்தால் அரசாள்வர், 6 வந்தால் பெருந்துன்பம், 1, 3, 7 வந்தால் வேள்வியாகும், 2, 4, 8 வந்தால் நாசம், இவ்வாறான பலனுண்டாகும்.

பூமலி நான்குசாண் பொலிந்த கோலினை
தேமலி மனைதனைக் கெல்லைத் தேடிய
தாமலி பூருவந் தழைத்த உத்தமங்
காமலி ஆயமாங் கணக்கின் சீரதே. (471)

மேற்படி கெற்பப்பொருத்தம் நன்றாக வந்தால்தான் மனையானது நிலைத்து நிற்கும்.

ஆதாயபலன்

சீர்பெறும் ஆயத்தைச் சேர எட்டினிற்
கூர்தர ஏற்றிக் குலவு பன்னிரண்டு
ஏர்தரக் கழித்திட ஒன்று இலக்கமே
ஏரும் ஆதாயம் என்றிசைத்த தந்தையே. (472)

ஆயத்தை 8ஆல் பெருக்கி 12ஆல் வகுத்த மீதமே ஆதாயம் இதன் பலன் வருமாறு

மேவிய ஒன்றிரண்டு ஏக போகமாம்
மேவிய திரிசதிர் கீர்த்தி சௌரியந்
தாவும் ஐந்தாறி னிற்தானி யம்தனம்
மேவும் ஏழெட்டி னிற்சுகம் மெய்ஞ்ஞானமே. (473)

1, 2 வந்தால் மிகலாபம், 3, 4 புகழ் சுகமுண்டாகும், 5, 6 தானிய, தனவிருத்தி 7, 8 சுகம், ஞானம் தரும்.

எட்டுடன் ஒன்றினிற்கு இயன்ற போகமாம்
மட்டருந் தசந்தனில் வசியும் அன்னுமே
எட்ட ஏகாதசி இனிய தாமமாம்
சட்டமாந் துவாதசி சமஸ்த நன்மையே. (474)

9 வந்தால் யோகமுண்டு, 10 வந்தால் வசியம், 11 இனிது கீர்த்தி தரும், 12 வந்தால் சகல சம்பத்தும் தரும்.

செலவின் பலன்

நன்மையாம் ஆயத்தை நவத்தில் தாக்கியே
பொன்னிய பத்தினிற் பொருந்த நீக்கினில்
அன்னிலை செலவதாம் அறிய ஒன்றினிற்
குன்னிய அனலிரண்டு ஏத்தங் குன்றுமே. (475)

ஆயத்தை 9ஆல் பெருக்கி 10ஆல் வகுத்த மீதம் 1,2 ஆனால் வளர்ச்சி குன்றும்,

குன்றிட மூன்றினிற் குலவு நற்செயம்
வென்றி சொனாலினில் விளங்கும் புத்திரர்
ஒன்றுவை ஐந்தினில் ஓங்கும் நற்செயம்
என்றனர் தரித்திரம் ஏழுக்கு என்னவே. (476)

3 வந்தால் வெற்றி, 4 வந்தால் புத்திரவிருத்தி, 5,6 வந்தால் வெற்றி, 7 வந்தால் தரித்திரம் முதலான பலன்கள் உண்டாகும்.

என்னவெட் டதனில் இலக்குமி வாசமாம்
பன்னிய நவத்தினில் பாலர் ஆவிபோம்
முன்னிய தசமதில் உத்தமந் தரும்
மன்னு எம்கோன் எடுத்துரைத்த வாசகம். (477)

8வந்தால் லக்ஷ்மி கடாட்சம் உண்டாகும், 9வந்தால் புத்திரநாசம், 10வந்தால் நற்பலன் உண்டாகுமென எம்தந்தை விசுவப்பிரமன் உரைத்த வாசகமாகும்.

யோனி பலன்

உரைத்த ஆயத்தை முரைந்து மூன்றினிற்
பொருத்தமாத் திரவட்ட மத்திற் போக்கிட
விருத்தமாய் நின்றது விளங்கும் யோனியன்
தரித்தியாய் இக்கரன் கறையஞ் சேர்ந்ததே. (478)

ஆயத்தை 3ஆல் பெருக்கி, 8ஆல் வகுத்த மீதி யோனியாகும் இதன் பலன் வருமாறு.

சொற்றதில் ஏகமாஞ் சுபுத்திர பாக்கியம்
மற்றிரண் டதனில் மாகனகம் மன்னுமே
சுத்தமூன் றரிச்செயம் துலங்கு நாலினில்
கத்து சுவானம் பிணிகாட்டும் என்பரே. (479)

1 மீதம் வந்தால் புத்திரலாபம், 2 வந்தால் பொன் சேர்க்கை, 3 வந்தால் வெற்றி, 4 வந்தால் வியாதியமாகும்.

காட்டிய ஐந்தினில் சர்ப்பங் கனதனம்
பூட்டிய நத்தையர் நாதம் பொன்னிருங்
கூட்டிய ஏழ்கஜம் குலவு நற்சுகம்
நீட்டிய ஆயசம் எட்டில் நிஷ்பலம். (480)

5 வந்தால் பொன்பொருள் சேர்க்கை, 6 வந்தால் பொன் லாபம், 7 வந்தால் பெண்டிர்சுகம், 8 வந்தால் நிஷ்பலன் பலனில்லை என்பதாம்.

நட்சத்திர பலன்

பலமதாம் ஆயத்தைப் பாரில் எட்டினில்
நலமதாய் ஏத்திமூ ஒன்பது ஆகுநாள்
அலகிடக் கழிக்க வேவஸ்வ நிற்பயன்
இலகியம் உசியம் வந்தெய்தும் என்பரே. (481)

ஆயத்தை 8ஆல் பெருக்கி 27ஆல் வகுத்த மீதம் நட்சத்திரமாகும் இதன் பலன் வருமாறு

என்பதாமிரண் டுசொற்கு இனிய மாரணம்
பின்புகார்த் திகைப் புகையதாம் அனல்
வன்புறும் உரோகணி வசியம் எய்துமே
அன்புறும் ஆண்டலே அதிக நாசமே. (482)

அசுவினிக்கு நற்பலனும், பரணிக்கு மாரணமும், கார்த்திகை, ரோகிணிக்கு வசியமும் மிருகசீரிடம் அதிகநாசமும் முதலான பயன்தரும்.

ஆதிரை செயம்புணர் பூசம் பாலராம்
ஓதிம் பூசங்கால் ஒழியும் பாம்பிது
பேதமில் வேள்வி வனாள் விளங்கெலி
பேதமில் உத்தமம் என்று பேசினர். (483)

திருவாதிரை, புனர்பூசம், புத்திர விருத்திதரும், பூசம், கால்நடைநாசம், ஆயில்யம் புகழ்தரும், மகம், பூரம் இவை உத்தம பலனும் தரும்.

பேசிய உத்திரம் பெருகு தன்மையின்
நாசமாம் அசனநோய் நணுகும் என்பிணி
பாசமாம் சோதி சுகம்பராய் விடும்
நேசம் இலாமொரம் நேரும் துன்பமே. (484)

உத்திரம் நற்பலன்தரும், அஸ்தம் நோய் உண்டாகும், சித்திரை பீடைதரும், சுவாதி சுகவீனம் உண்டாக்கும் விசாகம் துன்பம் தரும். இவ்வாறாக பலன்களுண்டாகும்.

நேர்பெறும் அனுஷம் உத்தமம் நேரிலா
சூரிய கேட்டை கொடுமை மூலத்தில்
பாரிய பிணியுறும் வாவி ஆவிபோம்
மூரியற் கடைக்குளம் உதவும் நற்சுகம். (485)

அனுஷம் சுபபலன்தரும், கேட்டை தீய பலன்தரும், மூலம் மனைவி ரோகம் தரும், பூராடம் மரணபயம் தரும், உத்திராடம் நற்சுகம் தரும்.

சுகமெலாம் துரோணமாம் துன்ப வட்டமே
அகமனை அகற்றும் போரது சௌபாக்கியம்
மிகபூரட் டாதிகால் மாவீடு அற்றுப்போம்
சகமல ரேவதி சாரும் ரோகமே. (486)

திருவோணம் சுகம்தரும், அவிட்டம் துன்பம்தரும், சதயம் சௌபாக்கியம் தரும், பூரட்டாதி, உத்திரட்டாதிக்கும் மனைவி நாசம், ரேவதிக்கு வியாதியுண்டாகும்.

வாரபலன்

சாகுமுன் ஆயத்தை தனித்த ஒன்பதில்
ஏறவே பெருக்கி ஏழுக்கீய்ந்த மீதியை
வாரமான தினகரன் வருங்கு ரோதமே
சேரவே சோமனிற் செழிப்பு உண்டாகுமே. (487)

ஆயத்தொகையை 9ஆல் பெருக்கி 7ஆல் வகுத்த மீதியை காணுகையில் ஞாயிற்றுக் கிழமை வந்தால் குரோதம் உண்டாகும், திங்கட் கிழமை வந்தால் செழிப்பு உண்டாகும்.

ஆகுமங் காரகன் அர்த்த நாசமாஞ்
சேகரம் புந்தியிற் சேரும் சௌக்கியம்
வாகமாங் குருவின் இன்மன்னும் புத்திரர்
சோகநீர்ச் சுங்கனில் சொல்லும் நன்மையே. (488)

செவ்வாய்க்கிழமைவரில் அர்த்தநாசம், புதன்கிழமை வந்தால் சௌக்கிய முண்டாகும், வியாழக்கிழமை வந்தால் புத்திரவிருத்தி, வெள்ளிக்கிழமை நற்பலனும் உண்டாகும், சனிக்கிழமை வந்தால் தீயபலனும் உண்டாகும், குரோதமும் உண்டாகும்.

அமிசபலன்

சொல்லிய சனியில் சொரிகு ரோதமாம்
நெல்லலாம் ஆயத்தை நேர்ந்த நாலிற்செய
துல்லிய நவத்தினிற் தொடர்ந்த காலரும்
நெல்லல் அங்கிடம் எனநிகழ்த் துவார்களே. (489)

ஆயத்தொகையை 4ஆல் பெருக்கி 9ஆல் வகுத்தமீதி அங்கிஷம் அல்லது அமிசம் ஆகும். இதன் பலனைக் கீழே காணலாம்.

நிகழ்த்திய தடகரம் நெற்பர ஆததாம்
புகழ்த்தி யேபோகித் துநன்மை சத்தியில்
விகழ்த்தும் ஆரோக்கியம் வீசும் தானியம்
தொகுத்து லாபம் எனச்சொல் லுவாரரோ. (490)

1க்கு, தடகரஅங்கிஷம் தீயது, 2 வந்தால் சோகரணங்கிஷம் சுபபலன்தரும், 3 வந்தால் சத்தியங்கிஷம் சுபபலன்தரும், 4 வந்தால் பூஷரங்கிஷம் தானிய விருத்தியுண்டாகும்.

நல்லதே நெற்பதி நவில்கில் இற்பனில்
சொல்லிய கலகமாம் சோரனில் பிருதி
எல்லலாம் இராகு தன்னடுத்த மத்திபம்
புல்லுபேர் ஏசியன் புகலும் உத்தமம். (491)

5 வந்தால் குரு அங்கிஷம் நற்பலனுண்டு, 6 வந்தால் சுக்கிர அங்கிஷம் சுபபலன், 7வந்தால் சனி அங்கிஷம் தீயபலன், 8 வந்தால் இராகு அங்கிஷம் மத்திப பலனும், 9 வந்தால் கேது அங்கிஷம் சுபபலன்தரும்.

வமிசபலன்

புகன்ற ஆயத்தை நான்கொன்பதிற் பூட்டியே
விகன்ற மன்னவர் வைசியர் வெற்றியாம்
அகன்ற சூத்திரக்கு ஆகுந் துயரங்கள்
புகன்ற கோகிலம் போல்மொழி மங்கையே. (492)

ஆயத்தை 9ஆல் பெருக்கி 4ஆல் வகுத்த மீதியில் மன்னர், வைசியர் (2,3) வந்தால் வெற்றியாகும், சூத்திரர்வந்தால் துயரங்கள் வரும், பிராமணர்க்கு சுபபலனும் உண்டாகும்.

திதிபலன்

என்னுமுன் ஆயத்தை ஏய்ந்த ஒன்பதில்
பன்னிய முப்பதில் கழிக்கச் சேடமே
கன்னிய முதற்றிதி நவமி ரெண்டினில்
அன்னியத் திருதிகை அணுகு நற்செய்தியாம். (493)

ஆயத்தை 9ஆல் பெருக்கி 30ஆல் வகுத்த மீதியைக்காண பிரதமை, நவமி (1,9) வந்தால், திருதியை திதிக்கும், நற்செய்தியுண்டு.

ஜயமிலை சதுர்த்தியைச் சார்ந்த பஞ்சமி
நயமுள சிறுவர் ஆனந்தை ஆயுளாம்
வயமுள சஷ்டியேல் வயங்கும் முற்பலன்
வியம்பிணி நவந்தனில் விரியும் நாசமே. (494)

சதுர்த்தி, பஞ்சமி வந்தால் ஆயுள், சிறுவர் மகிழ்ச்சியுமுண்டாகும், சஷ்டி திதி வந்தால் முன் சொன்ன பலனேயாகும், நவமிக்கு பிணியும், நாசமும் உண்டாகும்.

சார்தசம் பாக்கியந் தங்கே காதசம்
சீரும் மத்திபம் துவாதசம் செம்மலாம்
பார்திர யோதசி பகர்சம் பத்ததாம்
ஓர்பதி நான்கு அதேலுறும் நாசமே. (495)

தசமிக்கு பாக்கியமுண்டாகும், ஏகாதசிக்கு மத்திப பலனும், துவாதசிக்கு அரச வாழ்வுண்டாகும், திரயோதசிக்கு சம்பத்துண்டாகும், சதுர்த்தசிக்கு நாசமும் வரும்.

ஏறிய பூரணை இயம்பும் உத்தமம்
கூறிய குருவும் மேற்கொள் கையாமிதில்
ஏறிய இருகதிர் சேர ஓர்திதி
வேறியல் இலையென விளம்பி னாரரோ. (496)

பௌர்ணமிக்கு உத்தமபலனும், அமாவாசைக்கு மத்திய பலனும் உண்டாகும்.

இராசிபலன்

நாட்டிய ஆயத்தை நாலில் ஏற்றியே
ஈட்டி முன்னான் கினுக்கீய நின்றது
கூட்டிய ஒன்றதேர் குலவும் மேஷமாம்
ஈட்டிய இரண்டினில் ரிஷபம் ஆகுமே. (497)

ஆயத்தை 4ஆல் பெருக்கி 12ஆல் வகுத்த மீதியை மேஷம் முதலாகக் கணக்கிட ரிஷபம் 2 ஆகும்.

மதித்த மூன்றுடன் மன்னு நண்டெனிற்
கதித்த நற்செயம் அரிவசியம் காட்டுமே
துதித்த பெண்ஞானமாம் துலாமும் யோகமாம்
படித்த தேள்நலந் தரும்பலவு நன்மையே. (498)

மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம் முதலிய நான்கு ராசிகளும் சுப பலன், வெற்றிதரும், சிம்மம் வசியமுண்டாகும், கன்னி ஞானம்தரும், துலாம் யோகம் தரும், விருச்சிகம் பல நன்மைகளும் தரும்.

நன்மை யேமகரமும் நாளும் நல்குமே
துன்மை யேகும்பம் முன்தினமும் கூட்டுமே
வன்மை இலாதமீன் வளமை ஈயும்என்
றன்மை சேர்முனி வர்கள்சாற் றினாரரோ. (499)

மகரம் நன்மையான பலன் தரும், கும்பம் சுப பலன்தரும், மீனம் பலவளமும் தரும் என நூல் வல்ல முனிவர்கள் உரைத்தனர்.

ஆயுசு பலன்

ஓதும் ஆயத்தை மூவொன்பதில் ஏற்றியே
நீதியாய்த் தசந்தனிற் கழிக்க நின்றது
சோதிசேர் மனையினுக்கு ஆயுள் சொல்லுமே
வேதையா நாலுபத் தைந்து மெய்யிதே. (500)

ஆயத்தை 27ஆல் பெருக்கி 100ஆல் வகுத்த மீதி மனையின் ஆயுளாகும், 45 வந்தால் அற்பாயுள் ஆகும், ஆயுள் குறைவாகும்.

எண்பதில் உயர்ந்ததும் ஏய்ந்த உத்தமம்
இன்பதில் அதிற்கழிவு இயலுந் துன்பமென்
றன்புரை நாடிய ஐயன் முன்னமே
தென்புற உரைத்தனன் தெளியும் உள்ளமே. (501)

80க்கு மேல் வந்தால் உத்தம பலனும், அதற்குக் கீழ் வருவன தீயபலன்தரும்.

பஞ்சக பலன்

சேர்ந்ததோர் பஞ்சவந்தான் சிறப்புடன் இல்லாவிட்டால்
ஆய்ந்ததோர் களவுபோகும் அக்கினிபயம் உண்டாகும்
வாய்ந்ததோர் மரணமுண்டாம் வருமது ராசதெண்டம்
பாய்ந்திடும் மனைபாழென்று பகர்ந்திடும் மயநூல்தானே. (502)

பஞ்சகம் சரியாக அமையாவிட்டால் களவுபோகும், அக்கினிபயம் உண்டாகும், மரணபயம், அரசதண்டனை, மற்றும் மனை பாழ்படும் என மயன் அருளினார் (பஞ்சகம் பார்க்கும் முறை பஞ்சாங்கங்களில் உள்ளன)

பஞ்சகம் கொஞ்சமேனும் பழுதறச் செய்வானாகில்
சஞ்சலம் இல்லையங்கே சகலமும் விருத்தியாகும்
சுந்தர மயனார்சொன் னார்சோரமே இல்லையென்க
பிஞ்ஞகன் அருளினாலே பிசகில்லை வாழ்வார்தானே. (503)

பஞ்சகம் பார்த்துச் செய்தால் ஏதும் தீயபலனில்லை, சகல சம்பத்தும் உண்டாகும், என மயன் கூறினார் சிவனருளால் குறைவின்றி வாழ்வார்கள் என்றவாறு.

மனைக்கு அடிக்கும் முளையின் அளவுநீளம்

பகர்ந்ததோர் முளைக்குநீளம் பதினாறு விரற்றொடங்கி
இகழ்ந்ததோர் விரலாலேற்றி இருபத்து நான்குங்கொள்ள
மகிழ்ந்தவை கடாவும்போது வாஸ்துவின் வயிற்றில்கெல்லில்
உகந்துதன் மூலைதன்னை உற்றுமுன் இடமாய்த்தாக்கே. (504)

முளைக்கு நீளம் 11 அங்குலமாகும், 24 அங்குலங்கள் வைப்பதும் உண்டு. மனை கொள்ளும்போது வாஸ்துபுருடனின் வயிற்றில் கெல்லி மூலைகளைக் கவனித்து முளை இறுக்க வேண்டும்.

முளைவது மொழியிற்பத் தோர்விரற்கடை நீளந்தானும்
விளைவுறு வித்துநான்கு விரலளவாகக் கொண்டு
வளைவறக் கிடக்குமந்த வாஸ்துவின் வயிற்றிற்கெல்லி
முளையது தென்மேல்மூலை முதலிடமாகத் தாக்கே. (505)

11 அங்குல நீளமாய் முளைக்குச்சி செதுக்கி வளைவாகக் கிடக்கும் வாஸ்துவின் வயிறு இருக்கும் பாகமறிந்து இங்கு தென்மேற்கு மூலையில் முதல் குச்சியை 4 அங்குலம் கீழே புதையும்படியாகத் தாக்கி இறுக்குவாய்.

முழமாஞ் சாண்பிடிகள் இருமுழம் இரண்டாம்
முழிவிரல் வளஞ்சேர் மூவெட்டு அங்குலமாம்
குழல்சேர் பற்றுவது பாசியுடல் சாணொருநாள்
பத்தமே மத்திபத்தில் ஆழிமுழவரை இரண்டே. (506)

இரண்டு முழத்திற்கு இரண்டுமுழம் சதுரமாகப் பள்ளமானது 24 அங்குலம் தோண்டி அந்தப் பள்ளத்தில் தச்சு செய்ய வேண்டியது.

எழுவிரல் நீளம் எட்டி முளையடிக்கும்
மழவடி யார்கள்மனை முளையடிக்கும் மையம்
குழற்கரி கூத்தனொடு காத்துட னேமத்து
அழற்பெரிய ஈசனருள் அங்கிவளர் செப்பே. (507)

21 அங்குல இடை வெளியில் முளைக் குச்சிகளை இறுக்க வேண்டும் தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு, வடகிழக்கு எனும் நான்கு மூலைகளில் முளைஅடிக்க வேண்டும். இவ்வாறு முறையாகச் செய்த மனையில் ஈசனருள் நிலைத்திருக்கும்.

முளையடித்ததின் பலன்

முளைதனை இடத்தில்வாங்கி மூலமேகுரு வேயென்று
தளர்விலா ஆசிகூறி தாக்கியெட்டு அடித்ததுக்
கிளைவளர் கயிறுபூட்டிக் கிளர்ந்தபால் மஞ்சளிட்டே
அளைப்பிலா முளையடிப்பதாம் எனமயனுஞ் சொன்னார். (508)

முளைக்குச்சியை இடதுகையில் பிடித்து சுத்தியலை வலது கையில் ஏந்தி, வினாயகரையும், தட்சிணாமூர்த்தியையும் வணங்கி இம்மனை சிறந்து வாழட்டும் என்று நல் ஆசிகள் கூறி அடித்து மஞ்சள் நூல்கட்டி, பால், மஞ்சள் நீர் முதலியன அபிஷேகித்து அடிக்க வேண்டும். எட்டுமுறை சுத்தியால் அடித்து இறுக்க வேண்டும் என்றவாறு.

அடித்ததோர் முனியினுச்சி அலறிடில்இல் லம்பாழாம்
பிடித்ததோர் முனையின்கண் டம்பிளக்கிலோ பிணிவந் தெய்தும்
படித்ததோர் மாதேசிந்திப் பறந்திடிற் பதிசாவாகும்
செடித்தஅம் முளைதெரிக்கில் செல்வமும் சிதறுமென்னே. (509)

அடிக்கும் முளையின் உச்சிப்பாகம் பிளந்தால் அம்மனை பாழாகும், முளையின் நடுப் பகுதி தெரித்தால் நோய் உண்டாகும், சிறாய் தெரித்து விழுந்தால் மனைக்குரியவன் மரணமடைவான். முளைக்குச்சி இரண்டாகப் பிளந்து போனால் செல்வம் அழியும்.

வேறு

போற்றிதென்மேற் குமூலைஇடமதாய்ப் பொலிஇடக்கையிலே
முளைவாங்கியே
சாற்றிலாமூலக் குருவைநினைந்துதான் தாழ்மையில்லாமல் வாழ்பவரென்றுமே
ஏற்றியெட்டு அடிஅடித்தேபலன் இன்மைதப்பிப் பிளந்திடிலேபிணி
பாற்றியுச்சி அலறிடப்பாழதாம் பலங்கள்தாமுமே கண்டேயுரைத்திடே(510)

முதலில் தென்மேற்கு மூலையில் (நிருதிமூலை) இடக்கையில் முளைக்குச்சியையும் வலக்கையில் சுத்தியலையும் பிடித்து வினாயகர், தட்சிணாமூர்த்தி, விசுவகர்மா இவர்களை வணங்கி இம்மனையும் மனைக்கதிபதியும் குறைவன்றி வாழ வேண்டும் என வாழ்த்தி எட்டுமுறை அடித்து இறுக்க வேண்டும், அப்போது முளைக்குச்சி பிளந்தால் பிணியுண்டாகும், உச்சிப் பகுதி தெரித்தால் மனைபாழாம் இவ்வாறான பலன் நிமித்தங்களைக் கண்டு கூறுவாயாக.

இட்டுநட்டு முளைதான் ஒடிந்திடில்
இன்மைஇல் லாதகேடு மிகுதியாகும்
தொட்டுநட்ட கயிறது பூட்டியே
துணிவதாய் விகுவாக விழுந்திடில்
நட்டுவைத்த முளைபிடுங் கேகுதல்
நடுமுளைக் கண்ஒடிதல் அறுதலுஞ்
சட்டமாய் மனையாள் எசமானுக்குத்
தாட்சிஎன்று ஈசனாரன்று உரைத்ததே. (511)

அடிக்கும் முளைக்குச்சி ஒடிந்திடில் கேடு மிகுதியாய் வரும், கட்டிய மஞ்சள் நூல் அறுந்து விழுந்தால், முளை பிடுங்கி விழுந்தால், முளை நடுப்பகுதியில் ஒடிந்தாலோ, அல்லது தெரித்தாலோ, அம்மனைக்குரியவன் மற்றும் அவன் மனைவி ஆகியோருக்கு மிக்கத் தாழ்வான பலன்களே உண்டாகும் என்று அன்று சிவபெருமான் உரைத்தார் என்றவாறு.

உரைக்கவே எஜமானவன் நாளுக்கு
உற்றஅம் மனைதேறிய கோலுக்கு
வரைக்களந்து கீழ்மேலும் அறிந்துநீ
வண்மையாய் முளைமட்டும் அடித்திடுநீ
நிரைக்குத் தெற்குவடக்கு உள்ளகோலுக்கு
நெறிமுறைப் படிகண்டபடி தான்முளை
உரைத்தகோ லுக்குத்தென் மேலும்அப்படி
உற்றகோல் அளந்தே முளைபூட்டிடே. (512)

மேற்கூறிய விஷயங்களை உணர்ந்து பொறுமையாய் முளைதனை அடிக்க வேண்டும் நான்கு கோல்களுக்கும் சம அளவில் அளந்து செய்வாயாக.

பூட்டிமேற்கு கிழக்கும் அறிந்துநீ
புனிதமாக மனைக்கு நூல்போட்டிடு
வீட்டுக்கு உள்ளமனையான் கோலுக்கு
வீதிகண்டு மனையைச் சதுரித்துத்
தாட்டுமூலைக் குமூலைக் கயிறிடு
தக்கஒத்த குறைச்சல் இல்லாமலே
வாட்டமில் லாமலேமனை தாபித்து
வண்மையாய் ஈசனார்தம் பதம்பணி. (513)

மனைக்குரியவனுக்கு உருவாக்கிய முழக்கோலால் மனையை அளந்து வீதி, மற்றும் கழிக்கவேண்டிய இடங்களைக் கழித்து அஸ்திவாரம் அமைக்க வேண்டிய இடத்தைக் கயிறு கட்டி ஸ்தாபிக்கவும்.

பணிந்துகீழ் மேல்மனை வாசலுக்குத்தான்
பதியுமே வலமுந்தியே பார்த்திட
அணிந்துதென் வடலாகிய வாசலுக்கு
அன்புபெற்று இடமுந்தவே பார்த்திடு

தணிந்தஉள் அளவேகோலது இரண்டுமே
தக்கமூன்று மேதான்வைத் தமைத்திடு
குனிந்துநீளத் தையொன்பது அமைத்திடங்
குன்மமா வலம்பூத மேவாசலே. (514)

கிழக்கு மேற்கான மனைக்கு வலப்பக்கம் முதலாக அளந்து சதுரிக்க வேண்டும், தெற்கு வடக்கான மனைக்கு இடதுபக்கம் முதலாக அளந்து சதுரிக்க வேண்டும், உள்ளளவுக்கு இரண்டல்லது மூன்று கோல் அளவு அமைத்து அளக்கவும் மொத்த நீளத்தை ஒன்பது பாகமாக்கி மையத்தானத்தில் வாசற்கால் அமைத்திடுக.

முழக்கயிற்றின் லட்சணம்

பட்டுநூல் தருப்பையொடு பகருமால் விழுதுபண்பார்
நட்டனைப் பனையினாலும் நவிலுநூல் தேவரோடும்
திட்டமா மறையோர்தானுஞ் சிறந்தக்ஷத் திரியசூத்திரர்
மட்டிவிழ் வைசியரோடு வகையதுபிரி வுசொல்லே. (515)

பட்டுநூல், தருப்பைப்புல், தென்னைநார், பனைநார், கயிறு முதலியவற்றில் பட்டுநூல் ஆலயங்களுக்கும், தருப்பையினால் செய்த கயிறு பிராமணருக்கும், சத்திரியருக்கும், வைசியருக்கும், சூத்திரருக்கும் எவ்வகைக் கயறு என்பது கீழே வருகிறது.

வேறு

தேவர்க்குப் பட்டுநூலாம் சிறந்தமுப் புரியதாகும்
மேவியமறை யோன்றர்ப்பை விளங்குமுப் புரியாமன்றை
காவியால் விழுதுமூன்று கவல்புரி வசியநூலாந்
தாவுசூத் திரன்பனைநார் தாவிரு புரியதாமே. (516)

தெய்வ ஆலயங்களுக்கு மூன்று புரிகொண்ட பட்டுநூலும், பிராமணர்களுக்கு தர்ப்பைப் புல்லினால் மூன்று புரிக்கயறு. சத்திரியர்களுக்குத் தென்னை நார்க் கயறு (ஆலம்விழுதும்) மூன்றுபுரி, வைசியர்களுக்குப் பருத்தி நூலினால் இரண்டுபுரியும், சூத்திரருக்குப் பனைநாரினால் செய்த இரண்டு புரிக் கயறும் ஆகும்.

வேறு

மறையவர் தெர்ப்பைநா லின்வான்புரி மூன்றுகொள்க
விறையவன் கதம்பைதன்னால் இசைந்தமுப் புரியேகொள்க
பெருமென வைசியருக்காகில் பெண்ணைநார் புரியிரண்டே
அறிவுடன் சூத்திரர்க்கே அத்திநார் புரியிரண்டே. (517)

பிராமணருக்குத் தர்ப்பையால் மூன்றுபுரிக் கயறும், சத்திரியருக்கு தென்னை நார்க்கயறு 3 புரியும் வைசியருக்குப் பனைநார் 2 புரியும், சூத்திரருக்கு அத்திநார் 2 புரியும் என்க.

முழக்கயிறு மண்வெட்டி சகுனம்

மனைகோல வந்த மண்வெட்டி தானும்
முனைமுறிந் திடினும் முனைபறித் திடினும்
இனமுறச் சேர்க்கும் இசைகொடி அறுதலும்
வனைகுழ லாளே வந்திடுந் துன்பமே. (518)

மனைகோலக் கொண்டு வந்த மண்வெட்டியின் முனை முறிந்தாலும், முனை தெரித்தாலும், கயறு அறுந்தாலும் துன்பமே உண்டாகும்.

கொட்டு முளைபறித்தல் கோத்தகயிறு அறுதல்
நட்டமுளை பறித்தல் நடுவேமுறிந் திசைத்தல்
விட்டவா சலடைத்தல் வேறேவா சல்விடுதல்
சட்டமான மனையாளுந் தாமேசாவாள் தப்பாதே. (519)

முளை தெரித்தல், கயறு அறுதல், முளை துண்டித்துப் போதல், முன்னம் வைத்த வாசலை அடைத்து, வேறு வாசல் விடுதல் இவற்றினால் அம்மனைக்குரியவன் மனைவிக்கு மரணம் வரும்.

வேறு

பத்தியாங்கயிறு அற்றுவிடுகுதல் பண்டறைந்தமுளை யைப்பறிக்குதல்
மத்திமத்தினால் வாசல்விடுகுதல் மாறிப்பின்னர் முளைகளைநாட்டுதல்
புத்திகொடிரும் போதங்களைந்திடும் பூவின்மாதுமணங் களுங்குன்றிடும்
சத்திமாமுனி வேதத்தினூன்முறை தப்புமோயிது தாரணிதன்னிலே. (520)

கயறு அறுந்துவிடுதல், முளையைப் பறித்து எடுத்து வேறிடத்தில் இறுக்குதல், மத்திமப் பாகமறிந்து வாசல் விடாமல் பின்பு மாற்றி முளை அறைதல் இவற்றால் தீயபலன்களே உண்டாகும் என வேதமுணர்ந்த முனிபுங்கவர்கள் உரைத்த உரை தப்பாது என்றவாறு.

வேறு

கொட்டுமண் முறியலாகா கொடுஞ்சிறால் அறுகலாகா
நட்டகால் சாயலாகா நடுபடை இடியலாகா
வெட்டிய மரங்களோசை வீறிட்டு விழவுமாகா
கட்டியமனைக் குக்குற்றம் கனகுறி அறிந்துகொள்ளே. (521)

அஸ்திவாரத்தின் பள்ளத்தில் மண் பெயர்ந்து வீழ்தல், முளையின் சிறால் அறுபடுதல், நட்டமரம், சாய்தல், வெட்டிய மரங்கள் ஓசையுடன் "கிரீச்" சிட்டு விழல், இப்படியானவை மனைக் குற்றம் உண்டாக்கும் இவை அறிந்து கொள்வாயாக.

மனையளக் குநூலறுந்தால் வந்துவிடுஞ் சாதன்
முனைமுளை யேநீங்கி விடின்மூசல் - மனையெசமான்
சிற்பிதவறி விடின்சேர்க் கவேவீ தலென்ப
கற்புடைய நூலோர் கருத்து. (522)

மனைஅளக்கும் நூல் அறுந்தால் மரணமுண்டாகும், முனைமுளை உடைந்தால் மரணமே சிற்பி தவறு செய்தால் இத்தகைய துயரம் நேரும் எனவே கவனம் தேவை.

மனை சதுரித்துத் தாபித்தல்

தற்பருஷமே கிழக்குத் தானகோரம் தெற்காகும்
இப்புவியில் மேற்குசத் தியோகொதம் - ஒப்புடனே
வாமம் வடக்காகும் மையமே ஈசானம்
நேயமுடன் நீயறிந்து கொள். (523)

கிழக்குத்திசை தற்புருஷம், தெற்குத் திசை அகோரம், மேற்குத்திசை சத்யோகாதம், வடக்குத்திசை வாமதேவம், மையப்பகுதி ஈசானம் என அறிக.

நீகோலா ஈசானம் நிச்சமாய்ச் சொல்லுகிறேன்
வாகான நடுவதல்லால் மற்றொன்றும் இலையென்றேன்
பாகான மாருதத்தே பலபிணிகள் நோவாகும்
தாபாக்கினி வளர்ந்தால் ஆற்றரியாது காலிகளே. (524)

ஈசானம் என்பது நடுவாம் பாகமே அதை நிச்சயமாய்க் கூறகிறேன் வாயுமூலை பல பிணிகளையே தரக் கூடியதாகும், அக்கினி மூலையால் கால்நடைகள் சேதமுண்டாகும்.

காலி தரியாது கன்னிமூலை வளர்ந்தால்
கோலில் பிணியுந் துயராகும் - கோலியே
ஈசான் யமூலை யினிவளர இல்லறத்தில்
பேயாங் குடிகொண்டு பின். (525)

கன்னிமூலையில் மனை ஒதுங்கினால் கால்நடை சேதமாகும், பிணி, துயர் உண்டாகும் ஈசான்யமூலையில் ஒதுங்கினால் அம்மனையில் பேய்கள் குடிகொள்ளும்.

ஈசான்ய மூலையென்று இழுத்துவைப் பார்நீயும்
வாசமுடனே வளர்ந்தால் மாடுசேரா - நேசமாய்
நற்சதுர மாகவேதான் எடுத்தால் நல்லறங்கள்
உச்சிதமாய் வாழ்வும் ஓங்குமே. (526)

ஈசான்ய மூலையில் மனை சார்ந்தால் கால்நடை விருத்தி இரா, செல்வம் சேராது, மையமாய் நற்சதுரமாய் மனை செய்தால் நல்ல சுபபலன்களுடன் வாழ்வும் சிறக்கும்.

தன்னைச் சதுரமதாய்த் தானெடுத்தால் அம்மனைக்கு
வின்னாகுறை ஒன்றில்லை மேலவா - பின்னையே
உச்சிவரும் மேடும் உத்தமமே ஈசான்யம்
மெச்சியிடு என்றார் மயன். (527)

சதுரமாய் மனை எடுத்தால் அம்மனைக்குக் குறைவராது மற்றபடி மூலை ஒழுங்குகளில் ஒதுங்கியிருந்தால் தீமைவரும் எனவே ஈசான்யமெனும் மையப்பகுதியில் மனை எடுக்கவும்.

ஈசான்யம் தானறியார் இப்புவியில் உள்ளோர்கள்
பாசமுடன் வார்த்தை பசப்புவார் - கூசாமல்
முற்றமே ஈசான்யமும் மேடுதான் சரியாய்
மற்றுநிறுத் தென்றார் மயன். (528)

இம்மண்ணுலகில் பலருக்கு ஈசான்யம் மையத்தானம் என்பது தெரியாத காரணத்தால் பசப்பு வார்த்தைகளைக் கூறுவர். எனவே மையம் ஈசானம் என்றறி என உரைத்தனர் மயனே.

மயனுரை யைத்தட்டி மனை எடுப்பாரேல்
கயநோய் பிணியில் கலப்பர் - செயமாகுங்
கண்ணிருந்த பேருக்குக் காட்டிமனை கோலாய்
விண்ணும் மண்ணுள்ளார் விளக்கு. (529)

மயன் உரைத்ததை மறந்து மனைசெய்தால் சயரோகம் எனும் பிணி உண்டாகும் எனவே அறிவுப்பூர்வமாகப் புரிந்து கொண்டவர்களுக்குக் காண்பித்து விளக்கி மனை செய்க.

மன்ன முகமே கிழக்காக வயத்தின்மேல் முப்புறமும்
இனமாக தெற்குடனே மேல்வடக்கும் நினைவாக
எண்ணியந்த மனைதனிலே என்றிசையும் நன்று
இன்னிதம் செய்யமயன் இனிமையுடன் இசைத்தனரே. (530)

மனையானதைக் கிழக்குமுகமாக அமைத்து வாஸ்து புருடனின் வயிறு இருக்கும் இடத்தின் மீது தெற்கு மற்றும் வடக்குப்புறம் கழித்து சரியான இடத்தில் வாசற்கால் வைத்திட வேண்டும் என்று மயன் இனிமையுடன் உரை செய்தாரே.

வேறு

அஷ்டதிக்கு சதுரங்கோ ணாமலும்அள விட்டநூல்நா டிபிசகாமலும்
கஷ்டப்பட் டுகருத்துட னளந்துகட்டிய மனைமாளிகை அமைத்திடிலஷ்ட
லட்சுமிவா சம்பொருந்துவாள் அளவிட்ட கனதானியம் பெருகிடும்
இஷ்டமுடன் ஆடுமாடு பெருகிடுமென் றீசனுமே யன்றுரைத்ததே. (531)

எட்டுத் திக்கிலும் மனையானது இழுத்துக் கோணலாக இல்லாதபடி மிகத்துல்லியமாக அளந்து சரியான சதுர அளவில் மனை சதுரித்து அமைத்தால் அம்மனையில் மகாலட்சுமி வாசம் செய்வாள், தானியவிருத்தி, கால்நடை விருத்தி முதலான நற்சுகங்கள் பெருகிடும் என்று சிவபெருமான் உரைத்ததே ஆகும்.

ஈசான்ய பார்வையி முத்துவைப்பார் இந்நூலை
ஈசான்யம் கண்டவர்கள் இவ்வுலகில் - தேசாகப்
பேசாதளத் துப்பெருக்க முழம் ஆக்கிக்
கூசாமல் கோணீரைக்கால் கொள். (532)

ஈசான்யத்தில் மனை செய்ய வேண்டும் என்பது பற்றி உலகியலார் அறிந்திலர் ஈசான்யம் நடுப்பகுதியாகும் எனவே அங்கு சரியான முழத்தில் மனை அமைத்து நற்பலன் அடைக.

சொல்லுந்துருவம் நிலையறிந்துசுடர் கம்பங்கொண் டெதிர்நிறுத்தி
நெல்லுங்கடைக்கால் நூல்கட்டநிசம் கோவிற்கிரண் டங்குலமாகும்
நல்லவந்தணர்க்கு ஒன்றேமுக்கால் நவில்க்ஷத்திரியர்க்கு ஒன்றரையாம்
சொல்லும் வைசியர்க் கொன்றேகால்சூத் திரர்மற்றோர்க் கொன்றாமே. (533)

துருவத்தின் நிலை தெரிந்து கம்பம் நிறுத்தி கடைக்கால் ஸ்தாபனம் செய்ய கோவில்களுக்கு 2 அங்குலம் நூல்கட்டவும்,

பிராமணருக்கு ஒன்றே முக்கால் அங்குலமும், சத்திரியருக்கு ஒன்றரை அங்குலமும், வைசியருக்கு ஒன்றேகால் அங்குலமும், சூத்திரமரபினருக்கு ஒரு அங்குலமும் நூல் கட்டுவதாம்.

கோடிப்பாய்ச்சலினால் உண்டாகும் பலன்

கோடியே கோடிபாயில் குலமகள் தனக்குமாகா
நீடிய எதிரிவாசல் நேரடி வாசலாகா
வாடிய முடியதாக்க வலமிடம் பார்க்கலாகா
கோடிய மனையைப்பற்றிக் கொண்டவர் லோபராவர். (534)

மனைக்குக் கோடிப் பாய்ச்சல் ஏற்பட்டால் மனைக்கதிபதியின் மனைவிக்குக் கேடுண்டாகும். தனது மனை வாசல் எதிரிமனையின் வாசலுக்கு எதிரில் இருந்தாலும் தோஷம் உண்டாகும். மனைக்குத்தல் ஒதுக்க வகை செய்யாமல் மனை கட்டுபவர் லோபியாவார்.

காணமாங் கோடிப்பாய்ச்சல் கருதியகட் டைப்பாய்ச்சல்
விரணமாய் ஒன்றுக்கொன்று விலகிடாதுள் ளேநின்றால்
சொர்ணம்போம் உயிரும்போகும் சோர்ந்திடும் கன்றுகாலி
பாரணமா மொழியினாளே பதிமனை பாழதாமே. (535)

மனைக்குப் பாய்ச்சல்கள் ஏற்பட்டால் பொன் பொருள் சேதமாவதுடன், உயிரும் போம், கால்நடைகள் நாசமாகும், அம்மனையும் பாழ்படும்.

சல்லியம்

அப்போது அளந்தவடி இருபத்து எட்டுடனே
தப்பாமற் கூட்டித் தகராதி - செப்பமுடன்
பன்னிரண் டான்மாறிப் பதினாறுக் கீய்ந்தபலன்
உன்னிய வர்க்கமெல்லாம் உறை. (536)

மனை கோலும் போது அளந்த மொத்த அடியுடன் 28 கூட்டி 12ஆல் பெருக்கி, 16ஆல் வகுத்த மீதம், ஈவின் பலன் உரைப்போம்.

உள்ளதுரை யுந்தலை யோடெலும் பீட்டி
வள்ளோடு சுள்ளிமகிழ் தெய்வம் - தெள்ளரிய
சாம்பல் கரிசவம் தானியம்பொன் கற்றவளை
யாங்கோடு நாய்சா டியாம். (537)

மனையின் கீழ் உள்ள தலைஒடு, எலும்பு, ஓட்டம் (முனி, காளி முதலானவை), தெய்வம், கரி, சாம்பல், புதைகுழியா என்பது, தானியம், புதையல், நாய் எலும்பு முதலான சல்லியம் கூறுவேன்.

தரித்துக்கண்ட சல்லியத்தில் தவளைபிணங்கள் சாம்பலுடன்
சிரித்துப்புரம் மூன்றெரிப்பது போல்தீராத்துய ரம்தீதுளதாம்
பரித்துத்தெய்வம் பசிநோய்பெரிதாம் பலமும்நமுக விடும்பெரிதே
கருத்துக்கிசைந்த பொன்சாலைக் கண்டால்மனை யுங்கனம்பெறுமே.(538)

மனையைக் கெல்லிக் கண்ட தவளை, இறந்தவர் எலும்புகள், சாம்பல் முதலாயவை சிவன் சிரிப்பால் முப்புரம் எரித்தது போல் பெருந்துயரம் உண்டாக்கும். தெய்வம் இருப்பதாய் அறிந்தால் பசிப்பிணி யுண்டாகும். பொன் போன்ற புதையல் காணப்பட்டால் மனை வளம் பெறும்.

கனமாந்தலையோ டெலும்புகண்டால் கருமந்தவறும் கடிவிஷங்கள்
இனங்கள்குடி இருக்கும்வினையும் வெளவாலடைந்து மனைபமுதாம்
இனமாஞ்சாடி எலும்புகண்டால் அடைந்தகப்ப விஷந்தொடுக்கும்
மனமுங்கலங்கும் வறுமைபிணி மாறாத்துயரம் விளைந்திடுமே. (539)

மண்டை ஓடு, எலும்பு கண்டால், நல்வினை கெடும், விஷ ஜந்துக்கள் அங்கு குடியிருக்கும் மேலும் மனையில் வெளவால் அடையும் மனை பாழாகும். தலைமயிர், எலும்புகள் கண்டால் விஷந்தீண்டும், மனக்கலக்கம், வறுமை, பிணி, மாறாத்துயர் உண்டாகும்.

அரைவிளங்கும் நான்காக ஆயன் மேலேழா
அரைவரைந்து நாலேழ் அரையில் - பிறையினார்
நின்றவரை சல்லியமாம் நேரிறு ஆதியாய்
ஒன்றிவரச் சக்கரத்தை ஓது. (540)

மனையை 28 பாகங்களாக பிரித்து அதில் சந்திரன் மனை கோலும் நாளில் நின்ற இராசிக்குரிய திசையில் சல்லியம் இருக்கும். இதற்கான சக்கரம் வரைந்து பலன் காணுக.

கார்த்திகை நாளாதியாய் கண்டநால் ஏழரையுள்
சீர்தங்கு ரெண்டுவிட்டு மூன்றெண்ணிட பேர்த்துமேல்
நான்கைந்து மேலெண்ணி நல்லிரண்டு கீழெண்ணித்
தாங்கண்டு முன்வலமாய்ச் சாற்று. (541)

28 அறைகள் கொண்ட சக்கரம் ஒன்று வரைந்து அதில் இடது மேலிருந்து கீழாக ஒரு கட்டம் விட்டு ஒரு கட்டமாக கார்த்திகை நட்சத்திரம் முதலாக எழுதி பின் கீழிருந்து மேல் எண்ணி மீண்டும் இரண்டு கட்டம் கீழாகவும் இப்படியாகச் சக்கரம் எழுதுக.

ஒன்றிய முன்பின் கதிரோன் பகலிரவுள்
சென்றுவலம் சேரிசை வழியே - நின்றநிலை
ஆரல்மகம் அனுஷமவ் அவிட்டம் நாழியடை
ஒருமிரண்டே உரைக்கல் உற்று. (542)

சந்திரனுக்கு முன்பின்னாக சூரியன் நின்று அதுவும் கார்த்திகை, அனுஷம், அவிட்டம், பூரட்டாதியானால் சல்லியம் இருக்கின்றது என்று அறிக கதிரவனுக்கு முன்பகலும், பின் இரவும் எனலாகும்.

மனையையெழு நான்கறையாக வகுத்தேயாரல் முதல்வைத்து
முனையுங்கால் நாள்சென்றளவின் முகமேதென்பால் தலைகிழாய்
மனையுமிரவில் பாதிசென்றால் பதிவிட்டத்தை முதல்நாட்டி
அனையுங்குளம் பினபிசித்து அடவானித்து ஆகுமிதே. (543)

மனையை 28 அறைகளாகப் பிரித்து கார்த்திகை நட்சத்திரத்தை முதலாக வைத்து அதன் கால் பாகம் அதாவது 1 பாதம் வைத்து மீதியை அடுத்த அறையில் வைத்து எண்ணவும் அதில் இரவு நட்சத்திரப் பகுதியில் பாதிக்கு மேலானால் அவிட்டம் முதலாக எண்ணி மேற்கண்டபடியே எண்ணிக் கணக்கிட வேண்டும்.

ஆக்நாட்டு மனைதனிலே அரசனிருக்க ஆழமுண்டாம்
நாகம்சசி யோடுநிற்கவுடன் நாட்டுமிடத் தின்காரிவரும்
பாகந்தனி லேகரியுமியும் பட்டமரங்கள் சாம்பலுண்டு
மேகந்தரு சுக்கிரன்புதனும் முனைந்துகூடில் மிகநன்றே. (544)

உதய ஆருடத்தின்போது ஆருடலக்கினத்தில் வியாழன் இருந்தால் சல்லியம் ஆழத்தில் உள்ளது. சந்திரனுடன் ராகு அல்லது கேது கூடி நிற்கவும் இவர்களுடன் சனி சம்பந்தப்பட்டால் அப்போது சந்திரன் நின்றபாகத்தில் கரி, உமி, பட்டமரங்கள், சாம்பல் முதலான சல்லியம் இருக்கும். சுக்கிரனும், புதனும் சேர்ந்திருந்தால் சல்லியம் இல்லை.

நன்றாம் விளைந்த சந்திரனை நல்லோர்சேரின் வினையில்லை
குன்றாம்சசியை குசன்சேரில் கொடுஞ்சூனியமும் கொலைப்பழியும்
பண்டாம்பிணி யுங்கேதுவரின் படுவெண்கலங்கள் பாழ்கிணறும்
அன்றேகாணும் இரவிவரின் அளவேதெய்வம் அடுத்திடுமே. (545)

பூரணச் சந்திரனுடன் சுபக்கிரகங்கள் சேர்ந்தால் சல்லியம் இல்லை, தேய்பிறைச் சந்திரனை செவ்வாய் சேர்ந்தால் சூனியமும், கொலைப் பழியும் அம்மனையிலுண்டு, கேது சேர்ந்தால் பிணியுண்டு, வெண்கலப்பொருட்கள், பாழ்கிணறு உண்டு. சந்திரனுடன் இரவி வந்தால் தெய்வம் கூடியிருக்கும்.

உத்தமதிக்கில் பனிரெண்டில் ஒராறெட்டில் சல்லியத்தால்
மெத்தவறுமை நோயில்லை வேந்தர்பகை யுமிடியுண்டாம்
ஏதுமிடஞ்சல் வழிகாட்டும் இனத்தில்சண்டை என்னேரம்
பத்தித்தொடரும் பூசைபீலி படரும்பண்பாய்ப் பகருவதே. (546)

கிழக்கில் அல்லது 12ம் இடத்திற்குரிய திக்கில் அல்லது 6,8 மிடத்தின் திசையில் சல்லியம் இருந்தால், நோய், வறுமை இல்லை, ஆனால் அரசப்பகையும் உபத்திரவமும் உண்டாகும், கலகம், உறவினர்பகை, இடையூறு முதலியன எப்போதும் இருந்துவரும், தேவதைகளின் தொல்லையும் வரும்.

நாகம்சசியோ டுறிற்கண்டம் நாட்டுமிடத்திற் காரிவரின்
வேகந்தருசே யுறின்நோக்கின் வினையுமிரத் தக்காட்டேரி
யூகம்பணிபூ னைசுணங்கு ஒந்திகாலியோ டுராகின்னம்
போதாகந்த விருபலபூதம் புணரும்புலமும் பொல்லாங்கே. (547)

நாகம் (இராகு, கேது) சந்திரன் சேர்ந்திருக்க சனியும் சேர்ந்தால் இவர்களைச் செவ்வாய் பார்த்தாலோ அல்லது சேர்ந்தாலோ அம்மனையில் இரத்தக் காட்டேரி தங்கும், கோட்டான், கரும்பூனை, நாய், ஓந்தி, பாம்பு இவற்றுடன், பேயும், பூதமும் அம்மனையில் கூடித் துயர் தரும்.

இயம்பினால் கண்டத்தில் பானும் ஒன்றால்
பயனருஞ் சேய்பாம்பு அருக்க னெனில்
நயன்றதால் தீயெனவே ஆகுமாம் நற்கோள்
நயந்துநிற் கில்ஆழ நிலைநன் மையறி. (548)

கேந்திராதிபத்தியம் பெற்ற சூரியனுடன் செவ்வாய், ராகு(கேது) சேர்ந்திருக்க தீயசேர்க்கையாகும் எனவே சல்லியம் ஆழத்தில் உள்ளது என்றறிக.

ஆர்த்துரைத்த கண்டத்தில் நற்கோளைத் தீக்கோள்கள்
பார்த்திடுமே சல்லியமும் பாருறுமாம் - தீர்த்தக்கால்
திங்கள்சேய் அங்குடனேல் நிற்குமே செய்புரைநாள்
அங்காட்டுக் காலென்று அறி. (549)

கேந்திரம் பெற்ற சுபக்கிரகங்களைத் தீயகிரகங்கள் பார்த்தால் சல்லியம் உள்ளது, சந்திரன், செவ்வாய் கூடி அவ்விடத்தில் நின்றால் சல்லியம் உள்ளது.

விளம்பு மதியரவு கண்டத் தில்மேவ
விளம்பும் அரவுமதி வெல்நாள் - விளம்பிய
நச்சரவின் முதுகு என்பும் நணுகுமாம்
மெச்சவே தப்பில்லை மெய். (550)

சந்திரனுடன் ராகு அல்லது கேது சேர்ந்து கேந்திரத்தில் நிற்க அவ்விடத்தில் பாம்பின் முதுகு எலும்புகள் கிடக்கும்.

பகரின் மதியொடு மாடுபயம் பொன்னாள்
நிகரில்லாக் கண்டத்தில் நிற்கில் - நிகரில்லா
பண்ணிய வேதியன் என்பும் பசுவென்பும்
பொன்னிருக்கும் பொன்னுரைநாட் புக்கு. (551)

சந்திரனுடன், குருசேர்ந்து உபயலக்கினத்தில் இருக்க அதுவும் 1, 4, 7, 10 முதலிய கேந்திரமானால் பிராமணன், பசு, எலும்புகள் சல்லியமாய்க் கிடக்கும். வியாழன் தனது நட்சத்திரங்களில் நின்று சந்திரனுடன் சேர்ந்தாலும் மேற்படிப் பலனே.

புந்தி மதியுடன் நிற்குமே நாயெலும்பு
புந்தியுரை நாளரையில் போதுருமா - முந்தியே
வெள்ளிமதி யுடன்நாள் நிற்குமே வெண்கலங்கள்
வெள்ளியுரை நாளரையில் வேண்டு. (552)

புதன், சந்திரன் சேர்ந்தால் நாயெலும்பு கிடக்கும், புதன் சுக்கிரன் சேர்ந்திருக்க வெண்கலப் பொருட்களும், சுக்கிரன் நின்ற நட்சத்திரத்தின் அறைக்குரிய பாகத்தில் மனையில் சல்லியம் இருக்கும்.

என்றுமே கண்டத் திருசுடர்மே லன்புமிக
வென்றிய கோள்களுடன் தெய்வங்கள் - ஒன்றியே
நீலன்மதி உடன்நாள் நிற்கில் சனியறையில்
பாலெருமை என்புண்டு பார். (553)

சூரியனுடன் பிறகோள்கள் சேர்ந்து கேந்திரம் பெற்றால் அம்மனையில் பலமான கிரகத்தின் தேவதைகள் நிற்கும், சந்திரனுடைய நட்சத்திரத்தில் சனிநிற்க அவன் நின்ற பாகத்தில் பெண்எருமை எலும்பு கிடக்கும்.

என்றுமோர் கண்டத்தில் நற்கோளைத் தீக்கோட்கள்
சென்றடைந்து நோக்கில் தியனவாம் - அன்றியிலும்
வாயுமுடி யானில் மாள்வன் தனிவென்றி
சாயுமாம் நற்கருத்துத் தான். (554)

கேந்திரம் பெற்ற சுபக்கிரகங்களைப் பாபக்கோள்கள் சேர்ந்தாலும், பார்த்தாலும் தீயதாகும், தவிர வாயு மூலையில் சல்லியம் இருக்கும்.

தானமதி வெள்ளியும் தண்டரும் புந்தியும்
ஊனமிலா கண்டத்தில் வாதானே - நானம்
வளர்ந்தருளும் செல்வம் மகிழ்ந்து உலகில் நாளும்
துலங்கும் மிகநோக்கஞ் சொல். (555)

சந்திரன், சுக்கிரன், புதன் சேர்ந்து தீயவர் பார்க்காத கேந்திர ஸ்தானத்தில் இருந்தால் செல்வ வளம் பெருகும். சுபபலனே உண்டாகும்.

சொல்லியநற் கோளுச்சம் கோள்பிற சேரலின்றிச்
சொல்லிய பூமிதுறந் தாலுஞ் - சொல்தீது
தெய்வம் பிசாசென்று சொல்லதில் மிக்கவு
நொய்துறும் என்றெய்தி னோம். (556)

சுபக்கிரகம் உச்சம் பெற்று தீயவர் சேர்க்கை, பார்வை பெறாமல் இருந்தால் அவ்விடத்தில் தெய்வமும், பிசாசுகளும் சேர்ந்தே குடியிருக்கும்.

கண்டத் துள்வந்த கரையுற்ற நாளாகி
உண்டென்றும் ஒவ்வாதே உற்றுரைக்கக் - கண்டத்துள்
நிலனுளன் ஆகில் நிற்கிற் சனியறையில்
சாலன் இலனாகுஞ் சாற்று. (557)

கேந்திரத்தில் நின்ற கிரகம் தீய கிரகத்தின் சாரம் பெற்று சனியுடன் சேர்ந்தால், சனி நின்ற நட்சத்திரப் பாகத்தில் சல்லியம் இல்லை.

ஆய்ந்த மனையக லநீளம் அளந்ததனை
வாய்ந்தவைத் தன்னேடு மாறியே - வேய்ந்த
எமுநான் கிற்கீந் ததனை முழமாக
வருவதனை ஆறிரண்டால் மாறு. (558)

மனையின் அகலம், நீளம் அளந்து 5ஆல் பெருக்கி 28ஆல் வகுத்து வந்த மீதியை பன்னிரண்டால் பெருக்கவும்.

மாறியது கொண்டசாண் மற்றெழுந் தாறினால்
மாறியதை அங்குல மாந்தேறி - வீறும்
அனைத்துமுழஞ் சாணோடு அங்குலம் கண்டாழம்
இனத்தாலே யுண்டென்று இயம்பு. (559)

பெருக்கிய அளவைச் சாண் ஆக்கி அதை 6ஆல் பெருக்கி வந்த அளவை அங்குலமாக்கி அந்த அங்குலத்தின் ஆழத்தில் சல்லியம் இருக்கும் என்றறிக.

உரைத்த எழுநான்கு அரையிலுற்ற முழுநாளை
நிரைத்த அறையில் நிறுத்தி - உரைத்த
முறையவ மேயெண்ணி முழுமதிநாள் நின்ற
வரையவயே சல்லியங்கள் ஆம். (560)

28 பாகம் செய்ததில் முழுநட்சத்திரம் பொருந்திய அறையில் தொடங்கிக் கீழ்முகமாக எண்ணி சந்திரன் நின்ற நட்சத்திரம் உள்ள அறை (பாகம்) வரை சல்லியம் இருக்கும்.

என்றுமாரல் முதலாய் எண்ணியந்தச் சக்கரத்தில்
அன்றுமதி நின்றநாள் அறையுள் - என்றும்
உதயத்திற் தானோர்ந்து முன்னதனை எண்ணி
மதியத்தைக் கண்டு மதி. (561)

கார்த்திகை நட்சத்திரம் முதல் அன்றையதினம் சந்திரன் நின்ற நட்சத்திரம் வரை எண்ணி சந்திரன் நின்ற நட்சத்திரத்திற்குள்ள அறையில் உதய ஆரூட லக்கினம் முதலாய் சந்திரன் நின்ற அறையைக் கண்டு அந்த பாகத்தில் சல்லியமுள்ள தென்று உணர்க.

பருதிபார் அஞ்சாண்கீ ழேபாராது கரிஎலும்பு
தெரிகுசன் சாணேழுக்குள் செங்கல்லு மண்டையோடு
மரிதிசைபுதன் எட்டுக்குள் மதமதச்சா டிசாம்பல்
சரிகுருவதற்கு மொன்பான்சா ணில்கருங்கல் உண்டாம். (562)

சந்திரனுடன் சூரியன் இருக்க 5 சாண் கீழே பூமிக்கடியில் கரி, எலும்பு இருக்கும் செவ்வாய் சேர்ந்தால் 7 சாண் ஆழத்தில் செங்கல், மண்டைஓடு இருக்கும், சூரியசாரத்தில் புதன் இருக்க 8 சாண் ஆழத்தில், எலும்பும், தலைமயிரும் இருக்கும், சந்திரன் குருசேர 9 சாண் ஆழத்தில் கருங்கல் இருக்கும்.

புகரிரு சாணுக்குள் ளேபித்தளை வெண்கலங்கள்
அகர்சனி முச்சாண்கீழே அடவுக்கருத் தெலும்பு
இகரொறி கயிற்றில்ராகுக் கிடிபாருகிண றுண்டென்று
வகரமாய்ச் சோதிடத்தில் மயனுரை செய்தவாறே. (563)

புதன் இருக்கும் பாகத்தில் 2 சாண் ஆழத்தில் பித்தளை, வெண்கலப் பொருட்களும், சனிக்கு 3 சாண் ஆழத்தில் எலும்புகள் இருக்கும், ராகுவானால் இடிந்த பழங்கிணறு உண்டென்று சோதிடத்தின் மூலம் மயன் தெரிவிக்கின்றார்.

ஆரூடமு தயராசி அதற்குநால் ஏழுபத்தில்
காரியுமதி யுஞ்சேரில் கரியொடும் உமியெலும்பு
வீரியமுட னேகாணு மேலதிற் கிணறுமுண்டு
சூரியனுத யமாகில் சூனியமிருக் குந்தானே. (564)

ஆரூட உதய ராசிக்கு 1, 4, 7, 10ல் சனி, சந்திரன் சேர்ந்திருந்தால் கரி, உமி, எலும்பு கிடக்கும் மேலும் கிணறும் இருக்கும், உதயராசியில் சூரியன் இருந்தால் அம்மனையில் சூனியம் இருக்கும்.

தானுமே கேந்திரத்தில் சனிசுபர் உடனேகூடில்
ஈனமாய் இருக்கப்பார்க் கவின்குலமி னிதாமென்னே
பானமாம் ஏழாமாதி த்னிரெண்டாறெட் டின்மூன்றில்
ஊனமாய் இருக்கவந்தால் உற்றசல்லியங் களில்லை. (565)

உதயராசியாதிபதி கேந்திரம் பெறவும், சனி சுபருடன் கூடி பலமிழந்து நீசபார்வை பெற அக்குலம் இனிமை பெறும், 7ஆம் இடத்திற்கதிபதி 2, 3, 6, 8ல் தங்கி பாபபலம் பெற்றால் சல்லியமில்லை.

இல்லையாறுடை யோன்மூன்றிலி ராகுகேதுடனி ருக்கவேமண் டையோடு
அல்லதாயுதம் நான்கேழுபத்தி லிரவிதான் இருக்கவவ் வடைவேயாகும்
சொல்லரிதாய்க் கண்ணோட்டம் உதயமாகுமா ரூடந்தொடுத்து
நின்றுகேட்டவர்க்கு
வல்குளிகன்சேய் வளைவந்துகேட்டால் வஞ்சமறச்சல் லியத்தைவகை
யாயோதே. (566)

6க்கு உடையவன் 3ல் ராகு அல்லது கேதுடன் கூடியிருக்க மண்டையோடு அல்லது ஆயுதம் கிடக்கும், 4,7,10ல் சூரியன் இருந்தாலும் மேற்படிப் பலனே யாகும், சிற்பியிடம் வந்து கேட்பவர் கேட்ட உதய ஆரூடத்தில் குளிகன் நின்றால் சல்லியமுண்டு.

கலைநிறை மதியுங்காரி கலந்துடன் உயிரேநின்றால்
விலைசெறி வெண்கலங்கள் பித்தளையிரும் போடீயம்
சிலையது கருங்கல்காணும் செவ்வாயும் கூடிநின்றால்
தலையது தானேயென்று தாழ்சடைமுனி வர்சொன்னார். (567)

சந்திரனும், சனியும் கூடி உதயலக்கினத்தில் நின்றால் விலை மதிப்புள்ள வெண்கல, பித்தளை, இரும்பு, ஈயப் பொருட்கள், சிலை, கருங்கல் முதலியன இருக்கும் அவர்களுடன் சனியும் கூடி நிற்க மண்டைஓடு கிடக்கும் என்று முனிவர் அகத்தியர் உரைத்தவாறே.

தொட்டலக்கினத் திற்காரிசூரியன் செவ்வாய் இராகு
திட்டமாய் ஏழுபத்தில் சீரணமதியும் தோன்றில்
பட்டதோர்மரங் கள்கட்டை பானையோடு எலும்புசாம்பல்
சட்டமாய் இருக்குமென்று சாற்றினார் மயனுமன்றே. (568)

லக்கினத்தில் சூரியன், செவ்வாய், சனி, இராகுவும் அவர்களுக்கு 7, 10ல் தேய்பிறைச் சந்திரனும் நிற்கப் பட்டமரங்கள், கட்டைகள், பானைஓடு, எலும்பு, சாம்பல் முதலியவை நிச்சயம் இருக்கும் என்று மயனுரை செய்தவாறே.

மதிக்குநால் ஏழுபத்தில் மந்திரி புந்திகூடில்
அதற்குமூன்று ஆறெட்டில் ஆதித்தன் வாலையாகில்
பதிக்குள்ள ராசிபத்தில் பாவரொன்றில் லாராகில்
நிதிக்குள்ள பலனாமென்று நிச்சயமயனார் சொன்னார். (569)

சந்திரனுக்கு 4, 7, 10ல் புதன், சுக்கிரன் அல்லது வியாழன் கூடிநிற்க அதற்கு 6, 8ல் சூரியன் பெண்ராசியில் நிற்க தனலாபம் உண்டென்று மயன் நிச்சயமாய்க் கூறுகிறார்.

உதயமாருடந் தன்னில் சனிசெவ்வாய் இரவியுற்றால்
பதியுமேநா லாம்ராசி அதிபனுமே பார்க்கிலந்த
அதிபதியுட னேகூடி அவனையாகிலுந் தான்பார்க்க
சுதையமன் கறுப்புவெள்ளை தோன்றுமென் றியம்பினாரே. (570)

உதயலக்கினம் அல்லது ஆரூட ராசியில் சூரியன், செவ்வாய், சனி நிற்க, லக்கினாதிபதி, 4ஆம் ராசியின் அதிபர்கள் பார்த்தாலும் அல்லது 1, 4ஆம் அதிபர்கள் கூடியிருக்க அவர்களை சூரியன், செவ்வாய், சனிபார்க்க எருமை எலும்புகள் கிடக்கும்.

சுக்கிரனுட னேபுந்திதோன் றிடஅஞ்சில் மன்னன்
வக்கிரமில் லாதங்கே மன்னவன் மதிக்குமைந்தன்
நிற்கவேநிதி யமெல்லாம் நிலைத்திடும் இல்லாவிட்டால்
பக்குவமுட னேவெள்ளி பார்தனில் மிகவுண்டாமே. (571)

சுக்கிரன், புதன் கூடி இருக்க, அவருக்கு 5ல் வக்கிரமடையாத வியாழனும், புதனும் நின்றால் செல்வங்கள் நிலைத்திருக்கும் இல்லாவிட்டால் சுக்கிரன் சுபபலன் பெற்றாலும் தனலாபம் உண்டாகும்.

உண்டதாய் நாலில்சேயு முறுதியுட னேகூடில்
சென்றதாய் நிதியுமுண்டு திகழ்நாலாந் தனலாபத்தில்
பண்டதாய் இரண்டுநின்று பார்க்கரசனும் மேலொன்றால்
நின்றிட நிதிநிட்சேபம் நிச்சயங் காணலாமே. (572)

4ல் செவ்வாய் இருக்க தனலாபம் உண்டு, 2, 4, 11ல் இரண்டு கிரகங்கள் கூடிநிற்க வியாழன் அவர்க்கு ஏழில் நின்றால் தனலாபம் உண்டாகும்.

காணலாந் தன்மமிரண்டு கனவிறை லாபகேந்திர
தானமாயிருக் கத்திங்கள் சுக்கிரன் சரமுமாக
சேணதாய் இருக்கப் பார்க்கத் திறமுள்ள நிதிநிட்சேபங்
கோணலில் லாமல்தானே குறித்திடமய னார்சொன்னார். (573)

சந்திரன் 1, 4, 7, 10, 2, 11 முதலியவற்றிலும், சுக்கிரன் சரராசியிலும் இருந்தாலும் சந்திரனைப் பார்த்தாலும் தனலாபம் உண்டாகும்.

சாம்பலும் எலும்புங்கூடி தழைத்திடுமனை யினின்றால்
சோம்பலும் அதிலேயுண்டாஞ் சுகமிடந்தன் னில்நின்றால்
பாம்பினால் அச்சமுண்டாம் பாரியாள் வியாதியுண்டு
நாம்பணம் உலகில்கண்டு நன்மயன் வகுத்தவாறே. (574)

சாம்பல், எலும்பு இவை வாழக்கூடிய மனையில் இருந்தால் வளர்ச்சி குன்றும், பாம்பினால் பயம் உண்டாகும், மனைவிக்கு வியாதிகாணும், செல்வங்கள் அழியும் என்று மயன் உரைத்தவாறே.

களத்திரத் தானந்தன்னில் கரியொடுஉமி எலும்பும்
வளைத்திடும் மனையினின்றால் மனைவியே மரணமாகும்
விளைத்திடும் இதனின்மேலும், வியாதியாஞ் சங்கபீடை
கிளைத்தெழு குலத்திற்கெல்லாம் கேடென்றுமய னுஞ்சொன்னார். (575)

7ம் இடத்திற்குரிய பாகத்தில் கரி, உமி, எலும்பு கிடந்தால் மனைவி மரணமடைவாள் வியாதியும், சங்காதோஷமும் (பேய்பிடித்தல்) குலநாசமும் உண்டாகும்.

புத்திரத் தானந்தன்னில் பொருந்திய சல்லியத்தான்
சத்துவமான கல்லும் தரித்திடமரங் கள்கட்டை
பெற்றிடும் எலும்புகூடிப் பெரியதம் மனையினின்றால்
அற்றிடும் குலங்களென்றும் ஆதியின்மய னுஞ்சொன்னார். (576)

புத்திர ஸ்தானத்தில் சல்லியமாக, கல், மரங்கள், கட்டை, எலும்பு முதலியன இருந்தால் சந்ததி அற்றுப் போகுமென்று மயன் உரைத்தனர்.

உயிருடன் இரண்டின்மீது உற்றதோர் சல்லியத்தில்
மயிர்முனை கூடிநின்றால் மன்னவர் தனக்கேயாகா
தயிரியம் வீரியங்கள் சம்பத்தும் அழியுமென்று
குயின்மொழி அனையமாதே கூறினார் மயனுமன்றே. (577)

உதயலக்கினம், 2ம் இடம் முதலிய இடங்களின் பாகத்தில் தலை மயிர் சல்லியமாய் இருந்தால் மனைக்குரியவருக்காகாது. 3ம் இடத்தின் பகுதியில் சல்லியம் இருந்தால் சம்பத்தும் அழியும்.

காடியும் எலும்புங்கூடி தழைத்திடுமனை யில்நின்றால்
ஒடியகப் பலாழியுடைந் ததுபோலே ஒக்கும்
வாடியே மனந்தளர்ந்து வாழ்மனை நாசம்பண்ணும்
பாடியே மயனார்சொன்ன பயன்தனை அறிந்துபாரே. (578)

மயிரும், எலும்பும் வாழும் மனையில் இருந்தால் கடல்நடுவே கப்பல் உடைந்தது போல வாழ்வு கெடும், மனை பாழாகும், மனத்தளர்ச்சி யுண்டாகும் என மயனருளியவாறே.

கருங்கல் லோடெலும்புகூடிக் காரியத்தானந் தன்னில்
இரும்பொடு தராவுங்கட்டை ஈயம்பித் தளையுமானால்
அரும்பொருள் நாசமாகி அடிமனை இடியுமென்று
வரும்பொருள் உணர்வுவாய்ப் பவறைந்தனன் மயனுமன்றே. (579)

கருங்கல், எலும்பு கூடி 10ஆம் இடத்திற்குரிய பாகத்தில் இருந்தால், ஈயம், இரும்பு, பித்தளை, மரக்கட்டை இவை இருந்தால் தனநாசமும், மனை பாழாகுதலும் உண்டாம்.

ஆறெட்டுப் பன்னிரண்டில் ஆயதோரிட மேசல்யம்
கூறிட்டு நின்றதாகில் குற்றமொன் றில்லைமாதே
விறிட்ட லாபமேழில் வித்தையுஞ் சென்மமூன்றில்
பேறிட்ட சல்லியமுநின் றால்பெரும்பிணி மிகவுண்டாமே. (580)

6, 8, 12ல் சேர்ந்த பாகத்தில் சல்லியம் இருந்தால் ஏதும் குற்றமில்லை, 1, 3, 7, 11ல் சல்லியம் இருந்தால் பெரும் பிணியுண்டாகும்.

சல்லியங் கிடந்தபூமி தன்னிலேமனை யுண்டானால்
அல்லலே மிகப்படுத்தும் அலைச்சலும் துன்பமுண்டாம்
பில்லி சூனியங்களா கப்பின்புமே நோயுண்டாகும்
வல்லி நாயகனா னாலும்வந்திடும் இடுக்கந்தானே. (581)

சல்லியம் உள்ள பூமியில் வீடமைத்தால் தொல்லைகளே உண்டாகும், அலைச்சலும், துன்பங்களும், பில்லி சூனியம் போன்ற தொல்லைகளும் நோயுமுண்டாகும், இது ஆனந்த வல்லியமையின் நாயகனான சிவனாக இருந்தாலும் துன்பமே உண்டாக்கும்.

தனமிகு சூனியந்தான் தருசரி எலும்பினோடும்
இனமுடன் காணவேண்டில் இயம்புவேன் அரசேகேளும்
மனதுடன் இருபத்தெட்டு வாகுள பாகஞ்செய்து
வினவிய திங்கள்வீட்டில் விருப்பமாயி ருக்குமென்றே. (582)

சூனியமும், சல்லியமாய் எலும்பும் கண்டறிய வேண்டுமெனில் அரசே கேட்பாய், மனையை 28 பாகமாகப் பிரித்து உதய ஆருடச்சக்கரத்தில் சந்திரன் நின்ற அறையில் சல்லியம் இருக்கும்.

துன்னிமித்தம்

நன்றான தினமதில் தேவாலயத் திருவிழா நடத்தல் துர்க்குறி
நாடுமபவாக்கு இடிகொள்ளி சத்ருபகை நற்புரோ கிதர்மனங்
குன்றல் தேங்காய் சிதறல்மனை விருதுவாய் விலகல் குரலழல்
பிணப்பறையொலி அன்றுபால் நிறைகுடம் கவிழ்தல் தும்முதல்
சிந்தல் ஆவிபெருமூச் சுவிடுதல் ஆயுதர் கைம்பெண் பாம்பாட்டி
பகையாளி அக்னிபஞ்சு சிதறல் என்றவிவ் வகையெலாங் காணில்
அன்னாள் தீதுயிடர் வினையினால் அழிவுறும் இவையெலாம் நீக்கியே
சுபமுகூர்த்தங் கொள அன்புறும் மயனார் அறைந்ததே. (583)

மனைகோலப் போகும்நாளில் கோவில்களில் திருவிழா நடந்தால் துர்க்குறி ஆகும், அவச்சொல் கேட்டல், இடிச்சத்தம், தீப்பற்றல், பகைவர் எதிர்ப்படல், புரோகிதர் மனம் வாடுதல், தேங்காய் உடைக்கும் போது சில்லுத்தெரித்தல், மனையின் எல்லைக்கல் சரிதல், அழுகையொலி, பிணப்பறைச்சத்தம், பால் அல்லது தண்ணீர்க்குடம் கவிழ்ந்துவிடுதல், தும்மல் ஒலி கேட்டல், மூக்குச்சிந்தல், பெருமூச்சுவிடுதல், ஆயுதம் தாங்கியவர், விதவை, பாம்பாட்டி எதிரி முதலியவர் எதிர்வரல், தீப்பொறி தெரித்தல், முதலான மேற்கண்டவை எல்லாம் மனைகோலப் போகும் போதில் கண்டால் அந்நாள் தீது, தொல்லைதரும் மனையும் அழியும், எனவே துர்க்குறி நீக்கி சுபமுகூர்த்தம் செய்து மனை எடுத்திட நற்பலன்கள் உண்டாகும் என மயன் உரைத்தவாறே.

நன்னிமித்தம்

கிரகவியல் பறியுநாள் வாஸ்துவெழா நாளில் சுபகணித பஞ்சாங்க
ஒரை கேடிலாபட்சி சரவேளை பஞ்சகாலம் கிருபைவான் நிர்மலமதாய்
பரவும் அக்கினிதினம் அனற்சிகை தன்யநாள் பரவுமக்கினி மண்டலம்
பாடாவரிச் சுங்கன் மாலஸ்தமன நீக்கிப்பக ருவிஷகடிகை பூச்சியம்
திரராசியாய் இரண்டஞ்சு நாலேழுடை யார்ஜெயமாய் மால்பொன் வர்க்கமாய்
சேயிரவி பதனமாய் இரண்டேழு சுத்தமாய் சேருமுற்பகல் குளிகனில்
உரையும் உத்திரம் மூன்றுமஸ் தமான்றலை புனர்தமோங்கு தோணிசுபமாய்
யோககரணா திதிவார சுபமுற் பகலில் உயர்மனை எடுக்கநன்றே. (584)

கிரக இயல்பு, நாள், வாஸ்து எழுந்திருந்திருக்கும் நாள், சுபகணித பஞ்சாங்கம், ஓரை, பஞ்சபட்சி சாஸ்திரம், சரநூல், பஞ்சகாலம், வானம் மேகமின்றிச் சுத்தமாயத் துலங்கும் காலம், அக்கினி தினம், அனற்சிகை, தன்யநாள், அக்கினி மண்டலம், சுக்கிரன், புதன் அஸ்தமனமடையாத நாள் விஷகடிகை நீக்கி, முகூர்த்தலக்கினம் ஸ்திரராசியாய் இருக்கவும், 2,5,4,7க்குடையவர் பலம் பெற்று இருக்க, புதன் வியாழனின் நட்சத்திரத்தில் இருக்க, சூரியன், செவ்வாய் சேர்க்கை இல்லாமலிருக்க 2,7ஆம் இடங்கள் சுத்தமாய் இருக்க, முற்பகலில் குளிகன் உதயவேளையில், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, அஸ்தம், மிருகசீரிடம், புனர்பூசம், ரேவதி முதலான நட்சத்திரங்களில் திதி, வாரம், யோகம், கரணம் சுபமானதினத்தில், முற்பகல்பொழுதில் மனை எடுக்க நன்றாகும்.

துன்னிமித்தம்

பொல்லாதநாட் கள்வாரம் பொருந்தாத ராசிமாதம்
செல்லாத வெள்ளிபாடு தியாச்சிய மிராகுகாலம்
எல்லாருநன் வாஸ்துஎழுந் திருக்கின்ற போதும்
வல்லாண்மை உடையோரெல் லாம்மனைகோ லலாகாதன்றே. (585)

தீயநாட்கள், தீயநட்சத்திரங்கள், தீயராசி, தீயமாதம், சுக்கிரன் அஸ்தமனமானநாள், தியாச்சியம், இராகுகாலம், வாஸ்துவிழித்திடுங் காலமல்லாத காலம், முதலியகாலங்களில் மனை கோலலாகாது எனல்.

வட்டமாங் கொடியவாரம் மந்தனோடருக் கன்செவ்வாய்
தொட்டிடுங் கிராணந்தீண் டில்சூழ்ந்திடும் பொல்லாநாட்கள்
விடமூடிடும் வெள்ளிபாடு விஷமெனுங்கடி கைமப்போட்டம்
அட்டமி மழையோட மாவாசிபூரணை ஆகாகாதே. (586)

செவ்வாய், சனி, செவ்வாய் எனும் கொடியவாரம், கிரகணம் பிடிக்கும் காலம், தீயநட்சத்திரகாலம், சுக்கிரன் அஸ்தமனகாலம், விஷகடிகை, கர்ப்போட்டம் ஓடுகின்ற காலம், அஷ்டமி, மழைக்காலம், அமாவாசை, பௌர்ணமி முதலான நாட்கள் தீயனவாகும்.

முட்டியகொடி யவாரம் மந்தார மழைமுறிதல்
தொட்டிக்குங் கிராணம்பத்தும் சூழ்ந்திடும் பொல்லாநாட்கள்
விட்டியும் வெள்ளிபாடு விஷமெனுங் கடிகைநேரம்
அட்டமியுவா விருத்தைசந் திராஷ்டமமு மாகாதென்றே. (587)

தீயவாரம், மேகமூட்டமான நாள், மழைக்காலம், சிரகணம் சூழ்ந்த நாள், சுக்கிரன் அஸ்தமனகாலம், விஷகடிகை, அஷ்டமி, சந்திராஷ்டம தினம், இவை ஆகாத நாட்கள்.

தருமனானா லாங்காலிற் றழலுருண்முதற் காறன்னில்
பருதிதான் நிற்குங் காலம்பாவக நாளதாகும்
மாமயஞ்சிலை செம்புமண் ணினான்மனை கள்செய்யில்
எரியருந்திடு தறிண்ணமெனச் சனற்குமாரன் சொன்னான். (588)

பரணி நட்சத்திரத்தின் 4ஆம் பாதம், கார்த்திகை நட்சத்திரம் 1 பாதத்தில் சூரியன் நிற்கும் காலம் பாவகநாள் எனப்படும், செம்பினால் சிலைகள் செய்யும் காலம், மண்ணினால் வீடுகள் கட்டக்கூடாது என்று சனற்குமார வாஸ்து என்னும் நூல் உரைக்கும்.

தேவாலய முகூர்த்தகாலம்

சீர்பெறுந் திரேதாயுகம் பதினேழாயிரத் திற்குமேலே செல்லுகின்ற பிரபவா
உதித்த இருபத்தெட் டின்மேல்ஜய வருடம்திகழ் திங்கள் தன்னில்
தார்பெருகும் எட்டினில் சோமவாரந் தன்னில் திருவண்ணா மலைமுகூர்த்தம்
தருமகரம் பனிரண்டில் சுக்கிரவாரந் தனில்தில் லையேநல் முகூர்த்தம்

பேர்பெருகு மேஷத்தில் திங்களிரைந் தில்திருவாரூர் ஆலயங் குளமுகூர்த்தம்
பெருகுவிடை திங்களில் மூலவேழு நாளினில் பெருங்கடையூர் முகூர்த்தம்
கார்பெருகும் ஆவணியோர் ஆறுதன்னினில் திருவானைக்கா வல்முகூர்த்தம் கனகசபை
பெருமுழத் தினாலெட்டுத்த பெருவாலயம் சனிவுடன் மயன் வைத்ததே.(589)

திரேதாயுகத்தில் 17000 ஆண்டுக்குப்பின் வந்த பிரபவ வருஷம் முதல் வந்த ஜய வருஷத்தில் கார்த்திகை மாதம், திங்கட்கிழமை திருவண்ணாமலை ஆலயத்தின் ஆரம்ப முகூர்த்தம், தைமாதம், 12ஆம் நாள் வெள்ளிக்கிழமை தில்லையம்பதியின் நல்முகூர்த்தம், சித்திரை மாதம் 10ஆம் நாள் திங்கட்கிழமை திருவாரூர் ஆலய தெப்பக்குளத்திற்கு ஆரம்ப முகூர்த்தமும், வைகாசிமாதம், 21ஆம் நாள் பெருங்கடையூர் ஆலய முகூர்த்தம், ஆவணி மாதம் 6ஆம் நாள் திருவானைக்கா முகூர்த்தம், சிதம்பரம் பொற்சபை (பொன்னம்பலம்) முதலான ஆலயங்களின் முகூர்த்தகாலம் மயன் குறித்த நாளாகும்.

மனைமுகூர்த்தமாதம் முதலியன

சித்திரை விடையே சிம்மம் சிறந்தவைப் பசியுந்தேளும்
பத்தியா மகரத்தோடு பாங்குள மாசம் ஆறில்
இத்தரை வாஸ்து உந்தியெ முபதிதே திதன்னில்
முத்தியா மனையைக் கோலிமு கூர்த்தங்கள் செய்விப்பாயே. (590)

சித்திரை, வைகாசி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை, தை முதலிய ஆறு மாதங்களில் வாஸ்து புருஷன் விழிக்கும் காலத்தில் வாஸ்துவின் வயிறு இருக்கும், பகுதியை அறிந்து அங்கு மனையினை அமைக்க நல் முகூர்த்தம் அமைப்பாயாக.

பங்குனி ஆனி புரட்டாசி மார்கழி
பொங்குமனை கோலின் புந்தியிலே - மங்குமே
நாளாகும் பொல்லாங்கு நாட்டிற்கு ஆகாது
பாழகுமே மனையும் பார். (591)

பங்குனி, ஆனி, புரட்டாசி, மார்கழி இம்மாதங்களில் மனை எடுத்தால் தீய பலன் உண்டாகும் நாட்டிற்கும் ஆகாது தவிர அம்மனையும் பாழ்படும்.

ஆடியொடு மாசியா குமென்பார் அம்புவியில்
நாடிமனை கோல நன்றென்று - கூடியே
நாடாளும் பொல்லாங்கு நாட்டிற்கே ஆகாது
பாழாகுமே மனையும் பார். (592)

ஆடி, மாசி, மாதங்களில் மனை செய்யலாம் என்று இம்மண்ணுல கோர் கூறுவர் ஆனால் அம்மாதங்கள் நாட்டிற்குக் கேடுண்டாக்கு வதுடன், அம்மனையையும் பாழாக்கி விடும்.

வேறு

சித்திரை இடபம் ஆடிசிறந்த ஆவணியுமாகும்
வைத்தவைப் பசியுமன்றி மன்னுகார்த் திகையுநன்றாம்
தைத்தனில் மாசியெட்டும் சாற்றிய திசைமாதப்போ
புத்தியால் மனைகள்கோ லப்புகழுடன் நன்மையாமே. (593)

சித்திரை, வைகாசி, ஆடி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை, தை, மாசி முதலான மாதங்கள் எட்டும் நன்மையான மாதங்களாகும் இம்மாதங்களில் மனைகள்கோல நலமுண்டாகும்.

ஆனியும் நாரிமிக்க வந்தமார் கழியினோடு
கூனியே இவைகள்நான் குங்குடிபுகார் மனையைக்கோலார்
ஈனமுறுமாம் மதியில் மிகுமனைஎடுப் பாராகில்
வானமரு தேவரெனும் வாழ்விது என்னலாமே. (594)

ஆனி, புரட்டாசி, மார்கழி, பங்குனி இந்நான்கு மாதங்களில், மனை எடுத்தாலும் புகுந்தாலும், தேய்பிறைச் சந்திரனில் மனை எடுத்தாலும் தேவர்களே ஆனாலும் வாழ்வு நலமாகாது.

வேறு

ஆடித்திங்களில் ராவணன்பட்டது மாலித்தேபெரும் பாரதமார்கழி
பீடித்தேபுரட் டாசியிரணியன் பெருமான்நஞ்சை யுண்டதுமாசியில்
பாடிக்காமனை எரித்ததுபங்குனி பார்விட்டேகினன் மாபலியானியில்
நாடியிம்மதிகளில் நன்மனைகோ லிடில்நற்றலமகன் றேகுவருண்மையே. (595)

ஆடிமாதம் இராவணன் மடிந்தான், மார்கழிமாதம் சுமாலியென்பவன் மடிந்தனன், புரட்டாசி மாதம் இரணியன் இறந்தான், சிவபெருமான் மாசியில் ஆலகால விஷத்தை அருந்தினார், மன்மதனை பங்குனிமாதம் எரித்தனர், ஆனிமாதம் மகாபலிச் சக்கரவர்த்தி யானவன் மடிந்து போயினன். எனவே இம்மாதங்களில் மனை எடுத்தால் அம்மனைக்குரியவன் மடிந்து போவான்.

வேறு

தையில்வா னவர்கூட்டம் தக்கன்வேள் விவைகாசி
செய்யசித் திரையமிர்தம் சேர்ந்தவா வணியிடபம்
பையவிசா கத்தேயரக்கர் பகருங்கார்த் திகையைவர்
வெய்யத் தோன்றினராத லினால்வீடுள டுக்கமிகநன்றே. (596)

தைமாதம் வானவர் கூட்டம் தக்கன் வேள்வியில் கலந்து கொண்டனர் வைகாசி, சித்திரை அமிர்தம் கடைந்த மாதங்களாகும், வைகாசி, ஆவணி, கார்த்திகை மாதங்களில் பஞ்சபூதங்கள் தோன்றின. எனவே இம்மாதங்களில் மனை எடுக்க நன்றாகும்.

மாதபலன் வேறு

செப்புஞ் சித்திரை சிறந்த மதிதனில்
ஒப்பு மாளிகை ஒவ்வ அமைத்திடில்
தப்பில் லாமற் தனமதற் கானியாம்
மெய்ப்பு டன்மயன் விரும்பி உரைத்ததே. (597)

சித்திரை மாதத்தில் வீடுகட்டினால் தனநாசம் உண்டாகும் என மயனுரை செய்தவாறே.

பேசும் வைகாசி பெருக்கமாளி கட்டில்
தேசும் புருஷ செயப்பிர தங்களாம்
நேசமாம் பெண்டிர் நெருங்குஞ் சுபபலம்
மாசிலா மயன்மன் னர்க்கு அறைந்ததே. (598)

வைகாசி மாதம் வீடு கட்டினால், பெண்கள், மற்றும் மனைக்கதிபதி நலம் பெறுவார்கள்.

உள்ள ராசி உறைக்கிறேன் மாந்தர்க்கு
தெள்ளு மாளியில் திடமாளி கட்டிடில்
பிள்ளை குட்டிகள் பெருமிருத் துபயம்
கொள்ள மயனுரை கூறியது உண்மையே. (599)

ஆனி மாதம் மாளிகை கட்டினால் மனைவி மக்கள் துயரடைவார்கள் இது மயனுரைத்ததாகும்.

சொல்லும் ஆடி தொடர்ந்த மாளிகட்டில்
சொல்லும் காராம் பசுக்கள் துன்பமாம்
சொல்லுஞ் செல்வமும் சீரும் தொலைந்திடும்
சொல்லும் மயனார் தொகுத்த சிற்பநூலே. (600)

ஆடிமாதம் வீடுகட்டினால் பசுக்கள் நாசமடையும், தனமழியும், என மயனருளினார்.

உரைத்திடும் ஆவணி மாளிகை கட்டிடில்
நிரைத்திடும் பந்து நிதமும் வருத்துமாம்
உரைத்திடு மயன் வாக்கு உறுதிகாண்
பரைத்திடும் பஞ்சனத் தார்க்கு அறைந்ததே. (601)

ஆவணிமாதம் வீடுகட்டினால் தினமும் விருந்தினர் வரவாகும், நல்வாழ்வே உண்டாகும் என மயன் உரைத்தனரே.

மாயுமே புரட்டா சிமதி தனில்
ஏயு மாளி எழில்பெறக் கட்டிடில்
மாயு நோயு மகாரோகம் எய்திடும்
தாயுமே மயன் தயவாய் உரைத்ததே. (602)

புரட்டாசி மாதம் வீடுகட்டினால், நோயே வந்து சேரும் என மயனுரைத்த வாறே.

காணும் ஐப்பசி கனத்த மாளிகட்டில்
ஆணும் பெண்ணும் அரிய கலகமாம்
பூணும் ஆடை புகலும் ஆபரணமும்
வேணும் சேதம் விளையுமென் மேலுமே. (603)

ஐப்பசி மாதம் மாளிகை கட்டினால் கணவன் மனைவி சண்டையும் உண்டாகும். ஆடை ஆபரணங்களும் சேதமடையும்.

கனத்த மாரி கழறுங் கார்த்திகையில்
தனத்த மாளித கைமையாய்க் கட்டிடில்
அனர்த்தம் வாராது அன்புள்ள மாந்தர்க்கு
நினைத்த லட்சுமி நெருங்கும் வாசமதே. (604)

பெருமழை பெய்யும் கார்த்திகை மாதத்தில் வீடு கட்டினால் கேடில்லை, அம்மனையில் மகாலெட்சுமி வாசம் செய்வாள்.

செல்லு மேதிரு வாதிரை மார்கழி
புல்லு மாளி புகலவே கட்டிடில்
கொல்லு மேபயம் குவலயந் தன்னிலே
வெல்லு மயனார் விரும்பி உரைத்ததே. (605)

மார்கழி மாதம் வீடுகட்டினால், திருவாதிரை நட்சத்திரத்தில் வீடுகட்டினாலும், பயமுண்டாகும் என மயன் உரைத்தபடியே.

கிரணம் வீசும் கிளர்க்குந் தைமாதத்தில்
முரண மாகமுகில் மாளி கட்டிடில்
மரண மேதரும் அக்கினி பயமுண்டாம்
சரணம் பண்ணித் தடுப்பது நன்மையே. (606)

தைமாதத்தில் வானுயர்ந்த வீடுகள் கட்டினால் மரணமுண்டாகும், அக்கினி பயமும் உண்டாகும், எனவே இம்மாதத்தில் மனை கட்டாது ஒழிதல் நலமாகும்.

அருமை யாகவரை கின்றேன் சிற்பநூல்
பெருமையாய் மாசி பிலக்கமாளி கட்டிடில்
சிறுமை நீங்கிச் சிறக்குஞ் செல்வங்களம்
ஒருமை யாகவுரைக் கும்மயன் நூலே. (607)

மாசிமாதம் வீடுகட்டினால் செல்வவளம் உண்டாகும், வறுமை என்பதே இருக்காது.

மெள்ளவே பங்குனி மேன்மாளி கட்டிடில்
உள்ள ரத்னம் உரையும் ஆபரணமும்
தெள்ளும் அஷ்ட சிறந்ததோர் செல்வமும்
கொள்ளை போமெனக் கூறினார் சிற்பரே. (608)

பங்குனி மாதத்தில் வீடு கட்டினால் ரத்தினங்கள் பதித்த ஆபரணங்களும் அஷ்ட ஐசுவரியங்களும் கொள்ளை போய்விடுமெனச் சிற்பியாம் மயனுரை செய்தவாறே.

வார பலன்

இனிய வாரம் எழில்பெறும் ஞாயிறு
தனிசெவ் வாய்தனில் அக்கினி பயம்
குனிய திங்களுங் கூறிடும் நற்சுபம்
துணிவுடன் மயன் சொன்னதும் உண்மையே. (609)

ஞாயிறு, செவ்வாய்க்கிழமைகள் அக்கினி பயம் உண்டாகும், திங்கட்கிழமை நல்ல சுப பலன் தரும் என மயன் கூறிய இவ்வார்த்தைகள் உண்மையே என்றறிக.

உண்மையாம் புதனுக்கும் உரைக்கும் வியாழமும்
தண்மையாம் வெள்ளி தாக்குஞ் சுபாசுபம்
உண்மையாஞ் சனிக்கு உண்டு அகோரபயம்
வண்மை வாரம் அறிந்துமாடம் கோலே. (610)

புதன், வியாழன், வெள்ளி சுபபலனும் சனிக்கிழமை பாபபலனும் அகோரபயமும் உண்டாகும். எனவே நல்வாரத்திலேயே மனை ஆரம்பம் செய்க என்றவாறு.

வேறு

ஞாயிறிங்கு அலையச் செய்யும் நலந்தரு திங்களாகில்
சேயன்றிப் படுவதாகும் செழும் புதன் மகப்பேறாகும்
வியமாம் வியாழன் பொன்னாம் வெள்ளியே விளைவுண்டாகும்
ஆயதோர் சனிப்பெருக் காமகந்தனைக் கோலுங் காலே. (611)

ஞாயிற்றுக்கிழமை அலைச்சலுடண்டாகும், திங்கள் நலந்தரும், செவ்வாய் அக்கினிபயம், புதன் மகப்பேறு, வியாழன் பொன்லாபம், வெள்ளி விளைச்சல் உண்டாகும், சனிக்கிழமை துன்பமுண்டாகும், இவ்விதமாக மனைகோலும் வாரங்களுக்கு உரிய பலன்கள் அறிந்து நல்ல வாரங்களில் மனை எடுக்க நன்மை உண்டாகும்.

மனை முகூர்த்தத்திற்கு ஆகாத திதிகள்

நெரியுஞ் சுக்கில பட்சமது நேரிரசப் பிரத்தமாதம்
செரியுங் கிருஷ்ண பட்சமது சிறந்தவிரவி போனதின்பின்
பெருகுந் திருதிகை முதலாய்ப்பே சும்பௌர்ணமி தொடங்கி
உருகுஞ் சத்தமிதன் வரைக்கும் ஓங்குசுக்கில பட்சமதே. (612)

சுக்கிலபட்சமாம் வளர்பிறைத் திதிகள் சுபமானவை, கிருஷ்ணபட்சத்துத் தேய்பிறைத் திதிகள் கூடாவாம், தேய்பிறை திருதியை முதல் சப்தமி வரை சுபமாகும், சுக்கிலபட்சத் திருதியை கடந்து மற்ற திதிகள் சுபமாம். (அட்டவி, நவமி விலக்காகும்)

மற்றநாள் கிருஷ்ண பட்சம் ஆதியாக
உற்ற பிரதமை ஓங்கும் ஷஷ்டிகளும்
மற்றும் ஏகாதசி மாண்தரு கணத்தை
பெற்ற திதிபலன் போர்த்த ஆனியே. (613)

கிருஷ்ணபட்சப் பிரதமை, ஷஷ்டி, ஏகாதசி முதலான திதிகளில் அர்த்த நாசம் உண்டாகும்.

வாரிட்டா துதியை வருசத் தமிகளும்
ஓரிட்ட துவாதசி உறுபத் திரை
நேரிட்ட திதிநிகழ் பலன் பந்தனம்
கூறிட்ட மயன் குறித்தது உண்மையே. (614)

துதியை, சப்தமி, துவாதசி, இத்திதிகளில் நற்பலன் உண்டாகும் என மயனுரைத்தவாறே.

தக்க அட்டமி தாக்குந் திரிதிகை
பக்க மேதிர யோதசி பண்புடன்
மக்கண் சேய வருந்திதி யாம்இவை
சிக்குஞ் சுபமெனச் செப்பினார் சிற்பரே. (615)

அஷ்டமி, திரிதியை, திரயோதசி இத்திதிகளில் சுபபலன் கிட்டாது என மயனுரைத்தார்.

சீர் பெறும் சதுர்த்தி நவமியும்
தார் செறியுஞ் சதுர்த்தசி தன்முதல்
ஏர் பெறும் அரிக்கத் திதிபலன்
போர் செறிமிருத் துபயம் புகலுவாம். (616)

சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி இத்திதிகளில் திருடர்பயம், எதிரிபயமுண்டாகும் என்றவாறு.

சொல்லும் பஞ்சமி தோற்றுந் தசமிதான்
வெல்லும் பௌர்ணமி வேண்டும் பூரணதிதி
புல்லும் இதின்பலன் போற்றுஞ் செயப்பிரதம்
அல்லும் அமாவாசி அர்த்த ஆனியே. (617)

பஞ்சமி, தசமி நற்பலனும், பௌர்ணமி, அமாவாசைத் திதிகளில் துயரமே உண்டாகும்.

நட்சத்திர பலன்

ஓதும் அஸ்தம் உரைபுமுறு ரோகணி
நீதியாய் அவிட்டம் நிறைச தயமும்
கோதிலா மிருகசி ரம்குண பூசமும்
தீதிலாத் திருவோ ணமும்நன் மையே. (618)

அஸ்தம், ரோகிணி, அவிட்டம், சதயம், மிருகசீரிடம், பூசம், திருவோணம் இவை நன்மையே ஆகும்.

நன்மை யாஞ்சு வாதிநல் அனுடமும்
துன்மை யில்லாத் துடர்ந்த சித்திரையும்
வன்மை ரேவதி வளமுத் திரட்டாதி
பன்மை உத்திராடம் பார்க்கச் சுபமிதே. (619)

நன்மையான சுவாதி, அனுஷம், சித்திரை, ரேவதி, உ;;திரட்டாதி, உத்திராடம் முதலான நட்சத்திரங்களில் நற்பலனே உண்டாகும்.

பார்க்க உத்திரம் பகருநட் சத்திரம்
ஏர்க்க வேபதி நான்கும் இன்பசுகம்
தீர்க்க மாய்சிற்ப நூலைத் திரட்டியே
மார்க்க மாகமயன் சொன்ன வாறிதே. (620)

உத்திரம், மேற்கூறிய 13 நட்சத்திரங்கள் ஆக 14 நட்சத்திரங்களும் நல்ல சுபபலன்களைத் தருமென்று பலநூல்ஆய்ந்து மயன் உரைத்தபடியே.

யோகபலன்

தங்குமே சுபந்தந் திடும்பி ராமியம்
பொங்கு மாகேந்திரம் போற்று நற்சாத்தியம்
எங்கு மேசுபம் ஏற்குஞ் சுப்பிரம்
சங்கம் ஆயிசுமான் தருஞ்சௌ பாக்கியம். (621)

சுபம், பிராமியம், மாகேந்திரம், சாத்தியம், சுப்பிரம், ஆயுஷ்மான், சௌபாக்கியம்,

காணுந் துருவம் கழறும் வைதிருதியாம்
வேணுஞ் சோபனம் விரும்புஞ் சுகமதாம்
தோணும் பிரிதியும் தோற்றும் சித்தங்களும்
பூணும் யோகம் புகலும் பன்னான்கரோ. (622)

துருவம், வைதிருதி, சோபனம், பிரீதி, சித்தம், சுகர்மம், சித்தி முதலான பதினான்கு யோகங்களும் நற்பலன் தருவன வாகும்.

மாது வியாகாதம், வழுத்தும் கண்டங்களாம்
கோது சூலம் குறிக்கும் விஷ்கும்பமாம்
ஓதும் வச்சிரம் ஓங்கும் அதிகண்டமாம்
பூதியாம் வியதிபாதம் பொல்லா ததிதே. (623)

வியாகாதம், கண்டம், சூலம், விஷ்கும்பம், வச்சிரம், அதிகண்டம், வியதீபாதம் முதலான யோகங்களில் தீயபலன் உண்டாகும்.

பொல்லா தையா புகலும் பரிகமாம்
நல்லா வைதிருதி நவிலும் யோகங்கள்
பொல்லாப் பென்றுமே புகலும் சிற்பநூல்
புல்லா வொன்பதும் போற்றும் பொல்லாதிதே. (624)

பரிகம் எனும் யோகமும் பொல்லாததே வைதிருதி முதலானவை நற்பலனும் பின்னர் கூறிய யோகங்கள் தீய பலனும் தரக்கூடியவை எனச் சிற்பநூல் கூறும்.

கரணபலன்

பண்ணும் பாலவம் பகரும் பவமுடன்
அண்ண லாருமை அறையுங் கௌலவம்
எண்ணுந் தைதுலை ஏற்குங் கரசியாம்
நண்ணும் பத்திரை நற்சுப மீயுமே. (625)

பவம், பாலவம், கௌலவம், தைதுலை, கரசை, பத்திரை கரணங்கள் சுபபலன் தரும்.

உய்யு நாகமும் ஓங்குஞ் சகுனியும்
பைய சதுஷ்பாதம் பகரும் வனசையும்
மெய்ய வேகிமத் துக்கின மைந்தும்
பொய்ய கரணம் புகறுப் பொல்லாதிதே. (626)

நாகவம், சகுனி, சதுஷ்பாதம், வணிசை, கிமஸ்துக்கினம், இவை ஐந்தும் தீய பலனளிக்கும்.

ஸ்தம்பம் நாட்டும் மாதபலன்

மேடாதி மாதந்தம்மில் மிளிருமேசுபங் கள்செல்வம்
பாடாதல் பசுக்கள்நாசம் பசுவதுவிருத் திமைந்தர்
வாடாத அன்னபாணம் வளர்சுகந் தான்யலாபம்
கூடாத அங்கிகொற்றம் குளிர்சுப மசுபமாமே. (627)

மேடமாதமான சித்திரை முதல் பங்குனி வரையுள்ள மாதங்களில் நல்மாதங்களில் ஸ்தம்பம் நாட்ட நற்பலனும் பசுவிருத்தியும், தன தான்ய, ஆகாராதிகள் குறைவுபடாத செல்வம் கிட்டுதலும், கூடாத மாதங்களில் மேற்கூறியவை நாசமடையும்.

வாரபலன்

ஞாயிறு செவ்வாய் தீயாம் நற்பக்கமல் லாத்திங்கள்
ஆயிடுஞ் சோகம் பூர்வபக் கத்துத்திங்கள் மைந்தர்
வாயுறும் வெள்ளி தேவர்மான் குருதன வரத்துப்
பாய்புதன் சனிவாரத் துப்பகர் பலன்திற மதாமே. (628)

ஞாயிறு செவ்வாய் தீயபலன், திங்கள் சுபபலனும், வளர் பிறை திங்கட் கிழமை மைந்தர் லாபம், வியாழன், வெள்ளி, தனலாபம் உண்டாகும், புதன்கிழமை நற்பலனும், சனிக்கிழமை தீயபலனும் உண்டாகும்.

நட்சத்திர பலன்

கோதில் மான்றலை உரோணி குதிரையுத்திர மூன்றத்தம்
சோதி சித்திரை பூசங்கள் தோணியோ டநுடமோணம்
ஏதமில் அவிட்டஞ் சுண்டன் இவற்றினில் தம்பம்நாட்ட
ஓதிய மைந்தர் லாபம் உற்றவைசுக மேயெல்லாம். (629)

மிருகசீரிடம், ரோகிணி, அசுவினி, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, அஸ்தம், சுவாதி, சித்திரை, புனர்பூசம், பூசம், அனுஷம், திருவோணம், அவிட்டம், ரேவதி, சதயம் இந்த நட்சத்திரங்களில் தம்பம் நாட்ட புத்திர லாபமுடன் நற்சுகங்கள் கிட்டும்.

ஆய்ந்ததோர் தம்பம்நாட்டல் அதுபுது கிருகத்திற்காம்
வாய்ந்ததும் மகேசன்திக்கில் மாண்புறநாட் டல்வேண்டும்
ஏய்ந்ததோர் இரண்டாங் கட்டிலிவ் வணஞ்செய்க
மாயைகாய்ந்த சீர்முனிவர் சொன்னகருத் தினையுணர்மினீரே. (630)

புதுமனைகட்ட தம்பம் நாட்டும் போது முதலில் ஈசானமூலையில் நாட்ட வேண்டும், மற்றிடம் தீது என்று முனிவர்கள் உரைத்தனர் இதை மறக்கக் கூடாது எனல்.

ஸ்தம்பம் நாட்டுங் காலங்களில் கிரகங்களின் சஞ்சார பலன்

நாட்டுங் கங்குவிற் பிற்பாதி நவில்ரோணி யாரல்சூரன்
வாட்டிய அதியம் ஆரல் மகமத்தம் மூலம்பூசம்
கேட்ட பாற்குனியே நாவாய் கெடுகுகன் ஆகாதென்னே
காட்டிய இல்லாளுக் குக்கடிந்த நாள்எவைக் குமாகா. (631)

பரணி நட்சத்திரத்தின் 3, 4 மாதங்கள், கார்த்திகை, ரோகிணி, சூரியனுக்கும், கார்த்திகை, மகம், அஸ்தம், மூலம், பூசம், உத்திரம், ரேவதி

நட்சத்திரங்கள் செவ்வாய்க்கும் ஆகாது மேற்கண்ட கிரகங்கள் அந்த நட்சத்திரங்களில் சஞ்சரிக்கும்போது மனைவிக்கு ஆகாது மனைஸ்தம்பம் நாட்டும் போது மேற்கண்ட குற்றமில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

புந்தியே அஸ்தம் ரோணி புகலுமான் பரியுத் திரத்தோடு
அந்தச் சித்திரையில் நன்றாம் அடுத்திடுங் குருவும் ரோணி
தந்தமான் பூசம் ஒணம் தக்கவுத் திரங்கள் வாவி
இந்தநாள் மீன்களோடே இயை செல்வம் மைந்தர் நல்கும். (632)

புதன் அஸ்தம், ரோகிணி, மிருகசீரிடம், அசுவினி, உத்திரம், சித்திரை நட்சத்திரங்களில் சஞ்சரிக்கும் காலம் நன்றே, வியாழன் ரோகிணி, மிருகசீரிடம், பூசம், திருஓணம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, பூராடம் இந்த நட்சத்திரங்களில் சஞ்சரித்தால், சிறந்த செல்வம், புத்திர பாக்கியம் உண்டாகும்.

உற்றசீர் சுக்கிரன்றான் இறைபுணர்ப் பூசமவிட்டம்
முற்றில் சித்திரையே செக்குமுன்னுறத் தான்யலாபம்
நற்புகர் ஏழாந்தானம் நாடிடில்பல னேநன்றாம்
பொற்புறு கிரகம்பத்தேழ் பொருபகை யுடனேயாகா. (633)

சுக்கிரன் புணர்பூசம், அவிட்டம், சித்திரை, சதய நட்சத்திரங்களில் சஞ்சரித்தால் தானிய லாபம் உண்டாகும், மேலும் 7ஆம் இடத்தில் சஞ்சரிக்கிலும் நற்பலனே, 10, 7ல் சஞ்சரிக்கும் போது நற்பலனும் 6ஆம் இடத்தில் தீய பலனும் உண்டாகும்.

மந்தனேயநு டங்கேட்டை மன்னுமுத்திரா டஞ்சோதி
தந்ததோர் பரணிபொய்கை தானுறிற்சனி யன்கேடாம்
வந்துமே பிரமராக்கன் மருவுமே யாதலாலே
எந்தநாளும் நன்றாக இசைதலேசுப மாம்மாதோ. (634)

சனிபகவானானவர் அனுஷம், கேட்டை, உத்திராடம், சுவாதி, பரணி, பூராடம் நட்சத்திரங்களில் சஞ்சரிக்கில் பாபியாகும், அப்போது தம்பம் நட்டால் பிரமராட்சதன் வந்து குடியேறுவான் ஆதலால் சரியான காலமறிந்தே தம்பம் நாட்ட வேண்டும்.

வேறு

கூறும்பர ணிகுறிக்கும் இரண்டாம் பாதம்
வீறுங்கார்த் திகைவிளம் பும்நாலாம் பாதம்
கோறும் ரோகணி குறிக்குமுதற் பாதம்
மாறும் ஏழிலும் வருத்தம் ப்ரிதியே. (635)

பரணி 2ஆம் பாதம், கார்த்திகை 4ஆம் பாதம், ரோகிணி 1ஆம் பாதம், 7ஆம் பாவத்தில் சஞ்சரிக்கும் காலத்தில் சூரியன் தீமையே செய்வான்.

பருதி நின்றுபகர் மாளி கட்டிடில்
குருதி அக்கினி கொடியப யம்கொலும்
பருதி போல்மயன் பகருநற் சாத்திரம்
நிருதி மாந்தர்க்கு நேராய் உரைத்ததே. (636)

மேற்கூறிய இடங்களில் சூரியன் நிற்கும்போது வீடுகட்டினால் அக்கினி பயமுண்டாகும் என இப்புவியுள்ளோர்க்கு மயன் உரைத்தனர்.

செப்பிடும் மதிசிறந்த ததோர் கார்த்திகை
ஒப்பிடு பூசம் ஓங்கு மகமுடன்
வெப்பும் பூரமும் விளங்கிடு மஸ்தமும்
தப்பிலா ரேவதி தண்மூலம் பொல்லாதிதே. (637)

சந்திரன் கார்த்திகை, பூசம், மகம், பூரம், அஸ்தம், ரேவதி, மூலம் நட்சத்திரங்களில் சஞ்சாரம் செய்யும் காலம் தீயதாகும்.

பொல்லாது ஐயா புகலுங் குருமொழி
கொல்லும் நட்சத்திரங் குறிப்பு ஏழிலும்
வெல்லும் அங்காரகன் இருக்கவீ டுகட்டில்
புல்லும் புத்திரர் புகல ஆனியதே. (638)

செவ்வாயானவன் மகம் நட்சத்திரத்தில் இருக்கும்போது வீடு கட்டினால் புத்திர நாசம் உண்டாகும், இந்தக் குருமொழி தவறினால் தீமையே உண்டாகும்.

தோஷ பரிகாரம்

வஞ்சி கேளும் வழங்கு மகரமீன்
மிஞ்சு மகரம் மேவுங் கடகமும்
செஞ்சு மேபூரண சலரா சியாம்
கஞ்ச மயனார் கழறுநூல் பொய்யாதே. (639)

மகரம், கடகம் எனும் இருஇராசிகளும் சலராசியாகும், முழுவதும் சலராசியாம்.

வகுத்திடும் துலாம் வழங்கும் விருச்சிகம்
தொகுத்திடும் மேஷம் தோன்றும் மிகப்பாதம்
பகுத்திடுஞ் சலராசி எனப் பகர்
நிகழ்த்து மயனார் நேராய் உரைத்ததே. (640)

மேஷம், துலாம், விருச்சிகம் இவையும் சலராசி என மயன் கூறுகிறார். இவை பாதி சலராசிகள் என்கிறார்.

பாரிற் கும்பம் பகுக்கும் ரிஷபமாம்
சேர சிங்கஞ் சிறக்க இவைகளும்
சீரும் அர்த்த சலராசி செப்புக
பேரும் மயனார் பேணி உரைத்ததே. (641)

கும்பம், ரிஷபம், சிம்மம் இவையும் பாதி சலராசிகள் ஆகும் என மயனுரைத்தார்.

பாரெலாங் கன்னி பகரும் மிதுனமாம்
ஏருந் தனுசு யேற்கயிவை மூன்றும்
கார்நிறச் சலராசி கருது வாய்
சீரும் பூரணஞ் சேர்சல ராசியே. (642)

கன்னி, மிதுனம், தனுசு மூன்றும் கருப்புநிறச் சலராசியாம், முழுக்க சல ராசியுமாகும்.

ஏந்தும் இந்த எழில்பெறு ராசியில்
போந்த மாளி புகல அமைத்திடில்
வேந்தன் உத்தமம் ஆனரா சிதனில்
கூந்தல் வேனில் குருசுக் கிரனாமே. (643)

மேற்கூறிய இராசிகளில் வீடுகட்டினால் மனைக்குடையவன் நலமடைவான், குரு சுக்கிரன் அஸ்தமனம் கூடாது.

ஆமே சந்திரன் அறையும் பார்வைதனில்
தாமே மாடந் தனிமாளி கட்டிடில்
போமே அங்காரக தோஷம் பொலிவில்லை
நாமே சிற்பநூல் நவில உரைத்ததே. (644)

சந்திரன் பார்த்த லக்கினத்தில் மனையெடுக்க செவ்வாய் தோஷம் நீங்கிவிடும்.

பொன்னு மஸ்தம் புகலு மஸ்வினி
மன்னும் உத்திரம் மாமி ருகசீரம்
வின்னும் ரோகணி விளங்குஞ் சித்திரை
துன்னும் ஆறுந் தொகுப்பாய் உரைத்ததே. (645)

வியாழன் அஸ்தம், அசுவின், உத்திரம், மிருகசீரிடம், ரோகிணி, சித்திரை முதலான ஆறு நட்சத்திரங்களில் இருந்தால் தோஷம் இல்லை.

உரைத் திடும்பதி ஓங்கும் புதனிருந்
திரைத் திடும்பதி தன்னில் இருந்தாலும்
உரைத்தி டும்பதி உச்சத் திலாவது
குரைத்தி டமாளி கூட்டுவ தாட்சியே. (646)

புதன் மேற்கூறிய நட்சத்திரங்களில் இருந்தாலும், ஆட்சி, உச்சத்தில் இருந்தாலும் மாளிகை கட்டினால் தோஷம் இல்லை.

ஆட்சி யன்றி அணிபெரும் புத்திரர்
மாட்சி மேவும் அதிகமா மன்னவர்
காட்சி யாவும் களித்திடும் இப்பலன்
தாட்சி இன்றி தனிய அறைந்ததே. (647)

சுபக்கிரகங்கள் ஆட்சி பெற்றால் புத்திர விருத்தியும், சுபபலனும் உண்டாகும்.

ஆய உத்திரம் ஆன திருவோணம்
தூய உத்திராட முத்தி ரட்டாதியும்
ஏய பூராடம் ஏற்குமா ரோகணி
காய மிருகங் கழலுறும் பூசமே. (648)

உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, திருஓணம், பூராடம், ரோகிணி, மிருகசீரிடம், பூசம்

பூசமே வுபுகலு மாயி லியம்
வாசம் வீசும் வகுக்கு நட்சத்திரம்
நாசஞ் செய்யும் நவில ஒன்பதும்
நேசஞ் செய்ய நெருங்கும் பலமதே. (649)

ஆயில்யம், முதலான ஒன்பது நட்சத்திரங்களும் தீய பலன்தரும் இந்த நட்சத்திரங்களில் சுபர் தங்கினால் நற்பலன் தருபவையாகும்.

செல்ல உத்திரம் செழிக்கக் குருநிற்கில்
வல்ல லக்கினம் வழங்கும் உச்சத்திலும்
செல்வ மாளி சிறக்கவே கட்டினால்
நல்ல லட்சுமி நவிலும் வாசமதே. (650)

வியாழன் உத்திர நட்சத்திரத்தில் நிற்கவும், உச்சம் பெற்றாலும், மனை கட்டினால் அம்மனையில் மகாலெட்சுமி வாசம் செய்வாள்.

நண்ணுங் கேட்டை நவிலும் புணர்பூசம்
ஒண்ணுஞ் சித்திரை ஓங்கும் அசுவினி
வண்ண மேவும் வகுக்கும் பூராடமாம்
அண்ண லாருரை அறையும் அவிட்டமே. (651)

புனர்பூசம், கேட்டை, சித்திரை, அசுவினி, பூராடம், அவிட்டம்

மேவிடும் அனுஷம் மேன்மை விசாகமும்
தாவு மேதிரு ஆதிரை தன்முதல்
மேவு சதயம் விளம்பும் இப்பத்திலும்
தூவு சுக்கிரன் தோன்றலு நன்மையே. (652)

அனுஷம், விசாகம், திருவாதிரை, சதயம் முதலான பத்து நட்சத்திரங்களில் சுக்கிரன் சஞ்சரித்தால் நற்பலன் உண்டாகும்.

நன்மை யாம்பதி நவிலுஞ் சுக்கிரனும்
வன்மை யாக வலுத்துமே நின்றிடில்
புன்மை யாமாளி புகலவே கட்டிடில்
துன்மை நீங்கிச் சுகந்தரும் உண்மையே. (653)

சுக்கிரன் சுபஸ்தானங்களில் பலம்பெற்று இருக்கும்போது மாளிகை கட்டினால் வேறு எந்தத் தோஷமும் இன்றிச் சுகம் உண்டாகும்.

வருஞ்ச தயம்வ குக்கும் பூரட்டாதி
இருஞ் சுவாதி எழிலுத் திரட்டாதி
ஒரும் பரணியா மோங்கும் அவிட்டமும்
தருவ நுடமுந் தாங்குங் கேட்டையதே. (654)

சதயம், பூரட்டாதி, சுவாதி, உத்திரட்டாதி, பரணி, அவிட்டம், அனுஷம், கேட்டை

இந்த நட்சத்திர பலனெட் டிலும்
தொந்த மேவுந் தொடருஞ் சனிநிற்கில்
அந்த மாகவறை மாளி கட்டிடில்
பந்தம் அற்றுப்போய்ப் பாழும் அடைவதே. (655)

முதலான நட்சத்திரங்கள் எட்டிலும் சனி நின்றால் அப்போது கட்டப்படும் மாளிகையானது பாழ்படும் என்றவாறு.

அடையும் பூசம் அறையும் மாளிதனில்
படையும் அற்றுப் படையும் மூதேவியாள்
அடையுமே பிரமராட் சசனெப் போதும்
இடையுஞ் சீதேவி எழில்வாக் குத்தப்பாதே. (656)

பூசம் நட்சத்திரத்தில் வீடுகட்டினால் அவ்வீட்டில் மூதேவி குடிபுகுவாள், பிரமராட்சத னெனும் பேயும் அடையுமென ஸ்ரீதேவி உரைத்தனள் அவ்வாக்குத் தப்பாது எனல்.

சொல்லு மேவுந் தொடரும் இராகுதான்
வெல்லு லக்கின மேகமெ திர்சாரம்
புல்லு மேபதி நான்கு நட்சத்திரம்
கொல்லு மிருத்து அவசாரம் பொல்லாதிதே. (657)

இராகுவானவன் லக்கினம் மற்றும், முன்கூறிய சுபநட்சத்திரங்கள் பதினான்கில் நின்றால் எமபயம் உண்டாகும் அக்காலம் தீயகாலமாகும் மனை கோலலாகாது.

குருசுக்கிர அஸ்தமன பலன்

கூறுடன் சுக்கிரன் குருதன் முதல்
வீறும் அஸ்தமன மீது தன்னிலும்
கூறு மேவுங் குறிக்கு நீசத்திலும்
தூறு மேபகை தோன்றலு முண்மையே. (658)

வியாழன், சுக்கிரன் இவர்கள் அஸ்தமனமானாலும், நீசமடைந்தாலும், பகை வீடுகளில் தங்கினாலும் மனை கோலலாகாது.

உண்மை யாகவுரை யஞ்சேஷத் திரபதி
தன்மை யாஞ்சத் துருக்கள் இருக்கினும்
வண்மை யாய்மாளி வகுக்க வேயாகாது
கண்மை யாமயன் கண்டு உரைத்ததே. (659)

பகைவர் வீடடைந்து மேற்கூறிய இருவரும் நிற்கும்போது மனை கட்டக்கூடாது எனல்

கூறும் மாளி குறிக்கும் அதிகாரம்
தூறும் மெத்த துரைசா தியானாலும்
சேரும் அந்தச் சிறந்திடும் சாதிக்கு
கோரும் கிரகம் குறிக்கப் பொல்லாதிதே. (660)

கிரக சஞ்சாரம் சரியில்லாத குரு சுக்கிர அஸ்தமன வேளையில் எந்த வருணத்தார் மனைகட்டினாலும் நற்பலன் கிட்டாது.

குறிக்கச் சத்துரு கூட இருக்கினும்
தெறிக்க வேதிகழ் அஸ்தமனப் போதும்
முறிக்க நீச்ச முடிவுத் தானத்திலும்
மறிக்க மாளி அமைப்பது உண்மையே. (661)

சத்துருவுடன் சேர்ந்து சுபர் நின்ற போதும் குருசுக்கிர அஸ்தமனத்தின்போதும், சுபர் நீசம் பெற்ற போதும் மாளிகை கட்டினால் தீயபலனே உண்டாகும்.

கூறுந் துன்பம் குறிக்கும் மனிதர்க்கு
நேருஞ் சங்கற்பம் நிகழும் எக்காலமும்
கூறும் அன்னியர் கூட்டம் கிட்டேவந்து
கூறும் அக்கிர மாகக் கொள்வார்களே. (662)

குரு, சுக்கிரன் பலமிழந்து சஞ்சரிக்கயில் மாளிகை கட்டினால் அதனை அன்னியர் வந்து அபகரித்துக் கொள்வார்கள்.

இலக்கின பலன்

பால சிங்கம் பகரும் ரிஷபமாம்
ஞால கும்பம் நவிலும் விருச்சிகம்
சோலமாம் இந்தக் குறிக்கும் க்ஷேத்திரங்கள்
ஏலவே நன்மை எழிலுத் தமாகுமே. (663)

சிம்மம், ரிஷபம், கும்பம், விருச்சிகம் இவற்றின் காலம் உத்தமமான பலன் தரும். இவை ஸ்திர லக்கினங்களாகும். (அசையாதவை)

சாருங் கடகஞ் சாற்றிடு மேஷமும்
சேருமே துலாஞ் சிறந்த மகரமும்
நேரும் நாலும் நிகழ்சர லக்கினம்
பாரும் மத்திபம் பகர்சிற்ப நூலிதே. (664)

கடகம், மேஷம், துலாம், மகரம் இவை சரலக்கினங்களாகும், இந்த லக்கினங்களில் மத்திபமான பலன்கள் உண்டாகும்.

ஏய கன்னியே எழிலாம் மிதுனமும்
தூய மீனம் தொடருந் தனுசுவும்
ஆய இந்நான்கும் அரையும் சுபாபலன்
நேயமாம் உபய ராசி நிசமதே. (665)

மிதுனம், கன்னி தனுசு, மீனம் இந்நான்கும் உபயராசிகள் சுப பலன் தருபவை.

ஆனதி னாலறை மாளி கட்டிடில்
கான மேவும் கடுராசி பொல்லாது
ஊனம் ஆக உரையும் லக்கினபதி
போன கிரகம் புகலப் பொல்லாதிதே. (666)

லக்கினாதிபதி பலமிழந்து நின்றால் அந்த லக்கினம் சுபபலன் தராது. பாபபலனே தரும். எனவே லக்கினாதிபதி சுபர் சம்மந்தம், சுபஸ்தானம் பெற்றிருத்தல் அவசியம்.

இலகுஞ் சத்துரு க்ஷேத்திரம் தன்னிலும்
குலவும் லக்கினம் கூறும் கணேசுரன்
அலகுஞ் சத்துரு அறையுஞ் க்ஷேத்திரம்
கலக லக்கினம் கருது பத்ததே. (667)

லக்கினாதிபதி பகைவர் வீட்டில் தங்கினாலும், பகைவரால் பார்க்கப்பட்டாலும், பகைவருடன் சேர்ந்திருந்தாலும் மேற்கூறிய பாப ஸ்தானங்களில் 10ஆம் இடத்ததிபன் இருந்தாலும் தீய பலனே.

இருந்த மாளி எழிலாய் அமைத்திடில்
பொருந்த வேளை புகலப் பொல்லாதிது
பருந்து மேவும் பாராதின மாய்ப்போகும்
தெரிந்து மயனார் தெரிய உரைத்ததே. (668)

எனவே மனை கோல அமைக்கும் லக்கினம் சுபசம்மந்தம் பெற்றும் சுபர் பார்வை பெற்றும் இருக்க வேண்டும்.

எஜமானனுக்கு ஆகாத இராசி

சொன்ன மேவுங் கிழக்குத் துவசாயம்
மின்னும் விருச்சிக ராசிக்கும் ஆகாது
துன்னு மேவும் தென்கிழக்கு தூமாயம்
என்னு மீன ராசிக்கும் ஏற்காதே. (669)

விருச்சிக ராசிக்குடையவருக்கு கிழக்கு துவசாய யோனி ஆகாது, மீனராசிக்காரர்களுக்குத் தென்கிழக்கு தூமயோனி ஆகாது.

அறியும் தெற்கு அருள்சிம் மாயமாம்
உறுதென் மேற்கு உரையுஞ்சு நகாயமாம்
செறியும் மேற்குச் சிறந்த ரிஷபமாம்
நெறியும் தநுவி ராசிநேர் ஆகாதே. (670)

தனுசு இராசிக்கார்களுக்கு தெற்குச் சிம்மயோனியும், தென் மேற்குச் சுநகயோனியும், மேற்கு ரிஷபயோனியும் தனுசு ராசிக்கார்களுக்கு ஆகாது.

அச்சம் ஆன அரையும் வடமேற்கு
நிச்ச காராயம் நேருந் துலாவுக்கு
உச்சம் ஆனது ஒருபோதும் கூடாது
கொச்ச மயனார் சுளுவாய் அமைத்ததே. (671)

வடமேற்குக் காராயம் துலாராசிக் காரர்களுக்கு ஆகாது. மேலும் உச்சராசிக்குரிய திசையும் அதற்குரிய இராசியும் ஆகாது.

உண்ணு மேவும் உரையும் வடக்கதாம்
நன்னும் கஜாயம் நவில உரைக்கின்றேன்
தன்னும் மேஷவி ராசிக்குமே தவிர்த்து
அன்ன மயனார் அறிய உரைத்ததே. (672)

மேஷ ராசிக்கார்களுக்கு, வடக்குக் கஜாயம் ஆகாது எனவே அந்த இராசியைத் தவிர்த்து விட வேண்டும் என மயனார் உரைத்தனரே.

இலங்கு மேஈசான் யங்கா காயமாம்
துலங்கு கும்ப தோன்றலுக் குமாகாதே
நலங்கொள் மகரம் நவிலும் மிதுனமாம்
பலங்கொள் சிங்கம் பகரும் ரிஷபமே. (673)

கும்பராசிக்காரர்களுக்கு ஈசான்ய காகயோனித்திசை ஆகாதது, மகரராசிக்கு உடையவர்களுக்கு சிம்ம யோனியும், மிதுன ராசிக்காரர்களுக்கு ரிஷபயோனியும் ஆகாதவையாகும்.

சொல்லும் மிக்க துலங்கும் ராசியாளர்
வெல்லும் கிராமம் விளங்கிடும் மத்தியில்
புல்லும் மாடம் புகலவே கட்டொணா
தல்லும் மயனார் தமிழில் அறைந்ததே. (674)

மேலே கூறிய இராசிக்காரர்கள் தமக்காகாத யோனிக்குரிய திசையில் வீடு கட்டலாகாது.

கட்டினால் மாடமாளிகான் பின்னமே
கட்டினால் தோஷம் கருதும் ஆனியாம்
கட்டினால் மாளி கனமுமே ஆகாது
கட்டினால் சீரணம் கடுக அடைவரே. (675)

தவறிக் கட்டினால், தோஷமும், துயரமும், தனநாசமும் உண்டாகும்.

தாராபலம்

பிறந்தநாள் இரண்டுநான்கும் பேசுமொன்பா னெட்டாறும்
சிறந்தசீர் வகையுமற்றுஞ் சேர்ந்திடும் சம்பத்தாகும்
அறிந்தநூல் அனைத்தும்வல் லோரறைந்து மூன்றேழு நீக்கி
சிறந்ததாய் மொழிந்ததெல்லாம் திடமுடன் பொருந்துங்காணே. (676)

அவரவர் ஜென்ம நட்சத்திரத்திற்கு 2, 4, 6, 8, 9 நட்சத்திரங்களில் நல்ல சம்பத்தும் உண்டாகும், நூல்பல ஆய்ந்த முன்னோர் 3, 7ஆம் நட்சத்திரங்களை நீக்கி ஏனைய நட்சத்திரங்கள் சுபபலன் தருவன என்று மொழிந்துள்ளனர்.

பாடல் எண் 677 நூலில் இல்லை

மூன்றைந்தேழ் நான்முதல் ஒன்பதிற்றீ தாதியந்தமூன்று
மேன்றவிக்கால் இடையொன்ப திற்றீதின்ப என்பவல்லாது
ஆன்றமதி அட்டமதினம் எண்பத்தெட்டு ஆயகாலிற்
தோன்றியவை நாசிகங் கழித்தாற்சுப நாளென்பரே. (678)

3,5,7,4,9,1,10,3ஆம் நட்சத்திரங்களில் 1 ஜன்மத்தாரை, 3 விபத்துத்தாரை இவற்றில் தீயபலன்களே உண்டாகும், அவற்றிற்கு 10ஆம் நட்சத்திரமும் தீயதாம் மற்றும் சந்திராஷ்டமமும் தீயதாகும். எனவே தீயவை நீக்கி, சுபத்தாரைகளில் மனை எடுக்க வேண்டும் என்றவாறு.

தனதுநாளும் பின்னாளும் சாற்றிடு நாலுமாறும்
வினவியெட்டு ஒன்பான்நாளும் விருத்தியே மிகவுமுண்டாம்
பின்புமூன்று ஐந்துநாளும் ஏழாநாளி வையேயாகா
நினைவுமுன் சொன்னநாளில் நீமனைஎடுக் கும்வாறே. (679)

1,2 4,6,8,9ஆம் நட்சத்திரங்கள் விருத்தியை உண்டாக்கும். 3,5, 7ஆம் நட்சத்திரங்களில் மனை எடுக்கக் கூடாது இவையறிந்து மனை எடுக்கவும்.

உற்றதோர் மனையில்வரும் ஓரையில் உள்ளதாரகை மூன்றும் மிருத்துவாம்
சப்தநாள் ஒத்தஜீவன் என்றேயறி தக்கபின் ஒன்றுமே ஜீவனில்லையே
மற்றவெட்டு உடன்நாள்நிறை ஜீவனாமாக ஏகமே நாளுயிர் இல்லையேல்
பெற்றிடும் கமலச்சீவன் இல்லாமனை பேச்சுமூச்சில் பிரேதத்திற் கொப்பதே.(680)

முன்சொன்ன 3, 5, 7ஆம் நட்சத்திரங்கள் தீயவையாகும், மற்ற 7 நட்சத்திரங்கள் (1, 2, 4, 6, 8, 9, 10) சுபபலன் தருபவை எனவே நட்சத்திரங்களில் சுபத் தாரைகள் அறிந்து மனை செய்யாவிட்டால் அம்மனை பிணத்தினுக்கு ஒப்பாகும்.

வாஸ்து பூசை செய்தல் இதனைக் குருமூலமாகக் கேட்டறிக

திடமாய் வாஸ்துபூசைக்குத் தீர்த்தமெடுக்குங் குடந்தோளை
விட்டுநழு கேல்நழுமாயின் மேலும்மேலும் தொந்தரவே
விட்டுத்தோ ளைக்குடம்வீழ்ந் தால்வீயுங்குல மேவுடைபடுமேல்
கட்டுமெஜமான் கேடுறுவன் கவலைபெறுமே குலமாதோ. (681)

வாஸ்து பூசைக்குத் தண்ணீர் கொண்டு வரும்போது தண்ணீர்க்குடமானது தோளை விட்டு நழுவக் கூடாது, அவ்வாறு நழுவினால் மேன்மேலும் இடர் வந்து சேரும் மேலும் குலநாசம் உண்டாகும், மனைக்குரியவன் கேடடைவான்.

கால்உடல் தலையற்ற நாட்கள்

உன்னுகார்த்திகைஉத்திரம் உத்திராடம் காலற்றநாள்
அன்னுமிருகசீ ரிஷஞ்சித்திரை அவிட்டம் உடலற்றநாள்
பொன்னும்புனர் பூசம்விசாகமு டன்பூரட்டாதி தலையற்றநாள்
மன்னுமிவை ஒன்பதும்நீங்க மற்றதெல்லாம் முழுநாளே. (682)

கார்த்திகை, உத்திரம், உத்திராடம் மூன்றும் கால் இல்லாத நாட்கள் ஆகும் மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் மூன்றும் உடல் இல்லாத நாட்கள் ஆகும். புனர்பூசம், விசாகம், பூரட்டாதி மூன்றும் தலை இல்லா நாட்கள் ஆகும். இவை ஒன்பது நட்சத்திரங்கள் நீங்கலாக ஏனைய நட்சத்திரங்கள் யாவும் முழு நட்சத்திரங்களாகும்.

காலற்றன இடையற்றன கனைதலை யற்றனநாளில்
கோலக்குய மடவார் தமைக்கூடின் மலடாவார்
மாலுக்கொரு மனைமாளிகை இவைகோலிடில் பாழாம்
ஞாலத்தவர் வழிபோகினும் நலமாவதும் இலரே, (683)

காலற்ற, உடலற்ற, தலையற்ற நாட்களில் (நட்சத்திரங்களில்) பெண்களைப் புணர்ந்தால் கருப்பந் தரிக்காது, மாளிகை கட்டினால் பாழ்படும், பயணம் போனால் நலம் கிடைக்காது.

தங்கு புத்திரன் தானறுங் காலற்றால்
பொங்கு செல்வமே போகும் சிரமற்றால்
பங்கு சிற்றிடை அற்றநாள் பாரிலே
பங்கம் செய்திடும் என்றே பகர்ந்தனர். (684)

மனைசெய்யும் நட்சத்திரம் காலற்றதானால், புத்திர நாசமும், தலையற்றதானால் தனநாசமும், உடல் அற்றதானால் மரணபயமும் உண்டாகும்.

மங்கும் இப்படி மண்ணில் மனைசெய்தால்
இங்கும் இத்தனை நாட்கள் ஆகாதரோ
பொங்கு மேமுழு நாளில் புரிந்தாக்கால்
சங்கம் ஆகிடும் வேந்தன்சபை யைப்போல். (685)

இப்படியாக குறையுள்ள நாள் தவிர்த்து முழுநாளில் மனைசெய்தால் அரசனைப் போலச் செல்வமுடன் வாழலாம்.

நட்சத்திரபலன்

நாழியும் முரசுதோணி நல்லதோர் சதயநாளில்
வாழியாய் மனைமுகூர்த்தம் வருவதேதனங் கள்சேதம்
ஊழியால் நோயுங்காணு முறன்முறை நோக்குமாகுஞ்
சூழவே மனையும்பாழாம் சுருதியால் மயனுரைத்தார். (686)

பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி, சதயம் இந்த நட்சத்திரங்களில் மனை முகூர்த்தம் செய்தால் தனச் சேதம் உண்டாகும், நோயுண்டாகும், மரணபயமுண்டாகும், மனையும் பாழாகும் என்று மயனுரைத்தவாறே.

தேருடன் மும்மீன் மாசிதிறம் புள்ளுமாடி யஸ்தம்
பாருடன் உத்திரமுநாளில் பண்புடன் முகூர்த்தஞ் செய்தால்
சீருடன் தனங்கள் சேரும்செப் பியமனையும் வாழும்
பேருடன் மயன்தான் இதைப்பெரு மையாயுரை செய்தாரே. (687)

ரோகிணி, மிருகசீரிடம், மகம், அவிட்டம், உத்திராடம், அஸ்தம், உத்திரம் முதலான நட்சத்திரங்களில் மனை செய்தால், தனச்சேர்க்கையும், மனை நீண்ட ஆயுள் நிலைத்து இருத்தலும், முதலான நற்பலன்கள் உண்டாகும்.

அன்புடன் துரகமூங்கில் அரவமுப் பூரமாடை
தென்புடன் விசாகமூலம் திறமுடன் மனைநாளாக
பண்புடன் பசுக்கள்சாவு பாக்கியம் மக்கள்சேதம்
வன்புடன் மயன்தானித் தைவரிசையாய் உரைசெய்தாரே. (688)

அசுவினி, புனர்பூசம், ஆயில்யம், பூரம், பூராடம், பூரட்டாதி, சித்திரை, விசாகம், மூலம் முதலிய நட்சத்திரங்களில் மனை முகூர்த்தம் குறித்தால் பசுக்கள் சாவதும், தனநாசம், புத்திர நாசமும் உண்டாகும்.

மனை கோலற்காகாக் காலம்

விரிகதிர் மாமகம் விசாகம் திங்களாம்
அருங்கு சனாதிரை ஆயில்யம் புதன்
விரைகுரு சதயமும் வெள்ளி ரோகணி
இரைசனி பூராடம் எரிக்கும் நாட்களே. (689)

சூரியன் மகநட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் போதிலும், சந்திரன் விசாகத்திலும், செவ்வாய் திருவாதிரையிலும், புதன் ஆயில்யத்திலும், வியாழன் சதயத்திலும், சுக்கிரன் ரோகிணியிலும், சனி பூராடத்திலும் சஞ்சரிக்கும் போது மனை எடுத்தால் தீயபலன் உண்டாகும்.

அஞ்சுமகந் திருதிகையும் அநுடமொரு மூன்றுநவம்
மிஞ்சுகார்த் திகையுமிக்க மேவொணா ரோகணியும்
கஞ்சுநான்குத் திரமிந்நாளில் மனைகோ லுமவர்
துஞ்சுவாவ் ஆண்டுக்குள் துய்யமயன் சொல்லிதுவே. (690)

மகம், திருதியைதிதி, அநுஷம், நவமிதிதி, கார்த்திகை, ரோகிணி, சதுர்த்திதிதி, உத்திரம், முதலான நாட்களில் மனை எடுத்தால் ஒரு வருடத்தில் அழிந்து விடும்.

செங்கதிரோன் உதித்த நன்னாட் பரணியாகா
செழுமதிக்குச் சித்திரை செவ்வாய் உத்திராடம்
பொங்குபுதன் அவிட்டமென்பர் பொன்னிற் கேட்டை
புகர்பூரா டஞ்சனி யிரேவதி யினாளில்

மங்கையரை மணம்பு ணரில்வி தவையாவாள்
மனையெடுக் கிற்பாழா கும்வழி நடக்கார்
செங்கயற் கண்ணன் சேரமல டியாவாள்
சிறுகுழங் தைபிறந் திடினும் மரணந்தானே. (691)

சூரியன் பரணியிலும், சந்திரன் சித்திரையிலும், செவ்வாய் உத்திராடத்திலும், புதன் அவிட்டத்திலும், வியாழன் கேட்டையிலும், சுக்கிரன் பூராடத்திலும், சனி ரேவதியிலும் சஞ்சரிக்கும் போது திருமணம் செய்தால் பெண் விதவையாவாள் வீடுகட்டினால் பாழாகும், பயணம் சென்றவர் மீளமாட்டார். பெண்ணைப் புணர்ந்தால் மலடியாவாள், சிறுகுழந்தை ஜனனமானால் இறந்துவிடும்.

வீடாலயம் மடம்விக்கி ரகந்தோணி சந்தை
பாடாவிதி யான்மனை கட்டல் - கேடாகும்
ஆதிமுதல் மூன்றும் அவிட்டமுதல் ஐந்தும்
சோதிமுதல் நான்கும் துயர். (692)

வீடு, ஆலயம், மடம், சத்திரம், சிலைகள், வீதிகள், அரண்மனை முதலானவைகட்ட அசுவினி, பரணி, கார்த்திகை, அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி, சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை நட்சத்திரங்கள் ஆகாது துயர்தரும்.

வாஸ்து நிலையறிந்து குழி கெல்லல்

சீர்த்திப் புருஷன் விழிநோக்கும் மனையையறிந்து செயவேண்டிற்
பார்த்து மனையை நாலேழாய்ப் பகிர்ந்துக்காலிற் பதினேழுஞ்
சாற்றுந் தலையில் ஈரைந்துதள் ளிநடுவில் ஒருபங்கில்
ஏற்ற முகூர்த்தமா மென்றுமின்பம் பெரிதும் உண்டாமே. (693)

வாஸ்து புருஷன் விழித்திருக்கும் தினத்தில் மனைதனை 28 பாகங்களாகப் பிரித்து இருபக்கமும் தலைப் பகுதியில் 17பாகமும் கால்ப்பகுதியில் 10பாகமும் தள்ளி நடுவில் 1 பங்கில் தச்சு செய்து மனை எடுத்திட்டால் குறைவிலா வாழ்வுண்டாகும்.

கிடந்தபதியை நாலேழாய்க் கீரியதன்மேல் பரிவைத்தே
இடங்கொள்ள நுடநின்றமட் டுமிழுக்கவரு மேதீயந்தம்
குடந்தைதச மும்சூரியனாம் குபேரனுதிப்ப தெனவுரையே
நடந்துசோமன் சலத்தினிலும் நல்லமனைகள் தமைக்கோலே. (694)

அசுவினி முதல் அனுஷம் வரையான பகுதி சூரியனுக்குடையது, கேட்டை முதல் ரேவதி வரையான பகுதி சந்திரனுக்கு உரியது, சந்திரனுக்கான பகுதியில் மனை கோலவேண்டும்.

உரைசேரின் பமதில்வெப்பம் உலையுமென்று முன்வினையாம்
வரைசேர் ஜலத்தில்வாழ் வுண்டாம்வறுமை காணுஞ்சூரியனாம்
விரைசேர் குழலாய்மதி வாழ்வுவிதித்தப டியேமண்டலத்தில்
பரிவால்மனைக் குரைத்தபந்த தந்தானும்பார்த்து உரையே. (695)

சூரியனின் பகுதி தீயாகும், சந்திரனின் பகுதி நீர் ஆகும், தீயில் மனைசெய்தால் தீமையும், நீரில் மனை செய்தால் நற்பலனுண்டாகும், இது அவரவர், நல்வினை, தீவினைப் படியே நடக்கும் என்றவாறு.

பூமியில் முகூர்த்தம் செய்யுமிடம்

வாசமாம் பூமிதன்னில் வகுத்துநாற் கூறுசெய்து
பேசிமாநிதி பதங்கள் பெரியதோர் வித்தைசெல்வம்
ஈசனார்கண் டந்தன்னில் இனமனை எடுக்க வேண்டும்
ஓதினார் தமிழினாலே உத்தமமிது வேயென்றார். (696)

முன்னம் கூறியது போன்று தெரிந்தெடுத்த மையப் பகுதியினை நான்காகப் பிரித்து அந்தப் பகுதியை ஈசானம் என்றறிக அவ்விடத்தில் மனை எடுக்க நற்பலனுண்டாகும்.

முகூர்த்தம் செய்யும்போது உண்டாகும் சுபாசுபம்

உன்னிய முகூர்த்தஞ்செய் யவுகந்திடும் போதிலங்கே
துன்னியே மணிசேகண்டி துலங்கிடுசங் கீதமேளம்
கன்னியர் புரவியானை கண்டுமன் வார்த்தைகோவும்
பன்னிய மனையில்செல் லவருவது பட்சிநன்றே. (697)

மனை கோலத் தச்சு செய்யும் போது மணி, சேகண்டி (செயகண்டி) சங்கீதம், மேளவாத்தியம், குதிரை, யானை, சுபச்சொற்கள் இவை ஒலித்தால் சுபபலனேயாகும்.

வாழ்ந்திடுமனை யைச்செய்ய மகிழ்ந்திடச் சங்குமேளம்
சூழ்ந்திடமணி சேகண்டி துய்யசங் கீதந்தன்னில்
ஆழ்ந்திடும்புர வியானை அங்கது கழுதைநாதம்
தாழ்ந்திடக் கேட்குமாகில் தாழ்விலா மிகவாழ்வாமே. (698)

மனை கோலும் போது சங்கொலி, மேளவாத்தியம், மணியோசை, செயகண்டி ஓசை, சங்கீதம், புரவி, யானைகளின் ஒலிக்குரல், கழுதை கத்துதல் இவ்வொலிகள் கேட்டால் குறைவற்ற வாழ்வுண்டாகும்.

முகூர்த்தஞ் செய்யக் குழிகெல்லும் போதுண்டாகும் சுபாசுபங்கள்

மனைதனில் வந்துநின்று வாஸ்துவின் நிலையறிந்து
வினவியவிடத் துமேவிரும் பியேமுகூர்த்தஞ் செய்ய
கனமெனு மண்ணைவெட் டக்கருதிய குழியிற்குள்ளே
இனமெனுஞ் சகுனங்கா ணுமியல்பது விளம்புவேனே. (699)

மனைகோல முகூர்த்தமறிந்து குழி கெல்லும்போதுண்டாகுஞ் சகுனங்களின் பலன் உரைக்கிறேன் கேட்பாயாக.

நல்லதோர் நாளும்பக்க முகூர்த்தமும் பொருந்தக்கேட்டு
கெல்லித்தான் பார்க்கும்போது கெடுகரி நோயதாகும்
புல்லியவுமி யேகாணிற் பொருளது கேடுசொல்லு
மெல்லிய விறகுகாணின் வியன்குலம் கேடதாமே. (700)

நல்லதோர் முகூர்த்த நாளில் குழிகெல்லிப் பார்க்கும்போது கரித்துண்டு வந்தால் நோயுண்டாகும் உமி காணப்பட்டால் கேடுண்டாகும், விறகு காணப்பட்டால் குலநாசம் உண்டாகும்.

திண்டிறல் எறும்புதேளு சிதலொடுகட் டைபொல்லா
அண்டமும் உதிருங்கேசம் அமர்ந்திடின் முற்றும்பொல்லா
வெண்டலை யோடுகாணில் வெறுமையுங் கேடுமென்று
தண்டமிழ்நூல் வல்லோர்கள் சாஸ்திரத்து உண்மைபாரே. (701)

எறும்பு, தேள், கறையான், கட்டை, மண்டைஓடு, தலைமயிர், முதலியன கிடந்தால் மிகவும் பொல்லாத பலனுண்டாகும் என மயன் உரைத்தவாறே.

மண்டுகம் அரணைபல்லி வன்புழுச் சிலந்திவண்டு
நண்டுகள் நடக்குமாகில் நன்மையே மிகவுமுண்டாம்
கொண்டடெழும் உடும்புபாம்பு கொடியதேள் ஆமைபூரான்
மண்டெலி கிடக்குமாகில் வாழ்வுபோய் வெந்துபோமே. (702)

தவளை, அரணை, பல்லி, மண்புழு, சிலந்தி, வண்டு, நண்டுகள் தோன்றினால் மிக்க நன்மையே உண்டாகும், உடும்பு, பாம்பு, தேள், ஆமை, பூரான், எலி முதலியன கிடந்தால் வாழ்வு போகும்.

கல்லொடு செங்கல்சிப்பி கண்டுகண்கனக் கவாழ்வாம்
நல்லுயிர்ப் பிள்ளையென்று நயம்படப் பெருகிவாழ்வர்
பல்லொடு ஒடுசாம்பல் படுகரி வேர்க்குந்துத்தி
இல்லத்தில் சாவுகேடா இருவினை விளையுமாதோ. (703)

கல், செங்கல், சிப்பி, காணில் நல்வாழ்வாம், புத்திரசம்பத்துடன் வாழ்வார்கள், பல்லுடன் கூடிய மண்டைஓடு, சாம்பல், கரி முதலியன காணப்பட்டால், மரணமுடன், தீயபலன்களுண்டாகும்.

ஈண்டிய தனத்தைக்காணில் இன்பமாம் துன்பமில்லை
காண்டகு தனங்கள்சேரும் கவலையாம் கல்லுகாணில்
பாண்டரும் பசுவின்கொம்பு தானியஞ்செங் கல்வெள்ளி
வேண்டிய யோகமுண்டாம் மிகுந்திடுஞ் செல்வந்தானே. (704)

ரூபாய் நாணயங்கள் காணப்பட்டால் இன்பமுண்டாகும், தனச் சேர்க்கையுண்டு, கல் (கருங்கல்) காணப்பட்டால் கவலையுண்டாகும், பசுவின் கொம்பு, தானியம், செங்கல், வெள்ளி காணில் யோகமுண்டாகும், மிகுந்த செல்வமுண்டாகும்.

பொன்னுடன் வெள்ளிசெம்பு பொருந்திடின் நன்மையாகும்
பின்னுமோ டிரும்போடு ஈயம்பித்தளை மத்திபந்தான்
கன்னல்சேர் மொழியினாளே கருங்கல்லோ டெலும்புகாணில்
மன்னியமனை யாள்சாவாள் மாளுவன் கணவன்றானே. (705)

தங்கம், வெள்ளி, செம்பு காணப்படின் நன்மையாகும், இரும்பு, ஈயம், பித்தளை காணில் மத்திபம், கருங்கல், எலும்பு காணில், மனையாளும், கணவனும் இறப்பார்கள்.

தீண்டுமே தேளுமாகில் சிதலொடுசெல் வம்போகும்
மூண்டிடு வண்டுகசமும் முகரமொடு காணலாகா
வேண்டினார் இவைகளெல்லாம் வறுமையாம் என்றுபின்னும்
நீண்டதோர் உலகிலந்நாள் நிகழ்த்தினர் மயனுமன்றே. (706)

தேளும், கறையானும் தோன்றினால் செல்வம் அழியும், வண்டு, தலைமயிர், சங்கு இவை காணில் வறுமையுடன், தனநாசம் உண்டாகும்.

இளமணல் சூனியங்கள் இகழ்ந்திடும் தலைகளோடு
வளமிகு பானைகூபம் வளர்ந்திடும் மரங்கள்கட்டை
தளமிக பிளப்புச்சோர்வு தந்திடுஞ் சுக்கான்கல்லு
தளமிக உமியுஞ்சாம்பல் தலந்தனிற் காணலாகா. (707)

மணல், மண்டைஓடு, பானை, கிணறு, மரக்கட்டை, சுக்கான்கல், உமி, சாம்பல் முதலியவை காணப்பட்டாலும் பெருங்கேடே விளையும்.

கல்லுடன் செங்கல்சிப்பி கண்டவன்கன மாய்வாழ்வான்
வெள்ளியும் பொன்னுமுத்தும் வெளுப்புடன் சிவப்புமாகும்
பல்லுடன் ஒடுசாம்பல் பலகரி தோன்றுமாகில்
அல்லலும் அதிகமாகும் அம்மனை சுடுகாடாமே. (708)

கல், செங்கல், சிப்பி காணில் நல்வாழ்வுண்டாகும்,வெள்ளி, தங்கம், முத்து, சிவப்பு, வெள்ளைக்கற்கள் காணில் நற்பலனும், பல், மண்டைஓடு, சாம்பல், கரி காணில் தொல்லையும், மரணமுமாகும், அம்மனை சுடுகாடாகும்.

செங்கல்லே காணுமாகில் செம்பொன்னே சேர்வதாகும்
மங்கியே சிப்பிகாணில் மைந்தரும் மிகவுமுண்டு
துங்கமாய்ப் பசுவேர்காணில் துக்கமே மிகுதியாகும்
கங்குலால் கரியேகாணில் கல்மனை எரியுங்கண்டாய். (709)

செங்கல் காணப்படில் பொன் சேர்க்கையுண்டு, சிப்பிகாணில் புத்திர விருத்தியுண்டாகும் பசுவின் எலும்பு காணில் துக்கம் அதிகரிக்கும், கரித்துண்டு காணில் மனை தீயில் எரியும்.

வேறு

நல்லதோர் நாளைப்பார்த்து நலமுடன் முகூர்த்தங்கொண்டு
கெல்லிய குழியைப்பார்க்கில் கிடந்தநற் சகுனந்தன்னில்
புல்லையும் உமியுங்காணில் பொருளது கேடதாகும்
வில்லிய விறகுமாகில் விளங்கிடாக் குலமென்றோதே. (710)

நல்முகூர்த்த நாளில் குழிகெல்லிப் பார்க்கும்போது காணும் சகுனத்தில், மஞ்சள்மண், உமி காணப்படில் பொருள்நாசம், விறகுகாணில் குலநாசமுண்டாகும்.

தெண்டிரைக் கறையான் முட்டைசிதலொடு நண்டுக்காலி
மண்டையும் பொறுத்துக்கி ரிமரித்திடில் மிகவும்பொல்லா
வெண்டலை எறும்புகாணில் வெறுமையும் நோவும்காட்டும்
வண்டமிழ் நூலின்வல்லோர் வகுத்தனர் இதனை மன்னோ. (711)

கறையான், சிலந்தி, ஈசல், நண்டுவாய்காலி, (நட்டுவாக்கிலி) முதலியன தென்பட்டு இறந்தும் போனால் பொல்லாத பலனுண்டாகும், மண்டைஓடு, எறும்பு, காணில் நோயுண்டாகும், மேலும் தனநாசமும் உண்டாகும்.

வேறு

நாற்றிசை நடுவேயாக நலமுள வட்டம்போல
தாற்றிய முழங்கையாழந் தணிவதாய்க் கெல்லிநல்ல
தூற்றிய சிப்பிகாணில் சுற்றத்தார் கிளையைமாற்றும்
காற்றிய கரியைக்காணில் கனல்படும் இல்லந்தானே. (712)

மனையின் நடுவே வட்டமாக முழங்கை ஆழம் குழி தோண்டிப்பார்க்கும் போது அக்குழியில் சிப்பிகாணப்பட்டால் உறவினர் பகையாவர், கரி காணில் வீடு தீக்கிரையாகும்.

சிலையது காணிலாக்கம் செங்கல்லே கனகமாகும்
நிலைசிப்பி காணிற்பிள்ளை நெடுநாளும் பலநோயுண்டாம்
உலைந்திடுஞ் சருகுகாணில் தையலுக்கு உறவுண்டாகும்
புலைக்கரி ஆகிலின்னம் பொரிபட்டு வேகுந்தானே. (713)

சிலை காணப்பட்டால் நற்பலன், செங்கல் காணில் பொன் சேர்க்கை, சிப்பிகாணில் புத்திர நாசம், இலைச்சருகுகாணில் பெண்கள் நலமடைவர், கரி காணில் தீப்பற்றும்.

கணங்குநாப் புழுவோயாகில் காரியம் குறைவுண்டாகும்
குணங்குன்றும் ஓடுகாணில் குடியது ஓடிப்போகும்
பிணங்குறு வேரும்மற்றால் பெருங்கிளை அறுமேயென்பர்
இணங்கிய செங்கல்காணில் இருநிதி வளருந்தானே. (714)

மண்புழு காணில் காரியம் தடைப்படும், பானை ஓடு (கூரைஓடு) காணில், குடிவீடு மாறிவிடும், மரவேர் ஏதும் இருந்து அறுபட்டால் சந்ததி அற்றுப் போகும், செங்கல் காணில் தனலாபமுண்டாகும்.

ஆக்கிய குழியில் ஜலம் விடும் ல்ட்சணம்

தாழ்விலா மனைநடுவே சதுரமாய் ஒரு முழத்தில்
ஆழமும் அகலங்கெல் லியதனில்நீர் விட்டபோது
வாழ்கதி ரோனைநோக்கி வலமிக வருவதாகும்
ஏழ்புவி இடமேசுற்றி எழில்மனை எடுக்கப்பாழாம். (715)

மனையின் நடுவே சதுரமாய் 1 முழ ஆழ அகல, நீளத்தில் குழி கெல்லி அதில் தண்ணீர் ஊற்றிப் பார்க்கும்போது சூரியனை நோக்கி வலப்பக்கமாகத் தண்ணீர் சுற்றினால் நற்பலனும், இடப்புறமாகச் சுற்றினால் அம்மனை பாழாகும்.

வேறு

நிலமது முழமதாக நீர்தனை விட்டபோது
வலமது புரியுமாகில் வான்பொருள் வந்துசேரும்
கலகமாய் இடமேசுற்றில் கன்னிகை மரணமாகும்
சலமது குமிழியாகில் தாழ்ச்சியாய் வெந்துபோகும். (716)

மேற்படிப் பள்ளத்தில் தண்ணீர் விட்டபோது வலமாகச் சுற்றினால் தனலாபம், இடமாகச் சுற்றினால் பெண்டிர் மரணமாவர், குமிழி கிளம்பினால் மனையானது தீ விபத்திற்குள்ளாகும்.

ஜலம் விட்ட குழியில் புஷ்பமிட்டுப் பார்க்கும் லட்சணம்

தாளவே முழங்கையாழம் தசைபெற வெட்டிவாங்கி
நீளவே எடுத்துவந்து நீரதில் பூவும்போட்டுக்
கேளடா ஈசான்யத்தில் கிருபையாய் நீரைவார்த்தால்
சூளவே திசையில்பூவும் சுற்றியதிசை யைப்பாரே. (717)

முழங்கை ஆழம் பள்ளம் தோண்டித் தண்ணீர்விட்டு அதில் ஈசான்ய மூலையில் ஒரு புஷ்பத்தை விட்டுப் பார்க்கும் போது புஷ்பமானது சுற்றிவரும் திசையைக் கவனி.

வலம்புரி சுற்றுமாகில் வரமதுமகிழ்ச் சியுண்டாம்
இடம்பெற சுற்றுமாகில் இல்லறமங் கைக்காகா
பலம்பெற உள்ளேசுற் றில்பகையுண் டுபலனாமில்லை
செலந்தனில் பூவும்வாகும் செப்பிடாய் மறைக் கொண்ணாதே. (718)

புஷ்பம் வலமாய்ச் சுற்றினால் நல்ல மகிழ்வான பலனுண்டாகும், இடமாய்ச் சுற்றினால் மனைவிக்கு ஆகாது உள்ளே ஒரே இடத்தில் சுற்றினால் பகையே காணும் இவ்வாறு காணும் பலனை மறைக்காமல் கூறிவிடு என்றவாறு.

ஈன்றியபூ வைப்போட்டால் இடம்புரி சுற்றுமாகில்
தோன்றிய துன்பமெய்தும் துய்யபூவல மேயாகில்
வான்றரு சுகமாய்வாழ்வான் வலமிக ஒடுமாகில்
கான்றரு குழவிதுக்கம் காட்டிடும் சமநன்றாமே. (719)

குழியில் விட்ட ஜலத்தில் பூவைப் போட்டால் இடம்புரி சுற்றினால் துன்பம் உண்டாகும், வலம்புரி சுற்றினால் சுக வாழ்வுண்டாகும், வலத்தில் ஓடினால் புத்திரநாசம் ஒரே இடத்தில் கிடக்க நற்பலனுண்டாகும்.

வேறு

திடமுள நிலத்திற்சென்று தெரிந்துநாற் சதுரமாக்கி
நடுவது வாகக்கெல்லி நாற்றிசை முழமுங்கோலி
வடிந்திடு நீரைவிட்டால் வலஞ்சுழித்து ஓடில்வாழ்வார்
இடமது வாகச்சுற்றில் இடுக்கமே மிகுதியாகும். (720)

முன்சொன்னபடி புஷ்பமானது வலஞ்சுற்றினால் வாழ்வுண்டு, இடஞ்சுற்றில் கேடுறும்.

பன்னிய குழியிற்றண்ணீர் பாலுமாய்க் கலந்துவிட்டு
நன்னிய பூவைப்போட்டால் நலமுண்டு வலமாய்ச்சுற்றில்
துன்னிய சுகங்கொடுக்கும் தூவிடஞ் சுற்றிலாகா
உன்னிரு புறமுஞ்சுற்றில் உயரும்பின் செல்வமென்னே (721)

வலம் சுற்றினால் நற்பலன், இடம் சுற்றினால் தீயபலன், வலம் இடம் இரண்டும் சுற்றினால் சிறிது காலஞ் சென்று செல்வச் சேர்க்கையுண்டாகும்.

அப்புஷ்பம் ஒதுங்கி நிற்கும் பலன்

இந்திரன் மூலைதன்னில் இயல்புடன் கிழக்கில் நின்றால்
செந்திரு வாசமாவாள் செம்பொன்னுஞ் சேருமின்பம்
மைந்தரைப் பெற்றுவாழ்வார் வளர்கன்று காலிசேரும்
முந்தவே மயனார்சொன்ன முறைமைநூல் இதுகண்டாயே. (722)

இந்திரன் மூலையென்னும் கிழக்குத் திக்கில் குழியில் உள்ள ஜலத்தில் விட்ட புஷ்பமானது வந்து ஒதுங்கி நின்றால் அம்மனையில் மகாலெட்சுமி குடிபுகுவாள், பொன்லாபம், புத்திரலாபம், கால்நடை சேர்க்கையுண்டாகும்.

அக்கினிமீ தில்நின்றால் ஆயிழை மலடியாவாள்
செக்கர்வா ளரவந்தீண்டுந் தீப்படும் மண்ணெடுக்கில்
தொக்கிழ மிகவுமுண்டு சோரர்கள் கலகமுண்டு
இக்கரு மயனார்சொன்ன இசையுநூல் இதுகண்டாயே. (723)

அக்கினி மூலையில் நின்றால் மனைவி மலடாவாள், சர்ப்பந்தீண்டலும், தீவிபத்து ஏற்படுதல் திருடர்பயம் முதலான தீய பலன்களே உண்டாகும்.

அந்தகண் தெற்குமூலை அன்புடன் வந்துநிற்கில்
சிந்தனை மிகவுமுண்டாஞ் செருக்கமுங் கலகமுண்டு
பிந்திய தீமையோடு பிணியினால் அச்சமுண்டாம்
செந்தமிழ்ப் புனைந்தபாடல் தீதிலாமயன் சொன்னாரே. (724)

தெற்கில் புஷ்பமானது வந்து நின்றால் குழப்பமும், மயக்கம், கலகம், நோயால் கவலை முதலான தீய பலன்களை உண்டாக்கும் என மயன் உரைத்தவாறே.

கன்னிமூலை யிலேநின்றால் கைப்பொருள் மிகவுண்டாகும்
மன்னமுந் தனமுந்சேரும் ஆயிழை வந்துநிற்பள்
பொன்னொடு தானியங்கள் பொருந்தவே செல்வமுண்டாம்
முன்னமே மயனார்சொன்ன முறைமைநூல் இதுகண்டாயே. (725)

கன்னிமூலையெனும் தென்மேற்கில் புஷ்பம் நின்றால், தனலாபம், ஜீவனலாபம், லக்ஷ்மி கடாக்ஷம், பொன், தானியவிருத்தி முதலான சிறந்த பலன்களுண்டாகும்.

வருணன்றன் மேற்குநோக்கி வந்துமே நிற்குமாகில்
இருநிதிசெல் வமுண்டாம் எங்குமே வினையுமாறி
கருதிய கருமநன்றாங் கருணையும் பெற்று வாழ்வர்
மருவிய கனதையுண்டாம் வளம்பெறுமயன் சொன்னாரே. (726)

மேற்கில் புஷ்பம்நிற்க, தனலாபம், தீவினை அகலுதல், ஜீவகாருண்யம் முதலான நற்பலன்கள் உண்டாகும்.

வாயுமூலை தன்னில் வந்துடன் நிற்குமாகில்
காயநோய் கண்டுசாவன் கனவினால் பொருளுஞ்சேதம்
பேயுமேபிடித் துக்கொள்ளும் பிணஞ்சுடு காடதாகும்
சேயுமேசா வனென்று செயல்பெறுமயன் சொன்னாரே. (727)

வடமேற்குத் திக்கில் புஷ்பம் வந்து நின்றால் உடற்பிணியால் மரணமுண்டாகும், திருடர்வந்து பொருட்களை அபகரித்துச் செல்வர், பேயும் பிடிக்கும், மனை சுடுகாடாகிப் போகும், குழந்தைகள் சாவதும் முதலான தீய பலன்கள் உண்டாகும்.

குபேரன்றன் வடக்குநோக்கிக் குணம்பெற நிற்குமாகில்
விவரமாய்ப் பொருள்கைகூடும் வேண்டியசொர் ணஞ்சேரும்
சபைநலம் பெரியோனாவன் தன்மசிந்தனை உண்டாகும்
அபயமென்றோ ரைக்காப்பன் அருள்பெறுமயன் சொன்னாரே. (728)

வடக்கில் புஷ்பம் நின்றால் தனலாபம், சொர்ணலாபம், புகழ், தர்மசிந்தனை, உதவியென வந்தவரை ஆதரிக்கும் நற்சிந்தனை முதலான சுபபலன்கள் உண்டாகும்.

ஈசான்யமூலை தன்னில் இன்பமாய் இருந்துகொண்டு
வாசமாமதனில் நின்றால் வரிசையும் வாழ்வுமுண்டாம்
போசனம்பெரி யோர்க்கெல்லாம் பொருந்திய மனிதனாவான்
வாசமின் குழலினாளே மயனுரை நூல்கண்டாயே. (729)

வடகிழக்கில் புஷ்பம் நின்றால் பொருட் சேர்க்கையும், நல்வாழ்வும், பெரியோர்க்கெல்லாம் உணவளித்தலும், முதலான சுபபலன்களும் உண்டாகும்.

குழியில் ஜலம் விட்டு அந்த ஜலத்தைப் பார்க்கும் இலட்சணம்

நாலுசாண் அகலநீளம் நாலுசாண் ஆழமாக
நாலுமூலைக்கும் மற்றை நடுவதிற்குழி யாய்வெட்டி
மேல்கதிர் உதயகாலம் வெள்ளநீர் நிரம்பப்பெய்து
மாலையில் பாருமென்று மயனுமே யுரைத்தானன்றே. (730)

4 சாண் நீள, அகல ஆழத்தில் குழிவெட்டி அதில் அதிகாலையில் நிறையத் தண்ணீர் ஊற்றி மாலையில் சென்று பார்த்து அதன் பலன் அறிய வேண்டியது.

பார்த்திடும் போதிலங்கே பரிவுடன்சல மேல்சேரேல்
சீர்த்துடன் இருக்குமாகில் செல்வமும் மக்கட்பேறாம்
பேர்த்தடுங் காய்ச்சலாகில் பெரியதோர் மிடியுமாகும்
ஆக்கியமனை யேபாழாம் அறிந்துசொல் அவனியோர்க்கே. (731)

மாலையில் பார்க்கும்போதில் அதில் தண்ணீர் மிச்சம் இருந்தால், செல்வமும் மக்கட்பேறும் தண்ணீர் சிறிதும் இன்றிக் காய்ந்திருந்தால் பெருங்கேடுவரும், மனையும் பாழாகும் என அவனியின் மாந்தருக்கு அறிந்து கூறுவாயாக.

வேறி

நிறையநீர் வார்த்து நீள்கதிர் எழுந்தபோது
முறையதில் வந்துபார்த்தால் முன்படி நீருண்டாகில்
இறையவள் இல்லம்போல் இருநிதி பெருகுமென்று
செறிவளை கையின்மாதே செய்யதோர் மயனுஞ்சொன்னான். (732)

சூரியோதயத்தில் நிறையநீர் ஊற்றி மாலையில் பார்க்கும் போது தண்ணீர் இருந்தால் மகாலெட்சுமியின் இருப்பிடம்போல் செல்வச் செழிப்புண்டாகும்.

வற்றியதோர் சிலந்திக்காலாய் வகிர்பிளந்து இருக்குமாகில்
உற்றிடுபிணி உண்டாகும் உறுபொருட்கெடு மேயென்றுஞ்
செற்றலர் சிறுத்துவந்து செல்வத்தைச் சிதைப்பாரென்று
மற்றுநூன் முறைமையாலே மயனுமே உரைத்தவாறே. (733)

பள்ளத்தில் தண்ணீர்முற்றிலும் காய்ந்துபோய் சிலந்திக்கால் போல வெடித்துக் காணப்பட்டால் நோயும், நஷ்டமும் உண்டாகும், பகைவரால் தனநாசம் உண்டாகுமென மயனுரைத்தார்.

முகூர்த்தத் தேங்காய் மேற்பூச்சும் அதன் சகுனமும்

உண்டிய கணபதிக்கு உகந்ததோர் தேங்காய்ப்பூசை
பெண்டியே அடைக்காய்நல் பெருகியசெம் பொன்வைத்து
கண்டியே முழஞ்சாணிட்டு கனமனை தன்னிற்கெல்லி
தொண்டியே வன்மைபெற்ற சொல்குறியறிந் துசொல்வாம். (734)

கணபதிக்குத் தேங்காயினால் பூசை செய்யத் தேங்காயுடன் தட்சிணை வைத்துச் செய்யும் பூசையின் திறம் சொல்கிறேன் கேளுங்கள்.

முத்தொடு பருப்புநெல்லி முழுதுமா வரிசாளந்து
அத்தொடு சந்தனத்தை அழுத்தியே தேங்காய்தன்னை
மெத்தவே கணபதிக்கு வேண்டிய முகூர்த் தஞ்செய்யில்
ஒத்துடன் உடையுமாகில் உண்மையாய் வாழ்வார்தானே. (735)

காப்பரிசி, வெற்றிலைபாக்குடன், தேங்காயில் அரிசிமாவு, சந்தனம், அத்தர், நெல்லிக்காய், பருப்பு இவை கலந்து பூசி கணபதியை வேண்டித் தேங்காயை உடைக்கும் போது சமமாக உடைந்தால் நல்வாழ்வுண்டாகும்.

தேங்காய் உடைவதின் சகுனபலன்

அடித்ததோர் தேங்காய்தானும் அலறியே சிதறிவிட்டால்
முடித்ததோர் மனைவிக்காகா முகிலுடன் ஓடுமாகில்
எடுத்ததோர் சிறுவன்கையில் இடறியே விழுமேயானால்
வடித்ததோர் சிவாலயங்கள் வாழ்வெல்லாம் பாழாமென்றே. (736)

தேங்காயானது சிதறிவிட்டால் மனைவிக்கு ஆகாது, கையிலிருந்து நழுவி விழுந்து விடுமானால் உருவாகுமிடம் சிவாலயமானாலும், வீடானாலும் பாழ்பட்டுப்போகும்.

முடிபெருத்து வட்டமிடிற் திருவேசேரும்
மூன்றிலொரு பங்குடைந்தால் ஜெயசந்தோஷம்
நெடியலொன்று அஞ்சிலொன்று கலகஞ்சேரும்
நீங்கநரம் பினில்பிடித்தால் நிதானவாழ்வு
கடியகாய் கைக்குள்ளேல் கலகஞ்சேரும்
கண்ணிரண்டு மூன்றடித்தால் கனத்தபூசை
அடியவர்க்கு முன்னிலங்குங் குருவாம்வேலர்
முதல்தேங்காய் சகுனமெனவ றிந்துகொள்ளே. (737)

தேங்காய் உடைக்கும் போது முடிபெருத்து உடைந்தால் செல்வம் சேரும், மூன்றில் ஒரு பாங்காக உடைந்தால் மிக்க சந்தோஷமுண்டாகும், ஒருபாகம் 5ல் 1 பங்கானால் மற்றது சிறிதானால் கலகமுண்டாகும், நரம்பு பிடித்தால் நிதானமான வாழ்வுண்டாகும், காயானது கைக்குள்ளேயே உடைந்தால் கலகம் உண்டாகும், கண் உள்ள இடத்தில் உடைந்தால் சிவபூசையுண்டாகும், இவ்வண்ணமாக பலன் ஏற்படும்.

அடித்தகாய் சிதறினாக்கால் அரசர்க்காகா
அந்தமனைக் காகாது அதுவுமல்லால்
தடித்தசட் சனைக்கண் விடதரணியில்
காய்த்தறியாமல் மரங்காய்ந்து சாய்ந்துபோகும்
முடிதலையின் ஓடுவிட்டால் கைதான்கொண்டு
மோதினவர்க் காகாது உண்மையாக
படிந்திட்டவந் தோர்க்காகா உதிரமாய்ப்
படீரெனமூச் சுவிட்டு உடைந்தக்காலே. (738)

அடித்தகாய் சிதறினால் மனைக்கதிபதிக்கு ஆகாது, மனையும் பாழாகும், கண்போல தெரித்து உடைந்தால் அங்கு நடும்மரம் காய்க்காமல் சாய்ந்துவிடும், குடுமி தனியாக வந்துவிட்டால்

உடைத்தசிற்பனுக்கு ஆகாது, மூச்சுவிட்டு உடைந்தால் அங்கு வந்த அனைவருக்கும் கேடுண்டாகும்.

மூடியிரண் டாகவுடைந் திடில்முதல் உண்டாகும்
மூடிபெருத் தாலுநன்மை முக்கிய மாங்கிழ்
மூடிதன் னிலொரு முட்டுறிற் சமனாம்
மூடிகொப் பரைகழன் றால்முழு நன்றாமே. (739)

தேங்காய் 2 மூடிகளாய் உடைந்தால் தனலாபம், முடிபெருத்தால் நன்மை, முடியில் ஒரு சில் உடைந்தால் சமபலனும், தேங்காய் கொப்பரை (பருப்பு) கழன்றால் நன்மையே.

குருத்துடன் முளையுநன்மை குறுக்காகில் அதுவேதின்மை
அருத்துவ சிதறுமாகில் அறுந்தனம் துன்பமெய்தும்
பெருத்ததிங்(கு) அழுகுமாகில் பேசொணாச் சங்கடங்கள்
வருத்தமும் மிகுதியாகும் ஆண்கவி உரைத்தவாறே. (740)

தேங்காய் குருத்துமுளை இருந்தால் நற்பலனுண்டு, சிதறிப்போனால் தனநாசம், துன்பமுண்டாகும், தேங்காய் அழுகி இருந்தால் சொல்லமுடியாத துன்பங்கள் வரும்.

முடிபெருத்து வட்டமிடிற் திருவேகேடும்
மூன்றிலொடு பங்குடைந்தால் ஜெயசந்தோஷம்
நெடியவைந்து இரண்டிற்கும் தொலையாச்செல்வம்
நீங்கிநரம் பேபிடித்தால் நீடுவாழ்வாம்
கடுகதனை யுள்ளானால் இரத்தினஞ்சேரும்
கனக்கவஃ திரண்டிற்கு கருதுபூசல்
வடிவமெனுந் தமிழோதும் மயனார்சொன்ன
வளமைதேங் காய்ச்சகுண வண்மைதானே. (741)

முடிபெருத்து வட்டமாய் உடைந்தால் செல்வம் சேரும், மூன்றில் 1 பங்காய் உடைந்தால் வெற்றியும் மகிழ்ச்சியுமுண்டாகும், 5 பங்கும், 2 பங்குமானால் செல்வமுண்டாகும், நரம்பு பிடித்தால் நீண்ட ஆயுளுண்டு, சில்தெரித்து ஜலத்தில் விழ இரத்தினலாபம், இரண்டு சில்தெரித்து விழ சண்டையும், பூசலும், இவ்வாறாகப் பலன் உண்டாகும்.

உண்டோர் இரண்டு தனக்கு நன்மை ஆறுநாலா
உடையவெகு துன்பமது ஒதங்கே
எண்டும் எயிற்கண் டெறிந்தால் மரணம் ஆவன்
ஆகவுநல் ஓடுவிட்டால் அசனம்வெல்லும்

விண்டு ஒடு தெறித்திட வேபிணி யாமெய்யின்
மேதினியிலே விளைவும் விலையுமாவன்
பண்டு தமிழ் அறிந்து ஓதுமயனார் சொன்ன
பாடற்றேங் காய்ச்சகுனம் பகரக்கேளே. (742)

இரண்டாய் உடைந்தால் நன்மை, நான்கு, ஆறாக உடைந்தால் துன்பம், தெறித்து விழுந்தால் மரணமாகும், ஒடுகழன்றால் மகிழ்வுண்டு, ஒடுதெரித்தால் பிணியுண்டாகும், உலகில் இப்படியாகப் பலனுண்டாகும் என மயன் உரைத்தபடியே.

மனை முகூர்த்தக்கல் விவரம்

பகருவேன் ஆலயங்கள் கோபுரங்கள்
பரிவான நகரமொடுமா ளிகைகள்தானும்
சுகமுடனே முகூர்த்தமிடும் நாளில்செங்கல்
சுத்திசெய்து ஒன்பதுமேற் காதியாக
வகையுடனே ஒன்பதுகோள் அதின்மேல்தாக்கி
வரிசையுடன் பூசைபுஷ்பம் தூபங்காட்டி
நகையுடனே மங்கிலிய மாதர்கையால்
நலமுடனே தொட்டெடுத்த பலனைச் சொல்வேன். (743)

ஆலயங்கள், கோபுரங்கள், நகரங்கள், மாளிகைகள், முதலியவற்றிற்கு முகூர்த்தம் செய்யும் நாளில் சுத்தம் செய்த செங்கற்கள் ஒன்பதை மேற்கு முதல் ஒன்பது கிரகங்களாகப் பாவித்து ஆவாஹனம்செய்து, புஷ்பம் சாத்தி, தூபம் காட்டி சுமங்கலியின் கையால் எடுக்கச் சொல்லவும் அதன் பலன் உரைக்கிறேன் கேள்.

கிரக அமைப்பு

பானுவுக்குத் தான்நடு பார்க்கவர்க்குப் பூர்வமிந்து
தானந்திசேய் தட்சணமா மிராகுவுக் கேநிருதி
மைந்தன்மேல் பார்கேது வாயுகுரு உத்திரமாம்
புந்திக்கு ஈசான்யாம னப்போற்றுவர் பெரியார். (744)

சூரியனுக்கு நடு, சந்திரனுக்கு தென்கிழக்கு, செவ்வாய்க்குத் தெற்கு, இராகுவிற்குத் தென்மேற்கு (நிருதிமூலை) கேது வடமேற்கு (வாயுமூலை) வியாழனுக்கு வடக்கு, புதனுக்கு வடகிழக்கு (ஈசான்யமூலை) இவ்வாறாகக் கிரகங்களின் திக்காகும் சுக்கிரன், கிழக்கும், சனி மேற்குமாகும்.

பலன்

தானுமே செங்கல்லாலே தான்மனை கோலவேண்டில்
பானுவாம் முதற்கிழக்கே பருதியின்முத லாய்மேற்கே
ஊன்றியே பூமிதன்னில் உகந்துநீ வாழ்கவென்று
தேனுயிர் வாழ்கவேதான் செய்யபிஷே கஞ்செங்கல். (745)

செங்கல்லினால் மனைகட்ட கிழக்கு, மேற்குத் திக்கில் செங்கல்வைத்து மஞ்சள் நீர்ஊற்றி சந்தன திலர்தம் வைத்து நீண்டநாள் வாழ்கவென வாழ்த்தித் துவங்கவேண்டும்.

செங்கல்லால் கிரகம்நாட்டித் திறமையாய்த் தீபங்காட்டிக்
கொங்குசேர் குழலினாளே குமரனைக் குலவிப்போற்றி
மங்கலமா துமூவர் மகிழ்ச்சியாய் வரவழைத்துத்
திங்கள்போல் முகநல்மா துசேயிழைகை யால்வாங்கே. (746)

செங்கல் அடுக்கி மனைபோல் செய்து தூபதீப ஆராதனை செய்து முருகக்கடவுளை வழிபட்டு, மூன்று சுமங்கலிப் பெண்களை அழைத்து அவர்களுக்கு பூ, மஞ்சள், தாம்பூலம் வழங்கி அவர்கள் கையால் தொட்டெடுத்துச் செங்கல் வாங்க வேண்டும்.

சொல்லவே பருதிமுதல் வந்ததானால்
  சுகமுடனே முச்சாரி முடிவதாகும்
வல்லமையோர் தாய்தந்தைக் கிடறதாகும்
  வரிசையுடன் திங்களீரெட் டில்கட்டும்
நல்லமதி தோன்றிடவே செல்வமுண்டாம்
  நயம்பெறவே திங்களீரா றில்கட்டும்
வில்லைப்போல் இடையுடைய மாதேகேளாய்
  விசுவகுல மயனாரும் விளம்பினாரே. (747)

மனை கட்டும் போது உதயலக்கின ஆரூடத்தில் சூரியன் உதயமானால், மூன்று கட்டமாக மனை வேலை நடக்கும், தந்தை, தாய்க்குப் பிணியுண்டாகும், 16 மாதங்களில் பணி நிறைவுறும், சந்திரன் உதயமானால் தனம் சேரும், 12 மாதங்களில் மனை நிறைவுறும், இவ்வாறாகக் குறிப்பிட்ட காலத்தில் மனைகட்டும் பணி நிறைவுபெறும் என்று விசுவகுலத் தோன்றலான மயன் அருளியவாறே.

விளம்புசெய்தோன் றிடவேதிங்கள் பத்தில்கட்டும்
  விடமில்லை கட்டுவது குறைநில்லாதே

இளமையுள்ள சகோதரர்கள் அநேகமுண்டாம்
இருமனையுண் டாகிவிடும் இருமூன்றாறில்
வளம்பெறவே புதன்தோன்றில் வாழ்வுண்டாகும்
வரிசையுடன் திங்கள்பதி னேழில்கட்டும்
இலக்கமில்லை கட்டிவிட்டால் மனையாளுக்குஞ்
கருவில்லை இருமனைவி கண்டுபாரே. (748)

செவ்வாய் உதயமானால் 10 மாதங்களில் மனை நிறைவுறும், மனை கட்டி முடிவதில் குறை ஏற்படும், சகோதரர்கள் தொல்லையால் மனை இரண்டாகிவிடும், 3 ஆண்டுகளில். புதன் உதயமானால் நல்வாழ்வுண்டாகும், தனச்சேர்க்கையுடன் 17 மாதங்களில் கட்டும், 17 மாதங்களுக்குக் கூடினால் மனைவி மலடாவாள் 2 மனைவிகள் ஏற்படும் என்றவாறு.

கண்டுபார் குருவந்தால் கலக்கமில்லை
கடனில்லை திங்களொரு ஐந்தில்கட்டும்
கொண்டுசெய்ய அடிமையவர் அநேகருண்டு
துஷ்டரெல்லாம் வணங்கிடுவார் துணிந்துசெப்பு
பண்டுபுகர் தோன்றில்பழைய தனங்கிடைக்கும்
பகையில்லை செல்வமுண்டு பெண்பிறக்கும்
மண்டலத்தில் கீர்த்தியுண்டு திங்களாறில்
மனையதுவுங் கட்டிவிடு மகிழ்வுண்டாமே. (749)

குருஉதயமானால் நற்பலன், கடன்வராது 5 மாதத்தில் கட்டும், வேலையாட்கள் அநேகம் பேர் உண்டு, பகைவர் வணங்குவர் என நிச்சயமாய்க் கூறலாம், சுக்கிரன் உதயமானால் புதையல் கிட்டும், பழைய பொருள் கிட்டும், பகைவர் அழிவர், தனச்சேர்க்கையுண்டு, பெண் குழந்தை பிறக்கும், புகழ் உண்டாகும், 6 மாதங்களில் கட்டும் மகிழ்வுண்டாகும்.

மகிழுடனே சனிதோன்றில் பீடையுண்டு
மறிபட்டு மனையதுவும் மூன்றாறில்கட்டும்
சுகமுடனே இராகுவந்தால் முடிந்திடாது
சுத்தமாகக் கட்டுவதுவெ குநாள்செல்லும்
செகந்தனிலே கேதுவந்தால் யீரைந்தாண்டில்
சீக்கிரத்தில் கட்டுவதுபோற் செயமுண்டாகும்
வகையுடனே உலகோர்க்கும யனார்சொன்ன
வரிசையுடன் இன்னூலை வகுத்துப்பாரே. (750)

சனி உதயமானால் பீடை, தடைபட்டு 18 மாதத்தில் கட்டும், இராகு வந்தால் மனை முடியாது அல்லது கட்டிமுடிய நீண்டகாலமாகும், கேது உதயமானால் 10 ஆண்டுகளாகும் ஆனால் நற்பலன் கிட்டும், இவ்வாறாக மயன் உரைத்தவற்றை ஆராய்ந்து அறிக.

மனை முகூர்த்தம் செய்யும் நேரத்தைக்கொண்டு ஆயுள் அறிதல்

எட்டாறு பன்னிரண்டில் இருந்திடில் இராகுகேது
கட்டுடன் காரிசெவ்வாய் கதிர்மதிஎவர் நின்றாலும்
சட்டமிருந்து வாழ்ந்தால் சலிப்புடன் மனையுஞ்சேதம்
திட்டமாய்த் தனக்குச்சேதம் சீர்மனை பத்தில்போமே. (751)

6, 8, 12ல் இராகு, கேது அல்லது சனி, செவ்வாய், சூரியன், சந்திரன் எவர் நின்றாலும் சலிப்பு உண்டாவதுடன் மனையும் சேதமாகும், மனைக்குரியவன் மரணமாவான் மேற் சொன்ன கிரகங்கள் 10ல் நின்றால் மனை பாழ்படும்.

ஆறெட்டில் பன்னிரண்டில் அமர்ந்திடிலர சன்சுங்கன்
சேரவேபுத னுந்திங்கள் சேர்ந்திடில் சிதறும்செல்வம்
யேரிசைசா வதாகும் இல்லவள்கல கம்போவாள்
பாரெனவழக் குச்சண்டை பற்றிடுமனை பாழமே. (752)

6, 8, 12ல் வியாழன், சுக்கிரன் சேர்ந்திருந்தால் அல்லது சந்திரன், புதன் சேர்ந்திருக்க தனச்சேதம் உண்டாகும், மனையாள் சாவாள், சண்டையிடுவாள், சதாகாலம், சண்டையும் சச்சரவும் உண்டாவதுடன் மனையும் பாழாகும்.

ஆக்கமதுடை யான்றன்னை யரசனும்புக ரும்நோக்கில்
தாக்குமேவய துநூறுசந்திரன் புதனும் நோக்கில்
சேர்க்குமேயெட் டுப்பத்துச்செல் வமும்யோகம் செல்வம்
காக்குமே எதிரிநில்லான் துணைவனும் உதவியாமே. (753)

மேற்படி 10ஆம் வீட்டதிபர்களை அல்லது அவ்வீடுகளை வியாழனும், சுக்கிரனும் பார்க்க 100 ஆண்டுகள் அம்மனை நிற்கும், சந்திரன், புதன் பார்த்தால் 8, 10ல் நின்றால் செல்வமும் யோகமும் உண்டாகும், எதிரி அழிவான், நண்பர்கள் உதவுவார்கள்.

லாபத்துக் குடையோன்றன் னைநலமுடன் ராகுகாரி
தாபமாய்ச்செவ் வாய்கேது தன்னிலேஒரு வன்நோக்கில்

சோபமுஞ்சேத் மவாயுபித்தம் துக்கமாம் தனக்குச்சேதம்
சாபமும்வறு மையுண்டாம் தரித்திரமனை யாம்பாரே. (754)

11 ஆம் இடத்திற்குடையவனை ராகு, சனி, செவ்வாய், கேது இவர்களில் யாராவது ஒருவன் பார்த்தால் கோடானுகோடி, வாயு, பித்தம், சிலேத்ம ரோகம் வரும், துக்கமும், மரணமும் உண்டாகும், பெரியோர்சாபமும், வறுமையும் உண்டாகும், தரித்திரமான மனையதுவாகும்.

தனமதுவுடை யான்றன்னை தயவுடன்தீ யோர்நோக்கில்
கனமுடன்லா பஞ்செம்பொன் கனப்பட அழிவுசேதம்
இனமுடன் வாழ்வதில்லை இனிவளர் மைந்தர்சாவே
அனுமதி அழிவுசேதம் அடிமனை எட்டில்போமே. (755)

2 ஆம் அதிபனை பகைக் கோள்கள் பார்த்தால் ஆதாயமும், பொன்னும், அழியும், சேதமும் உண்டாகும், வாழ்வுகுன்றும், புத்திரநாசம், உண்டாகும். 2ஆம் இடத்ததிபன் 8ல் நின்றால் மனை பாழாகும்.

வாக்குடன் எட்டில்லாபம் வளர்பிறையர சனோக்கில்
தாக்குமா முதலும்லாபம் தையலார் கேவலத்தார்
காக்குமாமனை தான்வாங்கக் காதலிபுதல் வருண்டாம்
சேக்குமா மனையும்பூமி திரவியம்வரத் துக்கேளே. (756)

2, 8, 11ஐ சந்திரன் (வளர்பிறைச்சந்திரன்) வியாழன் பார்த்தால், லாபமுண்டாம், மனைவி, வேலையாட்கள், புத்திரருடன் நல்வாழ்வுண்டு, பூமி, திரவியம் முதலியவை சேரும்.

கன்றிடும் வாக்குநாதன் கனமுள்ள லாபமெட்டு
நின்றிடில் காரிதீயோர் நிலைவரம் நின்றுபார்க்கில்
இன்றுள்ள மனைவிமைந்தர் இசையிசைநகை கள்சேதம்
வென்றிடும் யோகஞ்செல்வம் விளங்காதுமனை தான்கேளே. (757)

2ஆம் இடத்திற்கு அதிபன் 8, 11ல் நின்றால் அவரை சனி, மற்றும் தீயகிரகங்கள் பார்த்தால் மனைவி மக்கள் சேதமாவதுடன், செல்வமும் அழியும், மனையும் பாழாகும்.

வன்னமாநால் இரண்டில்வளர் மதியரசன் நின்றால்
துன்னவே வயதுநூறு தோற்றமே யோகம்வாழ்வு

மன்னவன் புகரிரண்டில் வாழ்ந்திடில் வயதுநூறு
தன்னவன் மனையையாண்டு தழைத்தவன் வாழ்வான்பாரே. (758)

2,4ஆம் இடங்களில் சந்திரன், வியாழன் நின்றால் நூறு வருஷங்கள் அம்மனை நிலைத்து நிற்கும், வாழ்வும், யோகமும் உண்டாகும், வியாழன், சுக்கிரன் இரண்டில் நின்றால் 100 வருட மனை நிலைத்திருக்கும், மனைக் கதிபனும் நீடுடிவாழ்வான்.

புத்திரன் ஏழுபத்து பிறந்திடும் புனிதமேழாம்
சூத்திரம் பெற்றுவாழ்ந்து கிளையுடன் கூடிச்சேர்ந்து
சித்திரமனை விமைந்தர் செல்வமும் சிறப்புவாழ்வு
பத்திரம் பூசைதீட்சை பால்பழம் விளங்குந்தானே. (759)

5ஆம் அதிபன் 7,10ல் நிற்க சுபபலனுண்டாகும், சுற்றத்தாருடன் கூடி, செல்வச் செழிப்புடன் நீண்ட நாள் வாழ்வான்.

வருத்தசஞ் சலங்கள்நீங்கும் வளர்ந்திடும் யோகம்செல்வம்
கருத்துடன் கல்விகேள்வி கன்னிகை பூட்டலாடை
குருக்களை வணக்கம்பூசை குலத்துளோர்க் கின்பம்நல்கிப்
பெருத்துடன் மைந்தர்நட்டோர் பெருமைசேர்மனை தான்கேளே. (760)

அத்துடன், வருத்தம் சஞ்சலங்கள் தீரும், யோகம், செல்வம் உண்டாகும், கல்வி, கேள்வியுடன், தன்குலத்தோர்க்கும் இன்பம் உண்டாக்கி, சுற்றம், நட்புடன், புத்திரர், மனைவியுடன் கூடி நல்வாழ்வு வாழ்வான்.

மன்னவன்ஏ ழில்பத்தில் மனைரெண்டில் நிற்கநோக்க
தன்னவன் தாயுந்தந்தை தலைவியும் மனைவிமைந்தர்
மன்னதுயோ கஞ்செல்வம் மணியகம் பூமிநாற்கால்
அன்னவன் பொசிக்கலுற்றால் அகம்வயது எண்பதாமே. (761)

வியாழன் 1, 2, 7, 10ல் நின்றாலும் அந்த இடங்களைப் பார்த்தாலும், தாய் தந்தை, மனைவி, மக்கள் கூடவும் செல்வம், கால்நடைகள் குறைவின்றி வாழ்வான். வியாழனின் திசாபுத்தியும் நடந்தாலும் மனையானது 80 வயது வரை நீண்ட நாள் நிலைத்திருக்கும்.

காரிதான் ஏழில்பத்தில் கதித்தவனிருக் கநோக்கச்
சாரியாய் மூன்றுபத்திற் சாரைந்தில்நா கஞ்செவ்வாய்
ஆரியமதி யும்பார்க்க அகத்தவள் மனையுந்தோற்று
நாரிசேர்மனை யுங்கெட்டு நாற்பதில் இறக்கும்பாரே. (762)

சனியானவன், 7, 10ல் இருந்தாலும் அவ்விடங்களைப் பார்த்தாலும் 5, 3, 10ல் செவ்வாய், இராகு (கேது) நிற்க, அவர்களைச் சந்திரன் பார்க்க மனைவி மரணமாவதுடன் அம்மனையும் 40ஆண்டுகளில் பாழ்படும்.

தோற்பதுமனை விமைந்தர் துணைவனும் எதிரிபேசல்
காப்பதுமா ணங்கல்வி கற்படுலா பஞ்செம்பொன்
ஏற்பதுதின மும்போகும் எதிரியால் கடன்றானாகும்
ஆற்பதுஅணு நில்லாதே அகலுவான் அங்குவிட்டே. (763)

மனைவி மக்கள் இழப்பனன், நண்பர்கள் எதிரியாவதும், இழிச்சொல் கேட்டலும், பொன், பொருள் நஷ்டமும், எதிரிகளின் சூழ்ச்சியால் கடனாளியாவதும், அந்த மனைக்கு உரியவன் அம்மனையை விட்டே ஓடிவிடுவான்.

அகமதையுடுத் தோன்வாழ்வன் அகன்றவன்பா லன்சாவான்
முகமுடனிருந் தான்றானும் முழுதுமேயிரந் தேயுண்பான்
பகையுடன் வளர்க்குஞ்சண்டை பாலனும் இறந்துசாவான்
தொகையெனும் மனைநாலைந்தில் சோர்ந்திடுந் திண்ணைதானே.(764)

மனையில் தங்கியவன் உயிர்வாழ்வன் மனையைவிட்டு வெளியேறியவன் குழந்தை இறக்கும், அத்துடன் தானும் சாவான் அல்லது, பிச்சையெடுத்து வாழ்வான், சண்டையும், பகையும் உண்டாகும், 1,4,5ல் மேற்பேடி கிரகங்கள் தங்கினால் அம்மனை அழிந்து போகும்.

வல்லவனிரண் டாமாதி வருத்தமாய்ப் பகைகள்நீசம்
நல்லவன்சேர்ந் துநோக்க நயமில்லை வயதெட்டாகும்
கல்லவன்முட வன்சேயும் கதிர்நாகங் கூடிச்சேரில்
இல்லவளிறப் பாளஞ்சில் இடியும்பன் னிரண்டிலில்லம். (765)

2ஆம் வீட்டதிபன் பகை, நீசம் பெற்று சுபர் பார்வையோ அல்லது சேர்க்கையோ பெற்றால் அம்மனை 8 வருடங்கள் நிற்கும். சனி, செவ்வாய், சூரியன், இராகு (கேது) சேர்ந்து நின்றால் மனைவி மரணமடைவாள், அவர்கள் 12ல் நின்றால் வீடானது இடிந்துபோகும்.

நித்திய குடும்பவாதி நின்றிடில் பகையதாகில்
சத்தியாய்ச் செலவுபோகும் சஞ்சலம்வருத் துச்சேதம்
பெத்தியகா ரிநாகம் பின்னியேசேர்ந் துநோக்கில்
கத்தியேமனை தான்பாழாய்க் கழன்றிடும் பதினேழாண்டில். (766)

2ஆம் இடத்ததிபன் பகைவீடுகளில் நின்றால் பொருட்செலவுண்டாவதுடன், கவலையும், நஷ்டமும் ஏற்படும், சனி, இராகு கூடிப் பார்த்தால் மனை பாழ்படும் 17 வருடங்களில் இழக்கும்.

சாடியவிரண் டாமாதி சனியுடன்தீ யோர்கூடில்
தேடியமுத லுஞ்சேதம் தினம்நகைபொரு ளுங்கொள்ளை
நாடியவய சிரெட்டில் நல்மனை விற்றலாகும்
வருடியமனை இழந்து வளர்மனை இடிதலாமே. (767)

2ஆம் இடத்திற்கதிபதி சனி, மற்றும் பாபர் சேர்க்கை பெற்றால் தனது செல்வம் அழியும், வீட்டினுள் கள்வர் புகுந்து பணம், நகை இவற்றைக் கொள்ளையிட்டுச் செல்வார்கள் 8 ஆண்டுகளில் மனையை வேறொருவருக்கு விற்றிடுவான் அல்லது மனை இடிந்து போகும்.

கன்றிடுமிரண் டாமாதி கதிப்புடன் உச்சம்பெற்றால்
நின்றிடும்வய துநூறாம் நிலவரம்அர சன்நோக்கில்
வன்றிடுங் காரிநோக்க வளர்செல்வம் செலவேமிச்சம்
பின்றிடும் பலனுஞ்சேரும் பெலமுறு வயசுநாலில். (768)

2ஆம் இடத்ததிபதி உச்சம் பெற்றால் அம்மனை 100 வருடம் வாழும், அவனை வியாழன் பார்த்தாலும் 100 வயதே, சனி பார்த்தால் செலவானது தான் மிச்சம் ஆதாயமில்லை, அத்துடன் 4 வருடங்களிற்கு மேல் மனை சீர்படும் என்றவாறு.

மூன்றினில்செவ் வாய்காரி முழுதுமே நிற்கநோக்க
மன்றிடுமைந் தர்சேதம் மறுதம்பிபகை யேசண்டை
நீன்றிடிலர சன்சுங்கன் நிறைசெல்வம் பயிருங்காலி
ஆன்றிடும்வய சுநூறாம் அடிமையாம் மனைவிமைந்தர். (769)

3ல் செவ்வாய், சனி சேர்ந்திருக்க அல்லது பார்க்க புத்திர நாசம், சகோதரர்களால் சண்டை உண்டாகும், வியாழன் சுக்கிரன் பார்த்தால் செல்வமுண்டாம், பயிர்களும், கால்நடைகளும் ஆதாயம் தரும், அத்துடன் 100 வயது வரை அம்மனை நிற்கும், மனைவி, மக்கள் பணிவுடன் நடந்து கொள்வார்கள்.

நல்லவனிருக் கநோக்க நலம்பெறமூன் றிற்கேளு
வல்லபந்திரள் யோகம்வரும் படையிட ரும்இல்லை
வில்லவன்கா ரிதீயோர் விரும்பியே கிரகம்நோக்க
அல்லவன் பொருளும்போகும் அழிந்திடுமா றாமாண்டில். (770)

3ல் சுபர் இருந்தாலும், பார்த்தாலும் வலிமையான யோகமுண்டு, சண்டை, கலகம் இல்லை சனி, மற்றும் பாபக்கிரகங்கள் பார்த்தால், பொருள் நஷ்டமாவதுடன் அம்மனை 6 வருடங்களில் அழிந்து போகும்.

போய்விடுமனை யிற்செல்வம் பலனறுமுயி ரும்போகும்
தேய்வுறுங் கருமமெல்லாம் தினம்பகைநிதி யும்போகும்
நோய்பெறுமனை விமைந்தர்நுவன் றுபொய்மெலி வாள்மங்கை
தீபடுமக முங்கொள்ளை தீங்குபத்தாண் டிற்போமே. (771)

செல்வம் அழியும், நல்வினைப் பயன்போகும், பகையும், நோயும் உண்டாகும், மனைவி மக்கள் துன்புறுவர், அம்மனை தீக்கிரையாகும், கொள்ளை போகும் 10 ஆண்டுகளில் அம்மனை அழிந்து போகும்.

மனைமுடனர சன்நாலில் மனைநூறு வயதாமென்பர்
தனம்நகை கிரகம்பூமி தந்தைதாய் மனைவிமக்கள்
கனங்காலிப் பயிர்விளைச்சல் கனிவர்க்கம் அமுதுபாலும்
தினமநுபவிக் குஞ்செல்வம் திருவொடுவாழ் வுஞ்சேரும். (772)

4ல் வியாழன் நின்றால் மனைக்கு 100 வருடம் ஆயுளுண்டு, செல்வம், ஆபரணம், வீடு, பூமி லாபமுண்டு, தந்தை, தாய், மனைவி, மக்கள், கால்நடை, பயிர்விளைச்சல் முதலியன லாபம் தரும், கனிகள், பால், முதலானவை தினம் அனுபவிக்கும் பயன் கிட்டும். அவன் மனையில் மகாலெட்சுமி வாசம் செய்வாள்.

நலமுடன்கா ரிசெவ்வாய் நலமதாய்ச் சேரநோக்க
மெலிவுடன் செல்வஞ்சிந்தும் மெலிவளேமனை யாள்நோவால்
சலமுடன் புதல்வர்சா வாஞ்சஞ்சலம் மிகுதிசேரும்
அலமரும்பெரு மைபோகும் அழித்திடுமனை தான்கேளே. (773)

4ஆம் இடத்தில் சனி, செவ்வாய் நின்றாலும், பார்த்தாலும், தனமழியும், மனைவி நோயுறுவாள், புத்திர நாசம், கவலையுண்டாவதுடன் மனையும் அழிந்து போகும்.

அஷ்டமத்து உடையோன்றா னுமாறெட்டீ ராறுசேரில்
வெட்டவேவிர ணஞ்சேரும் வியாதியும்வறு மையுண்டாம்
பொட்டவே சாவுகூடும் பொன்னதுவட ருஞ்சேதம்
தொட்டதுசெல வுண்டாகும் தோற்குநல்மனை தான்பத்தில். (774)

8ஆம் இடத்திற்குடையவன், 6, 8, 12ல் நின்றால் நோயும், வறுமையுமுண்டு மரண சம்பவங்கள் நடக்கும், பொன்பொருள் நஷ்டமாகும், தொட்டகாரியங்கள் நஷ்டமாகும்.

வரத்தொடுசெல வுஞ்சேதம், வைத்திடுபொரு ளுஞ்சேதம்
பார்ப்பதுபசி யுங்காந்தல் பசிக்கவேபொ சிப்புதப்பும்
திரப்படுசுக மும்போகும் திண்ணமாந் தனக்குக்கண்டம்
இரப்பதுமனை தான்பாரும் இடையறு நாற்பதாமே. (775)

8ஆம் அதிபதி 10ல் நின்றால், வரவுசெலவு நாசமடையும், பொருள் நஷ்டம் உண்டாகும், பசியும், பஞ்சமும் இருக்கும், உணவுக்கே கஷ்டமுண்டாகும், சுகம் போகும், மனையின் அதிபனுக்கும் கண்டம் உண்டாகும், பிச்சை எடுக்கும் நிலைக்குத் தள்ளிவிடும், அம்மனையின் வயதும் நாற்பதாகும்.

சத்துருபகை கள்நீசம் சஞ்சலமெட் டோன்கூட
வெந்துருமவர்க் குமேனி மெலிந்திடுஞ் சரீரகாந்தி
பெற்றிடும்பிள் ளைசாவாம் பெறுவதுபெண் ணேயாகும்
குந்திடுமனை யில்சண்டை குலைத்திடும் முப்பதாண்டில். (776)

8ஆம் இடத்தோன், சத்துரு, நீச வீடுகளில் தங்கினாலும், அவர்களுடன் கூடி இருந்தாலும் தேகம் மெலியும், தேக ஒளி குன்றும், ஆண் குழந்தைகள் பிறந்தால் இறந்து போகும், பெண் குழந்தைகளே பிறக்கும் மனையில் சண்டை மூளும் 30 வருடங்கள் மனையின் ஆயுளாகும்.

சீரியநா கங்காரி சேய்கதிரிவர் கள்நால்வர்
கூறியயெட் டாமாதி கூடியேகலந் துவாழ்ந்தால்
பூமியேயோ கஞ்செல்வம் புகல்மனைபிரி யும்ரெண்டாய்
ஈருறுமிகு சேதமிறந் திடும்நாற்பத் தேழாம். (777)

சூரியன், செவ்வாய், சனி, இராகு, நால்வருடன் 8ஆம் இடத்தின் அதிபனும் கூடி நின்றால், பூமியும், செல்வமும் நாசமாகும், அம்மனையானது இரண்டாகப் பிரியும், 47 வருடம் அம்மனை ஆயுளாம்.

மால்மதியர சன்சுங்கன் மதித்தவர் சேர்ந்துநின்றால்
பாலுடனெட் டோன்தானும் பட்சமாய்க் கூடிவாழில்
மேலுடன்மேன் மையோகம் மேவிய மனைவிமைந்தர்
சேலுடனவர்க் குவெற்றி செய்மனை வயதுநூறாம். (778)

சந்திரன், வியாழன், சுக்கிரன் முதலான சுபக்கிரகங்கள் கூடிநிற்க, அவர்களுடன் 8ஆம் இடத்து அதிபனும் சேர்ந்திருந்தால் நல்யோகமும்,

மனைவி மக்கள் இன்பமும் உண்டு அம்மனையானது 100 வருடங்கள் வரை நிலைத்திருக்கும்.

தினம்லாபம் வெற்றிசேரும் செய்தொழில்சிறப் பாமேன்மை
தனங்காலி பயிருஞ்சேரும் தழைப்பவர் மனைவிமைந்தர்
இனம்நகையுடை மைசேரும் இனிவருமுத லுஞ்சேரும்
சனமிகுகுறை யாச்செல்வம் சலிப்பறும் வயசுநூறாம். (779)

அத்துடன் லாபமும், வெற்றியும் உண்டாகும் கால்நடை, பயிர்வகை விருத்தியுண்டு, மனைவி மக்கள் நலம் பெறுவர், பொன், ஆபரணம், குறைவிலாச் செல்வத்துடன் மனை 100 வயதுவாழும்.

பெருநாகம் எட்டில்நிற்கப் பிரிவதுசெல வாம்லாபம்
பருவவாங்கா ரிசெவ்வாய் பார்க்கவே எட்டிற்சாவு
கருதியகதி ரோனாகிற் கண்டநீ சாவதஞ்சாம்
விரவியபாம் புகண்டால் வீவதுமா றாமாண்டில். (780)

இராகு 8ல் நின்றால் ஆதாயம் நஷ்டமாகும், அந்த ராகுவைச் சனி, செவ்வாய், பார்த்தால் மரணம் உண்டாகும், சூரியன் பார்த்தால் 5ஆம் ஆண்டில் மரணம், 8ல் சூரியன் நிற்க அவனை ராகு, கேதுக்கள் பார்த்தால் ஆறாம் ஆண்டில் மரணம்.

நாகமேயெட் டைநோக்க நலமில்லை லாபம்போகும்
பாகமுமழி வுசேதம் பலனில்லை வாழ்வுமில்லை
ஆகுமேவழக் குச்சண்டை அடுத்தபேர் நகைப்புநஷ்டம்
சாகவேதனக் குக்கண்டம் சரிவரும்பதி னேழாமே. (781)

ராகு 8 ஐப் பார்த்தால் நன்மையில்லை, ஆதாயம் இராது, அசலும் நஷ்டமாகும், சண்டை வழக்குகள் ஏற்படுவதுடன் பிறர் நகைப்பதற்கு இடமாகும், 17ஆம் ஆண்டில் மனைக்கதிபதிக்கு கண்டம் உண்டாகும்.

அறிந்திடில் எட்டைக்கா ரிஅணுகிடில் நோக்கமானால்
பறிபடுலா பஞ்செம்பொன் பாலனுமி றந்துபோகும்
செறிந்திடும் சிரங்குசூடு சிதறுமே மனைவிமைந்தர்
பறிபடுமத முங்கோபம் பற்றிடுமிரு பத்தேழில். (782)

சனியானவன் 8ல் நின்றாலும், பார்த்தாலும், லாபம் பறிபோகும், குழந்தை மரணமாகும், உஷ்ணத்தினால் சிரங்கு முதலான பிணிகள்

உண்டாகும், மனைவி மக்களுக்குக் கண்டம் உண்டாகும், 27ஆம் ஆண்டில் மனையும் அழியும் என்றவாறு.

எட்டவனெட் டில்நின்றால் எதிரியால்வழக் குச்சண்டை
செட்டுபோம்செல வும்லாபம் செயமற்றுக் கடனுஞ்சேரும்
விட்டுடன்குலை தான்காணும் விஷத்தினால் மனைவிசாவாள்
முட்டுடன்பல னுமற்று முப்பத்தே ழதனிற்போமே. (783)

8ஆம் இடத்திற்குடையவன் 8ல் ஆட்சி பெற்று நின்றால் எதிரியால் வழக்கும், சண்டையும் உண்டாகும். ஆதாயமும் அசலும் நஷ்டமாவதுடன் கடனும் ஆகும். மனைவி விஷமருந்தித் தற்கொலை செய்து கொள்வாள் மனையின் ஆயுள் 37 வருடங்களாகும்.

எட்டவனெட் டில்நிற்க எழுபதுவய சில்சேதம்
சட்டமாயர சன்நோக்கச் சனமிகு வயதுநூறாம்
பொட்டவேநின் றானாகில் புண்ணிய வயதுநூறு
திட்டமாய்ச் சுத்தமானால் திறமனை வயதுநூறே. (784)

8ஆம் அதிபன் 8ல் நின்றால் மனை ஆயுள் 70 ஆண்டுகள், வியாழன் பார்த்தால் 100 வருடம், 8ஆம் அதிபன் கெட்டிருந்தால் 100 ஆண்டுகள் தீயவர் பார்வையில்லாமல் நின்றானாகில் 100 வருடமும் வயதாகும்.

உச்சமேயெட் டொன்றாகில் உயர்ந்திடும்தன மும்வாழ்வும்
மிச்சமேயோ கம்செல்வம் மிகுந்திடும் மனைவி மைந்தர்
பட்சமேஆட் சிபெற்றால் பருமனை வயதுநூறு
அச்சமும்பய முந்தீரும் அதிபலன் ஆதியாமே. (785)

1, 8ஆம் அதிபர்கள் உச்சம் பெற்றால், செல்வம் பெருகும், மனைவி மக்கள் சுகமடைவார்கள் ஆட்சி பெற்றால் மனைக்கு ஆயுள் 100 வருடம் ஆகும், பயம்போகும்.

மந்திரியே ழில்நிற்க மனைகட்டி முடிந்திடாது
அந்தகங்குடி போமுன்னே அரசனால் அழிவுமுண்டு
புந்தியும்மந் தன்ஏழில் புத்திரர் நாசமாகும்
சந்திரனே ழில்நின்றால் தழலெரிவிற கோடொக்கும். (786)

சுக்கிரன் அல்லது வியாழன் 7ல் நிற்க அம்மனை கட்டிமுடியாது, மனையில் குடிபுகும் முன் அரசாங்கத்தால் அழிவுண்டாகும், புதன்,

சனி, 7ல் நின்றால், புத்திர நாசமுண்டாகும், சந்திரன் ஏழில்நின்றால் தீயிலிட்ட விறகுபோல வாழ்வு துன்பத்திற்காட்படும்.

மங்களனே ழில்நின்றால் மனைவியே மரணமாகும்
செங்கதிரதி லேநின்றால் சேதமாங்குடி பாழாகும்
சுங்கனுமர வுநின்றால் தொல்குடி அழியுமென்று
பொங்குமாமறை தெரிந்தோர் புகன்றனர் என்றுகூறே. (787)

செவ்வாய் 7ல் நின்றால் மனைவி மரணம் மடைவாள் சூரியன் 7ல் நின்றால், சந்ததி அற்றுப்போகும், மனை பாழாகும், 7ல் சுக்கிரன், ராகு (கேது) கூடி நின்றால் குடும்பம் அழியும் என மறை நூல் வல்ல சான்றோர்கள் கூறியுள்ளனர்.

காணுஞ் சென்மசனி எட்டும் ஏழுங்காண்
பேணி இல்லம் பெருக்கவே கோலினால்
நாணங் கெட்டுமே நாட்டில் அலைகுவன்
காணுங் காணுஞ் சனியவன் கூத்தையே. (788)

1, 7, 8ல் சனி நின்றபோதில் மனை எடுத்தால் நாணமின்றி வீதிகளில் அலைவான் இவ்வாறாக சனியானவன் பலன் ஏற்படுத்துவன்.

கண்டலக்கினத் திற்கஞ்சில் கரியவன் பாம்புநிற்க
உண்டசேய் பருதிபத்தில் ஒன்பதில் நிற்கநோக்கக்
கொண்டரசா ளுமைந்தன் கூறுமோர் ஆண்டில்சாவு
மண்டுமாளிகை செய்வோர்க்கு மயனவன் உரைத்தவாறே. (789)

உதயலக்கினத்திற்கு 5ஆம் இடத்தில் சனி, இராகு நிற்க செவ்வாய், சூரியன், கூடி 9, 10ல் நின்றாலும் பார்த்தாலும் அம்மனைக்கதிபதி 1 வருடத்தில் மரணமடைவான்.

திங்கள்பாம் பாறுமூன்றில் தினகரன் கூடிநோக்கச்
சுங்கன்மால் எட்டுமாறு சொல்லீரா றடைந்துகாணப்
பொங்கமாலய னுக்காகப் பொருந்திடமனை செய்தாலும்
தங்குமூன்றாண் டுக்குள்ளே தான்சுடுகாட் டிற்சேர்வன். (790)

சந்திரன், ராகு (கேது) கூடி 3ல் நிற்க அவர்களைச் சூரியன் பார்த்தாலும், சுக்கிரன், புதன் 6, 8, 12ல் நின்றாலும், சிவன், திருமாலுக்கு ஆலயம் அமைத்தாலும் 3 வருடங்களில் மனைக்கு அதிபனானவன் மரணமடைவான்.

கதிருடன்மதி யுங்கூடிக் கலந்துலக்கினத் தில்நிற்கப்
பதிருடனனை யுந்துன்பம் படைமனைதனை விட்டேகும்
நிதிகெடும் விழிக்குரோகம் நேத்திரம்பழு துண்டாகும்
சதிருடன்நா லில்நிற்கச் சந்ததிசித றும்பாரே. (791)

சந்திரனும், சூரியனும் லக்கினத்தில் கூடி நின்றால் துன்பமுண்டாவதுடன், மனையை விட்டு வெளியேறும் படியாகும், தனமழியும், கண்களில் நோயுண்டாகும், பார்வை கெடும், அவர்களே 4ல் நின்றால் சந்ததி அழியும்.

அரசனுமுத யங்காண அருமையவ் வளவேசெல்வம்
திரமதாய்க்கா ரிகாணில் திங்கள்நா லைந்தில்சேதம்
பரவியசெவ் வாய்காணின் பலன்கெடு வருஷமாகில்
உரகனுநின் றுகாணில் உலைபதியிரு பத்தேழில். (792)

வியாழன் லக்கினத்தில் நின்றால் செல்வவளம் உண்டாகும், சனி நின்றால் 20 மாதங்களில் மனைக்குச் சேதம் வரும், செவ்வாய் நின்றால், 1 வருடத்திற்குள் நாசம் உண்டாகும், இராகு நின்றால் (கேது) 27 வருடங்களில் அம்மனையானது அழிந்துபோகும்.

பரவுதிங் கள்பொன் பத்துறில் நாலுறத்
தரணிசேய் சத்தாகப் பதின் ஒன்றில்
வரையில் எய்திய வாழ்மனை செய்திடில்
வருஷம் எண்பது மண்ணில் விளங்குமே. (793)

சந்திரன், வியாழன் 4, 10ல் நிற்க, செவ்வாய் 11ல் நிற்க, மனை எடுத்தால் மனையானது 80 வருடங்கள் நிலைத்திருக்கும்.

இருங்குரு வெள்ளிதானும் லக்கினம்நா லேழ்நிற்கில்
வருங்கதிர் ஆறில்நிற்க மந்தன்பாம் பேழில்நிற்கப்
பெரும்புரங் கோயில்வீ டுபீடமேசெய் வீராகில்
திருந்திய வருஷநூறு தீர்க்கமாய் வாழுவீரே. (794)

வியாழன், சுக்கிரன் 1, 4, 7ல் நிற்கவும், சூரியன் 6ல் நிற்க சனி, இராகு (கேது) 7ல் நிற்க கோயில், வீடு, பீடம் இவை அமைத்தால் 100 வருஷங்கள் நிற்கும்.

பார்மகன் புகர்பானு பொன்னா றுடன்
ஓரை மூன்று யரைந்தினி லுற்றிட

ஊரிடம் புரமோர் நகர் செய்திடில்
ஏர்கொள் இரண்டு நூறாண்டு இலங்குமே. (795)

புதன், சுக்கிரன், சூரியன், வியாழன் இவர்கள் 3, 5, 6ல் நிற்க ஊருக்கு ஒதுக்குப்புறம் நகரம் அமைத்தால் 200 வருடங்கள் நிலைத்திருக்கும்.

தூய ஓரைபத் தேழினிற் சொல்லிய
மேய திங்கள் புதன்குரு மேவவே
கோயில் மாநகர் சூரகஞ் செய்வீரே
மேய ஆண்டது நூறு விளங்குமே. (796)

சந்திரன் ஓரையில், 7ல், 10ல் சந்திரன், புதன், வியாழன் நிற்க. கோயில், நகரம், ஊர் அமைத்தால் 100 வயது வரை வாழும்.

உதயலக்கினத் தாட்சி உயர்திரி கோணநட்பு
துறிபெறும் உச்சம்கேந் திரம்துகைபெற வயதுநூறாம்
பதமதாம்நற் கோள்காணில் பார்தனில் வயதுநூறு
குதைபடத்தீக் கோள்காணில் குறைபடு மனையதற்கே. (797)

சுபக்கிரகங்கள் லக்கினம், ஆட்சி, திரிகோணம், நட்பு, உச்சம், கேந்திரம் முதலிய இடங்களில் பலமாக நின்றால் 100 வருடங்கள் அம்மனை வாழும், தீயகோள்கள் மேற்படி இடங்களில் நின்றால் மனைக்குக் குறையுண்டாகும்.

மன்னவனு தயத்தோனும் மருவியலா பம்ஏழில்
துன்னவேசுகங் கள்கீர்த்தி சுத்தமாந் தேகம்பூமி
பின்னுமேயெழுச் சியோகம் பெருகுமேதன மும்லாபம்
சொன்னதுசிறப் புமேலாம் சுகமனை நூறதாமே. (798)

வியாழனும், லக்கினாதிபதியும் கூடி 7, 11ல் நின்றால் சுகங்களும், புகழும் ஏற்படுவதுடன் யோகமும், தனலாபம், ஆரோக்கியம் முதலான நற்பலன்கள் உண்டாகும்.

அந்தணன் அரிமால் புகர் கேந்திரம்
எய்தவன் குசன் கோணம் இருந்திட
சுந்தர மனை கோலத் தொடங்கிட
முந்தி முந்நூறு ஆண்டு முழங்குமே. (799)

வியாழன், புதன், சுக்கிரன் கேந்திர ஸ்தானங்களிலும் (1, 4, 7, 10) செவ்வாய் திரிகோண இராசிகளிலும் (5, 9, 1) இருந்திட மனை செய்தால் மனை ஆயுள் 300 வருடமாம்.

பரவு திங்களும் பொன்னுடன் பத்துற
தரணி சேய்சனி தக்கபன் னொன்றினில்
மருவி வீடென மாளிகை செய்வீரேல்
வருஷம் ஆயிரம் மண்ணில் விளங்குமே. (800)

சந்திரன், வியாழன் கூடி 10ல் நிற்க, செவ்வாய், சனி சேர்ந்து 11ல் நிற்க வீடு, மாளிகை அமைத்திட்டால் அம்மனை 1000 ஆண்டுகள் நிலைத்து நிற்கும்.

திங்கள் அஞ்சில் தினகரன் புத்திரன்
பொங்கு நாலுடன் ஒன்பதில் பொன்னவன்
தங்கி நிற்கத் தரணிமனை கோலப்
பொங்கம் ஆயிரம் ஆண்டு புகலுமே. (801)

சந்திரன் 5ல், சனி 4ல், வியாழன் ஒன்பதில் நிற்க மனை எடுத்தால் அம்மனை ஆயிரம் ஆண்டுகள் நிற்கும்.

உரைபுகர் வியாழந்திங் கள்வோரையேழ் பத்தில்நிற்க
வரையறமனை கள்கோலில் வருடம்ஆ யிரமுமன்னி
பருமணிநகை கள்பொன்னும் பாக்கியம்அவர்க் கேபூமன்
திருவருள்புரிந் தவேந்தர் திருவருள் புரிகுவாரே. (802)

வியாழன், சுக்கிரன் சந்திரன் ஓரையில் நின்றாலும், 7, 10ல் நின்றாலும் மனை கோல 1000 வருடங்கள் நிலைத்திருக்கும், ஆபரணம், பொன் சேர்க்கை முதலான சுபபலன்களுண்டு. அவ்விடங்களில் மேற்படிக் கிரகங்களுடன் செவ்வாய் நின்று சுபர் பார்வை பெற்றாலும் சுபபலனே ஆகும்.

பருதி புந்தி புகர்பன் னொன்றினில்
அரிய வோரையில் அந்தணன் கேந்திரம்
மருவு லாவிய மாளிகை செய்வீரேல்
வருஷம் ஆயிரம் மண்ணில் வழங்குமே. (803)

சூரியன், புதன், சுக்கிரன் 11ல் நிற்கவும், வியாழன் சந்திரன் ஓரையில் நிற்க அல்லது கேந்திரம் பெற்று நிற்க மாளிகை கட்டினால் 1000 வருடங்கள் இம்மண்ணில் அம்மனை நிலைத்து நிற்கும்.

மந்தன் கேது வருமைந் தொன்பதில்
புந்தி ராஜன் புகரும்நால் பன்னொன்றினில்
சந்திரன் குசன் ஆகவே சார்மனை
மிந்திர பதியா குமீ ராயிரம். (804)

சனி, கேது 5, 9ல் நிற்க, புதன், வியாழன், 4, 11ல் நிற்க, சந்திரனும், செவ்வாயும் கூடி நிற்க மனை கட்டினால் அம்மனை 2000 ஆண்டுகள் நிலைத்து நிற்கும்.

வாஸ்து ஆட்சியாகுங் காலத்தில் முகூர்த்தம் செய்தற்பலன்

வாஸ்துவே ஆட்சியாகில் வாழலாம் அனேககாலம்
வாஸ்துவே உச்சனாகில் வாழலாம் உள்ளமட்டும்
வாஸ்துவே நட்பதாகில் வாழ்வதுபெரு கும்நூறு
வாஸ்துவே பகைநீசத்தில் வாழ்வதுகுன் றுந்தானே. (805)

வாஸ்து ஆட்சியானால் நீண்ட ஆயுளுண்டு, உச்சமானால் மண்ணுள்ள வரை வாழலாம், நட்பாகில் 100 ஆண்டுகள் வாழ்வுண்டு, பகை, நீசத்தில் அடைந்தால் ஆயுள் குறைவாகும்.

வாஸ்து மண்ணுக்கு உடையவன் தன்னிலை
பார்த்து ஆட்சி பகருச்ச நட்பதாய்
சேர்ந்திடும் போதில் திகழ்மனை கட்டினால்
சாற்றும் இல்லம் தழைத்திடும் வாழ்வதே. (806)

வாஸ்து நிலையறிந்து ஆட்சி, உச்சம், நட்பு வீடுகளில் இருக்கும் போதில் மனைகட்டினால் நீண்டகாலம் வாழ்வதுடன், செல்வமும் பெருகும்.

வாழ்வும் இல்லை மனைக்கே அழிவுகேள்
தாழும் வாஸ்து அவன்தன் நிலைமாறியே
சூழும் நீசம் பகைவந்து எய்திட
பாழதாம் இல்லம் பகர்ந்தான் மயனுமே. (807)

வாஸ்து, பகை, நீசம் முதலான பாவபலன் பெற்றால் மனை பாழாவதுடன் எல்லா விதமான நன்மைகளையும் போக்கிவிடும்.

வாஸ்து சுங்கனும் மாலவன் கூடினால்
பார்த்தும் இல்லறம் பாங்குடன் கட்டினால்

சேத்திகழ் மாமனை செல்வம் பொங்கிடும்
மேத்திசைக் கும்விளங் கிடுஞ் செல்வமே. (808)

வாஸ்து, புதன், சுக்கிரன் கூடினால் செல்வம் பெருகும், மனையும் சிறக்கும்.

வாஸ்துவே சேயுடன் காரியும் வந்துறில்
நாற்றிசைக் கும்நடுக் கம்வந்து எய்திடும்
காற்றும் தீயும் கலந்திடு வாறுபோல்
தோற்று நோயும் துயருடன் எய்வனே. (809)

வாஸ்துவுடன், செவ்வாய், சனி கூடினால் நான் திசைகளுக்கும் நடுக்கம் ஏற்படும், காற்றும் நெருப்பும் கலந்தார்போல நோயும், துன்பமும் உண்டாகும்.

நொய்வ தாலுள் நுவன்றிடு சந்திரன்
உய்வ தாலதில் ஓங்குவன் பெண்டுதான்
கைவ தல்லால் நயமொன் றுமில்லைவந்
தெய்வது எல்லாம் இப்பா ழுக்காடுமே. (810)

சந்திரன் நீசம்பெற்றால் தீயபலனே உண்டாகும், அனைத்தும் பாழாகிப் போகும்.

ஆட்சி வாஸ்துவாங் கிரகம் உதித்திட
ஆட்சி ஆகவே அண்ணிய கோமகன்
ஆட்சி யாமனை அவ்வாறு இருக்குமே
ஆட்சி ஆட்சி மயனுரை ஆட்சியே. (811)

மேற்கூறிய வாஸ்து என்பதில் வாஸ்து உதயமான வேளையில் உதயமான லக்கினத்தின் அதிபதி என்றறியவும் அந்த உதயலக்கினாதிபதி, ஆட்சி, உச்சம், நட்பு வீடுகளில் தங்கினால் மனை நீடித்திருக்கும் இது மயனுரைத்ததாகும்.

கூடம் தாழ்வாரம் அறைகள் முதலியவைகளின் அளவும் பலன்களும்

ஏழடிமுதலாய் நீளம் எத்தனையா குமென்றால்
வாழ்மனை கணக்குக்கூட்டி வைப்பது முப்பத்தைந்து
தாழ்வுகள் நீங்கல்தள்ளித் தனித்தனி உரைப்பதானால்
தோஷமுந்தீ ரத்தானே தொகைதொகையா கச்சொல்வேன். (812)

ஏழடி முதல் முப்பத்தைந்து அடிகள் வரை நீர்க்குத்தல் கழிக்கும் அடி நீங்கலாகத் தனித்தனியே அடிகள் நீள அகலமும் உரைக்கிறேன்.

நாசமாம்ராச் சயமாகும் நன்றிருவிருக் கன்நாடி
போசனம்மக வுங்கேடுபெண் கேடுவிரோதம் பொல்லாப்பு
பாசைசொல் உறுதியுண்டு வாக்கம்சம் பத்துலாபம்
தாசனேகுடி யேயோட்டும் தனமிகச் சேருந்தானே. (813)

மனை அளவுகளினால், பின்வரும் பலன்களை அறியலாம், நாசம், அரசாட்சி, செல்வவளம், உணவு, சொல்உறுதி, ஆக்கம், சம்பத்து, லாபம், பெண்களால் தொல்லை, விரோதம், பொல்லாப்பு, புத்திரநாசம், மனையை விட்டு வெளியேறுதல், தனச்சேர்க்கை முதலான பலன்களை அறியலாம்.

சேதமாம் இருபுறக்கும் தீம்பெனும் அஞ்சுவான்கேள்
சூதினால் விலங்குபூணல் சொல்லுக உறுதியுண்டு
வேதனா லாபமுண்டு வெகுநன்மை குடிக்கிக்கேடு
மாதரிமனை பாழாகும் மணமுமாம் மரணமாமே. (814)

சேதம், தீமை, அச்சம், சூதாடுதல், விலங்கு பூட்டுதல், முதலியவற்றையும் உறுதி படக் கூறலாம், லாபம், நன்மை, குடிக்குக் கேடு, மனை பாழாதல், திருமணம், மரணம் இவை பற்றியும் கூறுகிறேன்.

தண்டிகைவரு கும்நல்ல தாவியோட்டுங் காண்தியும்
அண்டிடமூ றுப்போக்கு ஆயிசுகுறை யுநன்மை
மண்டலம்புவி யிலுள்ளோர் வகையுடனெண் ணில்வாழும்
திண்டிறல்நீக் கல்தள்ளித் தீர்க்கத்து நாட்டுவாயே. (815)

மனைக்கு சீர்வரிசை கிடைத்தல், தீப்படுதல், ஆயுள் கூடுதல், குறைதல், முதலானவற்றையும் ஆராய்ந்து நீக்கல் போக சரியான அளவைகளைக் கண்டறிந்து மனை நிர்மாணிப்பாயாக.

குறுக்களவு

உத்தமம் எட்டுமாகும் உறவுடன்வாழ் வுண்டாகும்
பத்துமேபா லுஞ்சோறும் பகர்ந்திடும் பசியுந்திரும்
ஒற்றைமா டில்லாநிற்பர் ஒன்பதில் திருவுநில்லான்
குற்றங்களி துதானென்றார் குறுக்கடிகுறிப் புத்தானே. (816)

8 அடிக்கு நல்உறவும், வாழ்வும் உண்டாகும், 9 அடிக்கு லக்ஷ்மி கடாட்சம், இருக்காது குற்றங்கள் உண்டாகும், 10 அடிக்குப் பாலும் சோறும் உண்டு, பசிதீரும்.

தரித்திடுமெட் டடிதன்கா லினாலிட்டுத் தடையறவே
விரித்துவுயரம் எதிர்கூரை மட்டும்வின விச்செய்ய
பரித்திடுமே தைகளாடு மாடுகளியாவும் பல்கிடும்பார்
தரித்திடுமஷ் டலட்சுமி யாளுந்தன் குடியே. (817)

மனைக்குரியவன் தன்காலடிக்கு எட்டடி விட்டால் கூரையானதும் உயரம் 8 அடிவரை வைத்தால் கால் நடைபெருகும், அஷ்டலட்சுமி அம்மனையில் குடியிருப்பாள், அறிவு வளரும்.

மிடியாளகற் றுமின்னார் செல்விமிக வருளே
குடியேயிருப் பாள்குலாவு வளேசெல்வங் குறையறவே
சூடியாகப் பெண்பிள்ளை யுங்களகஞ் சுபமங்கிலியாள்
அடிபணிந்தேத் தியமர்த்துவ ளேகுறை யாவையுமே. (818)

செல்வம் பெருகும், மனையில் மகாலெட்சுமி குடிபுகுவாள் குறைவில்லா வாழ்வு நிலைக்கும்.

வேறு

ஆறடி அகலநீளம் அமைத்திட்ட வீடதாகிற்
பாரினில் பலித்தசெல்வம் பங்கயன் வீடதாகுந்
தாரணி தனிலுள்ளோர்க் குசதாசிவன் சொன்னநூலை
சீர்பெற ஆய்ந்துபார்த்துச் செயமனை கோலுவாயே. (819)

6 அடி நீள, அகலம் கொண்ட வீடானால் செல்வவளமும், சூரியன் போன்ற பிரகாசமான வாழ்வும் உண்டாகும் இதனை இப்புவியுள்ளுளோர்க்காக சதாசிவன் அருளிச் செய்தனர் எனவே இந்நூலை நன்கு ஆராய்ந்து வெற்றிதரக் கூடிய நன்மனைகள் கட்டுவாயாக.

ஏழடி அகலநீளம் எண்ணியேவ மைப்பாராகில்
தாழ்வுடன் செல்வம்போ குந்தரித்திரம் மிகவுண்டாகும்
ஊழ்வினை தானுமுண்டாம் முறைமுறைபொல் லாப்பாகி
பாழதாய்ப் போகுமென்று பரமனுமுரை செய்தானே. (820)

7 அடி, நீள, அகலம் வைத்து வீடு கட்டினால் தனச்சேதமும், தரித்திரமும், உண்டாகும், ஊழ்வினையின் காரணமாகப் பொல்லாப்பும், மனை அழிதலும் உண்டாகும் என சிவனருளினார்.

எட்டடி அகலநீளம் எண்ணியேவைப் பாராகில்
துட்டநிக்கிர கமுண்டாம் தொலைவிலாச் செல்வமெய்தும்
மட்டில்லா மனுவோடொத் துமகிழ்ச்சியாய் வாழவல்லார்
தட்டுதல் இல்லையென்று தயவுடனருள் செய்தாரே. (821)

8 அடி நீள, அகலத்தில் வீடு செய்தால் எதிரி அஞ்சுவார், தனம் பெருகும், சுற்றத்தார் சூழ பெருவாழ்வு வாழ்வார், தடங்கல் இல்லாமல் நலமுண்டாகும் எனச் சிவன் அருளியவாறே.

ஒன்பதாம் அகலநீளம் ஓங்கிடிலுயிர் கள்சேதம்
அன்புடன் அதனில்வாழ்ந் தாலருங்குடி நசித்துப்போகும்
சம்புவேயாய்ந் துசொன்னார் சலிப்புகள் மெத்தவுண்டாம்
வம்பதுசெய் யவேண்டாம் மறையெனும்வே தம்பாரீர். (822)

9 அடி அகல, நீளத்தில் வீடு கட்டினால் உயிர்ச் சேதம் உண்டாகும், அம்மனையில் குடியிருந்தால் குடும்பம் நசித்துப் போகும், சலிப்புண்டாகும் எனவே ஆகாது எனல்.

பத்தடி அகலநீளம் பரிவுடன்வைத் தபேர்க்குக்
கொத்துடன் ஆடுமாடும் குறைவிலாச் செல்வமுண்டாம்
மெத்தவேநன் மையெய்தும் வேளாண்மை மிகுதியாகும்
கர்த்தனார் இவைகள்தம்மை கருதியேசொன் னார்தானே. (823)

10 அடி நீள, அகலம் உள்ள வீடமைந்தால் கால் நடை பெருகும், குறைவிலாச் செல்வம் உண்டாகும், விவசாயம் விருத்தியாகும் நற்பலன் உண்டாகும் என சிவன் உரைத்தவாறே.

பத்துடனொன் றதாகில்பரி வுடன்சொல் லக்கேளும்
பொற்றுகில் பகையுமுண்டாம் போசனம் மிகுதியாகும்
சத்துருவில கிப்போவார் சங்கரன்கிரு பையுண்டாம்
மெத்தவே பாக்கியங்கள் மென்மேலும் பெருகிவாழ்வார். (824)

11 அடி அகல நீளம் வைத்து வீடுகட்டினால் பெண்கள் பகையுண்டு, உணவு மிகுதியாகும், பகைவர் விலகிடுவர், சிவனருள் வாய்க்கும், பாக்கியங்கள் கூடும், நல்வாழ்வுண்டு.

ஈராறு அடியதாகில் இன்பமுஞ் சுகமுமில்லை
பேராரும் வியாதியாலே பெண்டுபிள்ளை களும்நசிவர்
வாராதஆ பத்தெல்லாம் வந்துமேபொல் லாப்புண்டாம்
காராத கலகமென்று கைலாசப தியுஞ்சொன்னார். (825)

12 அடியானால் சுகம், இன்பம், இல்லை மனைவி மக்கள் நோயுறுவர், வராத ஆபத்தெல்லாம் வரும், பொல்லாப்பும் கலகமும் உண்டாகும் எனக் கைலாயத்தின் தலைவனான சிவபெருமான் கூறியவாறே.

ஏழுடன் ஆறதாகில் எண்ணிய கருமந்தீதாம்
தாழ்வுடன் செல்வம்போ கும்தரித்திர மிகவுண்டாகும்
வாழ்வுடன் மக்கள்நோ யாமகிழ்ச்சியென் நாளுமில்லை
தாழ்வுடன் பொருளும்போ குந்தயவுடன் மயனுஞ்சொன்னார். (826)

13 அடியானால் தீயதாகும், செல்வம் அழியும், தரித்திரம், புத்திரர் நோயுண்டாகும் இன்பம் என்றும் இருக்காது, பொருளும் அழியும் என்று மயன் அருளியவாறே.

எட்டுடன் ஆறுமாக வியன்மனை கோலுவானேல்
தட்டுமுட்டு எல்லாந்தோற் றுத்தரித்திரம் மிகுதியாகும்
பட்டுடன்பணி கள்போகும் பைந்தொடி வேசியாவாள்
தட்டுதான் செய்யுமென்று தாண்டவமூர்த் திசொன்னார். (827)

14 அடியின் நீள, அகலத்தில் மனை எடுத்தால், தட்டுமுட்டுச் சாமான்கள் சேதமாவதுடன் தரித்திரமும் உண்டாகும், தொழில் நஷ்டமாகும், அம்மனைக்குரியவன் மனைவி வேசியாவாள் மிகவும் கெட்ட பலனே உண்டாகும் என்று சிவன் அருளியபடியே.

மூவைந்து அடியதாக முயற்சியாய்வைப் பாராகில்
தாவுறுசெல் வம்போகும் தரித்திரம் மிகவுமுண்டாம்
பாவமும் வியாதியாலே பாரினிற்கிலே சம்ஆகும்
ஆவதுவேண் டாமென்று அன்புடன்மொழிந் திட்டாரே. (828)

15 அடியானால் செல்வம் அழியும், தரித்திரம், நோயால் வருத்தம் உண்டாகும் எனவே ஆகாது என சிவபெருமான் அன்புடன் உரைத்தார்.

பத்துடன் ஆறதாகில் பாக்கியமெத் தஉண்டாம்
பொத்துடன் நகையுமுண்டு பூஷணம் மிகுதியாகும்
சத்துருவில கிப்போவார் சங்கைகள் ஒன்றுமில்லை
மெத்தவேயடி மையோடு வேளாண்மை மிகுதியாமே. (829)

16 அடியானால், பாக்கியம், ஆபரணலாபம், பகைவர்விலகிடுவர், சங்காதோஷம், ஏற்படாது, வேலையாட்கள் அதிகமுண்டு, விவசாயம் விருத்தியாகும்.

ஈரைந்தோ டேழுமானால் எதிரியும் வணங்கிநிற்பான்
தாருடன் கொன்றைகூ டுஞ்சங்கரர் உதவியுண்டாம்
பாரினில் மன்னராவர் பாக்கியம்வந் தேஎய்தும்
வாருறத் திரியவேண்டாம் மானிடர் அறிந்திடீரே. (830)

17 அடிக்கு எதிரியும் வணங்குவான், கொன்றைமாலை அணிந்த சிவசங்கரன் அருளுண்டாகும், அரசபோகம் கிட்டும், பாக்கியம் உண்டாகும், இதை அறியாமல் அலைய வேண்டாம் அறிந்து நல்ல மனை அமைக்கவும்.

எட்டுடன் பத்தாகில் லட்சுமி இருப்பதில்லை
பட்டுடன் பணிகளெல்லாம் பாரினில் விலையதாகும்
கட்டுவன் காலன்வந் துகாரிகை பிணியதாவள்
தட்டுதல் செய்யுமென்று தாண்டவர்மொழிந் தார்பாரீர். (831)

18 அடியானால் லக்ஷ்மி கடாட்சமில்லை, பொருட்கள் சேதமாகும், மரணபயம் உண்டாகும், பெண்கள் நோயுறுவர், தீம்பே உண்டென்று சிவன் உரைத்தவாறே.

ஈரொன்பது ஒன்றுமாகில் ஏந்திழையடி யாள்சாவாள்
பாரினில்செட் டுசெய்யப் பலியாது தீதுமெத்த
மார்கொண்டு திரியவேண்டாம் மனைவியும் வேசியாவாள்
சீர்கொண்ட சிவனார்பார்த் துச்செப்பினார் இந்தநூலே. (832)

19 அடியானால், மனைவி மரணம், தீயபலனுண்டாகும், மனைவி வேசியாவாள் எனச் சிவபெருமான் உரைத்தபடியே வியாபாரம் விருத்தியாகாது.

இ நபதாம் அடியதானால் ஏற்றமா மனையுநன்றாம்
பெறுகுறும் பிள்ளையா கும்பிரபலம் இன்னஞ்சேரும்
வருவதுமசு வயோகம் வாணிபம்பலிக் கும்பாரு
திருவுடன் மகிழ்ச்சிசெய் துதிருச்சடை நாதர்சொன்னார். (833)

20 அடியானால் மனைசிறக்கும், புத்திர விருத்தியுண்டாகும், புகழ் சேரும், அசுவயோகம் எனும் யோகம் ஏற்படும் அல்லது குதிரைவாகனம் உண்டாகும், வியாபார விருத்தியுண்டு, செல்வம் செழிக்கும், இன்பவாழ்வு வரும் என சிவபெருமான் திருவாய் மலர்ந்தபடியே.

நாலைந்தும் ஒன்றுமாகில் நான்முகன்கடாட் சத்தாலே
பாலுடன்பசுக் கள்மெத்த பாக்கியம்வந் தேஎய்தும்

சாலவே வாழ்வதற்குச் சஞ்சலம் ஒன்றுமில்லை
மாலுடனீ சர்தாமும் மகிழ்சியாயுரை செய்தாரே. (834)

21 அடியானால் பிரம்மாவின் அருளால் பாற்பசுக்கள் நிறையச் சேரும், சுகபாக்கியம் உண்டாகும், கவலையில்லா வாழ்வுவரும் என்று சங்கரராயனர் அருளியவாறே.

மூவேழும் ஒன்றுமானால் மூத்தவள் வாசமாகும்
சாவதுமெத் தவுண்டாம் சலிப்புவந்து எய்துங்கண்டாய்
ஆவதையறிந் துசொன்னார் அரண்சதாசிவ னார்தாமும்
பூவதுபூத் திடாது புண்ணியம் எய்திடாதே. (835)

22 அடியானால் அம்மனையில் மூதேவி குடியிருக்கும், அதிக மரணங்கள் நிகழும், வாழ்வில் சலிப்புண்டாகும், புண்ணியம் எய்தாது, நற்பலனில்லை எனச் சிவன் அருளினார்.

இருபதுமூன் றேயாகில் எய்திடுங்கொடி யநோய்கள்
வருவதுகலங் கிநிற்கும் வாழ்வுமே அற்பமாகும்
திருமகள்கடாட் சம்ஏகும் செல்வமும்நசித் துப்போகும்
மருவுள்ள சேதமுண்டாம் மாரியும் பெய்திடாதே. (836)

23 அடியானால் கொடிய நோய்கள் தோன்றும், வாழ்வு குன்றும், தொழில் கெடும், லக்ஷ்மி கடாக்ஷம் இருக்காது, செல்வமழியும், குறையும், நஷ்டமும் உண்டாகும், அவன் நிலத்தில் மழை பெய்யாது.

அருநான்காம் அடியதாகில் அற்பமாய் வயதுகுன்றும்
ஒருநான்கும் இருபத்தொன்றில் உமையவள்கடாட் சம்போகும்
இருநான்கோ டெட்டுப்பத்தில் எமனுலகடை வார்பாரு
தருமனோன்மணி யாள்பங்கன் சதாசிவன் சொன்னதாமே. (837)

24 அடியானால் ஆயுள் குறையும், 25 அடியானால் உமை அன்னை அருள் போகும், 26 அடியானால் மரணமுண்டாகும், இவற்றை அர்த்தநாரீசுவரரான சிவன் அருளினார்.

ஏழுடனிருப தாகில் எய்திடு மிகுத்தயோகம்
தாழ்விலாச் செல்வமுண்டு சங்கரர் உதவிசெய்வார்
பாழ்போன பயிர்களெல்லாம் பலிதமாய் விளையும்பாரே
ஊழ்வினை ஒன்றுமில்லை உமைபரன்சொன் னார்பாரீர். (838)

27 அடியாகில், மிகுந்த யோகமுண்டு, குறையாத செல்வம் உண்டு, விளையாத பயிர்கள் நன்கு விளையும், ஊழ்வினை தீரும், என உமா மகேசுவரன் உரைத்தார்.

இருபதும் எட்டுமானால் இன்பமுஞ் சுகமுமில்லை
பெருகியபிள் ளையெல்லாம் பிணஞ்சுடு காடதாகும்
தருவதுபொரு ளுஞ்சேதம் தரித்திரம் மிகவுண்டாகும்
இருப்பிடம்விட் டுநீங்கும் ஈசனார் சொன்னதாமே. (839)

28 அடியானால் இன்பம், சுகம் இல்லை, குழந்தைகள் சாகும், மனையானது சுடுகாடு போலாகும், பொருள் இழப்பும், தரித்திரமும் உண்டாவதுடன், வீட்டைவிட்டு வெளியேறும் படியாகும் என ஈசன் உரைத்தவாறே.

ஒன்பதும் இருபதாகில் ஓங்கியசெல் வம்எய்தும்
ஒன்பதுமி ருபத்தொன்றில் உலகெலாம் புகழ்ச்சியுண்டாம்
சம்புவேபார்த் துச்சொன்னார் சலிப்புகள்எல் லாமேகும்
வம்பதுசெய் யவேண்டாம் மறையவர்வே தம்பாரீர். (840)

24 அடியாகில், செல்வம் பெருகும், 30 அடியானால் உலகம் புகழும் படிவாழ்வர், சிவன் இதை அறிந்து கூறினார் எனவே கண்டு அறிவீராக.

முப்பதும் ஒன்றுமானால் முக்கண்ணர ருளுமுண்டாம்
முப்பதும் இரண்டுமாகில் முகுந்தனார்கடாட் சமுண்டாகும்
செப்பியசொல் மேலாகத் தேசத்தில் செழித்துவாழ்வார்
தப்பில்லை சொன்னேனந் தச்சங்கரி மணாளர்சொன்னார். (841)

31 அடியானால் சிவனருள் உண்டாகும், 32 அடியானால் மகாவிஷ்ணுவின் அருள் உண்டாகும், சொல்வன்மையுடன் சிறப்பாகப் புகழுடன் புவியில் வாழ்வார்கள்.

ஐயாறும் மூன்றுமானால் அவனியிற் செல்வமுண்டாம்
ஐயாறும் நான்குமாகில் அருமனைநசித் துப்போகும்
ஐயாறும் ஐந்துமானால் அஷ்டலட்சுமி யுஞ்சேர்வாள்
ஐயாறும் ஆறுமாகில் அரசரோடர சாள்வாரே. (842)

33 அடியானால் உலகில் செல்வம் பெருகும், 34 அடிக்கு மனை பாழாகிப் போகும் 35 அடிக்கு அஷ்டலெட்சுமி சேருவாள், 36 அடியாகில் மன்னர் போல் அரசாள்வார்.

ஏழைந்தும் இரண்டுமாகில் இன்பமாம் பொருளுமுண்டாம்
ஏழைந்து மூன்றுமாகில் எப்போதும் பசாசுசேரும்
ஏழைந்து நாலுமாகில் இன்பமுஞ் சுகமுமுண்டாம்
ஏழைந்தோ டைந்துமாகில் என்றைக்குஞ் சலிப்புண்டாமே. (843)

37 அடியானால் இன்பமும், பொருட் சேர்க்கையுமாம், 38 அடியானால் அம்மனையில் எப்போதும் பிசாசுகள் குடியிருக்கும், 39 அடியானால் இன்பம், சுகம் உண்டாகும் 40 அடியானால் என்றென்றும் சலிப்பான வாழ்வுண்டாகும்.

எண்ணைந்தும் ஒன்றேயா கிலெய்திடுங் குபேரசெல்வம்
திண்ணவேயே மாறாகிலி லட்சுமிகடாட் சஞ்சேரும்
விண்ணவேழைந் தோடெட்டாய் விதித்திடிற் தீங்குண்டாகும்
கண்ணியேயா றாறெட்டேற் கண்கெட்டுக் குருடாவார். (844)

41 அடியானால் குபேரன்போல் செல்வந்தனாவான், 42 அடியானால் மகாலெட்சுமி அருள் உண்டாகும், 43 அடியானால் தீமையுண்டு, 44 அடியானால் கண்கள் குருடுபடும்.

கிருக அமைப்பு

தலையாகும் அரசரந் தான்கட் தான்கட் டுக்கோல்தனை
மலையாமல் கேள்மாதே மாநிதிகள் ஏறிவிடும்
வலையமாய் நான்குதிசை வாறடியில் மொப்புவிட்டு
மலையாகக் கன்னிதிசை வாழடுக்களை மயிலே. (845)

வீடு அமைப்பதில் விவரங்களைக் கூறுகிறேன் கேள்மாதே, கன்னிதிசை யெனும் தெற்கில் அடுக்களை அமைக்க வேண்டும்.

கட்டும் அடுக்களைக்குக் கனமான கோல்தன்னை
மட்டும் முச்சாரிதன்னை மயங்கவிடா மல்கூடவிட்டே
வெட்டுடன் மேலுமாக எதிரியாய்த் தாழ்வாரத்துச்
செட்டுடன் கன்னிதிக்கில் சென்றிடவா சல்வையே. (846)

கட்டுகின்ற அடுக்களைக்கு தாழ்வாரமிட்டே கனமான மரத்தை ஊன்றி 3 கால்கள் நாட்டி கன்னி திக்கெனும் தெற்கில் வாசல் வைத்துக்கட்ட வேண்டும்.

ஐந்துமூன்று ஐந்திரண்டாய் அவ்வளவதைக் குறித்து
முந்துமுதல் வாசல்முன் படியுங்கட் டிநன்றாய்ப்

பிந்துபுறக் கடையை வாசலதைப் பீடுறவே
நைந்துநடு வீடுமொன்று நலமாய்ப் பதிமானே. (847)

15 X 10 என்ற அளவில் அடுக்களை அமைத்து வாசலுக்கு முன்புறம் வாசற் படி அமைத்து அதுபோல் புறக்கடைப் பக்கமும் வாசல்வைத்து நடுப்பகுதியை அடுப்பினைப் பதிப்பாயாக.

தென்வடலுங் கூடரண்டா யதிசைமேற் குவீடுரண்டாய்
நன்மனைக்குக் கீழ்த்திசையில் நயமான கூடமொன்று
பொன்வழங்குங் கூடமதில் போதகமாய் ஈரறைநேர்
என்சொல்வேன் அம்மனைக்கே ஈரேழிடந் தொழிலே. (848)

தென்வடலான இரண்டு கூடம் அமைத்து இரண்டு வீடாக அமைத்து மனைக்குக் கீழ்த்திசையில் ஒரு கூடம் அமைத்து அக்கூடத்தில் இரண்டு அறைகள் எதிர் எதிராய் அமைத்திடவும். அறையானது பதினான்கடி இருக்க வேண்டும்.

இட்டகட் டுக்கீழ்த்திசை யிலேற்றமாய்க் கொட்டகை
மட்டுக்கு அடுக்களை மாறாமற் போட்டுமதிற்
திட்டசெங் கல்தூண்நிறுத் திச்செயமாகக் கட்டிடவே
அஷ்ட லட்சுமியா ளுமகலாள் ஒருநாளும். (849)

கட்டிய கொட்டகைக்குக் கீழ்த்திசையில் கொட்டகை அளவிற்கு தாழ்வாரமிட்டு அடுக்களை அமைத்து அதில் செங்கல் தூண் நிறுத்தி கட்டவேண்டும். இவ்வாறு அமைத்த மனையினின்றும் லட்சுமியானவள் அகலாது இருப்பாள்.

முற்றமெனும் வாசலின் பொருத்தம்

பன்னியகு ணவாரம் மயனார் சொல்லைப்
பகருவன் கேள்வாசல் அதுபொருத் தந்தன்னை
மன்னுமதை குறுக்கு நெடுக்கு அளந்துபின்னர்
வந்திடும் அங்குலத்தை நவத்தாற் பெருக்கி
இன்னுமதற் கெட்டதனிற் குாந்த சேடம்
ஏகமெனில் இந்திரன் தன்வாசல் ஆகும்
துன்னும் அதிற்களவு அதிகசம் பத்தப்பா
துவிதம் எனிலக் கினியின் வாசலாமே. (850)

மனை வாசல்ப் பொருத்தம், பற்றிய விஷயங்களை மயனாகிய நான் கூறுகிறேன் கேள். மனையின் நீள அகலத்தை அளந்து அதை

அங்குலமாக்கி 9ஆல் பெருக்கி 8ஆல் வகுத்துவந்த மீதி 1 ஆனால் இந்திரன் வாசல் எனப்படும். அதில் களவும் சம்பத்தும் உண்டாகும், 2 வந்தால் அக்கினியின் வாசலாகும்.

அக்கினியின் வாசலதிற் தீயால் சேதம்
ஆமூன்றுக் கொமன்வாசல் சாவு சொல்லு
தக்கதொரு தரித்திரமாம் நிருதி வாசல்
தருமைந்து வருணன துதான்ய விருத்தி
எக்காறில் வாயுவதில் அனந்த ரோகம்
ஏழதனில் குபேரனது மிக்க செல்வம்
அக்கெட்டுக் குஈசானம் மரணம் என்ன
அறைந்திட்டார் அறிவுடைய மயனார் தானே. (851)

அக்கினி வாசலுக்கு தீயால்சேதம், 3 வந்தால் எமன்வாசல் இதன் பலன் சாவாகும், 4 வந்தால் நிருதி வாசலாகும் இதன்பலன் தரித்திரமாகும், 5 வந்தால் வருணவாசல் தானிய விருத்தியுண்டாகும், 6 வந்தால் வாயுவாசல் அதிகம் வியாதி உண்டாகும் 7 வந்தால் குபேரன் வாசல் பெரும் செல்வம் உண்டாகும், 8 வந்தால் ஈசானவாசல் இதன் பலன் மரணம் இவ்விதமாக முற்றத்தின் பொருத்தப்பலன் மயன் உரைத்தார்.

செய்கைப் பிரதி

அத்தொகையை ஒன்பதுதன் னாற்பெருக்கி எட்டில்
வைத்துக்கொடுத் தவந்தவா ளென்கள் - உச்சிதமாம்
இந்திரனே முன்னான எண்மருக்கும் ஆகுமாமே
சுந்தரனே கேளாய் சுகம். (852)

முன்னம் கூறிய தொகையை 7 ஆல் பெருக்கி எட்டில் வகுத்த மீதி இந்திரன் முதலான எட்டுப் பேருக்கும் ஆகும் இதன் பலன் கேள் இந்திரனுக்கு சுகமுண்டாகும்.

சம்பத்து தீமரணம் தாழ்வுதான் யவிருத்தி
வெம்புற்ற நோய்கள் மிகுசெல்வம் - துன்புற்றுச்
சாதலேயா கச்சதுர்மறை தேர்ந்தார் சொல்வார்
போதவே கொள்வாய் புகல். (853)

இந்திரன் வாசல் சம்பத்து, அக்கினி வாசல் தீயால் நஷ்டம், எமன் வாசல் மரணம், நிருதிவாசல் தாழ்வுண்டாகுதல், வருணவாசல் தானிய

விருத்தி, வாயுவாசல் வியாதி ரோகம், குபேரவாசல் அதிக செல்வம் சேர்க்கை, ஈசானவாசல் துன்பமடைந்து மரணமாடுதல் இவ்வாறாக நான்கு வேதங்களில் தேர்ச்சி பெற்றவர்கள் கூறினர் என்று கூறுக.

மனையும் வாசலும் விரோதிப்பதின் பலன்

கேளப்பா வீடுமனை கருடயோனி
கிளர்வாசல் வருணனுமே ஆயிற்றானால்
நாளப்பா கொன்றிடுமே எஜமான்றன்னை
நலமாக மனைசர்ப்பம் வாசலிந்திரன்
கோளப்பா குலநாசம் மனையும்போகும்
குறித்திடாய் குபேரனுக்குச் சிம்மமீதே
ஆனப்பா கஜயோனி வாசல்கூற்றம்
அடுத்திடுமே சங்கடங்கள நிந்தகொள்ளே. (854)

வீடுமனையானது கருடயோனியாகி வாசல் வருணனானால் மனைக்கதிபதிக்கு மரணம் சம்பவிக்கும், சர்ப்பயோனிக்கு இந்திரவாசல் பொருந்தினால் குலநாசம் உண்டாகும் சிம்ம யோனிக்கு குபேரவாசல் பொருந்தினால் மனை பாழாகும் கஜயோனிக்கு எமன் வாசல் பொருந்தினால் மிக்க சங்கடங்கள் உண்டாகும்.

வேறு

கட்டியமனைக் குள்வாசல்கரி யரியெழுந்து நோக்க
விட்டிடில்மனை யும்மைந்தர் மேவியபொரு ளும்நாசம்
தட்டியபலன் அதாகுந்தர ணியுமிழக்கப் பண்ணும்
முட்டியகரு டன்சர்ப்பம் வாசலும்முழு துந்தீதே. (855)

கட்டிய வீட்டின் வாசலானது யானை, சிம்ம யோனியின் திசையில் அமைந்தால் மனை நாசமடைவதுடன், புத்திரநாசம், பொருள் நஷ்டம், பூமிஇழப்பு முதலாகிய இழப்புகள் உண்டாகும், கருடயோனி, சர்ப்பயோனியின் திசைகளில் வாசல் அமைந்தால் முற்றிலும் தீயபலனே ஏற்படும்.

நடுவீட்டில் முற்றம், கம்பம் இருப்பதின் பலன்

நடுமனை வாசலும் நடுமனைக் கம்பமும்
இடுஇலை இரட்டையும் ஏந்துகை இரட்டையும்
உடுவளை தாழ்தலும் முந்துகை உயர்தலும்
குடியதிற் புகுந்திடிற் குணமில்லை குடிலமே. (856)

வீட்டின் நடுவே வாசல் இருப்பதும் (முற்றம்) நடுவில் ஒற்றைக் கம்பம் நிற்பதும், தூண்கள் இரண்டு நிற்றலும், இரட்டைக் கைமரம் முற்றத்தில் இருப்பதும், வளை தணிந்தும் கைமரம் உயர்ந்தும் இருப்பதுமான மனையில் குடியிருந்தால் நற்பலன் ஏற்படாது.

வேறு

இடிசுவரிரட் டையாகில் ஏறுகையொற் றையாகில்
நடுமனை வாசலாகில் நடுமனைக் கம்பமாகில்
விடுதுளை மாறினல்ல மிஞ்சுகை ஏறுமாகில்
குடியதுபுகு தவேண்டாம் கூற்றுவன்கொல் வன்றானே. (857)

நடுமனையில் இடிந்த இரண்டு சுவர்களிருந்தால் ஒற்றைக் கைமரம் மேலேறி இருந்தாலும், நடுமனையில் வாசல் இருந்தாலும், நடுமனையில் ஒற்றை மரக்கம்பம் நின்றாலும் சுவர் துளைவிழுந்திருந்தாலும், கைமரம் ஏறி இருந்தாலும், குடியேறக் கூடாது குடியேறினால் எமன் வந்து உயிர்பறிப்பான்.

வேறு

நடுமனைக் கம்பமாகில் நடுமனை வாசலாகில்
இடுசுவரிரட் டையாகில் ஏற்றுங்கை ஒற்றையாகில்
முடிவளை தாழுமாகில் முந்துங்கை ஏறுமாகில்
குடிபுகுமாந் தர்ஆவி குன்றிடுமுண் மைதானே. (858)

நடுமனையில் கம்பமும், வாசலும், இரட்டைச்சுவர், ஏறிய ஒற்றைக் கைமரம், வளை தாழ்ந்து கைமரம் உயர்ந்தும் உள்ள மனையில் குடி புகுந்தால் உயிர்போகும்.

வேறு

கோடுமனை முறிதல் கோத்த கயிறறுதல்
நட்டதூன் விழுதல் நடுமனை வாசலாதல்
விட்டவாசல் அடைத்து வேறுவாசல் விடுத்தல்
நட்டமாமனை இழப்பர் நானிலத்தர் நாசமே. (859)

மனை இடிதல் கட்டுக்கயறு அறுந்துவிழுதல், நிறுத்திய தூண் விழுதல், நடுவில் மனையில் வாசல் விடுதல், வைத்த வாசலை அடைத்து வேறு வாசல் விடுதல் இவற்றால் மனையை இழப்பதுடன் கஷ்டத்திற்கும் ஆளாவர்.

வேறு

இடும்படை இரட்டையாகில் ஏற்றுங்கை ஒற்றையாகில்
நடுமனை வாசலாகில் நாட்டுங்கால் ஒற்றையாகில்
முடிநிலைக்குள் ளேகட்டை முன்மனை மையகம்பம்
குடிதனைத்துரத் திவைக்கும் கூற்றுவன்அது வேயாகும். (860)

நடுமனைச்சுவர் இரட்டையாயும், கைமரம் ஒற்றையாகவும், நடுமனை வாசலாயும், ஒற்றை மரத்தூண் நடுவில் நிற்றலும் குடியிருப்பவரை வீட்டைவிட்டே ஓட்டிவிடும் அத்துடன் உயிரும் போகும்.

வேறு

மனைநடுகூ பம்கூடா மனைதனில்ஸ்தம் பம்கூடா
மனைநடு அடுப்புகூடா மரசரம் ஒற்றைகூடா
மனைதனில்உத் திரங்கூடா வாசல்முன்சால் அகமுங்கூடா
மனையின்வா யலின்முன்னா கவாரைநீர் கூடாவன்றே. (861)

மனையின் நடுவே கிணறு இருத்தல், தனிஒற்றைத் தூண் நிற்றல், அடுப்பு இருத்தல், கைமரம் ஒற்றையாய் இருத்தல், வளை (உத்திரம்) இருத்தல், வாசலுக்கு முன்புறம் தாழ்வாரம் இருத்தலும், வாசல் முன்னே, மதிற்சுவர், சாக்கடை இருத்தல் இவை கூடாது.

முரண்பட நிற்குமாயின் முடிவனே தலைவனுண்மை
முரண்படநோய்ப் பன்னோய்த்தோன் றிமுதலையுமி ழப்பர்மற்றும்
இரணியமிழப் பராங்கு இருப்பவர் எவருமென்று
அரண்படுமய னார்கூற்றை அறைந்தனன் சிறக்கமாதோ. (862)

மேற்கூறியபடி முரண்பாடாக நிற்குமானால், தலைவன் அல்லலுறுவான் உண்மையாக பல நோய்கள் தோன்றும் முதலுக்கே மோசம் வந்து சேரும், பொன் பொருள் நஷ்டம் உண்டாகும் அங்கு குடியிருக்கும் எவருக்கும் இதுவே விதியாகும் என மயன் உரைத்தார்.

மையக்குறட் டையர்நாற் றமலமூத்திரங் கெடுமே
மையத்தடுப் பானெருப்பின் மணமும் வெகுண்டிடுமே
மையத்தகத் திற்படுத்த மதனோய் மலடிடுமே
மையத்தடத் தினில்மாதவ பூசை மயங்கிடுமே. (863)

வீட்டின் மையத்தில் மலமூத்திரக் கழிப்பிடம், அடுப்பு, நெருப்பின் மணம் படக்கூடாது மையத்தில் படுக்கை அமைத்து

பெண்ணைக் கூடினால் அவள் மலடாவாள், மையத்தில் பூசை செய்தால் கேடே உண்டாகும்.

மனைமைய உத்திரங்கள் மதிகெடும்விதி வேறாகும்
துணையினால் துயரமாகும் தூஷணையடை வார்மேலும்
வினையினால்சோம் பல்வேத விதிகளும்தவ றிப்போகும்
பிளந்திடுந்தச் சன்மாய்வன் பிணமுகப்படு வன்கொற்றன். (864)

மனையின் மையத்தில் உத்திரங்கள் இருத்தலும், புத்தி கெடும், விதி கெடும், மனைவியால் துன்பம், தூஷணைக்கு ஆளாகுதல், சோம்பலும், நிலை கெடுதலும், உண்டாகும். மேலும் அவ்வாறான தவறான மனை அமைத்த தச்சன் மாண்டு போவான், மனைக்குரியவனும் மாண்டுபோவான்.

மரங்கள் வெட்டப் புனலிது மூழ்கியே வந்துநீறணிந்து
நிரம்பவேபல ஆகாரங் கொண்டபின்நேர் மையாகத்தாம் பூலமணிந்தபின்
உரமதான தளிகைநெய் பாலிலுகந் துதோய்த்துவிநா யகபூசையும்
விரவுடன்தூ பதட்சிணைபாக் கிலைவிர்த்தியா கவென்றேபூசை செய்திடே. (865)

மரங்கள் வெட்டுமுன் குளித்து, திருநீறணிந்து வயிறு நிறைய உணவு உண்டு தாம்பூலம் அணிந்து அதன்பின், நெய், பால் இவற்றினால் வினாயகருக்குப் பூசை செய்து வணங்கி, தூபதீபம் காட்டி, வெற்றிலை, பாக்கு, தட்சிணை முதலியன வைத்து மனை விருத்தி அடைய வேண்டி கணபதி பூசை செய்யக் கடவன்.

செய்யும்போ துசுரிகையும் சேரவைத்துநீ தேங்காய் உடைத்தபின்
நெய்யும்பா லும்பலகனி வர்க்கமும்நேர் மையாகநிவே தியஞ்செய்தபின்
கையினாலெடுத் தானமரம் பார்த்துமேல்கனிந் தகொம்புதமுவி முழவிட
உய்யுமூன்றுவெட் டாகவேவெட் டிடவுகந்துதான் பலனுண்மை அறிந்திடே(866)

பூசை செய்யும் போது வெட்டும் ஆயுதம், கோடாரி, அரிவாள் இவற்றையும் வைத்துப் பூசை செய்ய வேண்டும், தேங்காய் உடைத்தபின், பால், நெய், பலகனிவகைகள், பலகாரங்கள் முதலானவற்றை நிவேதனமாகப் படைத்து வணங்கி ஆயுதத்தை எடுத்து வாகான மரத்தைத் தேர்ந்தெடுத்து முற்றிய வைரமான கிளைகண்டு முழம் அளந்துகொண்டு மூன்று வெட்டாக வெட்டி எடுத்துக் கொள்ளவேண்டும்.

அறியும்வெட் டுவாய்நிரதி ரத்தமேவந் துதேதைரயதில் உற்றொடிதலும்
விரிசாய்ப்பா டிமுழங்கிடில் விழ்மரமேல் பேய்போல்மனி தரமுவதும்

நெறிதவறிய லறிடில்தாழ் வதாய்நின்றசீ வன்பொருளும் அழிவரே
குறியதெற்கொடு மேல்விழில்கே டதாம்குபேரனிந் திரன்வீழ்மரம் நன்மையே. (867)

வெட்டுவாயில் நீரானது இரத்தம் போலும் வடிதலும் மரத்தின் கண்தேரை விழுந்தது போல ஒடிதலும் ஒடிந்துவிழும்போது எழும்சத்தம் "கிறீச்" சென்று அலறல் ஒலிபோலக் கேட்டாலும், மரத்தின்மேல் இருந்தவன் பேய் போல் அலறினாலும் காயம் ஏற்பட்டு அதனால் அலறினாலும் அதனால், உயிர், பொருள் யாவும் அழியும், மரமானதும் தெற்கு, மேற்குப் பக்கங்களில் விழுந்தால் கேடாகும், குபேரன், இந்திரன் இவர்களது திக்கில் விழுந்தால் நன்மையுண்டாகும்.

வேறு

கருதியமுகூர்த் தங்கொண்டு காட்டினுள்மரங் கள்வெட்டப்
பரிவுடன்பா லுஞ்சோறும் பணியாரம் பலவுங்கொண்டு
மருவியபூ சையிட்டு வனதேவி பலிகொடுத்து
புருடனாமரத் தின்கீழே பொற்புறநிற் பர்மாதே. (868)

நல்லதோர் முகூர்த்தம் அறிந்து காட்டிற்குள் சென்று மரம் வெட்டும்போது அன்புடன் பால்சாதமும், பலகாரங்களும் உண்டு, பூசைகள் செய்து வனதேவிக்கு பலி கொடுத்து மரத்தின் கீழ் வணங்கி நிற்க வேண்டும், அம்மரமும் ஆண்மரமாயிருக்க வேண்டும்.

தென்புறமேற் குமாகதெற்கே கோடாரி வைத்துத்
துன்பமாம்பூ தம்பேயைத் தூரத்தே போகச்சொல்லி
இன்பமாம்பால் குடித்தேயிதனிற் கோடாலி தோய்த்தே
அன்பிலோர்முழத் தைவிட்டே அடைவுடன் வெட்டுவாயே. (869)

தெற்கு, மேற்கில் நின்றுகொண்டு மரத்தின் தூரிலிருந்து 1 முழம் தள்ளி மேற்புறம் தெற்கே கோடாரியினால் பேய், பூதங்களை விலகிப் போகச் சொல்லி, பால் அருந்தி கோடாரியைப் பாலில் தோய்த்து வெட்டுவாயாக.

வெட்டியவா யில்நீர்பால் வீழ்ந்திடிலா காதென்க
வெட்டவீழ்மரத் தின்சத்தம் வெம்புலியா னைநன்றாம்
வெட்டவீழ்மரத் தின்சத்தம் அழுகையுஞ் சிரிப்புமாகா
வெட்டியமரம் கிழக்கும் வடக்குமாய்வீழ் தல்நன்றாம். (870)

மரம்வெட்டுப்பட்ட வெட்டுவாயில், நீர், பால் வடிந்தால் ஆகாது. வெட்டி விழுந்த மரத்தின் சப்தமானது, புலி, யானை இவற்றின் ஓசையானால் நன்றாகும், அழுகையொலி, அல்லது சிரிப்பொலி கேட்டால் தீயதாகும், வெட்டியமரம் கிழக்கு, வடக்கில் விழுந்தால் நன்மையாம்.

மரங்களின் இலட்சணம்

காணவேமரங் கள்தம்மைக் கருத்துடனறி யும்போது
தூணைத்திரன் டுநின்றுசுத் தமாயொழுங் கதாக
நீனுயர்பா ரின்மேலே நின்றிடுமா கின்நல்ல
ஆண்மரமென் றுசொல்லி அறைந்தனர்வே தத்தோரே. (871)

வீட்டிற்காக மரங்களைத் தேர்ந்தெடுக்கும்போது மரமானது வளைவின்றி நேராக நிமிர்ந்து நின்றால் அது நல்ல ஆண்மரம் என்று வேதமறிந்தோர் உரைத்தனர்.

கண்ணுறமரங் கள்தன்னைக் கருதியேபார்க் கும்போது
விண்ணுமையடி பெருத்து மேலதுசிறுத் துநின்றால்
பெண்ணெனவகுத் துநன்றாய்ப் பெருமையாய் ஓதலாம்பின்
துண்ணெனத்தமி ழாலோதுந் தூயனாமயன் சொற்றானே. (872)

மரத்தைப் பார்க்கும் போது அம்மரமானது தூர் பெருத்து மேல்புறம் சிறுத்துக் காணில் அது பெண் மரமாகும் என மயன் கூறினார்.

இலகியமரங் கள்தன்னை இயல்புடன்பார்க் கும்போது
நிலமதிற்சிறுத் துநீண்டு நெடுமையதா கிப்பின்னுந்
தலையதுமிகப் பெருத்துத் தானது நிற்குமாகில்
அலிமரமா குமென்றே அறைந்தனர்வே தத்தோரே. (873)

மரமானது தூர் சிறுத்து நீண்டு மையப்பகுதி நீண்டு மீண்டும் தலைப்பகுதி மிகவும் பெருத்துக் காணப்பட்டால் அலிமரம் எனப்படும்.

வீடுகட்ட ஆகாத மரங்கள்

அகத்தினுக்கா காதென்றும் அகற்றியமரங் கள்தாமும்
மிகுத்ததுவே னுமென்றுவிரும் பியமரங்கள் தாமும்
அகத்துளதே வர்கட்கும் மற்றுளமாந் தருக்கும்
பகுத்திருவகை யாயாய்ந்து பற்பலவகை யுஞ்சொல்வோம். (874)

வீட்டிற்கு ஆகாது என்று அகற்றிய மரங்களும், தேவையென்று தேர்ந்தெடுத்த மரங்கள், ஆலயங்களுக்கும், மனிதர்களுக்கும் இப்படியாகப் பிரித்து வகைகள் பற்றிக் கூறுகிறேன்.

அம்பலூர்வள வுகோவில் அனற்படல்பற வைசெல்ல
வம்புடன்கொடி கள்சுற்றல் வல்புழுவினங் கள்சேர்க்கை
தும்பியால்காற் றால்வீழ்தல் சுடுகாடுபாழ் மனையுஞ்சேரி
வெம்புறலுடன் பேய்பூதம் ஏவல்வேர் அற்றதாகா. (875)

ஊரில் தெருவுக்குள் உள்ளமரம், கோவில்மரம், தீப்பட்டமரம், பறவைகள் கூடுகட்டியுள்ளமரம், கொடிகள்சுற்றியமரம், புழுசேர்ந்தமரம், வண்டுதுளைத்த துளைவிழுந்த மரம், காற்றில் சாய்ந்த மரம், சுடுகாடு, பாழ்மனை, சேரி இவ்விடங்களில் உள்ள மரங்கள் பேய், பூதம், சாடியமரம், வேர்அறுந்தமரம் இவை ஆகாத மரங்களாம்.

சீறியகாற் றில்வீழ்ந்த திறமைசேர் மரமுமல்லாற்
கூறியவா லயத்திற் குணம்பெற நிற்குநல்ல
தேறியமா மயானத்து இருந்திடும் மரமகந்தான்
மாறியே கட்டுமாகில் வம்மிசநா சமாமாமே. (876)

சீறும் காற்றில் விழுந்தமரம், ஆலயத்தில் நிற்கும்மரம், மயானத்தில் நிற்கும்மரம் முதலியவற்றில் வீடு கட்டினால் வம்சமே அழிந்துபோகும்.

அத்தியுமா லுமிச்சியரசு டன்இலவு தானும்
நத்தியபுர சுகுச்சம் நவின்றிடும் இலந்தைபீலி
வித்தமமகி ழுங்கூறும் விளாவுடனிவை களெல்லாஞ்
சித்தியாய் அகங்கள்கட் டச்செல்வமுங் குன்றுந்தானே. (877)

அத்தி, ஆல், இச்சி, அரசு, இலவு, புரசு, இலந்தை, சிறுசின்னி, விளா இம்மரங்களினால் வீடுகட்டினால் தீயபலன் உண்டாகும்.

வேறு

அத்தி ஆலிச்சும் அரசுபுரசு விளா
வெற்றிமகிழ் இலுப்பை வெண்குடசை - சுத்த
இலந்தைமரங் களிவை பத்தும் மானே
கலந்துவெட்டிக் கட்டிடல் ஆகா. (878)

அத்தி, ஆல், இச்சி, அரசு, புரசு, விளா, மகிழ், இலுப்பை, வெண்குடசை, இலந்தை இவை பத்தும் வீடுகட்ட ஆகாதவைகளாகும்.

பெருங்காற் றில்வீழ்ந்து போனதில் வெந்து
மருங்கோயில் பிம்பத்தில் ஆர்ந்தும் - பெருந்திருவே
இந்தமரங் களெடுத்து இல்லங் கட்டினால்
அந்தமனை பாழென்று அறி. (879)

காற்றில் விழுந்து, தீப்பற்றியமரங்களும், கோவி ில் நிற்கும் மரங்களும், மயானத்தில் நிற்கும் மரங்களையும் எடுத்து வீடுகட்டினால் அந்த மனை பாழாகும் என்று அறிக.

அத்திபுரசு அரசு விளா இச்சு
தித்திமகிழ் இலந்தை திகுடசை - நித்த
இலுப்பை மரம்யாவும் இன்குயிலே சேர்த்து
வலிசேர்த்துக் கட்டல் மறு. (880)

அத்தி, புரசு, அரசு, விளா, இச்சு, இத்தி, மகிழ், இலந்தை, வெண்குடசை, இலுப்பை இம்மரங்களில் வீடுகட்டலாகாது.

புசலிலே வீழ்ந்தும் புகழ்கோவில் பிம்பம்
வகமார்ந்து தீபற்றும் வானம் - நிசமாக
இந்தமரங்கள் எடுத்து இல்லம் கட்டுவரேல்
அந்தமனை பாழென்று அறி. (881)

புயலில் விழுந்தமரம், கோவில் இடத்தில் நின்றமரம், தீப்பிடித்தமரம், இவற்றால் வீடுகட்டினால் அந்தமனை பாழாகும்.

இன்னவைகளுக்கு இன்னமரம் ஆகும் என்பது

கருதுமாண் மரமேயாகில் காலொடு தூணுக்காகும்
மருவுபெண்மர மேயாகிற் வளையுத்திரம் பொதிகைக்காகும்
விரவலிமர மேயாகில் விட்டமுஞ் சட்டமாகும்
உரவியகை களாகியுத் தமமரங் களாமே. (882)

ஆண்மரங்கள் தூணுக்கும், காலுக்கும் ஆகும், பெண்மரங்கள், வளை, உத்திரம். மற்றும் கட்டுமானத்திற்காகும், அலிமரங்கள், விட்டம், சட்டம் இவற்றிற்கும், வைரமான மரங்கள் கைமரம் முதலியவற்றிற்கு ஆகும்.

அடிதலையிரண் டுமொத்தால் ஆண்மரமது வேயாகும்
அடிபெருத்தது வேபெண்ணம் அம்மரம் தலைபெருக்கில்

வடிவுளஅலி அதாகும்வளை களுத்திரங்கள் போதி
மடிவிலாவிட் டஞ்சட்டம் மரமதுபெண் ணேயாமே. (883)

தூரும் தலைப்பாகமும் ஒன்றாக ஒரே கனத்துடன் இருந்தால் ஆண்மரமாகும், தூரானது கனத்துப் பெரியதாய் இருந்தால் பெண்மரமாகும், தூரும் தலையும் பெருத்து நடுப்பகுதி சிறுத்திருந்தால் அலி மரமாகும், இம்மரங்கள் முறையே வளை, உத்திரம், கைமரம், விட்டம், சட்டம் முதலானவற்றில் பயன்படும்.

ஆனமரமா ணென்றுபலவா கிற்பெலன்கள் ஆராய்ந்து
ஊனமில்லா ததையுரித்தே உரமாயுத்திரந் தானிசைக்கில்
ஈனமில்லை மனைக்கிடறுமில் லைவாழ்வு மிகவுண்டாம்
போனதிசை யும்நன்றாகும் புகழுஞ்சிற் பன்தனக்கோமே. (884)

ஆண்மரத்தைக்கண்டு, அதனை உத்திரமாய்ச் செய்திடில் கேடுவராது, மனைநிலையாக வாழ்ந்திருக்கும், சிற்பனுக்கும் சென்ற இடம் எல்லாம் நற்பெயரும், புகழும் உண்டாகும்.

உத்தரமிசைக் கவேண்டில் உன்னிநீர்கே ளுமெல்லாம்
அத்தனையக லந்தன்னை அளந்துநற் சதுரமாக்கி
வைத்ததோர் கணத்தைநே ரேவடிவுற நூலாற்கண்டே
இத்தனை ஒன்பதாக இசைந்தது குடுமியாமே. (885)

மரத்தின் மொத்த அகலத்தை அளந்து சதுரமாக்கி நூல்பிடித்து அளந்து ஒன்பது சம பாகங்களாகப் பிரித்து எடுத்ததே குடுமியாகும் இவ்வாறாக உத்தரம் செய்யவேண்டும்.

உத்தரமிசைக் கில்ஆணி உத்தமமா கக்கொள்ள
உத்தரமிசைக் கில்ஆணி உலகத்தில் வலமதாக
உத்தரமிசைக் கில்ஆணி உலகத்தில் இடமதாகிற்
சத்துருபெருத் துப்பின்னும் சாலைதீப் படுதறிண்ணம். (886)

உத்தரம் இழைத்துச் செய்யும்போதில் அளவு கூடுதல் குறைவின்றி இடமும், வலமும் சமமாக வருமாறு எடுக்கவேண்டும் இல்லையேல் அம்மனை தீக்கிரையாகிவிடும்.

அடியதுகி முக்காகும் அகத்துச்சிர் மேலதாகும்
படிமுதலா னதெல்லாம்பார்த் ஏடஎிசைத்துக் கொள்ள

முடியவே ஓரமாகில் மூலமுமுள் ளேவாமும்
சுடிகமழ் நூலினாளே கண்டநூல் உரைத்தவாறே. (887)

கீழ்ப்புறமுள்ள மரப்பகுதி கீழ்புறமனைக்காகும், மேல்புறமுள்ள மரமானது உத்திரம் முதலான மேற்பகுதிக்காகும் நடுப்பகுதி சட்டங்கள் முதலானவற்றிற்காகும் இவ்வாறு கண்டறிந்து மனை அமைத்தால் லக்ஷ்மி கடாட்சம் இருக்கும்.

மையதாகநல் மரந்தனை இசைப்பா ராகில்
கையினில்பொரு ளும்போகும் காவலன்தா னுஞ்சாவான்
பையவேயா கில்மையம் பாதியிற்பா திகொண்டு
செய்யவேயிசைத் தல்நன்றாம் தேனினைப்பழித் தசொல்லாய். (888)

தீயதான மரத்தினை இழைத்தால், கைப்பொருள் நஷ்டமாவதுடன், மனைக்கதிபதியும் இறந்துபோவான் நடுமரத்தில் வைரம் தேர்ந்து இழைத்தல் நன்றாகும் என்று தேனினும் இனிய மொழியுடைய பெண்ணே நீ கூறுவாயாக.

நிறைநெய்யில் லாவயிரமு டன்நெய்யில் வயிரந்தான் இசைக்க
வறண்டவயிரந் தன்னுடனே வறண்ட வயிரந்தான் இசைக்க
சிறந்தவலத் தில்நெடுவடை யுஞ்சேரும் இடத்திற் குருவடையும்
புரம்பில்தச் சனின்றிசைக்கப் புகழுஞ் சிற்பன் உள்ளிசையே. (889)

முற்றிய வைரமரமும், பாதி வைரமும் இணைக்காது, நல் வைரத்துடன் நல்வைரமும் குறை வைரத்துடன், குறை வைரமும், வலமும், இடமும் நல்வயிரமும், நடுப்பகுதியில் குறை வைரமுமாய் வீட்டிற்கமைத்திட்டால் தச்சன் புகழடைகுவன்.

இருந்தமுதுமை முதுதலையும் இளமையோ டேஇளந் தலையும்
பொருந்தியிசைப் பாராமா கிற்பொல்லா நோயுமிகத் தொடரும்
திருந்துமுதுத லைஇளந்தலை யுஞ்சேரு மிசைகள் மிகநன்றாம்
வருந்தியிசைப் பாராமா கில்வாழ்வு சம்பத்து உண்டாமே. (890)

முற்றிய வைரமரத்துடன், இளமரத்தையும் சேர்த்து வீடமைத்தால் நோயதிகம் ஏற்படும், குறை வைரத்துடன், இளமரம் இணைத்தால் குற்றமில்லை நன்றாம், இதன் வகைதெரிந்து சேர்த்தால் எப்போதும் சம்பத்தும், நல்வாழ்வும் உண்டாகும்.

ஓரிசை தானேயா கில்உத்தமம் அல்ல என்றும்
பேரிசை இரண்டதா கிற்பிர உபகார சென்ம

நாரிகொள் மூன்றினோடு நாலிசை வெறும் பாடாக
மேரிசை ஐந்துமாறும் இயல்பு தவற்றம் ஆமே. (891)

ஒரே வகை மரமானால் உத்தமம், இரண்டு வகை மரமானால் வகையறிந்து கூட்டநன்றாம் மூன்று, நான்கு, ஐந்து, ஆறு என அதிகஅளவில் கலப்பான மரங்கள் ஆகாதாகும்.

ஒப்பியவிசை கள்ஏழே எட்டுள்ளது தேவசத்தி
செப்புமேலிசை கள்எல்லாம் தெண்டிகை என்றுபேராம்
இப்படியறிந் திசைக்கில் அதிலிடறில் லையென்றும்
துப்புறுகிளை யுமிக்க சுகத்தையும் கொடுக்கும்நன்றே. (892)

ஏழுவகை மரங்கள் மனிதருக்கும் எட்டுவகை மரங்கள் தெய்வாலயங்களுக்கும் அதன்மேல் கூட்டான மரங்கள் தண்டிகை என்று பெயர் பெறும், இவ்வாறாக வகை அறிந்து மரம் சேர்த்தால் துன்பம் நேராது, நற்சுகம் உண்டாகும்.

காலளவு விவரம்

பரப்பினை ஒன்பதாக்கிப் பண்புடன் ஒன்றுநீக்கி
இரப்பதோர் எட்டுங்கா லாமிரண்டுகீழ் மேலுந்தானும்
குருத்துடன் கவருதானும் கொள்வது மிச்சமாகும்
திருத்தமாய்முகூர்த் தங்கொண்டு தென்மேற்கு முன்னம் நாட்டே. (893)

மரத்தின் அகலத்தை ஒன்பதாகப் பகுத்து ஒரு பாகத்தைத் தள்ளி மீதியான 8 பாகத்தையும் கால்களாகக் கொள்ளவும் அதிலும் கீழ்மேல் ஆகும். மென்மையான பகுதியைத் தள்ளிவிடவும் (வைரத்தை உபயோகிக்க வேண்டும் என்பது கருத்து) நல்லதோர் முகூர்த்த நேரத்தில் தென்மேற்கு மூலையில் முதற்காலை நிறுத்தவும்.

பன்னுறும் அகலம்பற் றிப்பன்னிரு கூறுசெய்து
அன்புடன் ஐந்துமஞ்சாம் மற்றது தொகையதாகும்
இன்பமேழ் நடுவிற்கை யாம்எட்டுகோ டாகையாகும்
ஒன்பது கூறுதானே உற்றது கோடியாமே. (894)

மரத்தின் அகலத்தை அளந்து அதை 12 பாகமாக்கி முன்பின்னாக 5 பாகத்தை நீக்கி நடுவான 7 பாகம் வைரம் கண்டு நடுப்பகுதியில் கைமரம், எடுக்கலாகும் 8 பாகம் எடுத்தாலும் கைமரத்திற்கு ஆகும் (உத்திரமும் ஆகும்) ஒன்பது பாகமாய் அளந்தெடுத்ததின் பலன் கோடியாகும்.

அஞ்சினில் இரண்டதாகில் அகலத்தை இருபதாக்கி
மஞ்சதிரா றுபன்மூன்றடி யிலமஞ்சா கையாக
முஞ்சொல் நடுவாகை ஈரேழ்மூவேழ் கோடாகையாக்
குஞ்சியதிருன் டமாதே கொடிபதி னாறுகொள்ளே. (895)

5 X 2 அடி கனமானால் அகலத்தை 20 ஆக்கி 12 முதல் 13 அடிவரை நீளமுள்ளதாக கைகளை அறுத்து எடுத்து 14, 21 அடிகள் இருந்தால் வளை, உத்திரத்திற்கும் ஆக்கிக் கொள்ளவும்.

ஏழினில்மூன் றுங்கைக்கு இருப்பதை மூவெட்டாக்கி
வாழுமிரெட் டுமஞ்சிமஞ் சிகைபதின் ஏழாகும்
மூழியல்நடு வாகைக்கு முன்தலை ஒன்பதாகுஞ்
சூழ்கொடிகைப் பதொன்பான் சொற்கொடி இருபதாமே. (896)

7 X 3 கன அடியுள்ள மரமானால் 24 பாகமாய்ப் பிரித்து அறுத்து 16 X 5 கனம் 17 அடி நீளமாக எடுத்துக் கொள்க, கிளையில்கனம் குறைந்தவற்றை 9 அங்குல சதுரகனம் உள்ளதாக (கனஅடி) இருபது அடியாகப் பிரித்து எடுத்துக் கொள்க.

ஒன்பதுநான் குதன்னில் உறுநளியிரு பத்தெட்டில்
அன்புடைமஞ் சுபத்தொன்பதா குங்கை இருபதாகும்
நன்கோடதி ருபத்தொன்று நடுவாகை கோடாகை கோடி
முன்புறுவழி யாமென்றுமு றைமையாலேற் றிக்கொள்ளே. (897)

9 அங்குலத்திற்கு நான்கங்குலம் உள்ள அளவிலான மரத்துண்டின் அகலத்தை 28 ஆகப்பகுத்து 19 கைமரம் வரும்படிப் பிரித்தெடுக்கவும். இவை முதுகுப்புறம் ஓரத்தில் பரப்பும் கைமரங்களுக்காகும் இவை அறிந்து மரமறுத்து எடுக்கவும்.

பதினொன்றில் அஞ்சுகையில் பாரகலமுப் பத்திரண்டாம்
அதிலிருபத் திரண்டுஅஞ் சுமஞ்சா கையான
அதனடுவா கைகோடா கைகொடியடை விலேகையேற்றி
விதியினிலொவ் வொன்றாக விரும்புகை அளவுதானே. (898)

11 ல் 5 அளவுள்ள மரத்தின் அகலத்தை 32 ஆகப்பகுத்து அதில் 5 அங்குலம் அகலமும் 22 அடி நீளமுமான கைமரங்களாகப் பிரித்து எடுக்கவும், நடுவில் உள்ள வைரமான மரப்பகுதியை உத்திரம், வளைக்குப் பிரித்துக் கொள்ளவும்.

உன்னுமஞ்சு முதுகுயரம் ஒன்பதொன்று கொடியாகும்
பன்னும்பல சார்கைதனக் குப்பரப்புமு துகின்மேலதனைப்
பின்னும்பரப் புமூன்றுகைகால் பெய்தகோடா கைமூன்று
மன்னும்நடு வாகையிரண் டுமஞ்சாகைக் கொன்றிமுக்கதுவே. (899)

5 அங்குலம் முதுகின் உயரமும் கைமரமாகும், 10 அங்குலம் வளை, உத்திரமாகும் கைமரங்களைப் பரப்ப மேல் முகட்டுக் கொடிக்கை வளைக்கும், கீழ்மேல் வளை இரண்டும் ஆக மூன்றும் ஸ்வரமான நடுப்பகுதியில் அறுத்தெடுக்கவேண்டும் இவை மாறாக இருந்தால் சரியான பலன்தராது.

கொடிக்கு முதுகுயரம்

மஞ்சுமுதுகை ஐந்தாக்கி மருவுங்கொடிக் குத்தண்டேத்து
மிஞ்சவேற்றுஞ் சேடமதுவி ரண்டுநான்கு கூறாக்கி
நஞ்சல்கோ டாகைமூன் றுநடுவாகைக் கோரிரண்டாகும்
அஞ்சாகைக் கையொன்றாகி அறையுமுதுகி னுயரமதே. (900)

முகட்டு வளைக்கு உள்ள அகலத்தை 5 ஆல் பெருக்கி நீளத்தினால் வகுத்த மீதத்தின் அளவை 2, 4 ஆக வரவேண்டும் இவ்வாறாகப் பகுத்து ஓரத்தில் வைக்கும் கைமரத்தின் முதுகு 3 அங்குலமும், நடுவில் விடும் கைமரத்தின் முதுகு 2 அங்குலமும் மற்ற கைகளில் 1 அங்குலமுமாக இவ்வாறாகக் கைமரத்தின் முதுகின உயரம் அமையும் என்றவாறு.

தெருவாசற்காலின் இலட்சணம்

கன்னிலைதே வர்க்காகும் கனமறையோர்க் குவேம்பாம்
மன்னவர்க்காச் சாதேக்கு வைசியர்க்கிருப் பையாகும்
பன்னுவேளார் கட்குபகர் தெங்குமு சிலையாகும்
இன்னவைதமி ழினாலே இயம்பிணுவே தத்தோரே. (901)

செம்பு, வெண்கல நிலை ஆலயங்களுக்காகவுள்ளது, பிராமணருக்கு வேப்ப மரத்திலும் க்ஷத்திரியருக்கு ஆச்சா, தேக்கு மரங்களும், வைசியருக்கு, இலுப்பை மரமும், சூத்திரருக்கு தென்னை, உசிலை ரங்களும் வாசற்கால் நிலை செய்யப் பயன்படும்.

நிலைதனையக லங்கொள்ளில் நேர்படச்சேர்க் கும்போது
நிலையகலத் தினாலேகன மதுநிட்டிக் கொண்டு

நிலையகலத் துமுக்கால் நீளரைகா லேயாகில்
நிலையகலத் தால்வந்த நிலத்தள வொத்ததாமே. (902)

நிலை செய்யும்போது அதன் அகலத்தையே கனமாகக் கொள்ள வேண்டும் நிலை அகலத்தில் முக்கால் பங்கு கனமாகவும் வரும், மனையின் கண் கட்டிய வீட்டடி அளவு நீளத்தில் அரைக்காற் பங்கு நிலை அகலமாயும் வரும்.

மட்டுக்கொண் டநிலைநீ ளம்வளையின்கீழ் மன்னவர்க்காகும்
எட்டுக்கூ றிட்டாறுமொன் றுஎச்சமூன்று படியாகும்
வட்டமலை போல்தனம்படைத் தமங்காய்துங் கமதிமுகத்தாய்
சட்டமாக மயனுரைத்தசங் கைதெளிநூல் இதுவாமே. (903)

முகட்டு வளையின் நீளத்தை எட்டால் பிரித்து அதில் ஆறு நிலை நீளமாயும் மூன்று அகலமாயும் மன்னவர்க்கு (க்ஷத்திரியர்) நிலை அளவாகக் கொள்க.

ஓதியநிலை நீளத்தையொன் பதுகூறு செய்து
நீதியாயிரண் டுமைந்துநீள் விரல்முறியா வண்ணம்
பாதியாம்விர லையொற்றிக் கொள்வதுபழு தொன்றில்லை
மீதியாயிரண் டொன்பானால் மேலைந்து கீழ்நால் காண்க. (904)

நிலையின் நீளத்தை ஒன்பதாக்கி 7 அங்குலத்திற்கு குறையாவண்ணம் அகலமும் அதிற்பாதி 3½ அங்குலம் கனமுள்ளதாகக் கணக்கிட்டு நிலைசெய்தால் ஏதும் குற்றம் வராது. 18 அங்குலம் மீதியாக வந்தால் அகலம் 5 அங்குலமும் கனம் 4 அங்குலமும் கொள்க.

மட்டுரைநிலை நீளத்தை மன்னியே ஏழுசெய்தே
ஒட்டோடா றிரண்டுநீக்கி ஒன்றினை ஒன்பதாக்கி
இட்டதோர்கூ றுதன்னில்மே லைந்துகீழ் நான்காகும்
வெட்டிடிற் பாதிபோகும் விரலொற்றிக் கொள்வர்தாமே. (905)

நிலை நீளத்தை 7 ஆல் வகுத்து வந்த அங்குலத்தைப் பனிரண்டில் கழித்து மீதிவந்ததை 1 பங்கை 9ஆகப் பெருக்கி அந்த அளவினில் மேல் பாகம் 5 ஆகவும் கீழ்ப்பாகம் 4ஆகவும் கொண்டு நிலைகால் அமைக்கவும்.

கதவுகளின் இலட்சணம்.

நாவலுந்தே வர்க்காகும் நவில்மறையோர்க் குவேம்பாம்
மேவுமன்னவர்க் குத்தேக்காம் மிக்கவைசியர்க் கிலுப்பை
தாவுவேளா ளர்தெங்குத னியெட்டியெ வர்க்குமாகா
காவியமா கச்சொன்னோம் கதவுகளி யல்புதானே. (906)

தெய்வஆலயத்திற்கு நாவல்மரமும், பிராமணருக்கு வேம்பும், க்ஷத்திரியருக்குத் தேக்குமரமும், வைசியருக்கு இலுப்பைமரமும், சூத்திரருக்குத் தென்னை மரமும், எட்டிமரம் எவருக்கும் பயன் படாது, இவ்விதம் கதவுகளின் மரவகையாகும்.

சிறப்புடைதே வர்க்கண்டால் புறத்தலா மிரண்டுமாகும்
சிறப்புடைவட மிரண்டாயடைத் தலுந்திறத் தல்காணும்
சிறப்புடையக லமொன்று தேவர்கட் கன்றியாகா
சிறப்புடன்கத வுங்கோலுஞ் சிக்கெனச்செய் தல்நன்றே. (907)

தெய்வ ஆலயங்களுக்கான கதவுகள், உள்ளேயும், வெளியேயுமாகத் திறக்கவும், மூடவுமாகச் செய்யப்படலாம், இரட்டைக் கதவுகளாயும், மிகப்பெரிய அகலமாயும் வைக்கலாம், கதவும், நிலையும் இடைவெளியின்றிச் சிக்கெனப் பொருந்தும்படிச் செய்யவேண்டும்.

நிலையுறுமரங் கள்தானும் நீள்முடிநி லையுமட்டம்
துலக்கமாங் கதவுக்கான சூத்திரப்படித் துணைக்கோல்
நிலக்கமாந்தாழ்ப் பாளொன்று இரண்டுமே அளவதாகும்
பலக்கநாட்டிட வும்வேண்டில் பன்னிரண்டுஅ ளவுகொள்வாம். (908)

நிலைசெய்வதற்கான மரங்கள் கதவு நிலை செய்வதற்கான சூத்திரப்படித் தயாரிக்கவேண்டும் இவை சிற்பன் குலவழிமரபில் கணக்கிட்டுச் செய்வர் மரங்கள் அறுப்பது முதல் சகல வித மரவேலைகளும் வம்ச பரம்பரையாகச் சிற்பியின் சூத்திரங்களைக் கடைபிடிக்க வேண்டும் என்று பொருள், தாழ்ப்பாள், கீல் இரண்டுமே அளவுடையதாகும் கனம் தாங்கும் படியாக கதவு நிலையின் அளவிற்கேற்ப தாழ்ப்பாள் 12 அங்குலம் முதல் பலதரமாகும். இவ்வாறாகச் சிற்பன் முன்னோர் உரைத்த சூத்திரத்தின் உதவியால் விஷயங்களைத் தீர ஆலோசித்துச் செய்யவேண்டும் என மயன் உரைத்தனர்.

தெருவாசல் விடுமிடம் இன்னபாகத்திலிருந்து எண்ணவேண்டும் என்பது

வாமத்தில் கதிரோனா திவந்திடும்கோள் கள்தானும்
சேமத்தின் வலத்தின்கோ டிசெம்பாம்பென் றுரைப்பதாகும்
நேமித்தும னைசெய்வோர்க் குநெறிமுறை வழியைக்கண்டு
பூமியில்கத வைநாட்டப் பொருந்தியவிடத் திற்செய்யே. (909)

இடதுபுறமிருந்து சூரியன் முதலாக வலது கடைசி கேதுவின் பகுதியாகக் கொண்டு தெருவாசற் சுவற்றின் நீளம் 9ஆகப் பகுபடும் இவற்றில் பொருத்தமான இடத்தைக் கண்டு பூமியில் அங்கு கதவை நாட்ட வேண்டும்.

தேறியமனைக் குவாசல்தெருப் புறஞ்சுவர் அளந்து
கூறதுநவ மேசெய்து குணமதிபுதன் கூர்கண்டு
தேறுகவா சல்விட்டுத் தெருக்கெதிர்கொல் லைவாசல்
தேறியமனைக் குச்செல்வம் சிறப்பெனமயன் உரைத்தான். (910)

வீதிப்புறம் உள்ள சுவற்றின் நீளத்தை அளந்து 9 ஆகப் பிரித்து அதில் சந்திரன், புதன் ஆகிய சுபக்கோளின் பாகத்தில் வாசற்கால் வைக்கவும், அதற்கு நேரே பின்புறம் கொல்லை வாசல் வைக்கவும் இது உத்தமமாகும் செல்வம் சிறக்குமென மயன் உரைத்தபடியே.

விடுப்பதையொன் பதாய்வீட்டை அளந்து கொண்டு
இடப்புறம் மூன்றும் இயல்வலம் ஐந்து
நடுப்புறத்து ஒன்றில் நலம்பெற வாசலாய்
எடுப்பது சொன்னோம் இனிக்க தவிடுவதே. (911)

விடுக்கும் வாசலானது இடதுபுறம் மூன்றுபாகமும் வலதுபுறம் 5 பாகமும் தள்ளி நடுப்பாகத்தில் வாசல் விடுவது பற்றிக் கூறினோம் இனிக்கதவு பற்றிக் கூறுவோம்.

ஒன்றாக நின்றமனை உயர்நீ ளம்அதைக்
குன்றாமல் ஒன்பதாய்க் கூறிட்டு - நன்றாக
வாமத்தில் மூன்றும் வலத்திலே தானைந்தும்
சேமத்தே வாசலிடச் செப்பு. (912)

மனைநீளமளந்து 9 கூறாக்கி இடதுபுறம் மூன்றும் வலதுபுறம் ஐந்தும் தள்ளி நடுவாம் பாகத்தில் வாசலிட வேண்டும்.

மன்றுறுமனை யின்நீளம் வகுத்ததோர் முழங்கடம்மை
ஒன்பதுகூ றுசெய்தேயொரு மூன்றுமிடத் தேபோக்கி
நின்றதோர் வலத்திலைந்து நீக்கியேநின் றகூற்றில்
அன்பொடு வாசலாக்க அறிந்தவர் உரைத்தவாறே. (913)

மனையின் நீளத்தை அளந்து 9 ஆக்கி இடம் 3ம், வலம் 5ம் தள்ளி நடுவில் வாசலாம்.

ஊனமில்நெறி யால்வந்த முழந்தனை அளந்துகொண்டு
மானிடர்தமக் கதாகில்மை யத்திவிடத் தேயாகும்
தேனமர்குழ லினாளே தேவர்கள் தமக்குமையம்
ஆனதோர்வா சலென்ன அறிந்தவர் உரைத்தவாறே. (914)

சுவர்நீள முழத்தினை அளந்து மானிடருக்கு மையத்தின் இடதுபாகமும், தேவாலயங்களுக்கு மையத்திலும் வாசல் விடுதல் வேண்டுமென நூலறிந்தோர் உரைத்தவாறே.

ஓங்கியநீ ளந்தன்னை ஒன்பதுகூ றுசெய்து
பாங்குடன்வலத் திலைந்தும்பரி வுடனிடத்தில் மூன்றும்
நீங்குறக் கூர்வதென்று நீதியாய்நின் றவொன்றில்
தீங்கில்லா வாசல்விட் டால்சிறப்புடன் வாழ்வர்தாமே. (915)

நீளத்தை 9 ஆகப்பிரித்து இடம் 3ம் வலம் 5ம் நீக்கி நடுவில் வாசல் விட செல்வம் பெருகும் சிறப்பான வாழ்வுண்டாம்.

அரிதாம்மனைக் குவாசல்விட அதனைப்பால் ஒன்பதுமாக்கி
உரிதாம்வலத் தில்பங்கைந் துமுடனேயிடத் தில்மூன்றுபங்கும்
விரிவாம்நடு விலோர்பங்கில் விடுவாய்வா சல்கதவும்
பெரிதூண்கூ ரையுத்தரங் கள்பேசாதோ டாதவை நிறுத்தே. (916)

மனைக்கு வாசல்விட தெருவாட்டச் சுவற்றின் நீளத்தை ஒன்பது சமபாகங்களாகப் பிரித்து இடதுபுறம் மூன்றுபாகந்தள்ளி, அதே போல் வலதுபுறம் 5 பாகம் தள்ளி நடுவில் வரும் பாகத்தை அறிந்து வாசல் விடவேண்டும். கதவு தைத்தபின் திறந்து மூடும் போது உத்தரம் நிலை இவற்றில் உரசாத வாறும் ஏதும் சப்தம் வராதவாறும் பார்த்துக் கவனித்து அமைக்க வேண்டும்.

ஆண் பெண் மனையறிந்து வாசல் விடும் விதி

அருக்கனுங்கும்ப ரன்றானும் ஆணதுமனை அதாகும்
பெருக்கவேவரு ணன்சிம்மம் பெண்ணெனவகுத் தார்நூலோர்
இருக்குமாண் வலத்திலைந்து ஏந்திழையிடத் திற்பூதம்
வருக்கமாய்வா சல்விட்டால் வாழ்வெனமய னுரைத்தார். (917)

கிழக்கு, வடக்குப் பார்த்த மனைகள் ஆண்மனையாகும், மேற்கு, தெற்குப் பார்த்த மனை பெண்ஆகும் ஆண்மனைக்கு வலதுபுறமிருந்து 5 பாகம் தள்ளியும், பெண்மனைக்கு இடது புறமிருந்து 5 பாகம் தள்ளியும் வரும் பாகத்தில் வாசற்கால் விடல் நல்வாழ்வு தரும்.

வீட்டிற்கு மத்தியில் வேண்டாம் வெளிப்போக்கு
வேட்டலு டன்விளக் குங்கால் - மாட்சி
குறைந்தும் விருத்தி குறைந்தும் முடிவில்
இறந்திடு வரிப்பூ இழந்து. (918)

வீட்டிற்கு நடுவில் வாசல் வைத்தல் வேண்டாம் மீறினால் புகழ்குன்றும், வளர்ச்சி குன்றும் மரணமும் வந்தெய்தும், மனையையும் இழக்க நேரிடும்.

வாசற்கால் அளவுப் பொருத்தம்

தெருமனைவா சற்கால்கள் செய்திடும்மனை கேளப்பா
அருமையாய்க் குறுக்கும்நீட் டும்அளந்துஅங் குலமாய்ச்செய்து
துருவம்ஈ ராறுசேர்த்துத் துலங்கேழு பேருக்கிய
ஒருமையாய் வருஞ்சேடத்தின் ஒருபலாபலன் சொல்வாயே. (919)

மனையில் கட்டிய வீட்டின் நிலையின் நீளஅகலம் அளந்து பெருக்கி அதை அங்குலமாக்கினால் அது துருவம் ஆகும் அத்துடன் 12 கூட்டி 7ஆல் வகுத்துவந்த மீதத்தின் பலன் கூறுவோம்.

சொல்லுவாய்ஒன் றுதோன்றில்சுக மதாமிரண் டேயாகில்
ஒல்லையிலா பஞ்சேரும் உற்றபொன்போக் காமூன்று
வல்லநான்கா கில்பந்தம் வருஞ்செல்வம் ஐந்துநின்றால்
அல்குமேயா றில்துக்கம் ஏழ்வரில் அருகலாமே. (920)

வந்த மீதமானது 1 ஆனால் சுகம், 2 ஆனால் லாபம், 3 ஆனால் பொன் சேதம், 4 ஆனால் பந்தம், 5 ஆனால் செல்வம், 6 ஆனால் துக்கம், 7 ஆனால் நஷ்டம்.

வேறு

வாசற்கால் உள்நீளம் வண்குறுக்குத் தானளந்து
கூசக்கரு துஅங்குலம் ஆக்கிப் - பேசத்
துருவமது பன்னிரண்டு சேர்த்துத் துகளில்
மருவஎழு எண்ணால் வகு. (921)

வாசற்காலின் உள்நீளம், அகலம் அளந்து அதைப் பெருக்கி அங்குலமாக்கி 12 கூட்டி 7ஆல் வகுத்து வந்த மீதத்தின் பலன் கீழ்வருமாறு.

ஒன்றுமுதல் ஏழுக்கும் ஓங்குபலன் கேளாய்
துன்றுசுகம் லாபம்சுழி விரயங் - கன்றுமே
பந்தனம் செல்வம்பகர் துக்கம் சாக்காடு
சிந்தனமே கொண்டு தெளி. (922)

1 முதல் ஏழுக்கும் பலன் கேட்பாயாக, சுகம், லாபம், விரயம், பந்தனம், செல்வம், துக்கம், மரணம் என இவ்விதமாகப் பலன் ஆகும்.

வாசல் விடுவதின் பலன்

பருதியின் கூறிற் பகிர்த்து வாரம்
ஒருபொழுதும் வையேல் உறுதி - பொருளற்றுச்
சந்ததியும் பூச்சியமாய்த் தாரம் இழந்திடுவன்
அந்தமனைப் பாழாம் அறி. (923)

சூரியனின் கூறில் (பாகத்தில்) வாசல் விட்டால் பொருள் நஷ்டம், சந்ததி அற்றுப் போதல் மனைவி மரணம், மனை பாழாகுதல் முதலிய தீயபலன்களே உண்டாகும் எனவே கூடாது.

சந்திரனில் வாசலிடு சம்பத்தாம் தீதறவே
இந்திரனைப் போல்வீட்டில் எந்நாளும் - அந்தமுறத்
தப்பாமல் பால்பசுவுஞ் சந்தானம் தான்மலிய
எப்போதும் வாழ்வாய் இனிது. (924)

சந்திரனின் பாகத்தில் வாசல்விட்டால் சம்பத்தும், இந்திரன் போல வாழ்வும், பால்பசுவும், சந்தானமும், உண்டாகி சுகவாழ்வு வாழ்வான்.

கொடியஅழல் கூற்றில் கூடாது தெருவாய்
மிடியும் பலநோய் விளையும் - முடிவில்
வருமைக் கலகம் வரும்நிசம் பேய்பிச்சி
சிறுமையே வந்தணுகும் தேர். (925)

செவ்வாயின் பாகத்தில் வாசல் கூடாது அதனால், பலநோய்கள் உண்டாகும், கலகம், சிறுமை, பேய்த்தொல்லை முதலியவை உண்டாகும்.

புதன்கூற்றில் தூம்பு புரிவரேல் அவ்வில்
பதம்பெருகும் சம்பத்து பாங்காம் - சதம்பெருகிச்
சீதேவி வந்தணுகும் செல்வம் நிதம்மலியும்
மேதாரம் போல்பூதி மேல். (926)

புதனின் கூறில் வாசற்கால் வைத்தால் அம்மனையில் சம்பத்தும், செல்வமும், புகழும் பெருகும், மகாலெட்சுமி அம்மனையில் வாசம் செய்வாள் செல்வம் என்றென்றும் நிலைத்து இருக்கும். சுகவாழ்வு உண்டாகும்.

குருகூற்றில் வாயில் குலவ விடுமேல்
அரசர் நிலயம் அணியாம் - அரியமனைக்
காகாது சந்தானம் அற்பமாம் பேர்மங்கல்
போகா துயரம் பொலிந்து. (927)

குருவின் பாகத்தில் வாசல் வைத்தால், சிறைக்கூடம் போலாம், மனைக்கு ஆகாது குழந்தைகள் அற்பம், பேரும் புகழும் குன்றும், துயரமே உண்டாகும்.

வெள்ளி தனில்வாசல் வேண்டா விளக்கினால்
நள்ளிருளில் கள்வரால் நாசமுறும் - பள்ளியிலே
தூங்கவொணா பால்பசுவும் துன்பமுற்று வீணாகும்
தேங்கமல கண்மனைவி தீங்கு. (928)

சுக்கிரன் கூறில் வாசல் விட்டால் இரவில் திருடரால் பொருள் சேதம் உண்டாகும், பாற்பசுக்கள் சேதமாகும் தேன்மலர்க்' கண்ணுடைய மனைவிக்கும் கண்டம் ஏற்படும்.

காணார் சனிவாசல் காட்டுங் கலகமிடி
வீணான துன்பம் விளையுமே - நாணம்போம்
ஆணான பேர்க்கச்சம் ஆகுமேயம் மனையில்
தோணாது கோதை சுகம். (929)

சனியின் கூறில் வாசல்விட்டால் கலகம், துன்பம், உண்டாகும் நாணம் போகும் ஆண்களுக்கு அச்சமும், பெண்களுக்குத் துன்பமும் உண்டாகும்.

பாம்பிங் கிரண்டில் வழிவைத்தால் பன்னாளும்
சோம்பல் விஷம்யாவும் தோன்றுமே - தீம்பான
பில்லியுடன் சூனியங்கள் பேய்முனிகள் வந்தணுகி
அல்லல் படுத்தும் அறி. (930)

ராகு, கேதுக்களின் பாகத்தில் வாசல்விட்டால், ஏவல், பில்லி, சூனியம், பேய் முனிகள் வந்து சேர்ந்து துன்பப் படுத்தும்.

வேறு

கரியபாம் பில்வழி விடகாணு மேகலக்கம்
பிரியமுடன் வாழும் பெரிய - கருநாகம்
நாடதனில் அம்மனை ஈர்பிளப்பு உற்றுமே
வாடலுடன் வாழும் அது. (931)

இராகுவின் பாகத்தில் வாசல்விட்டால் கலக்கம் உண்டாகும் மனை இரண்டாகப் பிளவுபடும், துன்பமே எந்நாளும் இருக்கும்.

கேதுவினில் கால்நாட்ட கேடாம் பழையதனம்
சேதம்படி அதனில் சேருமிக - தீதுடனே
மாக்கள் மிகுதுன்பம் நோயிடர் வாதை
நோக்குமிடம் எல்லாம் நுவல். (932)

கேதுவின் பாகத்தில் வாசல் விட்டால் பழம் பொருளும் சேதமாகும், செல்வமழியும், கால் நடைசேதம், நோய், துன்பம், வேதனை முதலான பலவிதமான துயரங்களும் உண்டாகும்.

சன்னல் உத்திரம் சாத்துத்தூண் தண்டியம் இவைகள் அமைக்க வேண்டிய விதி

நகருத்திரம் தூண்சன்னல் நாடதனில் இரட்டையின்பம்
சுகமதுதான் இரட்டைலொற் றியவசமும் நன்றாய்ப்
புகலுவாய் ஒற்றையாகா பொலிந்திடும் நிலையுமொற்றை
செம்புகழ் மயனார்தாமும் செப்பியதறிந் துகொள்ளே. (933)

உத்திரம், தூண், சன்னல் முதலியவை இரட்டைப்பட இருத்தலே நன்மை தரும், ஒற்றைப் படையாகவோ, ஒற்றையாகவோ இருக்கக் கூடாது அதனால் தீயபலனே யாகும்.

வேறு

சன்னல் உத்திரம் சாற்றுகைத் தூண்களுந்
தன்னம் இன்றிச் சமநிலை வாழ்வதாம்
பின்ன மாக வியநிலை பேசினால்
இன்னல் தீமை இடுக்கண் வறுமையே. (934)

சன்னல், உத்திரம், கைமரம், தூண்கள் முதலியன ஒற்றையாய் வராமல் இரட்டித்து இருக்க வேண்டும் மாறினால், துயரம், தீமை, வறுமை முதலியன உண்டாகும்.

வாயில் விடு மாதங்கள்

ஒழுக்கியகுண் டையாழ்நண் டுவர்கிழக்குடன் வடக்காம்
மழப்புலியரி வைகோலேல் வயங்கியகிழக் குந்தெற்கு
விழித்திடுந் தேளும்வில் லுமகரமுவேற் குந்தெற்கு
வழுத்தினர்குட மீன்மேடம் வாசலாம்வடக் குமேற்கு. (935)

வைகாசி, ஆனி, ஆடி மாதங்களில் வீடுகட்டினால் கிழக்கு, வடக்கில் வாசல் விடவேண்டும் ஆவணி, புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் வீடு கட்டினால், தெற்கு, கிழக்கில் வாசல் விடவேண்டும், கார்த்திகை, மார்கழி, தை மாதங்களில் வீடு கட்டினால், மேற்கு, தெற்கில் வாசல் விடவேண்டும், மாசி, பங்குனி, சித்திரை மாதங்களில் வீடுகட்டினால் வடக்கு, மேற்கில் வாசல் விடல் வேண்டும்.

வேறு

மிட்டுமேட மீனகும்பம் வடக்குமேற்கு வாசல்தாம்
விட்டமகரம் தனுசுதேள் மேற்குதெற்கு வாசல்தாம்
தெட்டுதுலா முங்கன்னிசிங் கம்தெற்குகி ழக்குவாசல்தாம்
கிட்டுங்கட கமிதுனவிடை கிழக்கும்வடக் கும்வாசலே. (936)

மாசி, பங்குனி, சித்திரை மாதங்களில் வடக்கும், மேற்கும், கார்த்திகை, மார்கழி, தை மாதங்களில் மேற்கு, தெற்கில், ஆவணி, புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் கிழக்கு, தெற்கில், வைகாசி, ஆனி, ஆடி மாதங்களில் கிழக்கு, வடக்கும் இப்படியாக மனைகட்டும் மாதத்திற்கு க் கூறப்பட்ட திசைகளில் வாசற்கால் வைக்க வேண்டும் மற்ற திசைகள கூடாது என்றவாறு.

வேறு

ஆடிசிங்கம் மேல்சார்ஆ மேகிழக்கு மேல்வாசல்
கேடில்லா ததைமாசி கீழ்சார்மேல் வாசல்தானே
நாடிமேடம் வைகாசி தென்சார்நா டும்வடவாசல்
தேடிற்குதி ரைகார்த்திகை யில்தென்வாசலை வைவடசார்பே. (937)

ஆடி, ஆவணிக்கு மேல்சார்பாம், கிழக்கும், மேற்கும் வாசல் விடுகுதலாம், தை, மாசிக்கும் கீழ்சார்பு மேற்கு வாசலாம், சித்திரை, வைகாசிக்கும் தென்சார்பு வடக்கு வாசலாம் கார்த்திகை, மார்கழியும் வடசார்பாம் தெற்குவாசல் விடுதலாம்.

காதல்வட சார்தென்சா ரல்கருதுந் தென்சார்வட சாரல்
மாதுங்கிழ் சார்மேல்சாரல் மற்றுமேல்சார் கீழ்சாரல்
போதும்வல மாம்பெருக்கமுடன் புகலும்சன்னல் தான்விட்டால்
தீதுநீங்கும் குற்றமில்லை செய்துவாரங் கொளுமிக்கோன். (938)

வடசார்பில்தெற்கும், தென்சார்பில் வடக்கும், கீழ்சார்பில் மேற்கும், மேல்சார்பில் கிழக்கும் இப்படியாகக் கூறப்பட்ட இடங்களில் ஜன்னல் வைத்திட்டால் ஏதொரு தீங்கும் வராது, நன்மையே ஆகும், இவ்வாறாகச் சன்னல் வைக்கவும்.

வேறு

மாசிதையிற் கிழக்கதுசார் பினில்வகுத்தசித் திரைவைகா சிதெற்கதாம்
வாசியாவணியா டிமேற்பாரிசம் வந்தகார்த்திகை யைப்பசி உத்தரம்
தேசிப்பின் னிருநான்குமா தத்திலும்செல் வமுண்டதன்சார் பிலெடுக்கவே
நாசபங்குனி யானிபுரட் டையும்நரக மார்கழிநாசம் என்றார் மயன். (939)

மாசி, தை மாதங்களில் கிழக்குச் சார்பும், சித்திரை, வைகாசிக்கு தெற்குச் சார்பும், ஆடி, ஆவணிக்கும் மேற்குச் சார்பும், ஐப்பசி, கார்த்திகைக்கும் வடக்குச் சார்பும், மீதியுள்ள ஆனி, பங்குனி, புரட்டாசி, மார்கழி இம்மாதங்கள் நான்கிலும் நாசமே உண்டாகும். எனவே மனை எடுக்கவோ வாசற்கால் வைக்கவோ கூடாதென்று மயன் அருளியவாறே.

தூண் ஒழுங்காக நடாததினால் உண்டாகும் பலன்

ஒற்றியேதூ ணுங்காலும் ஒழுங்குடனாட் டானாகில்
தத்தியேதலை கள்வீழும் தனமது சேதமாகும்
பெற்றிடும்பிள் ளைபெண்டிர் பெருகியே வியாதியாவர்
பத்தியாய்மய னார்தாமும் பண்புடனுரை செய்தாரே. (940)

தூண், கால் முதலானவற்றை ஒழுங்காக நடாவிட்டால், மரணங்கள் நேரிடும், தனநாசம் ஏற்படும், மனைவி மக்கள் நோயுறுவர் என்று மயன் உரைத்தார்.

வீட்டில் பத்தியோடு பத்திகள் சேரும் பலனும் சேராப்பலனும்

பத்திகள்பத் திசேரில்பதி யுடனிருந்து வாழ்வர்
பத்திகள் கலையுமாகில் பதியது கலையுமென்ன
உத்திரந்தூண் கள்தானும் ஒழுங்கிலேநில் லாதாகிற்
சத்துருவா லேயந்தச் சாலைதீப் படுவதாமே. (941)

பத்திகள் என்னும் வீட்டின் உபபிரிவுகள் ஒன்றோடு ஒன்று இணைந்த படியாக இருந்தால் மனைக்கதிபதி அம்மனையிலேயே வாழ்வான். சேராமல் துண்டித்து இருந்தால் வீட்டைவிட்டு வெளியேறி விடுவான். வீட்டின்மேல் உத்திரம், மற்றும் தூண்கள் ஒழுங்கு தவறி வைக்கப்பட்டிருந்தால் அந்த வீடு எதிரியால் தீக்கிரையாகிவிடும்.

ஆயப்பத் தியகப்பத் திவந்திட
அழகதாகிய அம்மனை பாழாம்
வாயப்பெற் றதிசைக்கிடம் வந்திட
வாடியேயுயிர் தானும் மடிந்திடும்
மாயற்குற் றவயனிட்ட நூல்வழி
வகுத்தபத்திகள் அட்டமத் துற்றிட
வேயப்பெற் றவர்மாரணம் எய்துவர்
விளம்புமாறு விதியறிந்து ஓர்கவே. (942)

வெளியறைகள், உள்ளறைகள் தனித்தனியே சுவர் இணைப்பு இல்லாவிட்டால் அம்மனை பாழ்பட்டுப் போகும், உயிர்ச்சேதங்களும் உண்டாகும், இணையாத பத்திகள் மனைக்கதிபனுக்கு 8ஆம் பாவத்திற்குரிய திசையில் இருந்தால் அவன் மரணமடைவான் எனவே விதிமுறைகளை மறவாமல் கவனித்து வீடமைக்கவும்.

ஆனதோர்சுவர் வெடிப்புமடுத் ததோர்கிழக் குநாசம்
வானந்தி மூலையல்லல் மாமகோரந் தெற்கிற்குத்
தேனுதல்கன் னிபோகஞ்சிறந் ததோர்மேற் கேயாக்கம்
கோன்வடமேற் குச்சாவு குறித்தநல்வடக் குலாபம். (943)

வீட்டின் சுவரானது வெடித்திருந்தால் வெடிப்புள்ள திசை கிழக்கானால் நாசம், அக்கினி மூலை யெனும் தென்கிழக்கானால் துன்பம், தெற்கானால் மாதர்போகம், மேற்கானால் ஆக்கம், வடமேற்கானால் சாவும், வடக்கானால் லாபம் முதலான பலன்கள் உண்டாகும்.

எடுத்தமனை யில்சுவர்பிளக் கிலெண்ணிக்கிழக் குமுதலாகத்
தொடுத்தநாசம் சிலுகுடனே துக்கமழகு சுகஞ்சாவே
அடுத்தலாப மரணமுடனா கவெட்டுத்திசை தமக்கும்
விடுத்துவலமாய்த் தான்கண்டு மிக்கபலனை விளம்பீரே. (944)

கட்டிய வீட்டில் சுவர் பிளந்திருந்தால் கிழக்கு - நாசம், தென்கிழக்கு - சண்டை, துன்பம், தெற்கு - துக்கம், தென்மேற்கு -

பெண்சுகம், மேற்கு - சுகம், வடமேற்கு - மரணம், வடக்கு - லாபம், வடகிழக்கு - மரணம், முதலான பலன்கள் உண்டாகும்.

வேறு

நல்லமனை யில்சுவர்பிளக் கிலருக்கன் திசையில் நாசஞ்சேய்
அல்லலுறும் பொன்சாவு புதனழகாம் புகர்மேல் ஆக்கமதாங்
கொல்லுங்கா ரிமதிநிதியம் கூற்றுபாம் பாமெனக் கொள்க
வெல்லையருக் கன்சேய்பொன் மால்புகர்சுன் மதிபாம்பெண் திசைக்கே.(945)

செவ்வாயின் திசையாகிய தெற்கானால் தொல்லையும் துன்பமும் உண்டாகும், வியாழனின் திசையாகிய வடக்கானால் சாவும், புதன்திசையான வடகிழக்கானால் அழகும், சுக்கிரன் திசையான கிழக்கானால் ஆக்கமும், சனியின் திசையான மேற்கானால் மரணமும், சந்திரன் திசையான தென்கிழக்கானால் நிதியும், இராகுவின் திசையான தென்மேற்கும், கேதுவின் திசையான வடமேற்கும் மரணம் இவ்வாறாகக் கணக்கிட்டு அறிக.

முகப்புமுன்சுவர் வெடித்தல் மூத்தவள்குண முங்காட்டும்
தகப்பனையடிக் கும்பெற்ற தாயையும்குடி விட்டோட்டும்
மிகப்புரட்டா னவார்த்தை வேலையாம் அங்கில்லை
சுகப்பட்டபா டுமில்லை சூலாடுபோ லேயாழ்வர். (946)

வீட்டின் முகப்பு முன்சுவர் வெடித்திருந்தால் மூதேவி சேர்வாள், தந்தை மரணமடைவார், தாய் வீட்டைவிட்டு வெளியேறுவாள், புரட்டான வார்த்தை பேசவைக்கும், வேலை இருக்காது, சுகமும் இருக்காது கர்ப்பம் கொண்ட ஆடு போலத் தவிப்பான வாழ்வு ஆகும்.

புற்றெழும் லட்சணம்

செஞ்சிதல்மனை யில்வந்து சேர்ந்திடில் பலன்கடன்னை
முன்சொன்ன நடுகிழக்கு முதலண்டம் எட்டுங்கொள்ள
மிஞ்சியகே டுநன்மை விருத்தமாம் இன்பமாகும்
அஞ்சுறுமனை யேசெல்வம் மனையுமே வாழ்வுபீடை. (947)

செங்கறையான் வீட்டில் கூடுகட்டினால் அதன் பலன்களை முன்பு கூறிய நடு, கிழக்கு முதலாக எட்டுத் திசைகளில் பலனாவது வருமாறு கேடு, நன்மை, விருத்தி, இன்பம், மனைபிரிதல், செல்வம், வாழ்வு, பீடை இவ்வாறாகப் பலன்களாகும்.

எண்டிசையும் கிழக்குமுதலா கவெண்ணிலிந்த்ரனக் கினியமன்நிரு
திவருணன்வாயு
வண்டமுறும தியீசனட்டதிக் குமகலம்நடு வேலயன்மேற் புற்றெடுக்கில்
மண்டிசாவிந் திரன்மேற்செல் வமங்கிமனை இடியுமியமன் றுயரம்நிருதிவாழ்வு
கொண்டல்வரு ணன்மகவுகாற் றுக்கூற்றங் குலமதியேநலம் ஈசன்குறுகுநோயே.
(948)

எட்டுத் திசையையும் கிழக்கு முதலாய் எண்ணினா ல் முறையே இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானம், முதலானவையும் நடுப்பக்கம் இவற்றில் புற்றெழும்பினால் (கறையான் கூடு) இந்திரன் திக்கு - சாவு, அக்கினி - செல்வம், யமன் - துயரம், நிருதி - வாழ்வு, வருணன் - குழந்தைப்பேறு, வாயு - மரணம், குபேரன் - நலம், ஈசானம் - நோய் இவ்வாறாகப் பலன்கள் ஏற்படும்.

நடுவுங்கிழக் குமுதலெட்டும் நடுவணைதன் னில்புற்றெடுத்தால்
நடுவாயெண் ணிப்பலன்சொல் நடுவதனிற் சாவுசெல்வம்
இடியுந்தெற் குதுக்கமதாம் எண்ணுஞ்சிறி யபுத்திரனும்
மடியுமரண நன்மையதா மற்றவியா தியதுவாமே. (949)

நடுவும், கிழக்கு முதல் எட்டுத்திசைகளிலும் நடுவிலும் கறையான் புற்றெடுத்தால் நடுவு முதலாய்ப் பலன் வருமாறு, சாவு, செல்வம், துக்கம், குழவி, மரணம், நன்மை, வியாதி இவ்வாறாகப் பலனாமே.

ஜலதாரையின் லட்சணம்

தெருசித்த வாரல்நீர் தென்திசை ஏகிடில்
வருசித்த செல்வம் வற்றுமென்றார் மயன்
வருசித்த வாரல்நீர் வடதிசை பாய்ந்திடில்
தெருசித்த பால்நெய் சேரும துதினம். (950)

வீட்டின் கூரை நீரானது தெற்கில் சென்று விழுந்தால் செல்வம் வற்றிவிடும் என மயன் கூறினார் கூரைத்தண்ணீரானது வடக்குத் திசையில் சென்று விழுமானால் பால், நெய்யுடன் தினம் ஆகாரம் கிட்டும்.

கோசலம் போல் குடிகள் தழைத்திடும்
பூசல்கள் உண்டு பெருக்க நிதமுமே
ஈசனுணர் வாரல்நீர் வருனெனில் பாய்ந்திடத்
தேசுற்ற லட்சுமி சேரா தொரு நாளும். (951)

தவிர குடிகள் இராமன் ஆண்ட கோசலநாட்டில் சிறப்புற்று மக்கள் வாழ்ந்தது போல நல்வாழ்வு கிட்டும், ஈசானமெனும் வடகிழக்கில் கூரைநீர் விழுந்தால் தினமும் சண்டையும் பூசல்களும் உண்டாகும், வருணன்றிசையாகிய மேற்கில் நீரானது சென்று விழுந்தால் லக்ஷ்மி கடாட்சம் எப்போதும் கிடைக்காது.

வேறு

கூற்றுவன் தன்றிசை கூர்த்துநீர் வீழ்ந்திடில்
காற்றினைப் போல சுங்காணு மேநிதம்
சோற்றுக் கிலராய்ச் சுழன்றலை வாரெனப்
பார்த்து மயனார் பரிந்து உரைத்தாரே. (952)

ஈசான மூலையெனும் வடகிழக்கில் கூரை நீர் விழுந்தால் சூறாவளி போல் தினமும் தொல்லை யேற்படும், ஆகாரத்திற்குக் கூட வழியின்றி சுற்றி அலைவர் என மயனார் நூல்களை ஆராய்ந்து பார்த்து உரைத்தார்.

வேறு

முற்றத்தின் நீர்கள்போக் குமுறைமை யைசொல்லக் கேளு
கொற்றவிந்திர னின்மேலும் குளிர்கொடை ஈசன் மேலும்
சொற்றிடுநீர்ப் போக்கெல்லாம் சுகமதே ஆகும் என்றும்
மற்றதோர் திக்கிலேதான் மனையினீர் போக்கு ஒண்ணாதே. (953)

வீட்டினின்றும் வெளியேறும் மழைநீர், கழிவுநீர் முதலியவை இந்திரன் திக்கு, வருணன், ஈசானன் முதலிய திக்குகளில் விழுந்தால் சுகமே ஆகும் மற்ற திசைகளிலே தண்ணீரானது சென்று விழக் கூடாது.

முற்றம்வீழ் நீர்கள் போக்கு முதற்றிசை சோமனீசன்
பெற்றிடு திக்குநன்றாம் பேசும் மற்றுள திக்காகா
துற்றியூண் மிச்சிற் சுத்திசோமன் கீழீசன் நன்றாம்
மற்றுள ஐந்துதிக்கும் வரும்பொருள் மைந்தர் கேடே. (954)

முற்றத்திலிருந்து வெளியேறும் நீரானது, இந்திரன், சோமன், ஈசானமெனும் மூன்று திசைகளில் சென்று வீழ்தல் நன்று, மற்ற ஐந்து திசைகளும் கூடாவாம்.

வீட்டின் உயர்வு தாழ்வு இலட்சணம்

கட்டியமனை கள்தம்மில் கருணையாய்க் கிழக்கும் தெற்கும்
திட்டமாய் உயர்ந்ததானால் சீரிய அரவந் தீண்டும்

நட்டமாய் மனையும்பா ழாம்நன் மனையாட்டி பாழாம்
கெட்டிடும் கிருஷிபாழாம் செய்தொழிற் இடைஞ்சல் ஆமே. (955)

கட்டிய வீட்டில் கிழக்கும், தெற்கும் உயர்ந்து காணப்பட்டால் பாம்பு கடிக்கும் மனையும் பாழ்படும், மனைவி மரணமடைவாள், விவசாயம் பாழ்படும், செய்யும் தொழில்கள் அனைத்திற்கும் இடையூறு ஏற்படும்.

திடத்துடன் மனையைச் செய்வோர் திக்குகள் உயரவேண்டில்
இடத்துடன் வடக்கு மேற்கும் இடமதுமுய ரில்நன்றாங்
கிழக்குடன் தெற்கே ஓங்கில் கேடடைந் திடுவரென்று
விடப்பணி அரவம் பூண்ட அமலனார் உரைத்தவாறே. (956)

மனை கட்டுபவர் மனையை உயர்த்த விரும்பினால், வடக்கு, மேற்குத் திக்குகள் உயர்ந்திருத்தல் நன்றாகும், கிழக்கும் தெற்கும் உயர்ந்தால் கேடு வந்து சேரும் என்று விஷநாகத்தைத் தன்னுடலில் ஆபரணமாக அணிந்த சிவபெருமான் உரைத்தார்

கோணமேதெற் குயர்ந்தால் குலமனைதான் பாழாகுங்
கோணமேமேற் குபறந்தால் கொண்டதோர் பொருளாதாயங்
கோணமேகிழக் குயர்ந்தால் கொள்ளைபோம் பிணியால்நாசம்
கோணமேவடக் குயர்ந்தால் கோடிபல்தன முஞ்சேரும். (957)

தெற்குத்திசை உயர்ந்தால் குலமனை பாழாகிப் போகும், மேற்குத்திசை உயர்ந்தால் பொருள் ஆதாயம் உண்டாகும், கிழக்குத் திசை உயர்ந்தால் கள்வர்வந்து பொருட்களை கொள்ளையடித்துச் செல்வார்கள், நோயினால் நாசமும் உண்டாகும் வடக்குத்திசை உயர்ந்தால் கோடியாகத்தானே பலவகை பொருட்களும், தனமும் சேரும்.

வேறு

குடதிசை வடக்குத் தாழ்தல் உத்தமமா கும்மேற்கு
இடமுடன் உயரம் மெத்தயின்பம் வந்தெய் துஞ்சால
திடமுள சுற்றத்தா ருந்தெளிந்த நீர்சூழல் போலப்
படமுடன் காணிகோடி வயதுடன் வாழ்வார் தானே. (958)

மேற்கு வடக்குத்திசைகள் தாழ்ந்தாலும், உயர்ந்தாலும் நல் இன்பமான பலன் ஏற்படும். சுற்றத்தார் தெளிந்தநீர் போலச் சூழ்ந்திருக்க பூமியுடன் பலகாலம் நலமாய் வாழ்வர்.

இச்சையாய் மேற்கு தெற்கே இடமுடன் தாழுமானல்
வைச்சதோர் நிதியம் வேறாய் மக்களும்சா வர்கண்டீர்
பட்சமிப் படியே காணில்பாழ் தருமனை யேயென்று
இச்சையாய் மயனார் தாமும் இயம்பினர்உல குக்கன்றே. (959)

மேற்கும் தெற்கும் தாழ்ந்திருந்தால் வைத்திருந்த பொருளும் சேதமாகும், மக்களும் சாவார்கள். இப்படித் தாழ்ந்து மனையானது இருந்தால் மனைபாழாகும் என்று மயனார் உலகிலுள்ள மக்களுக்காக உரைத்தார்.

வேறு

வளர்நிலங் கிழக்கொடு வடக்குத் தாழ்ந்திடில்
அளவிலா வாழ்வுடன் ஆக்கம் எய்துமால்
விளைவுறு தெற்கொடு மேற்குத் தாழ்ந்திடில்
கிளர்பெருந் துன்பமுங் கேடும் எய்துமே. (960)

மனையானது கிழக்கும் வடக்கும் தாழ்ந்திருந்தால் அளவற்ற நல்வாழ்வும், ஆக்கமும் உண்டாகும், தெற்கும், மேற்கும் தாழ்ந்திருந்தால் துன்பமும், கேடும் உண்டாகும்.

சாரிகள் உயர்வதின் பலன்

மூன்று சாரியும் மூடிடக் கட்டினால்
தூண்டு தீபம் சுடர்புறம் நீண்டிட
மீண்டு யோகந் தனமும்வே ளாண்மையும்
வேண்டு நாளு விளங்கிடு வாமரோ. (961)

மூன்று சாரிகளும் மூடியபடி கட்டிய மனையானது சுடர்விடும் தீபத்தின் சுடர் பக்கவாட்டில் செல்வது போல, யோகம், செல்வம், விவசாயம் முதலான யாவும் சிறப்படையாது என்றவாறு.

மூன்று சாரியும் மூடவேகட்டிட
தூண்டு தீபம் சுடர்புறம் ஊடிட
ஆண்டு தோறும் மகமிக நோயதாம்
வேண்டு நாளும் விளங்கிடா தென்பவே. (962)

மூன்று சாரியும் மூடியபடி கட்டிய மனையானது எரியும் விளக்கின் தீபச்சுடர் பக்கவாட்டில் சென்றால் பயன்தராதது போல ஆண்டு முழுவதும் நோயும், துன்பமும் நீங்காது என்றவாறு.

ஒத்தை மேடுறவோர் சுவர்கிறி டப்பார்த்து
உத்தம் ஆக்கமிரந் துண்ணும் வீடுதான்
அத்தம் ஆடிமட்டு அங்கியாய் விடும்
பொய்த்த தாமனை புகன்றது வேதமே. (963)

வீட்டில் ஒருபக்கம் உயர்ந்தும் சுவரானது வெடித்தும் காணப்படும் வீடானதில் குடியிருப்பவர் பிச்சையெடுத்து உண்ண நேரிடும், மனையும் தீக்கிரையாகி விடும், அம்மனையினால் யாதொரு நன்மையும் இல்லை.

மோடொத்துத் தனிமுன் மனை நாழிகள்
ஈடொத்து விடம் நித்தமுந் சுற்றிட
கேடொத்து நலங் கெட்டிடும் நாளிலே
நாடொத்து உண்ணும் நன்மனை சார்ந்ததே. (964)

முன்கூறிய மனையில் விஷஜந்துகள் குடியிருக்கும், நலம் கெடும், பிச்சை பெற்று உண்ணும் மனை அதுவாகும்.

மோடொத் துக்கதிர் முன்னொடு வீடுதான்
ஈடொத்து வலம் எந்நாளுஞ் சுற்றினால்
நாடொத்து நன்மனை பொருந்திடும்
கோடொத் தமனை கொற்றவன் ஆகுமே. (965)

மனையானது கிழக்குத் திசை உட்பட அனைத்துத் திசைகளிலும் உயர்வோ தாழ்வோ இல்லாமல் சமதளமாக இருக்க வேண்டும் அவ்வாறு சமதள மனைக்குரியவன் அரசனுக்கு ஒப்பான நல்வாழ்வு வாழுவான்.

வீதி உயர்ந்து வீடுதாழ்ந்ததின் பலன்

வீதி உயர்வாகி வீடது தாழ்வானாற்
பேதமையின் வாழ்தல் பிசகாகும் - ஊதியம்
போய்விடும் சத்துருக்கள் புக்கில் பருவோர்
நோய்கவலை என்றுரைக்கும் நூல். (966)

வீதியானது உயர்ந்தும், குடியிருக்கும் வீடது தாழ்ந்தும் இருந்தால் அது பேதமையாகும், வருமானம் போய்விடும், எதிரிகளால் அவன் மனையை கவர்ந்து கொண்டு செல்வார்கள் அவன் வீட்டில் எப்போதும் நோயும் கவலையுமே மிஞ்சும்.

வீதிக்கு வீடு உயர்ந்திருக்க வேண்டிய அளவு

மன்னுற்ற வீதி தலைவா சலுக்குமே
துன்னிட்ட அங்குலம் சோதி ஆகுமே
தன்னுற்ற வீதிக்குந் தலைவாசற் படிக்குமே
வின்னுற்ற அங்குலம் இருபத்தொன் றாகுமே. (967)

வீதிக்கும் குடியிருக்கும் வீட்டின் தலைவாசலுக்கும் உயர வித்தியாசம் தேவை வீதியைக் கட்டினாலும் வீட்டின் தலைவாசல் 21 அங்குலம் உயர்ந்திருக்க வேண்டும்.

முகடு உயர்ந்திருப்பதின் பலன்

வாயு முகடது மட்டும் உயர்ந்திட
நோயும் வறுமையும் நுண்மையாய்த் தோன்றிடும்
தீயுமூலை மேலே திட்டது உயர்ந்திடில்
சாயு மாரகந் தரியாதுரை செய்யே. (968)

வீட்டின் முகடானது வாயுதிக்கில் அதாவது வடமேற்கில் உயர்ந்திருந்தால் நோயும், வறுமையும் உண்டாகும், அக்கினி மூலையெனும் தென்கிழக்கில் முகடு உயர்ந்திருந்தால் நிச்சயம் மாரகம் ஏற்படும்.

தென்திசை வீட்டில் லஞ்சிகரம் உயர்ந்திட
மன்றிடும் ஆக்கம் வளரும் மேன்மையாம்
நன்றிசை அருக்கனும் நவிலும் மேல்திசை
மின்றிட்டு உயர்ந்திட மேன்மை ஆகுமே. (969)

வீட்டின் தெற்குத்திசை யமன் மூலையின் முகடு உயர்ந்திருந்தால் ஆக்கமும், மேன்மையும் உண்டாகும், அருக்கனின் நடுவாம்பாகமும், கிழக்கும், மேற்குத்திசையிலும் உள்ளபடி முகடு உயர்ந்திருந்தாலும் மேன்மையான பலனே உண்டாகும்.

முகடு குந்தியதின் பலன்

மோட்டினில் பரந்துகுந்த முகத்தினில் வங்குண்டாகும்
போட்டிப்பே சிடுவார்வீட் டைப்புரவலர் கேட்பார்கண்டீர்
நீட்டியபொரு ளுந்தாரார் நிலவரம்நின் றாய்க்காக்கைக்
கூட்டினால்ஓ மம்செய்யும் குணமுண்டு குடியிருக்க. (970)

முகடானது தாழ்ந்து கிடந்தால் மனைக்குரியவன் முகத்தினில் நாய்ச் சொறி உண்டாகும், அவன் மனையை அரசுப்பணியாளர் விலை

பேசிக் கேட்டு வாங்குவர் கொடுத்த பொருளும் திரும்பாது, காகமானது சிரமப்பட்டு குச்சிகளைக் கொண்டு வந்து கட்டிய கூட்டை ஓமம் வளர்க்கச் சமித்துக்காகக் கொண்டு செல்வது போல கஷ்டப்பட்டு கட்டிய வீட்டை அரசாங்கக் காரியத்திற்காகப் பறித்துப் போவார்கள் எனவே முகடானது உயர்ந்தே இருக்க வேண்டும்.

முகடுபிரிந்தவீட்டின் பலன்

மோடுதான் பிரிந்தவீட்டில் மூத்தவள்நட னஞ்செய்வாள்
ஆருடன் மாடிராது அனுதினம்சண் டையுண்டு
ஓடுவார்வீட் டைவிட்டு உலாவுவார்பணத் தைத்தேடி
வாழுவார்வனத் தில்லாமல் மயங்குவார்மதி வேறாவார். (971)

முகடு பிரிந்துள்ள வீட்டில் மூதேவியானவள் நடனம் செய்வாள், ஆடு, மாடுகள் சேதம் அடையும், தினமும் சண்டையும் சச்சரவும் உண்டாகும், மனைத் தலைவன், வீட்டை விட்டு ஓடுவான், பணம் தேடவென்று பலஊர்களைச் சுற்றிக்கொண்டு அலைந்து திரிவான், புத்திதடுமாறிப் போகும், காடுகளில் அலையும்படி நேரிடும் எனவே வீட்டின் முகடானது பிரிந்துவிட்டால் உடனடியாகச் செப்பனிட்டு சீராக்கவும்.

கோடிமனையின் பலன்

வாழார் கோடிப்பிணப் பகைக்குவாளார் வலக்கை சூலமதை
ஏழாங் கல்லிலெழுதி யபின்யெழிலாய் இறகுதெருப் புறத்தே
பாழாய்க் கிடந்தமனை அதனைப்பகர்ந் தமனிதன் பேருக்கும்
தாழா வண்ணம்அகம் எடுக்கத்தர ணியில்லம் வாழ்ந்திடுமே. (972)

மனையின் இறுதிக் கோடியில் வீடுகட்டியிருப்பவர் வலக்கரத்தில் சூலம் ஏந்திய யமனுக்கு இரையாகி மடிந்து போவார் எனவே வீட்டை மனையின் மையப் பகுதியிலேயே கட்ட வேண்டும். தெருவின் கோடியில், (இறுதியில்) மனை கட்டுகின்றவனானவன் மனைசாத்திரம் தவறாமல் சரியான சிற்பனின் உதவியால் மனை எடுத்திட்டால் அம்மனை நீண்ட காலம் வாழ்ந்திருக்கும்.

விலாவில் துவாரமிடுவதின் பலன்

போலவேய்மனை தன்தம்மில் பொறுப்புடன் விலாத்துவாரம்
சீலமாய்வைப் பானாகில் திடமுடனெஜ மான்பீடை

சாலவேவயிற் றில்நோவாம் சஞ்சலமிக உண்டாகும்
நூலறிமய னாரித்தை நுவன்றனர்நுணுக் கந்தானே. (973)

வீட்டின் பக்கவாட்டில் (இடது, வலதுபுறங்கள்) விலாப்புறத்தில் வாசல் விட்டால் மனைக்குரியவனுக்குப் பீடையுண்டாகும், அவனுக்கு வயிற்றுவாதனையும் அதனால் மிக வருத்தமும் சஞ்சலமும் உண்டாகும் என மயனார் உரைத்தாரே.

பிணம் எதிர்ப்பட்ட மனையின் பலன்

மனமுங்கலங் கிடுமேபிணம் எதிர்த்தமனை யில்தவம்வாழ் வுநில்லாது
கனங்குறைந்திடு மேகவலை மீறிடுமே கல்லானால் உயிர்பகைவருமே
தினம்சண்டை யுறுமேதேம் புதுப்பிடுமே தெய்வமுன் அழைக்கவாராதே
இனம்எதிரிடு மேயிதமுந் தப்பிடுமே ஏழைமனை யாயிருந்திடுமே. (974)

மனை கோலப் போகும் போதில் எதிரில் பிணம் வந்திடில் அப்போது கட்டிய மனையின் கண் வாழ்பவர் மனக்கலக்கம் அடைவர், மனையில், தவம், வாழ்வு நிலைக்காது, செல்வம் அழியும், கவலை அதிகரிக்கும், அல்லது மரணம் சம்பவிக்கும், தினமும் சண்டைகள் ஏற்படும், அழுகையும் கண்ணீரும் எல்லை மீறும், அம்மனையில் தெய்வம் அழைத்தாலும் வாராது, அம்மனையில் தரித்திரமே நிலை கொண்டிருக்கும்.

மாப்பட்ட மனையின்பலன்

மாப்பட வீடமைத்தால் மடிப்புண்டு சோரம்போகும்
தீப்படுமில் லாவிட்டால் தீபமணிதெரி யாதம்மா
சீப்படும்பிள் ளையாண்டான் திசைதப்பிஓ டிப்போவான்
கூப்பிடப் போனபேர்கள் கூடவேயிருப் பர்கண்டீர். (975)

"ம" வடிவத்தில் மடிப்பு மடிப்பாக வீடு கட்டி இருந்தால், அவ்வீட்டில் களவு போகும் வீடு தீக்கரையாகும், சூரியவெளிச்சம் தெரியாது வீடானது இருளடைந்து கிடக்கும். துன்பத்திற்காளாகும், மனைக்கதிபன் வீட்டைவிட்டு ஓடிப்போவான், அவனைத் தேடிப் போனவனும் போயே போய்விடுவான், திரும்பி வரமாட்டான் என்று மயனானவர் மிக்க நகைச்சுவை உணர்வுடன் கூறுகிறார்.

விசிறி மனையின் பலன்

விசிறிபோலே வீடமைத்து வெகுவிதம்சம் பாதிப்பார்
பொசிப்புமுன் உடல்கொள்ளா துபோராமை பொறையுமுண்டு

பசித்திடும்வே ளைவந்தால் பழையசோர்உண் பார்திண்பார்
இசுவெடுத்திழுத் துச்சாவான் ஏமன்வந் தழைக்கும்போது. (976)

விசிறிபோல விரித்துவீடு கட்டினால் வெகுவிதமான முறைகளில் ஏராளமாகச் சம்பாதிப்பார் உடல் ஊதிப் பெருத்திடுவார், போராமைக் குணமும், கஞ்சத்தனமும் இருக்கும் பசி வந்த போது நல்ல ஆகாரங்கள் இருக்க பழைய சோற்றை உண்டபார். மரணம் வந்துறும் போது ஜன்னிகண்டு இழுத்துச் சாவான்.

டகரவுரு மனையின் பலன்

டாப்படவீட் டில்மத்தோர் ஆட்சியேயடை வர்அன்றி
கூப்பிடுங்கட னும்வந்து குணமும்நல் அழகுங்கோனும்
சாப்பிடும்போ துபொல்லாச்சண் டையும்கூச் சலாகும்
ஆப்பிடும்சோ றொருக்கால் அகப்படாம லும்இருக்கும். (977)

"ட" வடிவத்தில் வீடு கட்டினால் அவ்வீட்டில் மற்றவர் அதிகாரம் செய்வர், கடன் அதிகம் உண்டாகும் நற்குணமும், அழகும் கெடும். வீட்டோர் உணவருந்த அமரும் போதில் பொல்லாத சண்டையும், கூச்சலும் குழப்பமும் உண்டாகும், ஒரு சமயம் ஆகாரம் உண்ணுவர் ஒருசமயம் சண்டையிட்டுவிட்டு உண்ணாமலும் போவர். சிலநேரம் சாப்பாட்டிற்கே வழியிருக்காது. ஒரு சமயம் அறுசுவை உண்டி கிட்டும்.

நந்தி மனையின் பலன்

முந்திய முப்பதாண்டு முனிகள்பே ரழிந்துவாழ்வார்
கந்திருவ தேகம்பெற் றுகளியமுது டன்பாலுண்டு
சுந்தரமான பெண்ணும் சுதனையும் பெறுவார்கண்டீர்
நந்தியைப்போ லேவீடு நலமுடனமைத் தபேர்க்கே. (978)

நந்தியைப் போல் வீடு கட்டினால் முதல் முப்பது வருடகாலம் பிரம்மச்சரியம் தவறி பலபெண்களை மருவி வாழ்வார். கந்தரர்வர் போல ஆனந்தமாய் பாலன்னம் புசிப்பர், அழகான ஒரு பெண் மகவும், ஒரு ஆண் மகவும் பிறக்கும். நலவாழ்வு வாழ்வர்.

யானை மனையின் பலன்

ஆனை நிகரான விழியாள் வனவரத்தும்
சேனை முனம்வந்து சேர்ந்துமே விளங்கும்
சோனை மலைவாழும் தூயமுனி அமைத்த
யானைமனை யின்பெருமை ஆண்டதும் இருக்குமே. (979)

யானை போல் சோனை மலைவாழும் அகத்திய முனிவர் வடிவமைத்தபடி மனைகட்டி வாழ்பவர், சேனை, வேலையாட்களுடன், பெண்கள் சூழ அரசவாழ்வு வாழ்வான்.

வைசியர் மனையின் பலன்

புதன்பத்தி வாசல்வைத் துப்போக்குக் காட்டி
மதிபுணர்ந்த வாசலது தானே ஆகில்
மதங்கொள்வார் மகிமையுண் டுவணிகர்க் கெல்லாம்
மதங்கொடுத்து வழிபடுவார் வாழ்வு உண்டாமே. (980)

புதனின் பாகத்தில் வாசல் வைத்தாற்போல், சந்திரன் பாகத்தில் வீட்டு வாசல் வைத்தாலும் வைசியர் மனை என்றாகும், வைசியருக்கெல்லாம் சந்திரனின் பாகத்தில் மனை வாசல் வைத்துக் கட்டினால் பணத்துடன் பெருகி வாழ்வர்.

புதன்பத்தி வாசல் புகுதக் குயிற்றி
சதாகரன் பக்கமிடத் தூம்பு - நிதம்பரவும்
வாழ்வும் மதங்கொள்வர் மாட்சியே உண்டாகும்
தாழ்வொன்றும் வராது தான். (981)

புதனின் பாகத்திற்கு இடதுபுறம் சந்திரன் பாகத்தில் வாசற்கால் வைத்தால் வைசியர் மனையும் அம்மனையால் வாழ்வும், மகிழ்ச்சியும், தற்பெருமையும் உண்டாகும்.

தாலக் கிரகத்தின் பலன்

மோடொழுங் காகுமுறை முறைசேரும் உத்தமம்தெருப் புறம்நீளும்
தேடறந்தவ மும்பக்தியும் தருமம்திருந் தியுஞ்சந்திர னில்காலேல்
தோடருமத் தீயும்துலங் கியகுருவில் சுரங்கமும்கே ணியுமுண்டாம்
பாடருமாப் பார்சாதியா மனைக்குப்பரப் புமுப்பத்திரண் டாண்டே. (982)

முகடானது சமமாய் ஒழுங்குடனும் தெருப்புறம் நோக்கி நீண்டு இருக்கும், தாலக்கிரகமாம் அதனால் தவமும், அறமும், பக்தியும், தருமமும் சந்திரனின் பாகத்தில் வாசல் இருந்தால் உண்டாகும். வியாழ பகவானின் பாகத்தில், சுரங்கமும், கிணறும் உண்டு, அம்மனை பெரிய பரப்பளவுள்ளதாக இருக்கும். சுமார் 1,500 சதுர அடிப்பரப்பில் மிகப் பெரியமனையாகும்.

துலுக்கர் மனையின் பலன்

மாதவத்தைச் செய்புகரில் வாசல் வைத்தார்
மாதவத்தைக் காட்டிவான் வெளியை வைப்பார்
தீதம்வலத் தில்சொல் வார்தெம்பு தப்பார்
தீதக்குலத் தில்வந்திடு வார்தினம் அமைத்தவீடே. (983)

துலுக்கர் மனையானதற்கு சுக்கிரனின் பாகத்தில் வாசல் வைப்பர், வான் வெளியை நினைத்து வணங்க வேண்டி வானத்தின் (ஆகாயத்தின்) திசை எண்ணி வலதுபுறமாக வாசல் வைப்பர் ஆனால் அவர்கள் அமைக்கும் வீடு தவறானது தீங்குண்டாக்கும், இராகு, கேது, சனி எனும் கிரகங்களின் பாகங்களில் வாசல் வைப்பார்கள் என்பதாகும்.

மாதவத்தைச் செய்யச்சுங் கன்வாசல் வைத்தார்
பாதைநன் றாப்பார்த்து வானபக்கம் வைப்பார்
சேதவலத்துத் திசையின்புற மேசெல்வார் தென்பு
நீதமுற்றுப் பந்து நிலவுமந்த வீடே. (984)

தொழுகை நடத்தவேண்டிச் சுக்கிரன் பாகத்தில் வாசல் வைப்பர், மேலும் வலது பக்கம் ஒதுக்கி சனி, ராகு, கேதுக்களின் பாகத்திசைகளில் வாசல் வைப்பர் அதனால் விளையும் பலன் ஏதும் இல்லை கேடே வருவதாகும்.

உலுத்தர் மனையின் பலன்

நிலைக்குச் சாயவீடமைப் பார்நிலையும் வைக்கார்
நினைத்த விடம்காணி என்பார் நிலைத்திருக்கார்
குலத்தொழி லாயொன்று செப்பார் கூடிநிற்கார்
குவலயத் திலிறந்து உண்பார் கூடிவாழார். (985)

இவ்வகை வீடுகள் நாடோடிகளுடையது கூடாரங்களில் வசிப்பர். நிலை இருக்காது நினைத்த இடமெல்லாம் தனதென்று திரிவர், ஓரிடத்தில் நிலையாய் இருக்க மாட்டார். குலத் தொழில் என்று கூறிக்கொண்டு சமுதாயத்தில் ஒட்டாமல் தனித்திருப்பர், பிச்சை பெற்று உண்பர், ஊரில் சேர்ந்து வாழமாட்டார்கள்.

இரண்டு சர்க்கா மனையின் பலன்

சதிரடி யானவீடு சரியல்ல சரகாரண்டு
கெதிகெடும் தெய்வமேகும் கிளம்பியவாழ் வுகுன்றும்

பதிபுகழ் பெருமைகெட் டுப்பரதவித் துருகிவாடி
புதிதுறுமனை யில்பேதை பொற்றொடி கூடிவாழார். (986)

இரண்டிரண்டாக நான்கடுக்கான வீடானால் அதன் பலன் கேள், வாழ்வு கெடும், குல தெய்வம் வெளியேறிவிடும், உலகில் பெருமை, புகழ் கெட்டுப் போகும், துன்புற்று உருகி வாடி நிற்கும் துயரம் உண்டாகும், மனைவி கூடி வாழ மாட்டாள்.

ஒற்றைக் கதவுடைய மனையின்பலன்

ஒத்தக் கதவுதானு றும்பலனை ஒதக்கேளு
சுத்தம் சுகமில்லை மிகுசுரத்தால் தலைவலிநோய்
வித்தங்கெடும் விளைவுங்கெடும் மனையாள் மலடாவாள்
பித்துப்பிடித் திடுமேயிதைப் பலன்செய்தவன் தனக்கே. (987)

மனைகளில் ஒற்றைக் கதவு இருந்திடில் அதன் பலன் உரைக்கிறேன் கேள், சுத்தம், சுகம் இருக்காது, அதிக சுரத்தினால் தலைவலி நோய் உண்டாகும், மனைக்குரியவனுக்கு ஆண்மை குன்றும், புத்திர நாசமுண்டாகும், அவன் மனைவி மலடாவாள்

முன்பின் தாழ்ந்த மனையின் பலன்

பின்னுமுன்னும் தாழ்ந்துயர்ந்த பெருத்த கட்டடத் துள்ளோரே
மன்னும் அதன்மனை யாளோடு மருவிவி ருடையில்லை
சின்ன சிற்றிடை யாள்சீதே வியிருந்தும் என்னா
குன்னமும்சொல் வார்பெண்மேல் குறைசொல் வார்முறை சொல்வாரே.(988)

முன்னும் பின்னும் தாழ்ந்து நடுப்பாகம் உயர்ந்த மனையில் வாழ்பவரானவர் மனைவியுடன் கூடி இன்பம் அடைவதில்லை மேலும் மனைவியின் மேல் சந்தேகம் கொண்டு குறை கூறித்திரிவர். பரஸ்திரீ இன்பம் நாடிச் செல்வர்.

கோபுர சாயல் மனையின் பலன்

கோபுரசா யல்வீட்டில் கூடுதல் மெத்தவுண்டு
போவதையா ருங்காணர் பொசிப்புஅவ்வே ளைக்கில்லை
ஆவலினா லேபெண்ணை அடுத்தடுத் துடையராவர்
ஏவல்கேட் டிடுவாரெங்கும் இரந்துண்பார் ஏழையாவார். (989)

ஆலய கோபுத்தின் நிழல் படும் இடத்தில் வீடு கட்டினவர் வீட்டில் உறுப்பினர் அதிகமாகும் ஆண்வாரிசு இருக்காது காம இச்சை

அதிகம் இருக்கும் அதனால் அடுத்தடுத்துப் பெண் குழந்தைகளைப் பெற்றெடுப்பார், அடிமைத்தொழில் செய்வார், ஏழ்மை நிலையடைவார் பிச்சையெடுக்கும் நிலையும் வந்து சேரும்.

மத்தன் மனையின் பலன்

மத்தமாமனை யில்பொல்லா வல்வினை மிகவுமுண்டு
சுத்தமும் வாழ்வுமில்லை சுசிகரம் சுகமுமில்லை
வித்தையுஞ் செல்வம்நின் றும்வீண்படும் பெலமுமில்லை
சத்துவமுற வும்நீங்கும் சவுக்கியம் தொலையுமாதோ. (990)

மத்த மனையில் (மத்தளம் போன்றது) பொல்லாத தீவினைகள் அதிகமுண்டு, சுத்தமும், நல்வாழ்வும் இராது, சுகமில்லை, சந்தோஷம் இல்லை, கல்வி, தனம் வீணாகும், அன்பான உறவினர்கள் பிரிவார்கள், சௌக்கியம் கெடும், நோயுண்டாகும்.

பெருகக் கட்டிய மனையின் பலன்

பெருத்தகட்டடத் திலுள்ளோன் வெகுகனத்தலை வன்சூரன்
செருத்திடுமே ழைக்கெல்லாம் சேகரனா கிவாழ்வான்
பொருத்தமில்லா தபெண்ணையும் புணருவான் பிள்ளையில்லை
மருத்துவம் ராசதெண்டம் வருமவர்க் கெந்தநாளும். (991)

பெரியதாகக் கட்டிய வீட்டில் குடியிருப்பவன், அதிகமக்களுக்கு ஒரு சமுதாயத்திற்கே தலைவனாவான், சூரனுமாவான், ஏழைக்குடிகளைக் காப்பதில் அரசனாவான். தனக்குப் பொருந்தாத பெண்ணிடம் கூடுவான். குழந்தைகள் இருக்காது. நோயின் காரணமாக மருத்துவம் மேற்கொள்தலும், அரசதண்டனைக்கு ஆளாவதும் எப்போதும் நடைபெறும் வழக்க மாகிவிடும்.

பிணஞ்சுற்றிய மனையின் பலன்

பிணஞ்சுற்றும் மனையினுள்ளே பேதையைப்பே சிப்பார்ப்பாள்
குணமும்பெண் குறியுந்தின் பாள்கூடவே இருந்துமென்னாம்
பணமதைப்பறி கொடுத்துப்பால் பசுகருதரிக் கவொட்டாள்
ருணமதைக் கலகமேத்தி ஏறவீடிடி யச்செய்வாள். (992)

பிணஞ் சுற்றிய மனையினுள் (பேய் அடைந்தவீடு, தற்கொலை, கொலை நிகழ்ந்தவீடு) குடியிருக்கும் பேயானது அம்மனையின் பெண்களை வேசியாக்கி உடலை விற்று வாழப் பண்ணும், பணத்தைக்

கொடுத்து பரபுருஷனுடன் சேர்வதும் உண்டு, கருப்பம் உண்டாகாது, அவ்வீட்டில் பாற்பசுவும் கருவுறாது, வியாதியும் கலகமும் தோன்றும் வீடானது இடிந்தும் போகும் (சுடுகாட்டின் அருகேயுள்ள சாத்திரம் தப்பிய வீடும் மேற்கூறிய பலனுக்குப் பொருந்தும்)

ஒருகண் மனையின் பலன்

ஒருகண்மனை தனிலுள்ளோர்க் குறவோர் பகையாமே
வரவும்பொது வாழ்வும்பொது மகமும் பொதுவாமே
ரிணமும்பொது நிதியும்பொது நிலமும் பொதுவாமே
உறமும்பொது ஒழுக்கம்பொது ஒருகண் மனையாமே. (993)

ஒருகண் உள்ள நாளில் கட்டியமனையானது ஒருகண் மனையாகும் இதன் பலன் வருமாறு பொருள் வரவு, வாழ்வு, இன்பம், நோய், தனச்சேர்க்கை, பூமிசேர்க்கை, உறவினர் நட்பு ஒழுக்கம் முதலானவை சமஅளவில் கூடுதல் குறைவின்றி மத்திபமாக (பொதுவாக) இருக்கும்.

ஒருகண்ணுண் டானநா ளுமுத்தமமுமா கும்இப்போ
இருகண்ணுண் டானதா கிலின்பமனை யும்வாழும்
இருகண்ணும் இல்லாவிட் டாலியற்றிய கருமந்தீதாம்
விரவியசுற் றத்தோடு கெடுமேயங் வீடும்பாழாய். (994)

ஒருகண் உள்ள நாளில் வீடுகட்டினால் அவ்வீடு உத்தமமான பலனையே தரும், இருகண்உள்ள நாளில் வீடுகட்டினால் அவ்வீடு, நீண்டகாலம் நிலைத்திருக்கும் இருகண்ணும் இல்லாத குருட்டுநாளில் வீடுகட்டினால் அதுதீயதாகும், சுற்றத்தாரின் பகை உண்டாகும். அவ்வீடும் பாழாகிப் போகும்

குறிப்பு:- ஒருகண் உள்ள நாட்கள் ஞாயிறு, திங்களாகும், இருகண் உள்ள நாட்கள் புதன், வியாழன், வெள்ளியாகும் இருகண்ணும் இல்லாத குருட்டு நாள் சனி, செவ்வாய்க் கிழமைகளாகும்.

உடுக்கு மனையின் பலன்

உருக்குபோல் மனையிருந்தால் உள்ளபடி பலனைக்கேளு
திடுக்கிட்டுத் திகைத்துநிற்பர் தெய்வமம் மனையிலில்லை
படுக்கையில் கனவரட்டி பாரியாள் மனம்சலித்து
சிடுத்துண்ணப் பேசுவார்கள் சீரழிந்தடங் கிவாழ்வார். (995)

உடுக்குபோல் மனை இருந்தால், செய்வதறியாது திகைத்து நிற்கும் படி நேரும், அம்மனையில் தெய்வம் நிற்காது, கெட்ட கனவுகள் தோன்றும், மனைவி கணவன் மன ஒற்றுமை குன்றிப்போகும், நிலையில்லாது சீரழிந்த வாழ்க்கை உண்டாகும்.

வில்லடியான மனையின் பலன்

வில்லடி யானவீட்டில் விருந்துபோ யிருந்துவாழார்
மல்லுகள் சண்டைபூ சைவாய்க்கிதம் இல்லைகண்டீர்
சொல்லினால் கோரங்கொண் டுசுகமில்லைக் களவுமுண்டு
நில்லுவம்மனை யில்வந்து நித்தியம்பல னைச்சொல்லே. (996)

வில்போன்ற வடிவுள்ள வீட்டில் விருந்தினர் வந்து தங்கி விடுவதால் வாழ்வு குன்றும் சண்டையும், சச்சரவும் இருப்பதால், அமைதி இருக்காது, வாய்வார்த்தைகள் வக்கிரமாகப் போகும். மனையில் களவுபோகும் இவ்வாறாகத் தீய பலன்களே நடக்கும் என்றவாறு.

ஒருமனைக்கு இரண்டு வழியுள்ளதன் பலன்

ஒருநடைஇரண் டுபோக்கு ஒழிந்திடுந்தன தானியங்கள்
வருவதுமில் லைசெம்பொன் வழக்குண்டுக டனால்துன்பம்
பெருவதையன் றிவேறேபெற் றிடும்பலனைக் காணார்
உருகியேமன துவாழஉள் அழிந்தொடுங்கிப் போவார். (997)

ஒரு வீட்டிற்கு இரண்டு பாதைகள் இருந்தால் தனதானியங்கள் நாசமாகும், பொன் சேர்க்கை இராது, வழக்கு, கடன் இவற்றால் துன்பம் உண்டாவதைத் தவிர வேறு ஒரு பலனும் கிடைக்காது, இதனால் மனக் கவலை கொண்டு அழிந்தும் போவார்கள்.

கோவிலை ஒட்டிய மனையின்பலன்

வேதத்தோ டொத்துவாழும் விண்ணவர் மனையோடு ஒக்கும்
மாதவசா லைசத்திரம் வாழ்மனை அரங்கம் வாவி
தாதவிழ் பூந்தோட்டங் கள்தலங் களும்பல னைத்தந்து
பூதமும் ஏவல்செய் யும்புண்ணியம் மிகவுண் டாமே. (998)

ஆலயங்களுக்கு அருகில் உள்ள, தவசாலை, சத்திரம், வாழ்மனை, அரங்கம், குளம் மகரந்தமணம் பரப்பும் பூந்தோட்டங்கள், மற்றும் பல தலங்களும், பூதங்களும் கூடப் பணிந்து ஏவல் செய்யும் புண்ணியமான பலன்களும் உண்டாகும்.

எதிரொலி மனையின் பலன் (ECHO)

கூடவேபே சிப்பேசிக் குடித்தனம்அழிக் கும்வீடு
மாடங்கள் கூடமெல்லாம் வலமிடம்ஆ கும்வவ்வால்
நாடகக்கா ரர்போலே நலமிலாமுறை மைகெட்டுத்
தேடவேபோ னமக்கள்திரும் பியும்வரக் கண்டீரோ. (999)

கூடக்கூடப் பேசுவதுபோல எதிரொலிக்கும் மனையானது குடித்தனத்தைக் கெடுத்துவிடும் மாட, கூடங்களில் வௌவால்கள் குறுக்கும் நெடுக்குமாகப் பறந்து திரியும், நாடக நடிகர்கள் முறையற்ற வாழ்க்கை வாழ்ந்து வீட்டைவிட்டு வெளியேறியவர் மீண்டும் வந்து குடியேறாதது போல வாழ்வுகெடும்.

ஒருமனையுடன் ஒருமனை சேர்க்கும் பலன்

அடர்ந்ததாய் மனையிருக்க அதற்கிணைமனை யேசெய்தால்
தொடர்ந்துகீழ் பானுக்குமேல் தொடர்சுவர்கன முதலாந்தச்சுப்
படசிறுகோ லாலளந்து பதினொருபொருத் தம்பார்த்துக்
குடந்தையில் மாதந்தன் னில்கோலவும் மயனார்சொன்னார். (1000)

பெரிய மனையொன்றிருக்க அதற்கு அடுத்து மற்றும் ஒரு மனை செய்ய வேண்டில் கிழக்கில் சூரியனின் திசையில் சுவர்கனம் அறிந்து கோல்தன்னால் அளந்து 11 வகைப் பொருத்தம் பார்த்து, தை, மாசி மாதங்களில் மனை கோலும் படியாக மயனார் அறிவுறுத்துகிறார். 11 பொருத்தங்களாவது - மாதம், நாள், வாரம், திதி, யோகம், கரணம், யோகினி நிற்கும் திசை, லக்கினம், சகுனம், பட்சி, ஆரூடம் இவையாகும்.

தென்வடல் கிழக்குமேற்கு திரும்பவுமனை யேசெய்தால்
முன்னுள்ளதா யமனைக்குமூ ளைதன்னால் சுவர்க்கனத்தைச்
சொன்னகோல் கொண்டளந்து துகைவகை நலமதாக
உன்னியமனை கள்கோல உத்தமமா குமென்றே. (1001)

தென்வடல் மனையுடன் கிழக்கு மேற்காக மேலும் மனை செய்ய வேண்டுமானால் முந்தைய மனையுடன் அறிவால் உணர்ந்து பொருத்தமான அளவுடன் குறிப்பிட்ட அளவுகோல் கொண்டு அளந்து தொகை நலம்பெறும்படி மனை அமைத்தால் உத்தமமான பலன்கள் உண்டாகும்.

வேறு

மனையுடன்மனை யைச்சேர்த்து மனைஎடுத்திடு வாராகிற்
தனமிகுவல மேபெற்றால் தாழ்வி-ா வாழ்வதாகும்

இனிதிலாவிட மேயாகில் இழிவுடன் வாழ்வுகுன்றும்
நினைவுடன்நே ரேகொள்ளில் நிச்சயம்சம வாழ்வென்னே. (1002)

மனையுடன் பின்னும் ஒரு மனை சேர்த்திட வேண்டுமெனில் அம்மனைக்கு வலதுபுறம் வீடமைத்தால் வாழ்வுபெருகும், அம்மனைக்கு இடதுபுறம் வீடுசெய்தால் இழிவு ஏற்படுவதுடன் வாழ்வும் குன்றும், நேர்எதிரே வீடு செய்தால் சமமான வாழ்வு ஏற்படும்.

ஆனதோர்கட் டுப்போக்கும் அதிலிருகட் டுப்போட
ஏனதோர்தெற் குமேற்கே இதமுடன்கட் டவாழ்வான்
ஆனதோர்தனங் கள்சேரும் அன்புடைமக் கட்பேறாம்
நானதோர்மயன் தானித்தை நன்மையென்று ரைசெய்தானே. (1003)

முந்திய மனைவீட்டுடன், தெற்கு, மேற்கில் இணைவீடுகட்டினால் நல்வாழ்வு கிட்டும் தனச்சேர்க்கை உண்டாகும், புத்திரசம்பத்து உண்டாகும் என மயன் உரைத்தவாறே.

ஒரு பழைய மனையுடன் பக்கத்திலுள்ள காலிமனையைச் சேர்க்கும் பலன்

மனையதுபெற் றுக்கட்டில் வடக்கொடு கிழக்குநன்றாம்
தனமுறுஞ்செல் வமுண்டாம் தரணியிலிருந் துவாழ்வார்
அனலுறுந்தெற் குமேற்கு அறைந்தனர்ஆ காதென்று
கனமுயர்மய னார்தாமுங் கருணையாற் கூறினாரே. (1004)

முந்திய மனையுடன் பிறிதொரு காலி மனையை இணைத்துக் கட்டுவதாகிடில், வடக்கு, மற்றும் கிழக்கு நன்றாகும், செல்வம் சேரும், புவியில் நீண்டகாலம் இருந்து வாழ்வர், தெற்கு, மேற்குத் திசைகளில் (அனலாகும்) மனை சேர்த்தால் ஆகாது தீயபலன் விளையும்.

கீழ்த்திசையில் மனையைச் சேர்க்கும்பலன்

பெற்றிடுங்கி ழைநூலைப் பெருக்கவே வடக் குத்தன்னில்
மற்றதோர்மனை கள்நன்றாம் அகன்றதோர் பொருளுமுண்டாம்
பற்றிடும்தெற் குப்போகில் பாருளமனை யாள்கேடாம்
மெய்த்ததெமி ழோர்க்கெல்லாம் மெய்ப்பட உரைத்தவாறே. (1005)

கிழக்கினில் உள்ள மனையுடன் வடக்குத் திசையில் கூடுதலாக மனையைச் சேர்த்தாலும் கிழக்கோடு கிழக்கில் மனையைச் சேர்த்தாலும்,

வடக்கில் சேர்த்தாலும் மிக நல்ல பலன் உண்டு பொருள் பெருகும், தனம்கூடும், தெற்குத்திக்கில் மனையை இணைத்தால் மனைவிக்குக் கேடு உண்டாகும் என தமிழ் பெருமக்களின் நலன்கருதி மயனுரைத்தனர்.

வடதிசையில் மனையைச் சேர்க்கும் பலன்

உத்தரதிசை யில்நூலை உசந்ததோர்மேற் குப்போகில்
சித்திரமா டம்பொங்கி சிறப்புடன் பெருகிவாழ்வார்
உத்ததோர்கிழக் குப்போகில் உசந்ததோர்மனை யாள்கேடாம்
வித்தகநூ லின்வல்லோர் விளம்பினர் தமிழினாலே. (1006)

வடக்குத்திசையில் உள்ள மனையுடன் மேற்குத் திசையில் உள்ள மனையை இணைத்துக் கொண்டால் அழகிய மாடமாளிகைகளுடன் செல்வச்சிறப்புற்று வாழ்வார் கிழக்கில் உள்ள மனையை இணைத்தால் உயர்ந்த மனைக்குக் கேடு வரும், என்று தமிழ் நூலின் வல்ல அறிஞர் பெருமக்கள் உரைத்தனர்.

மேல்திசையில் மனையைச் சேர்க்கும் பலன்

மூலமாய்வளர்ந் துமேல்நூல்முற் றவேதெற்குப் போகில்
சாலவேகரு மநன்றாம் தனம்பொருள் தானுமுண்டாம்
ஏலமாங்குழ லினாளேயியல் புடன்வடக் கேபோகில்
காலனாருயி ரையுண்ணுங் கற்றவர் நூலிதாமே. (1007)

மேற்குத் திசை மனையுடன் தெற்குத் திசை மனை இணைத்தால் காரியம் நன்றாகும். தனமும், பொருள் சேர்க்கையும் உண்டாம், வடக்கில் மனை சேர்த்தால் எமன் வந்து உயிர் பறித்துப் போவான் என்று கற்றவர் உரைத்த நூல் இதுவாகும்.

தென்திசையில் மனையைச் சேர்க்கும்பலன்

தென்றிசைசெந் நூல்தன்னில் தெளிந்துடன்கிழக் குப்போகில்
அந்திரமில் லையென்னும் அமைந்ததோர்பிணி யுந்தீரும்
முந்தியமேற் குப்போகில் முனிந்ததோர்மனை யாள்கேடாம்
மந்திர விதியினாலே மனையிநூல் விதித்தவாறே. (1008)

தென்திசை மனையுடன் கிழக்குத்திசை மனையை இணைத்தால் கேடில்லை நோய்கள் தீரும். மேற்கில் மனை இணைத்தால் மனைவிக்குக் கண்டம் உண்டாகும் என மனை நூல் கூறும்.

கால் மனையின் பலன்

கால்மனையுச் சமிங்கதி ரோனும்உச் சமாகும்
மால்அயன் திசையிலெட்டும் வரிசையாய் இரவிநின்றால்
கோலமா மனைக்குநல்ல குறித்ததோர் இராகுநிற்பன்
பாலனேர்புரட் டன்பின்னும் பலன்பாலன் நஷ்டமாகும். (1009)

மனையின் கால்வாசிப் பகுதியில் வீடு கட்டியிருந்தால், சூரியன் உச்ச வீட்டில் இருக்க புதன் திக்குத்தவிர மற்ற எட்டுப்பாகத்திலும் இரவியே நிற்பான் மனைக்குரிய பாகத்தில் இராகு நிற்பான் இதன்பலன் மனையின் அதிபன் புரட்டுக் காரனாயிருப்பான் அல்லது இறந்து போவான்.

அரை மனையின் பலன்

அரைமனை வீடுமானால் ஆனதோர் சனியுநிற்பன்
மருவியமற் றோரெட்டும் மலர்த்திசை மாறிநிற்கும்
குருவுமே பூமிகாப்பன் குணமிலான்மனை யிற்செல்வம்
அரியுடன் அலைச்சலாகும் ஆடுமாடயர்ந் துபோமே. (1010)

அரைப் பகுதியில் வீடானால் அம்மனையில் சனி நிற்பான் மற்ற எட்டுப் பாகத்தில் கிரகங்கள் மாறி நிற்கும் வியாழனின் பகுதியில் வாசல் விட்டால் பூமி நிற்கும். ஆனால் நற்குணம் இராது செல்வம் இருக்கும், சூரியனின் பாகத்தில் வாசல் கண்டால் அலைச்சல் அதிகமாகும், ஆடு மாடுகள் சோர்ந்து போய்விடும்.

முக்கால் மனையின் பலன்

முக்கால்மனை வீடுமானால் முதற்பலன் விருத்திலாபந்
திக்கெல்லாம் புகழவாழ்வான் திகழ்மதி உச்சனானால்
மக்களும்வீ டுஞ்செல்வ மைந்தரும் மகிழ்ச்சியுண்டாம்
பக்குவமிகுந் தசெல்வம் பாரினில்பெரி யோனாவன். (1011)

முக்கால் மனை வீடு அமைந்தால் முதல் பலன் விருத்தியும், லாபமும் உண்டாகும், திசையெங்கும் நற்புகழுடன் வாழ்வுண்டாகும் சந்திரன் உச்சம் பெற்றால் வீடும், செல்வமும், புத்திரரும், மக்களும் சிறப்புடன் மகிழ்வர், பெரும்தனவந்தனாவான் உலகினில் பெரிய மனிதன் என்ற பெயர் நிலைத்திருக்கும்.

முழுமனையின் பலன்

ஒருமனை வீடுமானால் உற்றதோர்குழப் பங்காட்டும்
வதுவதுவறு மைதுன்பம் வண்கேது உச்சமாவன்
திருவுறுஞ்செவ் வாய்பூமி சேர்ந்திடக் கலந்து நின்றால்
மருவிய வீடுபாழாம் மாமனை வீடுசாமே. (1012)

முழுமனை வீடானால் குழப்பமே உண்டாகும், வறுமையும் துன்பமும் உண்டாகும் கேது உச்சம் பெற்றிடுவான், அவனுடன் செவ்வாய், சுக்கிரன் சேர்ந்து நின்றால் அம்மனை பாழாகும், அழிந்தே போகும்.

முழுமனைக்கு மேலுள்ள மனையின் பலன்

எண்பதாம் அடிக்குமேலே எடுத்திடும் மனைக்குமெத்த
வண்ணம்வந் திடுமேபெற் றகசுதனுடனு மையாள் வாழாள்
கண்ணியம் வருமேயந் தகட்டிடம் கிரகமாகா
எண்பதம்வா ழமாட்டார் எதிரியாலிழப் பாங்கண்டீர். (1013)

80 அடிகளுக்கும் மேல் எடுக்கும் மனைக்குள் கணவன் மனைவி ஒற்றுமை இருக்காது, அந்தக் கட்டிடம் வீடாக இருக்காது, அம்மனைக்கு உரியவன் அம்மனையில் தங்கி வாழ மாட்டான், எதிரிகளின் சூழ்ச்சியினால் அந்த மனையை இழந்து விடுவார்.

குறிப்பு:- இந்நூலாசிரியரின் கருத்துப்படிக் கால் மனை என்பது 20 அடியாகும், அரைமனை என்பது 40 அடியாகும், முக்கால் மனை 60 அடியாகும், முழுமனை 80 அடியாகும்.

ஒற்றை நிலைகளால் ஆயமனையின் பலன்

வாசலின் கால்கள் நேர்நேர் வைப்பதே நலமதாகும்
வாசலைக் கருங்கல் லாலேவைப் பதேவீட் டிற்காகா
வாசலைக் கருங்கல் லாலேமடந் தளியிவைக் குவைக்க
மாசற அறைகள் வாசற்கால் களுமொருமை நன்றே. (1014)

வாசற்கால்களானது நேருக்கு நேராக வைப்பது நன்மையாகும், குடியிருக்கும் வீட்டின் வாசலில் கருங்கல்லை வைப்பது வீட்டிற்கு ஆகாது, ஆலயங்கள், மடங்கள் இவற்றிற்கே கருங்கல் நிலை பயன்படும் நன்மையும் உண்டாக்கும் தவிர வாசற்கால்கள் ஒன்றுமட்டும் வைத்தலே நன்மை பயக்கும்.

இல்லின்வா யில்ஒற்றைப் படில்இருப்போர் களென்றும் மகிழ்ச்சிதரும்
நில்லும் சுபமே எந்நாளும் நீளும்புத் திரபாக்கியமே
எல்லைக்கடக் கும்தனவரத் துஎன்றார் சான்றோர் புகழ்ந்தேற்று
மல்லல்தெளிந் தபெருமானாய் விளங்கும் மயனார் நயம் பெறவே. (1015)

குடியிருக்கும் வீட்டின் வாயில் ஒற்றைப்பட இருந்தால் என்றென்றும் மகிழ்ச்சி நிலைத்திருக்கும், புத்திர பாக்கியம் உண்டாகும், சுபமே விளையும், தனலாபம் எல்லை மீறிவரும், என்று சான்றோர் கூறிய உண்மைகளை மயன் கூறினார்.

ஒத்த நிலையின் பலன்

ஒத்தரோருட சச்சாலை ஒருமித்தே இருந்துவாழ்வார்
மெத்தவுந் தவமுமுண்டு வீட்டுளாள்சோ ரம்போகாள்
சுத்தனாய்க் காக்கவல்ல கணவன்மேல் காதல்கொள்வாள்
அற்றவர்க்கன் னம்கொஞ்சம் அதுதினம்அளித் தேவாழ்வார். (1016)

ஒற்றை வாசலுடைய மனைவீட்டின் தம்பதியர் ஒற்றுமையுணர்வுடன் வாழ்வர் நல்ல தவமும் வாய்க்கும், அவன் மனைவி சோரம் போக மாட்டாள், சுத்த மனத்தினளாய்த் தன் கணவன் மீது அன்புடன் வாழ்வாள், பசித்தவருக்கு உணவு தினமும் வழங்கி அறவாழ்வு வாழ்வார்கள்.

சூலம் எதிரில் உள்ள மனையின் பலன்

ஒருத்தந்தலை நோயுகந்துவந் திடுமேஊ மைபிள்ளை கள்பிறந்திடுமே
பெருத்தசந்ததி யும்பலங்குன் றிடுமேபே தையைப்பேய் கள்தீண்டிடுமே
வருத்தம்வந் திடுமேவாழ் மனையாளை மரிக்குமுயிர் கெடுத்திடுமே
கிருத்துவாங்கல் லில்திருகு லமெழுதிதெருப் புறணாட்டிடத் தில்லறமே. (1017)

கல்லினால் திரிசூலம் செதுக்கி ஊன்றியுள்ள இடத்தின் எதிரில் குடியிருக்கும் மனை கட்டியிருந்தால் ஒருத்தலை நோயும், ஊமைப் பிள்ளைகள் பிறத்தலும், பெரிய சந்ததிகள் பலமிழத்தலும், மனைவிக்குப் பேய் பிடித்தலும், வருத்தமும், துன்பம் கூடுதலும், மனையின் உயிர் போகுதலும் முதலான மிகக் கொடுமையான பலன்கள் உண்டாகும் எனவே அம்மனை தீயதாகும்.

பொருந்தாத நிலையுள்ள மனையின்பலன்

பொருந்தாநிலைக் குவிருந்தில் லைபோவத ரிதேயிருந்து உண்ண
நருந்தாமரைக் கண்ணாயகி யாள்நாடாள் நடனம்தெரு நடையில்

தெரிந்தாணா ரும்மெதம்பு சொல்லத்தெரி யாதவர்போல் இருந்திடுவார்
மருந்தவுண்பார் வாய்பொசிப்பை மறையோர் வகுத்தவிதி இதுவே. (1018)

மனைக்குப் பொருந்தாத நிலைவாசல் இருந்தால் அம்மனைக்கு விருந்தினர் எவருமேவர மாட்டார்கள் ஸ்ரீதேவியும் வரமாட்டாள், மூதேவி வாசம் செய்வாள் உறவினரும் ஆறுதலான வகையில் பேசமாட்டார்கள், நோயே மிஞ்சும் என சான்றோர் உரைத்தபடி.

மேடு குத்தலான வீட்டின் பலன்

மேடுகுத்தலா னவீட்டில் முடங்கள் பிறக்குமச்சுடன்
ஓடுபோட்டுயர்த் தினாலுயிர்கள் யாவுஞ் சாகுமே
ஆடுமாடு பெண்டுபிள்ளை அல்லல்கொண் டுவாழ்வினும்
வீடுவிட்டுக் காடெழும்பி விருந்துபெற்று வாழலாம். (1019)

மேடு குத்தல் உள்ள வீட்டினில் உடல் ஊனமான குழந்தை பிறக்கும், வீட்டிற்கு ஒடு வேய்ந்து உயரமாய் இருந்தாலும் உயிர்ச் சேதங்கள் ஏற்படும், கால்நடைநாசம், மனைவி மக்கள் துன்பம் அடைவர், வீட்டைவிட்டு வெளியேறி காட்டில் வாழ்வான் அல்லது விருந்தினராக ஊர்ஊராய் உறவினர் வீடுகளில் சுற்றித்திரிவான்.

கூரை குத்தலினால் உண்டாகும் பலன்

கூரையைக் கூலிற்குத் தக்கொடியசெந் தணலெழும்பும்
வாரையை நீட்டிவிட்டு வழிநடை சந்துகாட்டிப்
பேரையைக் கேட்டுமென்னப் பெருகியேபொருந் தாவிட்டால்
ஊரையே விட்டுநாவில் ஓடுவார்உற் றுப்பாராய். (1020)

மனைக்குக் கூரைக் குத்தல் இருந்தால் மனையில் தீப்பற்றும், குத்தல் உண்டாக்கும் மனைக்கும் இம்மனைக்கும் போதிய இடைவெளியாய்ச் சந்து விட்டுக் கட்டியிருந்தாலும் கூட குத்தல் தவிர்த்துக் கட்டாவிடில் வீட்டைவிட்டு ஒடி விடும் படியான தீய பலன் உண்டாகும்.

இருமாமனையின் பலன்

ஈரற்குலை நோய்வருமே இருமாமனை யோருக்குத்
தாரம்தவ றிடுமேமறு தாரம் எதிரிடுமே
சோரம்போய் விடுமேபெற் றசுதனும்கீ ழார்க்கடிமை
சாரும்வரத் தும்தவறிடு மேவாழ்மனை தான்தப்பிடுமே. (1021)

(மொத்த மனைஇடத்தில் 10ல் ஒருபங்கு) இருமாமனை கட்டிக் குடியிருப்பவருக்குக் களத்திரநாசம் உண்டாகும். அதனால் மனைவி மரணம் அடைவதும், மறுதாரம் அமைவதும் அல்லது மனைவி சோரம் போவதும், மனைக்கதிபதியின் மகன் அடிமையாக கவலை செய்யச் சென்று விடுவான், வாழ்வின் வளங்கள் யாவும் கெடுவதுடன் விரைவிலேயே அம்மனை அழிந்தும் போய்விடும்.

கதவு குந்தித் தேய்ந்த வீட்டின் பலன்

கதவுகள்குந் தித்தேய்ந்தால் கடனுண்டு கணவர்மேலே
இதமில்லை மனம்வேறா கியிரண்டுபட் டுடமைகெட்டு
மதங்கொண்டு மதிமயங்கி மணந்தபெண் மனமுநொந்து
சதமிலா வீடெண்ணிச் சாத்தியேபூட் டிப்போவார். (1022)

நிலைகால் தாழ்ந்து போவதாலோ கதவுகள் இறங்கி விடுவதாலோ கதவுகள் தரையில் உரசித் தேய்ந்து போயிருந்தால், கடன் தொல்லையுண்டாகும், கணவன் மனைவி உறவு சீர்கெடும், மனைவியானவள், மனம்நொந்து பிரிந்து போய்விடுவாள் அதனால், வீட்டிலே தங்க மனமின்றி வீட்டைப் பூட்டிவிட்டு வேறு எங்காவது போய்விட நேரிடும்.

சூத்திரம் மாறிச் செய்வதின் பலன்

கோவிலைவிலக் கிநூலைக் குறுக்கடி யாகநீக்கி
ஆவொடுதன தான்யங்கள் அடங்கியவீ டிட்டாக்கின்
நோயினால்துய ரப்பட்டு நுண்ணிய வாழ்விழந்தே
ஏவலைப்போ லேபெண்கள் எதிர்த்துமுன் பேசுவாரே. (1023)

கோவிலின் குத்தல் தவிர்த்து, சூத்திரங்களின் படி விலக்கிமனை செய்யாவிட்டால், பசுக்கள், தனம், தானியம் இவை வளம் பொருந்திய வீடாக இருந்தாலும் கூட, நோய் உண்டாகித் துன்புறுத்தும், வாழ்வும் கெடும், ஏவல், பில்லி வைத்ததுபோலப் பெண்கள் எதிர்த்துப் பேசுவார்கள் அதனால் அமைதி கெடும்.

மனைக்கு வயதாகிவிட்டதனால் உண்டாகும் பலன்

மனைக்குளவய தாகிவிட்டால் வரும்பலன் மத்திபந்தான்
வினையினால்சோம் பலாகும்விஷங் கள்வந்தடை யும்பின்னும்
முனையுமே பல்லிநோயும் மூத்தவள் வரவுமுண்டு
நினைத்திடுங் காரியங்கள் நிலையிலாக் கருமமாமே. (1024)

மனைக்கு நிர்ணயித்த வயது கடந்து விட்டால் மனையின் பலன் குறைந்துவிடும், கர்மவினை காரணமாகக் காரியங்கள் தடைப்படும், விஷ ஜந்துக்கள் வந்து குடிபுகும், பல்லியானது மாறாட்டமாகச் சொல்லும், மனைக்குள் மூதேவியானவள் நுழைவாள், எடுத்த காரியங்கள் தடையாகிப் போகும், காரியக்கேடும் உண்டாகும்.

நில மட்டாழங்கள்

தாபித்த மனையின்வாசல் தளமட்டம் சொல்லக்கேளு
சோபிக்கும் என்றுசொல்வர் தூக்கினல்பார் வைக்கினம்
நாபிக்கு மேலுயர்ந்தால் நலமில்லாப் பலனேயென்று
கோபித்தே ஓடிப்போவாள் கொடியிடையா ளதேவி. (1025)

ஸ்தாபிதம் செய்த மனையின் தளமட்டம் உயர்ந்திருந்தால் மிக நல்ல பலன் உண்டாகும் என்று கூறுவார்கள் ஆனால் ஒரு குறிப்பிட்ட உயரத்திற்கு மேல் உயர்த்தினால் பலன் கெடும். வீதியில் நிற்கும் போது மனையின் தள உயரம் சிற்பனின் கொப்பூழுக்கு மேலே உயர்ந்திருந்தால், பலன் கெடும், மகாலெட்சுமியானவள் தங்காமல் ஓடிப் போய்விடுவாள்.

உத்திரமட்டங்கள்

கூடத்துச் சரமேவிட் டம்குறிக்குமுன் எட்டவேண்டும்
மாடகமார் புமட்டம்மணிப் பிறையிடையின் மட்டம்
ஆடகரசி தம்தரதான் அதைஅறையாய்ச் செய்து
பீடத்துக் கீழ்ச்சுரங்கம் பித்தினில்ஆ ழம்செய்வாய். (1026)

கூடத்தின் உத்திரமானது நுனிக்காலினால் எக்கி நின்று தொடும் உயரத்தில் இருக்க வேண்டும், மாடங்கள் மார்புமட்டத்தில் இருக்க வேண்டும், விளக்குப் பிறையானது இடுப்பு உயரத்தில் இருக்கவேண்டும். அந்தரங்க அறையானது ஆசனத்திற்கு கீழ் சுரங்கம் அமைக்க வேண்டும்.

வேறு

கூடத்துவிட் டமெல்லாம் குதிக்குமுன் எட்டவேண்டும்
மாடகமார் புமட்டம்மணிப் பிறைஇடை யின்மட்டம்
மோடொசப் பாளிமட்டம் முத்தமுழுழங் கால்மட்டம்
ஆடகரசி கம்வைக்க அரைமட்டம் அதின் கீழ்வேண்டாம். (1027)

கூடத்தின் உத்திரம் குதித்துத் தொடவேண்டிய உயரமின்றி நுனிக் காலில் நின்று எட்டித் தொடும்படி இருக்கவேண்டும். மாடமானது

மார்பு உயரத்தில் இருக்க வேண்டும். விளக்குப்பிறை இடுப்பு உயரத்தில் இருக்க வேண்டும், முற்றமானது முழங்கால் மட்டம் இருக்க வேண்டும், அந்தரங்க ரகசிய அறை (சுரங்கம்) ஆசனம் உயரம் இருக்க வேண்டும் அதற்குமேல் உயரம் வேண்டாம்.

மனைகளுக்கு வயது சொல்ல

பெருக்கவே மனைக்குவந்த பெருகியவய தைமூன்றில்
ஒருக்கவே கொடுத்துகந்தே உலவியநா ளேவாழ்வர்
செருக்கப்பட் டிடுவார்பின் புதிசைக்குள் ளவயதாய்விட்டால்
பெருக்கியே கூட்டிவைப்பர் பெரும்பொசிப் படையுமாறே. (1028)

மனைக்குக் கூறப்பட்ட வயதை மூன்றால் பெருக்கி நூறால் வகுத்த மீதமே வயதாகும். மேலும் மனை கோலக் குறித்த லக்கின ஜாதகத்தின் படியாக ஆயுள் நிர்ணயம் செய்து அதன் படியாக ஆயுள் அதிகரிக்கும் வழிவகை ஆராய்ந்து நீண்ட ஆயுள் மனைக்கு வாய்க்கும் படியாக அமைந்திடல் வேண்டும்.

சிரோ கிரகம் அமைப்பதின் பலன்

சுவர்தள்ளிப் பொருத்தம்பா லும்தூயகில் அமைக்கவென்றால்
கவருங்கல் லாலேமுற் றம்காண்சரக் காவிரண்டே
அவர்க்கவர்பொருத் தம்வேண்டும் அழகுடன்மேன் மைமையங்
கயவர்வந் திருக்கலாகார் எழிலரசர்க் காமே. (1029)

முற்றத்துடன் அமைந்த வீடு சிரோகிரகமாம் முற்றமானது கவர்கல் எனும் பட்டியற்கல்லில் (தகட்டுக்கல்) அமைத்து இடைவெளியின்றி பொருந்த அமைக்கவேண்டும். சுவற்றுப் பக்கம் ஒதுங்காதபடி மையமாக அமைக்க வேண்டும். இம்மனைகள் க்ஷத்திரிய மரபினருக்குப் பொருந்தும். மற்ற சூத்திர மரபினருக்கு ஆகாது.

குறிப்பு:- செட்டிநாடு என்றழைக்கப்படும் காரைக்குடி போன்ற ஊர்களில் இவ்வகை மனைகள் அதிகம் உள்ளன.

தெருவாசல் கொல்லை வாசல்கள் நேர்முகமாயிருத்தலின் பலாபலன்கள்

தெருவாசல் கொல்லைத் திருவாசல் ரண்டும்
மருவகல நேர்பெறுதல் வாகாம் - விருத்தியற

ஒன்றுடனே ஒன்றையொதுக் கியமைத் துவிடின்
நின்றுவிடும் லாபம் நிசம். (1030)

தெருவாசல், கொல்லை வாசல் இரண்டும் ஒன்றுக்கொன்று நேரெதிர் இருக்க வேண்டும் மாறி ஒன்றுக்கொன்று ஒதுங்கி அமைந்திருந்தால், ஆதாயம் என்பதே நின்று விடும்.

சன்னல் அமைத்த பலனும் அறுகால் ஜீரணோத்தாராண பலனும்

சன்னல்வெளிப் புறத்தில் சத்தியமாய் வைக்கலாம்
உன்னபடி பக்கத்தும் உட்பின்னும் - பின்னமுடன்
வைக்கவே கூடாவே வாசல் பழுதுபடின்
நிற்கச் செய்வேறு நிலை. (1031)

சன்னலானதை வெளிப்பக்கமாய் உண்மையில் வைக்கவேண்டும், பக்கவாட்டிலும் ஓரத்தில் பின்புறமும் வைக்கலாகாது, கதவுநிலை சிதைந்து போய்விட்டால் அதனைச் செப்பனிடக்கூடாது மாற்றி வேறு நிலை வைக்க வேண்டும்.

பழுதிலா அறுகாலைப் பெயர்த்து புத்தறுகால் அமைப்பதின் பலன்

வாசற் பழுதாகா வண்ணமிருக் கையிலே
வாசல் புதிதாக வைத்தாக்கால் - நாசமுற
வீட்டின் தலைவன் விரைவில் மரித்துசுடு
காட்டிற்குப் போவனே காண். (1032)

முன்னம் வைத்த வாசலானது பழுதின்றி இருக்கும் போதிலேயே அதைப் பெயர்த்து எடுத்துவிட்டு வேறு ஒரு புதிய வாசல் அமைக்கக் கூடாது மாறினால் மனையின் அதிபதி விரைவில் மாண்டு சுடுகாடு செல்லுவான்.

அமைத்தவாசலை இடித்தெறிதலால் உண்டாகும் பலன்

கணக்கிட்டு வாசற் படிவைத்துக் கட்டி
பிணக்கிட்டு நாட்டடற்க பேர்த்து - கணக்கிட்டு
வைத்தபடி வாசல் காத்துவருந் தெய்வங்
கூத்தன் எடுப்பான் கொதித்து. (1033)

முன்னம் அளவறிந்து கணக்கிட்டு வாசல் வைத்துவிட்டுப் பின்பு வேறொரு காரணம் பற்றி வாசலைப் பெயர்த்தெடுத்தல் கூடாது, வைத்த வாசலைத் தெய்வம் காத்து நிற்கும், எனவே மீறும் போது சிவபெருமான் ஆத்திரம் கொண்டு விடுவார்.

வெளிவாசற்படிக்கு உள் வாசற்படி சிறிதாயிருக்க வேண்டும்எனல்

வெளிவாசல் உள்வாசல் வித்தியாச மில்லா
நளியாக வைத்திருக்க நாடேல் - தெளிவாக
உள்வாசல் சற்று சிறுகவுஞற் றுகென
தெள்ளியோர் சொன்னார் தெளிந்து. (1034)

வெளிவாசலையும் உள்வாசலையும் சமமாக அமைக்கக் கூடாது, வெளிவாயிலை விடவும் உள்வாயில் சற்றுச் சிறியதாக இருத்தல் வேண்டும் என நூல் பல அறிந்த பெரியோர் கூறினர்.

கட்டின சுவரை இடித்து அதில் வாசற்படி வைக்கும்பலன்

சுவரை எழுப்பினபின் தோண்டிச் சிதைத்துத்
தவறாய் வழிவாசல் வையேல் - இவற்றுடன்
வாசல் இடுவாயேல் வந்துவிடும் வீதலே
பாசமாய்ச் சொன்னேன் பரிந்து. (1035)

வீட்டிற்குச் சுவர்வைத்தபின் அதை இடித்துவிட்டு வாசல் வைக்கக் கூடாது. மீறி வைத்தால் பெரும் கேடு வருவதுடன் மரணமும் வந்து சேரும் என மயன் அன்புடன் கூறினார்.

இரண்டுமனைக்கு இடையில் கிணறு வாசற்படிக்கு எதிரில் தேர் இவை இருத்தலின் பலன்

இரண்டு மனைநடுவில் கூவல் இருந்தால்
புரண்டு விடும்வாழ்வு பொதுவாய் - தரணியிலே
வாசற்கு எதிரில் வருந்தேரின் குற்றநின்றால்
தோசம் தலைவனுக்காம் சொல். (1036)

இரண்டு மனைகளுக்கு நடுவிலே கிணறு இருந்தால் வாழ்வு குழறுபடியாகிவிடும், இவ்வுலகிலே வாசற்படிக்கு எதிரிலே தேர் நின்றால் அம்மனைக்குரிய தலைவனுக்குத் தோஷம் ஏற்படும் என்று கூறுவாயாக.

தோஷந்தரும் பொருட்கள் இத்துணை தூரத்திற்கு அப்புறமிருக்கின் தீங்கன்றெனல்

வாசற்கெதிரில் வாழ்காய் மரமும் வீதிகளும்
பாசமுறு மூலையும் பாழ்ங்கிணறும் - வீசுமொளி
கந்துஜலம் நிற்றல் கயமுயர மீர்மடங்கில்
எந்தவித தோஷமும் இல். (1037)

வாசலுக்கு எதிரில் காய்க்கக்கூடிய உயிர் வாழ் மரங்களும், வீதிகளும், முச்சந்திகளும், பாழுங் கிணறுகளும், தூண்களும், குளமும் முதலானவை யானையின் உயரத்தின் இருமடங்கு தூரத்தில் இருந்தால் தோஷம் ஏதுமில்லை (தூரம் சுமார் 16 அடி முதல் 20 அடிவரை)

வீட்டிற்குச் சமீபத்தில் சமாதியும், யாகசாலையும் இருக்கலாகாதெனல்

வீட்டின் சமீபத்தில் வீந்தோர் சமாதியுறு
கோட்டம் அரவுபுற்று கூவலுடன் - ஆட்டமாம்
யாகமனை உண்டானால் யாண்டுந் தலைவர்க்குச்
சோகமுறு தீங்கெனநீ சொல். (1038)

வீட்டிற்கு அருகில் இறந்தவரின் சமாதி, பாம்புப் புற்று, கிணறு, கோவில், சுடுகாடு, யாகசாலை இவைபோன்றவை இருந்தால் அம்மனையின் தலைவனுக்குத் தீங்கு வந்து சேரும்.

மனையைக் கணக்கெடுத்துக் கட்டிய பின் அதனை இரண்டாய்ப் பிரித்தல் ஆகாது எனல்

மனையைக் கணக்கெடுத்து வைத்தபின் ஈராய்
தினையளவும் மீறிப்போய் செய்யேல் - மனைசெய்தால்
வீட்டின் எஜமான் விரைவில் மனைவிடுத்து
காட்டிற்குப் போவான் கரைந்து. (1039)

மனைதனைக் கணக்கிட்டு கட்டி முடித்தபின்னர் அதனை இரண்டாகப் பிரிக்கவோ அன்றி வேறு எந்தச் சிறு மாற்றமோ செய்யக்கூடாது மீறிச் செய்தால் அம்மனையின் எஜமானன் விரைவில் வீட்டைவிட்டுக் காட்டுக்குப் போய் விடுவான் மனம்நொந்து.

வீட்டுக்கெதிரே கட்டைச்சுவர் இருந்தற் பலன்

கட்டைச் சுவர்தானும் காண்கின்ற உத்திரமும்
திட்டமுடன் தண்டியலும் செல்லுகின்ற - கட்டிழகின்

முற்றத்தின் மூலைத் தெருவாசல் கால்படிலோ
குற்றமுயிர் சேதம் கூறு. (1040)

தெருவாசலுக்கு எதிரிலே கட்டைச்சுவர், உத்திரம், கல்தூண், முதலானவை இருந்திடில் குற்றமுண்டாகும், மேலும் உயர்ச்சேதமும் உண்டாகும்.

பழைய வீட்டை இரண்டாய்ப் பிரித்தற் பலன்

பழவீட்டை ஈராய்ப் பகிர்தல் நலவில்
வழங்கும் வழக்கும் கலக்கம் - சழக்குவரும்
பொன்நஷ்டம் பூமிபொருள் நஷ்டம் ஆகுங்காண்
தன்னிஷ்டம் நிற்காதே சற்று. (1041)

பழைய வீட்டை இரண்டாகப் பிரித்திடல் நன்றல்ல, வம்பும், வழக்கும் வந்து சேரும், நோயுண்டாகும், பொன், பூமி, பொருள் முதலானவை நஷ்டமாகும் எனவே தனது இஷ்டம் போல் மாறுதல் செய்யக் கூடாது.

உள்வாசற் படிக்கு வெளிவாசல் உயரும்பலன்

இல்லின் வெளிவாசல் உள்வாசல் எப்படிக்கும்
புல்போக தாழ்தல் புகழெனபர் - இல்லேல்
வருபலன் நீங்கும் மயன்கூறும் வாறே
அருகுவரே உண்மை அறி. (1042)

கட்டுகின்ற வீட்டினில் வெளிவாசல் எப்போதும் தாழ்ந்தும் உள்வாசலானது உயர்ந்தும் இருத்தல் வேண்டும் இல்லாவிட்டால் வரக்கூடிய சுபபலன்கள் யாவும் நீங்கிப் போகும் என மயன் உரைசெய்த படியே.

வாசற்கெதிர்பில் கூட மிருத்தலின் பலனும் எதிருக்கெதிரில் வாசற்படி இருத்தலின் பலனும்

வாயற் கெதிரே வருமாயின் பொற்கூடம்
போய்விடும் வாழ்வு புரண்டுமே - ஞாயம்
எதிர்வீட்டின் வாசற் கெதிர்வாசல் நின்றால்
அதிற்செயத்தோர் வெல்வார் அறி. (1043)

வீட்டின் வாசலுக்கு எதிரில் கூடம் ஒன்று இருந்தாலும் வாழ்வானது தடம் புரண்டு போய்விடும், அதுபோல் எதிர்வீட்டின் வாசல்

தன் வீட்டின் வாசலுக்கு எதிரில் நின்றால் இதில் அவரவர் ஜாதகப்படியாக நல்ல திசை, கோட்சார பலன்கள் உள்ளவருக்கு நற்பலனும், மற்றவருக்குக் கெடும் பலனும் உண்டாகும்.

வீடுகளின் க்ஷேமமும் விவரமும்

கன்னியும் மீனம்வீட் டில்காணுவாப் பாழாமீனம்
அன்னியகீழ் மேல்வீட்டில் அழிந்திடுமே லாம்வீடு
மன்னிய தென்வடக்கில் மடிந்திடும் வடக்குவீடு
பன்னிய அங்கிவாழ்வு பாழுதான் வாயுவீடே. (1044)

வடக்கு, தெற்கான வீட்டில் வடக்கில் ஒதுங்கிய வீடு பாழாகும், கிழக்கு மேற்கான வீட்டில் மேற்கில் ஒதுங்கிய வீடும் அழிந்திடும், தெற்கு, வடக்கான மனையில் வடக்கில் வீடு கட்டினால் அழிந்து போகும் அக்கினி மூலையில், வாயு மூலையில் ஒதுங்கிய வீடும் பாழாகிப் போகும்.

வீடுகளில் ஒற்றைப்பாடு இரட்டைப்பாடு அறைகள் இருத்தற் பலனும் வீட்டில் பிரித்த சாமான்களைக் கொண்டு புது வீடு கட்டுதல் பலனும்

வீட்டின் அறைவீடு ஒற்றையெண் மேன்மைதரும்
தீட்டும் இரட்டிப்பெண் தீதாகும் - நாட்டமுடன்
வீட்டைப் பிரித்து மரங்கல்லால் வேறுமனை
நாட்டல் தரித்திரமாம் நாடு. (1045)

வீட்டில் கட்டப்படும் அறைகளின் எண்ணிக்கையானது ஒற்றைப் படையாய் இருந்தால் நல் மேன்மையுண்டாகும், இரட்டைப்பட இருந்தால் தீங்குண்டாகும் முன்னம் கட்டியிருந்த வேறு ஒரு பழைய வீட்டிலிருந்து பிரித்து எடுக்கப்பட்ட கற்கள், மரங்கள் முதலியவற்றைக் கொண்டு புதிதாக ஒருமனை கட்டக் கூடாது, கட்டினால் அம்மனையில் தரித்திரமே நிலை கொள்ளும் என்று அறிக.

பழைய வீட்டைப் பிரித்துப் படைவைத்து உயர்த்திக் கட்டலாகாதெனல்

பழவீட்டை நீத்துப் படைவைத் துயர்த்திக்
குழகுமனை ஆக்கிக் கொள்ளின் - இழப்பர்
மனையுடனே மக்களையும் மற்றும் உறுந்துன்ப
வினைவரும் என்றே விளம்பு. (1046)

பழைய வீட்டைப் பிரித்து மாடி வைத்துப் புதிதாக உயர்த்திக் கட்டக் கூடாது அதனால் மனையை இழப்பதுடன், புத்திரர்களையும் இழக்க நேரிடும், மற்றும் பலவிதமான துன்பங்களும், வினைகளும் வந்து சேரும் என்றறிக.

பழைய வீட்டிற் பிரித்த சாமான்களைக் கொண்டு வீடுகட்டுவதற் பலன்

பழமனைபிரிக் கப்போக்கப் பழமரந்தன் னிற்சேர்க்க
முழமதேகுறி யாய்க்கொண்டு முழமதேகொள் வீராகில்
அளவிலாமக் கள்சுற்றமை யவேநோவது உண்டாய்
கிளையதுசுற் றத்தோடுங் கெடுமெனமய னுஞ்சொன்னான். (1047)

பழைய வீட்டில் பிரித்த மரம் முதலியவற்றினைக் கொண்டு அதே அளவு முழம் கொண்ட வீடுகட்டினால் மக்கள், உறவினர்பகை, சுற்றத்தாரின் வெறுப்பு முதலியவற்றை அடைகுவன்.

வெளிவாசற் படிக்கு உள்வாசல் உயர்ந்திருப்பதின் பலன்

தலைவாசல் உந்திக்குச் சற்றுயர்ந்தே உள்ளில்
நிலைவைத்தல் வேண்டும் நிசமாய் - அலைகடற்போல்
வாழ்வுபெருகி மலிவாகிக் கீர்த்தி ஜெயம்
தாழ்வென்றும் வாராது அவர்க்கு. (1048)

தலைவாசலை விட உள்வாசல் சற்று உயர்ந்தே இருக்க வேண்டும், அதனால் அலைகடல்போல வாழ்வு பெருகும், புகழ் பெருகும், வெற்றியுண்டாகும் என்றும் தாழ்வென்பதே வராது அம்மனை வாழ்வோர்க்கு என்றவாறு.

கோவண மனையின் குடியிருப்புப்பலன்

குறுகி நீட்சி குலவு மனையிலே
மறுவ நின்று மனையொடு வாழ்வரேல்
சிறுமை தோன்றியே செல்வந் தொலைந்துபோய்
துறுவற் பாட்டிற்குஞ் சோகம் உறுவரே. (1049)

குடியிருக்கும் மனையின் அகலம் குறுகியும் நீளம் அதிகமாயும் வால்போல நீண்டு இருந்தால் வாழ்வில் சிறுமை உண்டாகும், தனச்சேதமும் ஏற்படும். அத்துடன் பசிப்பிணியைப் போக்கும் வழியின்றித் தவித்துத் துன்புறுவர்.

வீட்டெஜமானுக்கு அடுத்தடுத்து வீடு இருந்தால் இன்னவீட்டில் தான் இருக்கலாம் எனல்

தெற்கு வடக்கில் திருவீடு இரண்டானால்
நிற்க வடக்கில் நியாயபதி - வற்புடனே
அன்றேல் தனஞ்சுதனும் அற்றுவிடும் மேற்கீழில்
நன்றாகு மேல்மனையே நன்று. (1050)

தெற்கு மற்றும் வடக்கில் வீடுகள் இரண்டு இருந்திடில் வீட்டெஜமான் வடக்கில் உள்ள வீட்டில் தங்குதல் நலம் பயக்கும், தெற்கு வீட்டில் தங்கினால் தனநாசம் ஏற்படுவதுடன் புத்திர நாசமும் ஏற்படும், மேற்கிலும், கிழக்கிலும் வீடுகள் இருந்தால் மேற்கு வீட்டில் குடியிருந்தல் நலமாகும்.

வீதியில் அதிகமாய் வெளிவந்த வீட்டில் வசிப்பவர்களின் பலன்

முன்பின் மனையிருக்கில் முன்னின்ற அவ்வீடே
சுன்னின்று சுற்றம் கலக்கமுறும் - பொன்விரயம்
சத்துருக்கள் தோன்றி சனிக்குமே சங்கடங்கள்
சித்தமதில் வையேல் செல. (1051)

மனையானது வீதிக்கு உட்புறம் ஒடுங்கியும், வீதிக்குள் சிறிது வெளிவந்துமாக மனைகள் இருந்தால் உள்ளொடுங்கிய மனை நன்மைதரும், வெளிவந்த மனையில் குடியிருந்திடில் சுற்றத்தார் விலகிப் போய்விடுவர். பொன் விரையம் உண்டாகும். மேலும் எதிரிகள் அதிகமாகி மிக்க உபத்திரவங்களைத் தருவார்கள் எனவே அவ்வீட்டில் வசிக்கும் எண்ணம் தீதே ஆகும்.

வடக்கு மேற்கு தாழ்ந்த வீட்டில் வசிப்பதினாலும், அதிக உயரமாக இருக்கும் வீட்டில் வசிப்பதினாலும் உண்டாகும் பலன்.

மேற்கும் வடக்கும் பணிந்துற்ற வீட்டினிலே
தேறல் தனவிரயம் சேருமே - கூறுமதி
பின்னீறு போலும் உயர்வீட்டில் வாழ்பவர்க்கு
எந்நாளும் நாசதனம் எண். (1052)

மேற்கும் வடக்கும் தணிந்துள்ள வீட்டில் வசிப்பவர்க்குத் தனவிரையம் உண்டாகும் பின் புறம் அதாவது மேற்கு உயர்ந்துள்ள

மனையில் மட்டுமே குடியிருக்கலாம், அதுபோல சமதளமுள்ள மனை மிகச் சிறந்த பலன் அளிக்கக் கூடியது.

கீழ்வீட்டிற்கு மேல்வீடு உயர்ந்திருப்பதின் பலன்

ஓதியகிழ் வீட்டுக்கு உயர்ந்ததோர் மேலாமில்லம்
நீதியாய் உயர்ந்ததானால் நிச்சயம்ரண் டும்வாழும்
ஆகியமேல் வீடஃதே அளவுடன் குறையுமாகில்
சேதமாம்உயிர் கள்போகும் சிறையுடன்மனை யும்பாழே. (1053)

கிழக்கில் உள்ள மனைவீட்டை விட மேற்கில் உள்ள வீடானது உயர்ந்து காணில் நிச்சயமாக இரண்டு வீடுகளும் நலமாய் வளரும், கிழக்கு வீட்டைவிட மேற்கு வீடு தாழ்ந்திருந்தால் சேதங்கள் உண்டாகும், மரணம் சம்பவிக்கும், அத்துடன் சிறைவசமும் வாய்க்கும், மனையும் பாழ்பட்டுப் போகும்.

மனைக்கட்டடமானது கிழக்கே உயர்ந்து மேற்கே தாழ்ந்திருப்பதினாலுண்டாகும் பலனும் கிழக்கு தெற்கு உயர்ந்து மேற்கு வடக்கு தாழ்ந்திருப்பதின் பலன்

கீழ்த்திசை உயர்ந்துமேற் கேயிறங்கிடு கிரகம்வாழ்வார்
பாழ்படுதுன் பமுற்றேபசி யினால்மெலிவர் கேள்வன்
கீழ்ப்படஅலக் கணெய்திக் கிடப்பனேவடக் கும்மேற்கும்
தாழ்ந்துகீழ்யா மம்தூங்கில் தலைவன்கே டுறுவன்மாதோ. (1054)

மனையானது கிழக்கில் உயர்ந்து மேற்கே தாழ்ந்துள்ளதின் பலன் மனை பாழ்பட்டுப் போகும், பசித்துன்பமுடன் பலவகைத் துன்பத்தினால் வருந்திட நேரிடும் வடக்கும், மேற்கும் தாழ்ந்து கிடந்தால் மனைக்குரியவனுக்குக் கேடுண்டாகும்.

கட்டட மனையானது தெற்கேயுயர்ந்து கிழக்கு மேற்கு வடக்கு தாழ்ந்திருப்பதினால் உண்டாகும் பலனும் தெற்கு கிழக்கு உயரமாயிருப்பதின் பலனும்

தக்கணமுயிர்ந் துகீழும்வாருண முதக்குத் தாழ்ந்தால்
முக்கியம்வறு மைதுன்பம் மூதேவி வந்துநிற்பாள்
தக்கணம்பிரா சிமேடாய்ச் சமைந்திடுவீட் டில்வாழ்வார்
துக்கமும்அயர் வுந்தோன்றித் தொலையுமே தனங்களெல்லாம். (1055)

தெற்குப் பக்கம் உயர்ந்தும், கிழக்கு, மேற்கு மற்றும் வடக்குத் தாழ்ந்திருந்தால், வறுமை, துன்பம், உண்டாவதுடன் அம்மனையில்

மூதேவி வந்து குடியிருப்பாள், தெற்கும், கிழக்கும் உயர்ந்த வீட்டில் வாழ்பவருக்குத் துக்கமும், அயர்வும் தோன்றும், தனங்கள் எல்லாம் சேதமாகிப் போகும்.

வாசற்படிக்கு நேரே சிறுசுவரும் தம்பமும் இருத்தற் பலனும் தாய்ச்சுவரை ஆயாதியினிடத்தினில் சேர்க்கவேண்டும் எனலும்

தெருவாசற் படிக்குநேரே சிறுசுவர் தம்பமுற்றால்
இருப்பவரெவர்க் குமென்றும் இடுக்கணுந் தீங்குமுண்டே
இருபக்கத் தாய்ச்சுவரை ஆயாதியி டத்திற்சேர்க்க
இருமனைவே றாய்க்கட்டில் இடையிலோர்சுவ ரைப்போடே. (1056)

தெருவாசற் படிக்கு எதிரில் சிறிய சுவரொன்றிருந்தாலும், தூண் நின்றாலும், அம்மனையில் குடியிருப்பவருக்கு என்றென்றும் துன்பமும் தீங்கும் உண்டாகும், இரண்டு பக்கங்களிலும் உள்ள தாய்ச்சுவரை ஆயாதியினிடத்தில் சேர்க்கும்போது இருமனைகளை வேறாகப் பிரிக்க எண்ணினால் இடையில் ஒரு சுவற்றை எழுப்பினால் போதும் தீங்கு வராது எனல்.

இதுவுமது

போடுமச்சுவ ருதானும்புகுத் தஆயாதி தன்னில்
கூடுமேசெல் வம்க்ஷேமம் கூடாததாய்ச் சுவரில்வீடே
தேடியசெல் வம்ஆய்ந்து சேர்புமன்சா வான்என்றே
ஆடியமய னார்கூற்றை அறைந்தனர்உல குக்கன்றே. (1057)

தாய்ச்சுவற்றினை ஆயாதியிடம் சேர்த்தால் செல்வம் பெருகும், நலம் உண்டாகும் தாய்சுவர் இணையாவிட்டால் செல்வம் அழியும் அத்துடன் மனைக்குரியவனும் மரணம் எய்துவான் என்றே மயன் உலகோர் அறிய வேண்டி இவ்வாசகங்களை அன்றே உரை செய்துள்ளனர்.

வீட்டிற்கு வைக்கும் ஸ்தம்பங்களின் மேல் பாகத்தை மேலேயும் கீழ்பாகத்தைக் கீழேயும் வைக்க வேண்டும் என்பது

வீட்டினில்வைக் கும்தம்பம் மேன்மரம் மேலதாயும்
நாட்டுகஅடி யைக்கீழில் நலமிகும் முரணுமாயின்
ஈட்டியசெல் வம்யாவும் இழப்பரே கஷ்டமுண்டாம்
நீட்டவுத்திரச் சரத்தைநீ பிணையடி தென்மேற்கே. (1058)

வீட்டிலே நாட்டும் மரமானது மேல்பக்கம் மேல்நோக்கியும் கீழ்ப்பக்கம் பூமியிலும் நாட்ட வேண்டும் மாறுபாடாக நாட்டினால் சேர்த்த செல்வம் முழுதும் இழந்து விடுவதுடன், கஷ்டமும் உண்டாகும், உத்திரச் சரத்தினைப் பிணைக்கும் கயிற்றை தென்மேற்கில் இழுத்துக் கட்டவேண்டும்.

வாசற்படி சாய்ந்திருப்பதின் பலன்

வெளிவாசல் படியுள்சாய்ந் தால்விளையுமே நாசம்யாவும்
வெளிப்பக்கம் சாயுமானால் வெளியிடம்எஜ மான்நிற்பன்
வெளிதேயம் சென்றன்னான் வீணனாய் அலைவனென்று
தெளிவுடைமய னார்கூறும் திசையைத்தெளிந் தேன்மாதோ. (1059)

வெளிவாசற்படி உள்புறம் சாய்ந்திருந்தால் பலவகை நஷ்டங்கள் உண்டாகும், வாசலானது வெளிப்புறம் சாய்ந்திருந்தால் எஜமானன் வீட்டைவிட்டு வெளியேறி வேறு தேசம் சென்று வீணாக அலைந்து திரிவான் என்று மயன் அறிந்து தெளிவுற உரைத்தார்.

வாசற்படிக்குக் கதவுமாட்டும் பலனும் உத்தரதிக்குத்தவிர மற்ற மூன்று பக்கமும் தாழ்வாரமிருப்பதின் பலனும்

புதன்வெள்ளி கபாடம்வாசல் போடுகசரத் தில்என்றும்
பதமுற காலக்ஷேபம் பண்ணுவர் எந்தநாளுஞ்
சதனதாழ்வா ரமுத்தரந் தவிரமுப் புரத்திலானால்
மிதமற செல்வமோங்கி விளங்குமக் கிரகந்தானே. (1060)

புதன், வெள்ளிக் கிழமைகளில் கதவுகள் தைக்க வேண்டும், அதனால் தினசரி வாழ்க்கை அமைதியாகக் கழியும், வீட்டிற்குத் தாழ்வாரம் அமைக்க வேண்டும் என்று விரும்பினால் வடக்குத் திசையைத் தவிர்த்து மற்ற மூன்று திக்குகளிலும் அமைக்கலாம் அதனால் செல்வம் பெருகும் அம்மனையும் சிறந்து விளங்கும்.

கீழ்ப்பக்கம் நீங்கலாக மற்ற மூன்று பக்கங்களிலும் தாழ்வாரமிருப்பதின் பலனும் தென்புறம் நீங்கலாக 3 பக்கங்களில் இருப்பதின் பலனும், மேல்புறம் நீங்கலாக 3 பக்கங்களில் தாழ்வாரம் இருப்பதின் பலனும்

கிரகதாழ்வா ரம்கிழில் நீங்கமுப் புறமதானால்
அருகுமேசெல் வம்என்று அறைந்தனர்மய னார்தானும்

விரகமேதனம் தாழ்வாரம் தென்புறம் விட்டுநிற்கில்
இருக்குமேமேற் குகாலியிழப் பரேசெல்வம் மைந்தன். (1061)

வீட்டின் கிழக்குத்திசை தவிர்த்து மற்ற மூன்று திசைகளிலும் தாழ்வாரம் இருந்தால் செல்வமழியும் தெற்குப்புறம் தவிர்த்து மற்ற திசைகளில் இருந்தாலும் தன நாசம் உண்டாகும், மேற்குத் திசை தவிர்த்து மற்ற மூன்று திசையிலும் தாழ்வாரம் இருந்தால் கால் நடைகள் சேதமாகும் என்று மயன் உரைத்தார்.

தாழ்வாரம் தெற்கு மேற்கு இவைகளில் இருப்பதின் பலனும், மேற்கு வடக்கு இவைகளில் இருப்பதின் பலனும்

மேற்குதக்கண தாழ்வார வீட்டிலேவசிப் போர்நாளும்
ஏற்பர்சந் தோஷம்யாவும் இழப்பன்வீட் டெஜமான்ஆவி
மேற்குஉத்தர தாழ்வார வீட்டினில் வசிப்பரானால்
சாற்றினார்மய னாருண்மை சகத்தவர் அறியத்தானே. (1062)

மேற்கிலும் தெற்கிலும் தாழ்வாரம் அமைந்த வீட்டில் வசிப்பவர் நாளும் இன்பமடைவர் மேற்கிலும் வடக்கிலும் இருந்தால் மனைக்குரியவன் மாண்டு போவானென்று மயன் உரைத்தவாறே.

கிழக்குவடக்கு இவைகளில் தாழ்வாரம் இருப்பதின் பலனும் கிழக்கு தெற்கில் தாழ்வாரம் இருப்பதின் பலனும்

குணக்குவுத்தரத் தாழ்வாரம் குலவுமாமனை யில்வாழ்வார்
பிணக்கினால்உதை கள்பட்டுப் பிடிக்குமேதுன் பம்முற்றும்
குணக்குதக்கணத் தாழ்வாரக் கோவிலிலிருப் போர்க்கென்றும்
பிணக்குசச்சரவு தோன்றிப் பிடிக்குமேசனி யான்மாதோ. (1063)

வடக்கு, கிழக்கில் தாழ்வாரம் இருந்த மனையில் வாழ்பவர் சண்டைகளினால் உதைகள் பட்டுத் துன்பம் அனுபவிப்பான், கிழக்கு, தெற்கில் தாழ்வாரம் இருந்தால் சண்டையும் சச்சரவும் தோன்றும், சனியன் பிடித்தாற்போலத் துன்பம் உண்டாகும்.

கிழக்கு மேற்கு இவைகளில் தாழ்வாரம் இருப்பதின் பலனும் வடக்கு தெற்கு இவற்றில் தாழ்வாரம் இருப்பதின் பலனும்

குணக்கிலுமேற் குமுள்ளதாழ் வாரக்கோ விலுள்ளோர்
உணங்கியேசெல் வம்மாய்ந்து உறங்குவர்கஷ் டப்பட்டே

அணங்கறவுதக் குத்தெற்குத் தாழ்வாரவ கத்தில்வாழ்வார்
பிணங்கிப்பங் காளியாலே பிழைகளே தோன்றுமாதோ. (1064)

கிழக்கு, மேற்கில் தாழ்வாரம் இருந்தால் செல்வமழிவதுடன் துன்பத்தினால் மயங்குவர் வடக்கு தெற்கில் இருந்தால் பங்காளிகளுடன் சண்டையிடுவதால் துன்புறுவர்.

நான்கு பக்கங்களிலும் தாழ்வாரம் இருப்பதின் பலனும், நான்கு பக்கங்களிலும் வாசற் படி இருப்பதின் பலனும்

நான்குதாழ்வா ரமுள்ளநகரி னல்வாழ்வர் என்றும்
மேன்மையாய்க் கீர்த்தியோங்கி விளங்குவர் செல்வத்தாலே
ஆன்றியதிசை கள்நான்கும் வாயல்சேர் அகத்திலுள்ளோர்
தோன்றியசெல் வத்தாலே சுகமுடன்வாழ் வார்தானே. (1065)

நான்குபுறமும் தாழ்வாரம் உள்ள மனையின் கண் குழவாழ்வோர் யாண்டும் மேன்மையுடன், புகழ்பெற விளங்கி, செல்வந்தராயிருப்பார், நான்கு திசைகளிலும் வாசல் உள்ள வீட்டில் வசிப்பவர் செல்வச் செழிப்புடன் சிறந்த வாழ்வு வாழ்வர்.

வீட்டிற்கத் தெற்கு, மேற்கு, வடக்கு இம்மூன்று பக்கங்களிலும் வாசற்படி இருத்தலின் பலனும் கிழக்கு, மேற்கு, வடக்கு இம்மூன்று பக்கங்களிலும் இருப்பதின் பலனும்

தக்கணம்வடக் குமேற்குவாயல் வாயல்சேர் சதனந்தன்னில்
சொர்க்கமேதிரு டராலேசுக மிலைபசுக்கள் தங்கா
முக்கியம்பிரா சிமேற்கு உதக்குமுப் பக்கவாயல்
சிக்கறுமனை யில்வாழ்வார் க்ஷேமமே அடைவரன்றே. (1066)

வட.க்கு, மேற்கு, தெற்கு முதலிய மூன்று திசைகளிலும் ஒருமனைக்கு வாசல் இருந்திடில் சொர்க்கமே ஆனாலும் திருடர்வந்து பொருள்களைத் திருடிப்போவர், பசுக்கள் விருத்தியாகாது கிழக்கு, மேற்கு, வடக்கு முதலான மூன்று திசைகளில் வாசல் இருந்தால் அம்மனை வாழ்பவர் எவ்விதக் கஷ்டமும் இன்றி நலமுடன் வாழ்வர்

வடக்கு, தெற்கு, கிழக்கு இம்மூன்று பக்கங்களிலும், தெற்கு, கிழக்கு, மேற்கு இம்மூன்று பக்கங்களிலும் வாசற்படி இருப்பதின் பலன்

வடக்குதென் கிழக்குவாயல் மனையினில் இருப்பவர்க்கு
இடக்கற எந்தநாளும் இனிமைசந் தோஷமுண்டாம்

வடக்கின்றுமற் றமூன்றுதிசை வாயல்மனை யில்வாழ்வோர்க்
கடமறநய மாமென்று அறைந்தனர்மய னார்தாமே. (1067)

வடக்கு, தெற்கு, கிழக்குத் திசைகளில் வாசல் இருந்தால் துன்பமின்றி எந்த நாளும் இனிமை, சந்தோஷம் நிலையாகும் வடக்குத்திசை நீங்கலாக கிழக்கு, மேற்கு, தெற்கு இம்மூன்று திசைகளிலும் வாசல் இருந்தால் நற்பலனே உண்டாகும்.

வாசற்படிக்கு எதிரில் சேற்றுநிலம் சாக்கடை நீரோட்டம் கிணறு, கோவில், தெய்வங்கள், மரக்குற்றல், தேர்க்குற்றல் ஸ்தம்பம் இவை இருக்கலாகாதெனல்

வாசற்கெதி ரில்சேற்றுநி லமிருந்தால் வருமேதுன்பமிக
வீசும்நாற்ற நீரோட்டம் வீழ்ந்தால்நேரே வீண்செலவாம்
பேசும்கூவல் இருந்தாக்கால் பெருகுங்காக் கைவலிநோயே
நாசமெஜமான் தெய்வமுறின் நங்கைமரணம் தம்பமதால். (1068)

வீட்டின் தெருவாசலுக்கெதிரில் சேற்றுநிலம் இருந்தால் மிகத் துன்பங்கள் உண்டாகும் சாக்கடைக் கழிவு நீரோட்டம் ஓடினால் வீண்செலவு உண்டாகும், கிணறு இருந்திடில் காக்கை வலிப்பு நோய் உண்டாகும், தெய்வம் இருந்தால் மனைக்குரியவன் நாசமடைவான் தம்பம் நின்றால் மனைவி மரணமடைவாள்.

இதுவுமது

மரக்குற்றல் இருக்குமாகில் மைந்தனே நாசமாவாள்
உருவுடைதெய் வக்கோவில் உற்றிடில்குல மேநாசம்
அருமைதேர்க் குற்றல்நின்றால் பலமுடைஎஜ மான்சாவான்
திருமயன்கூ றும்வாறே செப்பினேன் உலகுக்கன்றே. (1069)

மரக்குற்றல் ஏற்பட்டால் மனைக்குரியவனுக்குப் புத்திர நாசம் உண்டாகும், தெய்வ உருவங்கள், கோவில் இவை இருந்திடில் குலநாசம் வந்து சேரும், தேர்நின்று குற்றல் கண்டால் மனைத் தலைவனுக்குக் கேடுண்டாகும், என்று மயன் உரைத்த வாறே.

ஒரு வீட்டிற்குத் தெருவாசல் மட்டும் இருந்து தோட்டத்திற்கு வாசல் இல்லாத வீட்டில் வசிக்கும் பலனும், ஆயாதிக்கணக்கிட்ட வீட்டை இரண்டாய்ப் பிரித்து வெளிவாசல் வைக்கும் பலனும்

தெருவாசலி ருந்துகொல்லைத் திருவாசல்வைக் காவீட்டில்
இருப்பவர்புத் திரபாக்கியம் இழப்பரேஇருந் தால்மாள்வர்

பொருத்தஆ யாதிவீட்டைப் புகழறப்பிரித் தோராய்
திருத்தியேவா சல்வைத்தோர் எமன்பதிசேர் வர்மாதோ. (1070)

தெருவாசல் மட்டும் வைத்து கொல்லைப்புறத்தில் வாசல் வைத்திடாவிட்டால், அம்மனையில் குடியிருப்பவர் புத்திர பாக்கியத்தை இழப்பர் முன்னம் இருந்தாலும் இழந்து விடுவர் அதுபோல ஆயாதி கண்டு சுத்தமாக அளந்து வீடுகட்டியபின்னர் அவ்வீட்டை இரண்டு கூறாகப் பிரித்து மேலும் ஒரு வாசல் வைத்து இரண்டு வீடாக்குதல் கூடாது அதனால் மனைத்தலைவன் மாள்வான்.

ஒருவீட்டிற்கு எதிரெதிராக கூடங்கள் இருப்பதின் பலனும் மூன்று தொட்டி தொடராகக் கட்டிய வீட்டில் வசித்தற்பலனும்

எதிரெதிர் கூடமீராய் இருக்குமவ் வீட்டிலுள்ளோர்
அதிகமாய்வறு மைப்பட்டு அடைவரேகஷ் டம்யாவும்
துதியறமூன் றுதொட்டித் தொடராகக் கட்டிவாழ்வோர்
பதியினில் பெருமைநீத் துப்பாக்கியம் இழந்துமாய்வர். (1071)

எதிர்எதிராக இரண்டு கூடங்கள் அமைத்து வாழ்பவர் வறுமையும், கஷ்டமும் மிக அதிகம் அடைவர், நீளவாக்கில் மூன்று கட்டாக வீடுகட்டி வாழ்பவர் இவ்வுலகில் அடையத்தக்க புகழ் இழந்தும், பாக்கியம் இழந்தும் மாண்டுபோவர்.

அடுத்துள்ள வீட்டாருக்கு ஆயம் வேறு என்பதும் கோவில் நிழல் மனையில் விழுவதின் பலனும்

புரமனையடுத் தோர்வீட்டைப் புரிவரேல்ஆ யம்வேறாம்
பரமநீள்கோ வில்நிழல் பதியினில் வீழுமாகில்
திருமனைக்ஷீ ணமாகிச்செல் வமேதொலைந்து போகும்
முருகுசேர்மய னார்சொன்ன முறைப்படிமொழிந் தேன்மாதோ. (1072)

மனைக்கு அடுத்து மற்றொரு வீடு அமைத்திடில் அதன் ஆயம் வேறாகும், கோவில் நிழலானது வீட்டின் மீது விழுந்தால் அந்த மனையில் உள்ள செல்வம் யாவும் அழிந்து போவதுடன், மனையும் பாழ்படும் என்று மயனார் உரைத்தனரே.

பிராமணர்கள் க்ஷத்திரியர்கள் வசிக்கும் விடுகளின் இலட்சணம்

நான்குபக்கம் உயர்வீட்டில் அன்றேல் நான்குந் தாழ்வீட்டில்
நோன்மையாய்ந் தோர்வசித்துவ ரல்நுவலுந் தோஷம் கிடையாதே

கோன்மைக்ஷத் திரியர்வசிக் குங்குலமோ உதக்குப் புரமுயர்ந்து
மான்றலறவே முப்புரங்கள் தாழ்தல் வண்ணம் மயன்வாக்கே. (1073)

நான்குபக்கமும் உயர்ந்துள்ள வீடு, அல்லது நான்கு பக்கமும் தாழ்ந்துள்ள வீடு பிராமண வகுப்பினருக்கு எந்தத் தோஷமு மின்றி நல்வாழ்வு தரும், வடக்குப் பக்கம் உயர்ந்தும் மற்ற மூன்று பக்கங்களிலும் தாழ்ந்திருக்கும் மனையானது க்ஷத்திரிய வகுப்பினருக்கு நல்ல பலன் தரக்கூடியது என்று மயன் உரைத்தவாறே.

வைசியர்களும், சூத்திரர்களும் வசிக்கும் வீட்டின் லட்சணம்

கிழக்குவடக் குஉயர்வீட் டில்கீர்த்தி பெருகும் வைசியர்கள்
சழக்கில்வாழ்க் கைப்பெறலா குந்தக்கண முங்குணக்கும் வடக்குயர்ந்து
இழுக்கில்மனைக் கண்சூத்திரர்கள் இருந்து வரலாம் எந்நாளும்
வழுவுநீக்கி வாழ்பவருஞ் செம்மரை யாள்கடா க்ஷமரோ. (1074)

கிழக்கும் வடக்கும் உயர்ந்தவீட்டில் வைசியர்கள் வசித்தால் அவர்களுக்குப் புகழ் பெருகும், கிழக்கும், வடக்கும் உயர்ந்த மனை சூத்திரர்க்கானது குறைவிலா வாழ்வுண்டாகும் என்றும் இவ்வாறு தத்தம் வருணத்திற்கேற்ற மனையில் வாழ்வதனால் லக்ஷ்மிகடாட்சம் ஏற்படும்.

இன்னின்ன ஜாதியார் இத்தனை கட்டில் இருக்கலாம் என்பது

எச்சாதி ஒன்றாய் இருக்கலாம் ஓர்கட்டில்
விச்சைசேர் வேதியர்க்கு நான்குகட்டும் - நிச்சயமாய்
க்ஷத்திரியர் மூன்றுகட்டில் தங்கி இருக்கலாம்
உத்தமம் ஈதென்றே உரை. (1075)

ஒற்றைக்கட்டு வீடு எல்லாச் சாதியினருக்கும் பொதுவானது பிராமண மரபினருக்கு நான்கு கட்டு வீடும், க்ஷத்திரியருக்கு, மூன்று கட்டு வீடும் உத்தமமான பலன்தரும்.

இதுவுமது

ஒணிகர்க்குக் கட்டிரண்டும் மண்மக்கட் கொன்றும்
மனியெனவே சொன்னார் மயன். (1076)

வைசியருக்கு இரண்டுகட்டு வீடும், சூத்திரருக்கு ஒற்றைக் கட்டுவீடும் சிறப்பாகப் பொருந்தும் என்றும் மயன் கூறினார்.

வீட்டிற்கு உபயோகிக்கக் கூடாதென்று விலக்கிய மரங்களால் வீடுகட்டும் பலனும் நான்கு புறமும் சரியவுள்ள தாழ்வார வீட்டில் வசிக்கும் பலனும்

வசதியாற்றவா காதமரங்கள் கொண்டுபதி அமைத்தால்
நிசமாயவ் வில்லெந்நாளும் நிகழுங்கலக்கம் வளர்ந்திடுமே
வசமாய்வீட் டின்நாற்புறமும் வரும்தாழ்வாரம் சரியானால்
குசலம்மலிந் தேதனம்பெருகிக் குலமுந்தழைத் தேவாழ்வாரே. (1077)

வீடுகட்டுவதற்கு ஆகாத மரங்கள் வைத்து வீடுகட்டினால் அவ்விடத்தில் எந்த நாளும் கலக்கமே தோன்றும், வீட்டின் நான்கு புறமும் சமஅளவாயுள்ள தாழ்வாரங்கள் இருந்திடில் உறவினர் சூழ செல்வவளத்துடன் குலவிருத்தியுடன் வாழ்வரே.

சாத்தியகதவு தானே திறந்துகொள்ளும் பலனும், திறந்த கதவுதானே மூடிக் கொள்ளும் பலனும் வாசற்படி அளவு கூடிக் குறைய இருக்கும் பலனும்

சாத்திய கதவுதானா கத்திறந்தால் தாவும் பைத்தியமே
சாத்திக் கொண்டால் தானாகத்தழைத் தகுலமும் நாசமுறும்
பூத்தவாசல் அளவிற்கு போதாது இருக்கில் அயர்வாகும்
ஆத்தம் மிகுமேல் சோரருடன் அரசர்பயமும் வந்துறுமே. (1078)

அடைத்த கதவுதானாகத் திறந்து கொண்டால் பைத்தியம் பிடிக்கும், திறந்த கதவு தானே மூடிக் கொண்டால் தழைத்து வளர்ந்த குலமானது நாசமடையும், மனைக்குக் கூறப்பட்ட அளவிற்குக் குறைந்து போதாத வாசல் இருந்தால் சோர்வு உண்டாகும், அளவு பெரியதாக இருந்தால் அரசபயம் உண்டாகும்.

வீட்டிற்கு வாசல் விடுவதின் பலன்

வீட்டின் திருவாசல் மேற்கில் சுகமுறுமே
நாட்டற் கிழக்கில் நவதான்யம் - ஈட்டும்
வடக்கு முகமானால் வாழ்வாகுந் தெற்கில்
திடமுடனே சேரும் ஜெயம். (1079)

வீட்டின் முகப்பு வாசலானது மேற்கிலிருந்தால் சுகமும், கிழக்கிலிருந்தால் நவதான்ய விருத்தியும், வடக்கில் இருந்தால் வாழ்வும், தெற்கிலிருந்தால் வெற்றியுண்டாவதும் இப்படிப் பலன்கள் உண்டாகும் என்றறிக.

இரட்டித்த வாசற்படிகளில் வசிப்பவர்களின் பலனும் ஒருவருக்கு எதிர்எதிராகக் காலிமனை இருப்பின் முதன்முதல் காட்டவேண்டிய இடம் இன்னதென்பதும்

அறைமனை வாசற்கா லும்ஆலய மிரட்டைக் கூடு
முறைமனை வசிப்பார்க் கென்றும் உறுபொருள் நாசமாகும்
குறையற மேல்கீழ் காலிமனை உண்டேல்கோ வில்கட்டில்
முறையுடன் மேல்பால் கட்டி முடிப்பதே நன்மையாமே. (1080)

வீட்டின் வாசற்காலானது இரண்டாக இருந்தால் அம்மனையில் வாழ்பவரின் கைப்பொருட்கள் நாசமடையும், கிழக்கு மற்றும் மேற்கில் காலிமனை இருந்தால் முதலில் மேற்கிலே மனையைக் கட்டிக் கொள்ளவும்.

இதுவுமது

தெக்கணம் வடக்கு காலிமனை களில்சேர்பு கட்டில்
முக்கியம் வடக்குவீடு முடித்துபின் தெற்கு கட்டே
சொர்க்கம் வீட்டெஜ மானுக்குக் சுகமிகும்வாழ் வுதோன்றுஞ்
சிக்கல் ஒன்றணுகா தென்று செப்பினார்மய னார்தாமே. (1081)

தெற்கு, வடக்கில் காலிமனை கிடந்தால் முதலில் முக்கியமாக வடக்கில் உள்ள மனையில் வீட்டைக் கட்டிக் கொள்ளவும், பின்பு தெற்கில் மனை எடுக்கலாகும், இதன் பலன் மனைக்கதிபனுக்கு சுகவாழ்வும், சொர்க்க யோகமும் உண்டாகும், துன்பம் ஏதும் தோன்றாது என்று மயன் கூறினார்.

வேறு

வாசற் கால்களிரட் டைபடில்வரு மேகவலை இருப்பவர்க்கு
மோசம் வருமே வரும்படியில் முழுதுங்கெடுமே தனமுழுதும்
தோஷப்படும் காண்வீடு தொலையும் க்ஷேமம் முற்றுமென
நேசமுடனே மனுக்களுக்கு நிகழ்த்திப் போந்தார் மயனாரே. (1082)

வாசற்கால்கள் இரட்டைப்பட இருக்குமானால் அம்மனையில் வசிப்பவருக்குக் கவலை உண்டாகும் வருமானம் கெடும் அத்துடன் செல்வமும் அழிந்துபோகும், தோஷம் உண்டாகும் அவ்வீட்டில் சவுக்கியம் அதிகம் ஏற்படும் என மனிதகுலம் வாழ மயன் உரைசெய்தனரே.

அரசுவசிக் குமரண்மனை யும்அமலர் வசிக்கும் சத்திரமும்
முரசுமுழங் குந்திருக் கோவில் முருகுவாயல் யிணைநலமே
பிரசமொழி யாய்மனை அவர்க்குப் பிசகேமீறி வசிப்பாரேல்
பொருளேநா சப்படுமென் றுபுகன்றார் நிசங்காண் மயனாரே. (1083)

மன்னர்கள் வாழக்கூடிய அரண்மனையும், துறவிகளின் ஆசிரமமும், ஆலயமும், முருகன் திருக்கோவில் இவற்றில் இரட்டையாக வாயில் இருத்தல் நலமாகும், ஆனால் மற்றையோரின் வீடுகளில் இரட்டைப்பட வாசல் இருந்தால், பொருள் நாசமும், துன்பமும் வந்து சேருமென்று மயன் உரைத்தவாறே.

மனைகள் மேல்கீழ் இருந்தாலும் வடக்குத்தெற் மிருந்தாலும்
மனையை மேல்பால்கட் டிவிட்டுக்கீழ் பால்சமைக்க மனைபிறகே
மனையை வடக்கில் கட்டிவிட்டு தெற்கிலமைக்க மனை பின்னே
மனையை முரணிக்கட் டிவிடில்வடக் கும்மேற்கும் முடியாவே. (1084)

காலிமனைகள், கிழக்கு, மேற்கில் இருந்தால் முதலில் மேற்கில் வீடுகட்டிடவும் பின்பு கிழக்கில் கட்டவும் இதேபோல வடக்கு, தெற்கில் காலிமனை இருந்தால் முதலில் வடக்கிலும் பின்பு தெற்கிலும் வீடுகட்டவும், இவை மாறினால், வடக்கு, தெற்கு மனைகளால் துன்பம் உண்டாகும் என்றவாறு.

தூண்கள் ஒற்றைப்படையாய் இருக்கும் வீட்டின் பலன்

வியநிலைத்தூண் கள்நிற்கும் வீட்டினில் வசிப்போர் என்றும்
துயறுற வாழமிக்கத் துன்பமே அடைவர் காந்தன்
உயவுடன் பிணியால் நொந்தே உலகம் வருந்துவானே
நயம்வரும் இருமைத்தூண் சேர்நகரினில் வாழ்வார்க்கு அன்றே. (1085)

ஒற்றைப்படையாகத் துண்கள் வைத்த வீட்டினில் வாழ்பவருக்குத் துயரமும், துன்பமும் என்றும் இருக்கும், மனைக்குரியவனுக்கு நோய் உண்டாகி உடல் வருத்தமடையும், இரட்டைப்படத் தூண்கள் உள்ள வீட்டில் வசிப்பவருக்கு நலம் உண்டாகும்.

இன்ப மாகிய இல்லறந் தன்னிலே
கம்பம் ஒற்றைக் கதவுகள் ரெட்டையால்
அம்பு பட்டமான் போலே ஆகிபின்
துன்பம் ஆகிய வம்பு தொடருமே. (1086)

குடியிருக்கும் மனையிலே தூண்கள் ஒற்றைப் படையாகவும், கதவுகள் இரட்டைப்படையாகவும் இருந்தால் அம்பில் அடிபட்டுத் துடிக்கும் மான்போல வம்பும், வழக்கும் தொடர்ந்து உண்டாகிக் கேடு செய்யும்.

திண்ணையில் மூன்று தூண் இருப்பதின்பலன்

திண்ணையில் மூன்று தூண் செய்துவைத்தல் துன்புற்றுப்
பண்டம் தொலைந்து பாழம்மனை - திண்டூண்
அடியில்கல் சில்விடுதல் அல்லலை உண்டாக்கும்
மிடியும் இடைஞ்சலாம் எண். (1087)

தூண்களின் கீழே கல்சில் இவைகள் இருப்பதின் பலன்

கல்லிட் டுயர்த்திக் கனதூண் கடாவுதல்
சில்லிட் டுயர்த்தச் சிறுமையை - நல்குமே
கல்லிட் டுயர்த்தக் கனமில் மனையதும்
இல்வாழ் பவர்க்கே இடர். (1088)

கல்தூண் ஊன்றும்போது அக்கல்தூணானது சில் விழுந்து ஒச்சப்பட்டுப் போனால் ஊன்றக் கூடாது அதனால் வாழ்பவர் குடும்பம் கேடுறும்.

வெளித்தூண் திரிமேவும் வீட்டில் முதலில்
நளிசெல்வம் நண்ணிப் பெருகும் - தெளிவாகப்
பிந்திக் குறைவாகி பேர்கெட்டுத் தேய்வாகி
நொந்து படுமென்ப நூல். (1089)

வெளித்திண்ணையில் மூன்று தூண்கள் நிறுத்திய மனையில் ஆரம்பத்தில் பல செல்வங்களும் பெருகும், ஆனால் காலப்போக்கில் வருமானம் குறைந்து, செல்வம் அழிந்து மனம் நொந்து வாடும்படி ஏற்பட்டு விடும்.

கபாட சாஸ்திரம்

கரியவன் தன்னைப் போற்றிக் கபாடத்து நாடியாலே
வருகிற பலங்கள் சல்லியம் மனையிலா பசூன்யம்
பெருமனை வாழ்வு தாழ்வு புத்திரன் பிறவிநஷ்டம்
சரிவர அறியவேண்டிச் சரபங்கர் நூல் செய்தாரே. (1090)

கரிய திருமாலின் திருவடிகளை வணங்கி கபாட நாடியெனும் இந்த சாஸ்திரத்தைக் கொண்டு மனையினால் வரும் பலன்கள்,

சல்லியம், லாபங்கள், சூனியம், ஏவல் போன்ற துர்சக்திகள், மனைஆயுள், விருத்தி, நஷ்டம், புத்திரவிருத்தி, புத்திரநாசம், முதலிய பலன்களைக் குறித்து தெளிவுபெற உணர்த்திட வேண்டி "சரபங்கர்" என்னும் முனிபுங்கவர் நூல் தனை இயற்றி அருளினார். (கபாடம்=கதவு)

வளர்ந்திடுங் கிரகமுன் றில்வாழ்ந்திடுங் கபாடம் தன்னை
அளந்தவர் சாணினாலே அதனிடங் குழியை மாறித்
தளர்ந்திடுங் குழியை நாலீரா றதிற்றாக் கிஈய
வளமிகக் கழித்த சேடம் வலியலக்கினம் அதாமே. (1091)

மனையில் நிறுத்தும் கதவினை அளந்து அதன்நீள அகலத்தைப் பெருக்கி அதனை மனைக்குரியவனின் கையளவில் சாண் எத்தனையென்று கணக்கிட்டு அதனைக் குழியாக மாற்றி அக்குழியை நான்கால் பெருக்கி 12ஆல் வகுத்த மீதம் எத்தனையோ அதனை மேஷம் முதலாக எண்ணிக்கண்டதே லக்கினமாகும்.

ஆகுமது ராகுவது போல உருவாகி
ஏகுமுக முதல்மேஷ மிடுபிடரி ரிஷபம்
ஆகுமது கோடியடை யாழ்கட கமீன
மேகமாசனஞ் சிங்கம் எய்திவிடுந் தானே. (1092)

மேஷம் முதலாக 12 ராசிகளும் குறிக்கும் இடங்கள் பற்றி அறிவாம், மேஷம் - முகம், ரிஷபம் - பிடரி, மிதுனம் - முதுகு, கடகம் - இடுப்பு, சிம்மம் - ஆசனம், இவ்வாறான இடங்களைக் குறிக்கும்.

வேகமெனுங் கூழையது வெள்ளிகன்னி
விருச்சிகமே மணிதுலாம் வயிறதாகும்
நாகநடுமார் தனுசுமகரம் கண்டம்
நகுமீன நடுவதடு கும்பமாகும்
ராகுநடு மீனநல்ல வகையீராறு
ராசிவகை தமையோர்ந்து நானாபேத
போகமுறப் பெரியோர்கள் புகன்றவாறு
பொருத்தமுற லக்கினத்தை நாடிக்கொள்ளே. (1093)

கன்னி - கூந்தல், துலாம் - வயிறு, விருச்சிகம் - மர்மஉறுப்பு, தனுசு - நடுமார்பு, மகரம் - கண்டம், கும்பம் - உதடுகள், மீனம் - கண்கள். இவ்வாறாக பன்னிரண்டு இராசிகளின் நிலை உணர்ந்து லக்கினத்தை அறிந்து பலன் அறிவதாகும், இதனை ஒரு படமெடுத்த பாம்பின் உருவமாகக் கொண்டு தலை முதல் காண்பதுவாகும்.

முகமது லக்கினமா கில்முக்கிய மதியம் வெள்ளி
வகமென வாழ்வுமெத்த மந்தன் சூரிய னேகூடி
அகமதில் சூன்யசங்கை ஆந்தையே சாவு சொல்லும்
பிழைமனை பாழேயா கும்பீடறு மனையென் பாயே. (1094)

ஆரூட சோதிடம் போன்று இம்முறையும் உள்ளது மனைக்கு வைத்த வாசற் காலில் நல்ல முகூர்த்தத்தில் கதவு தைக்கும்போது இருந்த கிரகசாரத்தை எடுத்துக்கொண்டு கதவு நீள அகலத்தை மனைக்குரியவனின் கையின் சாண் அளவினால் அளந்து அகல நீளத்தைப் பெருக்கி வந்த தொகை ஆயமாகும் (குழி) அதனை நான்கால் பெருக்கி 12ஆல் வகுத்த மீதியை மேடம் முதலாக எண்ணிக்கண்ட லக்கினத்தை ஆரூட லக்கினமாகக் கொண்டு அன்றைய கோள்சாரத்தை இணைத்து இராசிக்கட்டம் தயாரித்து அதன்பலன் அறிவதே கபாட சாஸ்திரம் ஆகும். இனி லக்கினமாவது முகமெனும் மேஷமாகி அதில் சந்திரன், சுக்கிரன் நின்றால் வாழ்வு மிகப் பெருகும், சூரியனும் சனியும் கூடிநின்றால் அம்மனையில் சூனியம், பேய்த்தொல்லை, ஆந்தை அலறுதல், மரணம், மனைபாழாகுதல் வளர்ச்சி குன்றுதல் முதலான தீய பலன்களே உண்டாகும்.

பிடரியில் ரிஷபம் பீடை புந்தியுஞ்சனி அருக்கன்
திடத்தினில் நோக்க சூன்ய சல்லியஞ் சேருமந்தன்
படைகொலை விழுந்த இல்லம்பாழ் மனையது தான்வெள்ளி
அடருமத் திங்கள் நோக்கில் அரைவகைப்பலன் என்பாயே. (1095)

பிடரியெனும் ரிஷபம் லக்கினமாகிடில் பீடையே ஏற்படும், புதனும், சனியும், சூரியன் சேர்ந்து லக்கினத்தில் நின்றாலும், சனி லக்கினத்தைப் பார்த்தாலும் அம்மனையில் சல்லியம், சூனியம் உள்ளது, மேலும் அம்மனை கொலை விழுந்த இடமாகும், அதனால் மனை பாழாகும், லக்கினத்தைச் சுக்கிரன், சந்திரன் பார்த்தால் மேற்படிப் பலனானது பாதியாகும் என்றவாறு.

மிதுனமேமுது கில்நிற்க மேன்மையாஞ் சனியே நோக்கில்
பதியதில் சங்கை நாட்டம் பாங்கியாமே லேநோக்கஞ்
சதிவரும் விந்து நஷ்டம் தாழ்வில்லி பல்லிகூவும்
மதியுடன் சுபர்கள் நோக்கில் வகையறப்பல மேயாமே. (1096)

மிதுனமாகிய முதுகில் லக்கினம் வந்தால் மேன்மையே உண்டாகும், லக்கினத்தைச் சனி பார்த்தால் அம்மனையில் பேய்த்

தொல்லை உள்ளது, பெண்களின் மேல் மோகங்கொண்டு திரிந்து தலைவனானவன் விந்துவை இழப்பன் அல்லது மோகினியால் துன்புறுவான், பல்லியானது அம்மனையில் மாறாகக் கூவும், லக்கினத்தை, சந்திரன் மற்றும் சுபக்கோள்கள் பார்த்திடில் மேற் கூறியவை நீங்கி நற்பலன் உண்டாகும்.

கடகமே இடுப்பில் நிற்ககரி யவனருக் கன்சேரப்
படைமனை வெகுசாய் நட்டம் பாழடைந்திடு மேபின்னால்
இடம்வலம் சங்கை பில்லியினி சுபக்கிரகம் நோக்கில்
நடைவர இதனால் கொஞ்சம் நலமென்ன வறியலாமே. (1097)

கடகமெனும் இடுப்பு லக்கினமாகி அங்கே சூரியன், சனி கூடிநிற்கில் மனையினால் நஷ்டம் ஏற்படும் பிற்காலம் மனை பாழாகிப்போகும், மனையின் இடம், வலமாக பேய்கள் குடியேறும், லக்கினத்தைச் சுபக்கிரகங்கள் பார்த்தால் முன்கூறிய தீய பலன்கள் குறையும்.

வெள்ளியே சிங்கங் கூட விதமில்லை மனைக்குவாழ்வு
தெள்ளிய அருக்கன் நோக்கில் சிவப்புடன்மண் டையோடு
கொள்ளையாம் கன்னிமாரைக் குறிக்கிடும் ஆந்தை கூவும்
பல்லியே படபடக்கும் பழிகொண் டமனை என்பாயே. (1098)

லக்கினம் சிம்மமாகி அங்கே சுக்கிரன் நின்றால் அம்மனையினால் நல்வாழ்வு கிட்டும் லக்கினத்தைச் சூரியன் பார்த்தால் சிவப்பான பொருளும், மண்டைஓடும் சல்லியமாகும், திருடர் வந்து கொள்ளை கொண்டு போவர், பெண்கள் கேடுறுவர், ஆந்தை அம்மனையில் கூவும், பல்லியானது படபடக்கும், அம்மனையில் கொலை விழுந்திருக்கும்.

கன்னியில் புதனேவெள் ளிகனகுரு சோமன் வாழ்வு
பன்னிய சனியே சேயும் பாவிகள் கூடுமாகில்
கன்னியர் நட்டந் துர்க்கைகாத் திடுங்காகஞ் சொல்லும்
குன்றிடும் வாழ்வு தாழுங் குழவிகள்நா சந்தானே. (1099)

கன்னி லக்கினமாகி அதில் புதன், வியாழன், சுக்கிரன், சந்திரன் இவர்கள் கூடியோ, தனியாகவோ நின்றால் நல்வாழ்வுண்டாகும் சனி, செவ்வாய் முதலான பாவிகள் நின்றால் பெண்கள் நாசமடைவர், அம்மனையில் துர்க்கை வாசம் செய்வாள், காகம் கரையும், மேலும் வாழ்வு குன்றும், புத்திர நாசமும் ஏற்படும், தாழ்வே தோன்றும்.

மாலவன் வெள்ளி ராகுமணி துலாந்தொட்டு நிற்க
சாவன மனைக்கே அஸ்வம்சாம் பிராச்சியமும் வாழ்வும்
காலவன் அருக்கன் சேரகன்னி யாஞ்சங்கை யாலே
ஏலவே சல்லிய பூமியெடுபட் டமனை யென்பாயே. (1100)

புதன், சுக்கிரன், ராகு, இவர்கள் துலாம் லக்கினமாகி அதில் நின்றால், அம்மனையில் குதிரைகள் வாகனங்களுடன் அரச போக வாழ்வு வாழ்வர், சனி, சூரியன் நின்றால் பெண்களைப் பேய் பிடிக்கும், அம்மனையில் சல்லியம் இருந்து எடுக்கப் பட்டுள்ளது என்றறிக.

சந்திரன்தே ளோடொக்க தண்டிகைவாழ் வாதிக்கம்
மந்தனேயருக் கன்சோமன் மனையவளில் லைகண்டாய்
சந்ததியேற் கும்பல்லி சாவென்று கூவிநிற்கும்
மந்தையா மனையேகண் டாய்மண்டையோ டிருக்குதென்பாய். (1101)

விருச்சிகம் லக்கினமாகி அதில் சந்திரன் நிற்கில் பல்லக்கு, பரிவாரங்களுடன் வாழ்வுண்டாகும் சூரியன், சனி, புதன் நின்றால், களத்திரம் உண்டாகாது, புத்திரநாசம் உண்டாகும், பல்லியும் சாவென்று கூறி நிற்கும், அம்மனையில் சல்லியமாக மண்டை ஓடு இருக்கின்றது.

வில்லுடன் கேதுபுந்தி வெகுஞான பாக்கிய முண்டு
வல்லவன் மந்தன் சேரில்வாழ் வில்லைமைந் தர்நஷ்டம்
கல்லுடன் மண்டை ஓடுகருது சாமுண்டி துர்க்கை
சல்லிய கூகைசொல் லும்சாவுள் ளமனை என்பாயே. (1102)

தனுசு லக்கினம் உதயமாக அதில் புதன், கேது நின்றால், ஞானமும், பாக்கியமும் மிக வளரும், தனுசில் சனி நின்றால் வாழ்வு கெடும், புத்திர நாசமுண்டாகும், சல்லியமாகக், கருங்கல், மண்டை ஓடு, உள்ளது. மனையில், சாமுண்டி, துர்க்கை ஒட்டம் உள்ளது, கூகை அலறும் அம்மனையில் மரணம் சம்பவிக்கும்.

மகரத்தில் ராகுசெவ்வாய் மைந்தரைக் கொல்லும் இல்லம்
கொலையொத்த சங்கை நாட்டங் கூகையே சாவுசொல்லும்
நிலைபெற்ற சோமன் கேது நிற்கவேநீ டும்வாழ்வு
மலையொத்த அரசன் போலே வாழ்ந்திடுமனை யுந்தானே. (1103)

மகரம் லக்கினமாகி அதில் செவ்வாய், ராகு நின்றால் புத்திர நாசம் உண்டாகும், மனையில் கொலையுண்ட ஆவிகள் நிற்கும், கூகை மரணச் செய்தி கூறிக் கூவி அலறும், புதனும், கேது நிற்க நீண்ட வாழ்வும், அரசபோகமும் உண்டாகும் மனையின் ஆயுளும் அதிகமாகும்.

குடமதைக் குருவுநோக்க கூடியே வெள்ளிவாழ்க
தடையிலாப் போகமுண்டாஞ் சனியிராகு கூடிநோக்கில்
படையற்ற களங்கள்போ லபாழ்மனை ஆகுமென்பார்
தடையற்ற செல்வமுண்டு சாவுள்ள பல்லிசொல்லும். (1104)

கும்பம் லக்கினமாகி அதைக் குருபகவான் பார்த்தால், சுக்கிரனும் பார்த்தால் அல்லது லக்கினத்தில் நின்றால், குறைவில்லாத போக வாழ்வு உண்டாகும், சனியும், இராகுவும் கூடி லக்கினத்தைப் பார்த்தால் ஆயுதங்கள் ஏதுமின்றி போதிய படைபலமின்றி யுத்தகளம் சென்றவன் போலத்துன்பமான மனையதுவாகும், செல்வமானது குறைவின்றி இருந்தாலும் பல்லியானது மரண பலனையே கூறும்.

ஞானவன் மதியும் வெள்ளி நவின்றவன் மீனம்நிற்க
மானமார் குலங்களோ டேமகிழ்ந்து மேதழைத்து வாழ்வர்
தானவன் அருக்கன் சேர தாழ்வென்று பல்லிசொல்லி
வானர சங்கை நாட்ட மாதரையழிக் கும்பாரே. (1105)

சந்திரன், சுக்கிரன், கேது இவர்கள் மீனம் லக்கினமாகி அதில் நின்றிடில், சுற்றத்தார் சூடி மகிழ்வுடன் தழைத்து வாழ்வர். அவர்களுடன் சூரியன் சேர்ந்தால் தாழ்வுண்டாகும் என்று பல்லியானது சப்திக்கும், மேலும் ஆஞ்சனேயர் மாந்திரீகத்தால் பெண்கள் கேடடைவர்.

பூண்டது மனையிற் சல்லியம் பூரணம் அறுபதாகில்
ஆண்டது கழிந்துபின் புஅறிவு சாஸ்திரத்தில் தோன்று
மூண்டது ஏவல்சங் கைமோசமாங் கொலைகள் மற்றும்
ஆண்டது முதலாய் நாளும் அறியலாம் அறிந்துபாரே. (1106)

கூறப்பட்ட சல்லியத்தினால் உண்டாகும் பலன்களை மனை அமைத்த ஆண்டு தொடங்கி அறுபது ஆண்டுகளுக்குள்ளாக ஏவல், பேய்த்தொல்லை, கொலைகள், மற்றும் தீய பலன்கள் யாவும் முதலாம் ஆண்டு தொடங்கி நடந்து தீரும் இதை அறிய விரும்பினால் காத்திருந்து தெரிந்துகொள்க ஏனெனில் இந்தச் சாத்திரம் உண்மையே.

அரிசிவன் அயன்மால் தேவி அணுகியே வாசலாகி
பரிமுதல் நவக்கோள் சட்டம் பலகையி லாணியாகி
சரிபடும் வாதபித்த சிலேட்டுமம் நாடி சட்டம்
விரிபடு கதவுநெம்பே எலும்பு மாமிசமும் ஆமே. (1107)

நிலை வாசலில் சிவன், பிரம்மா விஷ்ணு, மகாலெட்சுமி இவர்கள் காத்து நிற்பர், சூரியன் முதலாக ஒன்பது கிரகங்களும் கதவின்

சட்டங்களாகும், மற்றும் பலகையின் ஆணிகளாயும் நிற்பர், வாத, பித்த, சிலேட்டும நோய் விரவநாடியை சட்டங்களைக் கொண்டு அறியக்கூடும், கதவின் பலகை இடுக்குகளே எலும்பு, மாமிசம் போன்றவை நிலையறியும் வழியாகும்.

பார்தனில்மனை செய்வோர்க்குப் பரிவுடன் மனையின்நாடி
பேர்பெறவுரைக் கற்றானும் பெலமுள கதவினோசை
சீர்பெறுவகை யைக்கண்டு திறம்படு மொழியினாளே
நேர்பெறு பலங்களெல்லாம் நேர்மையாய் உரைக்கலுற்றேன். (1108)

இவ்வுலகிலே மனை அமைப்பவர்களுக்கு மனை நாடி சாஸ்திரமத்தை உரைக்கிறேன் கதவின் ஓசையைக் கொண்டு மனையின் பலன் எவ்வாறென்று உரைக்கிறேன் கேளுங்கள்.

மந்தமாம் வாதபித்தம் மருவியே நடக்கும் போது
அந்தமாய் நடுச்சட் டத்திலாணி ஒன்று ஊனமாகும்
விந்தையாய்க் கதவு சாத்தில் விரிமரம்போ லேசிறுந்
தொந்தமாய் இருக்கும் நோய்கள் தொலையா துவென்றுங்கூறே. (1109)

மனைக்குரியவனின் உடலில் வாத, பித்த நாடிகள் ஒன்றோடு ஒன்று பின்னியவாறு நடக்கும் போது கதவின் நடுச்சட்டத்தில் போட்டிருந்த ஆணிகளில் ஒன்று ஊனமாகிவிடும், கதவானது சாத்தும் மரமானது முறிந்து விழுவது போன்ற சீறும் ஒலி கேட்கும், அதைக்கொண்டு உடலில் பின்னிக்கொண்டு தொந்தித்த நோய்கள் தீராது என்று அறிக.

தள்ளிய கதவுதானும் சடக்கென வலியான் போலே
துள்ளியே கதறுமாகில் துக்கமும் மிகவும் உண்டாம்
கள்ளிதான் சோரம் போவாள் கடுக்கெனமக் கள்சாவாம்
தெள்ளிய கதவினாலே தெளிந்தனர் வேதத் தோரே. (1110)

கதவினைத் திறக்கும் போது சடக்கென்று பருந்து கத்துவதுபோல ஓசை எழுந்தால் மிகவும் துக்கம் உண்டாகும், மனையாள் சோரம் போவாள், புத்திர நாசமும் உண்டாகும் இவ்வாறு கதவினின்றும் எழும்பும் சத்தத்தின் தன்மையைக் கொண்டு பலன் அறியும்படி வேதமுணர்ந்த ஆன்றோர் கூறினர்.

கதவினில் ஓசைதானும் கௌதாரி போத்துப் போலே
விதமுடன் பேசுமாகில் வினையினால் மெலிந்து வாடும்

சதமுடன் பொருளும் போகும் தரணியில்வறு மையாகும்
மதமுள்ள கொங்கை மாதே மனையில் அணுகிடாதே. (1111)

கதவு திறக்கும்போது எழும் ஓசையானது, கௌதாரி, செம்போத்து இவைகள் கத்தும் ஓசைபோல் கேட்டால், வினையினால் அம்மனைக்கு மெலிவு தோன்றும் (கஷ்டம்) பொருட்கள் நஷ்டமாகும், வறுமையும் உண்டாகும், மகாலெட்சுமி அம்மனையுள் நுழையாள்.

முருக்கித் திருக்கிக் கொக்கதுபோல் இடுங்கத வுகத்தவொரு
பெருத்த செல்வங் குறையுமங்கே பிசாசுக்கூட் டம்மேலாடும்
வருத்தப் படுவார்நோய் மிகுத்துமனை யாள்சொன்ன படிகேளாள்
விருப்பமுடனே வாய்நாறும் விதித்தார் லோகம் அறிந்திடவே. (1112)

கதவானது திறக்கும்போது முறுக்கித் திருக்கிக் கொண்டு கொக்கு கத்துவது போல் சப்தம் செய்தால் பெரும் செல்வமும் குறைந்து போகும், மேலும் அம்மனையில் பிசாசுக்கூட்டம் கூடிநிற்கும், நோய்வந்து வருத்தப்படுவார், மனைவியும் சொன்னபடி கேட்கமாட்டாள், விரும்பிப் பேசுவதும் தீதாகும் என உலகறிய வேண்டி பெரியோர் உரைத்தனர்.

ஓரிபோல் ஊளையிட்டும் உயர்ந்துமே கத்தும் ஆகில்
நாரியர்க் கிடுக்கமாகும் நன்மையும் தின்மை ஆகும்
காரியஞ் சேதமாகும் கடுக்கென மக்காள் சாகும்
வீரியங் குறையும் என்று விளம்பினர் வேதத்தோரே. (1113)

கதவானது திறக்கும் போது நரிபோல ஊளைவிட்டால் பெண்களுக்குக் கேடு உண்டாகும், நன்மையானயாவும் தீமையாகமுடியும், காரியம் கெடும், புத்திரர் மரணமடைவர், வீரியம் குறைந்து போகும் என வேதத்தோர் கூறினரே.

கழுதையைப் போலேவா சல்கதவுதான் கத்துமாகில்
பழுதுவந்தடைந் துமிக்கப் பகையினால் மெலிந்துவாடும்
அழுவதுகுர லுமாகுமாண்டி போலிறக்கப் பண்ணும்
முழுவதுமது போலாகும் மொழிந்தனர் வேதநூலார். (1114)

கதவு திறக்கும் போது கழுதை கத்துவது போல ஒலி எழுந்தால், துன்பம் வந்து சேரும் பகையினால் வாழ்வு குன்றும், எப்போதும் அழுதபடி வாழ நேரிடும், பிச்சைக் காரன்போல் இரந்து வாழ நேரிடும், பெருந்துன்பமான பலனே உண்டாகும் என வேதத்தோர் கூறினர்.

வண்டது போலே வாசல் கதவுதான் கத்துமாகில்
நன்றது ஆகும் அப்போ நலமுடன்மக் கட்பேறாம்
நின்றது தங்கி ஆமை நேர்மைபோற் பேசுமாகில்
கொண்டவன் சாவன் என்று கூறினர் வேதத்தோரே. (1115)

வாசற்கதவானது வண்டு ரீங்காரம் செய்வதுபோல ஒலி செய்தால், நற்பலன் உண்டாகும், புத்திர பாக்கியம் ஏற்படும், கதவானது ஆமை போல கத்தினால் மனைக்கதிபதி மரணமடைவான் என வேத நூலறிந்தோர் கூறியவாறே.

ஓங்கிய கதவுதானும் ஓந்திபோற் கீறி மெத்த
தாங்கியே கத்துமாகில் சத்துரு பொருந்தும் பின்னும்
வேங்கியே மெலிந்து வாடி வெகுமக்கள் சாவதாகும்
பாங்கிகேள் மயனார் சொன்ன பழிபடாது என்றுகூறே. (1116)

ஓந்தியானது கத்துவதுபோல கதவானது ஒலி எழுப்பினால் பகைவர் கூடி துன்பம் பல ஏற்படுத்தி குடும்பத்தை குன்றச்செய்வர், பின்னும் புத்திரநாசம் உண்டாகும் மயனானவர் கூறிய இந்த விஷயம் நிச்சயமாய் மாறாது என்று கூறுவாயாக.

மூடிய கதவுதானும் மூழி போல் முழங்குமாகிற்
கூடிய பொன்னும் முத்தும் துலங்கியே இலங்கிவாழும்
கூடிய வேசி வேட்ட குணமுள்ள கள்வனாவன்
நீடிய மயனார் சொன்ன நிச்சயம் அறிந்துகூறே. (1117)

கதவானது மூடும்போது குளத்துத் தண்ணீர் சப்திப்பதுபோல் சப்தித்தால் அணியும், ஆபரணம், பொன், முத்து, இவை பொருந்த நல்வாழ்வு உண்டாகும், மனையின் தலைவன் தாசிகள்மேல் இச்சைகொண்டு திரிவான் (வேசிகள்ளனாவான்) என மயன் கூறினார்.

கங்குபோல் தாளம் போலக் கதவுதான் மூடுமாகில்
பொங்கமா துடனே தானும் புத்திரர் மிகவுமுண்டாம்
துங்கமார் மாது சேர்வள் சோபனம் மிகவுண்டாகும்
தங்கமே பொழியும் என்று சாற்றினர்மய னார்தானே. (1118)

கதவினை மூடும்போது சங்கு ஒலிப்பதுபோலும், தாளவாத்தியம் ஒலிப்பது போலும், ஓசை கிளம்பினால், மனைவி நலமடைவாள், புத்திர விருத்தியுண்டாகும், அம்மனையில் லட்சுமிதேவி வாசம் செய்வாள், நிரம்ப மகிழ்ச்சியுண்டாகும், பொன்னும் பொருளும் பெருகும் என மயன் கூறினார்.

சங்கது போலே வாசல் கதவுதான் சாத்துமாகில்
செங்கண் மால்மாது சேர்வள் செல்வமும் மிகஉண்டாகும்
தங்கமாய்த் தாழ்ந்து தாரை போன்றதாய்ப் பேசுமாகில்
தங்கமே அழியும் என்று சாற்றினர் வேதத்தோரே. (1119)

கதவு சாத்தும்போது சங்கின் ஒலிபோல் ஒலி எழுந்தால், லக்ஷ்மிகடாட்சம் உண்டாகும் அதனால் செல்வம் பெருகும், தாரை அடிப்பது போன்ற ஒலி எழும்பினால், பொன் பொருள் சேதமாகும், என்று வேதநூல் வல்லோர் உரைத்தனர்.

கதறியே சிக்கிமுக்கிக் கரும்பாலை செக்குப் போலே
பதறியே ஓசைகண் டால்பதியை விட்டேகப் பண்ணும்
கதறியே மைந்தன் நோவாம் நாதனும்சா வான்பின்னும்
சிதறியே அழியும் என்று செப்பினர் வேதத்தோரே. (1120)

கதவானது மூடும்போது கரும்பாலைச் செக்குப்போல முக்கிக்கொண்டு ஒலி எழுப்பினால் மனைக்குரியவன் வீட்டைவிட்டே ஓடும்படியாகிவிடும் புத்திரநாசம் உண்டாவதுடன் தலைவனும் மரணம் அடைவான், அம்மனையும் அழியுமென்று சான்றோர் உரைத்தனர்.

பேசியே கதவுதானும் பெண்குரல் செக்குப் போலே
வாசியாய்ப் பேசுமாகில் மனையினிற் தனமுண் டாகும்
கூசியே வாலை போலே கூவிடுமா கிற்றீதாம்
மாசிலா மயனார் சொன்னார் மனையினில் வாழொணாதே. (1121)

கதவானது பெண்குரல் போலும், செக்குப்போலும் சப்தித்தால் செல்வம் பெருகிடும், ஆலை போல் ஒலித்தால் தீங்குண்டாகும் என மயனார் உரைத்தனர், அம்மனையில் வாழக்கூடாது.

தும்பிபோல் கதவுதானுந் துய்யவே கத்துமாகில்
வம்பிடும்பேய் கள்நாட்டம் மனையினில் மிகுதியாகும்
நம்பியேபிணி கள்கூடி நாடியதரு மஞ்சேதம்
வம்புமேயநே கமுண்டுவரிசை யாய்மயனுஞ் சொன்னார். (1122)

கதவானது யானை பிளிறுவது போல சப்தித்தால் அம்மனையில் பேய்கள் கூட்டமாகச் சேர்ந்து வம்புசெய்யும் நோய்கள் உண்டாகும், தருமம் கெடும், வம்பு வழக்குகள் அனேகம் உண்டாகும் என மயனார் கூறிய படியே.

பேரிகை மேளம் போலே பேசினால் கதவினோசை
நாரியர்க் கிடுக்கம் ஆகும் நையவேபிணி கள்கூடிக்
காரியஞ் சேதமாகும் கடுக்கென விதனம் உண்டாம்
ஊரை விட்டகலும் என்ன உரைத்தனர்வே தத்தோரே. (1123)

கதவை மூடும்போது பேரிகைமேளம் முழங்குவதுபோல ஓசை வந்தால் பெண்களுக்குக் கேடு உண்டாகும். பிணிகள் தோன்றித் துன்புறுத்தும், காரியக்கேடு உண்டாகும், கவலை கூடும் ஊரைவிட்டே ஓடும்படியாகிவிடும்.

வக்கது செக்குப் போலே வந்திடக் கதவினோசை
சிக்கென மனையாள் சாவாம் சிறுவனுமில் லையாகும்
மிக்கெனப் பெண்பிசாசு மிகுத்திடும் மனையிற் தானும்
துக்கமே செய்யும் என்று சொல்லினர்வே தத்தோரே. (1124)

எண்ணெய்ச் செக்கின் ஓசைபோல் கதவானது ஒலித்தால் மனையாள் மரணமடைவாள், ஆண்வாரிசு இருக்காது, அம்மனையில் பெண்களை பேய் பிடிக்கும், மனையில் மோகினிப் பேய் குடியேறும், மேலும் துக்கமே ஏற்படும் என்று மயன் கூறியவாறே.

மன்றினிற் கதவுதானும் மகிழ்பூ ரிகையைப் போலே
நன்றில்லை மனையாள் ரெண்டு நாடியபிள் ளையொன்று
அன்றிய பெண்கள் மூன்று அகத்தினில் ஒன்றுசாவும்
என்றிசை புவனம் எல்லாம் இயலுடனறிந் துகூறே. (1125)

கதவினை மூடும்போது பூரிகை எனும் வாத்தியம் ஊதுவது போல ஓசை கிளம்பினால் நற்பலனில்லை, அம்மனைக்குரியவனுக்கு இரண்டு மனைவிகளாகும், ஒரு ஆணும் மூன்று பெண் குழந்தைகளும் பிறக்கும் அதில் ஒரு பெண் குழந்தை இறந்து போகும், உலகின் நிலையும் திசைகளும் அறிந்து ஆன்றோர் கூறியவாறே.

கரும்பாலை போலே வாசல் கதவுதான் கத்துமாகில்
வரும்பால கர்க்குத் துன்பம்வந் திடுமனை யிற்குற்றம்
பெரும்பாடு மிகவும் உண்டாம் பெண்பழிதன் னைவாங்கும்
அரும்பான கொங்கை மாதேயலைச் சலுங்கெடுக் கும்பாரே. (1126)

வாசற் கதவானது கரும்பாலை போல ஓசை எழுப்பினால் குழந்தைகளுக்குத் துன்பம் உண்டாகும். மனையிலும் குற்றம் வரும்,

மிகவும் துன்பமுண்டாகும், பெண்களின் உயிர் போகும், மேலும் வீண் அலைச்சலும் கவலையும் உண்டாகும்.

செக்கது தாரை போலே திகைத்திடுங் கதவினோசை
மிக்கவே பிள்ளை ரெண்டு மிகுத்திடும்பெண் கள்மூன்று
தக்கவே ஒருவன் நோயால் சலத்தினிலிறந் துபோவான்
திக்கென்று இறந்தார் என்று செப்பினார்வே தத்தோரே. (1127)

கதவின் ஓசை, செக்குப்போலும், தாரை ஒலிபோல் கேட்டால் மனைத்தலைவனுக்குப் பிள்ளை இரண்டு, பெண்கள் மூன்றும் பிறக்கும் அதில் ஒரு ஆண் குழந்தை நோயினால் தண்ணீர் கண்டத்தில் இறந்து போவாள் என்று வேதமறிந்தோர் கூறியவாறு.

பாங்குள்ள மனையின் தாது பகர்ந்திடக் கேளுமாதே
தேங்கிய தாதுமூன்று தெளிவாக விஸ்விஸ் என்று
ஓங்கிடப் பெரியதாகி உற்றிடும் செல்வம் என்றும்
நீங்கிடாது ஒருநாளுந் தான்நிலைத் திடும்ஆஸ் திதானே. (1128)

மனையின் கீழ் சல்லியமாகத் தாது ஒன்று உள்ளது. (புதையல்) இது எப்போதென்றால் கதவினைச் சாத்தும்போது விஸ்விஸ் என்று ஒலி எழும்பினால் மேற்கண்டது இருக்கும், செல்வம் பெருகும், சொத்துகள் யாவும் நிலை பெற்று இருக்கும் என்று அறிக.

தானான மனையின் நாடிதப்பிடாத் தாது கேளாய்
வானான கிளியின் ஓசை வண்மையாங் குயிலினோசை
தேனான கௌளி ஓசை தெளிவாக நடக்குமாகில்
பானான பருஞ்சீர் செல்வம் பாக்கியமெய் தும்பாரே. (1129)

கதவின் ஓசையானது, கிளி, குயில், கௌளி இவற்றின் ஓசை போல் ஒலித்தால் பெரும் செல்வமும், பாக்கியங்களும் உண்டாகும்.

பாரினில் கதவை ஆட்டிப் பகர்ந்துறை அறிந்துசொல்லு
நேருநீ கிளிகுன்றல் நேமமாங் குயிலின் பேதம்
சீருநீ சிறுநொடிக்கின் சிறுபறை கமறல் கண்டால்
காருநீ குருவின் தாளைக் கருணையாய்க் குமுறக்காணே. (1130)

கதவினைப் பிடித்து ஆட்டிப் பார்த்து அதன் பலனைத் தெரிந்து கூறுவாயாக, கிளியின் ஓசை, குயிலின் ஓசை, லேசாய் அசைக்கும்

போதில் சிறுபறை ஒலி போலக் கேட்டாலும் நற்பலன் விளையும் இருப்பினும் குருவின் உரை தெரிந்து கூறுவாயாக.

கன்னியரே வாரும்கத வுசிக்குஞ் செக்கோசை
முன்னிய புத்திரர் மத்திபமாம் - முன்வந்த
கன்னியரைத் தோற்கும் கவலை மிகப்படுத்தும்
முன்னமே சொன்னோர் மொழி. (1131)

கதவினை அசைத்துப் பார்க்கும்போது கேட்கும் ஓசையானது செக்கொலி போலானால் புத்திரர் மத்திபமாகும், பெண்களுக்குத் தீங்குண்டாகும், கவலை அதிகரிக்கும் என்றவாறு.

தாதுதான் இடத்தில் ஓடில் தப்பற நோக்குமாகில்
வாதுகள் மிகவும் உண்டு வழக்குகள் தீர்ந்திடாதே
ஏதுகள் யாவுந் தப்பும் எதிர்த்திடுவா ளேபெண்டீர்
சாதுக்கள் ஒருக்கால் இல்லை சாட்சியாய்க்கத விற்பாரே. (1132)

சல்லியமானது இடதுபுறம் மனையில் இருந்தால் வம்பு, வழக்குகள் அதிகரிக்கும், தீராது செய்யும் காரியங்கள் யாவும் தடையாகும், பெண்கள் எதிர்த்துப் பேசுவார்கள், கதவானதும் மென்மையாய் ஒலிக்காமல் அதிர்ந்து ஒலிக்கும் இதைக் கதவைப் பார்த்துக் கண்டு கொள்க.

குமுறிடக் கதறுமாகில் குருத்து ரோகிவீடே ஆகும்
குமுறிட னோடுமாகில் கொலை விழும் இடமுமாகும்
குமுறிட விரிச்சென்று ஓடிக் கூசாமல் அடைக்குமாகில்
குமுறிடக் கூத்தியாளும் குலைத்து மண்தூற் றுவாளே. (1133)

கதவானது குமுறிக் கதறியபடி ஓசை செய்தால் அவ்வீடானது குருத்துரோகியின் வீடாகும் குமுறிய ஓசையுடன் இடது புறக்கதவு ஓடுமானால் அம்மனையில் கொலை விழும், "விரிச்" என்று தானாகவே திறந்தாலோ அல்லது மூடினாலோ தலைவனின் கூத்தியாள் (வைப்பாட்டி) மண்வாரித் தூற்றுவாள்.

மண்டுவிச் சண்டையிட் டுமாயமாய் மேல்விழுந்து
கொண்டுவிட மாட்டேன் கோதுறவே - கண்டனுடன்
போர்தொடுக்கக் கூத்தியரும் புத்திகெட்டு வீட்டெஜமான்
பேர்கடன் பட்டீவான் பேசு. (1134)

மண்தூவித்தூற்றிய கூத்தியாள் பின்பு மேல்விழுந்து கொஞ்சுவதும் உன்னை விடமாட்டேன் என்று சண்டை விடுவதுமாய் இருப்பாள். பாழும் தலைவனானவன் புத்தியும் கெட்டுப்போய் கடன் வாங்கி கூத்தியாளிடம் கொடுத்துத் துன்புறுவான் என்றும் கூறுக.

இந்தவழி வந்தவகை ஈடாமோ பெண்மயிலே
சொந்தமனை யாளன்று யர்பெற்றான் - கந்தனிட
சாபமிருக் குதுபார் சாதகம்போல் பாழாகும்
தாபம் அறிந்தே தவிர். (1135)

மேலும் அவன் சொந்த மனைவியையும் துன்புறுத்துவான், அம்மனைக்குக் கந்தக் கடவுளின் சாபம் இருக்கின்றது, மனை தானும் பாழாகும் இதையுணர்ந்து கதவில் ஓசை வராதபடி கவனித்துக் கொள்ளவும்.

ஊரோன் பகையாகும் ஒக்கலுடன் சுற்றத்தார்
ஆரோயிவர்க் குறுதி ஆவாரே - யேராய்ப்
பருகிடுமே பாக்கியங்கள் ஏறிடுமோ ஊர்நகைக்கத்
தேரிடாள் பெண்டீர் தினம். (1136)

ஊருடன் சுற்றத்தாரும் பகையாவார்கள், அம்மனைக் குரியவர்களுக்கு உதவயாரும் முன்வரார் பாக்கியங்களும் உண்டாகாது, ஊராரின் நகைப்பிற்கும் ஆளாகுவர், பெண்கள் நலமடையார்.

தினந்தினமும் வாய்மிரட்டிக் கடன்பட்டு நொந்தே
இனந்தனமும் வாங்க இசைந்து - தினமும்
மனையாளும் தானும் மகிமை கெடவே
இனஞ்சிரிப்பார் என்றும் இருந்து. (1137)

தினமும், வாய்புலம்பும் படிக்காகும், கடன்படவும் அதனால் வேதனையுறவும் நேரிடும், மனையாளும், தலைவனும், மகிமை கெட்டு ஊரார் கேலிக்கு இடமாகும்.

ஒடியடைக் கிலுயிர்போக் குமொலித்திங் கடைக்கில் தெருப்பாழா
மூடித்திறக் கில்முனைமழுங் குமூடாதடைக் கில்முரண் தப்பும்
பாடிநொடிக் கில்மனையாள் போம்பாங்காய் இவற்றைப் பார்த்திடுக
கூடிக்குறிப் பைப்பார்த்து நன்றாய்க்குலா வியுரைத்தேன் கேள்மானே. (1138)

கதவானது உதறலுடன் ஒடி அடைத்திடில் மரணமும், ஓசையுடன் அடைத்திட்டால், மனை பாழாகும், மூடியகதவு தானேதிறந்திடில் வாழ்வுகெடும், மூடும்முன் கதவுதானே அடைத்துக் கொண்டால் வாழ்வுநிலை தடுமாறிடும், பலவித ஒலியுடன் அடைத்துக் கொண்டால் மனைவிக்கும் மரணமுண்டாகிடும், இவ்வாறு குறிப்பறிந்து உரைக்கும்படியாக இவற்றை உரைத்தேன்.

மனைக்குள்ளே புற்று காணும் மரணமுமில் லைபெண்டீர்
உனக்குள்ளே அடங்காள் நீலி உறுதியாய்த்திங் குண்டாகும்
முனைவாயில் உத்திரக் கட்டைமூர்க் கமாறிடமு முண்டே
அனைக்குநல் வரத்து நேரார் அடங்கலு மோடிப்போமே. (1139)

வீட்டிற்குள் கறையான் புற்றெடுக்கில் மரணம் உண்டாகாது, பெண்கள் ஆடவனுக்கு அடங்கி நடக்க மாட்டார்கள், நீலிபோல் நடந்துகொள்வர், அம்மனையினால் நிச்சயம் தீமையே உண்டாகும், மேல் உள்ள உத்திரக் கட்டையில் வீறல்காணும், நல்ல பலன்களே ஏற்படமாட்டாது, மேலும் செல்வமும் அழிந்துபட்டுப் போகும்.

தலைவாயில் நேரே வீறலுண்டது தாது இல்லை
வலியமாய் வழக்குச் சுத்துவாழ்வுகள் சிந்திப் போமே
துலையவே புத்திர நாசம் துன்பமுமவர்க் குண்டாம்
கலையவே ஊரோர் கூடிக்கலங் கவேயுரைப் பார்மாதே. (1140)

தனவாசலின் மேலே நிலையிலோ, உத்திரத்திலோ வீறல்கண்டால் அம்மனைக்குச் செல்வம் இல்லை, அதிகமான வழக்குகள் உண்டாகும், வாழ்வும் திசைமாறிப் போய்விடும், புத்திர நாசமும் உண்டாகும், அதிக துன்பங்கள் உண்டாகும், ஊரார் கூடி நிந்தனையாகப் பேசும்படியாகிவிடும்.

சுமறியே தாதுசிக்கிற் காரியம் ஒன்றும் இல்லை
குமரியே தாதுவீழில் குழயோட் டும்பெண் ணும்பிள்ளை
அமர்தரும் அடியிற் தோய்ந்தங் கரிவையாற் சாபமுண்டாம்
மமருறு மதனைக் கேளுமதிக் கெதிர்பகரம் பூட்டே. (1141)

கதவானது சாத்தும் போதில் சிக்கிக் கொண்டால் காரியவிருத்தி ஏற்படாது, பெண்களை வீட்டை விட்டு ஓடும்படிச் செய்யும், அப்பெண்களால் அம்மனைக்குச் சாபமும் வந்து சேரும், எனவே கதவு, நிலை உத்திரம் இவற்றிலே குறை நேரிடா வண்ணம் கவனித்துச் சரி செய்திடுக.

பாடிப் பலைப்பிட பதுங்கிய தாது பகர்ந்திடவே
வாடித் திரிவள் மனைகளுக்கே வந்துவாழ் மயில்கள்
கூடிப் பலருடன் கோறணிசொன் டுகுலாவி நிற்பாள்
நாடித் திரிந்தவள் ஆகாத பெண்டீர் நவின்றனரே. 1142)

கதவானது பெருத்த ஓசையுடன் திறந்து மூடினால் அதன் பலனாவது மனையாளானவள் ஊரில் பல ஆடவருடன் உறவாடிக் கற்பிழந்து நிற்பாள் அவள் அம்மனைக்கு ஆகாத நடத்தையுடையவளாவாள் என நூலோர் உரைத்த படியாகும்.

சூடுங் கதவினிற் தாதுகள் பார்க்கவுஞ் சொல்லுகின்றேன்
கூரும் அதனைப் பிடித்தே அலைக்கக் குறியதுதான்
நாடு நகரங்கள் யாவுமறி யநயம் பெறவே
தேடு பவர்க்குநீ சிந்தனை யாகத் தெளியவுமே. (1143)

கதவிலே பலன்களைக் கண்டறிய விரும்பினால் அக்கதவினைக் கையால் பிடித்து முன்னும் பின்னுமாக மூடித்திறந்தால் ஏற்படும் ஒலியினை வைத்து அந்தக் குடும்பத்தின் நிலைமையினை யாவரும் அறிய உரைக்க இயலும் நான்கூறிய கபாடசாஸ்திரத்தினை நீ நன்கு அறிந்து உலகுக்குக் கூறுவாயாக.

வாதமும் பித்தமும் சிலேட்டுமம் மூன்றும்வகை வகையாய்
ஓதவும் கேள் உற்றாரைக் கூட்டி உறுதியுடன்
வேத முறைப்படி தப்பாது சொன்ன விதிகளெல்லாம்
பேதம் ஒன்றில்லை என்றே இவ்வகை பேசுவதே. (1144)

வாதம், பித்தம், சிலேட்டுமம் என்னும் மூன்று வித நாடி நோய்கள் விவரம் உரைக்கிறேன் கேட்பாயாக கதவினைப் பார்த்தே உடையவர்களை அழைத்து வேத முறை தப்பாமல் பலன் கூறுவாய் இதிலே ஏதும் பேதம் உண்டாகாது என அறிவாயாக.

திறந்தே அடைக்க விரிகாய்க் கிரீச்சென்று விடுவிடென்றே
இறந்தே விழுந்து கிணறுகள் சிக்கி இருப்பதினால்
பறந்தே விடும்பல தானியம் வெள்ளிபொன் பாலர்களுந்
துறந்தே வெளிப்படப் பாத்திரம் யாவும்தொலை யும்என்றே. (1145)

கதவினைத் திறந்து மூடிப்பார்க்கும் போதில் “கிரீச்” என்ற ஒலியும் விடுவிடென்று ஒலியும் கிளம்பினால் அருகிலே கிணற்றில் விழுந்து

இறந்தவர் ஆவியானது மனைக்குத் தொல்லை தருகின்றது அதனால் தானியங்கள் அழியும், புத்திர நாசம் உண்டாகும், வெள்ளி, தங்கம் முதலியவை அழியும், பாத்திரங்கள் கூடக் காணாமற் போகும் தாதுவின் நிலையிதுவாகும்.

துடியாங் கதவின் ஒடித்தே வீறுவிடத் துன்பமுற
நடியாய் நடுங்கிச் சிறுநாடி விட்டுநட்டி கழன்றால்
அடியா மனையில் விடியாதகைம் பெண்ண வனொருத்தி
படியாய்ப் பலநடை ஆகவுஞ் சுத்திப் பதறுவளே. (1146)

கதவானதில் ஒடிந்தோ வீறல்விட்டோ சட்டங்கள் இருந்தாலோ சட்டத்தினின்றும் நட்டு முதலியவை கழன்று போயிருந்தாலும், அம்மனையில் விதவைப் பெண் ஒருத்தியின் ஆவியானது சுற்றி வந்து ஓலமிட்டுக் கொண்டிருக்கின்றது.

பத்றியே கருவழித்துப் பங்கமாய் மனையிற் போட்டு
உதறியே கலப்பள் தீட்டை உவாதையில் லாமல்சுற்றி
விதறியே காயந்தின்று வினவியே இருப்பாள் பாரு
சிதறியே தெருக்கள் யாவுஞ் சூனியமென் றுசெப்பே. (1147)

அந்தப் பேயானது கருப்பத்தில் வளரும் சிசுக்களை அழிப்பாள், மேலும் கருக்கலைந்த பெண்ணுக்கு உதிரப்போக்கு அதிகமாக இருக்கும், மேலும் சுற்றித் திரிந்து பல உயிர்களைக் கொன்றும் திரிவாள், மேலும், அவ்வீதியே சூனியம் பிடித்தாற் போலக் கிடக்கும் அம்மனையும் செழிப்பின்றிக் காணும்.

சொல்லிய மனைக்கு ஈசானம் சூனியங்கோ விலொன்று
நல்லியல் மேற்குத் திக்கில்நா சமாம்பெருமாள் கோவில்
வல்லிய வாயு திக்கில் வழியில்லாச் சிவாலயந்தான்
பல்லிய கெளளி சொல்லும் பாங்கில்லா மனையும்பாரே. (1148)

அம்மனைக்கு ஈசானத் திக்கில் பாழடைந்த துர்தேவதைக் கோவில் உள்ளது, மேற்குத் திசையில், நாகதேவதை ஆலயம் அல்லது பெருமாள் கோவில் உள்ளது வாயுதிசையில் பூசைக்ள் சரிவர நடக்காத சிவாலயம் உள்ளது மேலும் அம்மனையில் பல்லியானது தீய பலன்களைக் கூறிக் கொண்டிருக்கும் அம்மனையின் நிலை இதுவே ஆகும்.

தாதுக்குக் குறையைக் கேளுதப்பில்லாப்பிள் ளைமெத்த
வாதுக்குப் பெண்கள் கூட்டம்வம் புக்கேயிட மாய்ப்பேச்சா

மேதுக்குக் குடித்தனங்கள் இயற்கைகள் எல்லாம் மாதே
போதுக்குப் போதுமாகப் பெண்பிள்ளை பின்னும் ஒன்று. (1149)

அம்மனையில் செல்வத்திற்குக் குறைவே ஆகும், பெண்களே அதிகமாய் இருப்பார்கள், வம்பு பேசிக் குழப்பம் செய்வர், பிறப்பதும் பெண் குழந்தைகளேயாம், ஒரேஒரு ஆண்பிள்ளை கூட இருக்காது ஆண் குழந்தையை நினைந்து பெற்றால் பின்னும் பெண் குழந்தையே பிறக்கும்.

கூடிய கதவு தன்னில் குறிப்புடன் பாடுதற்கு
மூடிய குறளி யாவும் மூர்க்கமாய்ச் சொல்லுவார்க்கு
நாடியே பார்த்துச் சொல்வேன் நன்றாகக் கேளுமாதே
தேடியே இருந்த ஆட்சி தெளிவுடன் சொல்லுவேனே. (1150)

கதவில் ஏற்படும் ஓசையைக் கொண்டு, குறள், பல்லி, சூனியம் இவற்றைக் கண்டறிந்து கூறுகிறேன் கேள், அதுஇருந்த நிலையும் சொல்கிறேன்.

ஆட்சியாம் பொருட்கள் தேடியணுகி யேயிருந்தார் முன்னோர்
சாட்சியாய்ப் புதைத்து வைத்த தனம்யாவும் மிக்கசீராய்ச்
சூட்சியாய் வாதம் பண்ணுந் தூநடை காண்டலாகும்
தாட்சியாய் விர்விரென்று தடையில்லா நடக்கும் பெண்ணே. (1151)

கதவானது திறந்தும் மூடும்போது "விர் விர்" என்று தடையின்றி வேகமாகச் சென்றால் பெரும் பொருட் செல்வத்தைத் தேடி முன்னோர் அங்கே புதைத்து வைத்திருந்தனர் அப்படிப் புதைத்த புதையலானது மனையின் கீழ் உள்ளது என்று அறிவாயாக.

பெண்ணே வைத்ததனை ஆய்ந்துபேசா மலெடுத்துக் கொள்ள
உண்ணவே கன்னிமூலை உயர்ந்திட மேடு காணும்
நண்ணவே குலதெய்வத் தைநயந்து நீநேர்ந்து கொண்டு
சண்ணவே சதயத்து ஏந்திச்சாட் சியாய்வைத் துக்கொள்ளே. (1152)

அப்படிக்காக இருக்கின்ற புதையலை எத்தன்மையது என்று ஆராய்ந்து பார்த்து பேசாமல் எடுத்துக் கொள், அம்மனையில் கன்னி மூலை உயர்ந்து மேடாக இருக்கும் குலதெய்வத்தை வேண்டிக்கொண்டு சதய நட்சத்திரத்தன்று நாள் குறித்துக் கொண்டு கன்னி மூலையில் உள்ள புதையலை எடுத்துக் கொள்வாயாக.

விள்ளுநற்கத வுதாளினொடித் திடிற்கிலேசம் மிஞ்சும்
சுள்ளென்று கதண்டுகொட்டுஞ் சூட்சமாயுனக் குச்சொன்னேன்
வள்ளென்ற தங்கக்கா சுவடிக்கடி சொர்ணகுப்பல்
தள்ளென்ற யாவுங்கொண் டுதாங்கியேஎடுப் பாய்கன்னி. (1153)

கதவானது திறக்கும் போதில் நொடித்தால் கவலை உண்டாகும், கதண்டு எனும் வண்டானது சுள்ளென்று கொட்டும் "சூட்சம்" இதுவாகும் என அறிந்துகொள், தங்கக்காசு, சொர்ண குவியல், முதலானவையுள்ளன இவற்றை அறிந்து எடுப்பாயாக.

கன்னியே சொல்லக் கேளாய் கதவிடம் நொடித்ததானால்
உன்னியே பாரு மாதே உத்தமநடு மையத்தில்
மன்னிய சாடிமூன்று மயக்கமாங் கருங்கல் ஒன்று
துன்னியே பின்னெடுத்துத் துடிமுழம் ஆறு மூன்றே. (1154)

கதவானது நொடித்தால் கவனித்துப்பார் நடுமையத்திலே, மூன்று பானைகள் உள்ளன, ஒருகருங்கல்லும் உள்ளது இது இருக்கும் ஆழமானது 18 முழம் ஆகும்.

மூண்டுதாள் திறக்கும் போது மூர்க்கமாய்க்கீச் சென்றோடி
வீண்டுதான் நுணுக்காய்ச் சொல்ல வினவியே கேளுமானே
தூண்டுதான் எரியிடத்தில் துலக்க மாய்க்கரி இரும்பு
காண்டக எடுக்கமெத்தக் காரியம் நன்றாம் பெண்ணே. (1155)

கதவைத் தாள்திறக்கும் போதில் கீச்சென்று சப்தித்து ஓடினால் நுணுக்கம் கேட்பாயாக அடுக்களையில், கரி, இரும்பு முதலியன உள்ளன அவற்றைப் பெயர்த்து எடுத்து விட்டால் நற்பலன் உண்டாகும்.

பெண்ணே கேளுருக்கிச் சிக்குபே ததமும் மெத்தவுண்டாம்
அண்ணே யாள்நிலையின் கீழே அகலமாய்க் கருங்கல்லுண்டு
நண்ணே மும்முழத்தின் கீழே நயமில்லாச் சாடியொன்று
கண்ணே நீயெடுக்கும் ஆறுமுழத் தினில்சல்லியங் காணே. (1156)

கதவானது சிக்குமாகில் பேதங்கள் நிறைய உண்டாகும், நிலைக்குக் கீழே அகலமான கருங்கல் உள்ளது, மேலும் மூன்று முழத்திற்குக் கீழே பாழ்மண்குடம் உள்ளது, பின்னும் ஆறுமுழம் வரையிலும் சல்லியம் உள்ளது.

முண்டெென விவரஞ்சொல்ல முனையாகக் கேளும் பெண்ணே
உண்டென்ற கரியும் உற்ற எழுத்தாணி முறிந்ததுண்டு

தொண்டெனப் பார்த்து நன்றாய்த் துலக்கமாய் எடுக்கமேலாம்
புண்ட கரிலட்சுமித் தாய் புகழுடன் போற்றுவாளே. (1157)

மேலும் விவரம்கேள், சல்லியம் மேலும் கரி, எழுத்தாணி உடைந்ததுண்டு, இவையும் உள்ளன துணிந்து எடுத்துவிட்டால் மனையில் மகாலெட்சுமி குடியேறுவாள்.

போற்றுவாள் தாதுமேலாம் புகழ்கீர்த்தி மெத்த உண்டாம்
தோற்றுவாள் சுமங்கலிப் பெண்துடி யாகச் சத்தியாமே
ஏற்றுவாள் சீராமின்ப உழவுமேற் சிறப்பா மெத்தப்
போற்றுவாள் புகழெந்நா ளும்பிள்ளை கள்பெறுவாள் மாதே. (1158)

அப்படிச் சல்லியத்தை எடுத்துவிட்டால் செல்வமும், புகழும் பெருகும், சுமங்கலிபோல சத்திதேவி அருள்புரிவாள், இன்பவாழ்வு சிறப்பாகப் பெருகும், புத்திர விருத்தியுண்டாகும்.

மாதேகேள் பூமிசல்லியம் வகைதொண் ணூற்றா றுக்குள்ளே
போதேனின் பதினாறும் பார்பொறுமை யாய்த்தானே சூட்சம்
வாதமே பித்தந் தாதுமயக் கமாமதனைப் பார்த்தே
நீதமே ஓதிநன்றாய் நிலைக்கவே எடுத்துப் போடே. (1159)

பூமியின் சல்லியம் தொண்ணூற்றாறு வகையாகும், அதில் பதினாறு பொறுமையாய்க் கண்டு எடுக்கும் சூட்சுமம்பார் வாதபித்தம் மயங்கி இருந்தால் (கதவுச்சட்டம்) செல்வம் அழியும் அதனைக் கொண்டு சல்லியம் இருப்பதை அறிந்து அதை எடுத்து விடுவாயாக.

போடக் கதவுப் போக்கில் வர்வர்வமுத் துமென்னில்
கூடவே கேளாய் மாதே சொல்கிறேன் கிறுகிறுச்சு
தேடியே பின்னூர் அச்சாய்ச் சேருமே பிறகுகீச்சும்
நாடியே வரிசையாக நயந்தனர் நம்பிக் கேளே. (1160)

கதவானது "வர்வர்" என்று ஒலி எழுப்பினால் மேலும் கிரீச்சென்று சப்தம் வந்தாலும், அச்சு முறிவதுபோல "கீச்" சென்ற ஒலி வந்தாலும், சல்லியம் இருப்பதை அறியலாம்.

அன்னமே கேளாய் பாகம்அவ் விடங்கீழே சாம்பல்
சொன்னநேர் மேற்குத் திக்கிற்சூட் சமாய்க்கரியும் பார்க்கில்
முன்னியே வாயு திக்கில் உறுதியாய்ப் புற்றுமுண்டு
வன்னமாக் கிளிச்சொல் மாதே வாய்மிகத் தூற்றுவாளே. (1161)

மனையில் மேற்குத்திசையில் கீழே, சாம்பல், கரி இவை உள்ளன, வாயுதிக்கில் புற்று ஒன்றுள்ளது, மனையில் ஒருபெண் தூஷணையாய்ப் பேசுவாள் என்க.

தூற்றுவாள் பெண்ணொருத்தி துக்கமாய்ப் பரிதவித்துத்
தேற்றுவாள் ஊரிலுள்ளோர் தேற்றாமல் அழுதுகொண்டு
கூற்றுவனே தானென்று கும்பிடுவாள் எப்போதும்
சாற்றுவாள்பிள் ளைபெண்ணே சாங்கமாய்க் கேளுமென்றே. (1162)

அம்மனையில் உள்ளவர்களை ஒரு பெண் தூற்றித் திரிகிறாள், தனக்குக் கேடு செய்ததாயும் தன் குடும்பத்திற்கு எமன் என்றும் ஊராரிடம் கூறுவாள், ஊராரும் ஆறுதல் கூறாததால் அழுது திரிகிறாள் அவள் நீலியென்ற பிள்ளையுடன் தோன்றும் ஒரு மோகினியாகும் என்று அறிக.

அன்னேமுன் னேயின்னங் குறியார் அறியப் போகின்றார்
சொன்னிதி கீழாட்டு எலும்புதொலை யாமல்தான் கிடக்கும்
வன்னமிரும் புவட்டு கிண்ணஞ் செம்பு பித்தளையும்
கன்னமுடன் சோரமும் போங்கா ணுவாய்பெண் மானே. (1163)

பெண்ணே இன்னும் சல்லியக் குறி யார் அறிவார் அந்த இடத்தின்கீழ் ஆட்டு எலும்பு மக்கிப் போகாமல் கிடக்கின்றது, இரும்புவட்டு, கிண்ணம், செம்பு, பித்தளை முதலியபொருட்களும் உள்ளன, அம்மனையில் திருட்டும், சோரமும் போகும்.

மானே மனைக்கு மாற்றலர்கள் மெத்த உண்டு
நானே தான்சொன் னகுறிநயந்து பாரதனிற்
தானே அவ்வாத நடைதாங் கியேசி ரெனவுந்
தேனே அச்சல் லியங்கள் செப்பேநீ கேள்மயிலே. (1164)

மனைக்குக் கொடுக்கலும் வாங்கலும் செய்யும் தேவதைகள் மெத்த உள்ளன நான் கூறிய இந்தக் குறியைக் கவனித்துப்பார், வாத நடைகெட்டால் இந்தச் சல்லியங்கள் உண்டாகும் என்றறிக.

மயிலின் நடையாக மாற்றியே கீச் எனவே
ஒயின் இடர்ஏழ் ஊராம் முற்றமுழு சல்லியமே
மயிலின் இடறி நொடி பாங்கில் மாறிடவுங்
குயில் அழுத்தம் மூன்றினுக்குள் சல்லியங்கள் கோதையரே. (1165)

மயில் கத்துவதுபோல கதவானது கீச்சிட்டால், ஏழு சல்லியங்கள் முழுதுமாக உள்ளன மயில் குரலினைப் போல் சற்று மாறி ஒலித்து குயில்போல் கூவினால் மூன்று சல்லியங்கள் உள்ளன என்று அறிவாயாக.

கிளியோசைக் குள்ளே கிடுகிடென் றுதான்ஓ டிக்கில்
அளியோ சைகாணும் அலங்கார வீடு அதனில்
புளியி னுடைவேர் மிகவும் பித்தளை யுமீயமுடன்
துளியிரும் புகரிப் பாண்டத்தோ டிருக்கும் தோகையரே. (1166)

கிளியோசை போல கிடுகிடென ஒலி எழுந்தால் அவ்வீட்டில் வண்டுகளின் ஓசை கேட்டுக் கொண்டே இருக்கும் மனையின் கீழ் புளியம் வேர், பித்தளை, ஈயம், கரி, இரும்பு, உடைந்த பானை இவை சல்லியமாய்க் கிடக்கும் என்று கூறுக.

குணமான பெண்ணே கேள்கோடி தனில்நான் குபுற்றும்
மணமான பெண்ணே வழக்கு மிகவிருக்கு ஊடல்மிகு
நினமாகுங் கால் அதனில் நெடுங்காலம் தீராது
பிணம் போலத் திரிந்திடுவாள் பித்தாகப் பேசுவளே. (1167)

பெண்ணே கேள் மூலைகளில் நான்கு புற்றுகள் உள்ளன. மனைவியுடன் வழக்குகளும், சண்டைகளும் உண்டாகும், சல்லியம் போக்காவிடில் இத்துன்பங்கள் போகாது, மனைவியும் புத்தி சுவாதீனமின்றிப் பைத்தியம் போலத்திரித்து அலைவாள்.

பேசுவாள் பெண்மாதே பேசியருளால் திரிவாள்
கூசியே யாவருக்கும் கூறிடுவாள் தன்னுடலை
நீசியாய் அவர்களிடம் நேசமாய் வாழ்ந்திடவே
சீசியவ ளாலேதீ ராச்சல்லியம் பெண்பாவாய். (1168)

மேலும் அப்பெண் பலருடன் உடலுறவு கொண்டு விபசாரியாய் திரிந்திடுவாள், அவள் ஒரு தீராச்சல்லியம் ஆகும், எனவே சல்லியம் கண்டுகளைக.

எண்ணும்மனை அத்தெருவில் இருப்பது எல்லாஞ் சல்லியமாம்
நண்ணுமே கன்னிதனில் நாலாறு சாடி உண்டாம்
எண்ணும் எடுத்தெறிய ஏந்திழையாள் துன்பமும் போம்
கண்வைக்குக் கண்ணெதிரே காணுங் கருங் குயிலே. (1169)

அம்மனையில் சல்லியங்கள் மெத்தவுண்டு கன்னி மூலையிலே 24 முழ ஆழத்தில் பழம் பானை (தாழி) உள்ளது அதனை எடுத்தெறிந்துவிட்டால் அப்பெண்ணின் துன்பம் தீரும் இதனைக் கண்ணுக்குக் கண்ணாகக் கண்டு தெளியலாம் இது உண்மையே ஆகும்.

அந்தச் சிலம்பு களால் வாட்டி யரிவையரே
முந்தவும் வாத நடைபித் தமையம் மூன்றினுட
பந்தமாம் பகர மண்டுகத் தாது பகருகிறேன்
கந்தன் கருணை அறுபத்து நாலு உகத்தலுக்கே. (1170)

கதவினை அசைத்துப் பார்க்கும்போது வாதபித்த சிலேட்டும சட்டங்களிலே வெடிப்பு ஏற்பட்டாலும் வண்டின் ஓசைபோல ஒலி கிளம்பினாலும் முருக்ன் அருளாலே அறுபத்து நான்கு வகைச் சல்லியங்களும் கிடையாது என்றறிக.

கடகட சத்தம் கணீரென் றோசைகத வில்நின்றால்
மடமட வையன் நொய்யென ஓடி வருகையிலே
திடதிட தோவென தேனெனப் பாயுந் தெளியுறவோ
சடசடக் கோபஞ் சகலர்க்குஞ் சாட்சியாய்ச் சாற்றுவனே. (1171)

கதவிலே சடசடவென்று ஓசையானது கணீரென்று கிளம்பினால் சல்லியம் ஏதும் இல்லை ஆனால் மனைக்குரியவனும் மகாகோபியாகக் காணப்படுவான்.

சாற்றும் பகலெனச் சளவனோசைக் சஞ்சீ எனவும்
போற்றும் பொருள்பட அங்ஙனம் வீற்றிடப் போதுமன்றே
தோற்றும் அக்கதவினில் அத்தோரும் அத்தொடிதீ னத்தீயெழும்
மாற்றும் பெருக்கிணை யாமறை யோர்க்கும் வழுத்துவனே. (1172)

கதவினைத் சாத்தும்போது வினோதமாகப் புதுவித ஓசை கிளம்பினால் அக்கதவின் ஓசையால் அம்மனைக்குத் தீயினால் கண்டம் ஏற்படும் என வேதமறிந்தோரும் அறியும்படிக் கூறினேன்.

பயிருஞ் செழிக்கும் பால்பொங்கும் மெத்த பரங்களுக்கு
உயிருஞ் செழிக்கும் முறையோர் களுகந்து உண்ணத்
தயிரும் பழையதும் தங்காமல் போடத் தரணிமிசை
உயிருக்கு ஒருபிள்ளை உண்டெனச் சொல்லவும் வாயிலையே. (1173)

மேற்படி மனையில் பயிர்செழிக்கும், பால்பொங்கும், உயிர்வகை விருத்தியாகும், உண்ணும் உணவுகளுக்குப் பஞ்சமில்லை என்று இப்புவிமேல் தயிரன்னமோ,. அன்றியும் பழைய சாதமோ தடையின்றி வழங்குவதற்கும் ஒரு புத்திர பாக்கியம் இருக்காது.

மண்டுகத் தத்துவதனால் துயரும் மைந்தர் பெண்டீர்
விண்டுகம் பார்க்க வெளியிலத் துயரம்வே றொன்றில்லை
கொண்டு கட்டுக்குள் கொடுஞ் சல்லியம்ஆ றஞ்சுண்டு
முண்டுகம் பார்த்தெடுக் கமுள்துயரம் ஒழிந் திடுமே. (1174)

மண்டுகமெனும் தவளை வண்டின் ஓசை எழுந்தால், துயரம் உண்டாகும், பெண்கள், மக்கள் துன்புறுவர் மனையில் முப்பது சல்லியங்கள் உள்ளன அவற்றைக் கண்டு எடுத்திட்டால் துயரங்கள் யாவும் தீர்ந்துபோகும்.

சல்லியம் முப்பதுஞ் சொல்லுகின்றேன் சங்கை அறுத்தெடுக்க
வல்லியங் கொட்டு பித்தளை கிண்ணம் வகைகரண்டி
நல்லீயஞ் செம்பு வெண்கலங் காரீயங்கமு வுந்தொட்டிப்
பல்லியம் என்றும் புதைந்து கிடக்கும்பார் புரைபுகுந்தே. (1175)

சல்லியம் முப்பதும் சொல்லுகிறேன் கேள், சங்காதோஷம், ஆயுதங்கள், பித்தளைக் கிண்ணம், கரண்டி முதலான பாத்திரங்கள், ஈயம், செம்பு, வெண்கலம், காரீயம், மண் தொட்டிகள் பலவகை வாத்தியக் கருவிகள் முதலியவை அம்மனையில் புதைந்து கிடக்கின்றன. வெகுகாலமாய் என்றறிக.

சங்கே கிடக்கும் சதுரக்கன் நான்கு தலையுருவும்
அங்கே கிடக்கும் கரியுமிப்பாண் டமாண்டலை மயிரும்
புங்கே பழைய கிணறுதோன்றும் பகுத்து அறிந்தால்
அங்கே வகைஎட் டுமாக இருக்கும் வகையறியே. (1176)

மேலும், சங்குகள் கிடக்கும், நான்கு தலையுள்ள விக்கிரகம் ஒன்றும், கரி, உமி, பானை, ஆண்தலைமயிர், பழங்கிணறு இவை கிடக்கும் பகுத்துப் பார்த்து வகையறிந்து போக்குக.

அறிந்தே எடுக்க அரிதரிது ஆகும்த னுக்குள்ளே
செறிந்தே விழுந்த பெண்மாதருக் குச்சிறுபிள்ளை யொன்று
தெரிந்தே விழுந்தக் கருநாய் கழுதை தெளிந்தெடுக்க
அறிந்தே எடுக்கவான பொன்வள்ளி தங்கக்கல் முத்துகளே. (1177)

வகையறிந்து எடுத்தல் அரிதாகும், தலைச்சன்பிள்ளை, கருநாய் தலைச்சன்குட்டி, கழுதை இவற்றுடன் பலியிட வேண்டும், பலியிட்டால், பொன், வெள்ளி, தங்கம், கற்கள், முத்துகள் ஏராளமாகக் காணும் ஆனால் எடுப்பது மிகக் கடினம் ஆகும்.

விடவிட வீறின மண்டுகமாக விளங்கி வந்தால்
படபடப்பின் கொண்டு தள்ளி இழுக்கப்பருங் குறிகேள்
மடமடல் ஆகத் தொட்டிகள் மேலும் மமமதக்க
கொடு நடையாகப் பசுக்கள் கன்றுகூடலும் பாழ்கிணறே. (1178)

பதறியபடி ஓலமிடும் தவளை போல் கதவின் ஒலி வந்திடில் அதன் பலன் கேள் அம்மனையில் அடுக்கடுக்காக மண் தொட்டிகள் கிடக்கின்றன. பசுக்களும் கன்றுகளும் பெருகி வாழும் மனையாகும், மேலும் மனைக்கீழ் ஒரு பாழ்கிணறு உள்ளது.

சூகமது குடங்கி டக்குது மெத்தக் கிலேசமுற
நாகம் முறமாமை யுஞ்சாம்பலும் நாளுங் குவித்திடலாம்
ஊகமறிந் திந்த முப்பது சல்லியம் ஓடிடவே
தாகமதா எடுக்கச் சாரும் பிரபலம் பிள்ளையுண்டே. (1179)

பாழுங் கிணறும், குடம், முதலியன கிடக்கின்றன, கவலையுண்டாக்கும்படி, நாகமும், முறம், ஆமை, சாம்பல், முதலானவைகளும் உள்ளன இவ்வாறாக மேற்கூறிய முப்பது சல்லியங்கள் உள்ளன. அவற்றை எடுத்துவிட்டால் பிரபலம் உண்டாகும் ஆண் வாரிசு உண்டாகும்.

மூடுங் கதவோசை மூஞ்சூறு போல்சீறில்
தேடுந் திரவியம் சென்றுவிடும் - கூடாது
பின்செல்வப் பேர்போகும் பிந்தாமல் திண்ணமுடன்
பின்போம் பெருமை பிரிந்து. (1180)

வாசல் கதவை மூடும்போது கிளம்பும் ஒலியானது மூஞ்சூறு கத்துவது போல் எழுந்தால் தேடுந் திரவியம் தொலைந்து போய்விடும் செல்வம் போய்விடும் பின்னும் நற்பெயரும் கெட்டுவிடும், பெருமை கீர்த்தியும் தொலைந்து விடும்.

நாய்கள் நரிபோலே நன்மனை வாரியது
பேயழுதால் போலப் பேசிடுமால் - நோய்மிகுத்து

வைத்திடுவர் நொந்து மெலிந்திடுவார் அம்மனையில்
நைந்திடுவர் என்றே நவில். (1181)

மனையின் கதவை மூடும் போது வரும் ஒலியானது, நாய், நரி இவை ஊளையிடுவது போல் பேய் அழுதாற்போல் ஒலித்திடில் மனைவாழ்வோர் நோயினால் அவதிப்பட்டு மெலிந்து போவர் துன்பமடைந்து போவர் என்று கூறுக.

நாடியடைக் கில்உயிர் போகும் நன்றாகப்
பாடி அடைக்கில் பழியாகும் - நாடியே
நின்ற இடத்தில் நிலையானால் நற்செல்வம்
பின்றிடத்தில் பாயும் பிணி. (1182)

கதவானது மூடும் போது வேகமாகச் சாத்திக் கொண்டால் மரணம் சம்பவிக்கும், பலவித ஓசையுடன் பாடி அடைத்துக் கொண்டால் பழியுண்டாகும் கதவானது நிறுத்திய இடத்தில் நிலை கொண்டால் செல்வம் உண்டாகும் நிறுத்திய கதவு தானே மூடினால் நோயாகும்.

ஆடுங் கதவோசை அம்புவியில் நாரையிசை
நாட இருத்தல் நலமாகும் - நீடிய
காலம் நிறைசெல்வம் காதலர் உண்டாகி
சீலம் பெருகுமெனச் செப்பு. (1183)

கதவை அசைத்துப் பார்க்கும்போது நாரை கத்துவது போன்ற ஒலி எழுந்திடில் நன்றாகும் பெரும் தனச்சேர்க்கையுடன், கணவன், மனைவி அன்புடன், புகழ் பெருக வாழ்வர்.

சல்லியம்

ஆடியதோர் சபைக்குள்ள ரிஷிகள் மூர்த்தி
ஆனந்தனார் முதலாய் அமர்ந்த செம்பொன்
தேடியவர் காணாமல் இருந்த செம்பொன்
செம்புவெள்ளி வெண்கலங்கள் சென்ட தெல்லாம்
நாடியேஎடுக்கும்வகை நன்றாய்ச் சொல்வேன்
நன்னூ லின்பயன் அறிந்து நளினமாகப்
பாடியே சல்லியந்தான் பார்க்கும் போது
பயனறிந்து ராசியோடு அஞ்சு சேரே. (1184)

மனைக்குள்ளே சல்லியங்கள் நின்றநிலை எடுக்கும் வகை முனிசிரேஷ்டர்கள் கூறி இருக்கின்றனர் தங்கம், வெள்ளி, செம்பு,

வெண்கலம் முதலான தாதுக்களை எடுக்கும் வகை சொல்கிறேன் கேள். சல்லியம் பார்க்கும் போதில் நடக்கின்ற லக்கினத்தை மேஷம் முதலாக எண்ணிக் கண்ட தொகையுடன் ஐந்து கூட்டிடுவாய்.

அஞ்சோடே கண்டவடி கூடச்சேரு
வந்தநாள் நின்றதிதிய னுவாய்ச்சேரு
பஞ்சோடே இதுவெல்லாம் ஒன்றாய்க்கூட்டி
பதினாறில் பெருக்கிநால் ஏழுக்கிய
நஞ்சோடே ஒன்றென்றால் தங்கம்காசு
நன்மையிரண்டு வெண்கலமும் பொன்னுமுண்டாம்
மிஞ்சாதே கன்றுக்குவெண் கலமிரும்பு
மேன்மையாம் நாலுக்குக் குண்டுமாமே. (1185)

ஐந்து கூட்டியதுடன் மனையின் ஆயத்தொகையை அடியாக்கிச் சேர்த்திடுக அத்துடன் ஞாயிறு முதல் அந்தநாள் வரை எண்ணிக்கண்ட தொகையும், பிரதமை முதலாய் அன்றைய திதிவரை எண்ணிக் கண்டதொகையும்கூட்டி பதினாறால் பெருக்கி 28ஆல் வகுத்து வந்த மீதமானது ஒன்று ஆனால் சல்லியம் தங்கக்காசுகள், இரண்டானால் வெண்கலமும், தங்கமும், மூன்றானால் வெண்கலம், இரும்பு, நான்கானால் இரும்புக் குண்டும் (IRON BALL) ஆகும்.

ஆமேகேள் அஞ்சுக்கு ரத்தினம் இரும்பும்
ஆறுக்குப் பித்தளை வெண்கலம் இரும்பும்
சேமேகேள் ஏழுக்குக் கருங்கல் தங்கம்
செய்யவெட்டு கிணற்றினுறை செம்பொன் ஈட்டம்
வேகமேகேள் ஒன்பதுக்குப் பொன்னும் வெள்ளி
பத்துக்குக் கிடாரங்கள் நிரம்ப உண்டு
பாமேகேள் பதினொன்று சுத்தத் தங்கம்
பன்னிரண்டு வெள்ளி எனப்பணித் திட்டேனே. (1186)

ஐந்து வந்தால் ரத்தினங்களும், இரும்பும், ஆறுவந்தால் பித்தளை, வெண்கலம், இரும்பும், ஏழு வந்தால் கருங்கல்லும், தங்கமும், எட்டு வந்தால் கிணற்று உறை, தங்கம் முதலியன திரண்டும் ஒன்பது வந்தால் தங்கமும், வெள்ளியும், பத்துவந்தால் கொப்பறையும், நிறைய உள்ளது. பதினொன்று வந்தால் சுத்தத்தங்கமும் (தங்கப் பாளங்கள் பத்தரைமாற்று) பன்னிரண்டு வந்தால் வெள்ளி என்றும் அறியவும்.

படிந்திட்ட பதின்மூன்று வெண்கலத்தின் சிலையாம்
பதினாலுங் கிடாரங்கள் மூவைந்து வெள்ளி

அடிந்திட்ட பதினாறு கிடாரம் ஏழு
வரன்பதி னேழு கண்டரண் டகிடாரம்
சடிந்திட்ட பதினெட்டு தங்கம் பொன்னும்
சத்திர பத்து ஒன்பதுக்கு வெள்ளி
முடிந்திட்ட இருபதுவும் செம்பொன் வர்க்கம்
மூவேழ் மாட்டெலும்பு வகையாய்க் காணே. (1187)

பதின்மூன்று வந்தால் வெண்கலச்சிலையும், பதினாலுக்குக் கொப்பறைகள் (இருப்புச்சட்டி) பதினைந்துக்கு வெள்ளியும், பதினாறுக்கு கொப்பறைகள் ஏழும், பதினேழுக்குக் கிடாரம் எனும் கொப்பறைகள் பதினான்கும், பதினெட்டுக்குத் தங்கமும், பொன்னா பரணங்களும் பத்தொன்பதுக்கு வெள்ளியும், இருபதுக்குத் தங்கப் பொருட்களும், இருபத்தொன்றுக்கு மாட்டின் எலும்புகளும் சல்லியங்களாகும் என்று அறியவும்.

காண இருபத்து இரண்டு எலும்புச்சாடி
கனமான இருபத்து மூன்றாம் காசுதங்கம்
வேணதொரு மூவெட்டுத் தங்கம் உண்டு
மெய்நிறைந் தவையைந் துவெண் சொர்ணம்
வீணதல்ல இருபத்தா றுதிட்டெல் லாங்கல்
விருதாவாம் இருபத்து ஏழ்வெண் டும்பொன்னு
நாணவே சரியானால் சல்லியம் மூன்று
நற்பொருளை அறிந்தவர் தாம்நயஞ் சொன்னாரே. (1188)

இருபத்து இரண்டு வந்தால், எலும்பும், சாம்பலும் உள்ளன, இருபத்துமூன்று வந்தால் தங்கக் காசுகளும், இருபத்து நான்கு வந்தால் தங்கம் உள்ளது. இருபத்து ஐந்து வந்தால் வெள்ளியும், இருபத்து ஆறு வந்தால் கருங்கல், இருபத்து ஏழு வந்தால் தங்கமும் இருபத்து எட்டு வந்தால், தங்கம், வெள்ளியுடன், கருங்கல்லும் சல்லியமாம்.

எல்லையெனும் பொன்னிருக்கும் இடத்தைச் சொல்வேன்
ஏகாந்த கோவிலடி இழந்த செங்கல்
சல்லையென் றுகடற்கரை யாம்மோர் தொட்டு
தணிந்தநத்தம் பிரகாரம் சாவடியும் திட்டு
மல்லையென் றுவேணதிடலாம் ஏரிகரை தோட்டம்
வயல்நத்தம் இப்படியாய் இருந்த தெல்லாம்
சொல்லையென் றுசிவலிங்கம் எல்லாம் கூட்டந்
துரையிருந்த அரமனைகள் திரவியமாந் தலமே. (1189)

தங்கமெனும் பொருட்கள் இருக்கும் இடம் பற்றிக்கூறுவேன், அரண்மனை, இடிந்த செங்கல் கட்டிடம், கடற்கரை ஓரக் குடியிருக்குமிடங்கள், தாழ்வான குடியிருப்புகள் உள்ள இடங்கள், சத்திரங்கள், மேட்டுப்பாங்கான இடங்கள், ஏரிக்கரை, தோட்டம், வயல்வெளி, மனைஇடங்கள், சிவலிங்கம் இருக்குமிடங்கள், அரண்மனைகள், முதலான இடங்களில் பொன் திரவியங்கள் இருக்கும் என்று அறிக.

தலமாயித் தலங்கள் நன்றாய்ப் பார்த்துச்
சல்லியங்கள் இன்னதென தாபித் தேதான்
பிலமான இடமிருக்கும் திடத்தைச் சொல்வேன்
பெருந்தீவை இருபத்து எட்டறை பகுத்து
வலமான கீழ்மேலா எட்டுக் கோடும்
மிகுத்ததெற் குவடக்கும் அதுவஞ்சு கோடு
சிலமான இருபத்து எட்டறையில் ஈசன்
தெற்காகக் கீழ்வரை மூணமகம் வைத்தெண்ணே. (1190)

சல்லியமாய் புதையல் இருக்குமிடம் அறிந்து இருக்கும் பொருள் இன்னதென்று கண்டறிந்து பின் அந்த இடத்தின் நீள அகலத்தை அளந்து ஒரு தாளில் வரைந்து அதை 28ஆகப் பிரித்துஅதில் கீழ்மேலாக எட்டுக் கோடுகளும், தென்வடலாக் ஐந்து கோடுகளும் வரைந்து அந்த 28 அறையில் இடமிருந்துவலமாக (வடக்கிலிருந்து தெற்காக) முதலறை கீழ்முகமாக ஈசனும் பின்பு மகம் முதல் இருபத்தேழு நட்சத்திரங்களையும் கண்டறிக.

காணுவது இராசிச் சக்கர வீட்டில்
காண்சல் லியமெடுக் கும்வகை சொன்னபடி
கோணந்தோ றுமேற்றுவாய் அபிசித்து நட்சத்திரம்
குலவை பேரெழுத்து வரைகள் தோறும்
சாற்றுவாய் அதுவிடமாய்ச் சதுரத்துக் குள்தாபிக்க
தான்வகை சொல்வேன் மேடஞ் சாணேழு
வேற்றுவாய் ரிஷபமது எட்டுச் சாணு
விபல்மிதுனம் ஆறுசாண் என்று சொல்லே. (1191)

இராசிச் சக்கரத்திலே சல்லியம் எடுக்கும் மார்க்கம் சொன்னது போலவே கோணங்களில் அபிசித்து நட்சத்திரங்களையும், (உத்திராடத்திற்குப் பின்வரும் நட்சத்திரங்கள்) வரைகளில் பெயர் எழுத்துகளையும் இடதுவலமாகச் செய்து (நட்சத்திர நாம எழுத்துகள்)

சதுரத்திற்குள் எழுதவும் மேடலக்கினம் உதய லக்கினமாக வந்தால் ஏழுசாணும், ரிஷபத்திற்கு எட்டுச்சாணும், மிதுனத்திற்கு ஆறுசாணும் என்று கூறு.

என்று சொல்லு கடகமது அஞ்சுசாணு
எழுசிங்கன் கன்னிக்கு எட்டுச் சாணும்
என்றுசொல் லுந்துலாத் துக்குஒன்பது வேசாணு
வளமான விருச்சிகமே ஏழு சாணு
தன்றுசொல்லும் தனுசுக்குப் பத்துச் சாணு
சங்கையுள் எமகரமது சாணும் அஞ்சு
அன்றுசொல்லும் கும்பமது நாலு சாணும்
அறைக மீனஞ் சாணாறு பகர்ந்திட்டேனே. (1192)

கடகத்திற்கு ஐந்து சாணும், சிம்மம், கன்னிக்கு எட்டுச்சாணும், துலாத்திற்கு ஒன்பதுசாண் விருச்சிகத்திற்கு ஏழுசாண், தனுசுக்குப் பத்துசாண், மகரத்திற்கு ஐந்துசாண், மீனத்திற்கு ஆறுசாணும் என்று கூறினேன் பார் இந்தசாண் ஆழங்களில் சல்லியம் நின்றதென்றறி.

பகர்ந்திட்டேன் இந்நூலில் மனையிற் சல்லியம்
பார்தனிலே உள்ள வர்க்குப் பண்பதாக
நிகர்ந்திட்டேன் சொல்லாத சொல்லை எல்லாம்
நிலையற்ற கிரகங்கள் நிற்கும் கூற்று
விகர்ந்திட்ட நடனஞ்சார் விதமுஞ் சிற்பம்
மேலாக விவரமெல்லாம் விளங்கச் சொன்னார்
தகர்ந்திட்ட இச்செய்யுள் பத்தும் முற்றும்
சங்கரனர் மயனுக்குச் சாற்றினாரே. (1193)

இந்தநூலிலே சல்லியத்தின் வகையெல்லாம் கூறிவிட்டேன், கிரகங்கள் நின்ற இடங்களை ஆராய்ந்து, சிற்பநூலில் விதங்கள் எல்லாம் உரைத்துவிட்டேன், இத்துடன் சல்லியம் கூறும் பத்துச் செய்யுளும் நிறைவுறுகிறது என்று சிவபெருமான் மயனுக்குக் கூறி யருளினார்.

கீழ்சாரி வீட்டில் கிணறு எடுப்பதின் பலன்

இந்திரன்திக் கில்வீடே இருந்திடக் கிணறு வேண்டில்
தந்திர தராசு கன்னி தருஞ்சாடி மீனமேடம்
வந்திடில் அதிக நன்மை மையத்தில் வைக்கநாசம்
தந்திர மயனார் தானும் தயவுடனுரைத் தாரன்றே. (1194)

கிழக்குத்திசை சார்ந்த வீடானால் அம்மனையில் கிணறு எடுக்க விரும்பினால், வடமேற்கு, தென்மேற்கு, வடக்கிழக்கு, கிழக்கின் கிணறெடுத்தால் அதிக நன்மையுண்டாகும் மையமான இடத்தில் கிணறெடுத்தால் நாசமுண்டாகும் என்று மயனுரைத்தவாறே.

தென்சாரி வீட்டில் கிணறு எடுப்பதின் பலன்

ஏமன்றன் றிசையிலில்லம் இருந்திடக்கிண றுவேண்டில்
வாமமாம்தலை யுஞ்சிங்கம் வருகன்னி கும்பமீனம்
ஆமதுமே டம்நன்மை ஆகாதுமற் றைப்பாகம்
சேமமேமுறை யுமையம் செய்திடமனை யும்பாழாம். (1195)

தெற்குத்திசையில் வீடு இருந்திட கிணறு எடுக்க விரும்பினால், வடமேற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு, வடகிழக்குத் திசை இவற்றில் கிணறெடுக்க நன்மையும் மற்ற திசைகளில் தீயபலனும் உண்டாகும் மேலும் மனையும் பாழாகும்.

மேல்சாரி வீட்டில் கிணறெடுப்பதின்பலன்

மேலதிலில் லஞ்செய்யவே ணதார்க் கிணறுமானால்
சீலமாங்கும் பமீனம்சிங் கமுந்துலை யுங்கன்னி
சாலவே தேளுமேடம் தங்கிடத்தன மேலாபம்
பாலன்போம் நடுவுமாகா பண்புடன்மனை யுந்தீதாம். (1196)

மேற்குத்திசை சார்ந்த மனையில் கிணறு எடுக்க விரும்பினால், வடகிழக்கு, வடமேற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு, கிழக்கு, முதலான திசைகளில் நற்பலனும், நடுப்பகுதியில் கிணறு எடுத்தால் மனைத்தலைவன் கேடுறுவான், மனைக்கும் தீங்குண்டாகும்.

வடசாரி வீட்டின் கிணறெடுக்கும் பலன்

சந்திரன்திக் கின்வீட்டில் சரிவரக்கிண றுவேண்டில்
தந்திரகன் னிசிங்கம் தருதேளி டபம்நண்டு
சுந்தர மீனமாயின் சுகமுண்டாம் அதிகநன்மை
குந்தகம் நடுவுமாகும் குணமிலைமனை தான்பாழே. (1197)

வடதுபுறம் சார்ந்த வீட்டின் மனையில் கிணறு எடுக்க விரும்பினால் தென்மேற்கு, தென் கிழக்கு, வடக்கு, வடகிழக்கு, தெற்கு, முதலான திக்குகளில் சுபபலன்களும், அதிக நன்மையும் நடுப்பாகத்தில் துன்பங்களும், இடையூறுகளும் ஏற்படுவதுடன் மனையும் பாழாகும்.

வீட்டில் கிணறு இருக்கும் லட்சணம்

வடபாலீ சன்கிழக்கோ டுவளரும்மேற் கேகிணறாகில்
மடவாளின் பம்சுகங்கொடுக் கும்மகனுமரணம் வாயுதன்னில்
அடைநோய்நிரு தியமன்மர ணமங்கியாயில் சிசுவில்லை
நடலைமை யும்பொருள்நா சம்நன்றாய்இருக் கமயனுரைத்தார். (1198)

வடக்கு, வடகிழக்கு, கிழக்கு மேற்கு இத்திசைகளில் கிணறு ஏற்பட்டால் பெண் இன்பம் கெடும், வடமேற்கில் கிணறு இருந்தால் புத்திரநாசம், தென்மேற்கில் கிணறு இருந்தால் அடைப்பான் நோயுண்டாகும், தெற்கில் மரணம் உண்டாகும், தென்கிழக்குத் திசையில் கிணறு இருந்தால் புத்திர நாசமும் உண்டாகும்.

கட்டிய மனையிற் கூபங் கட்டிடக் கீழ்வியாதி
கிட்டிய அங்கிமைந் தர்கேடு பெண்மாயுந் தென்பால்
மெட்டிய நிருதிபீடை மேல்திசை செல்வங் காத்து
தட்டிய தலைவன் மாயுந்தன திக்கு விளைவுமீசன்
மட்டிடா இன்பம் நல்கும் மனைநடு ஆகாதென்னே. (1199)

கட்டிய வீட்டில் கிணறானது இருக்குமிடம் கிழக்கில் வியாதி, தென்கிழக்கு புத்திர நாசம், தெற்கு பெண்மரணம், தென்மேற்குபீடை, மேற்கு செல்வமுண்டாம், வடமேற்கு விளைவுண்டாம் ஈசான மூலை (வடகிழக்கு) இன்பமுண்டாகும், நடுப்பகுதி ஆகாது.

தேடுமவர் சிந்தைதனி லேயுரை யுமீசன்
நாடுமவர் மாகுடிலில் நண்ணிடு சோமன்
மாடுதுலை கொண்டல் வருணன் மீதில்
கேடிலை மிகுந்தநய மாங்கிணறு வெட்டின். (1200)

ஈசானமூலைக்கிணறானது சுபபலனும், சந்திரன் திசை (வடமேற்கு) சுபபலனும், வடமேற்கு செல்வமுண்டு, மேற்கில், தனச்சேர்க்கை, இத்திக்குகளில் கிணறு எடுத்தால் சுப பலன் உண்டாகும்.

எடுத்தகிண ரங்கியும் யமனிருதி வாயுவும்
விடுத்தபிரம ணடுவினிற் கிணறு வெட்டில்
அடுத்துவரு மக்களும் அவிந்துடமை பாழாய்
கெடுத்தபடி ஆமெனவே ஒட்டாது கிடைக்கும். (1201)

கிணறெடுக்கும் திசை அக்கினி மூலை (தென்கிழக்கு) தெற்கு யமன்திக்கும், நிருதி (தென்மேற்கு) வாயு (வடமேற்கு) பிரமதிசை (நடு)

இவ்விடங்களில் கிணறு வெட்டினால் சந்ததிகள் நாசமடைவர், உடைமைகளும் பாழகும் இது நிச்சயமான பலனாம்.

மேலைத் தென்கிழ் கிணறாகில் மக்கள்போம்
மிளிருந் தெற்குத் தென்மேற்கு மரணமாங்
கோல மேற்குநோய் மத்திபம் வாயுவே
குறைவில வடக்கு ஈசன் கிழக்குமே
பால் பாக்கியம் ஆகும் பசுக்களும்
பவிசு சுத்தம் பதியும் அதிகமாம்
சீலமா கவிப்பாப் பயின்யா வையுஞ்
சிந்தையில் வைத்துச் செப்புவார் சித்தரே. (1202)

மேற்கு, தென்கிழக்கு, கிணறு எடுத்தால் புத்திரநாசம், தெற்கு, தென்மேற்கு மரணம், மேற்கு, வடமேற்கு மத்திபம், வடக்கு, வடகிழக்கு, கிழக்கு குறைவராது, பால்பாக்கியம், பசுவிருத்தி, புகழ், சுத்தம், மனைலாபம் முதலான பலன்களைக் கிணறு இருக்கும் இடங்களின் மூலம் தெரிந்து கொள்ளலாம் என்றவாறு உரைப்பவர் சித்தர்போலாகுவர்.

வீட்டின் தோட்டத்தில் மரங்கள் இருப்பதினால் உண்டாகும் பலன்கள்

எண்ணமேபோ லேயெங்கும் எழுந்திடும் மனைத்தோட் டத்தில்
கன்னியு மாப்பலாவும் கனிவர்க்கம் வேம்பு தெங்கு
புண்ணியம் ஆனபுஷ்பச் செடிகளும் கொடி மூலங்கள்
பண்ணிய பாத்திகட்டில் பயிரிடக் கருமம் நன்றே. (1203)

மனையின் தோட்டத்திலே, கரந்தை, மா, பலா, கனிமரங்கள், வேம்பு, தென்னைமரம் பூச்செடிகள், கொடிவகை, கீரைவகை பாத்திகட்டிப் பயிரிட்டால் நற்பலனே யுண்டாகும்.

தெங்கு பலாமா கதலி செங்கரும்பு பூங்கமுகு
பாங்குடன் நீர்நிம்பை யுநன்மனைக் குப்பண புடனே
நீங்கும் வகைதள்ளி நினைவில் வைத்துப் பாராமல்
பாங்குபெற இன்ன முங்கேள் பலன்கள் யாவையுமே. (1204)

தென்னை, மா, வாழை, பலா, மரங்கள், செங்கரும்பு, பூங்கமுகு, துளசி இவற்றை வைத்து வளர்க்கலாம் தீயவைதள்ளி நல்லவற்றை வளர்க்கவும்.

கிளுவையாம் வில்வம் விளா வெண்ணொச்சி மாவிலிங்கும்
உளுவையா முல்லை மல்லிமுட் தூதுவளை யுமாகா
குளுவையா மாமரத் தரசுகூத்து நொச்சி ஆகாது
தளுவையா ஆச்சா தனக்கு மணமுஞ் சேராதே. (1205)

கிளுவை, வில்வம், விளா, வெண்நொச்சி, மாவுலிங்கு, முல்லை, மல்லி, முள்தூதுவளை, இவையாகாது, மாமரம், அரசு, நொச்சி இவையும் ஆகாது, ஆச்சா, தனக்கு இவையும் ஆகாதவைகளாகும்.

ஆலரசு வாகை நெல்லி ஆனதொருமின் னைகுமிழ்
வேலாகா மூன்று வகைவெட் பாலை முருங்கையுமே
தானாகா பேரகத்தி சிற்றகத்தி தன்மை மிகு
காலாகா மகிழ் பாலை காரிகையே மாதரசே. (1206)

ஆல், அரசு, வாகை, நெல்லி, பசுமுன்னை, பெருங்குமிழ், கருவேல், மூன்று வகை வெப்பாலை, முருங்கை, பேரகத்தி, சிற்றகத்தி, மகிழ் பாலை, இவை ஆகாது என்றறிக.

பருத்தி அகத்தி பனைகை முருக்கு
மெருக்கும் புளிநெல்லி என்று - மிருக்கொணா
வாழ்மனையில் வைத்தாக்கால் மாங்குயிலே தப்பாமல்
தாழ்வாகச் செகயுஞ் சிதா.)1207)

பருத்தி, அகத்தி, பனை, முருங்கை, எருக்கு, புளி, நெல்லி இவை வீட்டுத் தோட்டத்தில் வைத்தால் வாழ்வு தாழ்மையடையும்.

மனையைச்சுற்றி இருக்கக்கூடாத மரம்

எருக்குடன் அகத்தி நாவல் இயல்புடன்முருக் குநெல்லி
தருக்குடன் பனை பருத்தி தகுபுளியெட் டுஞ்சுற்றி
செருக்கியே வாழும் அந்தச் செல்வமாம்மனை யைச்சுற்றி
நெருக்கியே இருக்கும் ஆகில் நிலைவரங் கேடதாமே. (1208)

எருக்கு, அகத்தி, நாவல், முருங்கை, நெல்லி, பனை, பருத்தி, புளி இவை எட்டும் மனையைச் சுற்றி இருந்தால் அம்மனைக்குக் கேடுண்டாக்கும் எனவே கூடாது என்றறிக.

வீட்டில் பயிரிடாத செடி கொடி வகைகள்

துவரையும் பேய்ப்பீர்க்கும் தூதுவளை யோடே
அவரைக் குமரி அவுரி இவையாறும்

பார்மனைக் கொல்லையில் பாங்காயிட இவற்றின்
வேர்விழச் சூனியமாம் வீடு. (1209)

துவரை, பேய்ப்பீர்க்கு, தூதுவளை, அவரை, கற்றாழை (குமரிக்கற்றாழை) அவுரி முதலான ஆறு செடிகொடிகள் வீட்டின் தோட்டத்தில் பயிரிடக் கூடாது பயிர் செய்தால் அவற்றின் வேர் மனையில் பட்டால் அவ்வீட்டில் சூனியம் புகும்.

பாதிரி கோங்கு பரிமுல்லை சண்பகமும்
தேரிய நெல்லியுறும் பரத்தைக் - கோதார்
மகிழ்தேற்றான் காட்டாத்தி வாய்ந்தலிங்கு நெட்டி
இகுமிழ் கூடா இவை. (1210)

பாதிரி, கோங்கு, முல்லை, சண்பகம், நெல்லி, செம்பரத்தை, மகிழ், தேற்றான், காட்டாத்தி மாவுலிங்கு, நெட்டி, குமிழ் இவையும் வீட்டுத் தோட்டத்தில் வைக்கத் தகுதியற்றவை.

வாகை முருங்கை வளரத்திப் புன்னையுந்
தோகை பேய்முன்னை யுஞ்சோகத்தி - யேகக்
குடியோட்டும் பாரீர் குவலயத்தில் தட்டும்
இடியீட்டும் என்றே விளம்பு. (1211)

வாகை, முருங்கை, அத்தி, புன்னை, தோகை, பேய்முன்னை, தோதகத்தி இவை வீட்டுத் தோட்டதிலிருந்தால் குடியை விரட்டிவிடும், மேலும் பெரும் இடியுண்டாகும் என்றறிக.

வேறு

எருக்குடன் அகத்தி பருத்தி ஏற்றவிருப் பைவில்வம்
தருக்கு விளாபுளி கோங்கு தானமாலரி வாகை
செருக்குள முருங்கை சேர்பனை செம்மையா மணக்கிலவு
வறுக்க நறுவிலி வந்திடின் வாழ்வதுகுறை யுந்தானே. (1212)

எருக்கு, அகத்தி, பருத்தி, இருப்பைமரம், வில்வம், விளா, புளி, கோங்கி, அலரி, வாகை, முருங்கை, பனை, ஆமணக்கு, இலவு, நறுவிலி, இவை இருந்திடில் வாழ்வு குன்றுமாம்.

கொன்றை நாவல் குளிரெலு மிச்சை கூறுபலா
நன்றுசேர் முல்லை துளசி நவிலுங்கமு குமல்லி

வென்றிசேர் மாதுளை வேம்பு வேர்தருவா ழையுடனே
இன்புள திராட்சை நாரமெழில் உத்தமம் ஆகுந்தானே. (1213)

கொன்றை, நாவல், எலுமிச்சை, பலா, முல்லை, துளசி, பாக்கு, மல்லிகை, மாதுளை, வேம்பு, வாழை, திராட்சை, நாரத்தை இவை உத்தமம் ஆகும் என்றறிக.

வீட்டுக்கருகில் குளமிருப்பதின் பலன்

குளமதும் இருந்தால் போகும் குணமுடன்மனை யைக்கேளு
பெலமது குண்டைவீடு பெருகுடங் கன்னி கோலுந்
தளமது மனையுந் தீர்க்கம் தனமுடன் அரசனாவான்
தளமது மற்றராசி தகுத்திடும் வீடு பாழே. (1214)

வீட்டுக்கு அருகில் குளம் இருந்தால் அம்மனை பாழாகும், ஆனால் ரிஷபம், கும்பம், கன்னி இம்மூன்று இராசிகளுக்குரிய தெற்கு, தென்மேற்கு, வடமேற்கு முதலிய திசைகளில் குளம் இருந்தால், அம்மனைக்குக் கேடில்லை, செல்வவளத்துடன் அரசவாழ்வு வாழ்வான், மற்ற இராசிகளின் திக்கில் குளம் இருந்தால் அவ்வீடு பாழே ஆகும்.

பெருகிய குளமுங் கும்பம் பேணியமனை யுஞ்சிங்கம்
மருவிய மகரம்விள் ளும்மனையுடன் வீடு பாழாம்
அருகிய சிங்கவீடு அழிந்திடு மக்கள் போகும்
தருவிய தனங்கள் போகும்தகை மயனுரை செய்தானே. (1215)

வடமேற்குத்திசையில் குளமும், தென்கிழக்கில், தென்மேற்குத்திசையில் வீடும் இருந்தால் அவ்வீடு பாழாகும், தென்கிழக்கில் குளம் இருந்தாலும் அம்மனைபாழாகும், புத்திர நாசமும் உண்டாகும், சேர்த்து வைத்த செல்வங்களும் தொலைந்து போகும் என மயனுரைத்தனர்.

சூரியன் வீடுமாகா சுறாவுடன் சேய்வீ டாகா
மாறிய ராசிநாலு மனையுடன் வீடு பாழாம்
பாரியு மக்கள் சேதம் பாக்கியங் கேடதாகும்
நாரியும் மனையும் பாழே நலமயன் உரைத்தவாறே. (1216)

சூரியன் வீடான சிம்மத்தின் திசையில் (தென்கிழக்கு) குளமிருப்பதும், மகரராசித் (சுறா) திசையான தென்மேற்கிலும், செவ்வாயின் வீடுகளான மேஷத்திசையான கிழக்கு, விருச்சிகத்தின்

வடகிழக்குத் திசைகளில் குளம் இருந்தாலும் அவ்வீடு பாழாகிப்போகும், புத்திர நாசமுண்டாகும், பாக்கியங்கள் கெடும், மனைவிக்குக் கேடுறும் அத்துடன் அம்மனையும் பாழாகிப் போகும் என மயனருளியவாறே.

கன்னியு மீனமாகும் கடகமும் கும்பம் பேறு
வன்னிய துலாமும் நன்றாம் வாழ்வுடன் பெருகவுண்டாம்
பன்னிய அரசனாகில் பாக்கியம் மெத்த உண்டாம்
மன்னிய மயன்தானித்தை மகிழ்சியா யுரைசெய் தானே. (1217)

வீட்டிற்குத் தெற்கு, வடக்கு, தென்மேற்கு, வடமேற்குத் திசைகளில் குளமிருந்தால் பேறுகள் உண்டாகும், மேற்கில் குளமிருந்தால் வாழ்வு பெருகும், க்ஷத்திரியர் மனைக்கு மேற் கூறிய திசைகளில் குளமிருந்தால் பாக்கியங்கள் பெருகும், இதனை மயனார் அருளினார்.

கண்டதக்கினி மூலையிற் கள்ளமாங்குழி குளங்கள்
உண்டெனிலடி யாள்சாவாள் உயிருடன்பொரு ளும்போகும்
தெண்டிசை ணார்திக்கில் சிறப்பில்லை இடியேயாகும்
தண்டியகொடி யாள்திக்கில் சம்பந்தம் பொருள்வந்தெய்தும். (1218)

அக்கினி மூலையெனும் தென் கிழக்கில் குழிகளோ, குளங்களோ இருந்திடில் மனைவி மரணம், மேலும் பொருட்களும் சேதமாகும், தலைவனும் சாவான், எமன் திசையெனும் தெற்கில் கிணறு இருந்தால் நற்பலனில்லை, கேடே ஆகும், புதனின் திசையான தென்மேற்கில் குளம் இருந்தால் நற்பொருள் வந்து சேரும்.

வாம்புகழ் மேற்குசெல்வம் மத்திபம்வட மேற்காகா
ஆம்பொருள் கிழக்குச்சோ மனிரதமுங் கல்விதானும்
தாம்முதல்பல வுஞ்சேரும் தையற்கேள் ஈசன்திக்கில்
வேம்மட்டும் தீயில்பட்டு மிக்கநோய்வறு மைகாணும். (1219)

மனைக்கு மேற்கில் குளமிருந்தால் செல்வமுண்டாகும், மத்திபமான பலனுண்டாகும், வடமேற்குத் திசை ஆகாது, கிழக்கும், வடமேற்கும், இரத்தினங்கள் சேரும், கல்வியுண்டாகும், ஈசான்ய திக்கில், வீடுதீப்பற்றும், வறுமையும் உண்டாகும் என்றவாறு.

சிங்கமும் பருந்துபூனை சிறந்திடுந் திக்கிலேதான்
அங்கொரு குளமுண்டா கிலதின்கோடி மனைக்கேஆகா

தங்கிய கன்னிமேற்குத் தனுமதியீ சன்திக்கில்
மங்கைகொள் குளத்தின்கே டிமனையவர் வாலும்நன்மை. (1220)

தெற்கு, கிழக்கு, தென்கிழக்குத் திசைகளில் குளம் இருந்தால் அதன் காரணம் மனைக்குக் கேடுண்டாகும், தென்மேற்கு, வடமேற்கு, வடகிழக்குத் திசைகளில் மனை இருந்தால் குடியிருப்பவர்களுக்குக் கேடுவுண்டாகும்.

சந்திர வாஸ்து மனை

நன்றாகும் மல்லிகை முல்லைநல் இருவாட்சி செண்பகமும்
நன்றாகும் இதுநல்தோ டங்களென்று மேநாட்டினில் நாடாது
இன்பமிகுமே மாதுளை ஏற்ற பன்னீர் பூமணந்தான்
ஒன்றாகுங் கோங்குபுன்னை உயர்வேர்க் கொழுந்து மருவதுவே. (1221)

மல்லிகை, முல்லை, இருவாட்சி, செண்பகம், இவை மனையில் நின்றால் ஆகாது, மாதுளை, பன்னீர் மரம், கோங்கு, புன்னை, வேர்கொழுந்து, (மருக்கொழுந்து)

அதுவிலாமிச் சைபாதிரி ஆனநற் புடல்ஆ ரணங்கே
அதுதாழை சாதிசாதகப் பூவும் ஆனசிறு சண்பகமும்
அதுவொத்த கதம்பை புநுகு அருஞ்சவ் வாதுமேவ
அதுதென்னங் கமுகு பூவெலுமிச் சைநாரத் தையே. (1222)

விலாமிச்சை, பாதிரி, நற்புடல், தாழை, சாதிக்காய் மரம், சாதகப்பூ, செண்பகம், கதம்பை, புநுகு, சவ்வாது, தென்னை, பாக்கு, எலுமிச்சை, நாரத்தை.

நாரத்தை பலாப்பழந் திருமஞ்சனப் பட்டை நாடி அறி
வாரத்தை கர்ப்பூர துளிப்பச்சைப் பூரண முப்பதா னகுறி
தூர்த்தை பிராமணன் நன்மனை சொல்வாய் முப்பது வாசனையால்
ஆர்த்த அம்மனை சந்திர வாஸ்துவாம் என்று ஓதினரே. (1223)

பலாப்பழம், திருமஞ்சனப்பட்டை, கற்பூரவள்ளி, திருநீற்றுப்பச்சை, முதலான முப்பது வாசனைப் பொருட்கள் கூடியது பிராமணன் மனையாகும் இவ்வாறு முப்பது வாசனைத் திரவியங்கள் சேர்ந்திருக்கும் மனையானது கடக வாஸ்துமனை என்றாகும்.

க்ஷத்திரியர் மனை

நன்று புரவலர்க்கு நன்மை தருமணமே
ஒன்றுமுதல் முப்பத்தா றொக்குமே - அன்றுமே

கண்டெடுக்கக் காரிகையே காணும் குறிப்புத்தான்
வெண்டுரைக்க வேணும் விதம். (1224)

மன்னர்கள் வாழ்மனைகளில் முப்பத்து ஆறு நறுமணவகைகள் கூடி இருத்தல் நன்றாகும். அவைகளின் வகைகள் கூறுகிறேன் கேட்பாயாக.

விதமுப்பத் தாறதனை விண்ணறியச் சொல்வேன்
நிதமறிந்து நிச்சயமா நீசொல் - பதனத்
துளசிகளா வில்வம் மருதாணி வெட்சி
விளநொச்சி கார்நொச்சிப் பூ. (1225)

முப்பத்தாறு வகைகளையும் சொல்கிறேன் கேள், துளசி, களா, வில்வம், மருதாணி, வெட்சி, வெண்நொச்சி, கருநொச்சிப்பூ வகைச் செடிகளும்.

பூஞ்சங்கு சாணாங்கி பூவரசம் பூக்கொத்தான்
ஆமுப்பத் தாறாய் அறிந்துபார் - தாமென்றுந்
தன்குலமாஞ் சத்தியர்க்குத் தான்மணம் பார்த்தமனை
இன்வகையாய்ப் போட்டு அறி. (1226)

பூஞ்சங்கு, சாணாங்கி, பூவரசப்பூ, வேரில்லாக் கொத்தான் முதலான முப்பத்தாறுமாகும் இம்மணங்கள் பொருந்திய மனைகள் சத்திரிய மனைகளாகும்.

வரும்படி பரநினது சிவகதிபுகழ் வாழ்ந்திடுவார் குரப்பான
வர்களுக்குத வியமந்திரம் குறிப்புடனே திருவடி போற்றிடு
மருளினை மறந்திடா தெளிவுறும் அடியவர்க் கன்புடனே
மருவியம் மனையிது மாட்டவும்பூட் டவும்மார்க் கமுமிதுவே. (1227)

க்ஷத்திரியர் மனைகளுக்கு சிவனருள் வாய்க்கும் படியாக இறைவனின் திருவடிகளை வணங்கி அன்புடன் மேற்கூறிய முப்பத்தாறு வாசனைகள் பொருந்திய மனையில் க்ஷத்திரிய மனை அமைத்திடவும்.

தாளமனைத் தனித்தனி அவரவர்க்கு உறுதியாய்த் தப்பிடம் புக்காமலே
வானவர் புகழ்ந்திட வாழ்த்தியும் போதறியும் வாணிபமிக மேலேற
மானமுஞ் சேவகம் மகிழ்ச்சியும் புகழ்ச்சிமர்க்கமும் அறிந்து கொண்டே
தென்புகழ் போசனந் தீர்க்கமும் திடமுடன்றே றியேமனை கட்போடே.(1228)

மனைகளை அந்தந்த வருணத்தினருக்கு ஏற்றபடி தனித்தனியே இடம் தெரிந்தெடுத்து தேவர்கள் புகழ்ந்து வாழ்த்தவும், வியாபாரம் விருத்தியடையும் படியும், மானமும், அரசாட்சியும் மகிழ்ச்சியும், புகழும் உண்டாகும் வழிவகை அறிந்தும் ஆகாரக்குறைவில்லாத செல்வச் செழிப்பு உண்டாகும் படியான மனைகளைக் கண்டறிந்து மனைகள் அமைப்பீராக.

வைசியர் மனை

போட்டு மனையதற்குப் போதமாவை சியருக்குத்
தேட்டு மிகவுண்டாம் தெரிப்பது தான்மனைக்கு
நாட்டுவாசனை அதனைநான் அறிந்து முப்பதையும்
கூட்டுங்குறிப் பொன்றாய்க் கூசாமற் சொல்லக்கேளே. (1229)

வைசியர் மனைக்கு நற்பலன்களை வழங்கும் முப்பது வகை மணங்கள் அறிந்து செய்யவேண்டிக் கூறுகிறேன் கேள்.

முருங்கை முசுட்டை முன்னை தாமரைப் பூவுந்
திரும்பு செவ்வல்லி செங்கழு நீர்நெய் தலுடன்
திரும்பக் கொத்து மல்லி சீராம் பெருஞ்சீராம்
அரும்பு வெந்தயம் கெந்தம் அரிதாரம் தூதுவளை. (1230)

முருங்கை, முசுட்டை, பசுமுன்னை, தாமரைப்பூ, செவ்வல்லி, செங்கழுநீர், நெய்தல், கொத்துமல்லி, சீரகம், சோம்பு, அரும்பு, வெந்தயம், கந்தகம், அரிதாரம், தூதுவளை மற்றும்

வாழைக் கத்தரி பாகல் வண்மைகணை கர்க்காக்கரட்டை
கோழை கொட்டைக் கரந்தை குருக்கத்தி யாலமரி
தாழையாந் தன்னம் அரியாட்டம் அரிதேங் காயமுகல்
பேழை ஏலங் கிராம்பு பெருவால் மிளகாமே. (1231)

வாழை கத்தரி, பாகல், காக்கட்டான், கொட்டைக்கரந்தை, குருக்கத்தி, அலரி, தாழை, அரியாட்டம், அழுகிய தேங்காய், ஏலக்காய், கிராம்பு, வால்மிளகு, ஆல், அமுறிப்பூடு இவைமுப்பதாம்.

ஆமுப்பதின் குணமும் அறிந்து நன்றாயா ழம்பறித்து
தான்மணமே பார்த்து நன்றாய்த் தயவாய்ஆய்ந் துநீபோட்டு
ஓமனை யாய்நீ பார்த்துயர்ந் தவணிகருக் கருளி
நாமிடம் இருந்து வீடுகட்ட நலமாம் வணிகருக்கே. (1232)

முப்பதின் குணமும் அறிந்து குழிகெல்லி மண்எடுத்து ஆராய்ந்து மேற்சொன்ன மணங்களும் இருக்கும்படி அறிந்து மனையெடுக்க வணிகருக்கு நலமுண்டாகும்.

வணிகர் மனைவீ தியிலே வாழ்கோவில் ஆகாது
அணியணி யாயரையின் மட்டு கடைகட் டிடுவாய்
மணிபெரு குஞ்சீலம் உறுமா தனங்கள் ஏறியிடும்
துணிபெருகி வாழ்ந்திடவே துடுக்காகும் பொற் கொடியே. (1233)

வைசியர் வாழும் மனையுள்ள வீதியில் கோவில் இருக்கக் கூடாது அடுக்கடுக்காக வணிக வளாகம் போன்ற மனை கட்டிடுவாய் அதனால் புகழும், தனங்கள் பெருகுதலும், நற்பலன்கள் யாவும் பெருகி நலமாக வாழ்வார்.

பூமியின் குற்றந்தீர

பார்தனில் குற்றம் தீரப்பகை இல்லாநா ளைப்பார்த்து
சீர்பெற கணபதிக்குச் சிறப்பினால் பூசை செய்து
நேர்பெற காளை கட்டிநிலம் தையுழுது பின்னும்
வேர்நவ தானியத்தைப் பெலமதாய் விதைத்துக் கொள்ளே. (1234)

இவ்வுலகில் மனைக்குற்றம் தீரவேண்டில் பகை இல்லாத நாளைப்பார்த்து கணபதி ஹோமம் செய்து மாடுகள் பூட்டி ஏரினால் உழுது நவதானியத்தை விதைத்துக் கொள்வாயாக.

கொண்டபின் பதினைந்தா நாள்குறை விலாமுளைத் தபின்பு
விண்டுநல் பசுவைவிட் டுவிரைத்ததை மேய்த்துப் பின்னும்
குண்டமா மெழுகிசாந்தி கோடி வஸ்திரமுங் கட்டி
பண்டுள்ள மறையோர்க் கங்கே பிராமணச்சா லைபண்ணே. (1235)

தானியம் விதைத்த பதினைந்தாம் நாள் விதைகள்முளைத்தபின்பு பசுக்களை விட்டு அந்தத் தானியச்செடிகளை மேயவிட்டுப் பின்பு மனையை மெழுகிக் கோடி வஸ்திரமும் பசுவுக்குக் கட்டி

பண்ணியபின் நமஸ்கரித்துப் பண்புடனெழுந் திருந்து
மண்ணின்மேல் மனைசெய்வோர்க் குவரமதுகேட் கும்போதே
எண்ணியே கேட்கநல்ல பாக்கியமீ வாராக்கால்
நண்ணியேமுகூர்த் தங்கொண்டு நன்மனை கோலநன்றே. (1236)

வஸ்திரம் கொடுத்து நமஸ்கரித்துப் பின்பு அம்மனையில் வீடுகட்டினால் எல்லாவிதமான நன்மைகளும் உண்டாகும் நல்லமுகூர்த்தங் கொண்டு மனை கோலுவாயாக.

இடச்சுத்தம்

மனைபார்க்க இலக்கினமே சுத்தியாகும்
மனைபோட இரண்டேழாம் இடமேசுத்தம்
மனைதனக்கு மரம்வெட்டமூன் றேசுத்தம்
மரம்தச்சு வேலைசெய்ய நாலேசுத்தம்
மனைமாண வாசற்கால் நிறுத்தவைந்து
வகைஉத்திரம் போடவா றாந்தானம்
மனைகூடங் குலந்தழைக்கவே ழேசுத்தம்
வடிவேலர் இந்நூலைக் குறித்திட்டாரே. (1237)

குடியிருக்க மனைவாங்கி அதனை முதன்முதலாகப் பார்வையிட லக்கினம் சுத்தமாக இருக்க வேண்டும், மனை அமைக்க இரண்டு, ஏழாமிடங்கள் சுத்தியும், மரம் வெட்ட மூன்றாமிடம் சுத்தியும், மரம் தச்சு வேலை செய்ய நாலாமிடம் சுத்தியும், வாசற்கால் நிறுத்த ஐந்தாம் இடம் சுத்தமும், கூடம் அமைக்க ஏழாமிட சுத்தியும், உள்ளபடியான லக்கினங்களில் முகூர்த்தங் கொண்டு மனைக் காரியங்களைக் கவனித்துச் செய்யவும் என்று முருகப் பெருமான் இந்நூலை உரைத்தார்.

குறித்தலகுகை சாத்திவைக்க எட்டாம்
குறுக்குப்பட் டைக்கொன்பதாம் ஓடுபத்தாம்
தெருக்கதவு நிலைநிறுத்தப் பதினொன்றாகும்
திங்கள்புதன் குடிபுகவீ ராறாம்சுத்தம்
பெருக்கமுடன் இவ்வகையாய் அமர்ந்ததானால்
பேருலகில் மன்னருக்கு மன்னராவார்
பொருள்தனங்கள் மனைதனிலே சேருமென்று
போகமுனி இந்நூலைக் குறித்திட்டாரே. (1238)

கைமரங்கள் செதுக்கி எடுக்க எட்டாமிடம் சுத்தியும், சட்டங்கள் (ரீப்பர்) சேர்க்க ஒன்பதாம் இடம் சுத்தியும், கதவு நிலை நிறுத்திட பதினொன்றாம் இடமும், திங்கள், புதன் கிழமைகளில் குடிபுக பன்னிரண்டாம் இடம் சுத்தியும், இந்த வகையாக ஆராய்ந்து செய்வாராகில் மனையில் வாழ்வோர், தனங்கள் சேர மன்னருக்கும், மன்னராகப் புகழுடன் வாழ்வர் என்று ரிஷிகளில் சிறந்தவரான போகமகரிஷி திருவாய் மலர்ந்தருளினார் இந்நூலை.

தென்வடல் வீதியில் உத்தமமனை

வீதியுதக் குத்தென்புறத்தில் விளங்குமனை களிருந் தாக்கால்
நீதியுறவே வடசாரி கருடன் யோனி நியமிக்க
பீதியறவே தென்சாரி மனையின் பேச்சுமது மனையில்
பூதிதான்யம் பெருகுமிக புத்திரர் சுகமென்றார் மயனே. (1239)

தென்வடலான வீதியில் வீடுகள் இருந்தால் வலதுபுறம் சார்ந்த கருடயோனியில் மனை உண்டுபண்ணலாம், (தென்சாரிமனை ஆகாது) இதனால் பூமி, தானியம் பெருகும் புத்திரர்கள் சுகம் உண்டாகும் என்று கூறினார் மயனே.

கீழ்மேல் வீதியில் உத்தமமனை

திடமாம் கீழ்மேல் பக்கமதில் சேருமனையின் கீழ்ப்புறமே
பிடியோவல துஅரியோனி பேசும்மேல் பால்பணி யோனி
நெடியமனை யேஉத்தம மாம்நிலவுங் களிப்பும் சம்பத்தும்
படியில் புத்திர பாக்கியமே படருமென்றார் மயனுமே. (1240)

மனைவீதியானது கீழ்மேலானால் அரியோனியின் திசையும், அனில் யோனியின் திசையும் வீடு கட்ட உகந்தவையாகும், மனை நலம்பெறும், இன்பமும், சம்பத்தும், புத்திர பாக்கியமும் உண்டாகும் என்று மயனுரை செய்தனர். (யானை யோனி அல்லது, சிம்மயோனி, மேற்குத்திசை யோனி ஆகும் எனல்)

உத்தம மனையின் பலன்

இருமனை அமைக்கவின்னே உத்தமம் இதுவாம் என்றே
பொருவரு சிற்பநூலிற் புகன்றனர் சேய்தனந் தானியம்
பெருகுமே வாழ்வுமிக்க பெருமையும் எய்தும் என்ன
அருமையாய் மயனார்தா னுமரைந்தனர் உலகோர்க் கன்றே. (1241)

முன்னம் கூறியபடியாக அமைந்த உத்தமமனையே நன்று என்று சிற்ப சாத்திரத்தில் புகன்றனர் முன்னோர் இதனால் வாழ்வு பெருகும், பெருமையுண்டாகும், என மயன் உரைத்தனரே.

இந்தநல் விதமாயில் லம்எழில்பெற அமைப்போர்க் கென்றும்
தொந்தர வில்லை என்றே சூட்சமாய் மயனுரைத்தார்
புந்தியிலி தனைக்கொண்டு போற்றியே மனைகள் செய்யின்
கந்தனின் கருணையுண் டாம்கழறுவாய் உத்தம மனைக்கே. (1242)

இந்த விதமாய் மனைகள் செய்தால் எந்தவிதமான இடைஞ்சலும் ஏற்படாது என்ற காரணத்தினால் மயனானவர் கூறினார் இதை நினைவில் வைத்து வீடுகள் அமைத்திடில் முருகப் பெருமானின் அருள் அம்மனைக்குப் பரிபூரணமாகக் கிட்டும்.

உத்தம மனையில் வாழ்வோர்க் கொருவரும் எதிரியில்லை
சுத்தமுஞ் சுகமும் உண்டு சுந்தர வாழ்வுமுண்டு
கந்தனின் கிருபை உண்டு காத்தலிற்பெரு மையுண்டு
வித்தக ஞானம் உண்டு விளங்கிடுமைந் நூறாண்டே. (1243)

உத்தமமனையில் வாழ்கிறவருக்கு எதிரிகள் யாரும் இருக்க மாட்டார்கள், சுத்தம், சுகம், சுந்தரவாழ்வு இவையாவும் முருகப் பெருமானருளால் கிட்டும், ஞானமும் கிட்டும் அத்துடன் அம்மனை 500 வருடங்கள் வரை நிலைத்திருக்கும்.

பொங்கிய செல்வம் உண்டு புத்திரர் அநேகமுண்டு
மங்கள வாழ்வும்உண்டு வன்மையும் பெருமையுண்டு
எங்குமே கியாதி உண்டு எழில்பெறு மனைவியுண்டு
தங்கிய சுற்றமுண்டு தழைத்திடும் ஐநூறு ஆண்டே. (1244)

செல்வம் செழிக்கும், புத்திர விருத்தியுண்டு, மங்களகரமான வாழ்வும், வலிமையும், பெருமையும் புகழும், அழகிய மனைவியும், நல்ல சுற்றத்தினரும் கூடியிருக்க அந்த மனையானது ஐநூறு ஆண்டுகள் நிலைத்திருக்கும்.

தைரியம் மெத்த உண்டு தனித்திடுந் சம்பத்துண்டு
பெருமையும் மிகவும் உண்டு பேசிடுந் தெய்வமுண்டு
சிறுவரும் மெத்த உண்டு சேயிழை சுகமும்உண்டு
நெருங்கிய கூட்டம் உண்டுநேர் பெருமைந் நூறாண்டே. (1245)

மனத்தைரியம் உண்டாகும், சம்பத்துகள் உண்டாகும், பெருமைகளதிகமுண்டு, தெய்வங்கள் அம்மனையில் நின்று பேசிடும், புத்திர விருத்தியும், மனைவி சுகம் உண்டு, சுற்றத்தார் கூட்டம் உண்டு இவைகூட பெருமையுடன் அம்மனை ஐநூறு ஆண்டுகள் வரையிலும் நிலைத்து நிற்கும் என மயனார் அருளிச் செய்தவாறே.

உத்தம மனைக்கு மெத்த உதவியுண்டர சர்தன்னால்
மெத்தவும் அழகும் உண்டு மேம்படு கணிகளுண்டு

வித்தையும் விருத்தி உண்டு விளங்கிடு செல்வமுண்டு
பத்தியும் ஞானமுண்டு படருமே ஐநூறு ஆண்டே. (1246)

உத்தம மனைக்கு அரசர்களால் மிகுந்த உதவியுண்டு, அழகும், விருத்தியுண்டாக்கும் காரியங்கள் உண்டு, கல்வியும் பெருகும், செல்வவளமையும், பக்தியும், ஞானமும் கூடிருக்க ஐநூறு ஆண்டுகள் அந்த மனை நிலைத்து நிற்கும்.

செல்வமும் மிகவும் உண்டு சேயிழை லாபம் உண்டு
பல்வித பாக்கியம் உண்டு பலமுமே மிகவும் உண்டு
சொல்லுகள் உறுதி உண்டு சுந்தர வாழ்வும் உண்டு
பல்வித வணிகம் உண்டு பலமுண்டு ஐநூறு ஆண்டு. (1247)

செல்வம் பெருகும், மகளிர் லாபமும், பல பாக்கியங்களும், மிக்கபலமும், சொல் உறுதியும், நல்ல வாழ்வும், வாணிபம் பெருகும், பலமுடன் ஐநூறு வருடங்கள் அம்மனை வாழும் என்றவாறு.

சுந்தர மைந்தனுண்டு சுகிர்தமும் மிகவும் உண்டு
தந்திர மிகவுமுண்டு தனமுமே வரத்தும் உண்டு
புந்தியும் மிகவுமுண்டு பொறுமையும் மிகவும் உண்டு
சிந்தனை மிகவேயுண்டு செழித்திடும் ஐநூறு ஆண்டே. (1248)

அழகான மைந்தனும், மகிழ்ச்சியும், புத்திசாலித்தனமும், செல்வவளமும், அறிவுக்கூர்மையும், பொறுமையும், நல்எண்ணங்களுடன் ஐநூறு ஆண்டுகள் அம்மனை செழிப்பாய் வாழும்.

இந்தநல் விதமாய் முன்னாள் எழில்பெறும் மயனுரைத்தார்
புந்தியில் வைத்துப் போற்றும் புலவர்காள் நீவிரிந்நாள்
சுந்தரமா கத்தானும் சொகுசுடன் மனையைச் செய்தால்
கந்தனின் கிருபை உண்டாம் கழறுவாய் மனையிலென்றே. (1249)

மேலே கூறிய பலன்களை மயன் உரைத்தார் இதனை மனதில் நிறுத்தி புலமை வாய்ந்த நீங்கள் மனைகளைச் செய்வீரானால் முருகப் பெருமான் அருள் உண்டாகும்.

கதவில் பூட்டுத் தைத்தல்

உத்திரம் சதயம் மூலம் உருண்மகஞ்செயை யிற்காரி
வித்தக வியாழன் வாரம்விளங் குமவ்வேட்சி தன்னில்

வைத்திடுங் கதவுவாயில் வகுத்திடல் வாய்ந்த பூட்டு
தைத்திடன் மிகவும் நன்றாம் தாமரை முகத்தினாளே. (1250)

உத்திரம், சதயம், மூலம், மகம், நட்சத்திரங்களில் சனி, செவ்வாய், பார்க்காத லக்கினத்தில், வியாழக் கிழமையில் கதவு, நிலை, பூட்டுத் தைத்தல் இவை நன்றாகும் நற்பலன் விளையும்.

வீடு மெழுகல்

சேயுதிக்க மண்பூசிச் செங்கதிரில் பூசித்தே
தாயக் கபாடத்தின் தாள்பூட்டி - ஆயமனை
வாசலுக்குள் மாதேநீ மாளிகைக்குள் நாயகமே
பூசித்து நித்தம் புகழ். (1251)

மேஷ, விருச்சிக லக்கினங்களில் மண்பூசி, சிம்மலக்கினத்தில் வணங்கி, கதவின் தாள்பூட்டி, அம்மனையில் குடியேறினால் நற்பலன் உண்டாகும்.

பகலவன் காரி நீள்பார் மகன்றனில்
அகமெழு கிடிற்பொருள் அனைத்தும் நாசமாம்
புகர்மதி பீதகன் புந்தி தன்னிலே
மிகவுறும் வாழ்வுசீர் மேன்மை இன்பமே. (1252)

ஞாயிறு, சனிக்கிழமைகளிலும், மகம் நட்சத்திரத்திலும், வீடு மெழுகினால் அனைத்தும் நாசம் ஆகிவிடும், வெள்ளி, திங்கள், வியாழன், புதன் முதலிய கிழமைகளில் வீடு மெழுகினால் வாழ்வு சீர்படும், மேன்மையும், இன்பமும் உண்டாகும்.

வீடுவேய்தல்

நனிகதிர் சேய்தீமன் னுநனைந்திடுந் திங்கள் வெள்ளி
கனகன் மால்வாழ்வு கூடுங் கரியவன் நாசமுண்டாம்
மின்னுறு நாட்கள் முன்பின் இயம்புநாட் பாவநாட்கள்
வனிதையே அனலாற் கேடாம் வாழ்மனை வேயினன்றே. (1253)

ஞாயிறு, செவ்வாய்க்கிழமைகளில் வீடு வேய்ந்தால் தீம்புண்டாகும், திங்கள், புதன், வியாழன், வெள்ளி வாழ்வு உண்டாகும், சனிக்கிழமை நாசமுண்டாகும், இந்நாட்களில் மனைக்குக் கூரை வேய்ந்தால் தீயினால் கேடுண்டாகும்.

தீய பௌமன் தினத்தினிற் தோன்றிய
ஒய்வின் முற்பொழுது உட்டண ராசியிற்
சேய் உதிக்கச் செழுமனை வேய்ந்திடிற்
காய்கனற் பயங்காட்டுதற் திண்ணமே. (1254)

செவ்வாய் நின்ற நட்சத்திரத்தின் 1,2 பாதங்கள் பொருந்திய இராசியில் செவ்வாய் நின்ற இராசியில் மனைக் கூரை வேய்ந்தால் தீயினால் பயம் நிச்சயம் உண்டாகும்.

நினையுநீ ரிராசியில் வெள்ளி நிற்கவே
அனையவன் தினத்தினி லவனு தித்திட
மனைகள் வேய்ந்திடு வரேல்மா தவத்துளோர்
நனையும் என்று உரைத்தனர் நானிலத்தரே. (1255)

ஜலராசிகளில் சுக்கிரன் நிற்கும் போதில், வெள்ளிக்கிழமையில் பரணி, பூரம், பூராடம் நட்சத்திரங்களில் மனை வேய்ந்தால் தவத்தில் சிறந்தவர் மனையானாலும் மழைக்காலம் ஒழுகும் என்று உரைத்தனர் நூல் கற்றோர்.

முகட்டுநாள்

மாமுதல் நான்குமூல மகமுதல் நான்கும் ஏறுஞ்
சேமமான் தலைவிட்டஞ் சித்திரை முகடாஞ் செப்பே
நாமநாள் இறங்குநாள் கள்நன்னெறி கூபங் கெல்ல
காமருடம் பெற்றதல்ல கடிமுகம் உயர்ச்சி என்றே. (1256)

அசுவினி, பரணி, கிருத்திகை, ரோகிணி, மூலம், மகம், பூரம், உத்திரம், அஸ்தம், மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் இந்த நட்சத்திரங்களில் முகடு வைக்க வேண்டும், பெயருக்கிடைய முதல் எழுத்தின் நட்சத்திரங்களிலும், சுபத்தாரை நட்சத்திரங்களிலும் கிணறு வெட்டினால் நற்பலனும் உண்டாகும், உயர்வு உண்டாம்.

இலங்குமார் புரிகள் மூன்றை இசைத்தும் வரையுங்கீறி
விலங்குடன் நாலது ஆக்கி மிக்கதோர் முகட்டுநாளாம்
குறங்குவ திறங்கு நாளாம் கோபுரம்விமா னம்கூடம்
துலங்கிய மனைகள் கோலில் துக்கமாமிடிந் துபோமே. (1257)

கிடையாக ஒன்பது கோடுகள் வரைந்து குறுக்காக நான்கு கூறாகப் பகுத்து அதில் இருபத்து ஏழு நட்சத்திரங்களையும் எழுதி

அதில் இறங்கு வரிசையில் வரும் நட்சத்திரங்களில், கோபுரம், விமானம், கூடம் இவற்றிற்கு முகடுகள் வைத்தால் அவை அடிந்துபோகும் மேல்வரிசை நட்சத்திரங்கள் முகட்டிற்கு ஆகும்.

ஏறிய நாள்களும் எதிர்முக நாள்களும்
கூறிய மனைகளுங் கோபுற விமானமுந்
தேறிய மண்டபம் சிறந்த தோப்புமே
கூறிய ஆண்டுதான் கோடி விளங்குமே. (1258)

ஏறிய மேல் நட்சத்திரங்களும் அதற்கு எதிரில் உள்ள நட்சத்திரங்களும், மனைகல், கோபுரம், விமானம், மண்டபம் முதலியவற்றிற்கு முகடமைக்கச் சிறந்தவையாகும். அம்மனைக்குக் கூறப்பட்ட ஆயுள் ஆண்டுகள் நிச்சயம் நிலைத்திருக்கும் என்றவாறு.

இறங்கிய நாட்களில் ஏரி வாவிகள்
துறவுகள் கூபமும் தோண்டிடக் குளங்களும்
விரும்பிய ஆயிரம் ஆண்டுவிளங் கிடுமென்
றுறுதியாய் மயனுரைத் திடும்வாறு இதே. (1259)

இறங்குமுக நட்சத்திரங்களில் ஏரி, குளங்கள், கண்மாய்கள், கிணறுகள், வாய்க்கால்கள் இவை தோண்டினால் ஆயிரம் ஆண்டுகள் விளங்கி நிற்கும் இதை மயனார் உறுதியாய்க் கூறுகிறார்.

கிரகாலங்காரம்

கிழக்காந் திசையில் அடுக்களையும் கிளருந்தீயில் பசுவினிலை
அடுத்த தெற்கிலி டுங்குப்பை ஆகுந் தென்மேல் தோப்பிடுதல்
குடபால் தனமும் எருமைதொழ்க் கூடும் வடமேல் நேர்க்கூடும்
அடுத்த வடக்கில் அமுதுண்கை ஆகுமீ சன்றிசை நீர்ச்சால். (1260)

வீட்டில் கிழக்கில் அடுக்களையும், அக்கினி மூலை யெனும் தென்கிழக்கில் பசுத்தொழுவும், தெற்கில் குப்பை கொட்டும் இடமும், தென்மேற்கில் தோட்டமும், மேற்கில் பணம் வைக்கும் பெட்டியும், எருமைமாடுகள் கட்டும் தொழுக்கூடமும், வடமேற்கில் பூசை அறையும், வடக்கில் உணவு உண்ணும் அறையும், வடகிழக்கில் தண்ணீர்த் தொட்டியும் வைக்க வேண்டும்.

மதியணியும் ஈஸ்வரர்க்கும் மறையவர்க்கும் விஷ்ணுவுக்கும்
பதியாகும் தீமூலை பாங்காம் அடுக்களைதான்

விதியாம் பலதெய்வம் வேதியரைப் பூசித்தல்
மதியாகும் ஈசானம் வாழ்வுமிக எய்திடுமே. (1261)

சந்திரனை ஆபரணமாகத் தரித்த சிவபெருமான், மகாவிஷ்ணு, பிரம்மா, பிராமணர் இவர்களுக்கு அக்கினி மூலையில் அடுக்களை வைக்கலாகும், வீடுகளில் பலவகை தெய்வங்களை வணங்கிட பிராமணர்களுக்கு ஈசானத்தில் பூசை அறை நன்றாகும்.

ஆகு மனைக்கும் அடுக்களைஈ சான்யத்தில்
வேகுமே சோறுமெத்த வேந்தருக்குத் தானடுப்பில்
போகுமே மலமாயை பொல்லாத தெல்லாம்
பாகமே சற்குரு பாக்கியங்கள் தானளிப்பார். (1262)

க்ஷத்திரிய மரபினருக்கு ஈசானயத்திசையில் அடுக்களை வைத்தால் நன்மையாகும் தீயன அகலும், மலமாயை விலகும், குறையாத அன்னம் வெந்து நலம் தரும்.

வளர்கின்ற மானிடர்க்குக் குறியைக்கேளு
வளமான எமன்திசையில் குப்பை கொட்டு
சளர்கின்ற நிருதியிலே தோப்பை வைத்துச்
சட்டமொடு வைக்கலொடு வைக்க நன்றாம்
களர்கின்ற மேல்திசையில் எருமை கட்டு
கனத்ததொரு சிவிகை சாவடியுங் கட்டு
குளிர்கின்ற வாயு நவதானி யஞ்சேர்
குபேரனொடு மூலையிலே குதிரை கட்டு. (1263)

வளரும் நல் மனிதர்களின் மனைக் குறிப்பைக் கேட்பாயாக எமன்திசையில் (தெற்கு) குப்பை கொட்டவும், நிருதியில் (தென்மேற்கு) தோட்டம் அமைக்கவும் அங்கே வைக்கோல் போரும் வைக்க நன்றாகும், மேற்கில் எருமை மாட்டுத் தொழுவரும், சிவிகை, பல்லக்கு இவற்றை வைக்கும் கூடமும் (CAR SHED) வடமேற்கில் நவதானியங்களை வைக்கவும், வடக்கில் குதிரை லாயத்தைக் கட்டவும்.

கட்டுவது ஈசான்யம் அடுக்களையுங் கிணறும்
கனமான போஜன உச்சாட்ட போடு
நட்டுவது கிழ்த்திசையில் அடுப்பைக் கட்டு
நலமான உடல்பெருத்த யானை கட்டு
திட்டமுடன் ஆக்கினையில் பொக்கிஷம் வைக்க
திடமான தேவருக்கு மடப்பள்ளி ஆகும்
இட்டமுடன் இதையறிந்து மயனார் சொன்னார்
இன்பமுள்ள உலகிலுள்ளோர் அறிந்து செய்க. (1264)

ஈசான்யதிசையில் அடுக்களை, கிணறு இவையும், உணவுக்கூடம், பூஜை அறையும், கிழக்கில் அடுப்பும், யானை கட்டும் இடமும், வடக்கில் ஆலயங்களுக்கு மடப்பள்ளியும், பொக்கிஷம் வைப்பறையும், வைத்திடல் வேண்டும் என மயனார் கூறினார் இவையறிந்து உலகோர் மனைகொள்வாராக.

இந்திரன்கிழக் கில்போகம் இரவியில் அசனங் கொள்ள
அந்தகண்தெற் குவாடை அருநிருதி யிற்றண் ணீராம்
வந்தகார் வருணன் பூசை வாயுவிற் தானியந்தான்
நிந்துசேர் குபேரன் நித்தன் ஈசான்யன் மக்கட்பேறே. (1265)

இந்திரன் திசையான கிழக்கில் படுக்கை அறையும், உணவு உட்கொள்ளும் அறையும், தெற்கில் உடை அலங்கார அறையும், தென்மேற்கில் தண்ணீர் வைக்கும் இடமும், வருணன்திசையான மேற்கில் பூஜையறையும், வடமேற்கில் தானியக் கிடங்கும் வடக்கில் சிவப்பிரதிஷ்டையும், ஈசான்யதிக்கில் பிரசவ அறையும் ஆகும்.

தெற்கினில்குப் பைநிருதியில் வைக்கோல்திருந் தியமேற்கினில் எருமை
தக்கதோர்குதொழு வம்வாயுமூ லையிலேதகை மைசேர்தா னியமிடுவாம்
மிக்கதோர்குபே ரன்வடக்கிற் பசுவுமேவிய தொழுவமும் அதுவாம்
இக்கருவுட னேகட்டளை இடவுமியம் பியமயனுரை இதுவே. (1266)

தெற்கில் குப்பை கொட்டவும், தென் மேற்கில் வைக்கோல் போரும், மேற்கில் எருமைத் தொழுவமும், வடமேற்கினிப் தானியக்கிடங்கும், வடக்கில் பசுத்தொழுவமும் அமைத்திடப் வேண்டுமென மயனார் கட்டளை இட்டனர் இதை அறிந்து செய்க.

அந்தவட திசைதனில் அடுக்களையே வைப்பாம்
வைத்ததரு கிழக்கதனில் ஆடுகளை வைப்பாம்
செத்தரிய அங்கியினிற் வைக்குமது செம்மல்
பத்தியாய் மொழிந்தபடி பார்த்திடுதல் நன்றே. (1267)

வடக்கில் அடுக்களையும், கிழக்கினில் ஆடுகளை அடைக்கும்பட்டி, அக்கினி மூலையில் தண்ணீர், இந்தப்படியும் பார்த்து வைத்தால் நன்றே ஆகும்.

இந்திரனில் விக்கிரயம் அடுப்பு கட்டு
இயலாட்டுத் தொழுவமுட னாவில் கட்டு

வந்திடுந்தீ மூலைதன் னில்பதார்த்தம் நேர்சேர்
வாகுடனே தொழுவமுடனே வைக்க விர்த்தி
முந்தியமன் திசைதனிலே சாம்பல் குப்பை
முனைகன்னி பிரசவமும் தோப்பு வைக்கில்
விந்தையுடன் மேல்திசையில் எருமை கட்டு
விதமான பல்லக்குஞ் சாவடியுங் கட்டே. (1268)

கிழக்கில் (இந்திரன்திக்கு) விக்கிரகம், அடுப்பு இவைகட்டுக, ஆட்டு, மாட்டுத் தொழுவம் கட்டு வடகிழக்கு (அக்கினிமூலை) சமையற்கூடமும், தொழுவமும் வைக்க விருத்தியுண்டாகும், எமன்றிக்கில் (தெற்கு) குப்பை, சாம்பல் கொட்டவும், தென்மேற்கில், பிரசவ அறையும், தோட்டமும், மேற்கில் எருமைத்தொழுவம், பல்லக்கு வைக்கும் கூடமும் கட்டுக.

கட்டுவாய் பின்னுமதில் சயினஞ் செய்வாய்
காற்றுதனில் தானியம்வை தேவர் பூசை
நாட்டுவாய் குபேரனிலே பசுக் கொட்டாரம்
நன்குதிரை பந்தியுடன் போசனமுஞ் சோலை
பூட்டுவாய் தனம்புதையல் பூணரரம் வைக்க
பொங்கி யேவரும் போஜனமும் பண்ண
ஊட்டுவாய் கிணறுடனே நீர்சால் வைக்க
உறுதியுடன் மயனுரைத்தார் உறுதி தானே. (1269)

மேலும் அதில் சயன அறையும் கட்டுவாய் (BEDROOM) வாயுதிக்கில் (வடமேற்கு) தானியமும், தெய்வபூசை அறையும், வடக்கிலே (குபேரன்) பசுத்தொழு, குதிரைக்கொட்டடி போஜனப் பந்திக் கூடம் (Dianing Hall) பணப்பெட்டி, புதையல், ஆபரணப்பெட்டிகள் வைக்கவும், கிணறு, தண்ணீர்த் தொட்டி இவையும் வைத்திடுக என்று மயன் கூறினார்.

நன்றாங் கிழக்கு முதலெட்டு நயமாயா டும்பசுத்தொழுவாம்
குன்றாதுரம் வைதோப்பு எருமைக்கூ டாம்நேர்கூ டுண்ணுமிடம்
என்றார் தண்ணீர்க் குறியதுவாம் இடமேசெய நல்மனைமீதில்
ஒன்றாஒன்று குறையில்லா உலகில் வாழ்வார் உரைமாதே. (1270)

கிழக்கு முதலாக எட்டுத் திசைகளிலும் முறையே ஆடு, பசுத்தொழுவங்கள், தோப்புகள், எருமைக் கூடம், தானிய அறை, உண்ணும் இடம், தண்ணீர்த்தொட்டி என இவ்வாறாக நல்மனை அமைத்திட குன்றாத பெருவாழ்வு நிலைக்கும்.

பாரமாங் கிழக்கில் நாகம்பக றெறிபாகஞ் செய்தல்
நேரியதெற் கனந்தல் நிருதியில் படைக் கலங்கள்
தேர்தருமேற் கேயுண்டல் திகழ்வலி பசுக்கள் கட்டல்
வாரடும் வடக்கிலாக்கம் வளர்பரன் பூசை செய்யே. (1271)

கிழக்கில், தொழுவம் அமைத்தலும் தெற்கில் படுக்கையறையும், நிருதியில் (தென்மேற்கு) படைக்கலங்களும், மேற்கில் உணவறை (உண்ணும்அறை) வாயுதிக்கில் பசுத்தொழுவமும், வடக்கில் பூசை அறையும் செய்திடுவாய்.

மாண்புடைக் குரிசனாதி வயங்கும் எண்திசைக் குள்ளும்
காண்ப பருததியே கூடுங் கழிவிடம் பாடசாலை
தீண்டு ரோதனமே போகம் துயரறுசிகிச் சாசாலை
கேண்டகு மகப்பேறு ஈனச் செய்திடல்நன் றேயாகும். (1272)

கிழக்குத்திசை தொடங்கி எட்டுத்திசையிலும் முறையே பசுத்தொழுவம், கழிப்பிடம், பாடசாலை, பணப்பெட்டி, படுக்கையறை, மருத்துவக்கூடம், பிரசவஅறை இவற்றை அமைத்திடவும்.

ஆடு, மாடு, குதிரை, யானை முதலியவைகட்குத் தொழுவம் செய்ய வேண்டியவைகள்

மேதகுயா னையொட்டை மேவுறுதொழு வம்யாவும்
மாதவக்கரு டன்யானை மன்னும்யோ னிக்கண்செய்க
தீதிரைகுதி ரைமாடுதி கழும்புள்ஒன் றேயாகும்
மாதுடன்பயில் வதாதிமன் அரிதுவசத் ஆகும். (1273)

யானை, ஒட்டகம் இவைகளைக் கட்டும் தொழுவம், கருடன், யானை யோனிகள் திசைகளில் கட்டவும், ஆடு, மாடு, குதிரை, இவற்றின் தொழுவங்களும் கருடயோனியின் திசையிலேயே செய்யவும்.

வேறு

ஆகுமே ஆஸ்தான மண்டபங்கள் அரசர்கட்கு
வாகுசேரி யந்திரசா லைவன்மைசேர் செபசாலை
பாகுசேற் சயனசாலை பால்பசுதொழு வம்யாவும்
தோகைசேர் குழலாய்கே ளாய்துவஜனில் கொள்கநன்றே. (1274)

மன்னர்களுக்கான ஆஸ்தான மண்டபம், இயந்திரக்கூடம், ஜபக்கூடம், ஒய்வுறக்கக் கூடம், பசுத்தொழுவம் இவற்றை தோகை போல்

நீண்ட கூந்தலை உடைய பெண்ணே துவஜ யோனி என்னும் கிழக்குத் திசையில் கட்டுவது நன்றாகும்.

கொள்வதுஆத் தொழுநீங்கக் கொடும்புலி மிகவுநன்றே
கொள்வதுயா னையொட்டை குதிரைகள் கபிலையாவும்
கொள்வதுயா னைகருடனல் கொள்ளலாம் மிகவுநன்றே
கொள்வதுயா வும்கலுழனில் குணமயன்விளம் பலுற்றேன். (1275)

பசுத்தொழுவம் சிம்மயோனியின் தெற்கு நீங்கலாக மற்றைத் திசைகள் நன்றாகும், யானை, ஒட்டகம், குதிரைகள், காறாம் பசுத்தொழுவம் இவற்றை கருடயோனிக் கிழக்கிலும், வடக்கு யானை யோனித்திசையில் வைத்திடல் மிகவும் நன்றாகும், கிழக்குக் கருடயோனியும் நன்றே ஆகும்.

பெரியோர்கள் வசிக்க வேண்டிய இடம்

கற்புறுமில் லாளோடு கடிமணஞ்செய் துவாழ்வோன்
தற்புகழ்தம யனுக்குந்தாய் முதலான பேர்க்கும்
இற்புறந்தெற் கேயாதல் இயைந்தமேற்பா லேயாதல்
பொற்புறவில் லஞ்செய்து பொருந்தியேவாழ் விப்பானால். (1276)

மனைவியுடன், மணவாழ்வில் இன்பமுறவாழ்வோன் தனக்கு தெற்கில் தமயன் தாய், முதலானவர்களுக்கு மேற்கிலும் உள்ள அறைகளில் தங்கி இருக்கும்படியான இல்லம் செய்து வாழ்வானாகில் தீயபலனுண்டாகிடும்.

நன்மனை குருக்களொடு நார்வசி மன்னர்
தன்கிளையின் மேலவர் தனக்குமனை கோலின்
தென்திசை மேல்திசை தெளிவுநில நசிக்கும்
பொன்குலவு மேலவை போற்றுசு கமவர்க்கே. (1277)

பிராமணர், க்ஷத்திரியர் தன் குடும்பத்தில் பெரியோருக்கு மனை செய்திட, தெற்கும், மேற்கும் கூடாது, வடகிழக்கு நற்பலன் தரும்.

நன்குலத்தோர் கனவிலு நாயகனு
நன்பெறுங் கிளைழளோர் மூத்தோர்
தென்றிசையவர் கடிரும்பிய மேற்கு
செய்குடி இருக்கவும் தீதாம்
பொன்குலவ அவரைத்தெற் கினில்வைத்துப்
பொருந்திய வடகிழக் காயிருந்தால்
இன்மைசேர் பொருளுஞ்சுகத் தையுங்
கொடுக்கும் இயம்பியமய னுரையிதுவே. (1278)

மனைகட்டி வாழ்பவனான நற்குடிமகன், தனக்கு உறவான இளைய, மூத்தவர்களை மேற்கு, தெற்கில் குடிவைத்தால் தீயபலனுண்டாகும், மற்றும் அவர்களை வியாழ பகவானின் திசையாகிய வடகிழக்குத் திசையில் மனை அமைத்துக் கொடுத்துத் தங்க வைத்தால் நற்பொருட் சேர்க்கையும், சுகத்தையும் அடைவேன் என்று மயனானவர் தமது திருவாய் மலர்ந்து இதனைக் கூறினார்.

நன்குலத் தானவர்க்கு நாநிலத்து வேந்தருக்குந்
தென்திசையு மேல்திசையும் இருவராம் வைசியர்க்கும்
பொன்குலவு மேலவைதாம் பூதலம் அமர்குவனே
கொண்டவடதிசை யுங்கிழைத் திசையுங் கொள்வரான்றோர். (1279)

பிராமணர், க்ஷத்திரியர் இவர்களுக்குத் தெற்கும், மேற்கும் வைசியருக்கு வடகிழக்கும் வடதிசையும், கிழக்குத்திசையும் ஆகும் எனச் சான்றோர் உரைத்தபடியே.

கிராமாலங்கார இலட்சணம்

வாரினில் திக்குக்கெல் லாமுயற் பதினாறு கோணம்
பாரினில் அறியாதார்க் குப்பகர்ந்தது மயனூல் தானும்
பேரினில் தேவுமந்தப் பெருமையை அறிந்து கூறு
சீருநீயறிந் தபோது செயமுடன் தறிக்கப் பூட்டே. (1280)

திசைகள் எட்டும் பதினாறு கோணமும் அறியாத மாந்தருக்கு மயனார் இந்த நூலை உரைத்து அருளினர் இதன்படி கிராம நிர்ணயம் செய்யக் கடவை.

பூட்டுடன் புகழ்ந்து கொள்ளும் புகழ்பெரி தானசெல்வம்
தேட்டெனத் தெளிந்து கூடும் தேவுகள்பதி யவைத்தே
நாட்டென நயந்து திக்கில் நயம்பெறநா டிக்கட்டி
சூட்டெனச் சூட்ச மாதே சுந்தரமா கத்தானே. (1281)

அவ்வாறு வகையறிந்து செய்தால் செல்வம் பொருந்திட அவ்வூர் சிறப்புறும், கூறப்பட்ட திசைகளில் அந்தந்த இடங்களை அமைத்திடவும்.

தானெனவீ சானத்தில் தப்பிலாச் சிவால யந்தான்
வானென வண்மை கொள்ளும்வழிச் சாத்தாகோ வில்பூட்டே
நானென ஈசானத் தில்நம்மூ லையறிந்து கொண்டு
கோனென தெய்வம் அங்குக் கோதையாள் கன்னியாமே. (1282)

ஈசானத்திக்கில் சிவன் கோவிலும், சாஸ்தாவின் கோவிலும், ஈசானத்தில் நல்லதொரு மூலையில் பெண்தெய்வ ஆலயமும் அமைப்பாயாக.

ஆமெனச் சத்த கன்னி அங்கங்கு குளமுநாட்டு
ஓமென மூலை தெற்கில் உயர்ந்திடுமயா னம்பூட்டு
தாமென ருத்திர பூசைதான் அதுமிருக்கச் செய்வாய்
ஓமெனக் காளி கோவில் ஓங்குமேற்றிசை யிற்பூட்டே. (1283)

அவ்விடத்திலேயே சப்த கன்னியரும் பிரதிஷ்டை செய்வாயாக, அங்கே குளமும் அமைத்திடுக தெற்கில் மயானத்தை அமைப்பாயாக, அங்கே ருத்திர பூசை செய்யும் படியும் அமைப்பாயாக மேற்குத் திசையில் காளி கோவிலைக் கட்டுவாயாக.

பூட்டி மதிலுடனே போதமுடன் வீரனுக்கு
நாட்டிக்கீழ்த் திசையதனில் நயம்பெருமா லயத்தைச்
சூட்டிமன் புறவாய்ச் சுந்தரமாய் நேர்குளமுங்
காட்டிக் கருத்தொன்றாய்க் காண்பதற்கு வீடகமே. (1284)

இப்படியாக ஆலயம் அமைத்து மதில்கள் அமைத்தும் அதில் கிழக்கில் வீரபத்திரனுக்கு ஆலயமும் குளமும் கட்டினால் நற்பலனாமே மற்றும் சுற்றிலும் அக்ரகாரம் அமைப்பாயாக.

வீடகங் கட்டி நன்றாய் விஷ்ணுபக்தர் யாவருக்கும்
நாடவே பதின்மூன்று நன்மை உள்ள பதினான்கு
போதக மேசந்திர பத்தி போதகமாய் நன்றாக
வாடகங் களில்லாமல் வாணி பமுஞ்செய் வாயே. (1285)

அங்கிருக்கும் வீடுகளில் விஷ்ணுபக்தர்களுக்கு பதின்மூன்று அல்லது பதினான்கு மனைகள் கட்டிடுவாய், இப்படியாக மற்றவருணத்தவருக்கும் ஏற்ற இடங்களில் வீடுகள் செய்வாய்.

செய்வாயதின் கிழக்குச் சேதமில்லாப் பிடாரிநிலை
வையாய் வகைவிவரம் மாதரசே கேளாயோ
உய்வாயிதன் றித்தங்கள் ஊக்கமுடன் நீகேட்டு
வய்வாரும் இல்லாமல் மாண்புறவே வாழ்ந்திடுவாய். (1286)

அதன் கிழக்கில் பிடாரியம்மன் ஆலயமும், உலகோர் பகைக்காத வண்ணமாகக் கவனித்து எனது சொய்தவறாமல் செய்வாயாக.

அறியுமாடன் வகைகளன் புத்துக் கோவிலிடு
பிரியமுப்பத் திரண்டும் பேதமற அவ்விடமே
குறியுமதின் மேற்குக் குறிப்புள்ள செட்டிசிவ
மறியுமடங் கட்டிடுவாய் மயங்காக் குளமுமிடே. (1287)

மாடன் கோவில்களும், நாகதேவதைக் கோவிலும் இவ்வாறாக ஆலயங்களும் அதன் மேற்கில் வைசியருக்காக மடங்கள் கட்டிடுவாய், மேலும் குளமும் அமைத்திவோய்.

சிற்பரமாந் தீமூலை திரமாங் கறுப்பாகும்
நிற்பதுவா வைத்தால்நிலை கொள்ளுமாம் பரமம்
அற்புதமா ஆலயத்தில் ஆடல்மிகக் கொண்டிருக்கும்
உற்பனங் காணுந்தி பமுசிதமாய் பூசைசெய்யே. (1288)

அக்கினி மூலையில் கருப்பண சுவாமியின் சிலை வைப்பாய், நிற்கும்படியாக அங்கே கருப்பண சுவாமியை ஸ்தாபித்தால் அவ்வாலயத்தில் பரமன் நிலைகொள்வான், அவ்வாலயத்தில் சிவபெருமான் ஆனந்த நடனம் புரிவார் அவரைப் பூசிப்பாயாக.

பூசை கருப்பனுக்குப் போதகமாம் வெள்ளிதிங்கள்
ஆசைமிகக் கொள்ளும் அன்பருக்கும் - ஓசையே
ஒச்சலாயக் கொள்ளாமல் ஒன்றொடியா ளாட்டம்
பாச்சலாய்க்கொண் டுநிற்கும் பார். (1289)

கருப்பணசுவாமிக்கு, வெள்ளி, திங்களில் பூசை செய்திட அங்கு வீற்றிருக்கும் காளி தேவியானவள் மகிழ்ந்து அருள்புரிவாள் என்று அறிக.

பாரடுக்கக் காட்டேரி பதினாறு ரூப்முள்ள
நேரடுக்க வைத்திடலாம் நேரிழையே - சேர்வள்
மிகவோங்கும் வேறே சிதையாது ஒருநாள்
தகவே அமைமூலை தான். (1290)

அங்கு காட்டேரி முதலான பதினாறு பிராயமுள்ள பெண் தெய்வம் அமைத்திட வேண்டும் அது கோவில் காவல் தேவதையாகச் செயல்படும். எனவே அதையும் ஒரு மூலையில் அமை.

காண்டாய் அதனருகில் கைவசம் மெத்தவுமே
பூண்பார் ஆடல்புகழ் கொள்ளுமாம் - வீண்போகா
வேதமாம் பேர்களுக்கு வேறில்லா நற்குறிப்புப்
போதமற்றே நிற்கும் புகழ். (1291)

மேற்கூறிய விதிமுறைகளின் படி அமைத்தால் தெய்வங்கள் ஆலயத்தில் திருநடனம் புரியும் வேதமோதும் பிராமணர் முதல் அனைவரும் புகழும் நலமும் பெறுவர்.

காணப் பலியிடுங் கைவசம் ஆகாது ஒருவருக்கும்
ஊணப் பிடித்தே உழட்டுதலா கவுனத்தி வைக்கும்
பூணப் பொருந்திப் புகழ்கொண்ட மூலைப் புனிதமுறும்
தோண அறிந்து மயனார் உரைகளி தோகையரே. (1292)

முன்னம் கூறிய திசையில் மயனார் உரைத்தவிதம் ஆலய நிர்மாணம் செய்யாது மாறிச் செய்தால் அங்கு நிறுத்தும் தேவதைகள் மாறாட்டமான பலன்கள் ஏற்பட்டுத் துன்புறுத்தும்.

அயரே அடுக்கக் குடந்திறப்பா டும்வணிகன் செக்கு
வயிரே இடுகரி உறுதியு மாக உணர்த்தியும்
பயிரே மிகவும் பலிக்கட் டெடுப்பாரும் படுங்குடி
தயிரும் பழையதும் தான்கைக் கூட்டத் தடையில்லையே. (1293)

வடக்குத் திசையில் வணிகர்களின் செக்கும் அவர்களின் குடிஇருப்புகளும் அமைத்திடுவாய் யானை யோனியின் திசையில் (வடக்கு) சூத்திர மரபினருக்கு வீடுவகை அமைத்திடத் தயிர்சாதம், பழைய சாதம் முதலாக ஆகாரங்கள் குறைவின்றிக் கிடைக்கும்.

இலைத்தேக்குச் சூளியம் ஏற்ற குயவன் ஆளையும்
தலைநிலை குதிரைகள் தாபிதம் மாரி காட்டேரியுரு
நிலைவீரக் கருப்பனும் சாமுண்டி யாளுரு ஆடுகளும்
முலைப்பெண் உருகன்னித் தொட்டிலும் முனைந்து செய்யே. (1294)

மேலும் அத்திசையில் குயவன்சூளையும், குதிரைக் கொட்டாரமும், மாரி, காட்டேரி, வீரன், கருப்பன், சாமூண்டி, ஆடுகளை அடைக்குப்பட்டி, மற்றும், தொட்டிச்சி முதலான கன்னித் தெய்வ ஆலயங்களும் அமைப்பதாம்.

இடுவகை மெத்தன் இயல்புகள் ஆகவிளங் முதல்கேள்
தொடுகுறி யாவுந் தோணவும் பார்த்துத் தொந்தமுடன்
கொடுந் தொட்டில் பிள்ளைகுறை யாகத்தன் உருவாகிநிற்கும்
நடுத்தேவு நாடும் ஆலயம்பார்த் துநயந்து செய்யே. (1295)

தொடுகுறி சாஸ்திரம் முதலானவற்றைப் பார்த்து இசக்கி, நீலி என்னும் பிள்ளை ஏந்திய கொடூர தேவதைகளிடம் எங்கு இருக்க விரும்புகிறதோ அங்கு ஆலயம் செய்து கொடு.

செய்யென இதன்குடத்தில் சிறப்புடன் செல்வம் மாறி
மெய்யென வினாவி நாட்டு மேவியவினை யுந்தீரும்
பொய்யென நாளும் போகா புகழுகள் மெத்தவுண்டு
தைய்யென வந்ததிக்கில் தடையில்லை விரணஞ் சூட்டே. (1296)

மேலும் குடத்தின்திசையாகிய வடக்குத்திசையில் மேற்கூறிய வண்ணம் அமைத்திட்டால் அந்தக் கிராமமானது செல்வளமும், புகழும், நாளும், பெருகிவளரும் இதற்கு யாதொரு தடையும் ஏற்படாது.

சூட்டெனச் சொல்லிலம்மன் சுகம்பெற வாழ்வுமீறக்
கூட்டெனக் கன்னிமூலை குறிப்புடன்த்டா கம்நாட்டி
பூட்டெனக் கணபதிக்குப் புகழ்குளங்குடத் தின்திக்கில்
வாட்டென நாளிகேரம் உயர்ந்தமோதகம் தாம்பூலம். (1297)

அவ்வாலயத்தின் தென்மேற்குக் கன்னி மூலையில் குளம் அமைத்து குளத்திற்கு வடகரையில் விநாயகருக்கு ஒரு ஆலயம் செய்வாய் அத்துடன், வாழைப் பழம், மோதகம், தாம்பூலம், தேங்காய் வைத்தும்

தாம்பழங் கம்பி சுண்டல் தடையறமாற் றும்பேர்கள்
நாம்புகழ் கீர்த்திமெத்த நாடியும் இருப்பார் மாதே
போம்வர வினையன வரவும் போதமாய்ச் செலவுமீறும்
ஆம்பட அயிஸ்வர்யங் கள்அணுகியும் வாழ்வார் காணே. (1298)

சிறுகீரை, சுண்டல் இவை வைத்தும் நிவேதனம் செய்து வணங்குபவர்களுக்குப் புகழுண்டாகும் வினைகள் வரவு குறைந்து தீர்ந்து போகும், ஐஸ்வர்யங்கள் பொருந்திட அநேக காலம் வாழ்வார்கள் என்றறிகுவாய்.

காணவும் அதின்வடக்கு கண்டிதம் உள்ள தான
பூணவும் சொலவும் கேளு புகழுடன் மடங்களாகும்
தோணவுஞ் செய்தாய் ஆனால் தோடங்கள் யாவுந்திரும்
மூணவும் அதற்கு மேற்கும் உறுதியாய்க் குளமும்நாட்டே. (1299)

அதற்கு வடக்கில் தானதர்மங்கள் நிகழ்த்தும் மடங்களைப் புகழ்பெற நிறுவுவாயாக இவ்வாறு செய்தால் யாதொரு தோஷமும் ஏற்படாது வினைகள் தீரும். அதற்கு மேற்கில் ஒரு குளமும் அமைத்திடுவாயாக.

நாட்டென நயத்தைப் பாரு நயமுள்ளவ சுவந்தேர்கள்
பூட்டென விவாகங் கூடப்புண் ணியநிம்பை சேர்த்து
மூட்டெனச் சிவனார் தங்கள் முனையுடன் புணர்ச்சிநாகம்
காட்டென்ற விருக்ஷம் சுத்தி கணப்பிர காரமாமே. (1300)

ஆலயத்தைத் சுற்றிலும், புரவிகள், தேர்கள் அமைப்பாய் திருமண மண்டபங்களும், வேப்பமரங்களை உண்டாக்குவாய் சுற்றுப் பிரகாரம் முழுவதும் என்று சிவனார் கூறினார் வேப்ப மரங்களின் அடியில் நாகதேவதைகளின் சிலைகளையும் அமைப்பாயாக.

ஆமென அதின்வடக்கு வண்புற்றும் அடியார் கோவில்
நாமென மடாலயங்கள் நயந்து நீபிரம தாயந்
தாமெனக் கட்ட நன்றாம் தப்பில்லா வாழ்வுஏறும்
ஓமென முடிந்து வாழ்கவு யர்ந்திடுங்கிரா மந்தானே. (1301)

அதற்கும் வடக்கில் நாகர் கோவில், மடாலயங்களும், பிராமணர்களுக்குக் கொடுக்கும் இறையிலி நிலங்களும் செய்வாயாக இதனால் குற்றமிலாவாழ்வுடன் அக்கிராமமானது உயர்ந்து விளங்கி நலம் பெறும்.

கீழ்மேலைத் தெருவுமானால் கிளைகூட்டம் மிகவும் மீறும்
ஊழுற எவருஞ்சீ ராமுத்தம மைந்தன் மேலாம்
பாழ்மனை அதனுக்குள் ளேபதிபொருள் மிகவும் உண்டாம்
பாரேமுக் குடையோன் பள்ளுபறை களுமிக உண்டாமே. (1302)

கிழக்கு மேற்கான தெருவானால் மக்கள் கூட்டம் அதிகம் உண்டாம், சீர் பெறுவதுடன், புத்திரர்கள் உண்டாகி நலமடைவர் பாழ்மனைகளின் கீழே புதையல் பொருட்கள் இருக்கும் ஏவல் பணிகள் செய்ய உதவியாகப் பணியாளர்களாக பள்ளர், பறையர் கூட்டமும் இருக்கும்.

உண்டாகுஞ் சல்லியந்தான் நூறும் ஒப்பரை யினுள்ளாய்
முண்டாக இவர்செழிப்பாய் முழுவதுங் கட்டிக் கொள்வார்
தூண்டாகும் கிராமந்தா னேதுள்ளிய சம்பத்து உண்டு
பண்டாகும் கிராமந்தா னும்பலித்திடத் தெருவைப் பாரே. (1303)

பள்ளர், பறையர் முதலானோர் நூறு சல்லியம் உள்ள இடங்களில் வீடுகளைக் கட்டிக் கொண்டு கிராமத்தின் ஒதுக்குப்புறம் சேர்வர், புகழ், செல்வத்துடன் அக்கிராமம் செழித்து வளரும்.

தென்வடல் தெருவே ஆனால் தேசத்தில் உத்தியோகம்
பன்முறை கிராமங் கொண்டுபாங்குடன் சீரும் செய்வான்
நன்மையும் மிகவும் உண்டு நாடிய மைந்தருண்டு
பொன்மயப் பொருளுஞ் சேரும் புகழுமே ஏறுமாதே. (1304)

தெற்கு வடக்கான தெருவாக இருந்தால் நாட்டில் உத்தியோகம் மிகுந்த தெரு அதுவாகும் கிராமத்தை பலமுறை ஆய்ந்து செப்பனிடுவார்கள், மெத்த நன்மையுண்டு, ஆண் குழந்தைகள் நிறையப் பிறக்கும், பொன், பொருள் சேர அக்கிராமம் புகழுடன் வளர்ச்சியடையும்.

இடும்வாஸ்து இரண்டிருக்க மனைபாரு சிறகுங்
தொடுகுறிப்பா கத்தொடுபத் திதிட்டந் தோணவொன்றா
இடுதேவு பெருமாளுக் காலயமேற் றபின்குளமும்
இடுமீசா னசிவாலயங் கீழ்க்குளம் வெட்டநன்றே. (1305)

இரண்டு வகையான வாஸ்துகளில் மனை வாஸ்து, ஆலய வாஸ்து தனித்து அறிந்து பெருமாள் கோவிலுக்கு குளமும் ஈசானத்திசையில் (வடகிழக்கு) அமைப்பாய், சிவாலயமாக இருந்தால் கிழக்குத் திசையில் குளம் வெட்டினால் நற்பலன் உண்டாகும்.

அயல்மனை கிணற்றுநீர் தன்மனையில் வருவதினால் உண்டாகும் பலன்

அயல்மனைக் கிணற்றுநீரை அடுத்துதன் மனையில் சேர்த்தால்
உயிர்வதை கலகம் உண்டுதன் மனைநீர் நன்று
நயந்தநீர் கிழக்கீ சான்யம் நற்சுபம் வடக்குநீரும்
உயர்ந்தநீர் வருந்தி வீட்டை உதவிசெய் வாழ்வுண்டாமே. (1306)

அடுத்தமனையின் கிணற்று நீர்தன் மனையில் பாய்ந்தால் உயிர்த்துன்பமும், கலகமும் உண்டாகும் தன்மனைக்கிணற்று நீர்தன் மனையில் பாய்தல் நன்றாகும், வடக்கு, வடகிழக்கில் அந்தந் தண்ணீர் கழுவு ஓடுதல் நன்றாகும் இவ்வாறு அமையும்படி வீட்டை அமைத்திடுவாய் அதனால் நல்வாழ்வு உண்டாகும்.

நீரும் நெருப்பும் நேராயிருப்பதின் பலன்

நீரும் நெருப்புமே நேர்பட நிற்குமாயின்
பார்பெண் கலகம் பழியுடனே - நேருமென
ஆதிநூல் வல்லோர் அறைந்தனர் அவனியிலே
நீதிசொல் வாய்மானே நீ. (1307)

அக்கினி மூலையில் கிணறு இருந்தாலும், தண்ணீர்த் தொட்டி இவை இருப்பதனாலும் பெண்கள் சண்டையிடுவர், பழியும் ஏற்படும் என நூல் வல்ல சான்றோர் உரைத்தனர்.

நீரும் நிலையும் நேராய் இருப்பதின் பலன்

நீரும் நிலையும் ஒன்றாய் நிலைபெற நிற்குமாயின்
சேருமின்ப லாபம் திண்மையாய்க் கிட்டும் என்றும்
ஏறுமே செல்வம் யோகம் இயல்புடன் வாழ்வரென்றே
வீறுடன் முன்னோர் சொல்லை விளம்பினன் மயனுமன்றே. (1308)

மனை நூலில் கூறிய விதிப்படித் தண்ணீர் இருக்கவேண்டிய இடத்தில் தண்ணீர் இருந்தால் இன்பமும், லாபமும், நிச்சயமாகக் கிடைக்கும், செல்வமும், யோகமும், பெருகிட நல்வாழ்வு வாழ்வார்கள் என்று முன்னோர் இதனை உரைத்தனர்.

விளம்பினர் முன்னோர் நூலில் வினையதுமனை விக்கென்றே
விளம்பினர் முன்வேதத் தில்விதித்தது நிசமாம் என்றே
விளம்பினர் தீர்க்க நோயை விரிகுழன்மா தேகேளாய்
விளம்பினர் மயனும் அந்நாள்விரி கடலுலகுக் கன்றே. (1309)

இவை மாறினால் மனைவிக்குக் கேடு ஏற்படும் நிச்சயம் என்றே கூறினர் வேத நூலோர், இவை தீர வேண்டுமாயின் முன்னம் கூறியபடி கவனித்து மனைசெய்வதாம் என்று விரிந்த கூந்தலையுடைய பெண்ணே அறிவாய் என மயனார் கடல்சூழ்ந்த இவ்வுலகம் உய்யவேண்டிக் கூறி அருள் புரிந்தார்.

கோல் முறிசல் மனையின் பலன்

கோல்முறி சலாகும் குழிமுறிச லானமனை
பாலன் பொருளும்போம் பாழ்மனையாம் - கோலுமே
பார்மீதில் பண்பாய் உரைத்தார் மயனாரும்
கூராய் அறிந்துமனை கோல். (1310)

கோல் அளவு தவறிய மனையும், குழியெனும் ஆயம் தவறியமனையும் மனைத்தலைவனுக்குத் தீய பலன்களையே செய்யும், பொருள்சேதமுடன், மனையும் பாழாகிப்போகும், எனவே அளவுகள் தவறிவிடாதபடிக் கவனித்திடுவாய் பின்பு மனை அமைப்பாய்.

கோல்முறிசல் இன்பம் குழிமுறித லோதுன்பம்
மால்முறி சலானமனை பாழாம் - மேலும்
மாடுபொருள் செல்வம் மனையோடு புத்திரர்கள்
வீடழிந்து போகும் இசை. (1311)

அளவு தவறிடில் பெரிதாகக் குற்றம் வராது இன்பமும் உண்டு, ஆனால் குழியென்னும் ஆயம் தவறினால் அம்மனை பாழாகும், மேலும், செல்வமும், மனையும், புத்திரர்களும் வீடும் பாழ்பட்டுப்போகும் என்று கூறுக.

குழிமுறிசல் மனையின்பலன்

முக்காலு நாசமரை மூதேவி வந்தடையும்
எக்காலுங் காலும் இடராகும் - முக்காலும்
நாசவீசம் உயிரழிக் குமேசெய் அரைக்கால்
நாசம் குழிமுறிசல் காண். (1312)

குழிமுறிசல் (ஆயம்பொருந்தாமை) மனையினால் எந்த வகையிலும் துன்பமுண்டாகும் அரைப்பங்கு நாசம், கால்பங்கு துன்பம், காலேவீசம் மரணமும், அரைக்கால் பாகம் அழிவும் உண்டாகும் என்றறிவாய்.

சூன்மனையின் பலன்

வாழ்மனை எல்லைக்குள் ளேவளர்ந் துமேசூன் இருந்தால்
தாழ்வர் பெண்டீர் பிள்ளைதனம் பொருள்பூ மிசேதம்
ஊழ்வினை வந்துசேரும் உமையவன் சேராள் என்றும்
பாழ்படு மனையாம் என்றுபகர்ந் திட்டார்மய னார்தானே. (1313)

குடியிருக்கும் மனையின் எல்லைக்குள்ளே ஊன் (சூன்-பிணம்புதைத்தகுழி) இருந்தால் பெண்கள் கேடுறுவர், புத்திரர், தனம், பொருள், பூமியாவும் நாசமாகும், ஊழ்வினை வந்து சேரும், சக்தியன்னை மனையில் சேரமாட்டாள், அம்மனை பாழேயாகும் என மயன் உரைத்தவாறே.

கட்டிய வீட்டில் ஆமை முதலியன வருவதாலுண்டாகும் பலனும் சாந்தியும்

மாறாங்கம டஞ்சடை நாகம்வருங் காற்கீரி வறட்டோணான்
தேறாதுடும் புமண்ணுண் ணிதேவாங்கு இலஞ்சி வருமாகில்

வாறாந்திங் கள்தனிற்றுய ரம்நோயால் வருந்தோ ஷாதிகளும்
வீறாய்சல் லியமொழிக்க வேண்டில் விவரம் விளம்புவதே. (1314)

ஆமை, நாகம், கீரி, வறட்டோணான், உடும்பு, மண்ணுண்ணிப்பாம்பு, தேவாங்கு, சாரைப்பாம்பு இவை வீட்டிற்குள் வந்தால் ஆறாம்மாதத்தில் துயரமும், நோயும், தோஷங்களும் உண்டாகும். இதன் தோஷம் போக்க மார்க்கம் கூறுகிறேன் கேள்.

விளம்புவோ மந்தர்ப் பணமும் வேதாகம சாஸ்திரவிதியால்
வளங்கொள் அன்னதான மொடுமாடு மறையோர்க் களித்தே
உளங்கள் களிக்கமனு வோஒரு தீங்கென்றும் அணுகாது
களங்கம் அகலும் பெருவாழ்வு கனகம்பலுகும் கருவிதுவே. (1315)

வேதாகம சாஸ்திர விதிமுறைப்படியாகத் தர்ப்பணங்களும், அன்னதானமும், மறையவர்களுக்கு பசுதானம் அளித்தும் மனைசெய்தக்கால் ஏதொரு தீங்கும் அணுகாது களங்கம் தீரும், பொன், பொருள் பெருக்கம் உண்டாகும் என்றவாறு.

கருவேபடு சல்லியங்களைத் தாங்கமல முனிசெய்து அருளியதால்
பெருவேள்வி களுமுதிரமு டன்பெலி யோகினிக்குப் பூசைசெய்து
மருமாலிகை யுந்தோசை வடைவஸ்து உடனேமுனம் வைத்துத்
திருவேநிவே தஞ்செய்து மனைகோல மயனார் சொன்னதுவே. (1316)

சல்லியங்களைக் கண்டபோது அவைகளின் தோஷங்கள் விலக்க அகத்திய மாமுனிவர் பெருவேள்வியும், உதிரமுடன், பெலிகளும், மோகினிக்குப் பூசையும் செய்து, தோசை, வடை முதலிய பொருட்களுடன் புஷ்பங்கள் வைத்து நிவேதனம் செய்து பின்னர் மனை ஆரம்பம் செய்தால் சல்லியதோஷங்கள் ஏதும் உண்டாகாது என மயனார் உரைசெய்து அருளியவாறே.

வேறு

இணங்கிய சுணங்கனாமை இயலுறுகூ கைபாம்பு
வணங்கிய மனையில்புற் றுவைக்கத்தென் கருடன்புள்ளு
விணங்கிய வெடிபொன்னோர் இவையெலாங் காணுமாகில்
வணங்கியே பேயுமுண்டாம் மக்களும்சா வார்கண்டீர். (1317)

பேய் நாய். ஆமை. கூகை, பாம்பு, பாம்புப்புற்று, கருடப்பட்சி, வெடிச்சத்தம் பொன்வர். இவை மனையில் காணப்பட்டால்,

அம்மனையில் பேய்கள் இருக்கும் அத்துடன் புத்திர நாசமும் ஏற்படும் என்றறிக.

கருவேபடு சல்லியங்களைத் தாங்கமலன் உரைசெய்து அருளியதால்
பெருவேள்வி களுமுதிரமுடன் பெலியோகி னிக்குப்பூ சைசெய்தே
மருமாலிகை யாந்திபமுடன் மறைநூல் வழியாய் மகிழ்ந்தளிக்கப்
பெரிதாய் வருசல்லியம் போகும்பேய் சூனியமும் பேசுவதே. (1318)

கருவழிக்கும் சல்லியங்களைப்பற்றி விசுவகர்மா கூறியதால் பெருவேள்வியும், உதிரபலிகள் செய்தும், மோகினிக்குப் பூசை செய்தும், தீபம் ஏற்றியும் மறை நூல்கள் கூறியபடி நிவேதனம், தானம் இவை வழங்கியும் சாஸ்திரப்படிப் பூசைகள் செய்தும் மனை அமைத்தால் சல்லியம் தீரும் மேலும் சூனியம் அகலும் என்றறிக.

கிருகப்பிரவேசம்

மாவார் மயனார் வகுத்த கிருகத்தில்
தேவார் பிரவேசம் செப்புதற்கு - தூவார்
வழிபடு தெய்வ வணக்கம் புரிந்து
மொழிவேன் நடத்தும் முறை. (1319)

மயனார்தானும் கூறிய முறைப்படி மனை செய்து குலதெய்வத்தை வணங்கி, கிருகப்பிரவேசம் செய்யும் முறைகள் பற்றி இனிக் கூறுவோம்.

மறையொலி ஓமம் முழங்கமங் கலமுழவ மார்ப்ப
நிறைமணி விளக்கி னோடு நிகழலங் காரமன்ன
நிறைவுள நூலிற் சொன்னநேர் பொருள்யா வுங்கொண்டு
குறைவறத் திருவை யுன்னி குடிபுகநன் றதாமே. (1320)

வேதம் ஒலிக்க, ஹோமம், மங்கல வாத்தியம் முழங்க, குத்து விளக்கேற்றி, தெய்வத்திருவுருவப் படத்திற்கு அலங்காரம் செய்து நூலிற் கூறியபடி பொருட்கள் அனைத்தும் வைத்து வணங்கி குடிபுக நன்றாகும்.

தத்துங்கதிர் சேயிவைஆ காசானி பொன்புந்தி புகர்திங்கள்
அத்தமேடம் புனர்பூசம் அநுஷம் சோதி அசுபதியும்
உத்திரங்களோ டுமூன்றும் ஒணமிரே வதியிவை நன்றாம்
எத்துங்குடந் தேள்சதுர்த்தி யுவாவிவற்றை நீக்கிக் குடிபுகுமே. (1321)

சூரியன், சனி, செவ்வாய், இராகு, கேது, வியாழன், புதன், சுக்கிரன், சந்திரன் இவை மேஷம், புனர்பூசம். அநுஷம், சுவாதி, அசுவினி, உத்திரம்,

உத்திராடம், உத்திரட்டாதி, திருவோணம், ரேவதி, இந்த நட்சத்திரங்கள் நன்றாகும், கும்பம், விருச்சிகம், சதுர்த்தி இவற்றுடன், உவாவும் நீக்கிக் குடியேறுவதாகும், அதாவது சூரியன், செவ்வாய், சனி, இராகு, கேது இவற்றின் தொடர்பு ஏற்படாமலும், புதன், வியாழன், சுக்கிரன் பார்வையும் தொடர்பும் உள்ள இலக்கினத்தில், மனை செய்தலாம். உவா என்பது சூரியனுக்கு ஏழாவது இராசியில் கிரகங்கள் சஞ்சாரம் செய்யும்போது வக்கிரம் அல்லது வக்கிர நிவர்த்தி ஏற்படும் இதுவே உவா என்றழைக்கப்படும் நீக்கி மனை புகுதல் நன்றாகும்.

அஷ்டமி உவாவிருத்தை அருக்கன் சேய்மூலை மாதம்
விட்டலும் விஷகடிகை வெள்ளியே எதிரில் மூடஞ்
சுட்டிய வலக்கண் சுக்கிரன் சூலமுநே ரேயாதல்
நட்டமா மனைபுகுந் தால்நாசம் என்றுரைக் கலாமே. (1322)

அஷ்டமி, உவா, சூரியன், செவ்வாய் 7ல் நிற்றல், சூன்யம்பெறாத மாதங்கள், விஷகடிகை சுக்கிர அஸ்தமனம், சூலையுள்ளதிசை நேர் செல்லல் இந்தக் காலங்களில் மனை குடிபுக நஷ்டமும், மனைநாசம் தனநாசமும் உண்டாகும்.

வேறு

முற்றுங் கொவ்வையங் கனியிதழ் முகமதி மாதே
பற்றும் வீட்டினிற் குடிபுகப் பகர்ந்தனர் மயனார்
உற்ற ராசிகட் பனிரண்டில் உற்றுக சுத்தம்
மற்ற ராசியில் உபயமுந் தேளினிற்சுப மிலிவம்பே. (1323)

கொவ்வைப்பழம் போன்ற சிவந்த அதரங்களைக் கொண்ட பெண்ணே வீட்டில் குடிபுக மயனார்தானும் ராசிகள் பனிரண்டில் சுத்தமான ராசிகளில் நன்றாகும், உபயராசி, விருச்சிகம் இந்த இராசிகளிரண்டும் சுகமற்றவை வம்பே வந்து சேரும் என்று கூறியருளினார்.

வேறு

மங்கை ஞாயிறு வாரம் மனைபுகில் வாழ்வுமீறும்
திங்கள் இல்லஞ் சேரிற்றிரு மகள்கடாட் சமுண்டாம்
பங்கமாம் செவ்வாய் நாளில்பதி புகில்சண்டை யுண்டாம்
மங்கையே மயனார் சொன்னவன்மை அறிந்து கொள்ளே. (1324)

ஞாயிற்றுக் கிழமை மனையில் குடிபுகுந்தால் வாழ்வு அதிகரிக்கும், திங்கட்கிழமை குடிபுகுந்தால் திருமகள் அருள்ஏற்படும், செவ்வாய்க் கிழமையாகில் சண்டையுண்டாகும், என மயனார் கூறியருளினார்.

பொங்கிய புதனே யாகிற்போன வரகத்தில் வாழ்வர்
மங்கிய வியாழ நாளில்மனை புகில்வாழ் வுண்டாகும்
பங்குற வெள்ளி நாளில் பாரியாள் வேசியாவாள்
தங்கிய சனியிற் போனால் சலிப்பில்லை சுகமதாமே. (1325)

புதன்கிழமை குடிபுகில் அம்மனையில் இருந்து நல் வாழ்வு வாழ்வர், வியாழக்கிழமையும் குடிபுக நற்பலனே ஆகும், வெள்ளிக்கிழமை குடிபுக மனைவி விபசாரியாவாள் சனிக்கிழமை குடிபுக சலிப்பில்லை சுகமே உண்டாகும்.

வேறு

பொலந்திரு அனைய மாதே புகுதுநாள்அநு டம்விட்டம்
சிலம்புமுத் திரங்கள் ரோணி சித்திரைசத யந்தோணி
இலங்குமான் தலையே பத்தாமிவை களுமுத்தம மேயாகும்
நலங்கொளும் பூசம் மத்திநாடு றக்கண்டு கொள்ளே. (1326)

அழகிய பெண்ணே கேள் கிருகப்பிரவேசம் செய்யுந்நாள் அனுஷம், அவிட்டம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, ரோகிணி, சித்திரை, சதயம், ரேவதி, மிருகசீரிடம் இவை பத்தும் உத்தமமான பலன்களைத்தரும், மற்றும் பூசம் நட்சத்திரத்தின் நடுப்பகுதியும் நன்றேயாகும்.

சொல்லுமச் சோதி அஸ்தம் சொல்புனர் பூசமோணம்
புல்லுமக் குதிரை நாளில்போய் புகின்அயலார் கொள்வர்
நல்லகார்த் திகைசிவன் மீன்நாடு மேதியால் சேதம்
அல்லல் ஓங்குயர் புகுத்தும் மாமயன் உரைத்தவாறே. (1327)

சுவாதி, அஸ்தம், புனர்பூசம், பூசம், திருவோணம், அசுவினி, இந்நாட்களில் குடிபுகுந்தால் அம்மனையை அயலார் கவர்ந்து கொள்வர். கார்த்திகை, திருவாதிரை நாட்களில் குடிபுகுந்தால் மனைதீக்கிரையாகும், துன்பமே அதிகம் உண்டென்று மயனுரைத்தவாறே.

உதித்ததோர் ராசிமுன்னா உயர்சுகம்வ றுமைகீர்த்தி
கதித்ததோர் நட்புமைந்தர் கடியசத்துரு வினாசம்
மதித்திடும் இல்லாள்சா வுமரணமே பிணிசம்பத்து
பதிவிரோதந் தான்மூன்று பத்தாறே பன்னொன்றுகொள். (1328)

குடிபுகக் குறிக்கும் உதயலக்கினத்திற்கு 3, 6, 10, 11ல் தீயகோள்கள் தங்கினால், வறுமை, புகழ் அழிதல், நண்பர்பகை, மைந்தர்சாவு,

மனைவிமரணம், பிணி, சம்பத்து அழிதல், மனைப்பாழாகுதல் இவைகளுண்டாகும், 3, 6, 10, 11 சுத்தமாக இருப்பதும் அத்தானங்களை சுபர் பார்த்தால் மேற்கூறியவற்றால் நற்பலன்களை அறியலாம்.

பாவியாம் கிரகம் பாவிபார்த்திடப் படுமெட்டு உற்றால்
பாவியாம் அமரபக்கப் பனிமதி ஆறெட்டு உற்றால்
பாவியாம் விரயத்து உற்றால் பாரிடை கொடியவாகும்
பாவியாம் அவனும் மாய்வன் பண்ணவர் உரைத்தவாறே. (1329)

பாவக்கோள்கள் எட்டில் நின்றாலும், அல்லது எட்டாம் இடத்தைப் பார்த்தாலும் தேய்பிறைச் சந்திரன் ஆறு, எட்டாம் இடங்களில் தங்கினாலும், பன்னிரண்டாம் இடத்தில் பாவிகள் தங்கினாலும் கொடிய பலனுண்டாகும், மேலும் மனைக்குரியவனும் மாண்டு போவான் என்று மயன் உரைத்தவண்ணமே.

பத்திரகர ணம்தத்தம் பகர்சூன்யதி தியீர்க்ஷ்டி
நத்தமாம் அமரபக்கத் தட்டமிபன் னொன்றாதி
யுக்தநான்கு சுக்லம் உதயமாம் பக்கமுன்னள்
சுத்தமாம் பிரதோடங் கள்சுகந்தரா ஆகாவம்மா. (1330)

பத்திரை கரணம், அவரவர் ஜனித்த திதியின் சூன்ய இராசிகள், பிரதமை, சஷ்டி, திதிகள், தேய்பிறைத்திதிகள், அஷ்டமி, ஏகாதசி, சுக்கிலபட்சப் பிரதமை, துதியை, திருதியை சதுர்த்தி நீக்கி மற்றநாட்கள் ஆகும், கூறியவைகள் சுகந்தராவாம்.

பூமகன் ஆறுவர்க்கம் புகல்மதி கதிரோன் பார்வை
நாமுறுமதி சேர்வீடு நாட்டெதிர் புகரோன் நிற்றல்
பேமுறுமென் பர்மேலோர் பேசொணா நாட்கள் இன்ன
தாமறிந்து அறிவோர் நன்னாள் தாங்கொளற் குரியரன்றே. (1331)

செவ்வாய் ஆறில் நின்று சந்திரன், சூரியன் பார்வை பெற்றும், சுக்கிரன், சந்திரனுடன் நின்றால் குற்றம் இல்லை கிருகப் பிரவேசம் செய்யலாம்.

சுங்கனே ஆட்சியுச்சம் தூயநட்போ டேகூடின்
அங்கனார் எதிரேநிற் குந்தோடங் கொஞ்சமுமில்லை
தங்கிய திரத்துராசி தாணுவாமுப யம்மத்யம்
துங்கமில் சரத்துராசி தொலைவுறும் ஆகாதம்மா. (1332)

சுக்கிரன், ஆட்சி, உச்சவீடுகளில் நட்புக் கிரகங்களின் சேர்க்கை அல்லது நட்புக் கிரகங்களின் வீடுகளில் நின்றால், சுக்கிரன் எதிரில் நிற்பதால் ஏதும் தோஷமுண்டாகாது. ஸ்திர, உபயராசிகளில் மத்திபமான பலனும், சரராசியில் சுக்கிரன் நின்றால் ஆகாத தீயபலன் உண்டாகும் என்றும் அறிக.

விடையதின் அமிசம் எல்லா வீட்டிலும் புகுதலாகும்
விடையது குணமில் லாது மேவினும் உத்தமந்தான்
விடையிற் சுபரிருந்தால் மென்மேலும் சுகமே நல்கும்
விடையம்சம் இரவானா லும்மேல் அவைகுறிக்க நன்றே. (1333)

ரிஷப லக்கினத்தில் குடிபுகுந்தால் நற்பலனே ஏற்படும், ரிஷபலக்கினத்தில் குற்றம் ஏற்படினும் நற்பலனேதரும், ரிஷபத்தில் சுபர்தங்கினால் மேலும் நற்பலனே ஆகும். உதயலக்கின நவாம்சம் இரவு இராசிகளானாலும் நன்றே ஆகும்.

கிழக்கே குடிபுக ஆகாத இராசி

கடகமும் சிங்கந்தா னுங்கதிரவன் திசையிற் செல்லில்
படமுடை அரவம் தீண்டும் பார்மனை பாழதாகும்
திடர்மனை தனிற்புத்து சேர்ந்திடக் காணல் ஆகும்
விடமெனும் விழியினாளே விதிவழி திண்ணம் தானே. (1334)

கிழக்குத் திசையில் மனை அமைந்து அங்கே குடிபுக, கடகம், சிம்ம லக்கினங்கள் ஆகாது இதனால் படமெடுக்கும் பாம்பு கடிக்கும், மனை பாழாகும், மனையில் பாம்புப் புற்றுண்டாகும், இவை விதிப் பயனால் கூடும் என்றறிக.

தெற்கே குடிபுக ஆகாத ராசி

துலாமொடு தேளும் தெற்கு தோன்றுதல்செய் வானாகில்
பலாபலன் எல்லாம் பாழாய்ப் பதியுடன்குடி போமென்று
நிலாவெனு விழிகண் மாதே நிறைமனை போகலாகா
தலாதலம் முன்னே சொன்னேன் சமயமாந் திங்களுண்டே. (1335)

தெற்கே குடிபுக வேண்டில், துலா, விருச்சிக லக்கினங்கள் கூடாது இதனால் மனையும், மனைக்குரியவனும் நாசமடைய நேரிடும், சந்திரன் போலக் குளிர்ந்த பார்வையுடைய பெண்ணே குடிபுகக் கூடாது, இவை ஒருமாதத்தில் மேற்படி பலனுண்டாகும்.

மேற்கே குடிபுக ஆகாதராசி

மகரமாம் கும்பம் மேற்கே வாழ்மனைபு குவானாகில்
நிகரமாந் தலங்கள் வேறாய்நிறை மனையழிந் தேபோகும்
சிகரமாந் தலைவன் சாவான் சிதைவுறுந் திண்ணமாகும்
அகரமாந் தலமல் லாமல் ஆச்சியும் அல்லகேடே. (1336)

மகரம், கும்பம் லக்கினங்கள் உதயமான போதில் மேற்கே மனை புகுந்தால் மனைவேறுபட்டு அழிந்தும்போகும், மனைத்தலைவன் மரணமடைவான், நஷ்டம் நிச்சயமாகும், கேடான பலன் ஏற்படும்.

வடக்கே குடிபுக ஆகாத இராசி

தகருடனே றுதன்னில்தாழ் மனைவடக்கே போகில்
இகலுடனி ழிவுண்டாகி இன்பமேஇல் லையென்று
நிகருடன்தலங் கள்வேறாய் நிச்சயம் அழிந்துபோகும்
திகிலுடனிறப் பனென்றேதிடம் பெறுமயனும் சொன்னார். (1337)

வடக்கே குடிபுகும் இராசி ரிஷபமானால் இழிவும், தாழ்வும் உண்டாகும், இன்பமே இருக்காது மனை வேறுபட்டுப் போவதும் தலைவனும் மறிப்பான், மேலும் அச்சம் கொண்டு அழிந்து போவான் என்று மயன் உரைத்தவாறே.

மீனவன் கிழக்குமேடன் மிளர்தெற்கு தநுவோன் மேற்கு
ஆனவவ் விடைவடக்கும் அன்றேதான் கொல்லுந் தேளோன்
மானமாரங் கித்திக்கு மாநண்டு தென்மேல் கோல்தான்
வானரு வடமேற் பாங்குவளர் குடம்வட கீழாகா. (1338)

மீனராசியில் கிழக்கிலும், மேஷராசியில் தெற்கிலும், தனுசு இராசியில் மேற்கிலும், ரிஷபராசியில் வடக்கிலும் குடிபுக அன்றே மரணம் சம்பவிக்கும், அக்கினி மூலையில் விருச்சிக லக்கினத்திலும், கடகத்தில் தென்மேறகிலும் வடமேற்கில் கும்பலக்கினத்திலும் குடிபுகக்கூடாது.

சிங்கமே மகரங் கன்னி செறியுந்தண் டிற்கூறா
பங்கமார் நடுத்திசை யின்பார் செலிற்றீ தேயாகும்
துங்கஞ்சேர் கோள்பகைக்குத் தோற்றமாம் தானம் பத்தேழ்
பொங்கவே புக்கானா யிற்புலன் பிறன்கொள்வான் அன்றே. (1339)

சிம்மம், மகரம், கன்னி, மிதுனம், இவ்விராசிகளில் நடுத்திசையில் குடிபுகுந்தால் தீதாம் 7, 10ஆம் இடங்களில் தீய கோள்கள் தங்கி நிற்க மனைபுகினும் மனையை பிறர் அபகரித்துச் செல்லுவர்.

பூர்வ, தட்சிண, பச்சிம, உத்தரதிக்கில் குடிபோகும் பலன் கிழக்கே குடிபுகுதல்

பூர்வதிக்கைப் போலேநலந் தருமோபுதுக் கியவீடடை வோருக்குக்
கோருமுன்பரிந் துகுலதெய்வம் தொடர்ந்துருகிய வாயினால் விண்டு
பாரும்வெண் பசுபாலுடன் விளக்கும்பருத் தியும்நிறைகுடம் பழையவழக்கும்
சேருடன்சோ மன்சுகந்தசந் தனமும்சரி தகுணமுள்ள பெண்ணும். (1340)

புதுமனை குடிபுகுவோருக்கு கிழக்குத்திசை போல நலந்தரும் திக்கு வேறொன்றில்லை அழைக்காமலே குலதெய்வம் வரம்அளிக்கும், பசு, பால், விளக்கு, பருத்தி, நிறைகுடம், பழையவழக்கு, திங்கள், மணமுள்ள சந்தனம், நற்குணமுள்ள பெண்ணும் சேரும்.

சேரும்நல் லினமும்ஸ்வஸ் திரீயுடன்பூர ணகும்பம்சம் பிரமத்துடனே
ஊரும்உப் பும்உறைப்புடன் புளியும் உவர்ப்புடன்கசப் பறுசுவையும்
ஆருடம் பார்த்தேஅரு ணோதயகா லம்அறிந்துநீ அழகியநன்னாளில்
ஏறினால் குடியேயெழில் பெறவாழுமி கபரமிரண் டுநல்வழியே. (1341)

நன்மக்கள் தொடர்பும், தன்மனையாளுடன் நிறைவான வாழ்வும், ஊர்மெச்சும் வாழ்வும் உப்பு, உரைப்பு, புளிப்பு, உவர்ப்பு, கசப்பு, துவர்ப்பு முதலான அறுசுவையுடன் உண்டியும் கிட்டும் உதயாரூடம் கணித்துக் கண்டு சூரியஉதய வேளையில் நன்னாளில் குடியேறினால் இகம், பரம் இரண்டிலும் நல்வாழ்வே உண்டாகும்.

தெற்கேகுடிபுகுதல்

சேர்க்குந்தெற் குச்செலவதி கந்தமிழிற் பாயிதின்றதற் குத்திரவியம் கொடுப்பாய்
பாற்கடல்போ லொழிப்பற வாழ்வாய் பாட்டி பாட்டனைத் தொழுவாய்
ஏற்கநல்லின மும்உணரும் பேத்திடுவாய் இதமுண்டு பிதிர்தே வதைக்கும்
தீர்க்கமாய்த் தேவிஆசை இட்டுவாய் தின்பாய் அசம்ச மைத்து. (1342)

தெற்கில் குடிபோனால் செலவதிகமுண்டாகும், தமிழ்ப்புலவர்களுக்குத் திரவியம் கொடுப்பாய் பாற்கடல்போல் அனைவருக்கும் கொடுத்து வாழ்வாய், முன்னோரைப் பாட்டன், பாட்டியைத் தொழுவாய், பிதுர்க்களுக்கும், உற்றார் உறவினருக்கும் செலவு செய்வாய், தீர்க்கமாக சக்தி பூசை செய்வாய், பாயசம் சமைத்து இனிப்புடன் உண்ணும் வழியேற்படும்,

சேர்க்கும்செம் பருத்திப்புஷ் பமும்தினையும் அதில்பலதா னியத்துடனே
யார்க்கும்பொது வாய்மறந்திட நடந்துயாவர்க் கும்யாசகம் கொடுப்பாய்

மார்க்கமாம்மால் பொழுது அதனிலேகமா தவமாமகம் பெறுமே
யார்க்குமெய்க் குணத்தையறிந் திடச்சொல்வாய் அமர்ந்திட்டமனைதனையுதிக்கு.
(1343)

மனையில் செம்பருத்திப்பூவும், தினையும், பலதானியமும் பெருகிடும் அவற்றை எல்லோர்க்கும் கொடுத்து இரப்பவர்க்கு அளித்து, தவவாழ்வு வாழ்வாய், யார்க்கும் மெய்ஞானம் அறியும்படியாகக் கூறி அறவாழ்வு வாழ்வாய் தெற்கில் குடியேறினால்.

மேற்கே குடிபுகுதல்

குடதிசையை நோக்கிக்குடித் தனமேற்கு ருவைநீதொழு வாய்கேளாய்
இடறச்சொன் னால்யேகலாம் மேற்கே இதம்சதம் அகமென்று
அரும்பொன் னுடமைஅணி யணிவெகுவா யமர்ந்திடும் அதிலுள்ளோர்
படருமேபூ மிபாக்கியம் கிடைத்துபல பெருமானங் கள்நடக்கும். (1344)

மேற்கில் குடிபுகுந்தால் அம்மனை வாழ்வோர்க்கு யாவும் நன்றாகும், பொன், அணிகலன், ஆடைகள் அதிகரிக்கும், பூமிலாபம், மற்றும் பாக்கியங்களும் வெகுமானங்களும் கிட்டும்.

மடமும்கட் டிடலாம்மா டுநின்றிடவா கனங்களும்வா மும்கட்டடமும்
தொடுமேபின் னைசுகந்தரு மேதாண்டா மல்விடி விளக்கேற்ற
நடமுறநல் விதியாய்நா ரணன்பூசை நந்தியாவட் டமுஞ்செண்பகமலரால்
திடமுறப்பார்த் துத்தீபம் வைத்திடப்போய் தியாகமும்கொடுக் கநீவாழ்வாய்.(1345)

மடம் கட்டலாம், மாட்டுத் தொழுவமும், வாகனக்கொட்டாரமும் கட்டலாம், சுகங்கள் வரும் விடிவிளக்கேற்றி நாராயணன் பூசை செய்யலாம், நந்தியாவட்டை, செண்பகம் முதலிய மலர்கள் வைத்துத் தீபம் ஏற்றிப் பூசை செய்து தர்மதானம் வழங்கி இன்புற வாழ்வாயாக.

வடக்கே குடிபுகுதல்

வடக்கிலேநீ வாழநினைத் தால்வாழ்த்திய பெண்களுக்கு வரிசையுடன்
தடக்கையில் வளையிமத்தரிக் கும்பேசனு டையும்மாய் வுடனணிந்து முன்னழைத்து
இடக்கையும் ஏத்திவிடமுன் சேர்த்து விந்தையாய்ச் சோபனமா
நடக்கவேநா லுஅடிக்கொரு தேங்காய்நறு மலர்மாலையுங் கோடிகொடுப்பாய்.
(1346)

வடக்குத் திசையில் குடிபுகுந்திட விரும்பினால், சுமங்கலிப் பெண்களுக்கு வஸ்திரம், தாம்பூலம், மஞ்சள், தாலிக்கயறு, புஷ்பம்

பழம், தேங்காய் வழங்கி அவர்களை அழைத்து வந்து மனையின் நான்கடிக்கு ஒரு தேங்காய் என்ற கணக்கில் கொடுத்தும் நல்ல மணமுள்ள மாலையும், புது வஸ்திரமும் வழங்கி அவர்கள் வாழ்த்தினையும், ஆசியையும் பெற்றுப் பின்னர் கிருகப்பிரவேசம் செய்வாயாக.

சோபனந்தரு மேசுசிருசிப் படுமேசுசீ லனாயிருந்த போதிலுமே
பாபமும்தரித் திடுமேபா வையர்க்கடு மைபலவித மாணரத்தினமே
லாபமும்வாய்த் திடுமேலா வண்யந்தருமே வுல்லாசமுமுற வும்பேத்திடுமே
தாபமுந்தீர்ந் துவிடுமேதை அகந்திடுமே தபதியார்தா பிக்குந்தலமே. (1347)

மகிழ்ச்சியுடன் பெண்ணின்பம் உண்டாகும், மாதர்போகம் விரும்பாதவனாகி இருந்த போதும் உடலின்பம் வாய்க்கும், பாபங்கள்தீரும், பலவிதரத்தினங்கள் தந்து பெண்களுக்கு அடிமையாகி வாழ்வன், மேலும், லாபங்களும், அழகும், உல்லாச வாழ்வும் சல்லாபம் உண்டாகும், தாபம் தீரும், சகல சௌபாக்கியமும் பெருகிடும் ஸ்தபதியானவர் சரியாக மனை அமைத்திடில் இவையாவும் நிச்சயம் ஏற்படும்.

நேரெதிர்சூ லதோஷம் நிகரட்ட மியுவா தோஷம்
பாரொத்த விஷாதிதோ ஷம்பகர்சுக் கிரனெதிரின் தோஷம்
வாரொத்த வாஸ்துகாலம் வண்மையாய் மாற்றும் என்றே
நேரொத்த மொழியாய் கேளாய் நிகழ்தினார் மயனுமன்றே. (1348)

சூலம் எதிரிட்டதோஷம், அஷ்டமிநாள், உவாநேரிட்டதோஷப், விஷகடிகை, சுக்கிராஸ்தமன தோஷம், இவையாவும் வாஸ்துவின் காலமறிந்து மனை எடுத்தபோது நிச்சயமாக மாற்றிவிடும், என்று மயனார் மொழிந்தவாறே.

பேசுமறை நான்கினுமுயன் றபிரமன் வகுத்த புவிதனிலே
வாசமயன் முன்சொன்ன படிமறைநூல் வழியாய் மனைதெரிந்து
நேசமுடனே உரைத்துவிட்டேன் நீடூழி எனுநிலை தவறாது
ஆசைக்கனி போலிதை அருந்த அரிமாதக லாதமருவளே. (1349)

நான்கு வேதங்களை அடிப்படையாகக் கொண்டு பிரமன் சிருஷ்டி செய்த இம்மண்ணுலகில் மயன் உரைத்த இந்த நூலைக் கொண்டு மனை அமைத்தால் அம்மனை நீடூழி காலம் நிச்சயம் வாழ்ந்திருக்கும் இது தவறாது இந்நூலை விரும்பி உண்ணும் கனிபோல

உண்டு அதன்படி நின்று மனைசெய்தால் திருமாலின் பத்தினயான மகாலெட்சுமி என்றும் அம்மனைகளில் கொலுவீற்று நிற்பாள்.

சீரும்சிறப் பும்பெருக்கு மனைதிருத்தி முடிக்குந் தகுதியர்க்குப்
பேரும்பெரு வாழுலகியல் பும்பிரமன் வகுத்த புவிதனிலே
காரும்பொழிந் துவிளைவது போல்கல்விக் கரசன்கனம் உடையான்
தேரும்பரி யும்தண்டிகை யும்சிவிகை குளிரும் சிறப்புளதே. (1350)

மனைதனை விதிப்படி அமைத்து குடிபுகுந்தால் சீரும், சிறப்புடன் பிரம்மா சிருஷ்டித்த இம்மண்ணுலகிலே கல்வியும், செல்வமும், தேரும், குதிரைகளும், பல்லக்கு, சிவிகையுடன் சிறப்புப் பொருந்திய நல்வாழ்வு உண்டாகி இன்புற வாழ்வர்.

முன்னாள் மயனுமே மொழிந்த முதுமொழிகள் டுளம்பூரித்தே
இன்னாள்வாழ் பவர்க்கிணங்க ஏற்ற மொழிகள் யாவும்
சொன்னயம்கண் டுமேசொன்ன சொற்களை மாற்றிடாது இருந்தவர்
தன்மயம் பெற்றே தாழ்விலாசெல் வீகத்துடன் வாழ்வரே. (1351)

முன்னாளில் மயனார் உரைத்த முதுமொழிகளான நூல் வழிமனை செய்து வாழ்பவர்கள் வாழ்வில் தன்னிறைவு பெற்று செல்வச் செழிப்புடன் வாழ்வார்கள்.

சுபம் - சுபம் - சுபம்.

ஒவ்வொரு நட்சத்திரத்திலும் கிரகாரம்பம் செய்யும் போதுண்டாகும் பலன் விசாகம் நட்சத்திரம் முதற்பாதம்

முளைத்திடும் விசாகம்தன் னில்முதற் காலில்மனை உண்டானால்
குளைப்படும் மோகமாதா குடும்பத்தில் நன்மை உண்டாம்
விளைப்புண்டா கும்மக்கட் பேறுவிளைந் தாலுமுடனே தீரும்
தளைப்புண்டாம் பாக்கியங்கள் தான்வயது இருபது ஆமே.

விசாக நட்சத்திரம் முதற்பாதத்தில் மனை ஆரம்பம் செய்தால் குடும்பத்தில் நன்மையுண்டாகும். மக்கட்பேறு உண்டாகும், இருப்பினும் புத்திரதோஷமுண்டு, பாக்கியங்களும் உண்டு. அந்த மனையின் வயது இருபது ஆண்டுகளாகும்

2-ஆம் பாகம்

இருபதாமிரண் டாங்காலில் இடமதைஎடுப் பானாகில்
விருபூமி நூறுநாளில் வினைவரும் விலங்குமுண்டாம்
சிறையினில் படிப்பதாகும் சிலபலநோய் உண்டாகும்
குருபரம் வயதுபத்தில் குடியதுமிழந் துபோமே.

விசாகம் நட்சத்திரம் இரண்டாம் பாதத்தில் மனை ஆரம்பம் செய்தால் நூறு நாட்களில் வினை வந்து சேரும், விலங்கணிந்து சிறை செல்ல நேரும், சிலபல நோய்களும் உண்டாகும், பத்து ஆண்டுகளில் மனையும் பாழ்பட்டுப்போகும்.

3-ஆம் பாதம்

வளர்ந்திடும் மூன்றாங்கா லிவழியது எடுக்கும்போது
வளர்ந்திடும்நாற் பத்தைந்தில் மன்னரால்சே ரும்செல்வம்
குளந்திடும்குல தெய்வங்கள் குடும்பத்தில் ஜனங்கள்சேரும்
வளர்ந்திடுமெண் பத்தஞ்சு வயதுதானிருக் கும்தானே.

விசாகம் மூன்றாம் பாதம் மனை எடுக்கும் ஆரம்ப நாளாகினால், நாற்பத்தைந்து ஆண்டுகள் கழிந்தபின் அரசாங்கத்தால் செல்வம் சேரும், குலதெய்வம் அணுகும், ஜனங்கள் சேர்க்கை வரும் அம்மனையின் ஆயுள் எண்பத்தைந்து ஆண்டுகளாகும்.

4-ஆம் பாதம்

தானதுநா லாங்காலில் சம்பத்துமி கவுண்டாகும்
மானதுநிலத் திலுள்ளம் மகிழந்தது வந்துசேரும்
நானமதெண் பத்தொன்று நாளினிற்பொரு ளுஞ்சேரும்
கானல்வாழ் பொருளுந்தோற் றுக்கனவய தெழுபதாமே.

விசாகம் நாலாம் பாதத்தில் மனை தொடங்கினால் மிக்க சம்பத்துண்டாகும், பூமிகள் சேரும் மனை செய்த எண்பத்தொரு நாட்களில் பொருட் சேர்க்கையுண்டாகும், வாழ்வுடன் பொருளும் சேரும் மனையும் எழுபது ஆண்டுகள் வாழும்.

அனுஷ நட்சத்திரம் முதற்பாதம்

எழும்பியவரு ஷந்தன்னில் இருக்கின்ற முதற்கால்தன்னில்
விளம்பிடுமுப் பதானால் வீட்டினில்மனை யாள்சாவாள்
குளம்பிடுமக் கள்சாகும் குடும்பத்தில் ஜனங்கள்சேதம்
வளம்படுவரு ஷமஞ்சில் மனையதுமழிந் துபோகும்.

அநுஷநட்சத்திரம் முதற்பாதம் மனை துவங்கிய நாளானால் முப்பது நாட்களில் மனைவி மரணமடைவாள், புத்திர நாசமுண்டாகும் ஐந்து ஆண்டுகளில் மனையுமழியும்.

இரண்டாம்பாதம்

அழியாதுரண் டாங்காலில் அம்மனை இருப்பதானால்
விழுந்துணர் சோபனங்கள் மென்மேலும் பலனுண்டாகும்
எளியவனா வதில்லைஇடஞ் சலுமுடனே தீரும்
களிப்புடன்வாழ் வுஞ்சேரும் கனவயது அறுபதாமே.

அனுஷம் 2ஆம் பாதத்தில் மனை ஆரம்பம் செய்தால், சோபனங்களும், மென்மேலும் நற்பலன்களுண்டாகும் இடையூறுகள் அகலும், நல்வாழ்வுடன் மனை ஆயுள் அறுபதாகும்.

மூன்றாம் பாதம்

ஆறானமூன் றாங்காலில் அன்புடன்மனை உண்டானால்
வீறாணமூன் றாமாசம் மேவியமன் னன்சாவான்
தேறாதகு ழவிசாகும் சேர்ந்திடுங் காலிசேதம்
மீறாதவீ டுபாழாய் விரும்பிய வயதுமூன்றே.

அனுஷம் மூன்றாம் பாதத்தில் மனை துவங்கினால் மூன்றாம்மாதம் மனைக்குரியவன் மாண்டு போவான், புத்திரர்கள் இறப்பர், கன்றுகாலிகள் சேதமாகும், மூன்று ஆண்டுகளில் அந்த மனையும் பாழ்பட்டுப் போகும்.

நான்காம்பாதம்

விரும்பியநா லாங்காலில் விளங்கியமனை உண்டானால்
இருபத்திரண் டாம்நாளில் ஏந்திழை மனைவியுண்டாம்
குருபதம்வணக் கம்செய்யும் குழந்தைகள் பேறுமுண்டாம்
மரும்பியே எழு பத்தஞ்சில் மனையது இறக் குந்தானே.

அனுஷம் நாலாம் பாதத்தில் ஆரம்பம் செய்தால் இருபத்து இரண்டாம் நாளில் மனைவி அமைவாள். இறையருளால் புத்திர பாக்கியமும் உண்டாகும் அம்மனையின் ஆயுள் எழுபத்தைந்து ஆண்டுகள் ஆகும்.

கேட்டை நட்சத்திரம் முதற்பாதம்

இருந்திடு முதற்கால் கேட்டை ஏந்திழை சாவுமுண்டாம்
இருந்திடு முப்பத் தஞ்சில் இறைவனால் கலகமுண்டாம்
வருந்திய மனையினுள்ளே வஞ்சனை ஏவல் சேரும்
மருந்துகள் நித்தமுண்ணும் மயக்கங் கள்நோய் உண்டாமே.

கேட்டை முதல்பாதத்தில் கிருகாரம்பம் செய்தால் மனைவி மரணமடைவாள் முப்பத்து ஐந்தாம் ஆண்டில் கடவுளினால் கலகமுண்டாகும், மனையில், வஞ்சனை, ஏவல், பில்லி, உண்டாகும், நோயுண்டாகி மருந்துண்ணலும் மயக்கமும் தினமும் துன்புறுத்தும்.

2ஆம் பாதம்

நோயுண்டாம் இரண்டாம் காலில் நோக்கியவி ருபதாம்நாள்
பேயுடன்தோ ஷத்தாலே பிள்ளை கள்மர ணமாகும்
நாயுமே பகையதாகும் நலசம்பத் துமழிவ தாகும்
ஓயாத சண்டை உண்டாம் ஒன்பது வயதுமாமே.

கேட்டை 2ஆம் பாதத்தில் மனை தொடங்கினால் பேய்பிடிப்பதால் குழந்தைகள் மரணமடைவர், நாய்கள் பகை கொள்ளும், நலமும், செல்வமும் அழியும், ஓயாமல் சண்டைகளுண்டாகும் மனையின் ஆயுள் ஒன்பது ஆண்டுகளாகும்.

3ஆம் பாதம்

வயதுதான் மூன்றாம் காலில் வாழ்வது மிகுதியாகும்
முயலுறு ராஜமன்னர் முயங்குநாள் முப்பத்து எட்டில்
தயவுண்டாம் பெரியோர் வந்து தைரியமிக வுஞ்செய்வார்
அயனுமே வகுத்துச் சொன்னார் ஐம்பது வயதுதானே.

மூன்றாம் பாதத்தில் மனை செய்தால் வாழ்வு மிகும், முப்பது எட்டு நாட்களில் அரசினர் ஆதரவு கிட்டும், பெரியோர் தயவு ஏற்பட்டு தைரியம் ஏற்படுத்துவர், மயனின் கூற்றின்படி மனை ஆயுள் ஐம்பது ஆண்டுகளாகும்.

4ஆம் பாதம்

அன்புடன் நாலாம் காலில் அம்மதிக் கோளதாகும்
வலம்பிலே மாடுசாகும் மைந்தர் கள்நோய் உண்டாகும்
இன்பமாய் இருக்கொட்டா துஏந்திழை வயிற்றில் பீடை
துன்பமும் மிகுதியாகும் சொல்லிய வயது ஏழாமே.

கேட்டை நான்காம் பாதத்தில் மனை தொடங்கினால், துன்பமே உண்டாகும், கால்நடைகள் சேதமுண்டாகும், புத்திரர் நோயுறுவர், இன்பமான வாழ்வு இராது மனைவிக்கு வயிற்றிலே பிணியுண்டாகும் அம்மனை துன்பத்துடன் 7 ஆண்டுகள் வாழும்.

மூலம் நட்சத்திரம் முதற்பாதம்

ஏழதாம் முதற்கால் மூலம்என் னஞ்சுநாளில் மங்கை
கோளது மிகவுண்டா கும்கோதை யாலிடைஞ்சல் உண்டாம்
தானதுவீட் டில்க்ஷேமந் தந்து உயிர்சேதம் ஆகும்
மானமது இல்லை எட்டுவரு ஷத்தில்மனை பாழாமே.

மூலநட்சத்திரம் முதல் பாதத்தில் மனை தொடங்கினால் 40 நாட்களில் பெண்ணால் துன்பம் உண்டாகும், வீட்டில் க்ஷேமம் ஏற்படும் பின் உயிர்ச் சேதம் ஏற்படும், மானம் அழிந்துபோம் எட்டு ஆண்டுகளில் மனையும் பாழாகும்.

2ஆம் பாதம்

பாழில்லை இரண்டாம் காலில் பத்தஞ்சு ஒன்பதானால்
மீளவே அயலூர்போம் வேளையில் பிணங்கள் காணும்
கோளில்லை பயிர்களுண்டாம் கொடுத்த பொன்னுடனே மீளும்
நாளிலே செல்வம் சேரும் நாற்பத்தேழ் வயதுமாமே.

மூலம் நட்சத்திரம் இரண்டாம் பாதத்தில் மனை தொடங்கினால் 59 நாட்களில் பயணம் சென்ற இடத்தில் குடும்பதில் ஒருவர் மரணம் அடைவார், பயிர்கள் விருத்தியாகும், பெண்ணைத் திருமணம் செய்து அனுப்பினால் மீண்டும் தன்மனை சேர்வாள், செல்வம் சேரும் அம்மனை வயதானது 47 ஆண்டுகளாகும்.

3ஆம் பாதம்

சேருமேமூன் றாங்காலில் செட்டு வெள்ளாண்மை சேரும்
ஆருமே நிகரில்லா மலாறெட்டு நாளில் நன்மை
பாரும்நீர் குற்றம் தீரும் பாலுடன் செல்வமுண்டாம்
ஊருமே உறவதாகும் உதித்திடும் வயது பத்தே.

மூலம் 3ஆம் பாதத்தில் மனை தொடங்கினால் வெள்ளாண்மை சிறப்புறும், நிகரில்லாத நன்மை நாற்பத்தெட்டு நாட்களில் உண்டாகும், குற்றங்கள் தீரும் பாலும், செல்வரும் சேரும், ஊரார் நட்புடையவராவர், மனைவயது பத்து ஆண்டுகளே.

4ஆம் பாதம்

பற்றிய நாலாம் காலில் பால்மாடுக றவாதாகும்
மத்திம விளைவும் இல்லை மங்கையாள் தெய்வமுண்டாம்

குற்றமும் மிகுதி காணும் குழந்தைகள் நோயுண்டாகும்
நித்தியம் கலகம் உண்டாம் நிலைத்திடும் வயதுநாலே.

மூலம் நான்காம் பாதத்தில் மனையெடுத்தால் பால்மாடு கறக்காது, நற்பலன் இல்லை விளைச்சல் குறையும், மனையில் பெண் தெய்வம் தங்கும், தோஷங்கள் அதிகமாகும், குழந்தைகளுக்கு நோயுண்டாகும், தினமும் கலகம் ஏற்படும் மனை ஆயுள் நான்காண்டுகளாகும்.

பூராட நட்சத்திரம் முதற்பாதம்

வருடமாம் பூராடத்தில் வந்திடும் முதற்கால் நன்மை
திருடனால் களவு போனது திரும்பிடும்ஏ தானாலும்
மருடவர் எண்பதா நாள்மணம் உண்டாம்நன் மைசேரும்
திருவுமே நிறைந்து வாழும் சேர்ந்திடும்வய தீராறே

பூராடம் நட்சத்திரம் முதற்பாதத்தில் மனை துவங்கினால் நன்மையே ஏற்படும் திருடனால் களவு போன பொருள் ஏதுவாகினும் திரும்பக் கிட்டும், எண்பதாம் நாள், திருமணகாரியமும், நன்மையுமுண்டாகும், லக்ஷ்மிகடாட்சம் ஏற்படும் அம்மனையானது பன்னிரண்டு வருடங்கள் வாழும்.

2ஆம் பாதம்

ஆரென இரண்டாங் காலில்ஐ யைந்துநாளில் கேளாய்
கூர்மனை அரசன் சாவான் குணமுடன் தேடிவைத்த
பேருடன் வயிற்றுப் பிள்ளை பிணமதுதா யுஞ்சாகும்
வேறுடன் பொருள்காணா துவெறுமனை ஆகில் போமே.

பூராடம் 2ஆம் பாதத்தில் மனை ஆரம்பித்தால் இருபத்தைந்து தினங்களில் மனைக்குரியவன் மரணமடைவான், தேடிய நற்பெயர் அழிவதுடன் வயிற்றுப் பிள்ளையுடன் மனைவி மரணமடைவாள், பொருள்கிட்டாது, மனையும் பாழ்பட்டுப்போகும்.

உத்திராட நட்சத்திரம் முதற்பாதம்

அஞ்சிய உத்திராடம் அறிவுடன் முதற்கால் ஆகில்
வஞ்சியர் பொருளும் உண்டு மைந்தரால்செல் வஞ்சேரும்
மிஞ்சியே வாக்கும் உண்டாம் வெல்லுமேமனை யாள்தீர்க்கம்
குஞ்சியே தெய்வம் காக்கும் கூறிய வயதுநாளே.

உத்திராடம் நட்சத்திரத்தின் முதற்பாதத்தில் மனை ஆரம்பம் செய்தால், பெண்கள், மற்றும் பொருள் லாபம் உண்டு, மனைவியின் சொத்து கிடைக்கும், புத்திரனால் செல்வம் சேரும், நல்ல வாக்கு சித்தியுண்டாகும், மனையாள் சுகமடைவாள், அம்மனையை அவன் குலதெய்வம் காத்து நிற்கும் அம்மனையின் வயது நூறு ஆண்டுகளாகும்.

2ஆம் பாதம்

நூறான ரண்டாங் காலில் நோக்கியேமூன் றாமாதம்
காறென மாடானா லும்கண்டு கொள்பிள்ளை தானும்
வீறென தண்ணீரா லேவிளை யதாலுயிரும் போகும்
தேறெனத் தெண்டம் உண்டாம் செப்பிய வயதுநாலே.

உத்திராடம் 2ஆம் பாதத்தில் மனை தொடங்கினால் மூன்றாமாதத்தில், மாடு அல்லது பிள்ளை இரண்டில் ஒன்று தண்ணீரினால் கண்டம் ஏற்பட்டு மரணமடைய நேரிடும், தெண்டங்களும் உண்டாகும் அம்மனையின் வயது நான்கு ஆண்டுகளாகும்.

3ஆம் பாதம்

நளலென மூன்றாங் காலில் நாளெட்டில் நன்மைகாணும்
பாலுடன் பசுக்கள் உண்டாம் பட்டிகள் பெருகிவாழும்
காலமே பூமிவித்து க்ளவில்லை விளைவுண் டாகும்
ஓலமாய்த் தொண்ணூற் றஞ்சுவய துடனுகந்து வாழ்வாய்.

உத்திராடம் மூன்றாம் பாதத்தில் மனை தொடங்கினால் 8 நாட்களில் நன்மையுண்டாகும் பாற்பசுக்கள் உண்டாகும், பட்டிகள் பெருக்குண்டாகும், காலத்தில் பூமியிற் போட்ட விதைகள் சாவியாகாமல் விளையும், மனை ஆயுளும் 95 ஆண்டுகளாகும்.

4ஆம் பாதம்

வாழ்பவர் நாலாம் காலில் வாழ்மனை முளைத்ததானால்
வாழ்தரு மூன்று மாசம் நாளது வந்துசேரும்
காழ்மனை மரித்தல் உண்டாம் கனமுடன்பின் னுந்தோறும்
நீள்புவி மனையாள் நோவு நிலைத்திடும்பின் னுந்தேறும்.

உத்திராடம் 4ஆம் பாதத்தில் கிருகாரம்பம் செய்தால் மூன்று மாதங்களில் மனை அழியும், அதன் பின் மீண்டும் சீர்செய்யப்படும், மனைவிக்கு நோயுண்டாகும், பின்னர் குணமாகும்.

திருவோண நட்சத்திரம் முதற்பாதம்

பின்னுமே திருவோணத் தில்பிறந்திடும் முதற்கால் தன்னில்
சொன்னதோர் பதினொன்றாம் நாள்சுரம் உண்டாந் தெளிவுகாணும்
மன்னவன் சடையுங் காணும் வரும்பிணியுட னேதீரும்
மன்னவன் மனையும் தீர்க்கம் வருபலன்மிக உண்டாமே.

திருவோணம் முதற்பாதத்தில் கிருகாரம்பம் செய்தால் பதினொன்றாம் சுரம் ஏற்பட்டுப்பட்டுப் பின்னர் குணம் எற்படும் மனைக்குரியவன் தலைமயிர் சடைபிடிக்கும் நோய் வந்திடில் உடனே தீரும் மனையின் ஆயுள் 100 ஆண்டுகள் அத்துடன் நற்பலன்களதிகம் ஏற்படும்.

2ஆம் பாதம்

ஐயனே இரண்டாங் காலில் ஐயிருநா ளில்நன்மை
மெய்யன முடியும் வீடுவினை வந்தாலுட னேதீரும்
கையினால் விரைத்த வித்துகன மதாய்விளை வுண்டாகும்
செய்யவே தர்மம் செய்யும் செலவயதறு பத்தஞ்சே.

திருவோணம் 2ஆம் பாதத்தில் மனை ஆரம்பம் செய்தால் 10 தினங்களில் நன்மை ஏற்படும், வீடு சீக்கிரம் கட்டி முடியும், வினை ஏதும் ஏற்பட்டால் உடனே தீர்ந்து போகும் விதைத் விதை நன்கு விளைந்து பயிராகும், தர்மம் செய்தல் கூடும் அத்துடன் அந்தமனை வயதும் அறுபத்தைந்து ஆண்டுகளாகும்.

3ஆம் பாதம்

செல்வமே மூன்றாம் காலில் திருஜென்ம மிகுதிகாணும்
வல்பிணி வந்தால் தீரும் மயக்கமும் வந்துபோகும்
கல்மனது ஆனாலுந் தான்கரைந்திடும் இரக்க வேண்டாம்
நல்மனை என்றுபேசி நாடிய வயது பத்தே.

திருவோணம் மூன்றாம் பாதத்தில் கிருகாரம்பம் செய்தால் லக்ஷ்மிகடாட்சம் உண்டு, நோய்கள் ஏற்பட்டால் உடனே தீரும், மயக்கம் உண்டாகிப் பின்னர் தீரும், மற்றவர் கல்மனதானாலும் கரையும் எவரிடத்தும் இரக்க வேண்டியது இருக்காது. நன்மனையே ஆகும் இதன் ஆயுள் 10 வருடங்களாகும்.

4ஆம் பாதம்

நாடிய திருவோணத் தில்நாலாங் கால்மனை யுமானால்
தேடிய முப்பதாம் நாள்செல் வருமரணம் உண்டாம்
கூடிய மனையிற் கர்ப்பம் குறைந்துதான் அழிந்துபோகும்
நீடிய மன்ன நோயாம் நீள்மனை வயதுமொன்றே.

திருவோணம் நட்சத்திரம் 4ஆம் பாதத்தில் கிருகம் எடுத்தால் முப்பதாம் நாள் மனைத் தலைவன் மரணமடைவான், மனைவிக்குக் கர்ப்பநாசம் உண்டாகும், குழந்தைப் பாக்கியம் அருகிப் போகும், நோயே நீண்டு காணும். மனை ஆயுள் ஒரு வருடமாகும்.

அவிட்ட நட்சத்திரம் முதற்பாதம்

ஒன்றான அவிட்டம் தன்னில் உதித்திடுமுதற் காலானால்
சென்றது ஒன்பதாநாள் திரவியம் மனையிற் கிட்டும்
நன்றென மனையின் உள்ளே நல்லதோர் செல்வமுண்டாம்
மின்னெனக் குறையா வாழ்வு விரும்பிய வயதுநூறே.

அவிட்டம் நட்சத்திரம் முதற்பாதத்தில் மனை ஆரம்பம் செய்தால் ஒன்பதாம் நாள் திரவியம் அம்மனையில் கிடைக்கும், புதையல் கிடைக்கும் குறைவில்லாத வாழ்வு உண்டாகும் அம்மனையின் ஆயுள் நூறு வருடங்கள் ஆகும்.

2ஆம் பாதம்

வாழ்வது இரண்டாம் காலில் மனையது உதிக்குமாகில்
மீள்வது களவுபோன வெள்ளி பொன்மா டானாலும்
தாழ்வில்லை பதினைந்தாம் நாள்தான் திருவருஷங் காணும்
மேல்புவி மனையின் வாழ்வு மேவிடும்எண் பாணாளே.

அவிட்டம் இரண்டாம் பாதத்தில் மனை ஆரம்பித்தால் களவுபோன பொருள், வெள்ளி, பொன் ஆபரணங்கள், பணம் எதுவானாலும் பதினைந்தாம் நாள்கிட்டும் அல்லது ஒரு வருடத்தில் கிட்டும், மனைக்கு எண்பதாம் நாளுக்கும் மேல் விருத்தியுண்டாகும்.

3-ஆம் பாதம்

என்பது மூன்றாம் காலில் இடைஞ்சலே மிகுதியாகும்
வன்பதாய்ப் பொருளுஞ் சேரும் மனைவியால் அழிந்துபோகும்
துன்பமும் துயரம் உண்டாம் துக்கமும்சுக முங்காணும்
மன்படும் இல்லை அந்த மனையே திரண்டுமாமே.

அவிட்டம் மூன்றாம் பாதத்தில் மனை தொடங்கினால் இடைஞ்சல்கள் அதிகரிக்கும், பொருள் சேரும், மனைவியால் அழிந்து போகும், துன்பமும், துயரமும் உண்டாகும், துக்கமும் சுகமும் கலந்தே காணும் மனையானது இடிந்து மண்ணாகும் அல்லது மனையின் வயது இரண்டு ஆண்டுகளாகும்.

4ஆம் பாதம்

ரண்டான நாலாங் காலில் ஏந்திழை மரணமாகும்
பண்டுள்ள முதல்கள் எல்லாம் பரந்திடும்உயிர் விட்டோடும்
கண்டவர் நகைப்பதாகும் கருங்குட்டம்கன் னியாகும்
உண்டது தங்காதா கும்ஒரு மாதம் வயதுரண்டே.

அவிட்டம் நான்காம் பாதத்தில் மனை தொடங்கினால் மனைவி மரணமடைவாள், முதல்கள் யாவும் அழிந்துபோகும், உயிர்ச் சேதமும் உண்டாகும், ஊரார் நகைப்பிற்கு இடமாகும், கருங்குஷ்டம், ஜன்னி முதலான நோய்கள் தோன்றித் துன்பம் செய்யும், ஏதும் தங்காது ஒருமாத காலத்தில் மேற்படித் துன்பங்கள் ஏற்படும் மனையின் ஆயுளும் இரண்டே ஆண்டுகளாகும்.

சதயம் நட்சத்திரம் முதற்பாதம்

வாசமாம் சதயம்வந் துவணங்கிய முதற்கால் தன்னில்
நேசமாய் இருப்பதானால் நிமிஷத்தில் மூச்சும் வீடும்
வாசமாய் மன்னர் தேகம் வாசனை மிகுதியேறும்
தேசமே புகழ வாழ்வு திருவயதி ருபத்தஞ்சே.

சதயம் நட்சத்திரம் முதற்பாதத்தில் மனை ஆரம்பித்தால் அன்புடனுள்ள ஒரு ஜீவன் மரணம் அடையும், மன்னர்களைப்போல் வாசனை திரவியங்கள் பூசிச்சுகம் பெற வாழ்வுண்டாகும், தேசம் மெச்சிப் புகழும்படி நல்வாழ்வுண்டாகும், மனையின் வயது 25 வருஷங்களாகும்.

இரண்டாம் பாதம் இல்லை - மூன்றாம் பாதம்

ஏனை மூன்றாம் காலில் ஏந்திழைபிற விமைந்தர்
மாளுவர் மாளா விட்டால் மாதாபிதா வுமாளும்
நீள்புவி சுற்றத்தார் கள்நெருக்கமும் வழக்கும் உண்டாம்
நாளது ரண்டு மாசம் நல்வயது எட்டதாமே.

சதயம் மூன்றாம் பாதத்தில் கிருகாரம்பம் செய்தால் மனைவியின் உடன் பிறந்தவர் மரணம் அடைய நேரிடும், அப்படியில்லாவிட்டால்

தாய் தந்தைக்காவது மரணம் சம்பவிக்கும், சுற்றத்தாரிடம் நெருக்கம் உண்டாகும். அதனால் வழக்குகளும் உண்டாகும், இவை இரண்டு மாதங்களில் நடக்கும் அம்மனையின் ஆயுள் எட்டு வருடங்கள் ஆகும்.

நான்காம் பாதம்

இட்டமாய் நாலாங் காலில் இருபத்திரண் டாம்நாளில்
தொட்டதோர் மனைவியாள்கை திரவியம் கோணலாகும்
மட்டில்லா செல்வம் ஏறும் வல்லவர்க்குற வுண்டாகும்
செட்டது பலிக்கும் ஆறுவயது மேதிடம் உண்டாமே.

சதயம் நான்காம் பாதத்தில் மனை ஆரம்பம் செய்தால் இருபத்திரண்டாம் நாளில் மனைவியின் சொத்து கிடைக்கும், குறைவின்றிச் செல்வம் சேரும், பலசாலிகளின் நட்புக் கிட்டும், எடுத்த காரியங்கள் யாவும் வெற்றி பெறும், மனையின் ஆயுள் ஆறு ஆண்டுகள் ஆகும்.

பூரட்டாதி இல்லை - உத்திரட்டாதி முதற்பாதம்

காணவே உத்திரட்டா திகலந்திடும் முதற்கால் தன்னில்
பூணவே ஏழாம் நாளில் பொருளதுமிருப் புக்காணும்
தோணவே மநுஷர் மாடு தோன்றியபிணி யுந்தீரும்
ஊணவே மணங்கள் செய்ய ஒருபத்துமீ ரெட்டாமே.

உத்திரட்டாதி நட்சத்திரம் முதற்பாதத்தில் மனை ஆரம்பம் செய்தால் ஏழாம் நாளில் புதையல் கிட்டும், மனிதர் முதல் மாடுகள் வரை ஏற்பட்ட நோய் தீர்ந்துபோகும், திருமண காரியங்கள் நடக்கும் மனையின் ஆயுள் இருபத்து ஆறு ஆண்டுகள் ஆகும்.

2ஆம் பாதம்

ஈரெட்டி ரண்டாங் காலில் எழும்பியபதி னெட்டாநாள்
வீரிட்டுப் பிள்ளை சாகும் விளங்கியபயி ருந்தீயும்
ஊரிட்ட மனையாள் கர்ப்பம் வல்குலைபிசா சுகூடிச்
சீரிட்டே அழிவதற்குத் திருவய தஞ்சது ஆமே.

உத்திரட்டாதி நட்சத்திரம் இரண்டாம் பாதத்தில் மனை தொடங்கினால் பதினெட்டாம் நாள் வீறிட்டலறி குழந்தை மரணமடையும், விளைந்த பயிரும் கருகிப் போகும், மனைவியின்

கர்ப்பத்தில் பிசாசு கூடி அழிக்கும் ஐந்தாம் ஆண்டில் அம்மனையும் அழிந்து போகும்.

மூன்றாம் பாதம்

ஆகுமே மூன்றாம் காலில் அரும்பொருள்ஏ ழாம்நாளில்
வாகுடன் பாக்கியங்கள் வலியவே வந்து சேரும்
பாடுடன் சித்தாதிக் குப்பணிவிடை செய்யல் ஆகும்
ஆகம நூல்கள் தோன்றும் ஐம்பத்தேழ் வயதுதானே.

உத்திரட்டாதி மூன்றாம் பாகத்தில் மனை எடுத்தால் ஏழாம் நாளில் அரிய பொருள் கிட்டும், சித்தர்களுக்குப் பணிவிடை செய்யும் பாக்கியம் கிட்டும், ஆகம நூல்கள் அறிவிற்கு எட்டும், மனை வயதும் ஐம்பத்து ஏழு ஆண்டுகளாகும்.

4ஆம் பாதம்

கூறிய நாலாங் காலில் குழந்தையுமுப் பதாம்நாள்
நீறிய சர்ப்பத்தா லேநீங்கிய உயிர்தான் போகும்
மாறிய வழக்குண்டா கும்மறிதலும் தெண்டம் உண்டாகும்
கூறிய வருஷம் நாலில் குடியதுமிழக் குந்தானே.

உத்திரட்டாதி நான்காம் பாதத்தில் மனை கொண்டால் முப்பதாம் நாள் பாம்பு கடித்து ஓர் உயிர்போகும், தீர்ந்துபோன வழக்கு மீண்டும் எழும், தண்டனையும் கிட்டும் அம்மனை நான்கு ஆண்டுகளில் அழிந்து போகும்.

இரேவதி நட்சத்திரம் முதற்பாதம்

இளகும் ரேவதியில் இட்டஇது முதற்கா லதானால்
வளமுடை மாடுபாய்ந்து மலரொடு கண்ணே போகும்
அளகம்சேர் மனைவிதானும் அருகுவள் சர்ப்பம் தீண்டி
களவினால் சேதம் வந்து கழியுமே வயதுபத்தில்.

ரேவதி நட்சத்திரம் முதற்பாகத்தில் மனை தொடங்கினால் மாடு பாய்ந்து முட்டுவதால் கண்ணின் பாப்பா அல்லது கண்ணே பறிபோகும் அழகு பொருந்திய கூந்தலையுடைய மனைவியும் மாண்டு போவாள், திருடர் களவாடிச் செல்வதால் சேதம் உண்டாகி அம்மனை பத்து வருடத்தில் அழிந்து போகும்.

இரண்டாம் பாதம்

பத்தென ரண்டாங் காலில் பதினொருநா ளில்செல்வம்
அத்தமுங் காகசேரும் அருஞ்சுதர்ப் பெற்று வாழ்வாய்
பித்தமும் சுரங்கள் தீரும் பேயினாலழி வுபோகும்
உத்தம நன்மையா கும்மொழி அரிஇருபத் தஞ்சே.

ரேவதி 2ஆம் பாதத்தில் கிருகாரம்பம் செய்தால் பதினொரு தினங்களில் செல்வமும், பொருளும் பணமும் சேரும், புத்திர பாக்கியம் கிட்டும், பித்த சுரங்கள் தீரும், பேய்களின் தொல்லை தீரும் நன்மையான பலன்களே கிட்டும் அம்மனையின் ஆயுள் இருபத்தைந்து ஆண்டுகளாகும்.

நட்சத்திர சாரபலன் கூறும் பாக்களில் பலபாடல்கள் விடுபட்டுள்ளன. மேற்படிப் பாடல்கள் வைத்திருப்போர் கொடுத்து உதவினால் முழுமையாக வெளியிட உதவியாக இருக்கும் எனவே பாடல்கள் முழுதும் வைத்திருப்போர் கொடுத்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.